உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் மாதாந்தரத்

தமிழ்ப்பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF
13 FEB 1915
MA

## மூன்றாந்தொகுதி.

பத்திராசிரியர்:

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியார்

(ம ண வ ழ கு)

சென்னை:

மஹாலக்ஷ்மிவிலாச அச்சுக்கூடம்.

1915.

160932

JL
R673m211, N12,
N12·3

# சித்தாந்தம் மூன்றாந்தொகுதியின் உள்ளுறை.


| | |
|---|---|
| அன்பு. சுவாமிவேதாசலம். | 315 |
| அறத்தின்மேன்பாடு. சே-ரா-திம்மப்பையன் | 116 |
| அறியாவினா. துறைசை-கண்ணப்பன் | 247 |
| அறிவினாலடைய வேண்டியபயன்யாது வா-மு-இரத்தினேசுவரஐயர் | 285, 304 |
| ஆசாரம். ஷை | 192 |
| இருவினையொப்பு. S-பால்வண்ணமுதலியார் | 9, 55 |
| இருக்குவேதம். (த-பொ.) | 225, 273, 297, 321 |
| ஈஸ்வரன். ஆ-ஏகாம்பரமுதலியார் | 93 |
| ஈசாவாஸ்யோபநிஷத்து. மணவழகு (ப-ர்.) | 299 |
| உலகமும் தலைவனும். V. P. காந்திமதிநாதபிள்ளை | 4, 38 |
| உருத்திராட்சவைபவம். மணவழகு (ப-ர்.) | 179 |
| ஐயவினா. பொ-முத்தையபிள்ளை | 213 |
| கல்வி. S. மெய்கண்டபிள்ளை | 81 |
| கடவுளினுருவம். இருக்கம்-ஆதிமூலமுதலியார் | 151 |
| கடவுளின்வியாபகம்ஆன்மா. ஷை | 184 |
| கேனோபநிஷத்து. மணவழகு (ப-ர்.) | 227 |
| சமாசாரம். பத்திராதிபர் | 32, 86, 145 |
| சித்தாந்தபரிபாஷை. மணவழகு (ப-ர்.) | 1 |
| சிவலிங்கதத்துவார்த்தம். பொ-முத்தையபிள்ளை | 27, 46 |
| சிவபாரம்மியம். மணவழகு (ப-ர்.) | 59 |
| சிவத்தைப்பேணிற்றவத்திற்கழகு. ஆ-கமலநாதமுதலியார் | 78 |
| சிவஞானபோதம். மா-கார்த்திகேயமுதலியார் | 89 |
| சிவஞானபோதமுதனூல்வரலாறு. துடிசைகிழார் அ-சிதம்பரனார் | 157, 234 |
| சிவஞானபோதந்தமிழ். ஹர-சண்முகமுதலியார் | 163 |
| சித்தாந்தஞானத்திரயம். மணவழகு (ப-ர்.) | 203 |
| சிவனடியார். சு-சரவணமுத்துப்பிள்ளை | 206 |

சிவானுக்கிரகவியல்பு. வா-தி-கோவிந்தராஜமுதலியார் ... 244
சிவோபாசனமகிமை. S. நடேசதேசிகர் ... ... ... 280
சித்திரைநட்சத்திரம். மா. கார்த்திகேயமுதலியார் ... 295
சுருதிசூசனம். பத்திராதிபர் ... ... 205, 261, 2[illegible]2, 279
சைவசித்தாந்தமகாசமாஜத்தின் எட்டாவதுவருடக்கூட்டம். } களந்தைகிழான்... ... 17
சைவசித்தாந்தமகாசமாஜ நிர்வாகசபையினர். ஷை .... 25
சைவசித்தாந்தம். S. நடேசதேசிகர்... ... ... ... 33
சைவசித்தாந்தமகாசமாஜத்தினால் விளைந்தபயனும் விளையப்போம் பயனும். விருதை-சிவஞானயோகிகள் ... ... ... 74
சைவசமயவுண்மை. மணவழகு (ப-ர்.) ... ... ... 113
சைவமும் சைவர்நிலையும். ஞானசாகரம் ... ... ... 165
சைவசமயத்தைக்குறித்த ஒரு சம்பாஷணை. S சச்சிதாநந்த பிள்ளை B. A. L. T. ... ... ... .... 19[illegible], 214
தமிழ்ச்சிவஞானபோதவரலாறு. பொ. முத்தையபிள்ளை ... 98
தமிழுலகம். அடிசைகிழார் அ. சிதம்பரனார் ... ... ... 289
திருக்கைலாசம். ஞானப்பிரகாசம் ... ... ... ... 308
நாயனுரொன்றும்சொல்லாராய்ச்சி. மாகறல்-கார்த்திகேய முதலியார் ... ... ... .... ... 311
நாற்பானைந்து உசாக்கள். மோ. கந்தசாமிமுதலியார் B. A. ... 270
பவணந்தியாரும் அவரியற்றிய நூல்களும். சுவாமிவேதாசலம் 137
பிரபஞ்ச உற்பத்தி நாகை-வி-கோபால கிருஷ்ணன் ... 126
போஜனம். மணவழகு. (ப-ர்) ... ... ... ... 195
மனநினைவு. வ-மு-இரத்திநேசவரையர் ... ... ... 128
மாண்டூக்யோபநிஷத்து. மணவழகு. (ப-ர்) ... ... 275
முண்டகோபநிஷத்து. ஷை (ப-ர்) ... ... 251
மும்மூர்த்திகள். நாகை-வி-கோபாலகிருஷ்ணன். ... ... 231
வியாசசூத்திர விசாரம். மணவழகு. (ப-ர்) ... ... 147

OF THE REGISTRAR
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௫.] 1914-ஞு ஜனவரிமீ [பகுதி ௧.

## சித்தாந்தபரிபாஷை என்னும் தருக்கசோபானம்.

---

### அனுபந்தம்.

பிரமாணம், பிரமேயம், ஐயம் பிரயோசனம், திருட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிண்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஏதுப்போலி, சாதி, சலம், தோல்வித்தானம் எனப் பதினாறு.

பிரமாணம்:—Proof - பிரத்தியட்சம், அனுமானம், உபமானம், சப்தம் என நான்கு.

பிரமேயம்:—Objects of knowledge - ஆன்மா, சரீரம், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம், பலம், துக்கம், அபவர்க்கம் எனப்பன்னிருவகைத்து.

ஆன்மா:—சீவான்மா, பரமான்மா என விரண்டு. இந்நூல் ௩௪-வது பக்கத்திற்காண்க. சரீரம்—சராயுசம், அண்டசம், சுவேதசம், உத்பீசம் என நான்கு. இந்திரியம்-கிராணம், இரச

ணம், சட்சு, துவக்கு, சுரோத்திரம், மனம் என ஆறு. அர்த்தம்- உருவம், இரசம், கந்தம், பரிசம், சப்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தினம் எனப் பதினொன்று. புத்தி இந்நூல் ௪௨-வது பக்கத்திற்காண்க. மனம் - இந்நூல் [illegible]-வது பக்கத்திற்காண்க. பிரவிருத்தி - தன்மா தன்மங்கள். தோஷம்- விருப்பு, வெறுப்பு, மயக்கம் என மூன்று. பிரேத்தியபாவம்-சாக்காடு, பலம் - போகம், துக்கம் - இந்நூல் ௪௧-வது பக்கத்திற் காண்க. அபவர்க்கம் வீடுபேறு.

பிரயோசனம்:—Purpose—எதை யுத்தேசித்து புருஷன் முயற்சி செய்கின்றானோ அது சுகமும், துக்கக்கேடும்.

ஐயம்:—Doubt - அது இப்பியின்கண் இது வெள்ளி யென்று தோன்றும் ஞானம்.

திருட்டாந்தம்:—Instance - வாதி பிரதிவாதிகளின் நிச்சயித்தற்கு விஷயமாகும் (அடுக்களை அல்லது மடு என்னும்) பதார்த்தம்.

அவயவம்:—The' member (of a Syllogism) பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம்.

சித்தாந்தம்:—Established truth - முடிந்த முடிபு-சாஸ்திரமுணர்ந்தவன் பிரமாண முடைமையால் அங்கீகரித்த அர்த்தம்.

தர்க்கம்:—Reasoning-தர்க்கித்துத் தெரிக்கப்பட்டன அதாவது பதார்த்தங்களை யின்றாய் நிரூபிப்பது. உபசாரவழக்கால் பிரமாணமும் தர்க்க மெனப்படும்.

நிர்ணயம்:—Ascertainment - நிச்சயித்தல், அது பிரமாணத்திற்குப்பயன்.

வாதம்:—Argumentation - உண்மை யுணர்தல் வேட்கையோன் கதை-கதையாவது கூறுவார் பலரையுடைத்தாய் சங்கையுத்தரங்களைப் பயக்கும் தொடர் மொழியின் கோவைப் பாடு.

செற்பம்:—Sophistry - சாதனமிரண்டுற்ற தன்கண் வெல்லும் வேட்கையுடையோன் கதை.

விதண்டை:— Cavellig - தன்கோட்பாட்டை நிலைபெறுத்தாக் கதை.



ஏதுப்போலி:—Fallacy - இந்நூலின் ௨௰-வது பக்கத்திற் காண்க.

சலம்:—Quibbles - ஒரு கருத்துப் பற்றிக் கூறி மொழிக்கு வே[illegible]பொருள் படைத்திட்டுக் கொண்டு பழித்தல்.

சாதி:—False Analogy - போலியுத்தரம் - அது பொதுவியல்பு, வேற்றியல்பு, உயர்ச்சி, தாழ்ச்சி, புகழ்ந்துரை, பழித்துரை விகற்பம், சாத்தியம், அடைவு அடையாமை, பிரசங்கம், வேறு திருட்டாந்தம், உற்பத்தியின்மை, ஐயம், பிரகரணம், ஏதுவின்மை, அருத்தாபத்தி, விசேடமின்மை, உபலத்தி, அனுபலத்தி, காரணம், நித்தம், அநித்தம், காரியம் சமம் என இருபத்து நான்கு.

தோல்வித்தானம்:—Unfitness for arguing - வாதம் பேசுவார் தோல்வியுறுதற்கேது. அது மேற்கோளழிவு, வேறுமேற்கோள், மேற்கோண், மாறுபாடு, மேற்கோள் விடுதல், வேற்றேது வேற்றுப்பொருள், பொருளின்மை, பொருளுணரப்படாமை, பொருட்போலி, காலம் பெறாமை, குன்றக்கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், பிறகூற்றின்மை, அறியாமை, மறுக்கப்படாத மதத்தை யுடன்பட்டுக் கூறல், உடன்படற் பாலதனையவாவுதல், உடன்படற் பாலதல்லதனை யுடன்படுதல், சித்தாந்தம், போலி, ஏதுப்போலி என இருபத்திரண்டு.

அனுபந்தம் முற்றிற்று.

மணவழகு.

# உலகமும் தலைவனும்.

ஒருவனோடொருத்தி யொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறைவந்துநின்று போவதுமாதலாலே
தருபவனொருவன் வேண்டுந்தான் முதலீறுமாகி
மருவிடுமநாதிமுத்த சித்துருமன்னிநின்றே

1. இத்திருவிருத்தம், தமிழ்ப் பாஷையிலுள்ள சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள், மிக விசேஷநூலாகிய சிவஞானசித்தியார் சுபட்சத்தின் கண்ணுள்ள முதற்சூத்திர முதற்றிருவிருத்தம். இத்திருவிருத்தமே, இன்று நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட விஷயம். இவ்விருத்தம் உலகிற்கு இன்னதன்மையையுடைய தலைவன் வேண்டுமென்பதை விளக்க எழுந்தது, அதனை விளக்குதற்பொருட்டு, உலகமின்னதென்பதையும், அதன்றன்மையின்னதென்பதையும், அதற்கு ஓர் தலைவன் இன்னகாரணத்தால் வேண்டுமென்பதையும், அத்தலைவன் யாவன் என்பதையும், அவன் இன்ன தன்மையன் என்பதையும், அவன் உலகத்தோடு இன்ன சம்பந்தமுடையானென்பதையும் இவ்விருத்தம் ஒருவாறு விபரித்து விளக்குவதாகும். இவ்விருத்தத்தை ஆதாரமாகக் கொண்டே நாம் எடுத்துக்கொண்ட 'உலகமும் தலைவனும்' என்னும் விஷயத்தை ஒரு சிறிது ஆராய்ச்சி செய்வாம்.

2. சில பொருள்கள் கூடியிருக்கப்பார்க்கிறோம். அவைகள் பலதிறத்தனவாயிருந்தால் மட்டும், அவைகளில் தலையாயது எது எனத்தெரிந்துகொள்ள முயலுவோம். அவைகள் யாவும் ஒரே திறத்தனவாயிருப்பில், அவற்றுள் தலைமைப் பொருளைத் தெரிந்து கொள்ளமுயலோம். இவ்வுண்மை அறிவில் பொருள்களாகிய ஜடப்பொருள்கட்குமட்டுமல்ல. உயிருடைப் பொருள்களுக்குமே, யிவ்வுண்மை பொருந்துவதாகும். மனிதர்களுக்கும் மற்ற உயிர்களுக்குமே பொருந்துவதாகும். பலமனிதர் கூடிய ஓர் சபைக்கூட்டத்திற் செல்லில், ஆண்டு பலதிறத்த உருவினரும், அரு



வினருமிருந்தாலன்றி, அவர்களுக்குள், தலைவன் ஆர் எனத்தெரிய நினையோம். பலவித உயிருடைப் பொருள்களாலும் உயிரில் பொருள்களாலுமாய தோர் தொகுதியாகிய உலகிற்குத்தலைவனுண்டா என ஆராய்தற்கும் இதுவேதுணிபாம். இவ்வுலகம் பலவிதப்பொருள்களால் ஆக்கப்பட்டிருந்தாலன்றி, அதற்கு ஓர்தலைவனுண்டோ என்று, ஆராய்ச்சி யெழுதற்குக் காரணமேயில்லை. எனவே, உலகிற்குத் தலைவனுண்டாவென்று, ஆராயப்புகும் ஒருவன், முதல் முதல் ஆராய்ச்சிசெய்யவேண்டுவது, அவ்வுலகம், பலவேறு பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கின்றதா என்பதே. அதனையே, நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட திருவிருத்தம், முதற்கண் ஆராய்ச்சிசெய்கின்றது.

3. உல்கம் பலவேறு பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது என்பதை, நாம் நமது பிரத்தியட்ச பார்வையிலே தெரிகிறோம். இப்பிரத்தியட்ச பார்வையை மயக்கத்தோற்றம் என்பாருமுளர். ஒருவர் பார்வைக்கு விரோதமாய், மற்றொருவர் பார்வையிருந்தால் மட்டும், இவருள் யாரானு மொருவர் பார்வை, மயக்கப் பார்வையாயிருக்கலாம். அன்றி, எல்லார் பார்வையிலும் உலகம் ஒன்றுபோற் காணப்பட, அப்பார்வை மயக்கப்பார்வையாமாறில்லை. ஒருகால், உலகினை ஒரே பொருளாகக்காணுவாரிருப்பில், அவரும், அவ்வுலகினைப் பலபொருள்களாகக் காணுபவரும், வெவ்வேறு திறத்தினராய் முடிவரன்றோ. எனவே, உலகம் பலவேறு பொருள்களாலாக்கப்பட்டதாயே முடிந்து, நம்பிரத்தியட்ச பார்வையே உண்மைப் பார்வையாய் முடிகிறது. நாமோ, இப்பூவுலகம்போன்ற பல உலகங்களையும், பல கிரகங்களையும், பார்க்கிறோம். அவற்றுள், பலவேறு பொருள்களிருக்கவும் பார்க்கிறோம் உதாரணமாக, நாம் வாழும் இவ்வுலகத்தில் உயிருடைப்பொருள்களையும், உயிரில் பொருள்களையும், பார்க்கிறோம். உயிரில் பொருள்களுள்ளும், பலவித பொருள்களைப் பார்க்கிறோம். உயிருடைப் பொருள்களுள்ளும், பலவித பொருள்களைப்பார்க்கிறோம். உயிரில் பொருள்கள், உருவினாலும், தன்மையினாலும், பல திறத்தனவாய்க் காணப்படுகின்றன. உயிருடைப் பொருள்களோ, அறிவினாலும் பலதிறத்தனவாய்க் காணப்படுகின்றன. இவ்வெல்

லாப் பொருள்களையும், உரு, தன்மை, அறிவு, முதலிய பேதத்தினால், ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் மூவேறு வகுப்பிலடக்கலாம். எனவே, உலகம் பல என்பதையும், அவற்றுள் ஒவ்வொன்றும் பலவேறு பேதப்படக்கிடக்கின்றதென்பதையும் உணர்த்துதற்கே நம்மாராய்ச்சித் திருவிருத்தம். ஒருவனொருத்தியொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம் என்று கூறியது.

4. இது காறும் உலகம் பலவேறு பொருள்களாலாக்கப்பட்டிருப்பதாகக் காட்டினோம். இவ்வாறிருப்பதால் மாத்திரம், உலகிற்குத்தலைவனுண்டென்பது பெறாது. ஓர் கூட்டத்தில், பல மனிதரிருக்கிறார்கள். என்றாலும், இவர்கள் மாட்டுச்செயல் நிகழ்ந்து, அச்செயலும், அக்கூட்டத்தாருள், ஒருவர் செயலுக்கு மற்றவர் செயல் கீழ்ப்பட்டு நிகழுமேல், அவ்வொருவர், மற்றவர்க்குத்தலைவனாதல் கூடும். அன்றி, அக்கூட்டத்தில், ஒருவர் மாட்டும்யாதுஞ்செயல் நிகழாதிருப்பில், அக்கூட்டத்திற்குத் தலைவனுண்டாவென்று விசாரித்தற்கேயிடமின்றாம். இது போலவே, ஓர் தேசத்திலுள்ள ஒருவர்மாட்டும், யாதுஞ்செயல் நிகழாவேல், அத்தேசத்திற்குத் தலைவனுண்டாவென்று விசாரித்தற்குமிடமின்றாம். உலகத்திற்குத் தலைவனுண்டாவென்று விசாரித்தற்கும், இதுவே முறையாம். உலகத்தில் நாமுளதாகக்கூறிய, பலவேறு பொருள்களில், ஏதாவது சில பொருள்கள் மாட்டு ஏதானுஞ், செயல் நிகழுமேல், அச்சில பொருள்கட்குத் தலைவனுண்டாவென்று ஆராய்ச்சிசெய்ய இடமுண்டு. எனவே, நாம் இப்போது ஆராய்ச்சி செய்ய வேண்டியது, உலகத்திலுள்ள பொருள்களில், ஏதாவது பொருள்கள் மாட்டுச்செயல் நிகழ்கின்றதா; எவ்வெப்பொருள்கள் மாட்டுச்செயல் நிகழ்கின்றது; என்பவைகளே. அதனையே யடுத்து ஆராய்ச்சிசெய்வாம்.

5. உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளும், எப்போதும் ஓரே நிலையிலில்லை, யென்பதை, நம்முடைய பிரத்தியட்ச பார்வையிற் காணலாம். இப்பிரத்தியட்சக் காட்சியும், உலகத்திற் பலவேறு பொருள்கள் உண்டெனக் காண்டல்போல், உண்மைக் காட்சியேயாம். நம்பிரத்தியட்ச பார்வையில், ஒவ்வொரு பொருளும், ஓர் காலத்துத்தோன்றுகின்றது. சிறிது காலம் நிற்கின்றது



ஓர் காலத்து அழிவுமெய்துகின்றது, இவ்வாறு ஒவ்வொரு பொருளும், தனித்தனி தோன்றி நின்றழிவதோடு, ஒவ்வொரு கூட்டப் பொருள்களும் ஒருங்கு சேர்ந்து தோன்றி நின்றழிவதையும் பார்க்கிறோம். இத்தகைய பல்வேறு கூட்டப்பொருள்கள், ஒருங்கே தோன்றி நின்றழிதலுங் கூடும். இப்படியே எல்லா உலகங்களிலுமுள்ள, எல்லாப்பொருள்களும், ஒருங்கு சேர்ந்து தோன்றி நின்றழிதலுங் கூடும். இவ்விதத்தோற்ற நிலைகேடுகள், உயிரற்ற ஜடப்பொருள்கள் மாட்டு மாத்திரமன்றி, உயிர்களோடு கூடிய தனுக்களுக்குமுண்டு. அவ்வுயிர் தோன்றி நின்று கெடவில்லையேனும், அவற்றோடு கூடியதனுக்கள் தோன்றி நின்றழிகின்றன. தனித்தனியும் தோன்றி நின்றழிகின்றன. சேர்ந்துந் தோன்றி நின்றழிகின்றன. எத்தனையோ தேசங்கள், கடல்களால் மூடப்பட்டு, ஆண்டுள்ள ஜீவர்க்களோடும் பொருள்களோடும், மாண்டும் மறைந்தும், போனதாய் சரித்திரங்களால் தெரிந்துளோம். எனவே உலகப்பொருள்கள் யாவும் செயற்படுகின்றன, எனத்தெரிந்தோம். இனி இச்செயல்கள், எத்தன்மைத்தான் செயல்கள் என்பதையாராய்வாம்.

6. பொருட்கட்குச்செயல்களிருந்தால், அவற்றிற்குத் தலைவனுண்டென ஊகிக்கலாமென்றோம். பொருள்கட்குச் செயல்களிருப்பினும், அச்செயல்கள் அவற்றினியற்கையாயு மிருக்கலாம். ஆனால் ஒரு பொருளுக்கு ஒரு செயல் இயற்கையானால், அச்செயலே அப்பொருளின் கண், எக்காலத்தும் நிகழவேண்டும். அஃதன்றிமாறுபட்ட செயல், அப்பொருளின் கண் எந்நாளும் நிகழாது. அதுபோலவே, உலகப்பொருள்களின் செயல்களும், அவற்றினியற்கையே யானால், அவ்வப்பொருள்களில், அவ்வச்செயல்களே, எக்காலத்தும் நிகழவேண்டும். தோன்றும் பொருள் தோன்றிக்கொண்டேயிருத்தல்வேண்டும். ஒடுங்கும் பொருள்கள் ஒடுங்கிக்கொண்டேயிருத்தல் வேண்டும். அவ்வாறன்றி ஓரே பொருள் ஒருகாலத்து தோன்றி, மற்றொரு காலத்து ஒடுங்கவாவது, அல்லது ஒருகாலத்து ஒடுங்கி மற்றொரு காலத்துத் தோன்றவாவது, கூடாது. ஆனால் உலகப்பொருள்களின் செயல்களோ, அத்தன்மைத்தல்ல. ஓரே பொருள் ஒரு காலத்துத் தோன்றுகின்றது; ஒரு

காலத்து நிற்கின்றது; மற்றொரு காலத்து ஒடுங்குகின்றது. அதாவது, ஒரே பொருளிலே மாறுபட்டசெயல்கள் நிகழ்கின்றன. இத்தகைப் செயல்கள், ஓர் தலைவனையாற்றி நிகழாவென்பதைபுணர்த்துதற்கே, நம்மாராய்ச்சித் திருவிருத்தம், பொதுவாக, 'செயற்படுதலால்' என்று கூறாது, அச்செயல்கள் ஒன்றற்கொன்று மாறுபட்ட செயல்கள் என்பதை விவரித்து, "வந்து நின்று போவதுமாதலாலே", என்று விளக்கியது. நாமிதுகாறும் உலகப்பொருள், பலதிறத்தனவென்றோம், அவையாவும் செயற்படுமென்றோம். அச்செயல்களும், மாறுபட்ட செயல்களாமென்றோம். என்றாலும் இச்செயல்களையுடைய பொருள்களுக்குத் தலைவன் வேண்டுமென்பது பெறாது மாறுபட்டசெயல்களுடையதாயிருத்தலே, உலகப்பொருள்களின் இயற்கை யென்னலாம். ஆதலால், அச்செயல்களின் தன்மை, தலைவனை அவசியம் வேண்டிநிற்குந்தன்மையாயிருந்தாலன்றி, உலகிற்குத் தலைவன்வேண்டுமென்பது பெறாது. எனவே, உலகப்பொருள்களின் மாறுபட்ட செயல்களில், தலைவனைவேண்டி நிற்குந்தன்மையுளதா வென்பதையடுத்து ஆராய்ச்சி செய்வாம்.

(இன்னும் வரும்.)

V. P. காந்திமதிநாதப்பிள்ளை.

---

# இருவினை யொப்பு.

"நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
நற்குஞ்சரக்கன்று காண்."

"மனநினைவில் வாக்கிலனைவருக்கு மறிவரிய
வள்ளல்கள்ளத்திறன் மறுகுமறிவிலியேன்
றனைநினைவி லுட்கொண்டே யவனவனோ டதுவாந்
தன்மையினின் மலவடிவு தன்னைமன்னித்
தினையனையவலிவி லிருவினை துலையொப்புறாது
சீர்காழிமன்னு சிற்றம்பல நாடினனென்
முன்னைவினையு முடல்வினையும் வருவினையுமறுத்து
முத்தியளிப்பவன் மலர்த்தாள் சிந்தமுறவைப்பாம்."

பதி, பசு, ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்னுமிவையாறும் அநாதி நித்தியப்பொருள்களாம். இவற்றுள்பதி சிவமாம். பசு மும்மலங்களால் பாதிக்கப்பட்ட ஆன்மாவாம் அதுவும் தனக்குரிய இச்சா ஞானக்கிரியையோடுகூடி நிற்கும் முப்பாசக் கட்டினின்று நீங்கில் மோக்ஷமடையும்.

ஆணவமலமானது இருள்வினையுடையதாய் ஆன்மாவோடு அநாதியே இரண்டறக்கலந்து நின்று அவ்வான்மாவையுண்மணியென மறைத்து நிற்கும். அது தன்னை ஆன்மாவுக்குக் காட்டாது ஆன்மநிலையை அவ்வான்மா அறிவதையுந் தடுக்கும் அதாவது ஆன்மாவின் அறிவு செயல்களைத் தடைப்படுத்தி நிற்குமென்பதாம். அன்றியும் அது ஏகமாய் நின்று பற்பலசக்திகளையுடையதாய் நிலவும் அச்சக்திகள் வெவ்வேறு ஆன்மாக்களிடத்தில் ஒருபடித்தாய் நில்லாமல் பலவேறு தன்மைகளைப் பொருந்திநிற்கும். அவ்வாணவம் எட்டுக்குணங்களையுடையதாம். அவையாவன.

1. விகற்பம்=தன்னையொழிய மற்றொருவரும் ஒவ்வாதவ
2. கற்பம்=பிடித்ததைப் பிடித்திருத்தல் [ரென்றல்
3. குரோதம்=கோபங்கொண்டு நினைத்தல்
4. மோகம்=யாதாமொன்றற்கு ஆசைப்படல்
5. கொலை=உயிர்களைக் கொல்லுதல்
6. அஞர்=சந்தமுந் துக்கப்படல்
7. மதம்=அகங்கார மேலிடுதல்
8. நகை=சிரித்தல் என்பனவாம்.

இக்குணங்கள் ஆன்ம அறிவிற்பொருந்தி நின்று பலவித செயல்களைச் செய்பவனவாம் அவ்வாறு செயல்கள் செய்யப்படும்போது பலவித இச்சைகளுண்டாம் அவ்விச்சைகளாலுண்டாகிய ஆசைப்பகுதிகளே வினையாம். இதனால் ஆணவம் கன்மத்துக்கு ஓர்வித்தெனவும் அக்கன்மம் அவ்வித்தின் வினையெனவுங் கண்டாம் இதுபற்றியன்றோ.

"யானென் செருக்கா-மிருவினையா மச்செருக்கு
மூனமலத்தானு முயிர்க்கு" என ஆன்றோர் கூறுவாராயினர்.

ஆணவத்தின்றன்மை இங்ஙனமாக ஆன்மாகன்மங்களை யநுபவித்தற்குரிய நிலைக் களம் மாயாதேகமாம் அது மயக்குடன் கூடியபோதந்தரும் பொருளாய் ஆன்மா வினைப்பிணித்து நிற்கும். அவ்வாறு அத்தேகத்தை ஆன்மாவிற்கு இறைவன் பிணித்தமை. ஆணவத்தோடு கூடிய இச்சையினின்றெழும் மேற்கூறிய ஆசைப்பகுதிகளை அநுபவித்தற்காம்.

இனிக்கன்மத்தைப்பற்றிப் பேசுவாம்.

இக்கன்மமானது அநாதியே ஜடமாய் வியாபகமாயுள்ளது. ஆன்மாக்களுக்குச் சாதி ஆயுள்போகம் இக்கன்மத்தாலேயே உண்டாம் காந்தத்தின்முன் இரும்பைப்பிடிக்கையில் செயலுண்டாமாறுபோல ஜடமாகிய இக்கன்மத்துக்குஞ் செயலுண்டு. அஃது ஜடமாகையால் தானே ஆன்மாவைப் பொருந்துமாறின்று. சிற்றறிவினையுடைய ஆன்மாவும் தானே எடுத்துக்கொள்ளும் வலியுடையதின்று. இவ்விரண்டு பொருள்களையுஞ் சம்பந்தப் படுத்துவோன் இறைவனேயாம்.

அவன் நியதி என்னுந் தத்துவத்தின்வழியாய்ச் செய்தவன் மாட்டுக்கன்மம் சென்றடையுமாறு செய்வன். கன்றானது தனது தாயைக் கருதிச்செல்லுமாப்போல வினையும் செய்தவினை நாடிச் செல்லும்.

இக்கன்மம் மனம்வாக்குக் காயமூன்றினால் வரும் அது பற்பல பகுதிகளையுடையதாம் அவையாவன.

நல்வினை தீவினை என்றும் ஆகாமியம் சஞ்சிதம் பிரார்த்தம் என்னும் ஸ்தூல சூக்கமம் அதி சூக்கமம் என்றும் வன்மை மென்மை என்னும் புத்திபூர்வம் அபுத்தி பூர்வம் என்றுமாம்.



இக்கன்மம் திதிகாலத்தில் புத்தியைப்பொருந்தி நிற்கும் மாசங்காரகாலத்தில் அப்புத்தி பிரகிருதியைப் பொருந்தும் அது மாயைப்பொருந்தி நிற்கும் சிருஷ்டிகாலத்தில் தேகத்தைப் பொருந்தும் அன்றியும் திதிகாலத்தில் 84-லக்ஷம் யோனிபேதத்திற் பிறந்திறந் துழலுமாறுசெய்யும்.

சங்காரகாலத்தில் பக்குவம் எய்தும், சிருஷ்டிகாலத்தில் தேகத்திற்கேதுவாகும். இவ்வினைகள் யாவும் மந்திரமுதலியனவாய்க் கூறப்பெற்ற அத்துவாக்கள் ஆறினும் சஞ்சிதமெனக் கட்டுப்பட்டு நிற்கும்.

கன்மங்களை சஞ்சிதம், பிரார்த்தம், ஆகாமியம். என மூன்றினுள் அடக்கிக் கூறலாம். பிரார்த்தம் புசிக்கும்போதே யான்செய்தேன் பிறர்செய்தார் என்று சுட்டு கையினாலே அந்தச்சுட்டாலுள்ள பயன்மேலைக்கு உறபவிக்கும். இஃது ஆகாமியம் பலஜனங்களினு மியற்றிய ஆகாமியக்கூட்டமே சஞ்சிதம். இதினின்றும் பக்குவப்பட்டு ஆன்மாவிற்கு இன்பதுன்பமாய் வருவது பிரார்த்தம் இவையாமாறு.

"மேலைக்குவித்து மாகிவிளைந்த வையுணவுமாகி
ஞாலத்துவருமாபோல நாஞ்செய்யும் வினைகளெல்லாம்
மேலத்தான் பலமாச்செய்யு மிதமகிதங்களெல்லா
மூலத்ததாகியென்றும் வந்திடுமுறைமையோடே."

இவ்வாறு பிரவாக அநாதியாய்க் கன்மங்கள் பொருந்துவனவாம் ஆன்மாதொன்று தொட்டுவருகிற கன்மங்கட்குட்பட்டு காற்றூடியுமூசலும்போலச் சுழன்று திரியும் பசு நல்வினையால் சொர்க்கமும், தீவினையால் நரகமும், இவ்விருவினையால் பூமியுங் கிட்டி நிற்கும்.

இக்கன்மம் ஆறுகுணங்களையுடையது-அவையாவன:—

1. இருத்தல்=இந்திரியவழி செலுத்தல்
2. கிடத்தல்=அவ்வழியில் ஓங்கிநிற்றல்
3. இயற்றல்=இதவகிதஞ்செய்யல்
4. விடுத்தல்=முயலுதல்
5. பாகிக்கை=பிறன்பழி கூறல்
6. மேவல்=பலவகையோனிகளில் மேவல்-என்பனவாம்.

கன்மங்களின் குணங்களாகிய இவைகளைப்பொருந்தப்பெற்ற ஆன்மாவிற்கு எவ்வாறு இருவினையொப்பு எய்துமெனிற்கூறுதும்.

ஆன்மாக்கள் தங்கிநிற்கும் நிலைகள் மூன்றும் அவையாவன. கேவலம் சகலம் சுத்தம் என்பவைகளே. இவற்றுள் கேவலமென்பது தேகங்களோடு பொருந்தி நில்லாது ஆணவத்தோடு மாத்திரம் பொருந்திநிற்குநிலை. சகலம் தேகத்தோடு பொருந்தி எண்பத்துநான்குலக்ஷம் யோனிபேதங்களுள்ளும் பிறந்து இறந்து திரியுங்கால் இருவினை இயற்றி இன்பதுன்பங்களை யநுபவிக்கும் பெத்த நிலையாம். திருவருளால் பாசம் பகையெனக்கண்டு நீங்கி, தன்னையும் தலைவனையுமறிந்து இறைநிறைவுள் அத்துவிதமாய் நிற்கும் நிலைசுத்தமாம்.

மேற்கூறிய சகல நிலையிலேதான் இருவினை இயற்றவேண்டும். ஞானேந்திரியம் கன்மேந்திரிய மநுபவிக்கிற விஷயங்களை அனுபவிக்கிறவன் நானென்றும் அவ்வநுபவம் எனதாகிய விஷயங்களொன்றும் அகங்கரிக்குமாறு செய்து நிற்பது அகங்காரமாம். சர்வவிஷயத்திலுஞ் சென்று பற்றி ஆத்மபோதத்தை விரியப்பண்ணி இப்பொழுது அநுபவிக்கிற இந்த விஷயமும் முன்னனுபவித்தவிஷயத்தோடு ஒக்குமெனவும் ஒவ்வாதெனவும் பிரித்து அறிந்து தெளிவது புத்திதத்துவமாம்.

இப்புத்திக்கேற்றதாகிய பதார்த்தங்களை விரும்பிப் போகம் பக்குவமான விடங்களிற் சென்று ஆன்மாதேகியாய் புவனமெங்குஞ் சஞ்சாரத்தைப்பண்ணும்.

சுகவிறுதியாலே துக்கமுந் துக்கவிறுதியாலே சுகமுமாக துக்கமாயினும் சுகமாயினும் என்று உறுதிப்படாமல் வருதலால் சுகமெல்லாம் துக்கமாதலால், "கழிபடுதுன்பங்களின் பயன்" என்று கூறப்பட்டது. அன்றியும் கன்மம் ஓர்பதார்த்தமாதலினால் பக்குவம் எய்தும் ஆர்ச்சித்த கன்மங்களில் பக்குவப்பட்ட கன்மத்தைப் புசித்தும் பக்குவப்படாத கன்மத்தைப் புசியாமல் நீக்கிப் புசிக்கத்தக்க விஷயபதார்த்தங்களை ஆராய்ந்து ஒருதேகத்தை விட்டுப் பின்னையொருதேகத்திலே சென்று பிறந்து ஒழியாதஜனனமும் மரணமுமே தொழிலாகத் தண்ணீர்ச்சுழியிற்பட்ட கோரைப்புல்லைப்போல் ஆன்மா நிலையறவலைந்து திரியும்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 1914 MADRAS

மேற்கூறிய மூன்றுநிலைகளுள் சகல நிலையி[illegible]ம் புண்ணியபாபங்கள் இரண்டும் ஒருசென்மத்திலே புசிக்கத்தக்கதாக ஆறு அத்துவாக்களில் முன்னேகட்டுப்பட்ட சஞ்சிதமும் இப்போது எடுத்த தேகத்தில் புசித்து முடிவதாயுள்ள, பிராரத்தமும் இங்ஙனம் புசிக்குமளவிலேறும் ஒறிதாவஹிதங்களால் வரும் ஆகாமியமும் முடிந்துபோம்படி சிவபுண்ணியஞ் செய்தல்வேண்டும் இனிப் புண்ணியமாமாறு கூறுவாம்.

புண்ணியம் பசுபுண்ணியமென்றும் பதிபுண்ணியமென்று மிருவகைப்படும் பசுபுண்ணியத்தைப் பயன்விரும்பிச் செய்வாராயின் அது காமியந்துட்பட்டு அழிவெய்துமென அறநூல் கூறுதலால் நிலைபேறுடைய மெய்ஞ்ஞானத்தை அது பயப்பியாது என்பது பெற்றும். ஆயினும் பயன்விரும்பாது செய்யின் அது பதி புண்ணியப் பண்பினதாகும். ஏனெனில் அது செய்வான் கருத்து வகைபற்றி நிகழுமாற்றானென்க. எவ்வாறெனில் பரமஞானியர்பால் நிகழும் ஜீவகாருண்ணியம் சிவபுண்ணியப் பகுப்புள்ளடங்குமாற்றானுணர்க.

சிவபுண்ணியமும் புத்தி பூர்வம் அபுத்திபூர்வமென விருவகைப்படும். அபுத்தி பூர்வம் புத்தி பூர்வத்துக் கேதுவாய் நிற்கும் வெள்ளி பசு புண்ணியத்துட் பட்டதாயினும் பயன் கருதாது செய்யில் அபுத்தி பூர்வபதிபுண்ணியமாம். மாபலிபோன்றார் முன்னைப்பிறப்பிற் செய்ததும் அபுத்தி பூர்வமாய் இறையணியாயினமையறிக. இனி இங்ஙனமாக, புத்திபூர்வமாகிய சிவபுண்ணியங்கள் வேதாகமங்களில் விதிக்கப்பட்டாங்கு அறிந்து செய்தலாம் அவை சரியை, கிரியை, யோகமுதலியனவாம். சிவபெருமான் சாதகாசாரியனையதிட்டித்துநின்று சமயதீக்கைசெய்துசரியைதன்னை நவையற இயற்றச்செய்வன். அவர்கள் சிவலோகத்தைப் பொருந்தி அங்குள்ள போகமருந்தி அவனியிலுதிப்பர். பின்னர்போதகாசாரியனாலே விசேடதீக்கைபெற்றுச் சிவபூஜை இயற்றிச் சிவசாமீப்பியம் பெற்று அங்குள்ள பெரும்போகந் துய்த்து ஒழிந்தகாலை புவியில் நண்ணியோகாசாரியனை யடைந்து சிவயோகமியற்றிச் சிவனுடைய சாரூபஞ் சேர்ந்து நிற்பர். இச்சாரூப தேகத்தில் ஆசையிலராகிப்பெருகி வரும்போகத்திற் பற்றிலரேல் உலகமெலா மழியுங்

காலத்து இவர் முத்தி எய்துவர். போகத்தில் ஆசையுடையரேல் சிருஷ்டிகாலத்தில் உலகிலுதித்து இருவினை ஒப்பெய்தி ஆணவமல பக்குவமடைந்து அதனால் சத்திபதிந்திட மிக்கதொரு பக்குவம் வந்து குருவருளால் முத்தி எய்துவர். இதனால் இவ்விருவினையொப்பு யோகியர்க்கே உரித்தெனப்பெறும். அன்றியும் இருவினையொப்பும் பிறந்தபின் மலபரிபாகம் வருதலும் அதன்பின் சத்திநிபாதநிகழ்தலும் முறைமையின் வந்தமைகண்டாம். ஆனால் சத்திநிபாதம் பலபடித்தாயுள்ள தாதலினால் மூவகையான்மாக்களுள் சகலர்க்கு மந்ததரம் மந்தமென்னும் சத்திநிபாத முள்ளனவாம். ஆனால் சிவனுக்கும் சத்திக்கும் செய்த புண்ணியபாவங்கள் பஞ்சகலைகளினிடத்து மருவி நிற்பனவாம். மந்ததர சத்திநிபாதர்க்கு ஆசான் நிவிர்த்தி பிரதிஷ்டை என்னுங் கலைகளிலுள்ள வினைத் தொகுதிகளை மாய்த்துப் பிரகிருதிக்கு மேலுள்ள புவனங்களில் வைப்பன். மந்தசத்திநிபாதர்க்கு வித்தியாகலைகளிலுள்ளவினைகளையழித்துச்சுத்தவித்தையில் வைப்பன். தீவிர சத்திநிபாதர்க்கு. சாந்திகலையிலுள்ள பாசங்களை நீக்கிச் சிவசமமுத்தியளிப்பன். இவர்களுக்கும் பரமுத்தி பிரளயகாலத்தில் பரமனளிப்பன். தீவிரதரமாம் சத்திநிபாதம் பதியில் யாதொரு பற்றுமிலராகிச் சத்தியோ நிருவாணத்துக்குரியராவர். அதாவது உடனே பரமுத்தி எய்துதற்குரியராவர்.

சகலர்க்கு இருவினையொப்பில்லாவிடத்து மலபரிபாகமில்லையாம். அஃதில்லாவிடத்துச் சத்திநிபாதமில்லையாம். இஃது இல்லாவிடத்துச் சிவஞானமில்லையாம். இஃதில்லாவிடத்து முத்தியில்லையாம். ஆதலால் மும்மலமுடைய சகலராகிய நமக்கு முதற்கண் இருவினையொப்பு வேண்டுவது மிக்கு ஆவசிகமாயிற்று. பின் மலபரிபாகமும் அதன்பின் சத்திநிபாதமும் வேண்டற்பாலவாம்.

சத்திநிபாதத்துக்குக் காரணமாயுள்ளது மலபரிபாகம் அதாவது—ஆணவம் தனது சத்திகள் தேய்தற்குரிய துணைக்காரணங்களெல்லாவற்றோடுங் கூடுதலாம். துணைக்காரணங்கள் சிவபூசை தவம் செபமுதலாயின. சத்திநிபாதமென்பது சத்தியின் வீழ்ச்சியாம். இஃது ஆன்ம அறிவின்கண் நிகழுங் குறிப்பினாலுணரலாம்.

ஜீவன்முத்தருக்கும் ஆகாமிய மேறாதிராது பிராரத்த கன்மம் புசிப்பு மாத்திரமாய் வந்துபோகிறதொழிய அவர்கள் ஈடுபட



த்தக்கதாக மேலிட்டு வருந்தாது அவர்கள் அப்படி ஈடுபட்டு வருந்தாதுகொண்டே மற்ற ஆகாமியகன்மமும் ஏறாது அப்படி ஏறிற்றாகிலும் பேதமாக்குவித்து ஜனனத்தை யுண்டாகாது.

ஜீவன் முத்தரல்லாத மற்றையர்க்கு ஆகாமியம் செபம் தவம் அர்ச்சனை, நல்லோர் இணக்கம், கற்றல், கேட்டல், சிந்தித்தல், நிட்டைகூடல் முதலிய இறப்பில் தவங்களாகிய சிவபுண்ணிய விசேடத்தால் இருவினையொப்புவரும் வந்தகாலை ஆகாமியம் ஏறாததாகும். பிராரத்தம் அநுபவத்தாலும் பிராயச் சித்தத்தாலும் போம். சஞ்சிதம் குருவின்றி வெருளால் வெந்துபோம். இது நிற்க.

ஒருவன் ஒருலைக்ஷியத்தைக் கட்டித் தூக்கினவிடத்து அஃது அசைவற்று சமமாக நின்றகாலம் பார்த்து எய்தாற்போலச் சிவபெருமானும் ஆன்மாவின் கன்மசாமியத்தைப் பார்த்துச் சத்தி பதிப்பன். துலையின் இருதட்டுகளில் வைத்தபொருள்கள் சமமானால் அத்துலையின் நடுநிலையாய் நிற்கும். அல்லாக்கால் அத்தட்டுகள் ஏற்றத் தாழ்வுடையனவாகி ஒன்றற்கொன்று ஒவ்வாததாகும். அவ்வாறு ஒவ்வாமல் நிற்கில் விலைபகர்வோர் வாங்குபவர் தம்முளொவ்வாதவராவர். ஆதலால்—உலகவழக்கினும் துலையொத்தல் மிக அவசியமாயிற்று. கன்மம் காக்ஷிக்கெய்தாதபொருள் அங்ஙனமே அதன்சத்திகளுமாம். நல்வினையின் சத்தியும் தீவினையின்சத்தியும் மற்றொருசத்தியின் பேராற்றலால் தம்தம் புடைபெயர்ச்சியினின்றும் விலகி யாதொரு செயலுமற்று ஆன்ம அறிவைத் தாக்காமனின்று சமநிலைபெற்று வாளாகிடக்கு மந்நிலையை ஒப்புநிலையெனக் கூறுவர். அவ்வாறு அவ்விருவினையின் தாக்குதலில்லாத அவ்வான்ம அறிவில் இறப்பில் தவங்களா லெய்தப்பெற்ற சத்திகள் ஊடுருவிச் சென்று கன்மமுளையை அவித்து அதன் விதையாகிய ஆணவத்தின் சத்திகளை ஒருங்கே மாய்த்தல்கூடும். இச்சமநிலை பெறுவிடத்துப் பேரற்றலுடைய அச்சத்தியும் பதிந்து செயல் செய்வதற் கேலாததாகும்.

இருவினைகளாகிய புண்ணியபாவங்களைப் பண்ணிச் சுகதுக்கங்களாக அநுபவிக்க வுறுமென்று எண்ணப்பட்ட கன்மமலத்தால் பிருதுவிமுதல் மாயையிறுதியான தத்துவங்களிடமான புவ

னத்தில் பக்குவப்பட்ட போகங்களைப்புசித்துவரும் சகலர்களுக்கு அளவுபடுத்திச் சொல்லவொண்ணாதகாலம் அந்தந்தப் புவனங்கள் தோறும் ஆர்ச்சித்தகன்மம் துலையொப்புப் பிறந்தவிடத்திலே சத்திநிபாதமுண்டாக சிவம் குருவாய்வந்து தீக்ஷையினாலே, மும்மலங்களை யறுத்து மோக்ஷத்தைத்தருவன்.

மேற்கூறியாங்கு இறப்பில் தவங்களால் நிகழும். "இருவினையொப்பு" என்பதைப்பற்றி பற்பலவிதமாய்க் கூறப்பட்டுள்ளன அவைவருமாறு.

1. ஒரு ஆன்மா புண்ணியத்தையும் பாவத்தையும் அளவாய்ப்பண்ணிவரப் புண்ணியமிகுதியானாற் பாவங்குறைந்தும் பாவமிகுதியானாற் புண்ணியங்குறைந்தும் இப்படி ஒன்றுக்கொன்று ஏறிக்குறைந்துவரக் குறைந்ததில் நிறைவுவரவேண்டி ஒருகாலத்தும் எல்லைப்படாமல் அளவற்ற காலத்தினெல்லையிலே ஆர்ச்சித்த கன்மம் ஒத்தபோது துலையிட்டதட்டு இரண்டிலும் பொன்னும் படிக்கல்லும்போலத் தம்மிலொத்து நிற்பது துலையொப்பு என்பது ஒருசாரார்கொள்கை.

இப்படிப் புண்ணியபாவம் துலையொத்து நில்லாதபோது புண்ணியமிருந்தால் பாவத்தையாராச்சிக்கும் பாவமிருந்தால் புண்ணியத்தை யாராச்சிக்கும் இரண்டுமொத்தால் சுகதுக்கமிரண்டும் வேண்டாமல் பிரபஞ்ச உபரிசை பிறந்து இந்தவேண்டாதபிரபஞ்சத்தை நீக்கிப்பிழைக்கும்வழி தருவாருளரோ வென்று ஆன்ம அறிவு தேடும். இது துலையொப்பில் சத்திநிபாத அவதாரம் அதாவது பிரபஞ்சத்தையும் பொருளையும் மறைத்து உருசிப்பித்து ஆணவமலத்தைச் சேட்டிப்பித்து நின்ற திரோதாயி மாறி அருட்சத்தியான நிலை.

(இன்னும் வரும்.)

S. பால்வண்ண முதலியார்.

---

# சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

## எட்டாவது வருடக் கூட்டம்.

இறைமைக் குணங்கள் யாவும் உடையனாய்த் தோற்றமும் ஈறும் இல்லானாய் உள்ள பரசிவம் திருவருள் செய்த வேதாகமங்களை முதலெனக்கொண்டு உயிர் வாழ்வாராய் சித்தாந்த சாத்திரத்தையே கண்ணெனக்கொண்டு ஓதுவாராய் உள்ள சித்தாந்த சைவர்கள் கூடப்பெற்று நடைபெற்று வரும் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் எட்டாவது வருடக்கூட்டம் வேலூரில் சென்ற 1913௵ டிசம்பர்மீ 26, 27, 28,ந் தேதிகளில் நடைபெற்றது. இக்கூட்டத்தை வேலூரில் நடத்தவேண்டுமென்று காஞ்சிபுரம் மகாஜனக் கூட்டத்தில், ஸ்ரீமான் பி. இராஜவேலு முதலியாரவர்கள் B, A. கேட்டுக்கொண்டபடி, தம்பெருமுயற்சியால் வேலூர் கனவான்களாக உள்ள சைவ வைணவப் பிரபுக்கள் யாவரையும் ஒருங்கு சேர்த்து, கூட்டத்தில் நடக்கவேண்டுவன யாவும் நடைபெறச்செய்தனர். இவ்விதம் நடந்த கூட்டத்தின் வைபவத்தைப்பின் வருமாறு அறிவிக்க விரும்புகின்றேன். சமாஜக் காரியதரிசியால் அழைக்கப்பட்ட அங்கத்தவர்களும் நிர்வாகசபையினரும் மற்றுமுள்ள பிரபுக்களும் டிசம்பர்மீ 25உ வந்து சேர்ந்தனர். அன்று மாலை மகா சமாஜக்கூட்டத்தவரும் உபசரணைச் சங்கத்தவரும், மற்றும் வேலூர் பிரபுக்களும் ஒன்று சேர்ந்து திருநாவுக்கரசு சுவாமி மடத்தில் இருந்து பலவித வாத்திய கோஷங்களுடன் குடைகொடி, பலவிதவரிசைகளிவைகளைத் தாங்கிக்கொண்டு மூன்று மைல் தூரத்தில் வந்து எழுந்தருளி யிருந்த ஸ்ரீமத் ஞானியார் மடாலயம், ஸ்ரீலஸ்ரீ, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளை எதிர்கொண்டனர். அங்கு ஓர் திருக்கோயிலின் கண் எழுந்தருளியிருந்த ஆசாரிய ஸ்வாமிகளை அவரது சிஷ்யகோடிகளும் மற்றையரும் அவரை வணங்கிக் கொண்டனர். சுவாமிகளும் ஒவ்வொருவரையும் தண்ணளியுடன் நோக்கி யா

வரையும் ஆசிர்வதித்தனர். பிறகு சிறுபோழ்திருந்து சுவாமிகளது ஆன்மார்த்தமாகிய சிவசுப்ரமண்யக் கடவுளை அலங்காரத்துடன் எழுந்தருளச்செய்து தமக்கு முன்னர் செல்லத் தாம் சிவிகை மீது பலநூறு ஜனங்களுடன் வேலூருக்கு எழுந்தருளி ஊர் வலம் வந்து திருநாவுக்கரசு சுவாமிகள் மடத்தில் எழுந்தருளியிருந்தனர். பிறகு சுவாமிகளிடம் யாவரும் விடைபெற்று அவரவர்க்கு விதித்த இடங்களுக்குச் சென்று அன்றிரவு தங்குவாராயினர். மறுநாட்காலையில் வேலூருக்கு வந்திருந்த யாவரும் நித்யநைமித்யாதிகளை முடித்து மிக உபசரிப்புடன் உபசரணைச் சங்கத்தாரால் அளித்த உணவினையுண்டு இடம் அகன்ற மகாமண்டபம் போன்ற வேலூர் நாடகசாலைக்குச் சென்றனர். அங்கு சுவாமிகளும் குறித்த காலமாகிய 12 மணிக்குத் தமது சிவிகையில் பலவித வாத்தியகோஷங்களும் அடியவர்களும் சூழ எழுந்தருளினர். அங்கு சுவாமிகளுக்கும் மற்றையர்க்கும் விதித்திருந்த ஆசனங்களில் அவரவர் இருந்தபிறகு, வேலூர் உபசரணைச் சங்கத்தின் காரியதரிசிகளில் ஒருவராகிய வேலூர் ஸ்ரீமான்P.இராஜவேலுமுதலியார் அவர்கள் B,A. உபசரணைச் சங்கத்தின் வரவேற்புப்பத்திரத்தை வாசித்தவுடன் சமாஜக் காரியதரிசியாகிய ஸ்ரீமான் கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் நிர்வாகசபையாரால் வெளியிட்ட வந்தனோபசாரப் பத்திரத்தையும், சமாஜ எட்டாம் ஆண்டு அறிக்கைப் பத்திரத்தையும் வாசித்தனர். பின்னர் ஸ்வாமிகள் சபாநாயகராக இருத்தல் வேண்டுமென்று சிற்றூர் ஸ்ரீமான். C. T. பார்த்தசாரதி முதலியாரவர்கள் B,A,.L,T. கேட்டுக்கொள்ளுதலும், சுவாமிகளுக்கு மாலை சூட்டப்பட்டது. இச்சமாஜத்திற்கென எழுந்தருளியிருந்த ஓதுவாமூர்த்தி சுவாமிகளால் கருங்கல் மனமும் கரைய திருமுறைப்பாராயணங்கள் செய்யப்பட்டன. சுவாமிகள் தமது முன்னுரையாக சைவ சித்தாந்த மகா சமாஜம் என்பதை எடுத்து சைவ சித்தாந்தம் என்பதைப்பற்றி சித்தாந்த சைவர் மகிழும் வண்ணம் இனியமொழிகளால் மிக விரிவாகப் பிரசங்கஞ் செய்தருளினர். பிறகு தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தையப்பிள்ளை அவர்கள் "சிவலிங்க தத்துவார்த்தம்" என்னும் விடயத்தை தமது சாத்திரஞானத்தாலும் வாக்குவன்மையாலும் பலருங்கேட்டு மகிழ்



வெய்த பெரியதோர் உபந்நியாசஞ்செய்தனர். அவ்வுபந்நியாசத்தில் பற்றில்லாதவனுடைய பரனைத்தொழுதாலன்றி நாம் பற்றற்று மோக்ஷம் அடைதல் கூடாதென்று கூறியது ஓர் முக்கிய விசேடமாம். இரண்டாவது குளித்தலை பிரம்மஸ்ரீ, A. அரங்கசாமி அய்யரவர்கள் "சைவமும் ஏனைய சமயங்களும்" என்னும் விடயத்தை எடுத்து தமது வடகலை தமிழ்க்கலை யாகிய இரண்டு ஞானங்களைக்கொண்டு சிவபெருமான் ஒருவனே சதுர்த்தம் என்னும் சிறப்புக்குறியன் என்று தோன்ற உபந்நியாசித்து யாவரையும் மகிழச்செய்தனர். மூன்றாவது புதுவை ஸ்ரீமான். பங்காருபத்தரவர்கள் "குருபக்தி" என்னும் விடயத்தை எடுத்து தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வாராது என்பது முதலாகக் கூறி குருபக்தியிருந்தாலன்றி எவனும் மோக்ஷம் அடைதல் கூடாது; ஏனெனில், மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல் இறைவனே ஆசாரியனாக எழுந்தருளுதலால், என்று ஓர் அறிய உபந்நியாசஞ்செய்தனர். நான்காவது, செங்கற்பட்டு ஸ்ரீமான். பொன்மார், நடேச முதலியாரவர்கள். "அன்பு" என்னும் விடயத்தை உபந்நியசிக்க ஆரம்பித்து உளத்தில் பலர்மாட்டும் அன்பு செல்வதாயினும் அவ்வன்பெலாம் பிறப்பை நீக்குவதற்கு வழியாகாது இறைவனிடத்து வைத்த அன்பு ஒன்றே எல்லாம் தருவதும் பிறப்பிறப்பை நீக்குவதும் ஆகுமென்று இனிமைபடப் பேசினர்.

ஐந்தாவது கொழும்பு. ஸ்ரீமான். முதலியார் சபாரத்தினம் அவர்கள் "கன்மம்" என்னும் விடயத்தை மேற்கொண்டு, ஆங்கிலத்தில் நித்திய கன்மம் மதசம்பந்தமாகிய தொழுகையும் கைக்கொள்ளாதவன் எத்துணைப் பெரியனாயினும் அவன் அடையவிரும்பும் மோக்ஷசாதனத்தை அடைவதற்கில்லையென தமது உலக அறிவும், கல்வி அறிவும்இரண்டையும் ஒருங்கு படுத்தி கேட்போர் மனம் துண்ணெனும்படி வற்புறுத்தி மிக விரிவாக அரியதோர் உபந்நியாசத்தை யாவரும் அறியச்செய்தனர். அன்றியும் இவரது உபந்நியாசத்தில் வடமொழியும் தமிழும் இரண்டும் சமம் என்று கொள்ளாவிடிற் சித்தாந்த சைவத்தின் பயனை அடைதல் கூடாது என்று வற்புருத்திப் பேசினர். பிறகு சபாநாயகரவர்கள் மேற்சொல்லிய ஐவரும் பேசியதிலுள்ள சிறப்புகளை எடுத்து மிகத்தெ

ளிவாகப் பேசி முடிவுரை கூறினர். ஓதுவாமூர்த்தி சுவாமிகளும் இடையிடையே யாவரும்மகிழ இந்நிசைப்பதிகங்களைப் பாடியருளினர். இரண்டாம் நாளாகிய 27-12-13ல் காலையில் அங்கத்தவர்கூட்டம் முடிந்தபிறகு யாவரும் குறித்தகாலத்திற்குச் சபாமண்டபத்திற்குச் சென்றனர். திருமுறைப் பாராயணம் நடைபெற்றது. சேலம் பிளீடர், ஸ்ரீமான் ஹரசண்முக முதலியாரவர்களால் "சிவ சிவ, சிவ, சிவ" என்னும் விடயம் உபந்நியாசிக்க எடுத்துக்கொள்ளப்பட்டு சைவ சித்தாந்தத்திற்கு நாயகமாகிய சிவபெருமான் ஒருவரே விருப்பு வெருப்பற்ற பெருந்தகை. அவரே எல்லா ஆன்மாக்களுக்கும் முதல்வர் என்பது தொனிக்க மிக அன்புடன்கேட்போர் மனங் கரையப்பேசினர்.

இரண்டாவது திருநெல்வேலி ஸ்ரீமான். பால்வண்ண முதலியாரவர்கள் "இருவினையொப்பு" என்னும் விடயத்தை மேற்கொண்டு சைவ சாத்திரம் பதினான்கினையும் ஓதி யுணர்ந்த தம் வல்லமையின் வண்ணம் அவ்வரியதோர் விடயத்தை சாத்திரஞானம் உடையார் யாவரும் அறியப்பேசினர்.

மூன்றாவது முருகேசநகர், ஸ்ரீமான். ஆ, முத்தையா முதலியாரவர்கள் "புருடார்த்தம்" என்பதை விடயமாகக்கொண்டு ஆசையற்றாலொழிய புருடார்த்தம் வாராது என்னும் கருத்தடங்க ஒரு உபந்நியாசம் செய்தனர்.

நான்காவது சகிண்டராபாத் ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் "ஆன்மலக்ஷணம்" என்னும் விடயத்தை எடுத்து ஓர் பாகம் சைவசித்தாந்தத்திற்குச் சிறிதும் முறண்படாது வடமொழி தமிழ்மொழியாகிய பிரபல பிரமாணங்களை உதகரித்து எழுதியிருந்த ஓர் வியாசத்தினை வாசித்தனர்.

ஐந்தாவது ஆனூர். ஸ்ரீமான். சிங்காரவேலு முதலியாரவர்கள் "சிவனே தெய்வம்" என்பதை விடயமாகக்கொண்டு தாம் பன்னெடுநாள் பழகிய தமிழ்க்கலையின் பயிற்சியும் சைவ சித்தாந்தத்தில் தமக்குள்ளபற்றும் தோன்ற சிவபெருமானே பரம் என்று மிக அஞ்சாது பேசினர்.

ஆறாவது திருக்கோவலூர். ஸ்ரீமான், ம. ர. குமாரசாமிபிள்ளையவர்கள் "தவம்" என்னும் விஷயத்தை உபந்நியசிக்கப்புகுந்து



தவமே சிறந்தது எதற்கும் தவம்வேண்டும் என அன்பெழப்பேசினர்.

ஏழாவது திருவோத்தூர் சைவஸ்ரீ பாநுகவி சுவாமிகள் ஸ்ரீ அரதத்தாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த "சுலோகபஞ்சகசிந்தனை" என்பதை விடயமாகக்கொண்டு சிவபெருமான் திருநாமமேகாயத்ரியின் பொருள் என்பது தோன்ற தம்வாக்கு வளத்தோடு உபந்நியசித்தனர்.

எட்டாவது, வாலாஜாநகர் ஸ்ரீமான். ஆ. கமலநாத முதலியாரவர்கள். "சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு" என்னும் விடயத்தைப்பேச ஆரம்பித்துத்தம் உபந்நியாசத்தில் அன்பெனுங்கடலுள்ளாழ்ந்தி மிகப்பாண்டித்யம் விளங்க உபந்நியாசித்தனர்.

ஒன்பதாவது சிற்றூர் ஸ்ரீமான். அரங்கசாமிப்பிள்ளையவர்கள் "மகேஸ்வரபூஜை" என்னும் விடயத்தை உபந்நியசிக்கப்புகுந்து விபூதிச்செல்வம்உடையவர் யாவரேனும் அவருடனிருந்து உண்டுகளிப்பதே பெரும்பொருள் என்று பேசினர்.

பத்தாவது வேலூர். ஸ்ரீமத் முத்து இராமலிங்க சுவாமிகள் "சம்பந்தர்" என எடுத்துத் தம் புலமையும் ஒழுக்கமும் யாவரும் அறிய நீண்ட காலம் பெரியதோர் பிரசங்கஞ்செய்தனர்.

பதினோராவது தூத்துக்குடி, ஸ்ரீமான் பொ. முத்தையப்பிள்ளை அவர்கள் "சைவ சித்தாந்த மகா சமாஜத்தால் விளைந்த பயனும்" 'விளையப்போகும்பயனும்' என்பதை விடய்மாகக்கொண்டு மகாசமாஜம் இந்தியநாடு மாத்திரமன்றி கடல்கடந்துள்ள தேசங்களிலும்பரவியுள்ளதே விளைந்தபயனென்றும் இனி ஆசியகண்டம் நீங்கலாக மற்றக்கண்டங்களிலும் பரவ இருப்பதே விளையப்போம் பயனென்றும் முடித்ததுடன், விபூதியிட்டார் யாவரும் சைவரேயாயினும் உண்ணல் முதலியவைகளில் பகுப்பு இருத்தல்வேண்டுமென்றும் வெகு விரிவாகப் பேசினர்.

பன்னிரண்டாவது வெள்ளையூர், ஸ்ரீமான். வி. ஐ. சொக்கலிங்க உடையாரவர்கள் "அருள்" எனும் விடயத்தை உபந்நியசிக்கப்புகுந்து உபகாரச்சிந்தை இல்லாதவன் எவனும் அருள் பெறுதல் இல்லை என்பது தோன்ற உபந்நியாசித்தனர். இறுதியில் சபாநாயக சுவாமிகள் ஒவ்வொருவர் உபந்நியாசத்தையும் விளக்கி

முடிவுரை கூறினர். ஆயின் சுவாமிகள் சைவர் யாவரும், ஒருங்கிருந்து உண்டுமகிழலாம் என்பது தோன்ற ஓர் வடமொழி நியாயத்தை எடுத்துக்கூறியது கவனிக்கத்தக்கதாகும். இடையிடையே திருமுறைப் பாராயணம் நடந்ததுடனே இறுதியிலும் நடந்தது.

மூன்றாம் நாளாகிய 28-12-13ல் வேலூர் கோட்டையில் காலையில் புகைப்படமும், அங்கத்தவர் கூட்டமும் முடிந்த பிறகு யாவரும் சபாமண்டபத்திற்குச் சென்றனர். வழக்கம்போல் முன்னர்த் திருமுறைப் பாராயணம் நடந்தது. பின்னர் முதலாவதாக மணிமங்கலம் ஸ்ரீமான் திருநாவுக்கரசு முதலியாரவர்கள் "திருவள்ளுவர்சமயம்" என்பதை விடயமாகக்கொண்டு, தமது பாண்டித்தியமும் சாத்திரக்கருத்தும் வெளிப்பட வெகுவிரைவாக அரியதோருபந்நியாசஞ் செய்தனர்.

இரண்டாவது சென்னை, ஸ்ரீமான். ச. சச்சிதானந்தம் பிள்ளை B,A. அவர்கள் ஆங்கிலத்தில் "An Appeal to Educated Hindus" என்பதைப் பேச ஆரம்பித்து சைவ சமயத்தின் தற்கால நிலை மிகுதியும் கவனிக்கத்தக்கதாக உள்ளது என்று பொருள்படும்படி தம் உலக அநுபவமும் ஆங்கிலஞானமும் யாவரும் அறியவெகுவிரிவாகப் பேசினர்,

மூன்றாவது பெங்களூர், ஸ்ரீமான், V. S. ஆறுமுகம் முதலியாரவர்கள் "நால்வர்மகிமை" என்னும் விடயத்தை மேற்கொண்டு தமக்கு நால்வர் இடத்தேயுள்ள அன்பினையும் தாம் நால்வரிடத்தே பாராட்டிய அன்பின்பயனால் தமக்கு நேர்ந்த பலன்களும் யாவரும் அறிய தம் அநுபவத்தை எடுத்துப் பேசினர்.

நான்காவது தஞ்சாவூர் ஸ்ரீமான். S.V.M. நாராயணசாமிசெட்டியாரவர்கள் "தெய்வாராதனை" என்பதை எடுத்து தெய்வங்கொள்கையின் முறையெலாம் வியந்து ஓதினர்.

ஐந்தாவது சகிண்டராபாத் ஸ்ரீமதி. ஆண்டாளம்மாளவர்கள் "ஆன்மலக்ஷணம்" எனத்தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தின் தொடர்ச்சியை முன் தினம் வாசித்ததுபோல் பல வடமொழி மேற்கோள்களுடன் வாசித்து முடித்தனர்.

ஆறாவது, வேலூர் ஸ்ரீமான், P. இராஜவேலு முதலியார் B, A. அவர்கள் "ஜீவகாருண்யம்" என்பதை விஷயமாகக் கொண்டு கொல்லாமையே சிறந்ததோர் புண்ணியம் என்பது தோன்ற உபந்நியாசித்தனர்.



ஏழாவது காரியதரிசி, ஸ்ரீமான். கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் "சைவ சித்தாந்த மகா சமாஜம்" என்பதையே விடயமாகக்கொண்டு சைவம் இது, சித்தாந்தம் இது, என விளக்கியதுடன் மகா சமாஜத்திற்கு வேண்டுவன இவையெனயாவரும் அறிய உபந்நியாசித்தனர்.

எட்டாவது, பெங்களூர் ஸ்ரீமான் கஜராஜ முதலியாரவர்கள் "நீதி" எனும் விடயத்தைப்பல பிரபலஞாயங்களை எடுத்துக் காட்டியாவரும் மகிழும்படி உபந்நியாசித்தனர்.

ஒன்பதாவது ஈரோட் ஸ்ரீமான் அர்த்தநாரி ஆச்சாரியவர்கள் "சங்கானுபவம்" எனும் விஷயத்தை பேசத்தொடங்கி இந்தியாவில் உள்ள சைவர் எண்ணிக்கையையும் சித்தாந்த மகா சமாஜத்து தற்போது உள்ள எண்ணிக்கையையும் எடுத்துக் காட்டி சமாஜத்தில் சைவர் யாவரும் ஒருங்குசேர்வாராயின் எவ்வளவோ அரிய காரியங்களை யெல்லாம் செய்து முடிக்கலாமென்று தமது நீண்ட அநுபவத்தை இனிமைபடப்பேசினர்..

பத்தாவது காஞ்சி ஸ்ரீமான், சோணாசலபாரதியவர்கள் "திருத்தொண்டு" என்பதை விடயமாகக்கொண்டு திருத்தொண்டின் சிறப்பையெலாம் யாவரும் மகிழப்பேசினர்.

பதினோராவது சென்னை, ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் "சிவஞான போதம்" என்பதை விஷயமாகக்கொண்டு தமிழ்ச் சிவஞானபோதம் வடமொழிச் சிவஞானபோதத்தினின்றும், மொழிபெயர்த்ததாகாது முதனூலே தமிழாகும் என்பதை விளக்க வெகு நியாயங்கொண்டு விரிவாகப்பேசினர்.

பன்னிரண்டாவது, மதுரை ஸ்ரீமான் J. M. நல்லசுவாமிப் பிள்ளை B. A., B. L. அவர்கள் "பெரியபுராண உட்பொருள்" என்பதை விஷயமாகக்கொண்டு அறுபான்மும்மை நாயன்மார் திருத்தொண்டுகளைக்கூறுங்கால், மனைவியையிழந்தும்மைந்தனையும், மகட்கூந்தலையுமரிந்தும் தன்னுயிர்போக்கிய பகைவனையும் நம் தமர் எனக்கூறியும் முத்தியடைந்தனர் என உபந்நியாசித்ததுடன் தற்காலத்துச் சைவர் பலர்தம் ஆணவத்தடிப்பு நீங்காராய் நானெனும் அகந்தையுள் ஆழ்கின்றனரென்றும் உபந்நியாசித்தனர்.

பதின்மூன்றாவது கொழும்பு, ஸ்ரீமான், முதலியார் சபாரத்தினம் அவர்கள் "சமாஜக்கடமைகள்" என்பதை உபந்நியாசமா

க்கொண்டு வடமொழி தமிழ்மொழி எனும் ஆசங்கை சிவஞான போதத்துக்கொண்டு, அடையவேண்டிய பெரும்பயனில் உழையாது நிற்பது முன்னேற்றத்திற்கு அறிகுறியாகாதென்றும் சிவஞானம் வடமொழி என்பதற்குத் திருவாவடுதுறை யாதீனமே சாக்ஷியென்றும் தமிழ் என்பதற்கு சாக்ஷி கூறுவாரில்லை யென்றும் சைவத்தின் தற்காலநிலை மாறுதலடைதல் வேண்டுமென்று ஆங்கில உணர்ச்சியால் கூறுவது மாத்திரம் போதாதென்றும் இன்னின்னமாறுதல்கள் அடைதல் வேண்டுமென்பதை அநுபவஞானத்தால் கூறல்வேண்டுமென்றும் எம்மதத்தில் தோன்றினராயினும் சைவ சித்தாந்தத்தின்படி சைவ சித்தாந்தியாக யிருந்தாலன்றி மோக்ஷமடைதற்கு வழியில்லை யென்றும் தமிழில் வெகு யுக்தி போதிப்பாகப்பேசினர். பிறகு சபாநாயக சுவாமிகள் தமது கடமையாக அன்று நடந்த உபந்நியாசங்கள் ஒவ்வொன்றினையும் எடுத்துப்பேசி முடிவுரை கூறினர். தேவாரபாராயணம் முடிந்தவுடன் சபாநாயக சுவாமிகட்கு, ஸ்ரீமான் முதலியார் சபாரத்தினம் அவர்கள் வந்தனம் அளித்த பிறகு சமாஜக்காரியதரிசியாகிய ஸ்ரீமான் கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் ஒவ்வொருவருக்கும் நன்னயம்பட வந்தனம் அளித்ததுடன் காப்டன் அவர்களுக்கும் வந்தனம் கூறி முடித்துப் பிறகு வாலன்டியர்களாக வேலைசெய்த நாற்பத்திரண்டு இளைஞருக்கும் அரியதோர் உலக அநுபவங்கொண்ட புத்திமதிகளை நன்குபோதித்து வாழ்த்துக்கூறினர். பிறகு, சபாநாயக சுவாமிகட்கும் மற்றையர்கட்கும் மாலை சூட்டப்பட்டது. அன்பர்கள் பலர் வாழ்த்துப்பாக்கள் பாடிக்கொணர்ந்தனர். அவையாவும் காரியதரிசியால் ஒவ்வொருவரும் நன்குகேட்டறியும்படி வாசிக்கப்பட்டன. பலதிக்குகளிலிருந்தும் வந்த தந்திகள் யாவும் வாசிக்கப்பட்டன. இச்சமாஜம் ஒன்பதாம் ஆண்டாகிய இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் ஆனரபில் இராமநாதன் காலேஜில் நடைபெறவேண்டுமென்று கேட்டுக்கொண்ட (ஆனரபில் இராமநாதன் அவர்கள்) தந்தியை வாசிக்கப்பட்டதுடன் சமாஜத்திற்கு விஜயஞ் செய்திருந்த ஸ்ரீமான் முதலியார் சபாரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் கூடும் சமாஜக்கூட்டத்திற்கு யாவரும் வந்திருந்து நடத்தல்வேண்டுமென்றுகேட்டுக்கொண்டனர் பிறகு மங்கள கோஷத்துடன் சபை பூர்த்தியாயிற்று சுபம்! சுபம்!!

இங்ஙனம்

களந்தைக்கிழான்.

---

## சைவ சித்தாந்த மகா சமாஜ நிர்வாகசபையினர்.

### போஷகர்.

மாட்சிமைதங்கிய ஸ்ரீமான் இராமநாதபுரம் மகாராஜா அவர்கள்

### சபைத்தலைவர்.

திருக்கோவலூர் மடாலயம் ஸ்ரீமத் ஞானியார்மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.

### உபஅக்ராசனாதிபதிகள்.

ஸ்ரீமான் S. இரத்தினவேலு செட்டியார் அவர்கள்.
Dubash, Messrs. Best & Co., Madras.

ஸ்ரீமான் J. M. நல்லசுவாமி பிள்ளை அவர்கள் B.A., B.L. Madura.

### காரியதரிசிகள்.

,, கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள், சென்னை.

,, முதலியார் சபாரத்தினம் அவர்கள், சிலோன்.

### பொக்கிஷதார்.

,, இ. ஆதிமூல முதலியார் அவர்கள், சென்னை.

### பத்திராசிரியர்.

,, சித்தாந்தசரபம் அஷ்டாவதானம், பூவை-கலியாணசுந்தர முதலியார் அவர்கள

### நிர்வாகசபையினர் உள்ளூர்.

ஸ்ரீமான் S. சச்சிதாநந்தம்பிள்ளை அவர்கள் B. A.
,, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்.
,, M. W. கோவிந்தராஜமுதலியார் அவர்கள்
சரவணமுதலியார் அவர்கள் B. A.
K. M. சிங்காரவேலு முதலியார் அவர்கள்.
T. செல்வராஜு முதலியார் அவர்கள்.
A. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்.
இராஜுகண்ணு முதலியார் அவர்கள் B. A.
முத்திருளாண்டிப் பிள்ளை அவர்கள் B. A.
A. பாலசுப்ரமண்ய முதலியார அவர்கள்.
T. S. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்.

வெளியூர்.

R. S. சுப்ரமண்யம் அவர்கள், மன்னார்.
அருளம்பலம் அவர்கள், யாழ்ப்பாணம்
T. சொக்கநாதன் அவர்கள், கொழும்பு.
அருணகிரி முதலியார் அவர்கள், திருவண்ணாமலை.
S. பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.
ஸ்ரீலஸ்ரீ மறைத்திருவன் விருதை. சிவஞானயோகிகள் அவர்கள்.
பொ. முத்தையாப்பிள்ளை அவர்கள், தூத்துக்குடி.
M. வேலுசாமித்தேவர் அவர்கள், இராமநாதபுரம்
M. A. R. N. இராமநாதன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை.
T. மெய்கண்டபிள்ளை அவர்கள், நாகப்பட்டினம்.
T. S. சாமிநாதப்பிள்ளை அவர்கள், திருச்சி.
M. R. குமாரசாமிப்பிள்ளை அவர்கள், திருக்கோவலூர்.
C. T. பார்த்தசாரதி முதலியார் அவர்கள், B. A., L. T. சிற்றூர்.
C. ஏகாம்பரமுதலியார் அவர்கள், செங்கல்பட்டு.
K. U. பொன்னுசாமிமுதலியார் அவர்கள், உத்திரன்மேரூர்
P. C. முருகேச முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.
P. இராஜவேலு முதலியார் அவர்கள் B. A. வேலூர்.
R. சண்முக முதலியார் அவர்கள், B. A. சேலம்.
E. R. அர்த்தநாரி ஆச்சாரி அவர்கள், ஈரோட்.
S. J. M. நாராயணசாமி செட்டியார் அவர்கள், தஞ்சாவூர்
ஏகாம்பரசெட்டியார் அவர்கள், வேலூர்.
C. ஏகாம்பர முதலியார் அவர்கள், பெங்களூர்.
பழநிசாமிப்பிள்ளை அவர்கள், புதுவை.
பாஷ்கர ஆச்சாரி அவர்கள், வேலூர்.

கணிதபரிசோதகர்

T. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள், சென்னை.

வனிதையர்பக்கக் காரியதரிசி.

ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் அவர்கள், பெங்களூர்.

## "சிவலிங்கதத்வார்த்தம்."

சிவாகமத்தின் உண்மைப் பொருளிதுவென விளக்குவதே இவ்வுபந்நியாசத்தின் கருத்தாம். தத்வார்த்தமென்பது உண்மைப்பொருளெனப்படும்.

சிவலிங்கமெனுஞ் சொற்றொடர் சிவமாகிய லிங்கமென விரியும். விரியுங்கால் சிவமென்னுஞ் சொல் தன்மையையும், லிங்கமென்னுஞ் சொல் தன்மையை உடையதனையுங் குறிக்கும். குறிக்கவே லிங்கத்தின் றன்மை சிவமெனக் கொள்ளக்கிடக்கும். இதனைச் சாரைப்பாம்பு யென்றவிடத்து சாரையாகிய பாம்பென விரிந்து பாம்பின் தன்மை சாரையெனக் கொள்வது போல அறிக.

ஆகவே சிவலிங்கமென்னுஞ் சொல்லிற்கு லிங்கத்தின் தன்மை சிவமென்பது பொருளாதலால் முதற்கண் லிங்கமென்னுஞ் சொற்பொருளையும், பின்னர் சிவமென்னுஞ் சொற்பொருளையும் விசாரித்து அதன் பின்னர் சிவலிங்கமானது பிருதிவி சம்பந்தமான மண், கல், படிகம், செம்பு, தங்கமுதலியவற்றி லமைந்திருப்பதின் கருத்தையும் விசாரிப்பாம். அன்றியும் * சூசிகடாக நியாயம்பற்றி லிங்கமென்னுஞ் சொற்பொருளை முன்னரும் சிவமென்னுஞ் சொற்பொருளைப் பின்னரும் விசாரித்தலமையும்.

லிங்கமென்னுஞ் சொல் அடையாளமென்னும் பொருளையுணர்த்தும் பொருளையுணர்த்தும். அடையாளமென்பது ஒருபொருளை இதுவெனவுணர்த்தற்குச் சிறந்தகுறியாம். அக்குறி பிறிதொரு பொருளையுணர்த்தாது குறித்த பொருளை யுணர்த்தும். அக்குறியை

* சூசிகடாக நியாயம்=சூசி என்பது ஊசி, கடாகமென்பது கடாரம் கடாரத்திற்காகப்பொருள் கொடுத்தவன் முன்னரும், ஊசிக்காகப்பொருள் கொடுத்தவன் பின்னருமாயிருக்கவும், கடாரத்தின் வேலை நாள் நீட்டிப்பை உடையதாகவும் ஊசியின்வேலை அவ்வாறில்லாததாகவு மிருத்தல்பற்றிப்பின்னர் பொருள் கொடுத்தவனுக்கு முன்னர் ஊசியைச் செய்துகொடுத்துவிட்டு முன்னர் பொருள்கொடுத்தவனுக்குப் பின்னர் கடாரத்தைச்செய்து கொடுத்தலாம் அதுபோல லிங்கமென்னுஞ் சொற்பொருள் சுருக்கமும் சிவமென்னுஞ் சொற்பொருள் பெருக்கமுமாம்.

எப்பொழுது உபயோகப்படுத்துவதென ஆராயுமிடத்து ஒரு பொருளைப் பிறிதொருவருக்கு நேரிற் காட்டமுடியாத சந்தர்ப்பத்தில் அப்பொருளின் தன்மைத்தா யிருக்குமென்று அத்தன்மையை விளக்குகின்ற ஒரு குறியைக்காட்டுவது வழக்கமாம். அதுபோலச் சிவமாகிய பொருளை நேரிற்காட்டமுடியாத சந்தர்ப்பத்தில் அச்சிவப்பொருளின் தன்மைத்தென்று காட்டும் அடையாளமாயிருந்தது லிங்கம், சந்திரசேகரர் முதலிய திருமேனிகளெல்லாம் பிறிதோரண்டத்தில் பேசுந்தெய்வமாகக் காணப்படுமாதலால் அத்திருமேனிகளை உள்ளவாறே காட்டும் அம்மூர்த்தங்களுக்கு லிங்கமென்ற பெயர் கிடையாது. உருவப்பொருளல்லாத சிவப்பொருளைக்குறிப்பதற்கே லிங்கமெனப்பட்டது. இனி லிங்கமென்பது எல்லாம் தோன்றி ஒடுங்குதற்குரிய மூலமெனவும் சித்திரித்தலெனவும் பொருள்படும், அவ்வாறு படுங்கால் பீடமும் லிங்கமுமாய்க்காணப்படுவது அவ்வியக்த லிங்கமெனவும் சந்திரசேகரர் முதலிய மகேசுரமூர்த்தங்கள் வியக்த லிங்கமெனவும் அறிக.

இனி, சிவமென்னுஞ் சொல்லில் சிகரம் சிவத்தையும் வகரம் அருளையுங்குறிக்கும். இவ்வுண்மையை உண்மை விளக்கமுதலிய சித்தாந்த நூல்களிற் காண்க. வகரமின்றிய சிகரமட்டுஞ் சிவத்தையுணர்த்துமென்றல் எவ்வாறு பொருந்துமெனின் செம்மையாகிய அக்கினியென்றபொழுது சூட்டைக்குறிக்காத செம்மையென்னுஞ்சொல் சூட்டையுடைய அக்கினியை யுணர்த்துவதுபோலச் சிகரமே வகரத்தோடு கூடிய சிவத்தை யுணர்த்துமென்க. சிகரம் சிவத்தை எவ்வாறு உணர்த்துகின்றதெனின் சிகரம் பற்றின்மையைக் குறித்த ஓரெழுத்தொரு மொழி, இதனை நாயோட்டு மந்திரம் நாதனிருப்பிடம், நாயோட்டு மந்திரம் நான்மறைவேதம், நாயோட்டுமந்திரம் நாதாந்தசோதி, நாயோட்டு மந்திரம் நாமறியோமே, என்னுந் திருமந்திரம் வலியுறுத்தும். வகரம் வாவென்னுங் கிருபைக்குறிப்பை யுணர்த்து மொழியாய்க் குறிக்கின்றது. ஆகவே சிவமென்னுஞ் சொல் பற்றின்மையினால் எப்பொருட்கும் வேறாயுங் கிருபையினால் எல்லாப்பொருளுடனொன்றாயும் நிற்குமென்பதைக் குறிப்பதாம். சிகரவகரங்கட்குக் கூறிய இப்பொருள் சித்தாந்த மரபுயென்னுநூலிற் கண்டது. வகரமானது கூடா



மல் சிகரந்தனித்து நின்றவிடத்துத் தொனியினால் சிவத்தையுணர்த்தாமையால் வகரங்கூடிநின்றே தொனியினால் சிவத்தையுணர்த்தும். இதுபோல அருளோடு கூடிப் பிரிப்பின்றியே சிவம் விளங்குவதாகும். அருளெனினுஞ் சத்தியெனினு மொக்கும். நாயகன் நாயகி கூட்டத்தையே உலகத்தில் மங்கலமென்று சிறப்பித்துக் கூறுவர். கூடினும் ஒரு காலத்திற் கூடுதலும் மற்றொருகாலத்தில் பிரிதலுங்காணப்படலால் அக்கூட்டத்திற்குரிய மங்கலம் நித்தியமன்று. சிவபெருமானுந் திருவருளுங்கூடிய கூட்டம் அக்கினியிற் சூடுபோல என்று முள்ளதாதலால் சிவமென்பது மங்கலத்தையுடையது எனவுணர்த்தும். அன்றியும் ஏனைப்பொருள்களாலுண்டாம் மங்கலம் தனக்கு மேற்பட்ட பொருளைநோக்க அமங்கலமாய் முடியுமாதலின் சிவப்பொருள் எல்லாப்பொருளினும் வேறாயும் எல்லாப் பொருளினுங் கூடியும் நிற்றலால் எல்லாப் பொருளுக்கு மங்கலத்தைக் கொடுப்பதில் தனக்கு மேலொரு மங்கலப்பொருளின்மையை உணர்த்துதலின் சிவமென்பது மங்கலத்தைத் தருவதெனவு முணர்த்தும்.

இத்தகைய மங்கலமாகிய சிவப்பொருளின் வடிவம் யாதெனத்தெரிந்து கொள்ளாதபொழுது அப்பொருளையடைந்து மங்கலத்தைப் பெறுதல் கூடாது. ஆதலால் அச்சிவபொருளின் வடிவம் யாதென ஆராய்வாம்.

எல்லாப் பொருளோடுங்கூடியும் அப்பொருள்களிற் பற்றில்லாதிருக்கும்பொருள் அகண்டவெளியாயிருத்தல் வேண்டுமேயல்லது உருவமாகவாவது அருவுருவமாகவாவது இருத்தல் கூடாது. இருக்குமாயின் ஏனைய பொருள்களோடு கூடியும் பற்றின்றியும் நிற்கமுடியாது. எதுபோலவெனின் மண்முதலாகிய நான்கு பூதங்களினும் கூடியும் பற்றின்றியும் நிற்கும் ஆகாயம்போலவென அறிக. இப்பூதவெளி அறிவில்லாதசடம். சிவப்பொருளாகிய அப்பரவெளி அறிவுடையசித்து, ஆதலால் அப்பரவெளியைச் சிதாகாயமென்றும், ஞானகாயமென்றும் கூறுவர். இறைவன் வடிவம் வெளியேயென்பதை * "பூதங்களல்ல பொறியல்ல வேறுபுலனல்ல வுள்ளமதியின், பேதங்களல்ல வினையின்றி நின்ற

* திருவிளையாடற்புராணம்.

பிறிதல்ல வென்று பெருநூல், வேதங்கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப" எனவும் * "சிற்பரவெளிக்குள் வளர்தற்பரம தானபரதேவதையை" எனவும் † "எல்லாம் வெளியேயென்ன எச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்" எனவும் வருகின்ற திருவாக்குகளாற்றெளிக. இப்பரவெளியோடு பிரிப்பின்றி நிற்கும் உயிர்ப்பொருளுக்கு அப்பரவெளியை அறிதலே முத்தி, அதனை அறிய வொட்டாது மறைத்திருக்கும் அநாதிபந்தமாகிய ஆணவ மலத்தை நீக்குதற் பொருட்டுக்கருணையோடு கூடிய பரவெளியாகிய சிவப்பொருள் மான், மழு, சதுர்ப்புஜ முதலிய திருமேனி கொண்டருளும், அத்திருமேனியும் இம்மண்ணுலகத்துள்ளார் தெரிசிக்கமுடியாது. இந்த அண்டத்தை வியாபித்து இதினின்று மேம்பட்டுவிளங்கும் சூக்குமமான பிறிதோரண்டத்திலிருக்கும் உயிர்களே அவ்வுருவத்திருமேனியைத் தெரிசிக்கக்கூடும். இம்மண்ணுலகமாகிய தூல அண்டத்தையும் இதனை வியாபித்து மேலாய் நிற்கும் சூக்கும அண்டத்தையும் வியாபித்து இவ்விரு அண்டங்களின் மேலாய் விளங்கும் அதிசூக்கும அண்டத்தில் வாழுமுயிர்கள் அப்பரவெளியாகிய சிவப்பொருளை அறியும், அவ்வாறாயின் இவ்வண்டத்துள்ள நம் பெரியோர்கள் சதுர்ப்புஜமுதலிய உருவத்திருமேனியையும் அகண்டயாகிய பரவெளியையுந் தெரிசித்தார்களென்று கூறு நூல்களோடு இக்கருத்து முரணாதோவெனின்? முரணாது, எவ்வாறெனின் இத்தூல அண்டத்தின் பற்று அறவே நீங்கியபொழுது சூக்கும அண்டமும் அவ்வண்டத்துள்ள இறைவனுடைய உருவத்திருமேனியுந்தோன்றும். அச்சூக்கும அண்டத்தின் பற்று மறவே நீங்குங்கால் அதிசூக்கும அண்டமும் பரவெளியாகிய சிவபெருமானுடைய உண்மைச்சொரூபமுந் தோன்றும். எல்லா அண்டங்களிலும் வியாபித்திருக்கிற பரவெளியை உற்று நோக்குவார்க்கு உணர்தல் கூடுமென்பதை ஒரு திருட்டாந்தத்தில் வைத்து மதியலாம். அதாவது ஒரு சொல்லுக்குப்பொருளிது வெனத் தோன்றாதபொழுது மனதை அகத்துத்திருப்பிச் சிந்திக்கின்றான், சிந்தித்தபொழுது புறப்பொருள்களின் பற்று நீங்குகின்றது. நீங்கவே பரவெளியின் சந்திப்பு உண்டாகின்றது.

* தாயுமான சுவாமிகள் பாடல். † ஷை.



எல்லாப் பொருள்களும் பரவெளியிலிருப்பதால் கருதியபொருள் தோன்றுகிறது. இவ்வநுபவம் ஞானிகளிடத்தும் அஞ்ஞானிகளிடத்து முளதேனும் பரவெளியைத் தலைப்பட்டுணர்ந்தோமென்பதை ஞானிகளுணர்வார்கள். அஞ்ஞானிகளறியமாட்டார்கள்.

ஆகவே இவ்வுலகத்துள்ளார்க்கு எல்லாப் பற்றுமறவே நீங்கும்பொழுது பரவெளியாகிய சிவசொரூபத்தைத் தெரிசித்தல் கூடுமெனவும் பற்று நீங்காதபொழுது முடியாதெனவும் பெறப்பட்டன. * "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்ற திருவாக்கின்படி பற்று நீக்கத்திற்கும் அவனருள்வேண்டும், அவ்வருளுண்டாவதற்கவனை வழிபடல்வேண்டும். வழிபடுதற்கு அவனுடைய தோற்றம்வேண்டும் தோன்றாத பொருளிடத்து வழிபாடுசெய்து பயன் பெற்றேனென்பது கண்ணில்லாதவன் அலங்காரமுள்ள ஒரு பொருளைக்கண்டின்புற்றேனென்பதை யொக்கும். ஆதலால் எல்லாப்பொருளுந்தானாயிருக்குந்தன்மை பரவெளியாகிய சிவபெருமானுக்கிருத்தலால் எல்லாப்பொருளிடத்தும் வழிபாடு செய்வேமெனின் அப்பொருளுக்கெல்லாம் தனித்தனிப் பெயரிருத்தலான் மனிதன் என்ற வொரு பொருளைக் கண்டமாத்திரத்தில் மனிதன் என்ற எண்ணம் உண்டாவதேயன்றி கடவுளென்ற எண்ணம் உண்டாவதில்லை. கடவுளைத் தெரிசித்த பின்னர் எப்பொருளுங் கடவுளாய்த் தோன்றும். முன்னர்த் தோன்றாது. ஆகவே இம்மண்ணுலகத்துள்ளார் கடவுளை வழிபடுவதற்குப் பார்த்தமாத்திரத்தே பொதுவான உணர்ச்சியுடையார்க்குக் கடவுளென்ற எண்ணமும் சிறப்பான உணர்ச்சியுடையார்க்குப்பரவெளியாகிய சிவமென்ற வெண்ணமும் உண்டாகும் பொருட்டு அப்பரசிவமே சிவலிங்கமாகிய திருமேனியைக் கொண்டருளிற்று. இறைவன் கருணைப் பெருக்காற்றோன்றிய சிவலிங்கத்தைச் சுயம்பு, (ஒருவராற் செய்யப்படாத) லிங்கமென்பார். இதுவன்றி அப்பர வெளியைத் தெரிசித்த பெரியோரால் பிரதிட்டை செய்யப்பெற்ற சிவலிங்கமுமுண்டு. இச்சிவலிங்கம் எப்பொருளாலமைந்திருந்தாலும் அதனைக்கண்ட மாத்திரத்தே அப்பொருளினெண்ணம் உண்டாகாமல் சிவலிங்கமென்னும் பெயரிருத்தலால் கடவுள் என்ற எண்ணமுண்

* திருவாசகம்.

டாகுமென்றது கூடும். பரவெளிய தென்ற எண்ணம் எவ்வாறு உண்டாகுமெனின் அச்சிவலிக்கத்தினமைப்பினால் உண்டாகும். எவ்வாறெனின் பூதவெளியாகிய ஆகாயத்தை உற்று நோக்குங்கால் உயர்ந்தும் அகன்றுந்தோன்றும். உயர்ந்த தோற்றம் அதீதமென்பதையும் அகன்றதோற்றம் எல்லாந் தன்னுள்ளும் தான் எல்லாவற்றுள்ளுமென்பதையும் உணர்த்தும். இவ்வாறே ஞானவெளியாகிய சிவப்பொருளும் விளங்குமென்பதை உணர்த்துதற்கு உயர்ந்தும் வட்டமாக அகன்றுஞ் சிவலிங்கமமையப்பெற்றிருக்கின்றது. இதனை

"குரைக்கின்ற வாரிக்குவலய நீரும்
பரக்கின்ற காற்றுப்பயில்கின்ற தீயு
நிரைக்கின்ற வாறிவை நீண்டகன்றானை
வரைத்து வலஞ்செயு மாறறியேனே" என திருமந்

திரத்தில் சிவலிங்கத்தைப்பற்றிக் கூறிய வாற்றானறிக.

(இன்னும் வரும்.)

பொ. முத்தையபிள்ளை.

---

## சமாச்சாரங்கள்.

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்தஜன சபையின் ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழா:—1914௵ ஜனவரி௴ 25௳ ஆதிவாரம் பிற்பகல் 3 - மணிக்குமேல் ஷை பேட்டை ஸ்ரீ சுந்தரேசுரர் ஆலய மகாமண்டபத்தில் சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமான்-க. சதாசிவ செட்டியார் B. A. அவர்களாலும் ஸ்ரீமான்-கி. குப்புசாமிமுதலியார் அவர்களாலும் முறையே திருவாசகச் சிறப்பு என்னும் விடயமும் சன்மார்க்கம் என்னும் விடயமும் உபந்நியசிக்கப்பட்டன.

---

ஸ்ரீ திருநீலகண்ட நாயனார் திருநக்ஷத்திரக்கொண்டாட்டம்:—திருநீலகண்டநாயனார் அரனடி அடைந்தது விசாகத் திருநட்சத்திரம். பிரமாதீச௵ தை௴ 7௳ (20-1-14) செவ்வாய்க்கிழமை காலை 8-மணிக்குத் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ திருநீலகண்ட நாயனாருக்கு மகாபிஷேகம் மாலை 6-மணிக்குச் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் காரியதரிசி ஸ்ரீமான்-கி. குப்புச்சாமி முதலியார் அவர்களால் ஷை நாயனார் சரிதப்பிரசங்கமும், இரவு 8-மணிக்குமேல் மஹோற்சவமும் நடந்தேறியது.

---

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் திருவொற்றியூர் யாத்திரை:—இத்திருக்கூட்டத்தினர், தங்கள் சகோதரத் திருக்கூட்டங்களோடு, நிகழும் பிரமாதீச௵ தை௴ 25௳ (7-2-14) சனிவாரம் இரவு திருவொற்றியூரையடைந்து, அடுத்த ஆதிவாரம் இதன்கீழ் குறித்தவாறு வழிபாடு செய்தார்கள். காலை 7 மணிக்கு உழவாரத்திருப்பணி. பகல் 11½க்கு மாகேசுரபூசை. மாலை 1க்கு இளைப்பாறல். ,, 2க்கு சைவப்பிரசங்கம். 3½க்கு அம்மையப்பருக்குத் திருமஞ்சனமாதி உபசாரங்களும் பிரதோஷ மகோற்சவ தரிசனமும் நடந்தேறின.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR ... 1914 MADRAS

# சித்தாந்தம்.

தொகுதி ௩.] 1914-௵ பிப்பிரவரி, மார்ச்சு௴ [பகுதி ௨.௩.

## சைவ சித்தாந்தம்.

ரௌரவ ஆகம தத்துவபடலத்தின் மொழி பெயர்ப்பாகிய சதாசிவரூபம்

"உயர்மறைபுகழ் சிவன் ஓங்கு சதாசிவன்
இயலுமகேசனென மூன்றாயவை
அருவே அருவுரு வுருவாயடைவே
ஒருதொகை முப்பத்தொன்றாகும்மே."

இச்செய்யுளின் என்னுதலிற்றோவெனின் சிவன் சீவர்களின் மலமொழியவுடதபஞ்ச கிருத்தியத்துக்கான, உருவநாமம் முதலிய தத்துவங்கள் நுதலிற்று.

நிட்களம், அருவம், இலயம்; நிட்களசகளம், அருவுருவம், போகம்; சகளம், உருவம், அதிகாரம், இவை முறையே ஒரு சொற்பன் மொழியாம்

| | | |
|---|---|---|
| நிட்களம், | ஒன்று. | ௧. |
| நிட்களசகளம், | ஐந்து. | ௫. |
| சகளம், | இருபத்தைந்து | ௨௫. |
| தத்துவம் ஆகக்கூடிய தொகை, | | ௩௧. |

இவ்வுலகமனைத்தும், ஒரு காலவெல்லையிலே, தோன்றிநின்று அழியுங்காரியப்பாட்டினை யுடையனவாயிருத்தலால், இவற்றை

இங்ஙனம் காரியப்படுத்துகின்ற ஒரு பொருள் இவற்றின் வேறாக உண்டென்று அனுமானிக்கப்படும். அப்பொருள் இவ்வுலகம் போலத் தான் முத்தொழிற்படாமையினாலே அநாதி நித்தியவஸ்த்துவாயும், எல்லாவுலகையுந் தன்கீழ் வைத்துக்காரியப்படுத்துதலினாலே தானே சர்வகர்த்தாவாகியும், எல்லாவுலகினும் நிறைந்து நின்று காரியப்படுத்துதலினாலே சர்வபரிபூரணமுடையதாயும், எல்லாவுயிர்களுக்கும் பந்த நீக்கிப்போக மோக்ஷங்களைக் கொடுத்தலினாலே சர்வகாருண்ணிய முடையதாயும், அவ்வவ்வான்மாக்கள் செய்த வினைப்பகுதிகளையுணர்ந்து அவ்வவ்வினைப் போகங்களை அவ்வவ்வர்க்கு அவ்வவ்வக்காலத்து வழுவாது ஊட்டுவித்தலினாலே சர்வ சுதந்திரமுடையதாயும், எல்லாக்காரியங்களையும் ஒருங்கேவைத்துத் தொழிற்படுத்துதலினாலே சர்வசத்தியையுடையதாயும், இன்னும் அளவில்லாத பல மகிமைக்குணங்களுள்ளதாயும் விளங்கும், அந்த மகா உன்னதமுள்ள வஸ்துவே நம்மால் கடவுள் என்று சொல்லப்படுவது. அக்கடவுள் தோற்ற நாசங்களில்லாதவராதலினாலே அவருக்கு ஓர் உருவமிருக்குமென்று சொல்ல இடமில்லை. உருவமில்லாமையினாலே ஒரு பெயருண்டென்னவும் இடமில்லை. உருவும் பெயருமில்லாமையினாலே அவருக்கென ஓர் ஊர் உண்டென்று கூறவுமிடமில்லை. இவை இல்லாமையினாலே அவருக்கென ஒருதொழிலிருக்குமென்று சொல்லவுமிடமில்லை. அவர் அங்ஙனந் தமக்கென ஓர் ஊரும் பேரும் உருவுந் தொழிலும் இல்லாதவராயினும் ஆன்மாக்களிடத்து வைத்த பெருங்கருணையினாலே அவ்வான்மாக்களைப் பந்தித்த பாசத்தையொழித்து உய்வித்தல் ஏதுவாக ஊரும் பேரும் உருவுந் தொழிலும் கொண்டருளுவர். அதனால் அவருடைய நிலை சொரூபமென்றுந் தடத்தமென்றும் இருவேறு வகைப்படுவதாயிற்று.

சொரூபம்=தடத்தம்
இயற்கை=சேற்கை
அநாதி=ஆதி
மெய்=பொய்
நித்தியம்=அநித்தியம்
காரணம்=காரியம்
சூக்குமம்=தூலம்



இவ்வேழும் ஒரு சொற் பன்மொழியாம். யாதினுந் தோய்வின்றி நிருபாதிகமாய்ச் சுயம்பிரகாசமாய் நிற்கும் அவ்வுண்மை நிலையே சொரூபமெனப்படும். உயிர்கள் பொருட்டு ஊரும் பேரும் உருவுந் தொழிலும் கொள்ளும் அந்நிலை தடத்தமெனப்படும். நிருபாதிக வஸ்துவாகிய கடவுள் அங்ஙனங்கொள்ளுமிடத்தும் தம்மில் நீக்கமற நின்ற சத்தியினிடமாகக்கொள்வரேயன்றி ஏனையுயிர்த்தொகுதிபோல மாயையினிடமாகக்கொள்ளமாட்டார். ஆகலின் அவருடைய உருவம் சிவசத்திவடிவினதேயாம். கரணங்களும் சிவசத்தி வடிவினதேயாம். புவனமும் அன்னதேயாம். போகமும் அன்னதேயாம்.

அவர் தம்முண்மை நிலையிற் சிவமெனப்படுவர். ஆன்மாக்களின் ஆணவமல உபாதியை நோக்கிச்சகியாமையாற் பிறந்த அச்சிவத்தின் இரக்கமே பராசத்தியென்று சொல்லப்படும். அச்சத்தியிலடங்கி அபின்னமாக நிற்கும் அவதரத்தில் அவர் பரன் எனப்படுவர். அப்பராசத்திக்கு ஆன்மாக்களின் ஆணவமலத்தைத் தீர்ப்பதற்கு நம்மையன்றி வேறொருவருமில்லையென்று நின்ற அவதரம் ஆதிசத்தியெனப்படும். அம்மலத்தை நீக்கும் இச்சையுற்று நின்றபொழுது இச்சாசத்தியெனப்படும். அம்மலத்தின்றரத்தையும் பிரார்த்த கன்மத்தின் சுபாவத்தையும் அறிந்து நின்றது ஞானசத்தியெனப்படும். அப்பராசத்தி ஆன்மாவின் சகசமாகிய ஆணவமலத்தையொழித்தற்கு ஆகந்துகமாகிய பிரார்த்த கன்மமலம், திரோதமலம், சுத்தமாயாமலம், அசுத்தமாயாமலம் என்னும் நாலையுங் கூட்டவேண்டுமென்று நின்ற அவதரம் கிரியா சத்தியெனப்படும். இந்தப்பஞ்சசத்தி மூர்த்திமானான பரனுக்கு அருவமாகிய பரநாதமென்றும் ஆதிசத்திமுதலான நான்கு சத்தியையும் உடையதாய் நின்ற பராசத்திக்கு அருவமாகிய பரவிந்துவென்றும் பெயருண்டாம். இப்பரநாதமும் பரவிந்துவும் ஞானிகளுக்குத் தரிசனமாம். பராசத்தி ஆன்மாக்களுக்கு ஆகந்துகமலத்தைக் கூட்டுவிக்குந் தரமாக நிற்கவேண்டுமென்று நின்ற அவதரத்திற்றோன்றிய அருவமாகிய சிவத்துக்கு அபரநாதமென்றும் இதற்கு அபின்னமாகிய சத்திக்கு அருவமாகிய அபரவிந்துவென்றும் பெயருண்டாம். இவ்விரண்டும் யோகிகட்குத் தரிசன

மாம். இந்த அபரசத்தி ஆன்மாக்களுக்கு ஆணவமலந்தீரப் பிராரத்த கன்மத்தைக் கொடுக்கவேண்டுமென்று நின்ற அவதரத்தில் தோன்றிய சிவமும் சத்தியும் அநுக்கிரக கிருத்தியத்தையும் அருவுருவத்தையு முடைய சதாசிவமும் மனோன்மணியும் எனப்படும். அச்சத்தி பிராரத்த கன்மத்தை ஒவ்வொன்றாக மறைத்து மறைத்துக்கொடுக்கவேண்டுமென்று நின்ற அவதரத்திற்றோன்றியது திரோதகிருத்தியத்தையும் உருவத்தையுமுடைய மகேசுரனும் மகேசுரிசத்தியுமாம். அச்சத்தி உயிர்கட்கு இளைப்பொழித்தலேதுவாகப் பிராரத்த கன்மத்தை மாற்றி மாற்றிக்கொடுக்கவேண்டுமென்று நின்ற அவதரத்திற்றோன்றியது சங்காரத்தொழிலையும் உருவத்தையுமுடைய உருத்திரனும் உமையுமாம். ஆன்மாவினறிவிலே இந்தப்பிராரத்த கன்மம் அறியப்படுந்தொழில் நிகழ்வதற்கு அந்தக்கரணத்தை நிறுத்தவேண்டுமென்று நின்ற அவதரத்திற்றோன்றியது திதி கிருத்தியத்தையும் உருவத்தையுமுடைய விஷ்ணுவும் இலக்குமியுமாம். பிராரத்த கன்மத்தை அறியுந்தொழிலை நிறுத்துதற்குத் தாரகமாக அறிகருவிகளாகிய இந்திரியங்களைக் கொடுக்கவேண்டுமென்று நின்ற அவதரத்திற்றோன்றியது சிருட்டித்தொழிலையும் உருவத்தையுமுடைய பிரமாவும் சரஸ்வதியுமாம். இவ்வைந்தும் தேவர்க்குத் தரிசனமாம்.

இவையே அவருடைய சொரூப தடத்த நிலையெனப்படும். தடத்த நிலையனைத்தும் சத்தி காரியமாதல் மேல்வகுத்துக்காட்டியவாற்றாலுணர்ந்துகொள்க.

தடத்த நிலையில் தென்மொழியில் கடவுள் என்னும் தொழிற் பெயர் பகுபதத்தின் முதற்கண் நின்ற கட என்னும் பகுதிக்கும் வடமொழியில், பிரம்மம் என்னும் பதத்தின் முதற்கண்நின்ற பிருக, பிரஹ என்னும் பகுதிக்கும் ஓங்கி இருத்தலெனப் பொருளுண்மையில் அவ்விருமொழிகளும் ஒரு பொருள்மேலன (அதாவது) கடவுள் என்பது கட-பகுதி, வுள்-தொழிற்பெயர் விகுதி-எல்லாவற்றையுங்கடந்தவன் என பொருளை நன்கறிவுறுத்துகின்றது.

இனி உயிர்கள் பொருட்டு அவராலே செய்யப்படுகின்ற கிருத்தியங்கள் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என ஐந்துவகைப்படும். அவற்றுள் அறிகருவிகளாகிய இந்திரியங்களைக்கொடுத்தலே சிருட்டி. அறிகருவிக்காதியாகிய மனமுதலிய கரணங்களை நிலை நிறுத்தலே திதி. அறிகருவியை நீக்குதலே சங்காரம். அறிதற்றொழில் நிகழுமிடத்து இன்ப துன்பங்களைக் கொடுத்து அதில் அறியாமையைச் செய்தலே திரோபவம். அறிதற்றொழில் நிகழ்வித்தலே அநுக்கிரகம்.



கடவுள் இங்ஙனம் ஐந்தொழிலியற்றல் யாதுக்கெனின், உயிர்களைப்பந்தித்த ஆணவமலம் ஒழிதற்பொருட்டாம். மலநோயைத் தீர்க்குங்கடவுள் ஒரு வைத்தியராவர். மலபந்தத்தால் வருந்தும் உயிர்கள் பிணியாளராவர். ஆணவமலபந்தமே பிணியாகும். அப்பிணிக்கு மருந்தாயுள்ளது பிராரத்த கன்மம். அம்மருந்தை வைத்துண்ணும் பாத்திரமாயுள்ளது மாயையினாலாகிய சரீரம். அம்மருந்தையுண்பித்துப் பிணியை நீக்கும் வைத்தியமே பஞ்சகிருத்தியமாமென்றறிக.

அவர் இங்ஙனம் செய்யும் ஐந்தொழிலாலே மலவலி குன்றி மடங்கும். அதனாற் சிவபுண்ணியமேறும். அதனால் இருவினையொப்பு மலபரிபாகங்களுளவாம். அதனாற் சத்திநிபாதம் பிறக்கும். அதற்கேற்பக் கடவுள் ஆசாரிய மூர்த்தியா யெழுந்தருளிச் சமயவிசேட நிருவாண தீக்கைகளைச் செய்து சரியை, கிரியை, யோகம் ஞானங்களில் நிறுத்தி, சாலோக்கிய, சாமீப்பிய, சாரூப்பிய, சாயுச்சியங்களாகிய அபரபரமுத்திகளைத்தந்து, மலநீக்கமும் சிவப்பேறும் உதவிச் சுத்தாத்துவித முத்திநிலையில் இருத்தி என்றும் அழியாப் பேரின்பவாழ்வாகிய பரமானந்தவைபவத்தை ஆன்மாக்களுக்கு அளித்தருளுவர்.

ஆதலால் இத்துணைப்பெருங் கருணைசமுத்திரமாகிய கடவுளை நாம் என்றென்றைக்கும் மறவாது மெய்யன்போடு வழிபட்டு அவர் அருளிச்செய்த வேதசிவாகமவழியொழுகி, அவருடைய திருவருளைப்பெற்று, அவராலே தரப்படுகின்ற திருவடிப்பெரும்பேறாகிய முத்திநிலையை எய்துதல் அறிவுடைமையும் ஆவசியமுமாம். சுபம்.

சு. நடேச தேசிகன்.
தமிழ்ப்பண்டிதர்,
கவர்ன்மெண்டு ஸ்கூல், நிரவி.

# உலகமும் தலைவனும்.

(முன் தொடர்பு தொகுதி 3. பகுதி 2, 3, பக்கம் 8:)

7. ஓர் சபைக்கூட்டத்தில், பல மனிதர்கூடியிருக்கிறார்கள், ஒவ்வொருவர்மாட்டும் செயல் நிகழ்கின்றது. ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். ஒருவர் செயற்றும், மற்றவர் செயல்கள் அடங்கி நிகழ்கின்றதென்பதில்லை. ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். ஒருவர் பேசியபின் மற்றொருவர் பேசுவதென்றும் முறையுமில்லை. இன்னவிஷயத்தைதான் இன்னார் பேசுவதென்றும் முறையுமில்லை. இவ்வளவுகாலம் இன்னார் பேசலாமென்பதுமில்லை. அச்சபைக்கூட்டத்தில், பலதிறத்தினரிருந்தாலும், அவர்கள்மாட்டு மாறுபட்ட செயல்கள் காணப்படினும், ஆண்டு நிகழும் செயல்களின் தோற்றம், நிலை இறுதிகட்கு யாதொருமுறையென்பதேயில்லை. இவற்றையெல்லாம் பார்த்ததும், இச்சபைக் கூட்டத்திற்குத் தலைவனில்லையெனத் தீர்மானமாய்த் துணிவோம். இதுவன்றி, இச்சபைக்கூட்டம் யாதேனும் முறையில் நிகழ்கின்றதாய் வைத்துக்கொள்வோம். இங்கே, ஒருவர் பேசிமுடிந்தபின்பே, மற்றொருவர் பேசுகிறார். ஒவ்வொருவரும், ஓர் விஷயவரம்பினின்றே, பேசுகிறார். தான்பேசும்போது, தனக்கு ஓர்காலவரையறை யிருப்பதாக எண்ணிப்பேசுகிறார். ஈண்டு நடைபெறும்செயல்களின் தோற்ற நிலை இறுதிகள்யாவும், ஓர்முறையின்படியே நடைபெறுகின்றது. இவற்றைப் பார்த்ததும் இச்சபைக்குத்தலைவனுண்டே யெனத்துணிகிறோம்.

8. இதுபோன்ற உண்மையைத், தேசத்தலைமையிலுங் காணலாம். ஓர் தேசத்தில், சிலர்பால், உடைமைகள் புதிதாய்த்தோன்றுகின்றது. சிலர், தங்கள்பாலுள்ள உடைமைகளை யிழக்கிறார்கள். சிலர் தங்கள்பாலுள்ள உடைமைகளைச் சிலகாலம் அனுபவித்து வருகிறார்கள். இத்தகைய உடைமைகள், ஜனங்கள்பால் தோன்றுதற்கும், நிற்றற்கும், மாறற்கும், தேசத்தலைவன் சில சட்டதிட்டங்களைப் பிறப்பித்திருக்கிறான். இச்சட்ட திட்டங்க



ளின்படியே, உடைமைகளுண்டாம்போது உண்டாகின்றன. நிற்கும்போது நிற்கின்றன. ஒழியும்போது ஒழிகின்றன. இச்சட்டதிட்டங்களின்றேல், ஒருவர் உடைமையை மற்றொருவன் எளிதிற் கைப்பற்றுவன். எவரும் தம்முடைமைகளைச் சரிவர அனுபவிக்கமுடியாது. இச்சட்டதிட்டங்களின்படி, ஜனங்களை நடத்துதற்கு ஓர் தலைவன் அவசியம் வேண்டும். இத்தகைய தலைவனின்றேல், இச்சட்ட திட்டங்களின்படி, எவரும் நடவார். எனவே, ஓர் தேசத்திலுள்ள ஜனங்கள்பால், உடைமைகள் யாதொருமுறையுமின்றித் தோன்றி நின்றழியுமேல், அத்தேசத்திற்குத் தலைவனில்லை யென்றும்; அவைகள் யாதானுமோர் முறைப்படி தோன்றி நின்றழியுமேல், அத்தேசத்திற்குத் தலைவன் உண்டென்றும் துணிவோம். இவ்வாறே, உலகப்பொருள்களின் தோற்றநிலை கேடுகளுக்கும், ஓர் முறையுண்டு, எனத்தெரிந்துகொள்ளலாம். அது எங்ஙனமென்பதை யடுத்து ஆராய்வோம்.

9. உலகப்பொருள்களில், யாதானுமொன்றின் தோற்ற முதலியவற்றைக் கவனிப்போம். பூமியினின்று ஓர் விருக்ஷம் உண்டாகிறது. நம் சாதாரண பார்வையில் அவ்விருக்ஷ உடம்பு பூருவும் பூமியினின்றே யுண்டாவதாகப்பார்க்கிறோம். அப்பால், அவ்விருக்ஷம், தானாய்ப்பட்டுவிழுந்த பின்னரோ, அன்றி வெட்டிவிழ்த்தப்பட்ட பின்னரோ, பூமியிலே கிடந்து பூமிக்கேயிரையாகின்றது. அவற்றினின்றுண்டாகிய இலைகாய் முதலியவைகளும், ஜீவர்களாலுண்ணப்பட்டும், படாமலும், பூமியையே சேர்கின்றன. எனவே நம்சாதாரண பார்வையில், பூமியிலே தோன்றிய விருக்ஷம், பூமியிலே நின்று, பூமியிலே ஒடுங்குகின்றது. நமது நுட்பப்பார்வையிலும், இதுவே உண்மையெனத் தெரிவோம். ஓர் விருக்ஷம் வித்தினின்று கிளம்புகிறது, மண்ணினின்றும் ஜலத்தினின்றும் தீயினின்றும், காற்றினின்றும், ஆகாயத்தினின்றுமே ஒவ்வோர் விதப்பொருள்களைக் கிரகித்துக்கொண்டு ஓர் பெரிய விருக்ஷமாக வளர்கின்றது. அப்பால் அவ்விருக்ஷம் கெடும்போது, மேற்கூறிய பொருள்கள், அவ்விருக்ஷத்தினின்று பிரிந்து, முன் எவ்வெவற்றினின்றெல்லாம் வந்தனவோ, அவ்வவற்றோடுபோய் கூடுகின்றன. மண்ணினின்று வந்தது மண்ணினோடுகூடும். ஜலத்தினின்று

வந்தது, ஜலத்தோடுகூடும். அப்படியே மற்றப் பூதங்களினின்று வந்தவை அவற்றிலேகூடும். இந்நியாயத்தினால், விருக்ஷம் என்னும் பொருள் யாண்டு நின்றெல்லாம் தோன்றிற்றோ, ஆண்டெல்லாமொடுங்கு மென்பது, எவ்வாற்றானும் உண்மையெனத் தெரிகிறோம். இவ்வுண்மையை, மற்றைய பொருள்கள் மாட்டுங் காட்டுங்காணலாம். இவ்வாறு ஒடுங்கித் தோன்று முறையையே தர்க்க நூலார் சத்காரியமுறை யென்பர், இதனையே, நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டதிருவிருத்தம் "வருமுறை" என்றது இம்முறைப்படியே உலகப்பொருள்கள் யாவும், தனித்தனியாயும், ஒருங்கு சேர்ந்தும், தோன்றி நின்றழியும் சபைக்கூட்டமும், தேசக்கூட்டமும் ஓர்முறையில் தோன்றி நின்றழிதலால், அவற்றிற்குத் தலைவன் உண்டெனத்துணிந்தமைபோல்; இவ்வுலகமும் சத்காரியமுறைப்படி தோன்றி நின்றழிதலால், அதற்கும் ஓர் தலைவன் உண்டெனத் துணிதற்கு இடமுண்டு. இக்கருத்தையே நமது ஆசாரிய சுவாமிகள்,

"மூத்தவனா யுலகுக்கு முந்தினானே,
முறைமையா லெல்லாம் படைக்கின்றானே
ஏத்தவனா யேழுலகு மாயினானே"

என்று அருளினார்கள். அதனையே நம்மாராய்ச்சி விருத்தம்

"வருமுறை வந்துநின்று போவது மாதலாலே,
தருபவனொருவன் வேண்டும்." என்று கூறினது.

10. உலகத்திற்குத் தலைவன் வேண்டுமென்றும். அத்தலைவன் ஒருவனோ, அன்றிப்பலரா என்பதும் சிறிது ஆராய்ச்சி வேண்டுவது. உலகிற்கு தலைவர் பலரென்று வைத்துக்கொள்வோம். இவர் பலவேறு முறையில், தொழிலியற்றுபவராயிருத்தல் வேண்டும். அன்றி ஒரே முறையில் தொழிலியற்றுபவராயிருத்தல் வேண்டும். இவர் தொழிலியற்றுமுறை பல்வேறுவிதமாயிருப்பில், பல்வேறு தொழிலாளிகளாலியற்றப்படும் இரதம்போல் இவரால் தோற்றி நிறுத்தி யழிக்கப்படும் உலகமும், அதன் ஓர் பாகத்திற்கு மற்றோர்பாகம் பொருத்தக்குறைவாய் முடியும். அன்றியும், நாம் முன் உலகம் ஓர் முறையிலேயே தோன்றி நின்றழியுமென்று விளக்கிய உண்மையோடு ஒவ்வாதாயும் முடியும். இது



வன்றி, இப்பலதலைவர் தொழிலியற்றும் முறையும், ஓரே முறையாய் முடியில், நாம் உலகத்திற்குத் தலைவன் உண்டென முன்காட்டிய நியாயத்தினாலே, இப்பல தலைவர்க்கும் தலைவனுண்டெனப்பட்டு, உலகம் ஒரே தலைவனையுடைத்தென முடியும். இக்கருத்தினையுட்கொண்டே நம்மாராய்ச்சித் திருவிருத்தம்—

"தருபவன் ஒருவன் வேண்டும்" என விளக்கியது.

11. இவ்வொரே தலைவன், ஜடப்பொருள்களிலொன்றோ, மனிதராதி பூடிப்பூவுலக உயிர்களிலொன்றோ, அன்றி இந்திராதி தேவர்களிலொருவரா என்பதே, நாம் அடுத்து ஆராய்ச்சி செய்யக்கிடப்பது. இவ்வுலகத்திலுள்ள உயிரில் பொருள்களும், உயிருடைப்பொருள்களும், ஒருகாலத்தில் ஒருசேர அழியும் தன்மைத்து என்று முன்னரே விளக்கினோம். எனவே, இவ்வுலகத்தை ஒருசேர அழிப்பவன், அதன்கண்ணடங்கிய பொருள்களில் ஒன்றாயிருத்தல் முடியாது. அஃதாவது இவ்வுலகத்தலைவன் அதின்கண்ணுள்ள உயிரில் பொருள்களுள் ஒருவனாகான். உயிருடைப்பொருள்களில் ஒருவனுமாகான். இனித்தேவர்களிலொருவனாகானோ எனில், தேவ உலகமும், ஒடுங்கிப்போகும் உலகமே ஆதலால், அதனையும் மொடுக்குபவனே தலைவனாதல் வேண்டும். ஆனால், பிரமாதி மூவர்களிலொருவனாகானோ எனில், அவர்களும் தத்தம் காலவரையில், ஒடுங்குபவரே யாதலால், அவருள் ஒருவர் தலைவர் ஆதலும் முடியாது.

நூறுகோடி பிரமர்கள் நொங்கினர்,
ஆறுகோடி நாராயண ரங்ஙனே,
ஏறுகங்கை மணலெண்ணி லிந்திரர்,
ஈறிலாதவன் ஈசனொருவனே.

என்று கூறியது தமிழ்வேதம். இவர்களையும் ஒடுக்குபவன் யாரோ, அவனே உலகத்தலைவனாவான். அவன் அழித்தற்றொழிலைத் தனக்கு விசேஷதொழிலாக வுடையவன். அவனே சகல உலகங்களையும் அவற்றிலுள்ள சகல சராசரங்களையும் ஒருசேர ஒடுக்குபவன். அவனையே நந்தமிழ் வேதத்தில்

"வான்கெட்டு மாருதமாய்ந்து அழனீர் மண்கெடினும்
தான்கெட்டலின்றிச் சலிப்பறியாத்தன்மையன்"

இவரையே சர்வசம்மாரந்தலைவர் என்று கூறுவர். இத்தலைவரன்றி யேனைக்கடவுளர், உலகத்தின் தோற்றம் நிலையிறுதிகளி லொன்றையேனும் செய்யினும், அவருள்யாரும், அத்தொழில் ஒன்றையும், தமக்கு விசேஷத்தொழிலாக உடையாராகார். அவர், நாம் கூறிய சர்வசம்ஹாரத்தலைவரின் கீழடங்கி நின்று, அவராணையின்படி, அத்தோற்றநிலையிறுதித் தொழில்களில் ஓர் ஏகதேசத்தைச் செய்பவரேயன்றி வேறில்லை. இவரையெல்லாம் தோற்றி நிறுத்தி ஒடுங்குபவரும், நாம் கூறிவரும் தலைவரேயாவர்.

"படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்கும் கடவுள், காப்பவை
காப்போன் காப்பவை கருதாக் கருத்துடை கடவுள்,"

என்று விளக்கியது, நம் தமிழ்வேதம். இதுபற்றியே இத்தலைவர் ஏனை கடவுளர்க்கெல்லாம் தலைவரெனப்படுகிறார்.

"செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்கு மற்றை
மூவர்கோனாய் நின்றமுதல்வன்" என்று திருவாசகம் கூறியதும், இத்தலைவனையே. இத்தலைவன் எல்லா உலகங்களையும், ஒருசேர ஒடுக்குபவன் மாத்திரமன்று. அவனையன்றி, மீள அவ்வுலகங்களைத் தோற்றுவித்தற்கு வேறு பொருளின்றாதலால் அவனே, அவற்றையெல்லாம் மீளத் தோற்றுவிப்பவனுமாவான். இக்கருத்தினையே, நம்மாராய்ச்சித் திருவிருத்தம்,

"தான் முதலினுமாகி மருவிடும்" என்று கூறினது.

12. இவ்வுலகத்தை ஒருசேர ஒடுக்குபவனும், அதனை மீளத் தோற்றுவிப்பவனும், அதன் தலைவன் ஒருவனேயென்றோம். எனவே, உலகம் தோற்றுதற்குமுன்னும், அத்தலைவனிருத்தல் வேண்டும். அது ஒடுங்கிய பின்னும் அவனிருத்தல் வேண்டும். உலகம் உளதாம்போதும் அவன் உளன். இலதாம்போதும் அவன் உளன், உலகத்தோடு உடனிருப்பவனுமவனே. அதனின்று வேறானவனுமவனே. உலகத்தோடுடனிருக்கும்போது, அதனோடதுவதுவாய் நிற்பன். அவ்வாறதுவதுவாய் நிற்பதனாலேயே, உலகப்பொருள்களைப் பிரித்து ஆராய்ச்சி செய்யும் பூதசாஸ்த்திர ஆராய்ச்சிக்காரருக்கு, அவன் புலப்படுவதில்லை. இக்கருத்தினையே, திருவாசகம், "பூதங்கள்தோறும் நின்றாயெனினல்லாற், போக்கிலன் வரவிலன்" என்றும் 'கண்முதற் புலனாற் காட்சியுமில்லான்" என்றும் கூறியது. அவன் உலகப்பொருள்கள் யாவற்றினோடும், அதுவதுவாய் நிற்றலையே நந்தமிழ் வேதம், "மூவுலகுந் தானாய முதல்வன் தன்னை" யென்றும்



"இறையவன்காண் ஏழுலகுமாயினான்காண்
ஏழ்கடலுஞ் சூழ்மலையுமாயினான்காண்" என்றும்,
"பாரானை மதியானைப் பகலானானைப்,
பல்லுயிராய் நெடுவெளியாய்ப் பரந்துநின்ற
நீரானைக் காற்றானைத் தீயானானை"

என்றும் விளக்கியது. இவ்வுண்மைக் கருத்தினையோராது, தலைவனே உலகமாய்ப் பரிணமித்து ஒடுங்குகின்றான், அவனே உலகிற்கு முதற்காரணன், என்றுகூறி, அத்தலைவற்குப் பரிணமித்து ஒடுங்குதலாகிய விகாரத்தையும் ஏற்றுவர். அவ்வித விகாரத்துவம், அவனுக்கில்லை; அவன் என்றும் ஒரேவிதமான நிலைபேறுடையன் என்பதை, நாம் முன்னே கூறிய திருவாசகம், "தான் கேட்டின்றிச் சலிப்பறியாத் தன்மையன்" என்று விளக்கியது. இக்கருத்தினையே நம்மாராய்ச்சித் திருவிருத்தம் "தான்முதலினுமாகி மருவிடும்" என்பதனோடு நில்லாது மன்னி நின்று" என்றும் விளக்கியது.

13. அன்றியும், உலகில் அறிவுடைப்பொருள்களுமுள அறிவில்பொருள்களுமுள, என நாம் முன்னரே கூறினோம். நந்தலைவனே, அறிவுடைப்பொருளென்பதை யாரும் ஒப்புவர். இவ்வறிவுடைத்தலைவனினின்றும் உலகின்கணுள்ள அறிவில் பொருள்கள் ஒருசிறிதும் உண்டாகா. இதனை உணர்த்துதற்கே, நம்மாராய்ச்சித் திருவிருத்தம், நந்தலைவரைச் "சித்துரு" என விளக்கியது. ஆனால், உலகிலுள்ள உயிருடைப்பொருள்கள், தலைவனினின்றுண்டாதல், எவ்வாற்றானும் கூடுமா, என்பதையும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். நந்தலைவற்குப்போல், நமக்குமறிவுண்டு; நந்தலைவர் அறிவு பேரறிவினதாயிருக்கலாம்; நம்மறிவு சிற்றறிவாயிருக்கலாம்; என்றாலும் பேரறிவினின்றும் சிற்றறிவு உண்டாகாதென்பதில்லை; ஓர் கொள்ளிப்பந்தம் சுழற்றப்படுமேல், அதின்கண்ணின்றும் பல பொறிகள் கிளம்பி வருவதைப் பார்க்கிறோம்; அது

போலவே, பேரறிவினராகிய நந்தலைவர் மாட்டினின்றும், சிற்றறிவினராகிய நாமுண்டானோமென்பதும், பொருந்தமேயாகுமென்று கூறி நந்தலைவரை கொள்ளிப்பந்தத்திற்கும், நம்மை அதன் கண்ணினின்றும் கிளம்பிய பொறிகட்கும் உவமை கூறுவர். இவர் மதியிருந்தவாறென்னே? கொள்ளிப்பந்தத்தெரிக்கும், அதன் கண்ணினின்று கிளம்பிய பொறியெரிக்கும், அளவினாலன்றி, வேறெவ்வாற்றானும் பேதமில்லை. நந்தலைவரறிவிற்கும், நம்மறிவிற்கு முள்ளபேதம், இதுபோலல்ல. நம்மறிவு, மலபந்தத்தால் அநாதி துவக்கிக் கட்டுண்டு கிடக்கும் பெத்த அறிவு. நந்தலைவரே, நம்மீது கொண்டுள்ள கருணையால், அம்மலத்தினை நீக்கி, நம்மறிவினை முத்த அறிவாக்குகின்றார். அவரது அறிவோ, அத்தகைத்தன்று. அது அநாதி துவக்கியே, முத்த அறிவு. என்றும் முத்த அறிவு. இவ்வறிவுடைத்தலைவன் கண்ணின்றும், பெத்த அறிவுடையுயிர்கள், எக்காலத்திலு முண்டாகா. இதனை புணர்த்துதற்கே, நம்மாராய்ச்சி திருவிருத்தம், "சித்துரு" எனவாளா கூறாது, "அநாதிமுத்த சித்துரு" என விசேடித்துக் கூறியது. எனவே, நந்தலைவர், உலகிற்குக் கேவலம் நிமித்தகாரணரேயன்றி, எவ்வாற்றானும் முதற்காரணரே யென்பதையும், இத்திருவிருத்தம் விளக்குவதாய் முடிந்தது.

14. இதுகாறும் உலகம் பல திறத்தவான பொருள்களின் தொகுதியென்றும், அப்பல திறத்த பொருள்களும், என்றும் ஒரு படித்தாய் நில்லாது செயற்படுகின்றன என்றும்; அச்செயல்களும் ஒரேவிதமாயன்றி, மாறுபட்டவைகளேயென்றும், அம் மாறுபட்டசெயல்களும், சத்காரிய முறைப்படி நிகழ்கின்றனவென்றும், இக்காரணங்களினாலே, உலகிற்கு ஓர் தலைவன், அவசியம் வேண்டுமென்றும், அத்தலைவன் ஒருவனே யாதல்வேண்டுமென்றும், அவ்வொருதலைவனும் சர்வ சம்மாரத்தலைவனாதல் வேண்டுமென்றும், அவனே உலகினை மீள உண்டாக்குபவனென்றும், அவன் யாதொரு விகாரமின்றிநிற்பனென்றும், அவன் உலகமாகப் பரிணமிக்கமாட்டானென்றும், அவனினின்றும் உலகிலுள்ள உயிருடைப் பொருள்களாவது, உயிரில்பொருள்களாவது தோன்றமாட்டாதென்றும், அவன் உலகிற்கு எவ்வாற்றானும் முதற்காரணனல்லனென்றும், அவன் கேவல நிமித்த காரணனே யென்றும்.



ஆனால், உலகம் உளதாம்போது அவ்வுலகப்பொருள்களோடு, அத்தலைவன், அவ்வப்பொருள்களேயாய், அவற்றினோடெல்லாங் கலந்து நிற்கின்றானென்றும், அவ்வுலகமிலதாம்போது, "அநாதிமுத்த சித்துரு" வாய் நிற்கின்றானென்றும், இன்னன பிறவும், நம்மாராய்ச்சித் திருவிருத்தத்தினின்றே விளக்கப்பட்டன. இதனையுற்று நோக்கும்போது, "பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறிய சித்தியிலே யோர்விருத்தப் பாதிபோதும்" என்ற ஆன்றோர் வாக்கு, நம்மாராய்ச்சி நூலின் ஓர் குறித்த திருவிருத்தத்திற்கன்றி அந்நூலிலுள்ள எல்லா திருவிருத்தங்களுக்குமே பொருத்தமாம், என்று கூறுதல், ஒரு சிறிதும் உபசாரமாகாது. இத்தகைய அருமைபெருமை வாய்ந்துள்ள இந்நூலை, நமக்குத் திருவாய் மலர்ந்தருளிய, எமது பரமாசாரிய சுவாமிகளாகிய, அருணந்தி சிவத்தின் திருவடிகளை யென்றுந் துதித்துப் பேரானந்தப் பெருவாழ்வைப் பெறுவோமாக.

"பாதிவிருத்தத்தாலிப்பார்விருத்தமாகவுண்மை
சாதித்தார்பொன்னடியைச் சாருநாளெந்நாளோ."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
R 1914
M

V. P. காந்திமதிநாதபிள்ளை.

# "சிவலிங்கதத்வார்த்தம்."

(முன் தொடர்பு தொகுதி 3, பகுதி 2, 3, பக்கம் 32:)

இச்சிவலிங்க அமைப்பும் பரவெளியைக் குறித்ததாயினும் பிருதிவி யம்சத்தில் அமைந்திருக்கின்றமையால் சிவலிங்க வழிபாடு ஏகதேச வழிபாடேயன்றி எல்லாமாயிருக்கின்ற இறைவன் வழிபாடாகுமா வெனின், ஆகும். எவ்வாறெனின் எல்லாமென்பது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், ஆகிய பூதங்களைந்து சூரியன், சந்திரன், ஆன்மா என்று மூன்று ஆக எட்டுமேயாம். இவ்வெட்டைத்தவிர வேறு பொருள் கிடையாது. எல்லாமாய் நிற்கின்ற இறைவன் நிலையை அட்டமூர்த்தமென்று பெரியோரருளினர். அவ்வெட்டினுள்ளும் இறைவனை வழிபடலாம். அவ்வழிபாடும் அகவழிபாடு, புறவழிபாடு என இருவகைப்படும். அவற்றுள் அகவழிபாடாவது ஆன்மாவினிடத்து இறைவனை வழிபடுதலாம், ஆன்மாவிடத்திறைவனை வழிபடுதலால் எல்லாமாயிருக்கின்ற இறைவனை வழிபட்டதாகுமா? ஆகும், எவ்வாறெனின் ஆன்மா ஒருடம்பைப்பற்றி யன்றி தனித்து நில்லாது. உடம்பில் பஞ்சபூதங்களும் சூரியன், சந்திரனிரண்டும் ஆக ஏழுமுள்ளன. சூரியன், சந்திரன் உடம்பிலெவ்வாறிருக்கின்றனரெனின் சூரிய மண்டலம், சந்திரமண்டலமென்னும் பெயரால் உடம்பினுள்ளிருக்கின்றனர்.

இவ்வாறு ஏழு பொருள்களுங்கூடிய உடம்பில் ஆன்மாவினிடத்து இறைவனை வழிபடுதலால் அட்டமூர்த்தத்தையும் வழிபட்டதாகும். இவ்வழிபாடு புறப்பொருளினிடத்து ஆசையை விட்டு இந்திரியங்களை மனத்தினேவல் வழியிலடக்கி அம்மனத்தைப் பிராணவாயுவுடன் கூட்டி அகத்தில் ஆசிரியன் கற்பித்தருளிய ஓர் அநுசந்தானத்திற் பயிலும் யோகிகட்கே கூடும். இவ்வாறு புறப்பொருளிலாசை யருமலும், மனத்தையடக்கும் வல்லமையில்லாமலுமுடைய ஏனையோர்க்கு இவ்வழிபாடு ஒரு சிறிதுங் கூடாது. கூடினதாகச் சொல்வராயின் வாசாகைங்கிரியமேயன்றி



உண்மையல்ல வென்பதை உண்மையறிவுடையாருணர்வர். ஆதலால் ஏனையோர் வழிபடுதற்பொருட்டுப் பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் பிருதிவி அம்சத்தில் திருமேனிகொண்டருளினன். இப்பிருதிவி அம்சத்தில் எல்லாம் அடங்கியிருக்கின்றன. எவ்வாறெனின் சூரியன், சந்திரனிரண்டும் அக்கினியின் அம்சமாதலால் அக்கினியுளடங்கும். ஆகவே எல்லாமென்பது ஆறினுளடங்குவதாயிற்று. அவ்வாறினுள்ளும் ஆகாயத்தில் தன் குணமாகிய சப்தகுணமொன்றேயுள்ளது. வாயுவில் தன்குணமாகிய பரிசமும் ஆகாயத்தின் குணமாகிய சப்தமுமுள்ளன. அக்கினியில் தன் குணமாகிய ரூபமும் ஆகாயத்தின் குணமாகிய சப்தமும் வாயுவின் குணமாகிய பரிசமும் ஆக மூன்றுமுள்ளன. அப்புவில் தன் குணமாகிய ரசமும், ஆகாயத்தின் குணமாகிய சப்தமும், வாயுவின் குணமாகிய பரிசமும், அக்கினியின் குணமாகிய ரூபமும் ஆக நான்குமுள்ளன. பிருதிவியில் தன் குணமாகிய கந்தமும், ஆகாயத்தின் குணமாகிய சப்தமும், வாயுவின் குணமாகிய பரிசமும், அக்கினியின் குணமாகிய ரூபமும், அப்புவின் குணமாகிய ரசமும் ஆக ஐந்துமுள்ளன. மேற்கூறியவாறு அக்கினியினுள்ளே சூரியன், சந்திரனடங்கப்பட்டன. ஆகையால் பிருதிவியில் ஏழு அம்சமுமிருக்கின்றன. ஆன்மா வழிபடுகின்றவனும் அப்பிருதிவியினோடு சம்பந்திக்கின்றான். ஆதலால் பிருதிவி அம்சமாகிய சிவலிங்கவழிபாடு எல்லாமாயிருக்கின்ற அட்டமூர்த்தத்தின் வழிபாடேயாகும். பிருதிவி முதலாகிய பூதங்களில் மேற்கூறியவாறு குணங்களமைந்திருக்கின்றன வென்பதை "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி, நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி, தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி, வழியிடையிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி, வெளியிடை ஒன்றாய் விளைந்தாய்போற்றி" என்னும் மணிவாசகப்பெருமான் திருவாக்காற்றெளிக. ஆதலால் சிவலிங்கம் எல்லாமாய் நின்ற இறைவனையும் இறைவனுடைய உண்மைச் சொரூபமாகிய பரவெளியையுங் குறிப்பதாகும். பிருதிவிலிங்கமேயன்றி அப்புலிங்கம், தேயுலிங்கம், வாயுலிங்கம், ஆகாசலிங்கமெனவும் வழங்கப்படுகின்றனவே, அவ்விலிங்கங்கள் எல்லாமாதலெவ்வாறு பொருந்துமெ

னின் அப்பு முதலியவற்றைப் பிருதிவிலிங்கமாக ஆக்கி அப்பு முதலிய அவ்வப்பெயரால் வழங்குவதேயன்றி பிறிதில்லையாதலால் எல்லாமாதல் கூடுமென்க.

இனி சிவலிங்கங்களில் ஒரு முகமும் மூன்று கண்களுங்காணப்படுவதின் கருத்தென்னையெனின், கண் சந்திரன், சூரியன், அக்கினி என்று மூன்றுமாய்ப் பிரகாசிக்கின்றாரென்பதனையும் முகம் கருணையையுடைத்தாயிருக்கின்றாரென்பதனையும் உணர்த்துதற்கென்க.

இனி இச்சிவலிங்கத்திற் காணப்படும் ஆவுடையாளென்பது எதைக்குறிக்கின்றதெனின் சிற்சத்தியைக் குறிப்பதாம். எவ்வாறெனின் பரசிவமாகிய பரவெளியில் எப்பொழுதும் ஓரசைவுண்டு அவ்வசைவைச் சிற்சத்தியென்பர். அந்த அசைவு சுற்றிக்கொண்டேயிருக்கும். அச்சுழற்சி நுண்ணறிவுடையார்க்கன்றி ஏனையோர்க்குத் தெரியவாராது ஆயினும் ஓரசைதலுண்டென்பதை யாவருஞ் சாதாரணமா யறியலாம். எவ்வாறெனின் காணப்படுகின்ற ஒவ்வொரு பொருளும் முதல் நிமிடத்திலிருந்தபடி மறுநிமிடத்திலிருப்பதில்லை. உதாரணமாக ஒருமனிதனையோ, செடியையோ கவனிப்போம். இதுவொன்று வளர்ந்துவிடுவதில்லை, நாளடைவில் வளரக்காண்கின்றோம். ஆதலாலொவ்வொரு நாளும் ஒவ்வொரு கணந்தோறு மாறுதலடைந்தே வளர்ந்து வருகின்றனவென்பது அறியப்படும். அவ்வாறு மாறுதலடைவது பரவெளியிலுள்ள அசைவினாலேயாம், இனி அப்பரவெளியிற்றான் அவ்வசைவு எதற்காக இருக்கின்றதெனின் பொருள்களைப் பாகம்பண்ணு முபகாரத்திற்காக சூடு அக்கினியிலிருப்பதுபோன்று உயிர்களின் மலமாகிய அறியாமையைப் பாகம்பண்ணுவதற்காக (கெடுப்பதற்காக) அசைதற்சத்தி பரவெளியிலிருக்கின்றது. அசைதலினால் இரும்பு முதலிய பொருள்களிலிருக்குங் கறை முதலியன நீங்கிப் பிரகாசமாதலும், ஓடுகின்ற தண்ணீரையடைந்த அசுத்தங்கள் அத்தண்ணீர் சிறிது தூரஞ் செல்வதற்குமுன் சுத்தமாதலும் பிரத்தியட்சமாதலால் அசைதற்சத்தி உயிரின் மலசத்தியைக் கெடுத்துச் சுத்தப்படுத்துமென்றறிக. இவ்வசைதற்சத்தி, பரவெளியிலுண்டென்பதை உணர்த்துதற்குப் பரவெளியை உணர்த்தும்



சிவலிங்கத்தில் வளைந்திருப்பதான ஆவுடையாளமைந்திருக்கின்றது. அக்கினி முழுதும் சூடுநிறைந்திருந்தாலும் முற்பட்டுக் காணப்படுவது செம்மையும் அடங்கிக்காணப்படுவது சூடுமாதல்போலப் பரவெளி முழுமையும் அசைதற்சத்தி நிறைந்திருந்தாலும் முற்பட்டுக் காணப்படுவது வெளியும் அடங்கிக் காணப்படுவது அசைதலுமென்பதை உணர்த்துதற்கு அவ்வசைதலைக்குறிக்கும் ஆவுடையாள் பரவெளியாகிய சிவலிங்கத்தின் கீழடங்கிக் காணப்படுகின்றது.

இனி அவ்வாவுடையாள் வளைந்திருப்பதோடமையாது கோமுகி என்னும் பெயரால் ஒரு பக்கத்தில் நீண்டிருப்பதன் கருத்தென்னையெனின் மேற்கூறியவாறு உயிர்களின் மலசத்தியைக் கெடுக்குங்கருணையே அசைதலென்பதை யுணர்த்துதற் பொருட்டு உயிர்களை நோக்கிய குறிப்பாக அமைந்திருக்கின்றது. ஆவுடையாளென்ற பெண்பால் விகுதிபெற்ற பெயரினால் சத்தியென்றும் பெண்பாலடங்கியிருக்குமென்றும், கோமுகி என்றதனால் கோவாகிய பசுக்களை (உயிர்களை) நோக்குங் கருணையுடையதென்றும் அறியும்வண்ணமாகப் பெயர்களமைந்திருப்பனவுங் கவனிக்கத்தக்கனவாம்.

இனி ஆவுடையாளின்கீழ் எண் கோணமாகவும், அவ்வெண் கோணத்தின் கீழ் நாற்கோணமாகவும் பிரதிட்டாலிங்க மமைந்திருப்பதின் கருத்தென்னையெனின் நான்குதிக்கும் எட்டுக்கோணமுமாயிருக்கின்ற எல்லா அண்டங்களும் சத்தியினாலாக்கப்படுவனவென்பதையும் பரவெளியாகிய தன்னுள்ளே அடக்கமென்பதையுமுணர்த்துதற்கென்க.

இவ்வாறு பரவெளியாகிய ஒருபொருள் சிவனென்று மேம்பட்ட காரணத்தால் ஆண்பாலாகவும், சத்தியென்று அடங்கியிருக்குங் காரணத்தாற் பெண்பாலாகவும் நின்றமையால், அப்பரவெளியிலடங்கியிருக்கும் எல்லாப் பொருள்களும் ஆண், பெண் என்று இருபகுதியாகவே காணப்படுகின்றன. இவ்வாறு ஆண், பெண்ணென இருபகுதியாக மனிதர், விலங்கு, பறவை முதலியவற்றிற் காணப்படுவனபோல் விருக்ஷங்களிடத்துங் காணப்படுகின்றனவோவெனின் அவற்றிலும் ஆண் விருக்ஷம், பெண் விருக்ஷ

றுண்டு, "குரும்பை யாண் பனை யீன்குலை யோத்தூர்" என்னுந் தேவாரத்தால் ஆண்பனை, பெண்பனை உண்டென்றறியக் கிடத்தல் பற்றி, ஏனைய விருக்ஷங்களிலும் அவ்வாறுண்டென்பதை யறியலாம். அவ்விருக்ஷங்கள் எவ்வாறு கூடுகின்றன வெனின் அவற்றில் ஆண் விருக்ஷங்களிலுள்ள பூவின்தேனை வண்டுகள் அருந்தும் பொழுது அப்பூக்களின் மத்தியிலிருக்கும் கருவுற் பத்திக்கேதுவாயிருக்கிற அணுக்கள் அவ்வண்டுகளின் கால் முதலியவைகளில் படிந்து கொள்கின்றன. மறுபடியும் அவ்வண்டுகள் பெண் விருக்ஷங்களின் பூவிலுள்ள தேனை அருந்தும் பொழுது முன் படிந்துள்ள கருவுற்பத்திக்கேதுவாயிருக்கிற அணுக்கள் அப்புஷ்பங்களிற் படுகின்றன. அதனால் பெண் விருக்ஷங் காய்க்கின்றது.

இவ்வாறு பர வெளியிற் காணப்படும் எல்லாப்பொருள்களும் ஆண், பெண்ணென்ற இருபகுதியாகக் காணப்படுவதோடு மனிதருட் பல ஜாதி பேதமும், விலங்கு, பறவை, விருக்ஷ முதலியவற்றிலும் அவ்வாறே பலஜாதி பேதமுங் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படுதற்குக் காரணம் என்னையோ வெனின் அக்கினியிலிருக்கின்ற சூடு ஒரு தன்மையே யாயினும் சுடுதற்றொழிலால் சுடப்பட்ட பொருள்களுள் சங்கு முதலிய சில வெண்மையாகவும், மண் முதலிய சில செம்மையாகவும், விறகு முதலிய சில்கருமையாகவும், சில நீலமாகவும், மண் முதலிய சில கடினமாகவும், பொன் முதலிய சில மிருதுவாகவு மாகின்றன. இதுபோல் அப்பரவெளியிலுள்ள அசைதற் சத்தி அசையுந் தன்மையா லொன்றாயினும் அசைக்கப்படும் உயிர்களின் கன்மத்திற் கேற்ப பலவருண பேதங்களை யடைந்திருக்கின்றன. ஜாதிபேதம் நம்மால் கற்பித்துக் கொள்ளப் பட்டதன்று. விலங்கு, பறவை முதலியவற்றிற்கு ஜாதிபேதம் நம்மாற் கற்பிக்கப்பட்டதாயின் மனிதருக்கும் நாம் கற்பித்துக் கொண்டதென்று சொல்லலாம். இத்தகைய சிவமும் சத்தியுமாகிய பரவெளியே எல்லாப் பொருளினுங் கலந்திருக்கின்றதென்பதனையும் அப்பரவெளியாகிய சிவசத்தி சொரூபமே சிவலிங்க வடிவமென்பதனையும் இதனடியிற் காட்டுஞ்சிவஞான சித்தித் திருவாக்கானுந்தெளிக. அத்திருவாக்கு வருமாறு,



சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லா
மொத்தொவ்வா வாணும்பெண்ணு முயர்குண குணியுமாகி
வைத்தன னவனால்வந்த வாக்கமிவ் வாழ்க்கையெல்லா
மித்தையு மறியார்பீட லிங்கத்தி னியல்புமோரார்."

இச்சிவலிங்கம் பரவெளியாகிய அருவத்தைக் காட்டுகின்ற உருவமாயிருப்பதால் அருவுருவத்திருமேனி யெனப்படும். அன்றியும் அதீதநிலையில் நிற்கின்றசிவம் உருவத்தைக் கொள்ளுதற்குச் சத்தியோடுகூடிய அவசரமாகிய சாதாக்கியத்தைக் குறித்தலினாலும் அருவுருவத்திருமேனி யெனப்படும். சாதாக்கியமானது சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கன்ம சாதாக்கியமென ஐவகைப்படும். அவற்றுள் மின்னல்போலப் பிரகாசிக்கும் இறைவன்நிலை சிவசாதாக்கியம். சூரியப்பிரகாசம்போல விளங்கும் இறைவன்நிலை அமூர்த்திசாதாக்கியம். ஒருமுகமு மூன்று கண்களுமாக விளங்கும் நிலைமூர்த்திசாதாக்கியம். நான்கு முகங்களும் பன்னிரு கண்களும் எட்டுக்கரங்களுமாக விளங்கும் நிலைகர்த்திருசாதாக்கியம். இலிங்கமும் பீடமுமாகவிளங்கும் நிலை கன்மசாதாக்கியம். அன்றியும் எல்லாத் தோற்றத்திற்கு முதலாயுள்ளதோற்றம ஒலியாம். அவ்வொலியை நாதமென்றும் பிரணவமென்றும் சைவசித்தாந்தங்கூறும். சிவலிங்கவடிவம் பிரணவத்தையுங் குறிக்கும். இதனை

"இலிங்க நற்பீட மிசையு மோங்காரம்
இலிங்க நற்கண்ட நிறையு மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையு முகாரம்
இலிங்க மகார நிறைவிந்து நாதமே."

என்னுந் திருமந்திரத்தாற் றெளிக.

சிவனைக்குறிப்பது சிவலிங்க மென்பதொக்கும், "எரியலாலுருவமில்லை"[1] "ஞானச்சுடர் விளக்காய் நின்றாய்நீயே"[2] "விண்ணிறைந்தோர் வெவ்வழலின் னுரு"[3] "சோதியேசுடரே சூழொளிவிளக்கே"[4] என்பனவாதிய திருவாக்குகளால், சிவனுக்குவடிவம் அக்கினியே யாமென்பது பெறப்படும். பிரமவிஷ்ணு

1. திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம். 2. ௸ தேவாரம். 3. ௸ தேவாரம். 4. திருவாசகம்.

ணுக்கள் தெரிசித்ததும் அக்கினியேயாம். ஆதலால் அக்கினி மேல் நோக்கிக் காணப்படுவதுபோல் சிவலிங்கம் அமைந்திருக்கின்றது. அக்கினி காரியத்திற்காக அமைக்கப் பட்டிருக்கும் ஓம குண்டம்போல் ஆவுடையாளும் அமைந்திருக்கின்றதென்பதே பொருத்தம். பரவெளி இறைவன்வடிவமென்பதும் அப்பரவெளியைக் குறிப்பது சிவலிங்கமென்பதும் பொருந்தாதெனின் நன்று வினவினாய், அக்கினியைக் குறிப்பது லிங்கமாயின் அக்கினியைப் போல் அடிபருத்தும் முடிசிறுத்துங் காணப்பட வேண்டும். லிங்கமோ அடியுமுடியு மொன்றாகவே காணப்படுகின்றது. அன்றியும் குண்டம் எப்பொழுதும் அக்கினியோடு பிரிப்பின்றி இருப்பதில்லை. அக்குண்டம் பிரிப்பின்றி நிற்கும் சத்தியாகமாட்டாது. அக்கினியே லிங்கமென்பதுபோல அக்கினியின் சத்தியே பீடமாதல்வேண்டும். ஆதலால் சத்தியேபீடம், லிங்கமே சிவமென்னுஞ் சிவஞான சித்தித் திருவாக்கோடு முரணி அக்கினியே லிங்கம், குண்டமே பீடம் என்றல் பொருந்தாது.

ஆயின்மேற் கூறிய திருவாக்குக்களின் கருத்துத்தானென்னையெனின் இறைவனுடைய திருமேனியின் தன்மை நம்முடைய வடிவம்போல் அப்பிரகாசமின்றிப் பிரகாசமுடையதென்பதனைக்குறிக்கும். இவ்வாறன்றி வடிவத்தினமைதியைக் குறிப்பதன்று. அமைதியைக் குறிக்கமாட்டாதென்பதனை (5) "எரியாடுமாறே" (6) "நட்டம்பயில்கின்ற பரஞ்சுடரை" என்பனவாதிய திருவாக்குகளாலறிக. இத்திருவாக்குகள் நடராஜவடிவம் அக்கினியேயென்று விளக்குகின்றதல்லவா. அக்கினியில் நடராஜவடிவத்திற் குரிய உறுப்புக ளிருக்கின்றனவா? இல்லையே, அன்றியும் எரியலாலுருவமில்லையென்றதற்கு அக்கினியே வடிவம் வேறுவடிவமில்லையென்று கொள்வோமாயின் அரியலாற் றேவியில்லையென்பதற்கு விட்டுணுவேதேவி, வேறுதேவியில்லையென்று கொள்ளல் வேண்டும். இறைவனுக்குத் தேவி பராசத்தியாம். அப்பராசத்தியின் தொழிற்பாட்டின் பேதத்தாலுண்டான மூர்த்தங்களிலொன்று விட்டுணு, அவ்விட்டுணுவை ஆண்பாலாகவே நூல்கள் கூறுகின்றன. அவ்வாறாகவும் விட்டுணு எவ்வாறு

(5) ஷை தேவாரம் (6) ஷை தேவாரம்.



தேவியாகும்? ஆகாதாயின் அத்திருவாக்கின் கருத்துத்தானென்னையெனின் பராசத்தியின் றொழில் இரக்ஷித்தலேயாம். விட்டுணுவின் தொழிலும் இரக்ஷித்தலேயாம். இறைவனுக்கு இரக்ஷித்தலையின்றித் தேவியில்லை, என்பதே கருத்தாம். இவ்வாறே எரியலாலுருவமில்லை என்பதற்கும் இறைவனுண்மை வடிவம் பிரகாசம்.

அவனாலாக்கப்பட்ட பூதங்களுள் அக்கினியும் பிரகாசம், ஏனைய பூதங்கள் அப்பிரகாசம் ஆதலால் பிரகாசத்தைத் தவிர வடிவமில்லை என்பதே பொருளாம். அன்றியும் பஞ்சபூதத்து ளொன்றாகிய அக்கினி எல்லாமாயிருக்கும் இறைவனுக்கு உண்மைவடிவமாதல் எவ்வாறு பொருந்தும்? பராசத்தியையும் இறைவனையும் இத்தன்மையவென்று காட்டுதற்கு அரியும் எரியும் உவமைப் பொருள்களென அறிக.

ஆயின் பிரம விட்டுணுக்களுக்குக் காணப்பட்ட இறைவன் வடிவம் அக்கினியல்லவோ வெனின்? அக்கினியேயாம். அது அவ்விருவருக்கும் உண்மையான ஜோதிப்பிரகாசம் நம்மின் வேறாயுண்டென்றுணர்த்து நிமித்தம் அந்தச்சோதியை அவர்கள் தெரியமுடியாத அந்த நிலையில் சோதிக்குச் சமானமாகிய அக்கினியாய் அடி முடி காண முடியாத வண்ணமாய்த் தோன்றியதாம். அத்தோற்றமும் இறைவனருட் கோலமே யன்றிப் பூதாக்கினியன்று. பூதாக்கினியாயின் யாதாயினு மொருபொருளைப்பற்றி நின்றுகாணப்படுமே யன்றித் தனித்து நின்று காணப்படமாட்டாது. இறைவன் அக்கினியாய்த் தோன்றிய பொழுது எந்த ஆதாரத்தைப் பற்றி நின்றான். அவ்வாறு பற்றின்றிப் பிரகாசிக்கும் அக்கினி போன்றவடிவம் இன்றைக்கும் யோகாப்பியாசத்தால் தெரிசிக்கக்கூடும். இதனை "முழுச்சோதி நினைதந் திருத்தல்" என்னுஞ் சிவஞானசித்தித் திருவாக்காற் றெளிக. ஆதலால் அக்கினியின் அமைதியே சிவலிங்க வடிவமென்பது பொருந்தாது.

மேற்கூறியவாறு பரவெளியே இறைவன் வடிவம் என்பதனையும் சோதி யென்பதும் அப்பரவெளியையே குறிக்கு மென்பதனையும் அப்பர வெளியாகிய இறைவன் வடிவத்தைக் குறிப்பது சிவலிங்க மென்பதனையும் இதனடியில் வருந்திருப்பாசுரத் தாலறிக. அது வருமாறு,

"மலர்மகனாகி மூன்றுவையமும் படைத்து மாலா
யலைவறநிறுத்தி முக்கணாதியா யழித்தம்மூவர்
தலைவனாய்ப் பரமாகாச சரீரியாய் முதலீறின்றித்
தொலைவரும் சோதியாமிச்சுந்தர லிங்கந்தன்னில்."

திருவிளையாடற் புராணம்.

முடிவுரை.

சிவலிங்கமென்பது சிவத்தைக் காட்டு மடையாளமென்பதூஉம், சிவம் மங்கலமாயிருந்து எல்லாப் பொருளுக்கும் மங்கலத்தைத் தருமென்பதூஉம், அச்சிவப்பொருளின் வடிவம் ஞானவெளியென்பதூஉம், அந்தஞானவெளியைக் குறிப்பதே லிங்கமென்பதூஉம், இவ்விலிங்கம் பிரிதி வியம்சத்தி லமைந்திருத்தலால் எல்லாமாயிருக்கின்ற அட்டமூர்த்த மெனப்படு மென்பதூஉம், ஆவுடையாள் சிற்சத்தியைக் குறிக்கு மென்பதூஉம், கோமுகி உயிர்களிடத்துநிகழ்கின்ற சிற்சத்தியின் கருணையைக்குறிக்குமென்பதூஉம் ஆவுடையாளுக்குக் கீழுள்ள லிங்கத்தின் பாகம் எல்லா அண்டங்களுந் தன்னுள் அடங்கி யிருக்குமென்பதனைக் குறிக்கு மென்பதூஉம் பிறவுமாம்.

பொ. முத்தய்யபிள்ளை.
திருவாவடுதுறை யாதீனத்துச்
சைவப் பிரசாரகர்.

---

# இருவினை யொப்பு.

(முன் தொடர்பு தொகுதி 3. பகுதி 2, 3, பக்கம் 16:)

"எண்ணும் வினைப்பயனாற் புவனந்தோறும் போகமென்று
நண்ணிவருஞ் சகலர்க் கொருகால் நயந்திங்ஙனே
பண்ணிய கன்மந் துலையொத் திழிச்சத்தி பாதமுறக்
கண்ணியனுங் குருவாய்க் காழிவேந்தன் கதிதருமே."

சஞ்சிதமாய் ஈட்டப்பட்டுக் கிடந்த இருவினைக்கும் பக்குவ முறையானே பயனாய்வரும்வழி நல்வினை மிக்க பரிமேதயாகம் தீவினை மிக்க பிரமக்கொலை ஒருங்கே பக்குவமெய்திப் பயன்படுதற்கண் ஒத்தனவாயின் அவைதம்முள் ஒன்றோடொன்று அடிக்கப்பட்டு சுந்தோபசுந்த நியாயமாய்க் கெட்டொழியு மாதலின் அவ்வாறொத்தல் இருவினை யொப்பென்பர் ஒரு சாரார்.

மிக்கவினையாகிய புண்ணியபாவங்கள் தம்முள் ஒத்துக்கெட்டனவாயினும் அவையொழித்தொழிந்த புண்ணியபாவங்கள் தத்தம்பயனைத் தருதற்கு இடையிட் டின்மையானும் இருவினைகள் முழுதுந் தம்முளொக்கு மாறில்லை ஒக்குமெனினும் அதுபற்றி ஆணவமலம் நீங்குமாறின்மையால் விஞ்ஞானகலாரவரன்றி முத்தி எய்துதல் கூடாமையானும் இருவினையொப்பிற்கு ஈதுபொருளல்லவாம்.

சுவர்க்கநரகங்களில் அநுபவிக்கத் தக்கதா யிருக்கிற அஸ்வமேத பிரமஹத்தியாதி கன்மங்களை ஒரு சரீரத்தி லநுபவிக்கக் கூடா தாகையால் சிவசக்தியானது இரண்டையு நாசஞ்செய்து அநியதமாயும் பரிபக்குவமாயுமிருக்கிற இரண்டுக்குமத்தியில் பிரபலமாயிருக்கிறஒருகர்மத்தைப் புசிக்கச்செய்யும்மற்றொன்று, அநியத காலபோக்யமாயிருக்கும். அவ்விரண்டு கர்மங்கள் ஸமபலமாய் விருத்தமாயிருந்தால் அவ்விரண்டையும் நாசஞ்செய்து வேறு கர்மத்தைப் புசிக்கச் செய்யும் சர்வகாமங்களும் ஏககாலத்தில் பரிபக்குவமானால்சிவசத்தியானது அவைகளை நாசஞ்செய்யும் அது

வே விஞ்ஞானகைவல்யம் சர்வகர்ம நாசத்தால் கர்மசஹ காரியா யிருக்கிற ஆணவமலத்திற்குப் பரிபாகம் வரும்.

“ ஒத்தவினை யிரண்டு மோட்டு மொலெனது
சத்திமல பாகமுறிற்றாள். என்றுங் கூறுவர்.”

ஒரு ஊருக்கு இருவழி தோன்றின விடத்துச் செல்வானுக்குத் திகைப்புண்டானது போல கன்மத்துலை யொப்பிலே சத்திக்குத் திகைப்பு வரும் அப்பொழுது சத்தி தன்றொழிலினைச்செலுத்தாம லிருக்குமென்பர்.

அன்றியும் பசு நல்வினை தீவினை ஒத்து நின்ற இருவினை யொப்பு ஒன்று, சில நல்வினை தீவினை யொத்த விருவினை யொப்பு ஒன்று ஆக இருவினையொப்பு இருவகைப்படும். இவற்றுள் முன்னைய இருவினை யொப்பு எங்ஙனமெனிற் கூறுதும். ஆன்ம அறிவின் கண்மலபரிபாகக்குறி சத்திநி பாதக்குறி விளங்குமாப்போல் இருவினை யொப்புக்குறி விளங்கி நிற்றலாம். அக்குறி யாதெனில் ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றி இருவினைகளிலும் அவற்றின் பயன்களிலும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்து விடுவோனது அறிவின் கண் அவ்விருவினையும் அவ்வாறு ஒப்பநிகழ்தலேயாம். இவ்வாறு அறிவின் கண் இக்குறி நிகழ்ச்சிகூடு மாறில்லையாயின். முத்தியடைதற்கு ஏதுவாதல் கூடாதென்க. ஏனெனில் கன்ம ஒப்பு இல்லையாயின் குருவாதன்றோன்றான் அவன்றோன்றிலனேல் சிவதீக்கைப்பேறு கிட்டாது. கிட்டாதாகவே சிவஞானம்பெறாது எய்தாதாகவே அத்துவிதக் கலப்பினது ஆன்ம அறிவுதூலமாய் நிற்றலால் வியாபகமாய் நின்று விளக்கல் கூடாது. முற்கூறியாங்கு சோபானமுறையில் சிறிது சிறிதாக விளங்கி விளங்கிப்பின் வியாபகமாய் விளங்கும் சிற்சத்தியும் முற்பக்கத்துத் திங்கள் போலத் திரோதான சத்திரூபமாய் நின்றழிக்கும். அன்றியும் இருவினை யொப்பென்பது சஞ்சித வினையொத்தலா, அல்லது பிராரத்தவினை யொத்தலா, அல்லது ஆகாமியவினை யொத்தலா வென ஐயப்பாடுறும், அவ்வையம் நீக்குவான் சில கூறுவாம்.

ஒரே ஜனனத்தில் முத்தியடைய நின்ற ஆன்மா முன் ஜனனங்களிலீட்டிய புண்ணியபாவங்களிரண்டும் புசித்துத் தொலையத்தக்கதாக அத்துவாவிலே கட்டுப்பட்ட சஞ்சிதமும் அதினின்று



இப்பொழுது புசித்துமுடிவதாக வந்தவுடலிலே கட்டுப்பட்ட பிராரத்தகன்மமும் எதிர்வினையாகிய ஆகாமியமும், முடிந்து போம்படி சிவபுண்ணிய மிகுதியிலே எல்லாம் சேரத்துலையொக்கப் பொருந்தினவிடத்துத் திரோதாயி காருண்ணியத்தைச் செய்து நன்மையுடைய சத்திநிபாதம் விளைவிக்குமென்று உண்மை நூல்கள் கூறுகின்றமையாலும், இருவினையொப்பு என்று பொதுப்படக் கூறியதாலும் இவ்வினையொத்தல் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியமாகிய மூன்றற்கும் பொருந்த முடைத்தாதலறிக. இதுபற்றியன்றோ பெரியோர்.

“ இனையபலபிறவிகளினிறந்து பிறந்தருளாலிருவினைகள்புரிந்
தருந்துமிது சகலமகலா
முனமருவுமிருபயனு மொருகாலத் தருந்த முந்துநுகருந்துபயனந்த
முறவந்த
வினையுமெதிர்வினையுமுடிவினையு தவுபயனு னேராகநேராதல்
மேவுங்காண்முற்
சினமருவுதிரோதாயிகருணையாகித் திருந்தியசத்திநிபாதந்
திகழுமன்றே. ”

என்று கூறுவாராயினர்.

இவ்வாறு சகலர்க்கு கன்ம வொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதமெனமூன்றும்மிக்கு அவசியமென்றும்கன்மவொப்பிற்குக் காரணம் இறப்பில் தவங்களென்றும் கண்டாம். அன்றியும் ஆன்ம அறிவின்கண் இருவினையொப்புக் குறிநிகழ வேண்டுமென்றும் மூவகைக் கன்மங்களுக்கும் இருவினையொப்புண் டென்றும் ஏக காலத்தில் பரிபக்குவமான கன்மங்களைச் சிவசத்திநாசஞ் செய்யுமென்றும் அந்நாசத்தால் ஆணவமல பரிபாகமுறுமென்றும் கண்டாம்.

விஞ்ஞானகலர் பிரளயாகலர்க்கு இருவினை யொப்பில்லாமலே மலபரிபாகம் சத்திநிபாதமுண்டாம். விஞ்ஞானகலருக்குக் கன்மஒப்பு ஏனில்லையெனில், அவர்களுக்கு விஞ்ஞானயோக சந்நியாசங்களால் கன்மக்ஷயமும் மாயா மலக்ஷயமும் பிறந்திருக்கிறபடியாலென்க. ஆதலால் இவர்களுக்கு மலபரிபாகமே சத்திநிபாதத்துக்குக் காரணமெனவறிக.

மாயாபோகத்தால் கன்மசாமிய முண்டாக வேணும் பிரளயாகலர்க்கு இஃதின்மையால் இருவினையொப்பு இல்லாமலே மலபரிபாகம் வந்து சத்திநிபாதமுறும். அன்றியும் பிரளயாகலர் நிலையில் அருங்கலாதி போகமுணடாகையால் சகலராவார்கள். இச்சகலருக்கும் மற்றுள்ள சகலருக்கும் கன்ம ஒப்பு சத்திநி பாதத்திற்குக் காரணமோ வெனில் பிரளயாகலர் நிலையினின்றுசகல ராவார்க்கு இருவினை யொப்புசத்தி பதிதற்குக் காரணமன்றி மலபரிபாகமே காரணம்.

மாயையில் ஆதியிலிருக்கும் சகலர்க்கேகன்மவொப்புடன்கூடினமலபரி பாகம் சத்திநி பாதத்துக்கு காரணம் எனவறிக. கமலபரிபாகமில்லா விடத்துச்சகலர்க்குச் சத்திநிபாதம் உண்டாகாது. எனவேமலபரி பாகத்துக்கு முன்னிகழும் இருவினை யொப்பைச் சிவசக்திபுசிக்க வொட்டாமற் கெடுத்து விடுமென்க. இனி சிவ நல்வினை யொத்தலாவது.

சிவநல்வினை, தீவினைபோலத் தமது முதலுபகாரத்தை மறந்து பிறவிக்கேதுவாய்ப் பசுபோதம் முளைத்துச் செய்யப் படுவதொன்றெனத் தெளிந்து உவர்த்து விடுவோன தறிவிலகண் அவ்வாற்றுனெப்ப நிகழ்தலாம்.

சுருக்கக் கூறில் சிவபுண்ணிய விசேடத்தால் புத்தி இருவினையின் கண்ணும் அவற்றின் பயன்களிடத்தும் விசாரித்தறியாது. நடுநிலையாகி ஒத்து நிற்றலே இருவினையொப்பு எனப்படும். இஃது ற்றபோது அக்கினியைச்சார்ந்த விதைபோல ஆணவமலம் பக்குவமெய்தும் என்றறிக.

“ பிணக்கில்லாத பெருந்துறைப் பெருமானுன்
நாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோரின்பமே வருந்துன்பமே
துடைத்தெம்பிரா
னுணக்கிலாததோர் வித்துமேல் விளையாமல்
லென்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோல நீவந்துகாட்டினுய்
கழுக்குன்றிலே. ”

S. பால்வண்ணமுதலியார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவபாரம்மியம்

## (விஷ்ணுபாகவதம்.)

## முதலாவது அத்தியாயம்.

சத்வ, ரஜஸ், தமஸ் ஆகு பிரகிருதியின் குணங்கள் மூன்று. இவைகளுடன்கூடி பரபுருஷன் இவ்வுலக சிருட்டி முதலியவைகளின் பொருட்டு ஹரி, விரிஞ்சன், ஹர எனும் பெயர்களை முறையேகொள்கிறார். இவைகளுள் (சத்வதனு) சத்வவடிவமாயுள்ளவரிடமிருந்து மனிதன் நன்மை தேடுகிறான், — ii. 23.

குறிப்பு:—இதனால் திரிமூர்த்திகளினின்றும்பரபுருஷர் வேறானவரெனவும் அவர் சதுர்த்தம் எனவு மேற்படுகிறது.

மாண்டூக்யோபநிஷத்.

“ப்ரபஞ்சோப சமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம்”

நிருஸிம்மபூர்வதாபிந்யுபநிஷத்.

“ப்ரபஞ்சோப சமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே”

நாரதபரிவ்ராஜகோபநிஷத்.

“ப்ரபஞ்சோப சமம் சிவம் சாந்தமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே”

ராமோத்தரதாபினியோபநிஷத்.

“ப்ரத்ய யஸாரம் ப்ரபஞ்சோப சமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே”

பஸ்மஜாபாலோபநிஷத்.

“அத்வைதம் சதுர்த்தம் ப்ரம்மவிஷ்ணு ருத்ராதிதமோ மாசாஸ்யம் பகவந்தஞ் சிவம்” எனவரும் வேதஞானகாண்டங்களின் இருதயவுண்மையினையே இச்சுலோகந்தெரிவிக்கிறது.

அஸ்வத்தாமன் “ உருத்திரமூர்த்திக்குப்பயந்து சூரியன் போல் ” தன் பிராணனுக்காக ஓடினான். அல்லது மற்றொருபாட

பேதத்தின்படி "உருத்திரமூர்த்திக்குப் பயந்து பிரமனைப்போல்" தன் பிராணனுக்காக ஓடினான். Vii. 18.

பரீக்ஷித் என்பவருடைய ஜாதகத்தினை ஜோசியர்கள் எழுதியபோது "அவர் (அருள்) பிரசாதத்தில் கிரீசனை ஒப்பார்" என்று கூறினர். Xii. 24.

குறிப்பு:—பூர்வசாஸ்திரங்களில் பிரசாதம் என்னும் பதம் பக்குவப்பட்ட சிவபக்தர்களுக்குப் பரமேஸ்வரன் புரியும் திருவருள் சம்பந்தமாக உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது.

திருமந்திரம்.

சிவனருளாற் சிலர் தேவருமாவர்
சிவனருளாற் சிலர் தெய்வத்தோடொப்பார்
சிவனருளால்வினை சேரகிலாமை
சிவனருட் கூறிலச் சிவலோகமாமே.

என வருதலாற்காண்க. "அவனருளாலே யவன்றாள்வணங்கி" என்பது இக்கருத்துப்பற்றியே யென்க.

அர்ச்சுனன் தன் பழைய அற்புதங்களை நினைக்கிறபோது "சூலாயுதம் ஏந்திய ஹிமவான் மகளொடும் மகிழ்ந்து அவரது சொந்த பாணமாகிய பாசுபதாஸ்திரம் எனக்கு அளித்தார்" XV. 12.

## இரண்டாம் அத்தியாயம்.

கல்வி (ஞானம்) வேண்டுவோர் கிரீசனை வணங்கவேண்டும். உத்தமவாழ்க்கைத்துணைப்பெற விரும்புவோர் கற்புவடிவாம் உமாதேவியை வணங்கவேண்டும். iii. 7.

குறிப்பு:—இதனால் சிவபெருமானாலேயே ஞானம் அடையத்தக்கதென்று ஏற்படுகிறது.

கைவல்யோபநிஷத்.

"ஜ்ஞாத்வாதம் ம்ருத்யுமத்யேதிநாந்ய: பந்தாவிமுக்தயே"

திருமந்திரம்.

சிவமான ஞானந்தெளிய வொண்சித்தி
சிவமான ஞானந்தெளிய வொண்முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத்தேயேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே. என்றதனாற்காண்க.

## மூன்றாம் அத்தியாயம்.

இவ்வுலகத்தினின்றும் கிருஷ்ணன் போய்விட்ட பிறகு துவாரகையிலிருந்து திரும்பிவருகிறபோது உத்தவரை நோக்கி விதுரர்



குறித்தகேள்வியைக் கேட்கிறார். அதாவது சாம்பன் சௌக்கியமாயிருக்கிறாரா. அழகு வாய்ந்த விஷ்ணுவின் உத்தம புத்திரர். சாரதிகளுள் தலைவர். பூர்வகாலத்தில் அம்பிகை தெய்வக்குகனாகிய சுப்பிரமணியமூர்த்தியைப்பெற்றதுபோல், ஜாம்பவதி சிவபிரானுக்கு விரதம் அனுஷ்டித்து, பெற்றெடுத்தாள். i. 30.

குறிப்பு.—இதனால் கிருஷ்ணமூர்த்தியின் குடும்பத்திற்குத் தெய்வம் சாம்பவமூர்த்தி யெனத் தெரியவருகிறது. யாதவகுலம் பரமேஸ்வரனுடைய அழிக்கும் அம்சம் பெற்றுள்ளவனான சாம்பன்மூலமாய் அழிக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்கிறது. இந்தத் (அழிக்கும்) தொழிலைச்செய்யும் ஒவ்வொருவரும் சிவஅம்ஸத்தை அச்சமயம் அடைகிறார்கள்.

(Xi. 2. 14 முதல் 16 வரையில் ஸ்லோகங்கள் பார்க்க.)

தாமஸ சிருஷ்டியில் பிரமன் திருப்தி யடையாதபோது சனகர் முதலிய குமாரர்கள் மனோபாவனையால் உற்பத்திசெய்து ஆன்மாக்களைச்சிருஷ்டிக்கும்படி கூறினான். அவன் கட்டளையின்படி நடக்க அவர்கள் உடன்படாததால், அடங்காப் பெருங்கோபம் உண்டாயிற்று. ஆனால் அதை அடக்கப் பிரமன் முயற்சித்தான். தன் புத்தியினாலதை அடக்கியபோது பிரஜாபதியின் கண்ணிமைகளின் மத்தியிலிருந்து அவன் கோபம் இளமையான நீலலோகித (ருத்ர) ராக உற்பத்தியாய்த் தோன்றினர். Xii. 7.

அவனையும் சிருஷ்டித் தொழிலை ஏற்றுக்கொள்ளும்படி பிரமன் வேண்டினான். ஆகவே அவ்வேண்டுகோளின்படி நீலலோகிதர் இயற்கையாகவே சத்வகுணமுடைமையால், தன்னைப்போலவே பல ஆன்மாக்களைச் சிருஷ்டிக்கத்தொடங்கினார். ஆகவே அநேக ருத்ரர் சிருஷ்டிக்கப்படுவதைப் பிரமன் கண்டு அச்சிருஷ்டியை நிறுத்தும்படி கூறினான். Xii. 13. 14. 16.

குறிப்பு.—இச்சரித்திரம் ஒவ்வொரு புராணத்திலும் பிரமன் சிருஷ்டி செய்ய முயலும் சந்தர்ப்பங்களில் காணப்படுகிறது. ருத்ரமூர்த்தியில்லாமல் படைப்புத்தொழிலும் காத்தற்றொழிலும் இயங்காவாம் என்பது இதனாற் போதரும்.

பிரதோஷகாலத்தில் மாரீசனது பத்னி தன் காமத்தைத் திருப்திசெய்யக் கட்டாயப்படுத்தியபோது, இவ்விதமாக மாரீசன் கூறுகிறான். கற்புடையாளே! ஆன்மாக்களைச் சிருஷ்டிக்கும் பரமேஸ்வரன் இச்சந்தியாகாலத்தில் பரிவார தேவர்கள்சூழ மகிமை

யுள்ள ரிஷபவாகனத்தின்மீது வருகிறார். சேனைக் கட்டியவர். பிரமன் முதலானோர் அதற்குக் காவலாளர்கள். பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணர். மாயாசக்தியோடு கூடியவர். பூதங்களோடு அவர் புரியும் செய்கைகள் திருக்கூத்தேயாம். Xiv. 22. 23. 28.

திதி என்பவள் தன் குறியின் சௌக்கியத்திற்காக இவ்வாறு ருத்ரமூர்த்தியைத் துதிக்கிறாள், "ருத்ரரைப் பணிகின்றேன், பெரியவரே! தேவரே! உக்கிரரே, வேண்டும் அபீஷ்டங்களை வழங்கும் வள்ளலே, சிவனே, சாந்தமானவனே, ஆண்டவனே, கோபமானவனே, தன்சக்தியின் சகோதரியாய் அவர்க்கும் பந்தம் உள்ள எனக்கு நன்மை புரிவாராக. திருவருளுக்கு பாத்திரரா யிருப்பவர்களுக்கெல்லாம் அருளுடையர். முக்கியமாய் ஸ்திரீஜாதியிடத்துக் கற்பரசியின் பதியாதலால் நன்மைபுரிவர். Xiv. 33. 34 35.

## நான்காவது அத்தியாயம்.

மகப்பேறக்காக அத்திரிரிஷி தவஞ்செய்தாலத்து, இவ்விதமாகத் துதிக்கிறார் "லோகத்தின் நாயகனைச் சரணடைகின்றேன், என்னையொத்த ஒரு புத்திரனை எனக்கருள்வாராக. பின்னர் மும்மூர்த்திகளும் முறையே ரிஷபம், அன்னம், கருடன் ஆகிய வாகனங்களின்மீது அந்த ரிஷியின் முன்னர் தோன்றினார்கள். அப்போது அத்திரி இவ்விதமாக் கூறுகிறார். லோகத்தின் சிருஷ்டி, திதி, சம்ஹாரத்தின்பொருட்டு ஒவ்வொரு கற்பத்திலும் மாயையின் முக்குணங்களுக்கேற்ப உருவெடுத்து முறையே பிரமன், விஷ்ணு, கிரீசன் எனும் பெயர் தாங்குகிறீர்களென்பதை அறிவேன். உங்களை வாழ்த்துகிறேன். ஆனால் உங்களுள் என்னால் உபாசிக்கப்பட்டவர் யாவர்? என்றனர் உன்சங்கல்பம் எப்படியோ அப்படியே நடக்கும், வேறுவிதமாக நடவாது ஓ பிராமணனே! நீ சத்திய சங்கல்பன் (உண்மையான தீர்மானமுடையவன்) ஆதலால் நீ உபாசித்தமூர்த்திகள் நாங்களே." i. 20. to. 30.

குறிப்பு:—மும்மூர்த்திகளுக்குச் செய்யும் வணக்கம் துரியமூர்த்திக்குமுரியதென்பதாம்

விதுரர்கேட்கிறார் 'கற்புவடிவமாகிய தன்புத்திரியை நோக்காது நல்லோர்க்கெல்லாம் மேலானவராகிய சிவபிரானிடத்துத்



தன் புத்திரியினிடம் பிரியமுள்ள தக்ஷன் ஏன் விரோதம் பூண்டனன்.'' ii. 1.

ஜகத்துக்கு வழிகாட்டியராய், யாதொரு விரோதமில்லாதவரும் தன்னுளே ஆனந்தமுடையராய்ச்சாந்தமான தோற்றமுடையவரும் ஜகத்தின் பரமதேவருமாகிய அவரிடம் யார் தான் விரோதம் கொள்ளக்கூடும். ii. 2.

ஒருவர்க்காகப் பிரதி தீமைசெய்யாதவராகிய கடவுளுக்கு துன்பம் நினைக்கின்றானோ? அவன் வேறுபட்ட மனத்துடன் சத்திய விரோதம் ஆகின்றான். ii. 22.

அறிவில்லாததாகிய ஆன்மா (பசு) தன் முடிவைமறந்து லௌகிக விஷயங்களில் சிக்கிக்கொள்ளட்டும் ii. 24.

மூடன் அறிவின்மையோடு கூடியசெய்கையைக் கல்வி விசேடமெனக்கொள்வான். சிவபிரானை இகழ்ந்தோரைப் பற்றுகிறவர்களும் ஜனன வாழ்வை அடைவார்கள். ii. 25.

தேவி தக்ஷனைப்பார்த்து நீயல்லது வேறுயார் சர்வவியாபகரும், விரோதத்தின்றும் புனிதமானவரும், தனக்கு அன்புள்ள நண்பனையாவது விரோதியையாவது இவ்வான்மகோடிகளிலில்லாதவரும், பிறர் அன்புசெலுத்தக்கூடிய தன்மையருமாகிய பரமேஸ்வரனை இகழ்வார்கள். iv. 11.

துஷ்டர்கள் நல்லோர்க்குத் தீக்குணம் உரைப்பார்கள் ஆனால் இருபிறப்பாளனே! உன்போன்ற பக்குவமுடையார் அப்படி செய்யார். சிறிய நற்குணங்களையும் மேலோர் விசேஷமாகவே மதிப்பார்கள். அவர்களுக்குத் தீமை கூறுகின்றாய். iv. 12.

அவரது திருநாமமாகிய இரண்டு அக்ஷரங்களை எதோ ஒருமுறை உச்சரிக்கின், மனிதர் பாபங்களை ஒழிக்கும், நீயோ, அமங்களமானவன். இகழ்கின்றாய், நல்லபுகழும் தடுக்கமுடியாத ஆக்கினை உடையாய். iv. 14.

குறிப்பு:—சிவ என்ற இரண்டட்சரங்கள் சகலபாபங்களையுமொழிக்குமென்பதாம்.

திருமந்திரம்.

சிவசிவ வென்கிலர் தீவினையாளர்
சிவசிவ வென்றிடத் தீவினைமாளும்

சிவசிவ வென்றிடத் தேவருமாவர்
சிவசிவ வெனச் சிவகதிதானே.

எனவருதலாற்காண்க.

மஹான்களுடைய தேனீ போன்ற மனம் பிரம்ம ரசமெனுந் தேனை உண்ணும். அவாவுடன் தாமரைபோன்ற அவர் திருவடிகளைப்பற்றுகிறார்கள். வேண்டுவோர்க்கு வரங்களை வழங்கும் வள்ளலும் யாவர்க்கும நண்பரானவருமாகிய (ஈசனை) நீ இகழ்கின்றாய். iv. 15.

நீ நீங்கலாக பிரமனும் ஏனையோரும் (மங்களகரமான) சிவபிரானை (அசிவன்) அமங்களகரமாக நினைக்கின்றாரிலர்..... iv. 16

தர்மரக்ஷகனாகிய ஈசனை இகழ்கின்றபோது ஒருவர் காதை மூடிக்கொண்டு போய்விடவேண்டும். வல்லமையுடையராயின் தாழ்வுபேசிய நாக்கை வேகமாய் அறுக்கவேண்டும். அல்லது உயிரைவிட்டு விடவேண்டும். இதுதான் தர்மம். iv. 17.

குறிப்பு:—சிவதூஷணங்களைத்தாம் நேரே செய்யாராயினும் பிறர் செய்வதை இசைந்து கேட்டுக்கொண்டிருப்பினும் பாவமேயாம்.

சித்தாந்தசிகாமணி.

கண்டனையின் முக்கட்கடவுளை நிந்திப்போனைத்
தண்டனைபுரிந்து கொல்கவரிதெனிற் சபிக்கின்ற
மண்டனில் வலியனன்றேல் வான்செவித்துணைகள் பொத்திக்
கொண்டவணகன்று செல்க குலைகுலைந்த மலபத்தன்.

ஸ்ரீ கண்டரை இகழ்ந்த உன்னிடமிருந்துண்டான இத்தேகத்தை உயிருடன் வைக்கமாட்டேன். தடுக்கப்பட்டவுணவை புசித்து உண்டவனுக்கு உய்யும்வழி அதனை வாந்திபண்ணிவிடுதலே. iv. 18.

ஆன்ம விளக்கம் அடைந்த மஹாமுனிவருடைய சமயோசித உணர்ச்சி வேதவாக்கியங்களால் கட்டுப்படாது. iv. 14.

அம்பாள் தன் நாயகன் தாமரைபோன்ற திருவடிகளின் தேனைத்தியானித்துக்கொண்டிருந்ததால், வேறொன்றும் காணவில்லை. தன் தேகம் புனிதமாகியது. சமாதியிலிருந்துண்டான அக்கினியால் தகிக்கப்பட்டது. iv. 27.

மைத்திரேயர் கூறுகிறார் "பிறகு தேவர்கள் எல்லாரும் சூலாயுத முதலிய ஆயுதங்களை ஏந்தியருத்ரகணங்களால் புடைக்கப்பட்டுக்கால்கள் ஒடிந்த பிறகு அங்குக்கூடியுள்ளோர்களுடன் பிரமனிடம் சென்று தண்டாகாரமாய் விழுந்து நடந்தன யாவும் கூறினார்கள். vi. 1. to. 2.



இப்படி நடக்குமென்று முன்னமே உணர்ந்து (உந்தித்) தாமரையிற் பூத்த பிரமனும் சர்வவியாபக விஷ்ணுவும் தக்ஷயாகத்துக்குச் செல்லவில்லை. vi. 3.

குறிப்பு:— ஈண்டுவியாபகமென்பது பிரதிஷ்டாகலை வரையிலுள்ள வியாபகமேயாம் விஷ்ணு தட்சயாகத்திற்குச் சென்று பரிபவப்பட்டதாக சில புராணங்கூறும்.

இவைகளைக்கேட்டுப் பிரமன் "சுகம் விரும்புவோர் தெய்வங்களுக்குக் கெடுதிசெய்யின் க்ஷேமமடையார்" என்றார் vi. 4.

சிவபிரானது அவிப்பாகத்தை நீக்கிய படியால், நீங்கள் குற்றஞ்செய்தீர்கள். அவர் திருவடிகளைப்பற்றுங்கள். அவர் எளிதிற் சந்தோஷமடைவர். சுத்தசித்தத்தோடு தியானஞ்செய்மின். vi. 5.

குறிப்பு —புருஷசூக்தத்தில் விஷ்ணுவை "யஜ்ஞரூபி" எனவும் ருத்ரமூர்த்தியை யஜ்ஞபதியெனவும் கூறுமாற்றால். சர்வதேவதநுர்ப்பூதராகிய சிவபெருமானே அவிப்பாகத்திற்கு உரியர்.

யானாவது (யஜ்ஞராகிய) விஷ்ணுவாவது, நீங்கள் எல்லோருமாவது, மஹான்களாவது, பிறர்யாராவது அவர் உண்மை நிலையையும் ஆற்றலையும் வல்லபத்தையும் அறியோம். சுயேச்சையான அவரைத்தணிப்பதற்கு வழிபோதிப்பர். vi. 7.

பிரமன் இவ்விதமாகத் தேவர்களுக்கு அறிவுறுத்தித் தன்னிடம் விட்டுப் பிதிர்கள் பிராஜபதிகளோடு, திரிபுரமெரித்த பரமேஸ்வரன் விருப்பியிருக்கும் ஸ்தானமும், மலைகளுட் சிறந்ததுமான கைலையங்கிரியை யடைந்தான். vi 8.

பிறப்பு, மருந்து, தவம், மந்திரம், யோகம் ஆகிய இவைகளால் முதிர்ச்சியடைந்தோரும், கின்னரரும், மனிதரல்லாதவரும் கைலையங்கிரியில் வீற்றிருக்கின்றார்கள். vi. 9.

குறிப்பு:—சுமார் இருபத்தைந்து சுலோகங்களில் பெரிய ஆலவிருக்ஷமுதல் கைலையின் வனப்புகளைத் தனித்தனி வர்ணித்திருக்கிறது. வைகுந்தமும் இவ்வளவு விரிவாக வர்ணிக்கப்படவில்லை.

மஹாயோக விருக்ஷத்தினடியில் சிவபிரான் எழுந்தருளியிருப்பதைக் கண்டார்கள். மோக்ஷம் விரும்புவோர்க்குத் தாயகமாயி

ருப்பவர். குபேரனும் சநந்தனரும் யோகசித்தியும் இருவினையொப்புமுள்ள ஏனையரும் வணங்குகின்றார்கள். சிவபிரான் புத்தியின் வழிகளும், யோகத்தின் துறைகளும் யோசிக்கின்றார். தபஸ்சிரேஷ்டர்கள் விரும்பும் உருவம் கொள்கிறார். மஞ்சம் புல்லாசனத்தின்மீது பஸ்மதாரணராய் அழியா உண்மையை நாரதருக்கு விளக்குகின்றார். நாரதர் கேள்விகேட்கின்றார். ஏனையர் கவனிக்கின்றார்கள். அப்பரசிவம் தமது இடதுகாலை வலது முழந்தாள்மேல் வைத்துக்கொண்டு ஜெபமாலையைக் கையில் பிடித்துக்கொண்டு தாரகமுத்திரையின் சின்னத்தைக் காட்டிக்கொண்டு வீற்றிருக்கிறார். vi. 33 to 38.

மகரிஷிகளும் அஷ்டதிக்குப் பாலகர்களும் அவரை வணங்குகிறார்கள். அவர் சமாதியில் மஹாயோக சாதனையால் அடையக்கூடிய ஆன்ம அநுபவம் அடைகின்றார். மநுகுலத்தோருள் முதல்வர் vi 39.

பிரமன் கூறுகிறார்:—தேவரீரை ஜெகந்நாதனென்றும், பிரபஞ்சத்தைக் கடந்தவரென்றும், முதற்காரணரென்றும், சத்தியும் சிவமும் என்றும், பரப்பிரமமென்றும் அறிவேன் vi. 42.

தேவரீரே சிவசத்திகளின் கூட்டுறவால் விளையாட்டுச் சிலந்திபோலப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டி, திதி, சம்ஹாரம் செய்கிறீர். vi. 43.

குறிப்பு: ஜீவசித்தாகிய சிலந்தி அசத்தாகிய உடலினின்றும் நூலைக் காரியப்படுத்துவதைப்போல, சிவசித்தாகிய இறைவன் மாயையினின்றும் பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துவனென்பதாம்.

தக்ஷன் ஏவுதலால் தர்மார்த்தத்தின்பயனை அநுபவிக்க யஞ்ஞர்களை அவர்கள் உண்டாக்கினார்கள். பிராமணரும் ஏனையரும் அழுத்தமாக அநுசரிக்கும் (ஜாதிகளின் வித்தியாசங்களின்) வரையறையளவுக்குத் தேவரீரே காரணர். vi. 44.

அமங்கள காரியங்களை மங்களமாக்குவீர். செய்கைகளுக்கு இவ்வுலகத்திலும் மற்ற உலகங்களிலும் சன்மானம் அளிக்கின்றீர். தீமை புரிவோரைக் கடுநரகில் தள்ளுகிறீர். vi. 45.

பசுவாகிய அறிவிலா ஆன்மாக்களைத் தேவரீர் திருவடிபற்றிய சிந்தையாளராய் எல்லா ஆன்மாக்களிலும் தேவரீரிடத்தே காண



விரும்புகின்ற பெரியோர்களைப் பசுவாகிய அறிவிலாத ஆன்மாக்களிடத்துச் செய்வதுபோலக் கோபமானது பெரும்பாலும் செல்லாது. vi. 46.

தன்முதுகின்மீது யாகமிருகத்தின் தலையை வைத்திருந்தபோது ருத்ரமூர்த்தி பார்க்கத்தூக்கத்தினின்றும் விழிப்பதுபோல் தக்ஷன் எழுந்தான். தன்முன்னே சிவபிரானைக்கண்டான். vii. 9.

ருத்ரமூர்த்தியிடம் விரோதங்கொண்டதால் கலங்கிய மனத்தனாகிய அப்பிரஜாபதி சிவபிரானைத் தரிசித்த விசேடத்தால் குளிர்ந்த காலத்திலிருக்கும் குளம்போல (துர்க்குணங்களாகிய) மலத்தினின்றும் விடுபட்டான். vii. 10.

முதல்முதலில் தேவரீர் முகத்தினின்றும் பிராமணரை உற்பத்தி செய்தீர்.. பிரம்மத்துக்கும் ஆன்மாவுக்குமுள்ள உண்மையைப் பரவச்செய்வதற்காக உண்டாக்கினீர். அவர்கள் நல்லொழுக்கமும் கல்வியின் நிமித்தம் உறுதிகொண்டிருக்கிறார்கள். பரமனே! நிரைமேய்ப்பவன் கோல்கொண்டு பசுக்களைக் காப்பாற்றுவதுபோல எல்லா ஆபத்துகளிலும் அப்பிராமணர்களைக் காப்பாற்றுகிறீர். vii. 14.

அப்பரமனது உண்மைச்சொரூபம் அறியாமல் சபையில அம்புபோன்ற கொடிய வார்த்தைகளால் நான் தூஷித்த அப்பரமன் தனக்குத்தானே சந்தோஷப்படட்டும். பெரியோரைத் தூஷித்ததற்காகத் தண்டாகாரமாய் வணங்கியபோது திருக்கண் கிருபாநோக்கத்தால் காப்பாற்றினார். vii 15.

மறுபடியும் கூடிய சபையை நோக்கி விஷ்ணு கூறுகிறார், "நானும், பிரமனும், சிவமும் பிரபஞ்சத்தின் மூலகாரணர். பரமான்மாவும், ராஜாக்களும், சாட்சிகளும், ஆன்மதரிசனிகளும், அதீதர்களும் ஆவோம். vii. 50.

"மூடனவன் பிரமன், ருத்ரன் முதலானோரைத் தனக்கிரண்டாவதில்லாத பரமான்மாவாகிய பிரமத்தினின்றும் வேறாக நினைக்கிறான். vii. 52.

குறிப்பு:—"ஏக ஏவருத்ரோ நத்வீதியாய தஸ்தே" எனவும் "சிவ ஏவ கேவலா" எனவும்வருவனவற்றால் சிவபெருமான் இரண்டாவதல்லவென்றும் அவாதிஷ்டானத்தால் மூவரும் வாழ்பவராகலின் இவர்களை வேறாக நினைக்கக்கூடாதெனவும் கூறியவாறாயிற்று.

"பிரமனே! சொரூபத்தில் ஒரு தன்மையராயும் யாவற்றிற்கும் மூலமாயும் இருக்கும் மும்மூர்த்திகளுள் வித்தியாசங்கொள்ளாதவனே சித்தத்தெளிவு அடைகிறான்." vii. 54.

மைத்திரேயர் கூறுகிறார்: தக்ஷயாகத்தை அழித்த சிவபிரானது இவ்வெற்றியைப் பிரகஸ்பதியின் அவதாரமாகிய உத்தவர் எனும் என் பக்திமானாகிய மாணவனால் கேள்விப்பட்டேன். vii. 61.

ஓ, பரீக்ஷித்! கற்றபிறகு பக்தியுடன் தினந்தோறும் புகழ் விருத்தியும், தீர்க்காயுளும் பாபநீக்கமும் விளைக்கும் பரமேச்சுரனது மகிமைகளைப் பாராயணஞ்செய்பவனே பாபத்தைத் தொலைக்கின்றான். vii. 62.

பூமிதேவி நிலத்து உழைப்பாளிகளுக்குப் பலன் கொடாதபோது திரிபுரதகனரைப்போலப் பிருத்விராஜன் கோபமடைகிறானென்று கூறப்படுகிறது. (x. 7,29, x. 76, 12 பார்க்க). xvii. 13

பிருத்விராஜன் அசுவமேதயாகஞ்செய்தபோது, இந்திரன் அக்குதிரையைத் திருடிக்கொண்டான். ராஜன் அதைக்கண்டு பிடித்து அவன்மீது பாணங்களை ஏவ இருந்தபோது, இந்திரன் சடைமுடியுடன் பஸ்மதாரணனாய்த் தோன்றினான். மகிமையுள்ள அத்தோற்றத்தினிடத்துண்டான பக்தியின் பாணங்களை ராஜன் நிறுத்தினான் xix. 14.

குறிப்பு: இவ்விடத்தில் மெய்ப்பொருணயனார் சரித்திரம் கவனிக்கத்தக்கது.

விதுரர் கேட்கிறார்: மஹான்களுக்கும் தியானித்தல் தானே முடிகிறபடியாலும், பிருத்துக்களால் சந்திக்க முடியாதபடியாலும், பிராசிதர்களுக்கு எப்படி சிவபிரானை இவ்வுலகத்தில் நேரே காண முடியும்? சிவபிரான் தானே சந்தோஷமடைந்து லோகத்தின் சுகம் பொருட்டுத் தனது சங்காரசக்தியுடன் பவனிவருவார் என்று கூறப்பட்டிருக்கிறது.....தங்கள் தகப்பனார் வழித்துணையைக்கொண்டு மேற்பால் மானச ஏரிவரை சென்றனர். (ஏரிவருணனை இங்கு விசேடமாயிருக்கிறது). அங்கே அவர்கள் தேவ சங்கீதங்களைக் கேட்டு உருக்கிய சொர்ணதேகத்தோடும் தேவர்கள் சூழக்கிருபாமுகத்தோடு திரிநேத்திரதாரியாகிய சிவபிரான் தங்கஜோதிரூ-



-பத்தைக்கண்டார்கள். பிராசிதர்கள் சந்தோஷத்துடன் சேவித்தார்கள். பிறகு தனது பக்தர்களின் கஷ்டங்களை நீக்குபவரும் தர்மத்தை பரிபாலிப்பவருமான ருத்ரமூர்த்தி அவர்களுக்குக் கூறுகிறார்.....முக்குணவயத்தராய் ஜீவான்மாவுக்கு அதீதராகிய வாசுதேவரைச் சரண் அடைகின்றார் எமக்குப்பிரியமானவர்... xxiv. 17 to 31.

## ஐந்தாம் அத்தியாயம்.

பூகோள வரலாற்றில் இலவர்த கண்டத்துக்கு பவானே தெய்வம்.

## ஆறாவது அத்தியாயம்.

விருத்திராசுரனோடு நேர்ந்த யுத்தத்தில் இந்திரன் "யமனுக்கு முன்னே கோபத்தோடு நின்ற ருத்ரமூர்த்திபோல தோன்றினான் xvii 15.

விஷ்ணுமூர்த்தி அளித்த ஆகாயரதத்தில் சித்ரகேது செல்லும்போது சித்தர்களும் சரணர்களும் சூழ இருக்கும் சிவபிரானைக் கண்டார். முனிவர் கூட்டத்துள் பார்வதியைச்சிவபிரான் தழுவுவதைப்பார்த்துச் சித்ரகேது சிரிப்புடன் கூறுகிறான், "லோகத்துக்கு உதாரணமாயிருப்பவர், மனிதர்களுள் தர்மங்களைத்தானே பரவச்செய்பவர், பிரமத்தின் உண்மையை விளக்குபவர், மஹாவிரதங்களை அனுஷ்டிப்பவர் இத்தகைய சிவபிரான் சாதாரண மனிதனைப்போலப் பலரறிய தன் பாரியாளோடு சுகிக்கிறார்." சிவபிரானது உண்மை மகிமை உணராத சித்ர கேதுவுக்குப் பார்வதி தேவி கூறுகிறார், "பிரமனாலும் பிரமபுத்திராலும்; நாரதரியாலும், குமாரராலும், கபிலராலும், மனுவாலும், இப்பொழுது நீ ஒழுக்கந்தவறியவரென்று பேசிய அவரது உண்மை நிலை அறிய முடியவில்லை." தாமரைபோன்ற அவரது திருவடிகளை மேற்குறித்தவர்கள் தியானிக்கின்றார்கள். உலகத்துக்கு வழிகாட்டியாயிருக்கிறார். சர்வமங்களங்களுக்கும் மங்களமானவர். அத்தகைய பெரியோர்களைத் தாழ்வுபேசியதற்காக உனக்கு தண்டனை நியாயம் xvii 4 to 12.

## ஏழாவது அத்தியாயம்.

திரிபுரதானருடைய சரித்திரங்கள் கூறியிருக்கின்றன x. 53 to 71.

யாத்திரைக்குரிய திவ்ய ஸ்தலங்களாகிய சேது, வாரணாசி, மதுரா, பிந்துசரஸ், (ஒரிஸாவிலுள்ள) புவனேசுவரம் முதலியவைகள் கூறப்பட்டிருக்கின்றன xiv 28 to 32.

## எட்டாவது அத்தியாயம்.

திருப்பாற்கடல் கடையும்போது மந்தரமலையும் காமிறும் கடலுள் அழுந்திவிட ஆரம்பித்தது. அதைத்தூக்குவதற்குத் தேவர்கள் எல்லாருடைய வலிமையும் போதாதாயிற்று, "விக்னேசுரர் பூசை செய்யாததால்" இது நேர்ந்ததெனை உணர்ந்தார்கள். vii. 8.

கடலைக் கடைகிறபோது பிரசித்திபெற்ற விஷம் தோன்றியது. தேவர்கள் உதவியற்றவர்களானார்கள். கூட்டமாய்ச் சிவபிரானது அடைக்கலம் பெறக்கைலாசஞ்சென்றார்கள். சிவபிரான் சந்நிதியில் தண்டாகாரமாய் விழுந்து இவ்விதமாகத் தோத்திரஞ் செய்தார்கள்:—vii. 19. to. 20.

தேவர்களுக்கெல்லாம் பதியே, பரமபதியே, எல்லாவற்றிற்கும் ஆன்மாவாயுள்ளவரே, ஜீவர்களைப்படைப்போரே! மூவுலகையும் எரிக்கும் படியான விஷத்தினின்றும் தேவரீரைச்சரண்புகுந்த அடியேங்களைக் காப்பாற்றுங்கள். vii. 21.

சர்வலோக ஒற்றுமைக்கும் மோக்ஷத்திற்கும் தேவரீரே தலைவர். புத்திமான்கள் தேவரீரையே பூஜிப்பார்கள். தேவரீர் குருவும் பக்தர்களின் துன்பங்கள் நீக்குவோருமாவர். vii 22

தேவரீர் சக்தியால் பிரபஞ்சத்தைப் படைத்துக்காத்து அழிக்கிறபோது பிரம, விஷ்ணு, சிவன் என்னும் பெயர்தாங்குகிறீர். vii. 23.

குறிப்பு :— ஒருருவாயினை ——·—— ——படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினை" என்ற ஆளுடையபிள்ளையார் திருவாக்கைக்காண்க.

தேவரீரே பிரமம் பரமாசியம், பிரபஞ்சத்தோற்றமும் தேவரீரே. மறைவும் தேவரீரே. பல்வேறு சத்திகளாய்த் தேவரீரே தோன்றுகிறீர்கள். லோகநாயகனும்பரமான்மாவும் ஆவீர் vii 24



குறிப்பு. நான்கு ஸ்லோகத்தால் (விராரூபமாகிய) சமரசரூபத்தை வர்ணித்திருக்கிறது. 25 to. 28.

(1) கைவல்ய உபநிஷத்து (2) சுவேதாஸ்வதர உபநிஷத்து (3) அதர்வசிரஸ் உபநிஷத்து (4) அதர்வசிகை உபநிஷத்து (5) காலாக்கினிருத்ர உபநிஷத்து ஆகிய இவ்வைந்து உபநிஷத்துக்களும் (இவ்வைந்தும் சாதாரணமாய் 'ஐந்து ருத்ரர்' என்று வழங்கப்படும்) தேவரீரது ஐந்து திருமுகங்களே ........ தேவரீர் நாமமாகிய 'சிவன்' பரம உண்மையாகும். ... vii 29.

ஓ கிரீசனே! பிரபஞ்சத்தை ஆள்கின்ற பிரம விஷ்ணு இந்திரராலும் தேவரீர் பரப்பிரகாசம் அடையமுடியாது. vii. 31.

குறிப்பு:—ஜீவபோத மிருக்கிற வரையில் எத்தகையரும் முதல்வனை யடைவது துல்லபமாம்.

தமிழ்வேதம்.

மூவருமுப்பத்து மூவருமற்றொழிந்த
தேவருங்காணாச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தேவந் திழிந்தவார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே யின்பமிகும். என்ற ஆளுடைய வடிமையருட்டிருவாக்காற் காண்க.

ஓ மஹாதேவனே! இதற்குமேல் எங்களுக்கு ஒன்றும் தெரியாது. தேவரீருடைய காரியங்கள் எங்களுக்கு விளங்குவதில்லை. தேவரீரைப்போல உருவெடுத்திருப்பது உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு. vii. 35.

பிரசித்தமான விஷத்தைச் சிவபிரான் விழுங்கிய அற்புதத்தைக் கேட்டவுடன் பிரமன், விஷ்ணு, பார்வதி, பிரஜாபதி துதித்தார்கள். vii. 45.

கஸ்யபருடைய மனைவி மகப்பேறுக்காகபயோவிரதம் அநுஷ்டித்தாள். மற்ற துதிகளோடு சிவபிரானை "சிவனே போற்றி, ருத்ராபோற்றி, சக்திசமேதனே போற்றி (அல்லது முருகனுடையாய்போற்றி) எல்லாவித்தைகளின் தலைமை நாயகாபோற்றி, எல்லா ஆன்மாக்களின் அரசேபோற்றி" என்று துதிக்கின்றாள். Xvi, 32.

விஷ்ணு அவதாரமான வாமன மூர்த்தியாகிய சிறுவனது உபநயனசடங்கு காலத்தில் கற்பு உருவாம் அம்பிகையாகிய உமா தேவியார் முதற்பிச்சையை இட்டார். Xviii. 17.

## ஒன்பதாம் அத்தியாயம்.

கங்கையைப்பார்த்துப் பகீரதர் கூறுகிறார்:—எல்லா ஆன்மாக் களுக்கும் பரமன்மாவும் வேஷ்டியிலுள்ள நூலைப்போலப் பிரபஞ்சமானது தன்னகத்தேசிக்கிக்கொண்டிருக்கும் ருத்ரமூர்த்தியே உன் ஓட்டத்தின் வேகத்தைத்தாங்குவார். ix. 7.

## பத்தாம் அத்தியாயம்.

காத்யாயனி விரதத்தைக் கோபிகாஸ்திரீகள் அனுஷ்டித்தார்கள். மணலுரு ஒன்று தங்கள் முன் அமைத்துச் சந்தனமாதிகளால் பார்வதி தேவியைப் பூஜைசெய்தார்கள். இம்மந்திரந்தால் பார்வதிதேவியை உபாசித்தார்கள்: "ஓ காத்யாயனி, ஓ மகாமாயை, மஹாயோகினி, ஆதீஸ்வரி, நந்தகோபருடைய மகன் எங்களுக்கு புருஷனாக வரமளி" xxii, 1, to, 4.

குறிப்பு:—வடமதுரையிலிருந்தார் யாவருக்கும் குடும்பதெய்வம் அம்பிகையேயாம்.

ஸ்ரீகண்ணன் கோபிகாஸ்திரீகளிடம் செய்த விளையாடல்கள் எவ்விதமாகப் ஒழுக்கத்துக்குப் பொருந்துமென்று பரீக்ஷித் சுகரைக்கேட்கிறார். (அதற்குச்) சுகர் இவ்விதமாகப்பதில் கூறுகிறார். பெரியோர்களுடைய செய்கைகளைச் சாதாரண அளவைகளைக் கொண்டு அளக்கக்கூடாது. பிரசித்தமான விஷத்தை ருத்ரமூர்த்தி உண்டனர். அதுபோலவே நாமும் செய்யலாமா? xxxiii 31

குறிப்பு:—கிருஷ்ணமூர்த்தியின் லீலைகள் யாவும் நாடகமாத்திரையேயாம்.

ஒருகாலத்தில் கோபிகாஸ்திரீகள் 'அம்பிகைவனம்' எனும் ஸ்தலத்திற்குச் சென்று தங்கள் குலதேவதையாகிய சர்வவியாபகராகிய பசுபதியையும் அம்பிகையும் பூஜித்தார்கள். xxxiv, 1.

ருக்மணி கிருஷ்ணமூர்த்திக்கு எழுதுங்கடிதத்தில் விவாகத்திற்கு முன்னாள் குலதெய்வமாகிய கிரிஜையைப் பூஜித்தல் என்னும் வழக்கம் (சம்பிரதாயத்தைக்) குறிக்கிறது. lii, 40,



உள்ளபடி நடந்தகிரிஜன் பூஜையை விவரமாகக் கூறியிருக்கிறது, lii, 25, 44, to 46.

பலியின் மூத்தபிள்ளையான பாணு (சூரன்) பெரிய சிவபக்தன், lxiv, 3.

குறிப்பு:—இச்சிவபத்தனைக் கிருஷ்ணமூர்த்திவென்றதென்னையோவெனின், பாணன் சிவபெருமானிடத்தில் வரம்பெற்றும் அசுரவிபரீத புத்தியால் அவரையே யெதிர்த்தபோது, தாம்கொடுத்தருளியவரங்களைத்தாமே யொழிப்பது பிரபுத்வஹானியெனக்கொண்டு தனது வேறொரு சிவபத்தராகிய கிருஷ்ணமூர்த்தியினால் அபகருஷம் வரச்செய்தனர்.

பலராமர் யாத்திரையில் மற்ற ஸ்தலங்களோடு இவைகளையுந்தரிசித்ததாகக்கூறியிருக்கின்றது: ஸ்கந்த (கிரி), ஸ்ரீசைலம், காஞ்சி, (நந்திதுர்க்கம் எனும்) வ்ருஷபத்ரி, தென்மதுரை, சேது, கன்னியாகுமரி, எஞ்ஞான்றும் துஜாதியின் ஆன்மஞானம் இன்றும் விளங்குகிற கோகர்ணமும் ஆம், lxx 11 to 19.

## பதினோராவது அத்தியாயம்.

கிருஷ்ணமூர்த்தி உத்தவரைநோக்கி "வில்லாளருள் திரிபுராந்தகன் யான்."

(பகவத்கீதையில் "வில்லாளருள் ஸ்ரீ இராமன் யான்") vii 20

## பன்னிரண்டாம் அத்தியாயம்.

ருத்ரமூர்த்தியை மார்க்கண்டேயர் சந்தித்தபோது ருத்ரமூர்த்தியானவர் பிரம, விஷ்ணு, ருத்ரன் ஆகியமும்மூர்த்திகளை வித்தியாசமாய் நோக்காதே என்று போதித்ததாகக்கூறியிருக்கிறது. x. 21.

சர்க்கம் என்னும் பெயருள்ள விஷ்ணுவின் அம்பு (சம்ஹரிப்பதற்கு ருத்ர அம்சமாகிய) கலா எனும் பெயர் பெற்றது. xi 15

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தர முதலியார்.

(மணவழகு)

# சித்தாந்தமகா சமாஜத்தினால் விளைந்த பயனும் விளையப்போம் பயனும்.

---

தாயுமானசுவாமிகள்.

காடுங்கரையு மனக்குரங்கு கால்விட்டோட வதன்பிறகே
ஓடுந்தொழிலாற் பயனுளதோ வொன்றாய்ப் பலவா யுயிர்க்குயிராய்
ஆடுங்கருணைப் பரஞ்சோதி யருளைப்பெறுதற் கன்புநிலை [ராய்
தேடும்பருவமிது கண்டீர் சேரவாரும் ஜெகத்தீரே.

உலகின்மாக்கள் இடைவிடாது இல்லற இன்பத்தினும், பொருள் தேடலினும், பெருமையீட்டலினும், உயர்வடைதலினும் பட்டங்கள் பெறுதலினும் இன்னும் உலகிற்பயனை விரும்பிப் பற்பல முயற்சிகளினும் உழன்றுகொண்டிருக்கின்றனர். இம்முயற்சிகளிலுள்ள அலுவல்களாலும், அவற்றிலுண்டாம் குறைவு மேன்மைகளாலும், உடலிலுண்டாம் நோய், நோயின்மைகளாலும், தங்கள் அன்னை, தந்தை, மனைவி, மக்கள், உடன்பிறந்தார், சுற்றத்தார்களின் மகிழ்ச்சி, வருத்தம், நோய், சாவுகளாலும், மகிழ்ச்சியுந் துயருமடைகின்றனர். அடைந்ததைச் சிறிதாகவும், அடையாததைப் பெரிதாகவும் எண்ணி மென்மேலுயர்ந்த பொருள்களை விரும்பிக் கவன்று முயன்று வாழ்நாளைச் செலவிடுகின்றனர். தன்னுடலும், வலியும், இளமையும், அழகும், ஆயுளும், கல்வியும், செருக்கும், பொருளும், மேன்மையும், செல்வாக்கும், அதிகாரமும் நிலைத்திருக்கா நீர்க்குமிழிபோற்றோன்றி நின்றழிகின்றன. இப்பிறப்பிலடையும் இன்பம் மிகச்சிறியது. துன்பம் பற்பலவாகையாற் பல. இவற்றிற்குமாறாய், அழியாத இன்பமொன்றுளதா? அதை யெவ்வாறடைவது? அவ்வின்பந்தரும் பெரும்பொருளெது? அது எத்தன்மையது? அதனருள் பெறுவதெவ்வாறு என்று கருதியுணர்வார் மிகச்சிலர்.

இக்காலம் ஆசியாமுதலிய ஐம்பகுப்புகளிலுள்ள நாடுகளிலெல்லாம் உலகச் சீர்த்தேற்றத்திலாசை மிகுந்து கைத்தொழில்



வழிகளையும்செட்டுத் தொழில்களையும் பெருக்கி உலகமேம்பாட்டிலொருவரையொருவர் மேற்கொள்ளப் போட்டியிடவும், தன்னுரிமையை (சுவாதீனம்) நாட்டவும் செய்யும் முயற்சிகளில் மூழ்கியிருக்கின்றனர்.

ஆதலால் உலகிற் பெரும்பகுதி இம்மைக்காரியக் கடலில் மூழ்கி மறுமையை மறந்திருக்கின்றது. இவ்வாறு இம்மைச்செயலில் மூழ்கியுள்ளாரைக் கரையேற்றக்கருதி யெல்லாம்வல்ல கடவுள் இந்தச் சித்தாந்த மகாசமாஜத்தை நமக்கருளினார். இதுகாறும் 7 ஆண்டுகளாகச் சிதம்பரமுதல் காஞ்சீபுரம் ஈறாக 6 தலைநகர்களில் கூடியது. 8 வது பேரவை இப்பொழுது வேலூரிற் கூடியிருக்கின்றது. சில உறுப்பினரோடு துவக்கப்பெற்று இப்பொழுது 1500 உறுப்பினரை உடைத்தாயிருக்கிறது. ஒவ்வொரு பேரவையிலும் தெய்வபக்தி, சைவநெறி, நல்லொழுக்கங்கள் பற்றிய பிரசங்கங்கள் பலநடந்திருக்கின்றன. 10000 கணக்கான துண்டுத் தாள்கள் மூலமாய்ச் சிவநெறியின் துணிவுகள் எங்கும் பரப்பப்பட்டன. திருமறைத்திருவன் ஜே. எம். நல்லசாமி பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் சித்தாந்த தீபிகை யென்ற புதினத்தாள் நடத்தியும், மெய்கண்ட சாத்திரத்தில் சிவஞானபோதம், சிவஞான சித்தியார், திருவருட்பயன் என்ற நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பரப்பியும் [illegible] சித்தாந்தக் கருத்தை புணர்ச்சி செய்தனர் உற்றுநோக்குமிடத்து மேற்குறித்த நூல்கள் ஆங்கிலத்தில் வெளிப்பட்ட பின்னர்த்தான் பிறநாடுகளில் எல்லாக்கொள்கைகளைப்படியொழுங்கில் வைத்து உண்மை ஞானமுணர்த்தும் உயிர் தனிப்பொது நெறியாகி சித்தாந்தம் இந்தியாவிலுள்ள தெனப்பிற நாடுகளும் உணரத்தொடங்கின. அவற்றுள் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மன், பிரான்சு ஹங்கேரியா முதலிய இடங்களில் சித்தாந்தம் நன்குணர்வாரு முளராயினர். தமிழ் நாடு முழுவதும் சித்தாந்த மகா சமாஜத்தின் புதினத்தாளாகிய "சித்தாந்தம்" உலாவிச் சித்தாந்தத்தைக் கற்பித்துப்பரப்பி வருகின்றது இச்சமாஜம் பேரவைகளுக்கு ஏறக்குறைய 300 உறுப்பினரும் ஆயிரக்கணக்கான கேள்வியாளரும் கூடிச் சித்தாந்தப்பிரசங்கங்களைக் கேட்டு அவரவர் ஊருக்குத்திரும்பிச்சென்று

பல ஆயிரம் பெயருக்குச் சொல்லிச் சித்தாந்தக் கருத்தைப் பரப்புகின்றனர். இச்சமாஜம் துவங்கியபின்னர் அதற்குவந்து பிரசங்கங்கேட்போர் பலருக்கு அவ்வவர் ஊரில் அவை கூட்டி ஆண்டுதோறும் பேரவை கூட்டவேண்டுமென்ற ஆசையுண்டாயது. அதனாற்பற்பல விடங்களில் கழகங்கள் தோன்றியதுமன்றி ஆண்டுதோறும் பேரவைகளும் கூட்டப் பட்டுவருகின்றன. சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த நூல்களை முன்னினும் மிகப்படித்து வருகின்றனர். உதாரணமாக 20 லக்ஷம் ஜனங்களுள்ள திருநெல்வேலிஜில்லா இவ்விராஜதானியில் சிவபூஜைசெய்வோர் எண் மிக்குடையதாயிருந்தும், சித்தாந்தநூல் படிப்போர் 10 ஆண்டுகட்கு முன்னர் 20 பெயருக்கு மேலில்லாமலிருந்தது. 10 ஆண்டுகட்குப் பின்னர் சித்தாந்தநூல் படிப்போர் மிகுந்து இப்பொழுது 200 பெயருக்குமேல் சிவஞானசித்தியார் படித்தோரிருக்கின்றனர். சித்தாந்த நூல்களிற் சிறிது படித்தோர் 1000க்கு மேலிருக்கின்றனர். சித்தாந்தப்பிரசங்கங்கள் கேட்க விருப்புடையோர் 10000க்கு மேலிருக்கின்றனர். இவ்வணமே இவ்விராஜதானிமுழுதிலும் சித்தாந்த உணர்ச்சியோங்கி வளர்கின்றது. மாட்சி தங்கிய டாக்டர், ஜி. யு. போப்பையர் ஆங்கிலத்து மொழிபெயர்த்த திருக்குறள், திருவாசகம் என்ற நூல்களும் புறநாடுகளில் துணைசெய்தன.

இவ்வாறு இம்மையின்காரியக் கடலில் மூழ்கியிருந்த மாக்களில் பெரும்பாலும் தமிழ் நாட்டினர். சித்தாந்த சமாஜமாகிய மிதப்புக் கட்டைபற்றி வெளிப்போந்து சித்தாந்த உண்மைகளைக் கண்டு உலகிற் பொருள்களும் உடலும் மனைவி முதலியரும் சுற்றத்தாரும் மேன்மையும் அழியுந்தன்மையன, துன்பந்தருவன. சிவபொன்றே நிலைபொருள் என்று தெளிந்து அவ்வாராய்ச்சியிற் புகுந்து அதனாலடைந்த மெய்ஞ்ஞானப்புணை கொண்டு வீடுபேறாகிய கரைசேரமுயலவும் பருவமடைந்திருக்கின்றனர். இதோ அன்பர் கூட்டத்திணங்கிப் பரமனைப்பாடி மகிழ்கின்றனர். இவைகளே சித்தாந்த மகா சமாஜத்தால் விளைந்தபயன்.

இனி இவ்வாறடைந்த சிவஞானமுற்றி மெய்யாசிரியனையடைந்து ஒரு மொழியுரைக்கப்பெற்றுச் சிவயோகம் பயின்று



நிலைத்துச் சிவசாக்ஷாத்காரமடைந்துப்பதி பெறுவர். புறச்சமயத்தவரும் உயிர்தனிப்பொது நெறியாகிய சைவத்தின் கருத்தை யுணர்ந்து சமரசபாவமெய்துவர். அமெரிக்கா முதலிய புறநாட்டாரும் சைவத்தின் உண்மையையறிந்து கைப்பற்றுவர். இதுவே மகாசமாஜத்தால் விளையப்போம் பயன்.

ஆதலால் தமிழ் நாட்டிலுள்ள சைவசமயிகளே! இனியேனும் வீண்காலம் போக்காது சித்தாந்த ஆராய்ச்சியில் முற்படுமின். ஏனையரையும் அவ்வழியில்செல்லுமாறு தூண்டி நற்பயனடைமின் இதுவே என் வேண்டுகை.

நம்மனைவரையும் இச்சமாஜத்தையும் எல்லாம் வல்ல நம்பிறைசூடி இறை அருள் சுரந்து காப்பாராக.

வி. சிவஞானயோகி,

கோவில்பட்டி.

# சிவத்தைப்பேணிற்றவத்திற் கழகு.

சிவநேசச் செல்வர்காள்! சிவத்தைப்பேணில் தவத்திற்கழகு என்பதைப்பற்றி யடியேன் பேசத்தொடங்குவதை விருப்புடன் கேட்டருள்வீராக.

சிவம் என்பதைக் கல்வி கேள்விகளால் நிரம்பியவான்றோர் பதிபசுபாசங்களோடு கூட்டி யெண்ணுகின்றனர். ஆயினும் அவற்றில் பதியென்பது பசு பாசங்களிரண்டற்கும் மேம்பட்டதாம். எங்ஙனமெனில் அநாதியாகிய வேதங்களும் நாதத்தத்துவமும் நாத தத்துவத்தின் அந்தமும் குற்றமற்ற அறிவும் அறியாத அறிவுருவாகி, முதல் நடுவிறுதிகளைக்கடந்த அறிவற்ற ஆனந்த வுருவமான அறிவாகிப் பந்தத்தை நீக்கின பரஞ்சோதியாகிக், குறியுங்குணமும ஒப்பற்ற வுருவமுமொழிந்து எங்கணும் பரவியிருக்கின்ற பரமசிவமாகி, அறிவுக்கு முற்பட்டதாகி பஞ்சகிருத்தியங்கட்கும் அப்பாற்பட்டதாகி மனமுதலியவற்றிற்கும் எட்டாத வுருவமாகுந் தனது அருளினால் ஐவகையாகிற வுருவத்தையுடைய மோனவின்பமாகி யெல்லாவுயிர்களுக்கும் ஆதாரமாக விருக்கின்ற வொப்பற்ற பொருளாகி, போதலும் வருதலும் நிலைத்திருத்தலும் எதுவுமில்லாத கதியாகித் தனக்கு முற்பட்ட பிறப்பிடமின்றி நின்ற பிறப்பிடமாகிவடிவின்றி நின்ற அருள்வடிவாகி முக்காரணங்களாகவுண்டாகா நின்ற இச்சை யறிவுதொழில் என்பவற்றால் ஒடுக்கம் அநுபவம் அதிகாரமென்று முப்பொருளாகி, யொன்றான உருவமும் அருவமும் உருவருவமும் ஆகிய பக்குவங்கள் பலவுமாகி, அந்தகாரரூபமாகிய மலங்களுள்ளே மோகத்தை யடைகின்ற பல சீவர்களுக்கும் முத்தியைக் கொடுக்கும் பொருட்டு மலபரிபாகமுண்டாகும்படி அவர்களைக் கடைக்கண்ணால் நோக்கிச் சரீரமெடுக்கக்கொடுத்த அறிவுருவங்களைப்பற்றின விந்துமோகினி மான் என்கிற தத்துவங்களோடு கட்டுண்ணக் கட்டுவித்தும் மந்திரமுதலாகிய ஆறு அத்துவாக்களையும் உலகத்திலுள்ள வழிகளையும் முன்



ளே சொல்லத் தகுந்த கட்டில் சேர்வித்து மாறி மாறி வருகின்ற நால்வகைத் தோற்றத்தினையுடைய எழுவகை பிறப்பினுள் எண்பத்து நான்கு இலட்சம் ஜீவராசிகளுள் நீங்குதற்கரிய கன்மங்களுக் கேற்ற காற்றாடியுஞ் சகடக்காலும் போலப் பிறந் திழலும்படி. மறைந்து வெவ்விய நரகம் சுவர்க்கம் முதலிய மோகங்களெல்லாவற்றையும் நுகர்வித்துப் பருவத்தினால் நன்மையாகிய காரணஞ் சிறிதுண்டாகவும் தருக்கஞ் செய்தற்குரிய பழைய நூல்களையுடைய பரசமயங்கள் நேராம அவ்வச்சமய நூலையே நல்ல நூலென் றுரைக்கொள்ளும் வண்ணம் ஆராய்ந்து நிலை பெறுவித்து முதனூல்களுட் சொல்லப்பட்ட விரதமுதலான பல மெய்த்தவத்தினது உண்மையோடு சரியை கிரியை யோகங்களையடைவித்து அவைவாயிலாகத் திருவருள் பெருகாநின்ற சாலோக சாமீப சாரூபங்களையும் நுகர்வித்து அவற்றினுள்ள மோகத்தை நீக்கி நான்குவகையாகிய சத்திநிபாதத்தைக் கொடுக்கும் பொருட்டு இருவினைகளும் ஒத்துவருங் காலத்துள்ள வாசப்பந்தமலத்தின் மலபரிபாகம் வருஞ்சமயத்தில் நெடுங்காலம் மலபந்தத்தில் பிணிப்புண்டுழலுதலை நோக்கி யருளிக்கொடாமல் அறிவினுக்கறிவாகி அந்த அறிவினுக்கும் எட்டாத நெறியில் பொருந்திய நிலையில் நின்றும் நீங்கிவேறுபடாத அருளை திருமேனியாகக்கொண்டு பூமியில் குருவாக வெழுந்தருளித் திருநோக்கால் பழவினையை நீக்கி யறுத்தெட்டுடலும் எழு நிலங்களும் ஆறு அத்துவாக்களுமொழிய ஆணவமலமாகிய படலத்தை யறுத்து அறிவினாற் காண்டற்கரிய மெய்ஞ்ஞானக் கண்ணைக்காட்டிப் பொருந்திய பதிஞானத்தால் பதிப்பொருளையும் பசுப்பொருளையுங்காட்டி யழியாமல் எங்கும் நிறைந்த பேரின்பமாகிய எவ்விடத்திலும் நீங்குதலின்றி நிறைந்த நிலையையுங் காட்டிப்போதலும் வருதலும் நினைத்தலும் மறத்தலும் பகலுமிரவுமாகிய இவற்றைக்கடந்து அழியாத வின்பத்தை யடைவித்துக் கன்மமலமுடையார்க்கு மலர்க்கரம் போன்ற சங்கள் மூன்றும் நீண்டசடையும் வலியமழுப்படையும் மான் கன்றும் பகைவரைக் கோபிக்கின்ற மாலிடையின்மீது மின்கொடியையிடப் பக்கத்தில் பொருந்தின ஒரு பவளமலையானது வெள்ளிமலையின் ஊர்ந்துவந்தாற் போன்ற திருமேனியுருவுகொண்டு முதிர்ந்த கன்மமலக்கட்டைச் சோதித்

துக் கிருபைக் கண்ணால் நோக்கியுள்ளே நிலைபெற்று ஒருமலத்தை யுடையவர்களுக்கு இன்பத்தைத் தந்து பெருகி யெழாநின்ற மூன்று அவஸ்தைகளையுங் கழலச்செய்து பெரிய மேலானமுத்தியையடையச்செய்து காணவருகின்றயான் எனது என்றுசொல்லப்படுவன அற்றவிடமே திருவடியாகவும் ஞானமே திருவுருவாகவும் இச்சையுங் கிரியையு ஞானமுமே கண்களாகவும் அருளே செங்கைமலராகவும் பூமியே சந்நிதியாகவுங்கொண்டு நிலைபெற்றிருக்கின்ற ஒப்பற்ற சோதியே யெல்லாவுயிர்களுள்ளும் வேற்றுமையில்லாமல் நின்ற பரமசிவமேயாம். இப்பரமசிவமே மேற்காட்டிய சிவமென்னுந் திருநாமத்தை யமைந்ததெனக் கூறற்பாலதாமென்றுகொள்க. இத்தகைய மேம்பாட்டினையுடைய சிவத்தைப் பேணுதலே ஏற்றமுடைத்தாமாதலின் "சிவத்தைப்பேணி யென்று பேசியதுமென்க".

அன்றியும் இதனைத் தமிழ்வேதம் பாடிய (திருநாவுக்கரசு சுவாமிகள்) "அங்கத்தை மண்ணுக்காக்கியார்வத்தை யுனக்கே தந்து என்று:— திருவாய்மலர்ந்தருளியவற்றாலுமுணரத்தக்கதாம். இனித்தவமானது இம்மை மறுமையின்பங்களையும் பயக்குவிக்கும் தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் பதவிகளையும் அடைவிக்கச் செய்யும். திரிமூர்த்திகளாகவுஞ் செய்விக்கும் தவமே தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுந்தெரிவிப்பிக்கும். தவமே யொப்புயர்வில்லாத சிவகதியைப்பெறுவிக்கும். தவமே சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களையுங் கொடுப்பிக்கும். ஆகையால் இத்தகைய தவத்தைப்புரிய ஆவல்கொண்டோர் சிவபெருமான் எழுந்தருளியிராநின்ற விழுமிதாகிய தலங்களிலே சிவபெருமானையே நோக்கிச்செய்யின் சிறப்பினையுடைத்தாம். ஆகவே நம் ஔவைப்பிராட்டியாரும் சிவத்தைப்பேணிற்றவத்திற் கழகெனத் திருவாய் மலர்ந்தருளினரென்க.

ஆ. கமலநாதமுதலியார்.

---

# கல்வி.

"கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி"
(கல்வியைக் கல்கற்றபடி நில்.)

குஞ்சியழகுங்கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு.

இளமைப் பருவத்தில் கல்வியைக்கற்கவேண்டும். கல்வியைக் கற்க சோம்பலுற்றவன் தரித்திரத்தையடைவான்.

கல்வியால் நல்லறிவு மிகும், அது பெரியோர்கள் சென்ற நல்லொழுக்கத்தில் புத்தியைச் செலுத்தும்.

கணிதநூலும், இலக்கணநூலும், மனிதருக்குக் கண்களென்று சொல்லத்தக்கவைகளாம். ஆதலால், கற்றவர்கள் கண்ணுடையவர்களென்றும் கல்லாதவர்கள் குருடர்களென்றும் சொல்லப்படுவார்கள்.

இக்கருத்து நோக்கியே நமது தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய செய்யுளால் விளக்குவாம்

"கண்ணுடையரென்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்" என்றும் வற்புறுத்தியிருக்கின்றனர்கள்.

நன்றாய் வாசித்தறிந்தவர்களை யாவரும் வணங்கி யுபசரிப்பார்கள்; ஆதலால் கல்வியினிடத்து இடைவிடாது சிந்தைவைத்துக் கற்கவேண்டும்.

மணற்கேணி தோண்டுமளவும் நன்னீர்சுரப்பது போலக் கல்வியைக் கற்குமளவும் நல்லறிவு மிகும்.

மிகுந்தூரத்திலிருக்கும் அன்னியதேசத்திற்கூட ஸ்வதேசத்திற்போல வுபசரிக்கப் படுவதற்குங் கல்வியே காரணமாதலால் அதை ஒருபொழுதும் விடாது பயிற்சிசெய்து வரவேண்டும்.

இம்மையிற் கற்ற கல்வி எழுபிறப்பினுந் துணையாமென்று பெரியோர் கூறுவாராதலால், கல்விப்பயிற்சியினிடத்துச் சோம்பலையகற்றிக் கற்கவேண்டும்.

கற்றகல்வியினாலே யுண்டாகிய பிரயோசனங் கற்றவர்க்கு மாத்திரமன்று, அவர்களை யடுத்த மற்றவர்க்கு முண்டாகும்.

பிறருக்குப் போதிக்கின்றவர்களது கல்வி திநேதிநே வளர்ந்தேறுமென்பதற்கு ப்பிரமாணாந்தரம் வேண்டுவதில்லை.

சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கின்ற விதியையும் விலக்கையும் அறிந்து நடக்கின்ற பெரியோர்களுக்குத் தொண்டுசெய்து நடப்பதே வித்தியார்த்தியின் கடமையாம். அறிவுடையவர்களினது ஸபையிற்செல்லுங் கல்வித்திறத்தோர்க் கழகாம்.

சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கின்ற முடிவான பொருளின்னதென்று அறிவதற்கு அதிக கேள்வியும் அறிவும்வேண்டுமாயினும் அதற்குக் கல்வியே காரணமாதலால் அதைக்கற்கவேண்டும்.

சாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றிலுள்ள பொருள்களைப் பகுத்தறிந்து பிறருக்குபயோகப் படுத்துவதனால் நன்மையுண்டாகும்.

கல்வியை கற்றும் அறிவு விளங்காதாயின் கற்றதனாற் பயனில்லை. ஆதலால், அறிவோடு கல்விகற்கவேண்டும்.

அறிவுடையவர்கள் கற்ற கல்வியின் உண்மை விருத்தி சந்திரன்போல் வளர்ந்தேறும். ஆதலால், அவர்களிடத்து எப்போதும் பழகுதலால் வித்யார்த்திகளுக்கு மிகுந்த நன்மையுண்டாகும்.

நன்மார்க்கத்தையடைய விரும்புகின்றவர்கள், பலநூல்களை ஓதி யுணரவேண்டும், அதனால் மனதிலுள்ள பற்றுநீங்கும். கல்விப்பொருளையறிந்த அறிவுடையவர்களுடைய வரவுக்கு யாவரும் எதிர் பார்ப்பார்கள். மற்றவர்களையோ வென்றால், அப்படி நோக்காராதலின், கல்விப்பொருளே யெல்லாவற்றிலுஞ் சிறந்த தென்றறியவேண்டும்.

இலக்கணநூலை யறியாதவர்களோடு பழகவேண்டாமென்று பெரியோருரைத்தது சரியே யென்று நம்பவேண்டும்.

இலக்கணநூலையறிந்து மறியாதவனைப் போல நடப்பவன் ஸ்நேகம் செய்யலாகாதென்பதும் அப்படியே.



கல்வியைக் கல்லாத அறிவீனர்களுடைய கூட்டத்திற் கலந்து சேர்ந்தால் பல தீமையுமுண்டாகுமென்றறிய வேண்டும். பொய், களவு, முதலான தீயவைகள் நம்மைச் சேராமலிருக்கும்படி முன்னதாக ஸஜ்ஜன மந்திரி போலிருந்து எச்சரிக்கை செய்கின்றது கல்வியாதலால், அதை விரும்பிக்கற்கவேண்டும்.

கல்வியை நன்றாய்க் கற்ற புத்திமானுக்கு அதை யடுத்தோழமை வேறு வேண்டுவதில்லை யென்று பெரியோருரைத்திருக்கின்றார்கள்.

தீபம் இருளைத் துலக்குவதுபோலக் கல்வியாகிய தீபம் மனிதர்களுடைய தெரியாமையென்னும் இருளைத்துலக்கி நல்லறிவை விளக்கும்.

சூரியன், சந்திரன், சுடர் இம்மூன்று மிருளைத்துலக்குமாயினும் ஒவ்வோர் காலத்திலும் ஒவ்வோரிடத்திலு மாத்திர மப்படிச் செய்யும், கல்வியானது அதனைப்பெற்ற வருக் கெப்போதும் எவ்விடத்திலு மிருளையகற்றி எப்பொருளையும் விளங்கச்செய்யும். ஆதலால் அது கல்விச் சூரியனென்றும், கல்விச்சந்திரனென்றும், கல்விச்சுடரென்றும் சிறந்த பெயர்களைப்பெறும். கல்விப்பொருளிலுஞ் செல்வப்பொருளிலும் கல்விப் பொருளே சிறந்ததாம்; ஏனெனில் செல்வப்பொருள் செலவழிந்துவிடும். அதைக்குறித்து களவுசெய்யப்படும். கொடுக்கப்பட்டால் குறைந்து போகும். கல்விப்பொருளோ வெனில், கொடுக்கக்கொடுக்க மேன்மேலும் விருத்தியாகும், செலவழித்தாலும் பெருகுமேயல்லது குறையாது; களவிற்கும் உரித்தாகாது. ஆதலால், கல்வியைக்கற்றவனுக்கு ஒருக்காலும் குறைவில்லை.

திரவியத்தினிடத்தில் வைத்த ஆசையால் கல்வியாகியதெப்பத்தைக்கைவிட்டால் திரவியமிருந்தும் பயன்படாது, அதையுடையவரும் பெருமையடையார்.

கல்வியினால் நல்லொழுக்கமும், நல்லொழுக்கத்தினால் யோக்கியதையும், யோக்கியதையினாற் பொருளும், பொருளினால் தர்மமும் அதனால் ஸுகமுமுண்டாகுமாதலால், எல்லாநன்மையும் கல்வியே காரணமாக விருக்கின்றது.

ஒரு வித்வான் படிப்பினூற்றமில்லாமல் விளையாடிக்கெட்டுப் போகிற தனது குமாரரைப் பார்த்து "ஐயோ பிள்ளைகளே! நீங்கள் கல்வி கற்கச் சோம்பலுற்றிருக்கிறீர்களாதலால், உங்களுக்கு வயதுவரும்போது கல்விமான்கள் முன் உளையிலழுந்திய கடாப்போல் விழிப்பீர்கள்" என்றான். ஆதலாலிதைக் கருதித்தக்கபடி நடக்கவேண்டும்.

கல்வி கற்றவன் எவ்வளவு தாழ்ந்தவனாயிருந்தாலும், அது அவனை மேம்பாடடையச்செய்யும், ஆதலால் பருவமிருக்கும்போதே வித்தையைக் கற்கவேண்டும். இக்கருத்தை நோக்கியே நமது மூதாபிராட்டியாராகிய ஔவை செய்த சிறியநூலில் "இளமையிற் கல்" என்னும் வாக்கு எழுந்தது. இன்னும் ஒரு செய்யுள் என் சிற்றறிவுக்கு புலப்படுகின்றது.

"எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற்கற்றோரை வருகவென்பர்"
"நாற்பார்குலத்தின் மேற்பாலொருவன்
கற்றிலனாயின் கீழிருப்பவனே"

என்னும் செய்யுட்களால் இனிது விளங்கும். சஸ்திரவித்தை, சாஸ்திரவித்தை இவ்விரண்டினும் சாஸ்திரவித்தையே சிறந்ததாம். ஏனெனில், முற்கூறியது முதுமையில் உபயோகப்படாது, பிற்கூறியது எப்பொழுதும் பெருமைபெறும். கல்விமான்களிடத்தில் நற்குணங்களை விளங்கும், மூர்க்கரிடத்தில் குற்றங்கள் விளங்கும், ஆதலால், ஆயிரம்பெயர் மூர்க்கருக்குள் கல்விமானொருவனிருந்தாலும் அவனே பூஜிக்கப்படுவான்.

எல்லாச் சங்கைகளையும் அறுத்துப் புறப்பொருள் யாவையும் விளக்கும் சாஸ்திரங்களை கண்களெனப்படும். ஆதலால் அக்கண்களில்லாதவன் குருடனெனப்படுவதற்குச் சந்தேகமில்லை.

கல்வி ஆரம்பத்தில் வருத்தமெனுந் துன்பத்தைத் தோற்றுவிக்கும், பின்பு ஸாதிக்கப்படுமாகில் மடமையெனும் அறியாமையை நீக்கி விவேகத்தையுண்டாக்குவதுமன்றி, செல்வத்தையுஞ் சிறப்பையும் பெருகச்செய்யும். எப்படியெனில், பயிர்செய்யுங் குடியானவனுக்கு அது முதலில் கஷ்டத்தையுண்டாக்கிமுடிவில் சௌக்கியத்தைக்கொடுப்பதுபோலே தான்.



இக்கருத்துக்கிணங்க:—

" தொடங்குங் காற்றுன்பமா யின்பம் பயக்கும்
மடங்கொன்றறி வகற்றுங்கல்வி—நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர் இன்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது"

யாவருக்குமழகுண்டாகும் நவரத்தினாபரணங்களுக்கு அழகு செய்யவேண்டுமோ? அப்படியே கல்வியெனும் பூஷணத்தையுடையவனுக்கு வேறு கல்வியானது தாழ்ந்தவனையடைந்திருந்தாலும் அவனைமேம்பாடான ராஜஸமுகத்திற் சேர்க்கும். எப்படியெனின் மகாநதியானது இயல்பாகத்தாழ்ந்தவிடத்தையடையதக்கதாயினும் எளிதிற்சேரக்கூடாத சமுத்திர ராஜனைச் சேர்வதுபோலேதான்.

முதலிற் கல்வியைக் கற்று பின்பு பொருளையீட்ட விரும்பிய புத்திமான் அத்தொழில்களை நடத்துகிற விஷயத்தில் தனக்கு முதுமையும், மரணமுமில்லையென கருதவேண்டும். தர்மம் புரிவதிலோவெனில் அப்போதே கூற்றன் குடுமிகொண்டதாக நினைக்கவேண்டும்.

ஆதலால் கல்வியானது சகல விதத்திலும் முக்ய பிரயோஜனத்தையுண்டாக்குமெனக் கருதி, அக்கல்விச்செல்வத்தைப் பெருக்கி வாழவேண்டும்.

" கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைபுகினுங் கற்கை நன்றே "

S. மெய்கண்ட பிள்ளை.

## சமாச்சாரங்கள்.

பதின்மூன்றாவது குருபூஜை:—வைதிக சைவசித்தாந்த சன்மார்க்கம், ஸ்ரீலஸ்ரீ - சோமசுந்தர நாயகரவர்கள் பதின்மூன்றாவது குருபூஜையானது நிகழும் 1914ஆ பிப்ரவரி மாசம் 28உ சனிவாரம் இரேவதி நட்சத்திரத்தன்று சென்னைச் சூளை இலட்சுமிநாராயண புரத்தில் விஸ்வநாத சுவாமி சந்நிதியில், காலை 6-மணிக்கு மகாபிஷேகமும், 11-மணிக்கு ஆதிசைவர் முதலியோர்கட்கு மாகேச்சுரபூஜையும், 5-மணிக்கு அலங்கார தீபாராதனையும், இரவு 8-மணிக்குமேல் சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம் - பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க, சைவ சித்தாந்த பிரசங்காமிர்தம், பொ கந்தசாமிபிள்ளையவர்களால் சைவப் பிரசங்கமும் நடந்தேறியன.

---

சமரசசன்மார்க்க சாதகசங்கம்:— உத்தரஞானசித்தியென்னும் வடலூரில் கோவல்-ம-ரா-குமாரசாமிபிள்ளையவர்கள் முயற்சியால் சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம் - பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் 1914ஆ பிப்ரவரிமீ 9உ தைபூசத்தன்றும் அடுத்தநாளிலும் அநேக வித்வசிரோமணிகளால் அரிய பெரிய உபந்நியாசங்கள் நடந்தேறின. ஷை முதலியாரவர்கள் இராமலிங்கசுவாமிகள் மீதியற்றிய நிந்தாஸ்துதியும் அரங்கேற்றப்பட்டது.

---

### புத்தகவரவு.

திருத்துடிசைப்புராணம்:—கொங்குநாட்டிலுள்ள துடியலூர் என்னுந்தலத்தினைப்பற்றியொரு வித்வசிரோமணி 700 வருடங்கட்கு முன்னே 516 செய்யுட்களால் சொன்னயம் பொருணயம் தொடைநயங்களுடன் இனிய செந்தமிழ் நடையில்பாடப்பெற்றுள்ளது. இதனுடன் வசனநடை சேர்த்துத் துடிசைகிழார்



அ. சிதம்பரனார் நன்கு அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். தலத்திற்குத் திருப்புகழுளது. கந்தப்புராணத்தும், அவிநாசி புராணத்தும் இத்தலங்குறிப்பிக்கபட்டிருக்கிறது.

---

விபூதிவிளக்கம்:—துடிசைகிழார் - அ. சிதம்பரனார் திரட்டியது. விபூதியைப்பற்றியவரலாற்றினை இப்புத்தகம் செவ்வனே விளக்குவது. பலநாள் பலநூற்களிலும் துருவித்தெரிந்து கொள்ளக்கூடிய சங்கதிகள் பல இந்நூலிலுள்ளன. இந்நூலினை வெளிப்படுத்தியவர்கள் உத்திரமேரூர் சைவசித்தாந்த சபையார்.

---

பண்டிதைபட்டாபிதானமும் பொற்பதக்கப்பரிசும்:-1914ஆ மார்ச்மீ 29உ சென்னைத் தொண்டைமண்டலம் பாடசாலையில், சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம் - பூவை - கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் பண்டிதை - ஸ்ரீமதி-S கிருஷ்ணவேணியம்மாள் அவர்கள் "அன்பின்பயன்" எனவொரு உபந்நியாசஞ்செய்தார்கள். உபந்நியாசமுடிவில், தூத்துக்குடிச்சைவ சித்தாந்த சபையினரால் ஷை அம்மையாருக்குக்கொடுத்த "பண்டிதை" என்னும் பட்டத்தைக்கொண்டாடி அச்சபையார் இராயப்பேட்டைப் பாலசுப்பிரமணியபக்தஜனசபையார் மூலமாகவனுப்பிவைத்த பொற்பதக்கம் அம்மையாருக்குப் பரிசாக அளிக்கப்பட்டது.

---

விருத்தாசலம் சமரசஞான சன்மார்க்கசங்கபக்தசபை:— இச்சபையின் பிரதம வருஷோற்சவம் சிவராத்திரிக்கு முன் இரண்டுநாட்கள் நடைபெற்றது. குமாரதேவர்மடம் ஸ்ரீமத் சிதம்பரசுவாமிகள் அக்கிராசனத்தின் கீழ் திருக்கோவலூர் - குமாரசாமிபிள்ளையவர்களும், மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியாரவர்களும் முதனாள் முறையே சமரசம், ஜீவகாருண்ணியம், இரண்டாநாள் திருவள்ளுவர் சமரசகொள்கை, பக்தியோகம் எனும் விஷயங்களை யாவருமதித்து ஆனந்தமுறும்படி மகோபந்நியாசஞ்செய்தனர்.

OFFICE OF … BOOKS, MADRAS.
2 … 1914

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௫.] 1914-௵ ஏப்ரல், மே௴ [பகுதி ௪. ௫.

## சிவஞானபோதம்.

சிவஞான போதமென்பது நான்குபாதங்களுட் சிறந்த ஞானபாதத்தை விளக்குவான் வந்த ஓர் தமிழ் முதனூலாகற்பாலது,

"வினையினீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்" என்பது தொல்காப்பியம். திருநந்திதேவர்க்குமலைவுதீர்தற்பொருட்டுச் சிவபெருமான் உபதேசித்தருளப்பெற்றதும், கண்ணுவர் முதலோர்க்கு ஞானபாதத்தை விளக்குதற்பொருட்டுத் தட்சிணாமூர்த்தியார் தம்திருக்கரத்தில் தரிக்கப்பெற்றதும், திருப்பெருந்துறையில் குருந்தமரத்தின் கீழ்ச் சிவபெருமான் குருமூர்த்தமாய்வந்து தம் திருக்கரத்தில் தரிக்கப்பெற்றதும், திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டான் அருணந்தியார் முதலோர்க்கு உபதேசித்தருளப்பெற்றதும் இதுவேயாம்.

இந்நூல் அக்காலமுதல் பக்குவப்பட்டார்க்கு மாத்திரம் வழிவழி கிடைத்துப் பயன்தரற்பாலது.

மெய்கண்டார் சாமுசித்தராகலின் மொழிபெயர்த்தருளினாரென்றல் பொருந்தாது. மொழிபெயர்ப்பு, புலவர்தம் செயலாகின்றது.

புலவர்க்குச்சொற்களைநாடும்,சொற்கள் ஞானிகள் வாக்கினை நிம்.

மொழிபெயர்ப்பென்று மெய்கண்டார் யாண்டும் தாம் கூறிற்றிலர். இஃது உய்த்துணரற்பாலது.

தமிழ்ச் சிவஞானபோத சூத்திரப்பொருளையும், வடமொழிச் சிவஞானபோத சூத்திரப்பொருளையும் ஆராயின் மொழிபெயர்ப்பென்றல் கூடாமையாகின்றதென்பர்.

"எந்தை சனற்குமரன் ஏத்தித்தொழ இயல்பான்
நந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
ஏதுதிருட்டாந்தத்தா லின்று"

சனற்குமரன் முதலோர் தமிழ்கற்றவ ராகலானும், திருநந்திதேவர் கட்டளையென்று நூல் தமிழானமையின் திருநந்திதேவரும் தமிழ் கற்றவரென்று புலனாகின்றமையானும், பிறவாற்றானும்.

"நந்தி யுரைத்தருளு ஞானநூல்" என்பதற்குத் தமிழ்ச் சிவஞான போதமென்றும், அதனை மெய்கண்டான் சிந்தைசெய்து வார்த்திகமெனப்படும் உரைச்செய்யுளினும், வெண்பாவாகியபாச் செய்யுளினும் இன்று தாரணியோர் தாமுணர ஏதுதிருட்டாந்தத்தால் தானுரைத்தான் என்றும் பொருள்கொள்ளவேண்டும். தாரணியோர் சிந்தைசெய்து தாமுணர என அன்வயிக்கினும் நன்றே,

சிவஞானபோதத்தின் சூத்திரநடை, தொல்காப்பிய சூத்திர நடையைப் பெரிதும் ஒத்திருக்கின்றமையின் அதுமெய்கண்டார் காலத்துத் தமிழ்நடையாகாது.

வெண்பாவாகிய பாச்செய்யுள் மெய்கண்டார் அருளினாரென்றல் நடையால் துணியலாம். தமிழ்நடை ஒவ்வோர் காலத்து ஒவ்வோர் வகையுளியாக இருந்துகொண்டிருந்தது.

கூறிற்பெருகும்.

இவ்விலக்கணம் எல்லாப் பாஷைக்குமாம்.

திருவெண்ணை நல்லூர்ப்பொல்லாப் பிள்ளையார் மெய்கண்டாருக்குச் சூரணிக்கொத்துரைத்த பரமாசாரியரெனின் சூத்திரம் அவரே யுரைத்தருளினாரென்றும் பொருந்தற்பாலதே, சூத்



திரமில்லாமல் அதன் இயைபாகிய சூரணிக்கொத்து மாத்திரம் எங்ஙனம் உரைத்தல் கூடும்.

காரணமில்லாமல் காரியமுண்டாகுமா?

அது கற்பிக்கு முறைமையுமாகாது, கேட்குமுறையுமாகாது

பொல்லாப்பிள்ளையார் சூரணிக்கொத்து மாத்திரம் உரைத்தருளியது உண்மையாயின் பரஞ்சோதி முனிவர் மெய்கண்டாருக்குக் கொடுத்தருளியது தமிழ்ச் சிவஞானபோதமென்றே கொள்ளவேண்டும்.

என் எனின் சூரணி தமிழாகலின் என்க.

ஈண்டு ஓர் சூழ்ச்சியுளது.

சிவஞானபோத சூத்திரங்களில் பால்காட்டும் விகுதிமுதலியன இருத்தலின் அஃது செந்தமிழ்க்காலத்துண்டாயதென்க. பழந்தமிழ்க்காலத்ததாகாது.

"வேதம் சிவாகமமென இருபகுதிப்பட்டது மூன்றுவருணத்திற்கும் உரிமையாதலும் பற்றி" என நீலகண்டபாடியத்தில் கூறப்பட்டதென்பர்.

நான்கு வருணத்திற்கும் உரிமையாதலும் பற்றி" என்பதை யுணரின், உரைவழக்குடைய தமிழே நான்கு வருணத்தாரும் அறிதல் கூடுமாகலின் முன்னம் ஆகமம் தமிழிலிருந்தமையை விளக்குகின்றது. உரைவழக்கு = பேச்சுவழக்கு.

ஆரியம் நூல்வழக்கென்றே யுடையது.

"ஈறுன கன்னி குமரியே காவிரி"

ஆரியமும் தமிழும் உடனே சொலி"

என்னும் திருமந்திரங்களும் தமிழில் முதனூலுண்மை விளக்கற்பாலன.

இயற்கையாகிய எண்குணங்களையுடைய சிவபெருமான் இயற்கைமொழியாகிய தமிழிலேயே முதல் முதல் வேதம் செய்தருளினன்.

தமிழ் இயற்கை முதன்மொழியென்பது இப்பொழுது அச்சிட்டிருக்கிற மொழிநூலால் நன்கு விளக்கமாகும்.

ஸ்ரீமான் குடிசைகிழார் அ. சிதம்பரமுதலியாரவர்களும் சித்தாந்த பத்திரிகையில் தமிழ்ச் சிவஞானபோதம் முதனூலென்று ஓர்ந்து கூறியது ஞாயவாயிலேயாம்.

ஷை பத்திரிகை தொகுதி உ பகுதி ம-ல் உகஎ-ம் பக்கமும் கண்ணுற்றனம்.

சூரியன் புறவிருளை அகற்றுவதுபோலச் சூரியனாலுண்டாய தமிழ்ச் சிவஞானபோதம் அகவிருளை அகற்றுமென்பது.

சூரியனுக்குக் கலை பன்னிரண்டாகலின் சூத்திரமும் பன்னிரண்டாயின.

ஆண்பாலினை முற்கூறுதல் தமிழ் வழக்காகலின் அவ்வழக்குப்படியே முதற்சூத்திரம் எழுந்தது.

பெண்பாலினை முற்கூறுதல் ஆரியவழக்காகலின் அவ்வழக்குப்படியே அம்முதற்சூத்திரம் எழுந்தது.

"அவனவளதுவென" "ஸ்திரிபுந்நபும்சகம்"

அவ்வழக்கினை முறையே காண்க.

தமிழ்ச் சிவஞானபோதம்—தமிழில் முதனூலாகிய சிவஞானபோதம்.

மாயாவியந்திரதனு. வி-உபசர்க்கம்.

வியாழமென்பது போல.

பசாசம், பண்டை-அரும்பதம்,

பெண்ணை நல்லூர்—வெண்ணை நல்லூர்,

பெண்ணையாற்றங் கரையிலுள்ளதென்பது,

"வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்" (க-தே,)

பகரம் வகரமாகும்,

இவையெல்லாம் மொழிநூலில் விளக்கப்பட்டுள்ளன,

இங்ஙனம்,

பாகறல்-கார்த்திகேய முதலியார்,

கண்டி, சென்னை.

---

# ஈஸ்வரன்.

அக்கிராசனம் வகித்துப் பூஜ்ஜியபாதராய் விளங்கும் மஹா சுவாமிகட்கும் மற்றுமுள்ள அன்பர்கட்கும் பக்திபூர்வக விஞ்ஞாபனம்.

யான் இம்மகா சமாஜத்தின் முன்னர் பேசத்துணிந்த ஈஸ்வர விஷயம் கேவலம் பிரஞ்ஞாவான்களாலும் சிவாநுபூதிச் செல்வர்களாலும் வியவகரிக்கத்தக்கதொன்று அத்தியான்மமும், அதீந்திரியமுமாதலின். அத்துணை அபாரமான அர்த்தத்தை தற்போதங்கொண்டும் சக்தி புத்திக்கேற்ப நூலாராய்ச்சி மாத்திரையில் சித்தித்த ஏகதேச அறிவைக்கொண்டு மொழியப்புகும் ஒருவன் பெற்றி "இறைவனார் கமலபாத மின்றியானியம்பு மாசை நிறையினார் குணத்தோர்க்கெல்லா நகையினை நிறுத்துமன்றே" எனச் சைவவழி நூலாசிரியர் கூறியவாறாகும். ஆயினும் இது ஜிஞ்ஞாசையின்பொருட்டு எழுந்ததோர் முயற்சி ரூபமாதலின் இவ்வர்த்தத்தில் ஏற்கெனவே பிரமாதவசத்தால் புகும் குற்றங்களைந்து குணம் உளதேல் அதைமாத்திரம் குறிக்கொள்வீர்களென திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

ஈண்டெடுத்துக்கொண்ட விஷயம் ஈஸ்வரன். "ஏஷசர்வேஸ்வர: நிருபாதிகமாகிய ஐஸ்வரியமுடையவன் ஈஸ்வரன் எனப்படுவன், "ஈஸ்வரஸ் ஸர்வபூதாநாம்" சேதநாசேதநரூபமாகத் தோற்றப்படும் பூதஜாலங்களியாவற்றிற்கும் நியாமகன் மற்றவைகளை சர்வாவஸ்தைகளிலும் ஆளுபவன். இது ஈஸ்வர சப்தத்தாற் சித்தித்த திரண்டபொருள். ஈண்டு ஈஸ்வரன் என்பது யாதாமொரு காரியகர்த்ரு விசேஷத்தையன்று பரமபதியாகிய பதிபதார்த்தத்தையே குறிக்கும், ஆகலின் சித்தாந்த சம்மதமாய் ஈஸ்வர நிரூபணம் செய்வதற்கு முன்னர் அநீஸ்வர்சாங்கியர் மதம் பற்றி எழுந்த பாதஞ்ஜலராதி ஈஸ்வரவாதிகளின் பிரதிபத்திகளைச் சற்று அநுவதிப்பது உசிதமாகக் காணப்படுகிறது.

சாங்கியர் ஆத்ம சந்நிதானத்தில் ஆன்மாவின் போக மோக்ஷத்தின்பொருட்டுப் பிரகிருதி தொழிற்படுங் காரணத்தால் பிரகிருதியே சகலப்பிரபஞ்சத்தையும் சிருஷ்டிக்கும். ஆதலின் பிரகிருதியே கர்த்தா. வேறொரு கர்த்தா வேண்டுவதில்லை எனக்கூறுவர். இதுவும் சரியன்று.

பாதஞ்சலர் - அசங்கசித்ரூபனாகிய புருஷசந்நிதியில் காந்தச்சிலையின் முன்இரும்பு சேஷ்டிக்குமாறுபோல் வர்த்திக்கும் ஜடப்பிரகிருதிக்கு நியாமகனாகிய ஈஸ்வரன் ஒருவன் உளன். அந்யதா ஜடமாகும் பிரகிருதிக்கு ஜகத்சிருஷ்டியாதிகள் சம்பவியாது. ஆதலின் சுருதியும் " ப்ரதான க்ஷேத்ரக்ஞபதிர் குணேச இதிஸ்ருதி:" சத்வரஜஸ்தமோ குணங்களின் சாம்யாவஸ்தாரூபமாகிய ஜடப்பிரகிருதிக்கும் ஜீவர்களுக்கும் பிரபுவாகியும் மற்றும் முக்குணங்களுக்கு நியாமகனாகியும் ஓரொரு ஈஸ்வரன் உளன் எனக்கூறும். இத்துடன் நில்லாது அந்தர்யாமிப் பிராஹ்மணத்தில் மிகவும் உல்லாசத்தோடும் சர்வாந்தர்யாமியாகிய ஈஸ்வரப் பிரதிபாதனஞ்செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அவித்தை, அஸ்மிதை, அராகம், த்வேஷம், அபிநிவேசங்களுடனேயும் புண்ணியபாபமிஸ்ர கர்மங்களுடனேயும், அக்கர்மபல விசேஷங்களாகிய மனுஷ்யாதி ஜாதி அதற்குத்தக்க ஆயுர்போகங்களுடனேயும் அவைகளின் சம்ஸ்காரங்கள் என்றால் பாவனைகளுடனேயும் பற்றுதலில்லா புருஷஸ்ரேஷ்டனே ஈஸ்வரன் என்றும் அவ்வீஸ்வரன் ஜீவனைப்போல் அசங்கசித்ரூபன் என்றும் பதஞ்சலிகூறிய யோக சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின் ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் கிலேசாதி கர்மசாகித்திய ராசித்தியமே விசேஷம் என பாதஞ்ஜலமதத்தால் அறியவேண்டியது. இவர் மதமுஞ்சரியன்று. என்னை அசங்கனாகிய ஈஸ்வரனுக்கு நியாமகத்துவம் ஒவ்வாதென திரஸ்கரித்து ஞானம், பிரயத்தனம், இச்சை ஆகிய இம்மூன்று குணங்கள் ஈஸ்வரனுக்கு நித்தியங்கள் மற்றும் சங்கியாபரிமாணம் பிருதக்த்வம் சம்யோக விபாகமென்கிற விசேஷகுணங்களும் ஈஸ்வரன் மாட்டு தார்க்கிகரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஞானப்பிரயத்தனேச்சைகளென்கிற முக்குணங்களும் ஈஸ்வரனுக்கு நித்தியமாயிருக்குங் காரணத்தால் அவ்வீஸ்வரன் ஜீவனினும் விலக்ஷ



ணன். இதனாலேயே ஈஸ்வரனுக்குப் புருஷவிசேஷத்வம் உண்டாயிருப்பதன்றி வேறொன்றால் அல்ல. ஈஸ்வரனுக்கு ஞானாதி குணங்கள் நித்தியதர்மங்கள் என்பதில் " சத்யகாமஸ் ஸத்ய சங்கல்ப: என்னும் சுருதியே பிரமாணம் எனத்தார்க்கிகர் காட்டுவர்.

இவர் மதமுஞ் சரியன்று. ஏனெனின் அந்தர்யாமியாகிய ஈஸ்வரனுக்கு ஞானம், இச்சைபிரயத்தனம் ஆகிய முக்குணங்களையும் நித்தியங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்ஙனம் நித்தமாயின் சர்வகாலத்திலும் ஜகத்து உற்பத்தியாதல்வேண்டும். ஓர் காலத்திலும் ஜகத்தின் பிரளயம் உண்டாதல்கூடாது அதனால் பிரளயத்தைக்கூறுவதாகிய சாஸ்திரத்திற்கு விரோதம் உண்டாகும். ஆதலின் அந்தர்யாமி ஈஸ்வரன் ஆகான். சமஷ்டிலிங்க சரீரியாகிய ஹிரண்ய கர்ப்பனே ஈஸ்வரன். இவ்விஷயம் உத்கீதம் என்கிற பிராம்ஹணத்தில் அதிவிஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கிறதென ஹிரண்யகர்ப்போபாஸகன் கூறுவன். இதுவுஞ்சரியன்று. ஸ்தூலதேகந்தவிர சூக்ஷ்மதேகம் கட்புலனுக்கு விஷயப்படாத காரணத்தினால் எல்லா சரீரங்களின் அவயவங்களையும் தன்னதாகவுள்ள விராட்புருஷனே ஈஸ்வரனாதக்கோன். அவ்விராட்புருஷனின் உண்மையில் புருஷசூக்தப் பிரமாணம். அப்புருஷசூக்தத்தில் விராட்புருஷன் அநேக சிரசுகள் உள்ளவனாகியும், எங்கும் நேத்திரங்கள் உள்ளவனாகியும், மற்றும் அநேக பாதாதி அவயவங்கள் உள்ளவனென்றும் இந்தப்பிரகாரம் கேட்கப்படுகிறது. ஆகலின் விராட்புருஷனே ஈஸ்வரன் என்று விராட் உபாஸகர் கூறுவர். இப்படியே ஈஸ்வர விஷயகவாதிகள் இன்னும் அநேகர் உளர். அவர்களும் தங்கள் தங்கள் மதஸ்தாபனார்த்தம் அவ்வம்மதசாதக யுக்திகளையும் சுருதி சூத்திரவாக்கியங்களையும் கூட உதகரிப்பர். நிற்க. " வேதாந்தத்தில் பொருள்கொண்டுரைக்கு நூல் சைவமாதலின் வேதாந்திகள் பக்ஷத்தையும் சிறிது விரிப்பாம். பிரம்மத்திற்கு ஜகத்தின் உற்பத்தி ஸ்திதிலயங்களின் காரணத்தன்மை சாக்ஷாத் சுருதிப்பிரமாணத்தானும் வியாசபகவானது சூத்திரத்தானும் பெறப்படும். சுருதி யதோவா இமானிபூதானிஜாயந்தே என்பது எந்தப் பிரமத்தினின்றும் இவ்

வெல்லா பூதங்கள் உண்டாகின்றனவோ உண்டான இவ்வெல்
லா பூதங்கள் எந்தப்பிரம்மத்தால் ஜீவனத்தை யடைகின்றன
வோ நாசத்தையடைந்த இவ்வெல்லா பூதங்கள் எந்தப் பிரம்
மத்தினிடத்து லயபாவத்தை அடைகின்றனவோ (சூத்திரம்) ஜந்
மாத்யஸ்யயத: எ-து. எந்த சர்வஞ்ஞசர்வ சக்தியுடைய காரண
த்தினின்றும் இவ்வாகாய முதலிய பிரபஞ்சத்தின் ஜன்மஸ்திதிலயங்
கள் உண்டாகின்றனவோ அதுவே பிரமம். இதுவே சித்தாந்த
நூலில் " அந்தமாதி என்மனார்புலவர் " என்னும் வாக்கியத்தால்
சிந்திந்த முழுமுதலாகும் பதிப்பொருள். அநாதிமலமுத்தன்
பரமகிருபாளு. அநந்தசக்திபேதன். சத்திகலாசாஹித்தியத்தி
னல் சகளத்துவமும் மாயாகலாராஹித்தியமும் கூறுவர். சிவன்
தன் சொரூப பூதராகிய ஆன்மவர்க்கத்துக்கு மலத்தின் பக்குவா
பக்குவம் பார்த்து முறைமையிற் சிற்றறிவு பேரறிவு விளங்கப்
பண்ணி முறைமையிற் போக மோக்ஷங்களைப் புரியும் நிமித்தம்
தன்சத்தியே ரதிகாரணத்தைக் கொண்டு கிருபாசம் சித்தபஞ்ச
கிருத்தியம் அப்பஞ்சகிருத்தியமாவது. பூமியின்கண்ணே சரீ
ரேந்திரியங்களோடே சனனமரணங்களிற் கூடுதல் பிரிதல், சுவர்
க்க நரகங்களிற் போதல் வருதல் முதற்றொழில்களான் வருந்
தொய்வு தீர்த்தல் சத்திருன்றிய மாயைக்குத் திரும்பச்சாமர்த்திய
முண்டாக்கலுமாம், கன்மபாக நிமித்தமுமாம். இது சங்காரம்.
பிரளயத்திற் அவரவர் கன்மங்கள் முற்றும் மலபரிபாகத்திற்கு
நிமித்தமாய்ப் புசிப்பித்துத் தொலைப்பித்தல். (சிருட்டி) கன்மபல
த்தைப் புசிப்பித்தல். (திதி) மலபாகம் வரும்பொருட்டுக் கன்ம
மலபோக்கியப் பொருள்களிலமிழ்த்துதலாகிய திரோபாவகிருத்திய
மும் தீக்ஷை பண்ணுதலாகிய அனுக்கிரஹ கிருத்தியத்தானும்
திரோபாவ கிருத்தியத்தால் கன்மசத்துவம் வருவித்தல் அனுக்
கிரக கிருத்தியத்தால் மலம்நீங்கிச் சிவத்துவம் வருவித்தல் இந்தப்
பிரகாரமாய்ச் சிவன்கிருத்திய கிருத்தானுயும் தன்மட்டாவது சிவ
சத்திமட்டாவது யாதொரு விகாரமின்றியே சந்நிதி விசேஷத்
தால் சேதனு சேதனப்பிரபஞ்சம் முழுதும் காரியப்படும். ஆதல்
பற்றியே " பவன் பிரம்மாசாரியாகும் பான்மொழி கன்னியாகும்"
என்றனர் வழிநூலாசிரியரும். ஆன்மாக்களுக்கு இவனைப்பெறத்



தக்கபேறினும் வேறு பெரும்பேறில்லை. 'இறைவனடி ஞான
மே ஞானமென்பர்' என்னும் வாக்கியத்தாலும் போதரும்.
இவன் உயிர்க்குயிராய் எல்லாப்பிராணிகளின் இருதயப்பிரதேச
த்தின்கண் கோயில்கொண்டிருக்கும் பெற்றியால் பாசபந்தங்களி
னின்று விடுபட இவனையே வழிபடத்தக்கது. வேறுகதிஇல்லை.
பரதத்துவமும் பரமபிராப்பியஸ்தானமாய் விளங்கலின் கீதாசாரி
யரும்" க்ஷேத்திர க்ஷேத்திரஞ்ஞயோர் ஞானம்யத்தத் ஞானம்மத
ம்ம" ஆதலின் மக்கள்யாக்கையைப் படைத்தாருக்கு இதுவே தவ
நெறி மற்றெல்லாம் அவநெறி. செய்யவேண்டிய வெல்லாம்செ
ய்து முடித்தலும், அடையவேண்டியவெல்லாம் அடைந்ததுமாய
பெரும்பிரயோசனத்துக்கோர் நிலையமானது. "வேண்டுங்கால்
வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்டவரும்"
என்னும் பொய்யாமொழியும் உணர்த்தும்.

ஓம் தத் ஸத்.

ஆ. ஏகாம்பர முதலியார்.

# தமிழ்ச் சிவஞான போத வரலாறு.

வரலாறென்பது வந்தவழி யெனப்படும். ஆகவே தமிழ்ச்சிவஞானபோத வரலாறென்பது தமிழ்ச் சிவஞானபோத நூல் வந்த வழி என்றவாறும்.

வந்தவழியாவது வடமொழி இரௌரவ ஆகமம் பாசவிமோசனப்படலத்திலுள்ள பன்னிரு சூத்திரங்களையும் சிவபெருமான் நந்திதேவருக்கும் நந்தி தேவர் சனற்குமார முனிவருக்கும் அவர் சத்தியஞான தெரிசினிகளுக்கும் அவர் பரஞ்சோதி முனிவருக்கும் அப்பரஞ்சோதி முனிவர் மெய்கண்டதேவருக்கும் உபதேசிக்க அம்மெய்கண்டதேவர் தமிழில் மொழிபெயர்த்து வார்த்திகப் பொழிப்பும் அருளிச்செய்தனர். பொருள் நிச்சயமாகிய சிவஞானத்தை மலவற உணர்த்துங் காரணத்தால் சிவஞானபோத மெனப்பட்டது. நூல்வந்த வரலாறு இவ்வாறாகவும் தற்காலத்தில் சிற்சிலர் தத்தம் அறிவிற்கெட்டியவாறு நூல்வந்தவரலாற்றைப் பற்றி வேறு வேறு சொல்லவும் எழுதவும் முற்பட்டிருக்கின்றனர்.

அவ்வாறெழுதப்பட்டவற்றுள் ஞானசாகரம் பதுமம் மூன்று இதழ் 6ல் 'மெய்கண்டதேவர்' என்னும் தலைப்பின் கீழ் சிவபெருமான் முதற் பரஞ்சோதிமுனிவரீறாக அவர் மாட்டெல்லாம் பன்னிரண்டு உபதேச விஷய உருவாக மாத்திரமிருந்த அச்சிவஞானபோதம் மெய்கண்டவள்ளலாரிடத்து தமிழ்ச் சூத்திரவடிவம்பெற்றுக் கருத்துரை வார்த்திக உரை, உதாரணச் செய்யுள், அதிகரணப்பகுப்பு, சூர்ணிக்கொத்து முதலிய அலங்கார விசேடணமுடைத்தாய் நடைபெறலாயிற் றென்க என்றும், சந்தானாசாரியராதல் அவர்க்குப்பின் அம்மரபில் வந்த சீகாழிச் சிற்றம்பல நாடிகள், தாயுமான சுவாமிகள் முதலியோராதல் மொழிபெயர்ப்பு நூலென்று கூறவில்லை என்றும், வடமொழி மாட்டுத்தரபிமானம் வைத்தார்சிலர் தமக்குத்தோன்றியவாறு மொழிபெயர்ப்பு நூலென்று கூறிய உரை போலி உரையாம் என்றும் காணப்படுகின்றது.



தமிழ்ச் சூத்திரவடிவம் பெற்று என்றதனானே முன்னர் விஷயவுருவாக இருந்தபொழுது தமிழாக இருக்கவில்லை என்று புலனாகின்றது. ஆகவே முன்னர் வடமொழி விஷயவுருவாக இருந்ததை பின்னர்த்தமிழ் சூத்திரவடிவமாக்கினார் என்றாகி மொழிபெயர்ப்பு என்பதையே வலியுறுத்தும். அன்றியும் மணிவாசகப்பெருமானுக்குச் சிவபெருமான் அருட்கோலங்கொண்டு எழுந்தருளுங் காலத்துத்திருக்கரத்திலிருந்தது சிவஞானபோதப்புத்தகமெனவும் சனகாதிகளுக்குபதேசிக்க திருமேனி கொண்டெழுந்தருளிய தெட்சணாமூர்த்தி திருக்கரத்திலிருந்தது சிவஞானபோதப் புத்தகமெனவும் முறையே வாதவூர்ப் புராணத்தில் "பொருந்தமுறும் புத்தக மேதையா" என்று வினவ "பொய்மையிலாச் சிவஞானபோதமென்று" விடையிறுக்கப்பெற்றதனாலும், திருவிளையாடற் புராணத்தில் "செங்கரனன்கும், வேதபுத்தகமும்" என்றதனாலும் விளங்கக் கிடத்தலால் மெய்கண்டதேவருக்கு முன் புத்தகரூபமாக இல்லை, விஷய உருவாய் உபதேசமாத்திரையாகத்தான் இருந்ததென்பது எவ்வாறு பொருந்தும்.

இனி, ஞானசாகரம் பதுமம் 3, இதழ் 5ல் "மாணிக்கவாசகருக்குப் பன்னிரண்டு கூறாய் உபதேசித்தருளிய சிவஞானபோதமென்னும் ஞானசாத்திரத்தை" என காணப்படுகின்றது. சாத்திரம் என்றபோது புத்தகரூபமாய் இல்லா திருக்கமுடியுமா? அன்றியும் மொழிபெயர்ப்பு நூலென்று சிறப்புப்பாயிரத்தினாலேயே நன்கு தெரியக்கிடக்கவும் இல்லை என்றல் எவ்வாறு பொருந்தும். பொருந்ாதென்பதை மற்றொரு கூற்றில் முன்னர்க் கூறுவாம்.

சிவஞான யோகிகள் சந்தான பரம்பரையில் வந்தவர்களல்லவா? அவர்கள் மொழிபெயர்ப்பு நூலென்று கூறியிருப்பவும் வடமொழிமாட்டுத் தரபிமானம் வைத்தார் சிலர் தமக்குத் தோன்றியவாறு மொழிபெயர்ப்பு நூலென்று கூறிய உரைபோலி உரை என்று கூறியதைப்பற்றி என் சொல்வது. நிற்க,

இனி, சித்தாந்தம் தொகுதி 2 பகுதி 4 முதல் பன்னிரண்டுவரை சிவஞானபோத மென்னும் தலைப்பின் கீழ் மிகவிரிவாய்ப்பல விஷயங்கள் காணப்படுகின்றன, அவற்றை எழுதிய அம்முறைப்படியே ஆராய்வாம்,

1. சிவஞானபோதம் மெய்கண்டதேவருக்கு முன்னேயே நூல் வடிவாக உண்டு. அது தமிழ்நூல் தான் எனவும்,

"எந்தைசனற்குமரனேத்தித் தொழவியல்பாய்
நந்திபுரைந்தருளுஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் றாரணியோர் தாமுணர
வேதுதிருட்டாந்தத்தாலின்று"

என்னும் செய்யுளுக்கு முன்னரேயுள்ள சிவஞானபோதத் தமிழ் நூலை சிந்தித்து உரையும் செய்யுளுமாக பொழிப்புரையை உரைத்தார் எனவுங் காணப்படுகின்றன.

உரைத்தானென்பதற்கு செயப்படுபொருள் உரை என்று கூறியதனானே மெய்கண்டதேவர் நூல் உரைக்கவில்லை என்றுங் உயர் சிவஞானபோத முரைத்தோன் என்ற சிவஞானபோதப்பாயிரத்தோடும் மெய்கண்டான் நூல் சென்னியிற்கொண்டென்ற சிவஞான சித்திப்பாயிரத்தோடும் முரணுமாறறிக. அன்றியும் ஞானநூல் சிந்தை செய்து உரைத்தானென்றதற்கு ஞானநூலைச் சிந்தை செய்து உரைத்தானென்பதே வெளிப்படையான பொருளாயிருக்க ஞானநூலைச்சிந்தைசெய்து உரையை உரைத்தான் என்று வலிந்து பொருள்கொள்வதற்கு ஓர் இயைபுமின்று. அற்றன்று உரைத்தானென்பதற்கு உரை என்னும் செயப்படுபொருள்வருவித்துக்கொண்டாலென்னையோ வெனின் உரையாகிய ஏது திருட்டாந்தத்தை செய்யுளிற் கூறியிருக்கவும் வேறு ஓர் உரை என்னும் சொல்வருவித்தால் அச்சொல்லுக்குப் பொருள்வேண்டும். மெய்கண்டதேவர் செய்த உரை ஏது திருட்டாந்த முதலியவையேயாம். ஆகவேவருவித்த உரை என்னும் சொல்லிற்கு பொருளில்லாமையால் பொருந்தாதென்க.

இனி உரைத்தானென்பதற்கு ஏது திருட்டாந்தமாகிய உரையை உரைத்தானென்று கொள்வேமெனின் அவ்வாறாயின் ஏது திருட்டாந்தத்தை என்றிருக்கவேண்டும். ஏது திருட்டாந்தத்தாலென்றிருக்கக் கூடாது, அன்றியும் ஞானநூலென்றவிடத்து நான்காம் வேற்றுமை உருபைவிரித்து ஞானநூலுக்கு ஏது திருட்டாந்தமாகிய உரையை உரைத்தான் எனல் வேண்டும். ஞானநூலுக்கு என்று விரித்தால் சிந்தை செய்து என்னும் சொல் பொருள்



160932

படாமை அறிக, உரைக்கவேண்டுவதான உரையைச் சிந்தை செய்து என்றுகொள்வேமெனின் அங்ஙனமாயினும் மேற்கூறியவாறு ஏது திருட்டாந்தத்தை என்றிருத்தலே பொருத்தம், ஆகலின் ஞானநூலில் ஏது திருட்டாந்தத்துடன் உரைத்தானென்பதே பொருளாம். நூலை உரைத்தானென்றதனாலேயே மெய்கண்டதேவர் உரைத்த தமிழில் முன் இல்லாமை நன்குவிளங்கும். முன்னர் தமிழில் இருந்திருக்குமாயின் உரைத்தானென்று கூறவேண்டுவதின்றாம், உரைத்தானென்றதனால் முன்னர் தமிழில் இல்லாதிருக்கவேண்டுமென்பதை,

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூன்முறையை"

என்னும் திருவள்ளுவமாலையாலறிக.

அங்ஙனமாயின் "நந்தி உரைத்தருளும் ஞானநூல்" என்றதற்கும் நந்தி உரைப்பதற்குமுன் வேறு பாஷையில் இருந்திருக்கவேண்டுமென்று கொண்டு அது தமிழ்ச் சிவஞானபோதமே எனவும் அதனை நந்தி தேவர்வடமொழியில் மொழிபெயர்த்துக் கூறினாரெனவும் பின்னர் மெய்கண்டதேவர் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினாரெனவும் கொள்வேமெனின் அது பொருந்தாது, என்னை? நந்தி உரைத்தருளும் ஞானநூலென்றதற்கு நந்தி உபதேசித்தருளிய ஞானநூலென்பதே பொருளாதலாலென்க. அவ்வாறாயின் முன்னர் உபதேசமாத்திரையாய் இருந்ததென்ற ஞானசாகரக் கூற்றைமறுப்பானேன் எனின், நந்தி உரைத்தருளும் ஞானமென்றிருந்தால் உபதேசமாத்திரை என்றல் பொருந்தும். ஞானநூலென்றிருத்தலால் உபதேசமாத்திரையாய் மட்டும் இருந்ததென்றல் பொருந்தாமையின் மறுக்கப்பட்டதென்க. நூலை நந்தி உரைத்தது உபதேசமாயினவாறுபோல மெய்கண்டதேவர் உரைத்ததும் உபதேசமென்பேமெனின் 'எந்தைசனற்குமரன் ஏத்தித்தொழ இயல்பாய் நந்தி உரைத்தருளும் ஞானநூலென்றது போல மெய்கண்டதேவர் இவருக்குச் சொன்னார் என்று கூறாமையானும்" தாரணியோர் தாமுணரத்தானுரைத்தான் "என்றதனாலேயே பிறிதொருவரை முற்படுத்தாது தானே சொன்னாரென்று பெறப்படுகின்றமையானும் தானே சொல்லுங்கால் உபதேசமென்

R673m211,N12
N12·3

பதின்றி நூலை என்பது வெளிப்படை யாதலானும் உபதேச மென்றல் பொருந்தாதாம்.' ஆகவே வடமொழி வரிவடிவா யிருந்த சிவஞானபோத நூல் நந்தி தேவர் முதல் மெய்கண்டதேவர் ஈறாக ஒருவர் பின் ஒருவராய் உபதேசிக்கப்பட்டு மெய்கண்டதேவர் தமிழில் மொழிபெயர்த்து உரைத்தாரென்பதே "எந்தை சனற்குமர" னென்ற பாயிரச் செய்யுளால் இனிது விளங்கக் கிடக்கின்ற வாறறிக.

இன்னும் அச்செய்யுளில்ஏதுதிருட்டாந்தத்தாலென்றதினால் உருபுமாறாது நின்றபொழுது கருவிப் பொருளில் நின்று செயப்படுபொருளை உணர்த்தவேண்டும். உணர்த்தவே ஏது திருட்டாந்தத்தால் சிவஞானபோத நூலை உரைத்தானென்றவாறாம். இனி ஆல் உருபு ஒரு உருபாக மாறும் உரிமையுடைமையின் அங்ஙனம் மாறுங்கால் ஒரு உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வருமாதலால் ஏது திருட்டாந்தத்தோடு சிவஞானபோதநூலை உரைத்தானென்பதே தேற்றம். இனி, இன்று என்றதனால் முன்னர் தமிழில் இல்லாமையும் ஏது திருட்டாந்தம் இல்லாமையும் விளக்கியவாறுமறிக.

2. ஆரியத்திற்கு அக்காலத்தில் எழுத்துக்கிடையா தெனக் காணப்படுகின்றது,

ஆரியமென்ற பெயரைப்பெற்றால் எழுத்தில்லாதிருக்க முடியுமா? இலக்கணத்தில் எழுத்துச்சொல், பொருளென்பவற்றை முறையாய் வைத்ததை நோக்கின் எழுத்தாற் சொல்லும், சொல்லாற்பொருளும் தோன்று மென்பதை யாவரும் அறிவர். ஆகவே, ஆரியமென்னும் சொல் உண்டானபொழுதே எழுத்துண்டென்பது துணிபாம். இனி, எழுதாமறை என்றதன் கருத்தென்னையோவெனின் மறை எழுதப்படாதிருந்த தென்பதேயாம். அவ்வளவே யன்றி பாடை எழுதப்படாதிருந்த தென்பதன்று.

3. உயர் சிவஞானபோத முரைத்தோ னென்பதற்கு மெய்கண்டார் தம்மாணாக்கருக்குரைத்தார் எனக்காணப்படுகின்றது. அது பொருந்தாமை மேலே காட்டினாம்.

4. நாதத்தைக் குறிப்பது பிரணவம் அப்பிரணவம் தமிழுக்கே உரித்தெனக் காணப்படுகின்றது. நாதம் என்ற சொல்லும் பிரணவம் என்ற சொல்லுமே வடமொழியாயிருக்கத் தமிழிற்குரி



த்தென்றல் எவ்வாறு பொருந்தும், தமிழில் நாதத்திற்குவுள என்றும் பிரணவத்திற்கு ஓங்காரம் என்றுங்கூறுதல் வழக்கமாம். அன்றியும் தமிழிற்குரிய சிறப்பெழுத்துக்கள் ஐந்தனுள் ஒகரமும் ஒன்றேயன்றி ஓகாரம் ஒன்றன்று ஆதலால் ஓங்காரம் தமிழ் வடமொழி இரண்டற்கும் பொது என்பதே பொருத்தமாம். இப்பொருத்தமும் பிண்டமாகக் கூறும்போதுதான் பொருந்தும். பிரணவத்தில் அகர, உகர, மகரமென்ற மூன்றெழுத்துக்களும் அடங்கி இருக்கின்றன என்று கூறும் நூற்கருத்துக்கள் வடமொழிக்குமட்டும் பொருந்துமே யன்றி தமிழிற்குப் பொருந்தாவாம்.

5. தேவபாடை தமிழ் என்று சிலபிரமாணங்கள் காட்டப்படுகின்றன. அப்பிரமாணங்கள் வருமாறு :

(1) "கொன்றைச் சடையர்க் கொன்றைத்தெரிய
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே."

(2) "முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில் முற்பட
வெழுதிய முதல்வோனே,"

(3) "ஞால மளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" முதலாயின.

இவற்றுள் முதலாவது பிரமாணம் ஞானசம்பந்தரைக் குறிப்பதாம். என்னை தகரமெய்யோடு பிரணவத்தைப் புணர்த்திதோடுடைய என்பது முதலாக தமிழைப்பாடினா ராதலின் என்க. ஞானசம்பந்தரின் செயலை முருகர்செயலாகவே அருணகிரியார் கொண்டாரென்பதை "உரைபுகலி யூரில் அன்றுவருவோனே" என்பது முதலியவற்றா லறிக. இரண்டாவது பிரமாணம் தமிழ் கையிலாயவரை இருந்ததென்பதையும் தேவர்களும் தமிழ்ப்பேசினார்க ளென்பதையும் குறிக்குமேயன்றி தேவபாடை தமிழ் என்பதைக் குறியாது. உதாரணமாக தமிழ்வழங்கும் தேசத்தை ஆளும் நமது காருண்ய சக்கிரவர்த்தியும் ஏனைய ஐரோப்பிய முக்கியஸ்தர்களும் லண்டனில் ஆளப்படும் தேசத்தின் உரிமைபற்றித் தமிழும் பேசுவராயின் அதுகொண்டு ஐரோப்பியபாடை தமிழென்றல் பொருந்தாது போலவாம். மூன்றாவது பிரமாணம் தெய்வத்தன்மை பொருந்திய தமிழென்பதேயன்றித் தெய்வம் பேசுந் தமிழென்பதை உணர்த்தாது.

**6. சிவபெருமான் வேதாகமங்களைத் தமிழிற்செய்யவில்லை என்று சொல்லலாமா என்று காணப்படுகின்றது.**

தமிழிலும் வேதாகமங்கள் உள. வடமொழியிலும் வேதாகமங்கள் உள. ஆயின் இருவேதாகமங்களுக்கும் வேறுபாடு உண்டோ இல்லையோ எனின் உண்டு. அவ்வேறுபாடியாதெனின் உயிர்கள் இறைவன் திருவடியடைதற்கு வேண்டுவனவான உபாயங்கள் கருமம், மந்திரம், ஞானம் என முத்திறப்படும். இவற்றுள் கருமம் மந்திரத்தோடு கூடிய கருமம் எனவும் மந்திரத்தோடு கூடாதகருமம் எனவும் இருதிறப்படும், அவற்றுள் மந்திரத்தோடு கூடாத கருமம் சரியை. மந்திரத்தோடு கூடிய கருமம் கிரியை. மந்திரத்தோடு கூடாத கருமம் ஆகிய சரியையும் ஞானமும் இருவேதாகமங்களுக்கும் பொது. மந்திரத்தோடு கூடிய கருமமாகிய கிரியையும் மந்திரமும் வடமொழி வேதாகமங்கட்கே உரியன. எவ்வாறெனின் இப்பொழுது தமிழில் உள்ள வேதம் தேவாரம் முதலியன. ஆகமம் திருமந்திரமுதலியன. இவற்றை திருவாய் மலர்ந்தருளியவர் சமயகுரவர் ஆதியோர். இவர்கள் அவதாரத்திற்குமுன் இந்நாட்டில் தமிழ் வேதாமங்கள் இல்லை என்றால் இயலாது. அவை கடலாலும் பிறராலும் கொள்ளப்பட்டொழிய இறைவன் திருவருளால் பின்னுந்தோன்றின. அவ்வாறே மந்திர சாத்திரமும் முன்னிருந்திறந்திருக்குமாயின் பின்னரும் தோன்றியிருக்கலாம். தோன்றாததினாலேயே முன்னர் இல்லை என்பது நன்கு விளங்கும். அன்றியும் வடமொழிச் சொல்லாயிருக்கும் மந்திரங்களை தமிழிற் சொல்வதற்கு எழுத்துக்களில்லை என்பது பிரத்தியட்சம் உதாரணமாக "ஹாம்" என்பதை தமிழில் எவ்வாறெழுதமுடியும். ஆகவே கருமம் மந்திரம் ஞானமென்ற மூன்றும் வடமொழி வேதாகமங்களில் உள்ளனவென்றும் கருமத்தில் ஒரு பகுதியும் ஞானமும் தமிழ் வேதாகமங்களில் உள்ளனவென்றும் அறியவேண்டும் அறியவே மந்திரமும் வேண்டுவதால் வடமொழி தமிழ்மொழியாகிய இருமொழிகளும் தமிழர்களுக்கு வேண்டப்படுவனவேயாம். வேண்டவே ஆரியர் இந்நாட்டில் குடிபுகுந்த பின் வடமொழி இந்நாட்டிற்கு வந்ததென்றல் பொருந்தாது. வடமொழிக்கலப்பில்லாத தனித்தமிழ் இந்நாட்டிலிருந்ததென்ப



தற்கு ஆதாரமுமில்லை. இருந்திருக்கலாமென்ற யுத்திபொருந்தாது. அது கடவுளும் ஒருகாலத்தில் இல்லாமலிருக்கலாமென்பதுபோலும், ஆகவே உரியன என்பதாம். இக்கருத்தை வலியுறுத்துதற் பொருட்டே தமிழ்ச்சொல்லால் தெய்வவணக்கங் கூறிய பெரியார் தமிழ்ச்சொலும் வடசொலும் தாணிழல் சேரவும் ஆரியன்கண்டாய் தமிழன்கண்டாயெனவும் செந்தமிழோடு ஆரியனை யெனவும் தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ்விரண்டும் உணர்த்தும் அவனை உணரலுமாமே யெனவும் இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவ ரெனவும் இவ்வாறே பிறவும் அருளிச்செய்வாராயினர். இத்திருவாக்குகளால் வடமொழி தமிழ்மொழியிரண்டும் ஒப்பற்ற தனிப்பற்ற தனிப்பாடை எனவும் தமிழ்மக்களுக்கு இரண்டும் உரியன எனவும், இரண்டு பாடைகளும் இறைவனாற் றரப்பட்டனவெனவும் நன்குவிளங்கும். விளங்கவே ஆரியர் வருவதற்கு முன்னரேயே இந்நாட்டில் வடமொழி உண்டென்றுணரக் கிடக்கின்றது,

அன்றியும் கடல்கொள்ளப்பட்டதனாலும் பிறர்கொள்ளப்பட்டதனாலும் சிலநாடுகளும் ஏடுகளும் ஒழிந்தனவேனும் பிறநாடுகள் இன்றுமிருக்கின்றனவே அந்நாடுகளில் ஏடு கொள்ளைபோயினும் நாட்டிலுள்ளாருள் உண்மையறிவுடையார் ஒருசிலரிருக்க மாட்டார்களா? இருப்பரேல் அவர் ஏடுபோனதை அறிந்த மந்திர சாத்திரங்களை எழுதிவைத்திருக்க மாட்டார்களா? தொன்றுதொட்டு இன்றுவரை தீக்ஷை, சிவபூஜை முதலியவற்றிற்குரிய மந்திர சாத்திரம் ஆதிசைவப்பிராமணரிடத்திலும் தமிழாசிரியர்மாரிடத்தும் வடமொழியாகவே இருந்துவருகின்றபடியால் என்றும் இத்தமிழ்நாடு இருமொழிக்கும் உரியநாடென்பது நன்குபுலனும், முன்னுள்ள வேதாகமங்கள் இறந்தொழியப் பின்தோற்றியது போல முன்னுள்ள சிவஞானபோதம் இறந்தொழியப் பின்னுந் தோற்றிற்றென்ன லாகாதோவெனின் வரன்முறை கூறப்படுதலால் ஆகாதெனக,

**7, இரௌரவ ஆகமம் பாசவிமோசன படலத்தில் அப்பனிரண்டு சூத்திரங்களுமில்லை யெனக் காணப்படுகின்றது.** உண்டென்பதை இன்றைக்கும் பிரத்தியட்சத்திற் காட்டலாம், தெ

கூஞுமூர்த்தித் திருக்கரத்திலுள்ளது சிவஞானபோதமெனினும் வேதமெனினும் ஆகமமெனினும ஒருபொருளை யுணர்த்துமாதலின் அதுபற்றிய ஆசங்கை இடனின்றாம், என்னை, வேதாமங்களுக்கு ஒருசிறிதும் பேதங்கண்டிலம் என்பதனாலும் ஆகமத்தின் சாரமே சிவஞானபோத மாதலினாலு மென்க.

8, வடமொழிச் சிவஞானபோதத்திறுதியில் ஏவம், வித்யா, சிவஞானபோதே, சைவார்த்த நிர்ணயம் என்பதற்கு இவ்வாறே சிவஞானபோதமாகிய இந்நூலில் சைவாகமங்களின் பொருள் நிச்சயத்தை அறிக என்று பொருள்கூறுதல் பொருந்தாதெனவும் இந்நூலிலென்று கூறாமல் இப்படியே சிவஞானபோதத்திலே சைவப்பொருட்டுணிவை அறிக எனக்கூறவேண்டு மெனவும் அதனாலேயே வடமொழியின் வேறான தமிழ்ச் சிவஞானபோத மொன்றுண்டென நன்குவிளங்குமெனவுங் காணப்படுகின்றன.

சிவஞானபோதமென்று அந்நூலிலேயே கூறியிருத்தல் கொண்டு அதனின் வேறாய சிவஞான போதமென்று கூறவேண்டுமாயின் அந்நூற்பேர் சிவஞானபோத மென்றிருத்தல் கூடாது, சிவஞானபோதமென்ற நூலிலேயே சிவஞானபோதமென்றிருக்கும்பொழுது வேறு நூலென்றெவ்வாறு கூறமுடியும், தமிழ்ச் சிவஞானபோதத்தினின்று மொழிபெயர்த்தபடியால் சிவஞானபோதமென்று பேரிட்டுக்கொண்டார்க ளென்றால், தமிழ்ச் சிவஞானபோதத்தில் சிவக்ஞானபோதே சைவார்த்த நிர்ணயம் என்பதை உணர்த்துஞ் சொற்களில்லையே, தமிழ்ச் சிவஞானபோதத்தினின்று மொழிபெயர்த்தது வடமொழிச் சிவஞானபோத மாதலால், வடமொழிக் சிவஞானபோதமாகிய அதனில் தமிழ்ச் சிவஞானபோதத்தி லிவ்வாறு சொல்லப்பட்டதென்பதை உணர்த்துதற்குத் தமிழ்ச் சிவஞானபோதத்தி லில்லாத சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம் என்பதைக் கூறப்பட்டது. எனின் மூலனுரைசெய்த மூவாயிரந்தமிழ் என்றதற்கு வேறு மூவாயிரந்தமிழ் என்றும் "ஞானசம்பந்த னுரைசெய்த திருநெறிய தமிழ்" என்பதுபோன்ற திருவாக்குகட்கு வேறு தமிழென்றுங் கொள்ளாமல் இம்மூவாயிரந்தமிழ், இத்திருநெறிய தமிழ் என்றுகொள்வதுபோல சிவக்ஞானபோதே என்பதற்கு இச்சிவஞான போதமென்று கொள்ளவேண்டு மாதலால் வேறுநூலைக் குறிப்பதற்குக் கூறியதென்றல் பொருந்தாது, அன்றியும் ஞானம், போதம் என்ற, இரண்டும் தமிழ்ச்சொல்லாகுமா? அச்சொற்களுக்குத் தமிழில் அறிவு, உணர்வு என்றல்லவோ வழங்கிவருகின்றன, நூற்பெயரே வடமொழியாயிருக்கத் தமிழ் நூலென்றெவ்வாறு கூறுவது?



9. பிற்காலத்துப் பதிப்பாசிரியர்கள் வடமொழி மொழிபெயர்ப்புத்தான் தமிழ்ச் சிவஞானபோத மென்று கதை எழுதினர்களெனவும் மற்றவர்களும் குரும்பையாட்டுக் கூட்டமாதலால் அதனைப் பின் பற்றின ரெனவுங்காணப்படுகின்றன.

உரைமுழுதும சிவஞான யோகிகள் செய்தார்களென்றொப்புக்கொண்டு இதனைமட்டும் பதிப்பாசிரியர் மேலேற்றுவது எவ்வாறு பொருந்தும் அன்றியும் சிற்றுரை பதினொன்றாஞ் சூத்திரத்தில் மொழிபெயர்ப்புத்தானென்பதற்கு காட்டியிருக்கின்ற உரைநடையும் இலக்கணவிதியும் சிவஞானயோகிகள் கூறாமல் பதிப்பாசிரியர் கூற்றாயிருக்குமாயின் பதிப்பாசிரியர்களின் பெருமை பாராட்டற்பாலதே அக்கருத்துத்தானும் அவ்வுரை நடையில்லாத பிரதி சைவாதீனங்களிலிருந்து காட்டினால் முற்றுப்பெறும்.

10. தமிழ்ச் சிவஞான போதத்தை ஸ்ரீமாந் ஜெ. எம். நல்லசாமிபிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததுபோல முன்னர் வடமொழியில் பெயர்த்திருப்பார்களெனக் காணப்படுகின்றது.

" திருக்குறள் இப்பொழுது பலபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறபடியால் ஒவ்வொருவரும் தங்கள் பாஷையிலுள்ளதுதான் முதனூல் ஏனையபாஷைகளிலுள்ளனவெல்லாம் மொழிபெயர்ப்பென்று சொல்லுதல் பொருந்துமா? பொருந்தாதென்பதை எவ்வாறு சாதிக்கலாம்? குறளென்னுஞ் சொல் தமிழுக்கே உரித்தாதலால் பலபாஷைகளில் மொழிபெயர்க்கப்படினும் நூற்பெயரைக்கொண்டு முதனூல் தமிழென்றே சாதித்துவிடலாம். அதுபோலவே சிவஞானபோத மென்னும் நூற்பெயரைக்கொண்டே முதனூல் வடமொழியென்று சாதித்துவிடலாம். இவ்வாறே

மந்திரங்களும் பலபாஷைகளில் ஒருவாறு வரிவடிவில் மொழிபெயர்க்கப்படினும் தொனிமாறுவதில்லை.

11. ஸ்ரீ மெய்கண்டதேவராகிய தமிழ்க்குழந்தைக்கு ஆரிய பாஷையைச் சொல்ல நியாயமில்லையெனக்காணப்படுகின்றது. இன்றைக்கும் தீக்ஷை சிவபூஜைக்குரியமந்திரங்கள் ஆரிய பாஷையாயிருக்கவும், தமிழர்களனுட்டித்துவருதல் நியாயமாகுமானால் ஸ்ரீ மெய்கண்ட தேவருக்குமட்டும் ஏன் நியாயமாகமாட்டாது? தீக்ஷாவிதி சிவபூஜாவிதிகள் இப்பொழுது தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. வரினும் சில சொற்கள் தனி வடமொழியாகவே காணப்படுகின்றன. அவ்வாறே தமிழ்ச் சிவஞானபோதத்திலும் அந்தம், ஆதி, ஏகர், ஆலயம், அரன் முதலான பல சொற்கள் வடமொழியாகவே காணப்படுகின்ற.

12. இரண்டு வயதுடைய ஸ்ரீ மெய்கண்டதேவருக்குச் சமஸ்கிருத சப்தங்களை பிழைபறச் சொல்லமுடியாதாதலால் தமிழ்ப் பாஷையைத்தான் கூறியிருக்கவேண்டுமெனக் காணப்படுகின்றது. இரண்டு வயதிலேயே தமிழ்க் குழந்தைகள் தமிழ் தத்துவசாஸ்திரத்தை ஓத வதியற்கையாயிருந்தாலன்றோ இக்கூற்றுப்பொருந்தும். அவ்வாறின்றித் தெய்வத்திருவருள் சிறு வயதில் தமிழ் தத்துவ சாஸ்திரத்தைப் பேசச் செய்ததென்றால் அத்திருவருள் சமஸ்கிருதத்தைப் பேசச்செய்யாதா? திருவருளினாற்றலிவ்வளவென்றளக்க நம்மால் முடியுமா?

13. ஸ்ரீ பரஞ்சோதி முனிவருக்குத் தமிழே தெரியவராதென்பாருக்கு இதுக்குந்தடையொன்றுளது. அதாவது சிவஞானங் கைவந்தவர்களுக்கு எல்லாபாஷையும் வரும். இதற்குக் குமரகுருபரசுவாமிகள் இந்துஸ்தானி பேசியதே சான்றெனக் காணப்படுகின்றது.

ஸ்ரீ மெய்கண்டதேவர் சமஸ்கிருதம் பேசுவதற்கு மட்டும் இது ஏன் சான்றாகமாட்டாது. நிற்க,

14. பிறிதொரு சாரார் எல்லா ஆகமங்களுங் கேட்ட ஸ்ரீ நந்திதேவருக்கு மலைவு தீர்தற்பொருட்டு உபதேசிக்கப்பட்டது. சிவஞான போதமானால் அது அவ்வாகமங்களின் வேறாய்த்தானே



யிருக்கவேண்டும். ஆகமங்களுள் ஒரு ஆகமத்தின் ஒரு பகுதியென்றலெவ்வாறு பொருந்துமென்கின்றனர்?

ஒரு நூலை ஒருவன் கேட்கின்றான், கேட்ட பின்னர் அந்நூலிலுள்ள திரண்டபொருள் இதுவெனத் தேறவேண்டுமென்றுக் கேட்பானாயின் அவனுக்குவேறு நூல் கூறுதல் பொருந்துமா? கூறுவனாயின் முன் கற்றநூல் பயனற்றதாய் முடியுமல்லவா, ஆகலால் முன் கற்றநூலிலேயே அந்நூற்பொருள்கள் யாவுமடங்கிக் கிடக்கும் பகுதியை மீண்டுமெடுத்துக் காட்டுதல்போல எல்லா ஆகமப்பொருளுங் கேட்ட ஸ்ரீ நந்தி தேவர் அவ்வாகமங்களின் ஞானபாகங்களுள் பொருள்கள் ஏழென்றும் ஆறென்றும் ஐந்தென்றும், நான்கென்றும், மூன்றென்றும் கூறப்படுகின்றனவே. உண்மையாதெனக் கேட்க மூன்றுபொருளைப்பற்றிக் கூறிய பன்னிரு சூத்திரத்தைத் திரும்ப எடுத்துகூறி ஏனையவற்றை அம்முப்பொருளிலடக்கிக்காட்டினார், இவ்வாறே பல நூற்பொருளை ஒரு நூலில் ஒரு பகுதியிலடக்கிக் காட்டுவது வழக்கென்பதனை "பாதி விருத்தத்தாலிப்பார் விருத்தமாக உண்மை சாதித்தார்" என்றும் "பாரவிரித்தநூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப்பாதி போதும்" என்றுங்கூறிய திருவாக்குகளால் நன்குதெளியப்படும். என்னை? பார்விரித்தநூலெல்லாம் என்றதனால் சிவஞான சித்தியுமடங்கும், அடங்காதாயின் ஓர் விருத்தமென்றிருத்தல் கூடாது. ஆகவே சித்தியார் முதலிய எல்லாநூற் பொருளும் சித்தியாருட் பாதிவிருத்தத்தாலறியலாமென்றவாறும். அவ்வாறே இரௌரவ முதலிய எல்லா ஆகமப்பொருளையும் இரௌரவத்துள் பன்னிரு சூத்திரத்தா லறியலாமென்பதே துணிபாதலால் ஆகமங்களின் வேறாய்ச் சிவஞானபோத மிருக்கவேண்டுமென்றல் பொருந்தாதென்க.

மற்றொரு சாரார் சிவஞானபோதம் ஸ்ரீமெய்கண்ட தேவருக்கு முன் தமிழிலில்லையென்றால் ஸ்ரீமெய்கண்ட தேவருக்கு முன் தமிழர்கள் ஞானம்பெறவில்லையா பெற்றிருப்பரேல் அப்பொழுது ஞானநூல் யாது எனவினவி ஸ்ரீமெய்கண்ட தேவருக்கு முன்னரே தமிழில் சிவஞானபோத மிருக்கவேண்டு மென்கின்றனர்.

ஸ்ரீமெய்கண்ட தேவருக்கு முன்னரே தேவாரம் திருவாசகம், திருமந்திரம், திருக்களிற்றுப்படியார், திருவுந்தியார், திருக்குறள் முதலிய நூல்களுள்ள இந்நூல்களில் ஒருநூலைக்கற்று ஞானம்பெற்றார், பெறுகின்றார், பெறுவார் பலர். அங்ஙனமாயின் சிவஞானபோத நூல் தோன்றியதின் கருத்தென்னையெனின் ஞானத்திற்குரிய பொருளாராய்ச்சியின் மலைவை அத்துவிதச் சொல்லின் உண்மைப்பொருளால் நீக்கியதேயாம். இத்தமிழ் நாட்டில் அத்துவிதச்சொல்லின் உண்மைப்பொருளை ஐயமின்றியே உணர்ந்துவந்த நாட்கள் பலகழியவும் பின்னர் ஐயமுண்டாயிற்று. உண்டாகவே அவ்வையத்தைத் தீர்த்தற்கு வடமொழிச் சிவஞானபோதத்தை ஸ்ரீமெய்கண்ட தேவர் மொழிபெயர்த்து உரையுஞ்செய்தனர். இதுபற்றியே "பொய்கண்டார் காணாப்புனிதமெனு மத்துவிதம், மெய்கண்டநாதன்" எனத் தாயுமான சுவாமிகளருளிச்செய்வாராயினர்.

ஆகவே "மயர்வற நந்திமுனி கணத்தளித்த" என்றதனால் பொருளாராய்ச்சியின் ஐயத்தை நீக்குதற்பொருட்டு நந்திபெருமானுக்கு வடமொழிச் சிவஞானபோதம் உபதேசிக்கப்பட்டதெனவும் அதனோடு அத்துவிதத்தின் ஐயத்தை நீக்குதற்பொருட்டு ஸ்ரீமெய்கண்ட தேவர் வடமொழிச் சிவஞானபோதத்தை தமிழில் மொழிபெயர்த்து ஏது, திருட்டாந்த முதலிய உரையையுஞ் செய்தனரெனவும் இனிதுபுலனாம்.

இன்னும் தமிழ்ச் சிவஞானபோத நூல் மொழிபெயர்ப்பு என்பதே "முந்து மாகமத்தை யருட்டுறை * யண்ணல் மொழிபெயர்த்துரைத்த நான்முதலா முதல்வழி சார்பா மூன்று நூற்கருத்தும்" என்றருளிய உலகுடை நாயனார் திருவாக்கானுந் தெளிக.

இதுகாறுங் கூறியவற்றை நடுவுநிலைமையோடு ஆராய்ந்து உண்மைகடைப்பிடித்தல் அறிவுடையார்க் கழகாம்.

வேறொரு சாரார் வடமொழிச் சிவஞானபோதத்து இறுதி "ஏவம் வித்யா சிவஞானபோதே சைவார்த்தநிர்ணயட' என்றிருக்கவும் தமிழ்ச் சிவஞானபோதத்தில் அவ்வாக்கியத்தைக் குறித்த

* அருட்டுறை—திருவெண்ணெய் நல்லூர்.



ஒன்று மில்லாமையினால் தமிழ்ச் சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு நூல் அன்று எனக்கூறுகின்றனர். இவர் கூற்றும்பொருந்தாது? என்னை? வடமொழிச் சிவஞானபோதத்தில் காப்பும் அவையடக்கமும் கிடையா. அவ்விரண்டும் இல்லாமையே அது ஒருநூலின் ஒருபாகமென்பதை நன்குவிளக்கும். இனி, ரௌரவ ஆகமத்துள் ஒருபாகமாகிய அதனைத் தனித்தெடுத்துக்கூறி நந்திபெருமானுக்குள்ள மலைவை சிவபெருமான் தீர்த்தருளினாராதலின் அவ்வாறு தீர்த்துள்ளாரென்பதை குறிப்பிப்பதற்கு இறுதியில் "ஏவம்" என்றதுமுதல் நிர்ணயம் என்றதுவரையுள்ள சொற்றொடர் சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்டது. இச்சொற்றொடரின் பொருளையே தமிழில் மொழிபெயர்த்துரைத்த மெய்கண்டதேவர் காப்புச்செய்யுளில் அமைத்துவைத்தார் எவ்வாறெனின் கூறுதும். நந்திபெருமானுக்கு சிவஞானபோதத்தை அருளிச்செய்தவர் சிவபிரான் ஆதலாலும் அவர் குருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த இடம் கல்லால் நிழல் ஆதலாலும் அவ்விரண்டனையும் உணர்த்துதற்குக்கல்லால்நிழலென்றும் அவ்விடத்தெழுந்தருளியிருந்து சிவாகமப்பொருளினுள்ள மலைவை நந்திப்பெருமானுக்குத் தீர்த்தருளியதைக் குறிப்பிக்கும் சைவார்த்த நிர்ணயமென்ற வடமொழிச்சொல்லை மலைவில்லார் என்றும் நந்திபெருமானுக்குச் சிவஞானபோதத்தால் மலைவுதீர்த்ததுபோல் தமக்கும் மலைவு தீர்த்தருளுதற்பொருட்டுப் பொல்லாரிணைமலர்நல்லார்புனைவரென்னும் காப்புச்செய்தருளினர். இவ்வுண்மையறிந்தே திருவருட்டோன்றலாய் விளங்கிய மாதவச் சிவஞானயோகிகள் மலைவில்லார் என்பதற்கு மலைவுதீர்த்தருளிய முதலாசிரியர் எனவும் அருளிய என்பதற்கு மேன்மேல் கருணைகூர்ந்தருளுதற்பொருட்டெனவும் உரைகூறி அவ்வாறு கூறுதற்கு இலக்கணவிதியும் காட்டினர். இக்கருத்தறியாதார் சுவாமிகள் வாக்கியத்தை இடர்ப்படுத்திப் பொருள் கூறி தன்வல்லமையை காட்டுவதில் சிறந்தாரென்று வாய்கூசாது சொல்லுவர் அந்தோ! இவ்வாறு கூறுவார் கொடும் பாவத்தைப்பற்றி என்னென்றுரைப்பாம்.

இனி, அருளிய பொல்லார் என பெயரெச்சமுடிபாக வைத்து உரைத்தலுமொன்று என மற்றோர் உரையும் சுவாமிகளே

அருளிச்செய்திருக்கின்றனர். அவ்வாறு கொள்ளுங்காலத்துக் கல்லாநிழல் என்ற அடை சிவபெருமான் குருமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் இடத்தை உணர்த்துதற் கண்மாறுபடாமையின் சிவபெருமானைக் குறிப்பிக்கும் அடைமொழிகள் பலவிருக்கவும் கல்லால் நிழலைக்குறிப்பித்ததினாலே வடமொழிச் சிவஞானபோதத்து இறுதியிலுள்ள பொருளைக் குறிப்பித்தவாறாகும். ஏனெனின் கல்லாநிழலின்கண்ணே எழுந்தருளியிருந்து சிவபெருமான்செய்த செயல் ஞானபாதப்பொருளின் முடிவைத் தீர்த்ததேயன்றி பிறிதில்லையாதலால் என்க.

நந்திபெருமான் முதல் மெய்கண்டதேவர் ஈறாக சிவஞானபோதம் தமிழிலே தான் இருந்ததென்பார் கூற்றும், தமிழ்ச் சிவஞானபோதத்தை வடமொழியில் மொழிபெயர்த்துக்கொண்டாரென்பார் கூற்றும் பொருந்தாதென்பது இக்காப்புச்செய்யுளும் "தம்மையுணர்ந்து" என்ற அவையடக்கச் செய்யுளும் வடமொழிச் சிவஞானபோதத்தில் இல்லாமையே நன்குவிளங்கும்.

பொ. முத்தையபிள்ளை,

திருவாவடுதுறை ஆதீனசைவப்பிரசாரகர்

தூத்துக்குடி.

---

## சைவசமயவுண்மை.

சைவசமயத்திற்குறிய சாஸ்திர வாராய்ச்சி சிறிதுமில்லாத சைவர்கள் சிலரும், புறச்சமயர்கள் பலரும் சைவர்கள் பலதெய்வ வழிபாடு செய்யும் அநேகஈஸ்வரவாதிகள்போலுமென்பர். அந்தோ! இஃதறியாமையே, வேதாகமேதிகாச புராணங்களிற் கொண்டாடப்படும் தெய்வமொன்றே. அதுவே சிவம், இச்சிவத்தினையே வழிபடுபவர் சைவர், "ஏக ஏவருத்ரோ நத்விதீய யதஸ்தே" என்கிற சாபாலசுருதியால், உருத்திரமூர்த்தி யொருவர் தவிர இரண்டாவதி யாருமில்லை யெனவும், "யதாதமஸ்தந்நதிவா நராத்ரிர்நஸந்ந சாஸச்சிவ ஏவகேவல" என்ற சுவேதாசுவதர சுருதியால் தமோமாத்ராவசேதனமாகிய சிருஷ்டிக்குப் பூர்வகாலத்தில் சர்வகாரணராகிய சிவபெருமானொருவரே யிருந்தாரென்றும் கூறியவாற்றாலறிக. மும்மூர்த்திகளில் ஒருவரைத் தெய்வமாகக் கொள்ளாது மூவரையுங் கடந்த நான்காவதாயுள்ள சிவத்தையே தெய்வமாகக் கொள்வர் சைவர், "ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம்" என்ற மாண்டூக்யோப சுருதியே யிதற்குச் சான்றாம். சிவபெருமானே சகலருக்குந் தலைவரெனக்கொள்வர் சைவர், "தமீச்வராணாம் பரமம்மஹேச்வரம்தம் தேவதாநாம் பரமஞ்சதைவதம் பதிம்பதீநாம் பரமம்பரஸ்தாத்விதாமதேவம்புவநேசமீட்யம்" என்ற சுவேதாசுவதர சுருதியால் ஈசுவரர்களுக்கெல்லாம் தலைவராகிய மகேசுவரரும், தேவர்களுக்கெல்லாந் தலைவராகிய மகாதேவரும், பதிகளுக்கெல்லாந் தலைவராகிய பசுபதியும், பரமாயுள்ளவர்க்கெல்லாம் தலைவராகிய பராத்பரரும், சர்வஜ்ஞத்காரணரும் தியானமார்க்கத்தாலுபாசிக்கப்படுபவருமாகச் சிவபெருமானை நாங்கள் அறிகின்றோம் என்றதனாலறிக. பிரமமுதல் பிபீலிகை பரியந்தமுள்ள யாவரும் பசுக்களெனவும் இப்பசுக்களனைவருக்குஞ் சிவபெருமானே பதியெனவுங் கொள்வர் சைவர். "ஸர்வேதேவா: பசுதாமவாபு: ஸ்வயம்தஸ்மாத்மாக்பசுபதிர்ஸம்பபூவ" எனவும், ஸ்வதச்சிவ: பசுபதிஸ்ஸாக்ஷி ஸர்வஸ்ய ஸர்வதா ஸர்வேஷாம்து

மாஸ்தேநப்ரேரிதம் நிபமேநது'' எனவும் போந்தவசனங்களால், சமஸ்தமான தேவர்களும் பசுக்களாவாரெனவும், அப்பசுக்களுக்குப்பதியும், ஸர்வத்துக்கும் ஸாட்சியும், ஸகல மனசுகளையும் நியமமாக வெங்குமேவச் செய்கின்ற வரும் சிவபெருமானே யாவாரெனவெளிப்பட்டமையறிக. சிவபெருமானுக்குச் சமத்துவமாகவேறொரு தேவரை வணங்கார் சைவர், ''யோமகாதேவமந்யேநஹீநஜாதேவந்தர்மதிஃ ஸக்ருத்ஸாதாரணம்ப்ருயாத்ஸோந்த்ய ஜோநாந்த்யஜோந்த்யஜஃ'' என்கிற புராணவசனத்தால் எவன் அன்னியமான ஹீனதெய்வங்களோடு சமானமாக ஒருவார்த்தையாவது மகாதேவரைப் பேசுவானோ அந்தத்துர்மதியே சண்டாளனுவனன்றி லோகப்பிரதீதியால் சண்டாளனென்றழைக்கப்படும் அவன் சண்டாளனுகான் என்பதே ஸ்பஷ்டம். இதற்கிணங்கவே நமது மணிவாசகர் ''புற்றில்வாளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன், கற்றைவார் சடையெம்மண்ணல் கண்ணுதல் பாதநண்ணி மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம்பெம்மாற், கற்றிலாதவரைக் கண்டாலம்ம நாமஞ்சுமாறே,'' எனத் திருவாய் மலர்ந்தருளினர். இதுகாறுங் கூறியவாற்றால் சைவர்கள் வணங்குந்தெய்வ மொன்றே அதுவே சிவம்.

இங்ஙனமாயின், சைவருட் சிலர் விஷ்ணுமூர்த்தியை வணங்குவதென்னை யெனின்? கூறுதும். ''பாணத்வம் வ்ருஷபத்வமர்ச்சகவபுர்பார்யாத்வமார்யாபதே கோணித்வம் சகிதாம் ருதங்கவஹதாசேத்யாதி ரூபம்ததௌத்வத்பாதே நயநார்ப்பணஞ்சக்ருதவாந்த்வத்தேஹபாகோஹரிஃபூஜ்யாத் பூஜ்யதரஸ்ஸ ஏவநஹிசேத்கோவாததந்யோதிகஃ'' என்னும் சிவானந்தலஹரி வசனத்தால் விஷ்ணுமூர்த்தி சிவபெருமானுக்குப் பாணமாகவும், அவர் ஏறும் எருதாகவும் அவரைப் பூசிக்கும் அர்ச்சகனுகவும், அவர்க்குப் பெண்டிராகவும், அவருடைய நிருத்தத்தில் மத்தளசேவை செய்வோனுகவும் அன்புபாராட்டி யுய்ந்த சிவனடியாரிற் சிறந்தவனுகலின் அம்மூர்த்தியைச் சிவனடியாராக மதித்து வணங்குவர் சைவர். இக்கருத்துப் பற்றியே, ''திருமாலுக்கடிமைசெய்'' என்றனர் பூலோக சரஸ்வதியாகிய ஔவை பிராட்டியார்.

சைவருட்சிலர், உயிர்பலியேற்கின்ற துட்ட தேவதைகளாயும்



காடன், மாடன், காட்டேறி! மதுரைவீரன், கொள்ளிவாய்ப்பேய் குறளைப்பேய், புறங்கடைமுனி, சடாமுனி முதலானவற்றை வணங்குவதும்; மாமதியர் பண்டிகையில் பாத்தியாசெய்து நாடாபூஜுவதும், மாதாகோவில்களில் கீாணிக்கை செலுத்துவது மென்னையோ வெனின், அந்தோ! அந்தோ! இத்தகையர் சைவர்கள் ஆகார்! இவர்கள்வேடம் கூத்தாடி.வேடமேயாம். இவர்கள் சிவத்துரோகிகளாவர். இத்தகையினர்கட்கு வைதிகசைவர்கள் நற்புத்தி போதித்துச் சாத்திரவுணர்ச்சி செய்வித்து உண்மை தெரிவித்துத் திருப்பவேண்டியது இன்றியமையாத கடமையாம்.

''நலிதருசிறிய தெய்வமென்றையோ நாட்டிலேபலர்பெயர்நாட்டிப், பலிதரவாடுபன்றிகுக்கிடங்கள் பலிக்கடாமுதலியவுயிரைப் பொலிவுறக்கொண்டே போகவுங்கண்டேபுந்திநொந்துள நடுக்குற்றேன், கலியுறுசிறியதெய்வவெங்கோயில் கண்டகாலத்திலும்பயந்தேன்''

என்றனர் திருவருட்பிரகாசவள்ளலார். ஆகவே சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவராவார் வழிபடு தெய்வமொன்றேயாம் அதுவே சிவமாம்.

மணவழகு.

# அறத்தின்மேம்பாடு.

1. அறம் இன்னதென்பதுவகை. - அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். மனுமுதலிய ஆன்றோர்களால் செய்தற்பால வின்னவென வரையறுக்கப்பட்டதே அறமாகும். அது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூவகைத்து. அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார்தத் தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்.

வழக்காவது ஒருபொருளைத் தனித்தனியே எனதெனது என்றிருப்பார் அதுகாரணமாகத் தம்முண் மாறுபட்டு அப்பொருண்மேற் சொல்வது. அது கடன்கோடன் முதலிய பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தக ஒறுத்தல்.

இவற்றுள் வழக்குந்தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்குச் சிறப்பிலவாதலானும் அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானும் தேயவியற்கையானும் அறியப்படுதலானும் அவற்றையொழித்து ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமெனக்கொள்ளப் பட்டது. நால்வகை நிலைத்தாய வருணந்தோறும் அது வேறுபாடுடைமையின் பொதுவியல்புபற்றி நாயனாரால் கொள்ளப்பட்டது இல்லறந் துறவறமென்ற விரண்டுமேயாம்.

2. இல்லறம். 'அற்புடை நெறியிற் கற்புடைமனைவியொடு விருந்து புறந்தருந்தவர்ப்பேணி வரையாநாளின் மகப்பேறு குறித்துப் பெருநலந்துய்க்கும் பெற்றித்தன்றே' என்றிருப்பதால் இல்லறம் விழைவானொருவன் மேற்சொன்ன வழிகளைத் தவறாத



ஊட்டித்து வரல்வேண்டும். பொருள்செய்யுங்கால் பாவத்தை யஞ்சியீட்டி, அப்பொருளை இயல்புடைய மூவர்முதலாயினார்க்கும்' தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துக்கொடுத்துப்பின் எஞ்சியவற்றையொருவன் உண்டு வருவானாயின், அவன் மரபு இந்நிலவுலகத்து அழிவுறாது எப்போழ்தும் நிலைநிற்குமென்க. அங்ஙனம் பொருளீட்டுங்கால் தன்மனைவிமேற் செயத்தகும் அன்பினையும், பிறர்க்குப் பகுத்துப்பின் தானுண்டலாகிய அறத்தினையும் ஒருவனது இல்வாழ்க்கை உடைத்தாயிருக்குமாயின், அவ்வுடைமையே அவ்வில்வாழ்க்கைக்குப் பண்பும் பயனுமாகும். தவம் செய்வாரையும் ஒம்பும் ஆற்றல் இல்வாழ்வானுக்கிருத்தலின், அன்னாரைத் தத்தம் நெறியின்கண் ஒழுகப்பண்ணித்தானும் அவ்வறத்தில் தவறாதிருத்தல் சாலவும் சிறப்பாகும். இந்நிலையே அத்தவஞ்செய்வார் நிலையினும் பொறையுடைத்தாம் என்னை? நோற்பார் நிலைக்கு அவர் தம்மையுற்ற நோயல்லது இவர் நிலைபோற் பிறரையுற்ற நோயைப் பொறுத்தலின்மையின் என்க; அன்றியும்

'ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்'

என்றவாறு, தவத்தான் வலியார்க்கு வலிமையாவது தம்மையுற்ற பசியைப் பொறுத்தலாம். அவ்வலிமையோவெனின் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையான் ஒழிப்பாரது வலிக்குப்பின்னேயாமென்க. தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதார் ஆற்றலினும் தாமும்பசியாது பிறரையும் அது தீர்ப்பார் ஆகிய இல்லத்தாராற்றல் மிகவும் பெருமையென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆகலின் அறனெனப்பட்டது இல்வாழ்க்கையே. மெய்ஞ்ஞான நெறியுணர்ந்த பெரியோர் இல்லறத்தில் இனிதுவாழ்ந்தாலும் அறச்சிறிதும் பற்றடையாரென்பது தேற்றம். இதற்கு மேன்மையாம் இல்லறத்தின் மேதகவாழ்ந்திருந்தும் அணுத்துணையும் பற்றிலாது சிவமாந்தன்மையுற்ற சனகமகாராசரே சான்றுவர். இவரையே சின்னாட்களுக்குமுன் இப்பாரதபூமியின் கணிருந்து இவ்வுலகமுழுது ஞானசூரியன் போற்றம் புகழ்ப்படாத்தைத் திகந்தமெங்கணும் பரப்பிச்சென்ற தவயோகியராம் நம்

விவேகானந்தச் செம்மலு மிடையிடையே தம்பிரசங்கத்திற் சிறப்பித்துப் புகழ்ந்துளார். இதுபற்றியன்றே,

‘சிறப்புறுமில்லறத்தி னினிதுண்டுடுத்து மனைமக்களொடுஞ் செறிந்தாரேனும், பெறப்படுமெய்ப்பற்றினுடையார் மெய்ஞ்ஞானநெறியுணர்ந்தபெரியரோர், அறப்பெரிய துறவறஞ் சார்ந்தவர்க்குமி வரதிகமென வறைபுநூல்கள், விறப்புறுமெஞ்ஞானிய ரெவ்வகையறத்தி னெவ்வகைச் சிறப்புமே விடாரால.

எனக்கு சேலோபாக்கியானக்காரரும் கூறுவாராயினர். இதுகாறுங் கூறியவாற்றால், ஆச்சிரம நான்கனுள் சந்நியாசம் பெருமையாமென்றும், இருத்தற்குரிய நிலைசிறிதும்வழாது இல்லறத்திருப்பின் மேற்கூறிய துறவறத்தினும் இந்நிலைமிக இனிதாமென்பதும் பெறப்படும். மற்று, துறவறத்தினும் இந்நிலை கைக்கொள்ளுதற்கு மிக எளிதேயாமன்றோ! இனி அறத்தின் பொதுப்பான்மையை விவரிப்பாம்.

3. அறத்தின் பொதுப்பான்மை. அறம், தருமம், வண்மை, ஈகை, கொடையென்பன ஒருபொருளனவா மென்ப வொருசாரார். தருமத்துக்கும் தானத்துக்கும் சிறிதுபேதமுண்டு, தந்தமினத்தார்க்குத் தக்ககாரணம்பற்றி யொன்றை யீதலைத் தானமென்றும், அங்ஙனமின்றி வறியராய் ஏற்றாரெவர்க்கும் மாற்றாதீதலைத் தருமமென்றுங் கூறுபவான்றோர். கன்னிகாதானம், பூதானம் முதலியன காண்க.

‘அறஞ்செறி வண்மைதான மளவிலாதளித்து நாளும்
புறஞ்சுவர் கோலஞ்செய்வான் பூபதிக்குரைக்க லுற்றான்’

என்று பாரதத்திலும் இக்கருத்துப்பேதங் கூறப்பட்டவாறு காண்க.

செயற்பாலவறங்கள் முப்பத்திரண்டென்ப, அவையாவன:— ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்



குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம், என்பனவாம். அறஞ்செய முற்படுவான் தன்மனத்திடத்து மாசில்லாமலிருக்கவேண்டும். மற்றதுவே அறனாகும்.

‘மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற’

என்றாங்கு நாயனார் கூறியிருத்தலையுங் காண்க.

‘யாமிளையோம், பொருள் வருவாயதிகமின்று’ என்றின்னோரன்ன வீணெண்ணங்களின்றித் தத்தமக்கியலுந் திறத்தான் அறவினையை யிடைவிடாது அறுசெல்லு மிடமெங்குஞ் செய்துவரல்வேண்டும். என்னை! ‘செயற்பாலதோருமறனே’ யாகலின் இச்செய்குறைகளை நீக்கிப்பின்னர் அறவினையை யறிவாம் என்றிருப்பார் தம்மை அலைகடலாடச்சென்றார் ஓசையொருங்க விந்தபின் ஆடுவோமென்றிருப்பதை யொக்குமாகலின், இன்றென்றும், நாளையென்றுங் கூறிக்காலத்தை வீணேகழிகாது கூற்றம்பிடரிக்கண் உள்ளானென்று கருதிச்செயற்பால சிவதருமங்களைச் செவ்வனேபுரிய முன்வரல்வேண்டும் ‘கரும்பாட்டிக்கட்டி சிறுகாலைக் கொண்டார் துரும்பெழுந்து வேங்காற்றுய ராண்டுழவார்-வருந்தி-உடம்பின் பயன்கொண்டார் கூற்றம் வருங்காற்பரிவதிலர்’ என்பது பெரிதுங்கவனிக்கற்பாற்று.

அறஞ்செயப்புகுவான் பொருள்வழிச் செய்யமனமில்லாதிருப்பினும் அவன் முதலில் அஃதை விரும்புவானாக. விருப்பமறத்தின் மேற்சாரின்பின் நலம்பயக்குமென்ற நயம்வாய்ந்த ‘அறஞ்செயவிரும்பு’ என்றதன் கருத்து நுணுகி யறிதற்பாலது. பிச்சைக்கு வந்த இரவலன், மறுநாளும் ஒருவனில்ல நுழையின், அவன்மீது, அறத்துக்கு நேர்பகையாகிய சினஞ்செயக்கூடுமாகலின் சினந்தவிர்தற்பாற்று எனவிலக்குதற்கு அதன்பின் ‘ஆறுவது சினம்’ என்றதமைந்திருந்தல் பெருவனப்பாகும். ஓர்கால் சினங்கொள்ளின் அறங்கெட்டுச் சிதையுமாகலின், அறஞ்செயமனமிலாதா னொருவன், மெல்லக்கொடுக்கக் கூடியவற்றைக்குறைத்துவரின், வறியன் ‘இவனிடம் செல்லுதல்கூடாது குறைத்திடுகின்றான்’ என நினைந்துப் புறம்போவான்’ பின் நாம் உய்தல் கூடும் என வுன்னிக்கொடுத்தலைக் குறைத்தல்கூடும்; இது முற்

றும் ஒழிக்கற்பாற் றென்றற்கே அதனையடுத்து 'இயல்வது கரவேல்' எனக்கூறுவா ராயினர். இதனை

'இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவினுந் தேற்றாதார் மாட்டு'

என நம் நாயனர் சிறப்பித்துரைத்திருத்தலைக் காண்க.

தான் கொடுக்க மனமிலனாயினும் பிறர்கொடுப்பதைத் தடுக்கலாகாது என்ற பெருநீதியமைந்த ஈவது விலக்கேல் என்பதனை அடுத்தாற்போல் அமைத்திருத்தல் மிகவும் மெச்சத்தக்கதாகும்,

'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்' ஆகலின்

பிறர் கொடுப்பதை யெஞ்ஞான்றுந் தடுத்தலொண்ணாது

4. அறத்தின் மேம்பாடு. மனிதன் புகழெய்துதற் குரித்தானவை மூன்றாகும். அறம்; குணம், கல்வியென்பனவாம். இவற்றுள் கல்விப்புகழ் மிகப்பெருமையாயும் ஜென்மங்கடோறும் அறப்புகழ்போலப் பின்றொடர்வதாயினும் அறப்புகழுக்குப் பின்னாகவே வைத்தெண்ணப்படும்.

இம்முறைகளை 'அறஞ்செய விரும்பு.' 'ஆறுவது சினம்' 'இயல்வது கரவேல்' 'ஈவது விலக்கேல்' 'ஊக்கமது கைவிடேல்' 'எண்ணெழுத் திகழேல்' ஆகியவற்றா லறிக,

கல்வியாலெய்தும் புகழ் அறப்புகழினும் மேம்பட்டிருக்குமாயின் 'எண்ணெழுத் திகழேல்' என முதலிற் கூறியிருக்கலாமன்றே' அங்ஙனங்கூறாது அறத்தை முதற்கண் நிறுத்தியதால் அதன்பெருமை தெற்றென விளங்குமென்க. இதை

'ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு'

என்ற குறளாலும் நன்கு அறியலாம். புருடார்த்த நான்கனுள் அறம் முதலில் நிறுத்தப்பட்டவாறு காண்க. ஏனைப்பொருளின்பம்போலாது வீயின்பத்தையும் தருதலின் அறமே அறப்பெரிய பொருளென்க.

'கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்



அடுக்கிய மூவுலகுங் கேட்குமே நல்லார்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்'

என்றதூஉங் கவனிக்கற்பாற்று.

'சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல,' இதனையே

ஏனையவை வழிபடுவதாலும், இருமையின்பத்தினையும் பயப்பதாலும் இதனின் மிக்கதோ ருறுதியப்பொருள் வேறில்லை. புறநானூற்றிற் பலவிடங்களிலும் இதன்பெருமையே பரக்கக் கூறப்பட்டுளது,

'தருமமே போற்றிடு னன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சியெய்து மேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்'

என்பது கந்தபுராணம் இதனாற் றருமமே ஏனையகுணங்களமைதற்கேற்ற பண்பாம். ஆன்றோர் பலரும் கடவுளையும் இந்நாமத்தாலன்றோ கூறுவாராயினர்.

உதாரணமாக, அன்பே யுருவமைந்த ஸ்ரீகாரைக்காலம்மையார் சிவபெருமானை வரம்வேண்டியபோது,

'இறவாத வின்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னையென்று
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவா நீ யாடும்போ துன்னடியின் கீழிருக்க வென்றார்,

என்றுவேண்டிச் சிவபெருமானை 'அறவா' எனவிளித்திருக்கின்றார். அறக்கடவுளை யடைதற்கு அறமே காரணமாகும்.

அறம்பொருள் வழியைச்சார்ந்தாலும், பொருளிலாதான் எங்ஙனமறமியற்றக்கூடும் எனின் நன்றுகடாயினாய், பொய்கூறாமை, கள்ளாமை, கொல்லாமை, புலாலுண்ணாமை, அழுக்காறாமை, பிறர்பொருளபகரியாமை, பிறர்மனை நயவாமை, அடியார்ப் பிழையாமை யாதியனவும் அறமாக யாவர்க்கு மொத்தலின் இக்குணங்களுடையராய் வழுவாதொழுகுதலும் சாலச்சிறந்த வறமே யாம் எனக்கூறிவிடுக்க. அடியார்களிடத்து அன்புசெலுத்துதல், இயன்றவாறு மனவன்புடன் பொருளீந்து உபசரித்தல், கேட்ட

வற்றையீதல், அன்னமளித்தல் முதலியன சிறியசிவபுண்ணியங்களாம். என்னை சிற்பரஞ்சோதிச் சிவபெருமான் தொண்டருள்ளத் தணுக்கமாய் நிற்பதாலும். அவர்மாட்டுச் சொலற்கரிய பேரன்புடையரா யிருத்தலாலு மென்க. நாயன்மார் சரிதங்களை யுளங்கனிந் தோதுதலும் பிறர்கேட்ப வுரைத்தலும் உத்தமசிவபுண்ணியமாகும். சிவபெருமான்கோயில் கைங்கர்யங்களுக்குப் பொருளீதலும், மடங்கள் சத்திரங்கள் குளங்கள் ஆதியவற்றைச் சீர்படுத்தப் பணமுபகரித்தலும பெரும்புண்ணியமாகும். நம் சைவ சித்தாந்தசபை தில்லையம்பலக் கூத்தனருளாற் றுவக்கப்பட்டு இற்றைவரை நன்கு நடைபெற்று வருவதை நண்பர் பலருமறிவர். இதுநாடோறும் விருத்தியாம்பொருட்டு அன்புடைய உத்தமசீலர்கள் தத்தமக்கியன்றவாறு பொருளீதலைச் சிவதருமமெனக்கொண்டு உதவி வருவார்களாயின் அவ்வறப்பெருஞ் செயலின்பயன் இனைத்தெனக் கூறவும் ஒண்ணுமோ.

'உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்
டிறப்ப நிழற்பயந் தாங்கறப் பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்து விடும்'

ஆகலின் நண்பர்களே! தமிழாபிமானிகளே! கிடைத்தற்கரிய மானிடப்பிறவியை யெய்திய நீவிர் இத்தகைய பேரறச்செயலுக்கு முற்படுவீர் முற்படுவீர்.

அறங்கை வரப்பெற்றான் தெருண்மிகவுற்று ஈற்றில் சிற்சிவபதமாம் பேரின்பநீழலி லமர்தல் திண்ணம் திண்ணம்.

சே. ரா. திம்மப்பையன்,

## மனநினைவு.

சிவநேசச் செல்வர்காள்!

இம்மகுட நாமத்தைக் குறித்து ஒருவியாசம் எழுதத்தொடங்கிய எனது அறியாமையை நிந்தியாது விஷய அங்கீகாரர்களாய் ஒழுகும்வண்ணம் திருவருளை முன்னிட்டு யான் உங்களை வேண்டுகின்றேன்.

மனம் என்றால் பகுத்தறிவுக்குக் கருவியாகிய சக்தி என்பதே சிறந்த அர்த்தமாகும். முன்னைய மூதறிவாளர் கருத்தும் இஃதே! நினைவு = எண்ணம், சிந்தனை. எனவே, எக்காலங்களிலும் ஒரே தன்மைத்தாக இராது பலவற்றையுங்கருதி, விரும்பிக் சம்மதங்கொடுத்துப், பின்வருவன உணராவியற்கை யுடையது மனமாகும். மனம் இல்லாவிட்டால் பிரபஞ்ச பிரபாவம் எவ்வகையினும் விளக்கமுறமாட்டாது. மனம், இன்னத்தன்மை யெனப் புலப்படுதற்கு மனோதத்துவ ஆராய்ச்சியுடையவரே அதனை ஒப்புக்கொள்வர். "பிரபஞ்சத்தோடு மனுஷிகளுக்கும் ஆதாரமாயிருப்பவர் சிவபரம்பொருளே" என்று முண்டகோபநிஷதம் முழங்குகின்றது.

மனம் ஒருநிலையில்லாதது. ஆத்மஞானத்தைக்கடந்து சிவஞானமுதிர்வு கண்ட பேரறிவுடையோர் மனதை வெல்லுவார்கள். ஏனையோர் மனவழிநின்றும் புலன்வழிச்சென்றும், அறிவின்னிறைந்த ஆநந்தப்பொருளை யுணராது மயங்குவர்.

மேலோரும், "பாவத்தை நசிக்கச் செய்தவன் பிரம்ம சிற்சொரூபியிடத்து மனதைச்செலுத்தி அதுவே ஆத்மஸ்வரூபமாக அடைந்து, அதனிடத்தே விருப்படைந்து, அதே சிறந்த பதவியென்று வேறு மார்க்கங்களைவிட்டு முத்தியடைகின்றான்" என்றார்.

இதனாலே மனவுறுதியான பக்தி வழிபாடு முத்தியளிக்கும் என்பதுபெற்றாம். மனதை அடக்கல் மிக்க அருமையாகும்.

மனதை யடக்கமுடியாது என்பதைத் தாயுமான சுவாமிகள் "சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது" என்னுந் தொடருட் சூசிப்பித்தருளினார். இங்ஙனங்கூறியது அருமைநோக்கியன்றி எங்களை மனவழியேசென்று தீத்திறனுடைய செயல்களைப்புரியும் பொருட்டன்றாம். மனதின் செய்கை அறிவையத் தானே நன்மை தீமைகளை விளைப்பதாகும். நன்மனமே மேன்மையது. அஃது,

"ஓடும் பொன்னு முறவும் பகையுமோர்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையும்
வீடுங் கானமும் வேறற நோக்குதல்
கூடுந் தன்மை கொளுமன நன்மனம்,"

என்பதனாலே இனிது விளங்குகின்றது.

விளங்கவே, மனதின் சுபாவம் ஒருவழி யுறுவதின்றுமாயினும், ஒரு நிலைப்படுத்தல் கூடுமென்பதும், ஒருவழி நின்றால் நின்மலனருள் சேருமென்பதும் ஒருதலையாகும். ஆகவே, மனதை உலகவின்பங்களிலும், பொருள்களிலுஞ் செலுத்தாது நடப்பதே முறைமையாகும்.

சகோதரர்காள் !

இவ்வுலக வாழ்வோ நிலையில்லாதது. எங்கள் சரீரங்களோ அழிந்துபோகின்றன. ஆன்மாக்கள் பலவாய் அழியாதுள்ளன. மலையென மன்னியகோபுர மாடமாளிகைகளும், மதிப்பரும் பொருளும் ஆன்மாக்களின் சுகத்திற்கு ஈடாகா. ஆதலின், கடவுளின் திருவருளே தஞ்சமாகும். திருவருளும் மனநிலையுடைய மாந்தரிடத்தேய்ந்ததாகும். எங்களுடைய வீணானசெயல்களும், சொற்களும் பிரயோசனமில்லன.

சிலர், நித்திரை மனிதனுடைய சுபாவமான ஒன்றன்றோ அதுபோல மனநிலையின்மை; கோபம் ஆதியன ஆடவனின்குணம் என்பர். மனிதனால் இவற்றைத் தவிர்த்தல்கூடும் என்பதையும், தவிர்த்துவருதலையும் பிரத்தியக்கமாக அறிக. மனநினைவு ஒருவழியானால் மரணமும் நீங்கும். மனநினைவு பிறவழிப்புகாதாயின் மதியணிகடவுளின் றிருவருள் சாரும், சுபம்.



"பண்டை வாசனை தொக்க பயிற்சியால்
கொண்ட காயநிலை யெனக் கொள்வரோ
வண்டரேனும் பிறப்புளதா மெனின்
விண்டு காய மிறப்பது மெய்யரோ."

திங்களணி செஞ்சடையோன் சேவடியைச் சேவிப்பார் தங்கும் மனநிலையாற் றன்.

இங்ஙனம்,

வ. மு. இரத்திநேசுவர அய்யர்,
தமிழ்ப்பண்டிதர்,
காரைக்குடி.

# பிரபஞ்ச உற்பத்தி.

அருவினி லுருவந் தோன்றி யங்காங்கி பாவமாகி
யுருவினி லுருவமாயே யுதித்திடு முலகமெல்லாம்
பெருகிடுஞ் சுருங்கும்பேதா பேதமோ டபேதமாகும்
ஒருவனே யெல்லாமாகி யல்லவா யுடனுமாவன்.

ஒழுங்காயும், முறையாயும், கொண்டுவரப்பட்டு நம்முடைய கட்புலனுக்குத் தோன்றுவன வெல்லாம் பிரபஞ்சம் என்று சொல்லப்படும். பிரபஞ்சம் அங்கப் பிரபஞ்சம் (Organic), அங்கமற்ற பிரபஞ்சம் (Inorganic) என்றிருவகைப்படும். பலவகையான அவயவங்களோடு கூடி வளருதற்கு ஏதுவானதும், அங்ஙனம் வளருவதினால் அது உயிரோடு கூடியதாகத்தா னிருக்கவேண்டுமென ஊகிக்கக் கூடியதுமான பிரபஞ்சமே அங்க பிரபஞ்சமென்றும், அவயவ வளர்ச்சியின்றியும், அவ்விதமிருப்பதனால் உயிரற்றதென ஊகிக்க இடந்தந்து நிற்பதுமான பிரபஞ்சமே அங்கமற்ற பிரபஞ்சமென்றும் சொல்லப்படும். என்னுடைய சரீரம் அங்க பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகும். நான் வசிக்கும் வீடு அங்கமற்ற பிரபஞ்சத்தின் ஓர் பகுதியாகும். இவ்விரு பிரபஞ்சங்களும் ஒன்றனுக்கொன்று மிக மாறுபட்டநிலையை உடையவா யிருப்பினும் ஒருபிரபஞ்சமின்றி மற்றொரு பிரபஞ்சம் நிலைபெறுதல் எவ்வகையினுஞ் சாத்தியமாகாவாறு அவ்வளவு நெருங்கிய சம்பந்தத்தை இரண்டும் உடைத்தாயிருக்கின்றன.

இனி, அங்க பிரபஞ்சம் அங்கமற்ற பிரபஞ்சம் இரண்டிற்கும் வித்தியாசம் யாது? என்னுடைய சரீரத்திற்கும் ஓர் தங்கக் கட்டிக்கும் இருக்கும் பேதம் என்ன? என்பதைச் சிறிதாராய்வோம். குழந்தைப்பருவத்தில் என்னுடைய சரீரம் எப்படியிருந்ததோ அப்படியே இப்போதில்லை. இரண்டு வருஷத்திற்கு முன் இருந்ததுபோலவும் இப்போது இல்லை. நேற்று என் சரீரம் இருந்ததற்கும் இன்று இருப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. சென்ற நிமிஷத்தில் இருந்த அதேசரீரம் இந்த நிமிஷத்தில் இல்லை. நிமிஷத்திற்கு நிமிஷம், கணத்திற்குக் கணம் எவ்வளவோ மாறுதல்களை என்னுடைய சரீரமடைகிறது. ஒரு தங்கக்கட்டியை எடுத்துக்கொள்ளுங்கள். கடந்த இருபதுவருஷ காலமாக அத்தங்கக்கட்டி ஒருவனுடைய வசத்தில் அப்படியே இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதில் ஏதாவது மாறுதல் உண்டாகுமா? இருபது வருஷத்திற்கு முன்பு அந்தக்கட்டி இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா? இல்லை; முன் இருந்ததுபோலவே இப்போதுமிருக்கிறது. இருபது வருஷத்திற்குமுன் இருந்த நிறை, வடிவு, வண்ணம், பிரகாசம், முதலியவைகளே இப்போதுமிருக்கின்றன. தங்கக்கட்டியில் தினைத்துணையு மாறுதல் ஏற்படவேயில்லை. ஆனால் என்னுடையசரீரம் இதே இருபதுவருஷகாலத்திற்குள் எவ்வளவு மாறுதல்களை அடைந்திருக்கிறது.

பொன்னும் பலவகைப்பட்ட பணிகளாக ஆக்கப்படவில்லையோ? அதனால் அதனுடைய உருவம் மாறவில்லையோ? எனச் சிலர் வினவலாம். ஆனால், அம்மாதிரியான மாறுதல் தானாகவே உண்டானதன்று. பொன்னை ஆபரணமாகச் செய்வதற்கு வேறொரு கம்மியன் வேண்டியிருக்கிறது. தங்கத்தை ஓரே இடத்தில் வைத்திருந்தோமானால் அந்தத் தங்கம் தானாகவே ஆபரணமாக மாறிவிடுவதில்லை, இதனால் இந்தமாறுதல் வெளியிலிருந்து உண்டாகும் மாறுதலேயன்றி உள்ளிருந்து தானாகவே ஏற்படும் மாறுதல் அன்றென்று ஏற்படுதலால், மேற்கூறிய ஆட்சேபம் பயனற்றதாய் முடிந்தது.

ஆகவே, அங்க பிரபஞ்சம் அங்கமற்ற பிரபஞ்சம் இரண்டிற்கும் உள்ள மிகவும் முக்கியமான வித்தியாசம், முதலது வளருமியற்கை யுடையதென்பதும் அவ்விதம் வளர்ந்துவருங்கால் அநேக மாறுதல்களுக்கு உள்ளாகிறதென்பதும், பின்னது வளர்ச்சி சிறிதுமின்றியும், மாறுதல் சிறிதுமின்றியும் எக்காலத்தும், ஒரே தன்மையதா யிருக்கிறதென்பதுமேயாம். இருவகையான பிரபஞ்சங்களுள் (Cosmos) ஒன்று இடைவிடாது மாறுதல் அடையக்கூடியதாயும், மற்றொன்று என்றும் ஒரே தன்மையதாய்ச் சிறிதும் மாறுதலின்றியும் இருக்கக்காரண மென்னவென்று ஆராய்வோம்.

அவ்விதம் ஆராய்ச்சி செய்வோமானால், அங்கப் பிரபஞ்சத்தில் தானே இயங்கக்கூடியதான ஓர்சக்தி அமைந்திருக்கிறதென்றும், அந்தச்சக்தியின் இடையறாத இயக்கத்தினாலேயே அவயவ வளர்ச்சிக்கு இன்றியமையாததான ஆற்றல் உற்பத்தியாகிறதென்றும், அங்கமற்ற பிரபஞ்சத்தில் அம்மாதிரியான தானே இயக்கும்சக்தி இல்லாதிருப்பதே அவயவவளர்ச்சி அப்பிரபஞ்சத்திற்கு ஏற்படாதிருப்பதற்குக் காரணமாமென்றும் புலப்படும். இவ்வுண்மையைப்புலப்படுத்த நாம் வேறு உதாரணம் தேடவேண்டுவதில்லை. முதலில் எடுத்துக்கொண்ட சரீரமும், தங்கக்கட்டியுமே போதுமானவை. என்னுடைய சரீரத்தை எடுத்துக்கொள்ளலாம், நான் பார்க்கவிரும்பினால் என்னுடைய கண்கள் பார்க்கின்றன. நான் கேட்க விரும்பினால் என்னுடைய செவிகள் கேட்கின்றன. நான் ஓடுவதற்கு விரும்பினால் என்னுடைய கால்கள் அத்தொழிலைச் செய்கின்றன. தங்கக்கட்டியை எடுத்துக்கொள்ளுங்கள். அதனால் பார்க்கமுடியுமா? கேட்கமுடியுமா? ஓடமுடியுமா? ஒன்றும் அதனால் செய்யமுடியாது. இதற்குக் காரணமென்ன? என்னுடைய சரீரத்தில் அறிவோடு கூடிய பிராணசக்தி (conscious life-power) அமைந்து கிடப்பதும், தங்கக்கட்டியில் அம்மாதிரியான சக்தி இல்லாததுமே காரணமாம்.

ஆனால், அங்கப்பிரபஞ்சம், அங்கமற்ற பிரபஞ்சம் ஆகியஇரண்டும், இவ்விரண்டிற்கும் அடிப்படையான பொதுவானதோர் ஆற்றலின் பலனாக, உற்பத்தியானவை. அந்தப்பொதுவான ஓர் வஸ்துவின் ஆற்றலினால் இருவேறு வகையான பிரபஞ்சங்கள் உற்பத்தியாயின என்று நாம் வைத்துக்கொண்ட போதிலும், அப்படிப்பட்ட ஆற்றலையுடைய ஒருபொருள் பிராணசக்தியோடு கூடிய பொருளா அல்லது பிராணசக்தியில்லாத பொருளா என்பதை ஆராயவேண்டும். அந்தப்பொருளில் பிராணசக்தியில்லாதுபோனால், அந்த ஒரேவஸ்துவின் ஆற்றலினால் இரண்டு வேறுவகையான பிரபஞ்சங்கள் வியாபகமாதல் சாத்தியமாகாது. பிராணசக்தி இருந்தால்மட்டும், அச்சக்தி வரையறையற்றதும் ஒழுங்கற்றதுமான பிரபஞ்சத்தில் பிரவேசித்துப் பிரபஞ்சத்தை ஒருவகைப்பட்ட ஒழுங்கிற்குக் கொண்டுவந்து படிப்படியாகக் கடைசியில்



அங்கபிரபஞ்சமாக்கக்கூடும். இதனால் அங்கபிரபஞ்சம் உண்டாவதற்கும், அதுவளருவதற்கும் அதனுள் பிராணசக்தி இன்றியமையாது இருத்தல் வேண்டுமென்பது பெறப்படுகிறதன்றோ. இம்மாதிரியே சிருட்டித் தொழிலைச்செய்யும் வஸ்துவும் பிராணசக்தியோடு கூடியதாயிருக்கவேண்டும். இந்தப் பிராணசக்தி எங்கே புலப்பட்டுத் தோன்றவில்லையோ அங்கெல்லாம் பிரபஞ்சத்தின் மூலகாரணம், முயற்சி சிறிதுமின்றி வறிதேகிடக்கும். இம்மாதிரி பிராணசக்தியின் பிரவேசமின்றி வறிதேகிடக்கும் பிரபஞ்சங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன மனிதசஞ்சாரம் இல்லாமலும், புற்பூண்டுகள் இல்லாமலும், வெறுமையான அண்டங்கள் பல இருக்கின்றனவென்று மேனாட்டுச் சாத்திரியார்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். உயிரற்ற கற்களினால் ஆக்கப்பட்ட பிரமாண்டமான மலைகளைப்பாருங்கள் பிரகாசிக்கின்ற வைரங்களைப்போல் அந்த மலைகளின்மேல் உறைந்துகிடக்கும் பனிக்கட்டியைப் பாருங்கள் கணக்கிடமுடியாதபடி தாவரப்பொருள்கள் அடுக்கடுக்காயிருக்கும் சுரங்கங்களைப் பாருங்கள் பிராணசக்தி சிறிதுமின்றி, கண்ணுக்குப் புலப்படாத அணுக்களினுஞ் சிறியமணலால் சேர்க்கப்பட்டுக் கட்புலனுக்குத் தோன்றும் எல்லையற்ற இந்த மண்ணுலகத்தைப் பாருங்கள் இந்தப் பூமிமட்டுமேயன்று; சூரியனினும் பன்மடங்கு பெரிதான எத்தனை உலகங்கள் வெகுதூரத்தில் அம்மனைகள் சுழல்வதுபோல் சுழன்றுகொண்டிருக்கின்றன. இவ்வுலகங்களோடு நம்முடையபூமியை ஒப்பிட்டால் இது ஒரு அணுவிற்குக்கூடச் சமானமாகாதே.

இம்மாதிரியாகப் பெரும் பகுதியான பிரபஞ்சம் பிராணசக்தியின்றி வறிதே கிடக்கக்காரணம் என்ன? இது ஏன் அங்கத்தோடுகூடி வளராமல் இருக்கின்றது? பிராணசக்தி நாளுக்குநாள் மாதத்திற்கு மாதம், வருஷத்திற்கு வருஷம் அமைந்துவருகிற அங்கபிரபஞ்சத்தை மென்மேலும் அபிவிர்த்திக்குக்கொண்டுவருதற்கு ஓர் சாதனமாகவே பெரும்பகுதியான பிரபஞ்சம் இம்மாதிரியான நிலையில் இருக்கிறது. அங்கமற்ற பிரபஞ்சத்திலிருந்தே அங்கபிரபஞ்சம் நாளடைவில் உண்டாகிறது. எவ்விதமெனில், அதிசூக்குமமான அசுத்த மாயையிலிருக்கும் சிறு அணுக்களெல்

லாம் ஒன்றுசேர்ந்து இரண்டு கண்ணுக்குப் புலப்படும்படியான தூல உருவாகத்தோன்றும். மாயை என்பதற்குப் பிராணசக்தியற்ற சடப்பொருள் (master) என்றுபொருள். அப்படிப்பட்ட பொருளின் வியாபகமே இந்தப் பிரபஞ்சமாதலால், இந்தப் பிரபஞ்சம் மாயாப்பிரபஞ்சம் என்றுபெயர் பெறுவதாயிற்று. மாயாபிரபஞ்சமென்றால் மாயையினின்றும் தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்சம் என்று அருத்தம். மாயையினின்றும் உற்பத்தியான இவ்வுலகம் முதலில் அங்கமற்றதாயிருந்து பிறகு பிராணசக்தியின் இயக்கத்தினால் அங்கபிரபஞ்சமாகித்தானேவளரும நிலைமையை அடையும். இவ்விதமான நிலைமைக்குவரமிகவும் நாட்செல்லுமாயினும், கோடிக்கணக்கான வருஷங்கள் சென்றபின்பு, அங்கமற்ற பிரபஞ்சமெனபேதயின்றி எல்லாம் அங்கத்தோடு கூடியனவாயும், பிராணசக்தியுடையன வாயுமாகிற ஓர் காலம் வரும்.

பிரபஞ்ச உற்பத்திக்கு மூலகாரணமான பொருள் ஒன்று இருக்கிறதென்றும் அந்தப்பொருள் பிராணசக்தி யமைந்ததோர் பொருளாகவே இருத்தல்வேண்டு மென்றும், முன்பு கூறினோமன்றோ? அந்தப்பொருளுடன் பிரிவற்று நிற்கும் சக்தியானது, ஒரே பொதுமையான வஸ்துவிலிருந்து பலவேறு வகைப்பட்ட அங்கப்பிரபஞ்சங்களையும் அங்கமற்ற பிரபஞ்சங்களையும் கட்புலனுக்குத் தெரியும்படி சூக்கும அணுத்திரள்களை ஒன்றுசேர்த்து, சிருஷ்டிக்கிறது. இந்தப் பொதுமையான மூலகாரண வஸ்துவை உபநிடதங்கள் அனிர்வசனீயம் என்னும் பெயரால் கூறுகின்றன. இப்படிப்பட்ட வஸ்துவென்று ஒருவாற்றானும் உரைக்கவும் அறியவும் கூடாதபடி இவ்வஸ்து அத்துணைச்சூக்குமமாக இருக்கும். இவ்வஸ்துவுடன் உணர்வோடுகூடிய அறிவுப்பொருளொன்று இருந்துவருகின்றது. அறிவற்ற சடப்பொருளாகிய அவ்வஸ்துவும் அறிவுள்ள சித்துப்பொருளாகிய இவ்வஸ்துவும் தனித்தனி வெவ்வேறாகவுள்ள பொருட்களாம் என்னும் பேதந்தோன்றாவாறு இரண்டும் ஒன்றனோடொன்று மிகநெருங்கிய சம்பந்தமுற்றிருக்கும். பின்சொன்ன அறிவுப்பொருள் முற்கூறிய சடவஸ்துவைவிட மிகச்சூக்குமமானதாயும் அறிவு நிரம்பியதாயு மிருப்பதாம் என்பது ஈண்டு கவனிக்கற்பாலது.



இங்ஙனம் சடப்பொருளாகிய வஸ்துவும் அறிவுப்பொருளாகிய வஸ்துவும் ஒன்றனுக்கொன்று பேதந்தோன்றாவாறு நெருங்கிய சம்பந்தம் பெற்றிருப்பதை அறியாமல் சடப்பொருள் என்பதொன்று அறிவுப்பொருளாகிய வஸ்துவின் வேறாகக் கிடையாதென்று ஒரு சாரார் வாதிப்பர். சடப்பொருளிலிருந்தே அறிவுப்பொருளுண்டாயிற்றென மற்றொரு சாரார் வாதிப்பர். இவர்களுடைய வாதம் பொருந்தாதமென்பதைப் பின்னர் விளங்கக் காட்டுவாம். அதற்கு முன்பு மாயாவாதிகள் இதுசம்பந்தமாய் வினவும் ஆட்சேபங்களுக்கு விடைகூறி அவர்தம் வினாக்கள் போலிவினாக்களாமென்பதை நிரூபிப்பாம். 'பிரபஞ்ச உற்பத்திக்கு அறிவுப்பொருளின் வேறாக அதிசூக்குமமாக இருக்கும் சடப்பொருளே மூலகாரணம் என்பதை யாங்ஙனம் விளக்குவீர்? இவ்வுலகை சிருட்டிக்கு ஆன்மாவே மூலகாரணமன்றோ? இன்னதன்மையது என்று ஒருவாற்றானும்விளக்கமுடியாதஅதிசூக்குமமானசடப்பொருள்ஒன்று இருக்கிறதென்று வைத்துக்கொண்டு அதைப் பிரபஞ்ச சிருட்டிக்கு மூலகாரணமாகக்கூறுவானேன்?' என்று இன்னோரன்ன பல வினாக்களை மாயாவாதிகள் வினவுகிறார்கள். இவ்வினாக்களுக்கு விடைகூறிச் செல்வாம்.

தூலமாயும் கட்புலனுக்குத் தோன்றுவதாயும் உள்ள சடப்பொருளாகிய இந்தப்பிரபஞ்சம் சூக்குமமாயும் கட்புலனுக்குத் தோன்றாததாயுமுள்ள சடப்பொருளிலிருந்தே உண்டாயிருத்தல் வேண்டும். உயிருள்ள அறிவுப்பொருளிலிருந்து உயிரில்லாத அறிவற்ற சடப்பொருள் உண்டாகுமென்றல் எவ்வாற்றானும் பொருந்தாதாம். ஏனெனில், இவ்விரண்டு பொருட்களும் தம்முள்முற்றும் மாறுபட்ட இலக்கணமுடையன. இப்போது கண்ணுக்குப் புலப்படும்படியாய் ஸ்தூலமாய் ஒன்று சேர்ந்திருக்கும் சடப்பொருளின் அணுக்கள் இன்னும் பலகோடி வருஷங்கள்சென்றால் தனித்தனியாகப்பிரிந்து கண்ணுக்குப் புலப்படாத சூக்குமநிலையை அடையும். நீங்கள் ஒருசிறு விதையைப் பூமியில் விதைக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். முதலில் அது வேரூன்றி, துளிர்த்து வருகிறது. அதன்பிறகு இலைகள், கிளைகள், முதலியன உண்டாகின்றன. இப்படியே அது வளர்ந்துகொண்டுபோனால்

கடைசியில் அது காய்த்துப் பழுக்கிறது. பழத்தின் விதையை மறுபடியும் எடுத்து விதைக்கிறோம். இதனால் மூலகாரணமான வஸ்து விதையென்றும், அதிலிருந்து இலை, தளிர், கிளை முதலியன உற்பத்தியாகின்றனவென்றும், அவைகளின் சத்தெல்லாம் கடைசியில் மூலகாரணமாகிய விதையில் ஒடுங்கி விடுகிறதென்றும் புலப்படுகிறதன்றோ?

மற்றோர் உதாரணமுங் கூறுகின்றோம். குயவன் களிமண்ணிலிருந்து மட்பாண்டங்களை வனைகிறான். பாண்டங்கள் எதிலிருந்து உண்டாயின? களிமண்ணிலிருந்து உண்டாயின. அந்தப்பாண்டங்கள் உடைந்துபோனால் என்னவாகின்றன. மண்ணோடு சேர்ந்து விடுகின்றன. மேகமாகமாறிய நீராவி ஆகாயத்தில் பரவியிருக்கிறது. அதன்மேல் குளிர்ந்த காற்றுபட்டவுடன், அது மழையாக வருஷிக்கிறது. மழையாக வருஷித்த நீர் மீண்டும் என்னவாகிறது சூரியஉஷ்ணத்தினால் நீராவியாகமாறி மறுபடியும் ஆகாயத்திற் பரவி மேகமாகிறது. ஒரே இலக்கணமுடைய ஒரேவஸ்துவின் ஒரு பாகத்தைப் பரிசோதித்துப் பார்த்தால் என்னமுடிவு பெறப்படுகிறதோ, அதேமுடிவுதான் அவ்விலக்கணமுடைய மற்றவஸ்துக்களை முழுவதும் பரிசோதித்துப் பார்ப்பினும் உண்டாகும். இவ்வுண்மை தருக்கநூல்முடிபான உண்மையாகும். ஆகவே, விதை, களிமண், நீராவி இம்மூன்றும் மூலகாரணங்கள் என்பதும், இவைகளின் காரியங்கள் முறையே மரமும், பாண்டமும், நீருமாம் என்பதும் கரதலா மலகம்போல் விளங்குவதொன்றும். காரணத்துக்கும் (Cause) காரியத்துக்கும் (Effect) ஏதாவது வித்தியாசமிருக்கிறதா ஆம்; இருக்கிறது. ஆனால் அந்த வித்தியாசம் வெளித்தோற்றத்தில் காணப்படும் வித்தியாசமேயன்றி வேறன்று. குணத்தில் வித்தியாசம் சிறிதும் ஏற்படாது.

களிமண்ணிலிருந்து குயவன் இரண்டு மூன்று குடங்களை வனைகின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம். களிமண்ணுக்கும் குடத்துக்கும் வித்தியாசமென்ன களிமண் சரியான ஒரு உருவத்தோடு இல்லாமல், மொந்தாகாரமான மண்ணுருண்டையாயிருக்கிறது. குடம் ஒரு உருவத்தை அடைந்திருக்கிறது. இதுதான் வித்தியாசம். ஆனால், மண், குடமானபிறகும் அந்தக்குடம் அக்



களிமண்ணின் இலக்கணத்தைக் கொண்டிருக்கிறதேயன்றி வேறில்லை. இதனால் மண்ணும் குடமும் உருவத்தில் மாறுபட்டிருக்கின்றனவே தவிர, குணத்தில் மாறுபடவில்லையென்பது இனிது பெறப்படவில்லையா? ஆகவே காரணம் என்பது காரியத்தின் சூக்குமநிலையாமென்பதும், காரியம் என்பது காரணத்தின் ஸ்தூலநிலையாமென்பதும் பெற்றாம். இவ்விதியைப் பிரபஞ்ச உற்பத்திக்கும் வைத்துப்பார்ப்போமானால், காரியப்பட்டிருக்கும் கட்புலனான இந்த ஸ்தூலப்பிரபஞ்சம், கட்புலனாயில்லாது சூக்கும நிலையை அடைந்திருந்த காரண வஸ்துவாகிய சடப்பொருளின்ஸ்தூலநிலைமையே யன்றிவேறன்று என்னுமுண்மை இனிதுபுலப்படும். "ஒருவஸ்து காரியப்பட்ட பிறகு, அதில் காணப்படுகின்ற உண்மைகளே அவ்வஸ்துவின் காரணநிலையிலும் காணப்படுதல்வேண்டும்,—ஆனால் சிற்சில வெளி வேறுபாடுகளுடன்" என்று அனுமான அளவையால் பெறப்படும் நியாயத்தைச் சைவசித்தாந்திகளும் சாங்கிய மதஸ்தரும் சற்காரியவாதம் என்று கூறுவர்.

இந்தப் பிரபஞ்சங்களைப்பற்றி நமக்கு என்ன தெரிகிறது? பிரபஞ்சங்கள் உயிரற்ற ஸ்தூலவஸ்துக்களால் ஆகியபெரும் அண்டங்கள் என்று பிரத்தியட்சமாய் அறிந்துவருகின்றோம். பிரபஞ்சங்களில் உள்ள வஸ்துக்கள் சிலவற்றில்மாத்திரம் பிராணசக்தி இயங்கிக்கொண்டிருக்கிறது பிராணசக்தியின் உதவியினால் இயங்கிக் கொண்டிருக்கும். இந்தச் சிற்சில வஸ்துக்கள்கூட பிராணசக்தியின் தொழில் நின்றவுடன் இயக்கமின்றிப்பிராணசக்தியே இல்லாத சடப்பொருட்களைப் போலவே உயிரற்றுப்போகின்றன. இத உயிரற்ற சடப்பொருளாகிய இந்த ஸ்தூலப் பிரபஞ்சத்தின் மூலகாரணம் உயிரற்ற சடப்பொருளாகிய ஒருசூக்கும வஸ்துவாமென்னும் உண்மைபெறப்பட்டது. ஸ்தூலப்பிரபஞ்ச உற்பத்திக்கு மூலகாரணமாய் அதிசூக்குமமான நிலைமையிலிருக்கும் சடப்பொருளுக்குப் பிரகிருதி மாயை என்றுபெயர். பிரகிருதி மாயையைவிட அதிநுட்பமாயும் சூக்குமமாயும் இருக்கும் வஸ்துக்கள் பல இருக்கின்றன. அவைகளைப்பற்றிப் பின்னர் பிரஸ்தாபிப்பாம்.

அனுபவ சித்தமாய் நம்முடைய பஞ்சேந்திரியங்களினால் அறியப்படும் அறிவினுக்கு வேறாய், ஒன்றைக்கிரகிக்கும் தன்மை மன

துக்கு இல்லை உருண்டை என்னும் வடிவம் வாஸ்தவத்தில் இல்லையென்றும், மனதில்தோன்றும் ஒருவகை சலத்தினால் உருண்டை என்னும் ஒருகுணத்தை மனம் கிரகிக்கின்றதென்றும் கொள்ளுவோமாயின், உருண்டை என்பதைப்பற்றிய அறிவு எல்லோருக்கும் நிகழவேண்டும். உருண்டை என்பது இன்ன இலக்கணத்தோடுகூடிய வடிவம் என்பதை அறியாத ஒருவனிடம்போய், எலுமிச்சம்பழம் என்ன வடிவத்தோடுகூடியது என்றுகேட்டால் அவன் பதில்சொல்லுவானா? சொல்லமாட்டான். ஏனெனில் முன்பின் உருண்டை வடிவம் இப்படிப்பட்டதென்பதை அறிந்தவனல்லன். பிறவிக்குருடனை யானையின் உருவம் எப்படியிருக்குமெனக்கேட்டால் அவன் பதில்சொல்லுவானா? உருண்டை, வட்டம், சதுரம் என்ற தொடக்கத்து வடிவங்களும், கருமை, வெண்மை, சிவப்பு என்ற தொடக்கத்து நிறங்களும் மனதின்கண் நிகழும் வெவ்வேறு வகையான சலனங்களின் பயனால் உண்டாகும் தோற்றங்களாயிருந்தால், பிறந்த குழந்தைக்குக்கூட அந்த உண்மை தெரிந்திருத்தல் வேண்டுமன்றோ? ஏனெனில், குழந்தைகளுக்கும் மனம் இருத்தலினாலென்க. ஆனால் உண்மை அப்படியில்லையே. குழந்தை வளர வளர உலகியல் அறிவும் உடன்வளர்ந்து வருகிறது. கண்ணால் பார்த்தும், கையால் பரிசித்தும், பிற அறிவுறுத்துவதுகொண்டும் அது வடிவநிற வேறுபாடுகளை அறிந்துகொள்ளுகிறது. ஆகவே, மனதின் வேறாகவஸ்து இருக்கிறதென்பதும், மனமும் வஸ்துவும் ஒன்றே தவிர வஸ்துவென்று தனியாக ஒன்று இல்லையென்று கூறுவோர் உரை பொருந்தாதென்பதும் பெறப்பட்டன.

இனி, மாயை என்பது அதிசூக்குமமான அணுத்திரள்களாமென்றும், இவைகளின் சேர்க்கையே கட்புலனாய்த் தோன்றும் இப்பிரபஞ்சமென்றும் முன்சொன்னோமல்லவா? இந்த மாயை சுத்தமாயை, அசுத்தமாயை என்று இரண்டு வகைப்படும். இவை இரண்டும் உயிரற்ற சடப்பொருள்களே. ஆனாலும் அசுத்த மாயையைவிடச் சுத்த மாயை அதிக நுட்பமாயும் சூக்குமமாயும் இருக்கும். இறைவனுடைய திருவருட் சத்தியானது, அசுத்த மாயையைக் காட்டிலும் சுத்தமாயையில் மிகுந்து தோன்றும். இந்தச் சுத்தமாயையே (Pure and subtle matter) அநேகனப்



பிரபஞ்சங்கள் அனைத்திற்கும் மூலகாரணம். இந்தச்சுத்த மாயை சைவசித்தாந்திகள் விந்துதத்துவம் என்று கூறுவார்கள். இதனுடைய வடிவம் புள்ளி (Point) வடிவமாகும். இச்சுத்த மாயையை இறைவனுடைய அருட்சத்தி, உள்ளிருந்து இயக்குகிறது. அப்படி இயக்கும்போது ஓர் ஓசை உண்டாகும். இந்த ஓசையே நாத தத்துவமெனப்படும். புள்ளி வடிவான விந்து தத்துவத்தை அதாவது சுத்தமாயையை அதனுட்கலந்து நிற்கும் திருவருட் சத்தி கலக்கும்போது நாததத்துவமுண்டாகும், இந்த நாததத்துவம் வரிவடிவமானது, இப்படி நிகழும் இயக்கத்தால் சுத்தமாயையின் அணுக்கள் அலை அலையாய் ஒன்றை ஒன்று தாக்கும். அப்படித் தாக்கும் உராய்ச்சி (Friction) யால் ஒரு நாதம் உண்டாகும். தயிரை மத்திட்டுக் கடைந்தால் ஒருவிதமான சத்தம் உண்டாவதுடன், அதன்கண் வியாபித்திருக்கும் வெண்ணெய் திரண்டுவருவதை எல்லோரும் பார்த்திருக்கலாம். அதுபோலவே சுத்தமாயையின் கீழ் வியாபித்திருக்கும் அதோ மாயை நாததத்துவத்தால் கடையப்படுகிறது. அப்போது அந்த மாயையின் அணுக்களெல்லாம் ஒன்றோடொன்று ஒட்டிப்பிரகிருதி மாயை உண்டாகிறது பிரகிருதி மாயையைவிட சூக்குமமான வஸ்துக்கள் இருக்கின்றன என்று முன்பு சொன்னோமல்லவா அவைகள் சுத்த மாயையும், அசுத்தமாயையுமாம். இந்தப் பிரகிருதி மாயையிலிருந்தே பலவித பேதங்களோடு கூடிய ஸ்தூலப் பிரபஞ்சங்கள் உண்டாயின.

ஆகவே, விந்து என்னும் சுத்தமாயையில் உண்டாகும் நாதமே இப்பிரபஞ்ச சிருஷ்டிக்கு ஏதுவாம் என்பது பெறப்பட்டது, இனி, இந்த நாதத்தோடு உடன்நிகழும் அக்கினியே இப்பிரபஞ்சத்தை ஒடுங்கிச் சங்காரநிலையில் கொண்டுபோய்ச் சேர்ப்பதாகும். இப்படியாகப் பிரபஞ்ச சிருஷ்டி நடைபெறுகின்றது என்னும் உண்மையைச் சிதம்பரத்தில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நடராஜமூர்த்தியின் திருவுருவத்தில் காணலாம். ஸ்ரீநடராஜப் பெருமானுடைய ஒரு திருக்கரத்தில் இருக்கும் வட்டமான டமருகத்தின் வாயே சுத்தமாயையாம். அந்த டமருகத்தில் பெருமான் தமது திருவிரல்களை வைத்திருப்பது, சுத்தமா

யையைக் கலக்கும் திருவருட் சத்தியைக் குறிப்பிடுகிறது. டமருகத்தில் நடராஜரின் விரல்கள் பட்டமாத்திரத்தில் உண்டாகும் நாதமே பிரபஞ்ச சிருஷ்டிக்கு ஏதுவான நாதத்துவமாம். பெருமான் ஒரு கரத்தை அமர்த்துங் குறிப்புத்தோன்ற வைத்திருப்பது சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சம் சிறிதுகாலம் நிலைத்திருக்குமென்பதைக் குறிப்பிடுகிறது. இறைவனின் மற்றொருகரத்தில் இருக்கும் அக்கினியே பிரபஞ்சங்களைச் சங்கரிக்கும் அக்கினி தத்துவமாம், இங்ஙனம் பிரபஞ்ச சிருஷ்டி நடைபெறுகிறதென்பதை ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள் பின்வருமாறு கூறி, நமக்குஉண்மை புலப்படுத்தியிருக்கிறார்கள்.

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாம நீர் வரைப்பின் நானில வளாகமும்
ஏனைய புவனமும் எண்ணீங் குயிருந்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
யனைத்தையுங் காப்பதுன் னமைத்த கைத்தலமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலு
மாற்றுவ தாரழ லமைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்து நின்
றாட்டுவதாகு நின்னூன்றிய பதமே
அடுத்த வின்னுயிர்கட் களவில் பேரின்பங்
கொடுப்பது முதல்வ நின் குஞ்சித பதமே.

நாகை-வி-கோபால கிருஷ்ணன்.

## பவணந்தியாரும் அவரியற்றிய நூல்களும்.

"சைவசித்தாந்த மகாசமாஜ" ஸ்தாபகரும், முன்னே சென்னைக் கிறிஸ்டியன் காலேஜில் உயர்வகுப்புத் தமிழ்ப் போதகாசிரியராய் இருந்தவரும், சைவசித்தாந்த மகோபந்நியாசகரும்' "ஞானசாகரம்" என்னும் தமிழ்ப் பத்திரிகை, "ஓரியண்டல் மிஸ்டிக் மைனு" என்னும் ஆங்கிலப்பத்திரிகை இவைகளின் பத்திரிகாசிரியரும்; "சமரச சன்மார்க்க நிலைய" குருபோதகருமான ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் பின்வருமாறு எழுதுகின்றார் :—

பவணந்தியார் இயற்றிய நூல்கள் இவைதாம் என்று வரையறுத்து ஓர் உரை வரைகவென்று செல்வச் சிரஞ்சீவி ஸ்ரீமாந். நாகை—வி. கோபாலகிருஷ்ண பிள்ளையும் ஏனைய அன்பர் சிலரும் எம்மை வேண்டிக்கோடலின்; அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிச் சுருக்கமான ஓர் உரை அதுபற்றி ஈண்டு எழுதுதற்கு ஒருப்பட்டேம். உலகநலங்கருதி உயர்க்க முயற்சிகள் பலவற்றுள் உறைத்து நிற்கின்றேமாதலின், இவ்வுரையினை விரித்தெழுதுதற்கு ஒழிவு காண்கின்றிலேம்; எனினும் இச்சுருக்க வுரைப் பொருள்கொண்டு நடுநிலை திறம்பாது உண்மை ஈதெனத்தெளிந்துகோடல் இன்னோரன்ன ஆராய்ச்சியில் விழைவு மிக்குநிற்பார் எல்லார்க்கும் இன்றியமையாத கடமையாம்.

பவணந்தியாரால் இயற்றப்பட்டனவாக இஞ்ஞான்று வழங்கிவரும் நூல்கள் நன்னூற்பெயர்கொண்ட எழுத்ததிகார சொல்லதிகாரங்களேயாம். இனி இவ்விரண்டு அதிகாரங்களின் வேறாகப் பொருள்யாப்பு அணி அதிகாரங்களும் அவர் இயற்றினரோ அல்லரோ என்பதே ஆராயற்பாற்று. இங்ஙனம் ஓர் ஆராய்ச்சி தோற்றுவித்தற்கு ஏதுவாய் நின்றது அந்நன்னூலின் முகத்தே பெய்து வைக்கப்பட்டிருக்கும் சிறப்புப் பாயிரமேயாம். இப்பாயிர வுரை

க்கண், 'ஐந்திலக்கணங்களையும் எல்லாரும் எளிதினுணருமாறு ஒரு நூல் செய்து தருக' வென்று சீயகங்கன் என்னும் அரசன் வேண்டியதற்கிணங்கிப் பவணந்தி என்பார் 'நன்னூல்' என்னும் பெயரால் ஒரு நூல் வகுத்தனர் என்பது கூறப்பட்டது. இதன்கட் போந்த சீயகங்கன் வேண்டுகோளுரையில் ஐந்து இலக்கணங்களும் இயற்றித் தரல்வேண்டு மென்பது தெளிவுறுத்தப்பட்டாற்போல, அவ்வேண்டுகோளுக்கு இசைந்து அவர் நன்னூல் இயற்றினா ரென்னும் உரையில் அவ்வைந்திலக்கணங்களும் அவர் இயற்றினா ரென்பது தெளிவுறுத் துரைக்கப்பட்டிலது. நூல்வரலாறு தெரிக்குஞ் சிறப்புப்பாயிர வுரையாய் எழுந்த இது, தன்னால் நுவலப்படும் நன்னூலின்கட் பகுத்துரைக்கப்பட்ட பொருள்கள் இவ்விவை என்று விளங்க எடுத்துக்கூறுதலே முறையாம். அங்ஙனம் நூற்பொருள்கள் இவையென்பது காட்டுதற்கு உரிய இடத்தே அவற்றைக்காட்டாது வாளா 'நன்னூற்பெயரின் வகுத்தனன்' என்று ஒழிதற்கு எதுவாய் நெகிழ்ந்துரை கூறிப்போதல் முறையன்றாம். அற்றன்று, முன்னர்ப்போந்த சீயகங்கன் வேண்டுகோளுரைக்கண் ஐந்திலக்கணங்களுஞ் செய்துதரல்வேண்டு மென்பது இனிதெடுத்துக் கூறப்பட்டமையின், பின்னர் அதற்கு ஒருப்பட்டு நன்னூல் இயற்றினரென்னும் உரைக்கண்ணும் அவ்வைந்தினையும் பெயர்த்து மெடுத்து மொழிதல்வேண்டா கூறலாமெனின்;—அறியாது கடாயினாய், நுண்மாண் நுழைபுலமுடைய கற்றோர் ஒருவரது கல்வி மாட்சியினை யுணர்ந்தோர், தாம் விரும்பிய நூல் எல்லாம் அவர் செய்துதரல்வேண்டுமென்றே அவரைப் பெரிதும் இரந்துகேட்பர் இஃதியற்கை. மற்று அவர் கேட்டவாறே அக்கற்றோர் எவ்வெந்நூல்கள் இயற்றினா ரென்பதனை அறிதற்கே எவரும் விழைந்து முந்துவராகலின், அவர் இயற்றின இவ்விவை என்று கிளந்தெடுத்துக் கூறுதலே வரலாறு தெரிப்பார்க்கு இன்றியமையாத கடப்பாடாம். இவ்வியற்கை நிகழ்ச்சி முறையில்வைத்துச், சீயகங்கன் ஐந்திலக்கணங்களுஞ் செய்து தருகவென்று கேட்டதுண்மையாகலாம்; ஆனால், அவன் கேட்டதற்கேற்பப் பவணந்தியார் அவ்வைந்திலக்கணங்களுஞ்செய்து தந்தனரோ, அன்றி அவற்றுட்சில பலகுறையவே செய்தனரோ



என்று உண்மையறிவுபெற விழைந்து ஆராய்வார்க்கு ஒருதலையால் ஐயஞ்செல்லுமாகலின், அவ்வையம் அறுத்தற்பொருட்டு இவ்விவைசெய்தார், அல்லது இவ்வைந்துஞ் செய்தார் எனக் கிளந்தெடுத்துக் கூறுதலே செயற்பாலதாம். அங்ஙனம் ஐந்துஞ் செய்தார் எனவாதல், எழுத்துஞ்சொல்லுமே செய்தார் எனவாதல் புலப்பட வகுத்துரையாது வறிதே 'நன்னூற் பெயரின் வகுத்தனன்' என மயங்கக்கூறிச்செல்லல் பாயிர முரைப்பார்க்குச் சிறிதும் இயையாத நெறியாம் என்க. தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் உரைத்த ஆசிரியர் பனம்பாரனார் இங்ஙனம் மயங்கவுரை கூறாது, "எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச், செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப், புலந்தொகுத்தோனே போக்கறுபனுவல்" என்று அந்நூல் அதிகரித்தபொருள் இவ்விவை என்பது தெற்றென விளங்கவைத்துரைத்ததூஉங் காண்க.

அற்றேல், நன்னூற்குச் சிறப்புப்பாயிர முரைத்தார் நன்னூலின்கண் அதிகரிக்கப்பட்ட பொருள் இவ்விவை என்று கிளந்து கூறாது "நன்னூற் பெயரின் வகுத்தனன்" என்று வாளா கூறியது தான் என்னையெனிற், கூறுதும். நன்னூற்குப் பாயிரம் உரைத்த புலவர், நன்னூலை ஆக்கிய பவணந்தியாரோடு ஒருகாலத்திருந்தனராயின் அவர் இயற்றிய நூல்கள் இவ்விவைதாம் என்று நன்கு அறிந்து அவற்றைக்கிளந்து கூறியிருப்பர். மற்று அவர் அவ்வாசிரியர் காலத்திலன்றிப் பிற்காலத்தில் இருந்தனாற்றான் அவர்செய்த நூல்கள் இவ்விவையென்று காணமாட்டாராய் அங்ஙனங் காணமாட்டாமையின் துணிபுரை கிளக்கலாது பொதுப்பட வைத்து 'நன்னூற்பெயரின் வகுத்தனன்' என்று கூறுவாராயினர். பவணந்தியார் இயற்றிய எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் பிற்காலத்தில் மிக்கு வழங்குதல் கண்டு, அதனைச் சிறப்பித்துப் பாயிரங் கூறுவான் புகுந்த பிற்றை ஞான்றைப் புலவர் ஒருவர், 'சீயகங்கன் ஐந்திலக்கணமுஞ் செய்து தருகவென வேண்டியதற்கு இசைந்து பவணந்தியார் நன்னூல் இயற்றினர்' என்றுபலர் பரம்பரை வழக்காகப் பொதுப்பட வழங்கி வருவதனை ஓர்

ந்து, அந்நூலில் எழுத்துஞ் சொல்லுமன்றிப் பொருள் யாப்பணி இலக்கணங்கள் இல்லாமையுங் கண்டு, ஐந்திலக்கணங் கேட்ட அரசன் கருத்துப்படி இவர் ஐந்தும் இயற்றினரோ, அன்றி எழுத்துஞ் சொல்லும் மாத்திரமே இயற்றினரோ என ஐயுற்று, அவ்வைபவத்தின் நீங்கித் தெளிதற்குத் தாம் வேறு வழி காணாமையின், தாம் கேட்டபடியே வைத்துத் துணிபுரை கிளவாது, தாங்கொண்ட ஐயம் நுனித்தறிவார்க்கு விளங்கும் வண்ணம் 'நன்னூற் பெயரின் வகுத்தனன்' என்று ஐயப்பொதுமொழித் தொடரே கொண்டு அப்பாயிர வுரையினை இயற்றியிட்டார். இனி இவர் பவணந்தியாரோடு ஒருகாலத் திருந்தனராயின், இங்ஙனம் ஐயுறுதற்கு இடம்பெறாராய், அவர் நன்னூற்பெயரில் இவ்விவ்வதிகாரங்கள் ஆக்கினர் என்று துணிபுதோன்றக் கூறியிருப்பரென்பதூஉங் கடைப்பிடிக்க. எனவே, நன்னூலுக்குச் சிறப்புப்பாயிரம் நுவன்ற புலவர் நன்னூலை ஆக்கிய பவணந்தியார் காலத்திலன்றி அவர்க்குப் பிற்காலத்தே இருந்தனரென்பதும், அவர் தங்காலத்தே நன்னூலில் எழுத்துச் சொல்லையன்றிப்பிற இலக்கணங்களைக் காணாராயினும் 'சீயகங்கன் ஐந்து இலக்கணங்களையுஞ்செய்து தருகவென்று கேட்டதற்கிணங்கிப் பவணந்தியார் நன்னூலை இயற்றினர்' என்னும் பரம்பரை வழக்கைக்கேட்டு 'ஒருகால் இவர் ஐந்திலக்கணங்களும் இயற்றினரோ' என ஐயமுற்றன ரென்பதும், அங்ஙனம் ஐயமுற்றது பற்றியே நன்னூல் இவ்விவ்விலக்கணங்களை நுதலுவதெனத் தோன்றக்கூறாது பொதுவகையால் வைத்து ஐயவுரையே கூறினரென்பதும் இனிது பெறக்கிடந்தன.

இங்ஙனம் நன்னூலுக்குச் சிறப்புப்பாயிரமாய் எழுந்தவுரையே நன்னூலுள் அதிகரிக்கப்பட்ட பொருள்களிவ்விவை என்று உரையாமல் ஐயுறவுகொண்டு நெகிழ்ந் தொழுகுமாயின், இஞ்ஞான்றுள்ள ஒருசிலர் பவணந்தியார் எழுத்துச் சொல்லேயன்றிப் பொருள்யாப்பு அணிகளும் இயற்றினர் எனத்தமக்குத் தோன்றியவாறேபற்றித் துணிந்துரைக்கு முரைவெறும் போலியுரை யாவதன்றி மற்றென்னை ?

அற்றன்று, "ஐந்துந் தருகெனச் சீயகங்கன் வேண்ட நன்



னூற்பெயரின் வகுத்தனன்" என்ற அப்பாயிரவுரையால் அவ்வைந்திலக்கணமும் இயற்றினரென்பது தானே பெறப்படுவதெனின் அறியாது கூறினாய்; ஐந்துந் தருகெனவேண்டினவனுக்கு அவன் வேண்டியவாறே நன்னூற் பெயரின் ஐந்தும் வகுத்தனன் என்று அப்பாயிரம் கிளந்து ஓதாமையின் அது பெறப்படுதல் யாண்டையதெனக்கூறி மறுக்க. பவணந்தியார் ஐந்திலக்கணமும் இயற்றினர் என்னும் மேற்கோளை வலியுறுத்தற்குச் சீயகங்கள் வேண்டுகோளுரையை ஓர் ஏதுவாகக் கூறுதல் சற்பிரதிபக்கம் என்னும் ஏதுப் போலியாய்த் தருக்க வழுவா மென்று உணர்க. என்னை? ஒருவர் வேண்டிய பொருளெல்லாம் அவர் வேண்டியவாறே செய்து தருதற் குடன்பட்டார் அவற்றைக் கடைபோகச் செய்து முடிக்க மாட்டுவார்' என்னும் நியதமான உடன் நிகழ்ச்சி நிலையாமையுள்ள இந்நிலவுலகத்தின்கண் யாண்டு மின்மையானும், ஒருவர் வேண்யவாறே வேண்டிடப்பட்டார் முற்றுஞ்செய்து முடிக்கும் ஆற்றல் இல்லாராய்ப் போதலும், வேண்டியதற்கு மாறாயின விளைதலும் நாளும் அறியப்பட்ட நிகழ்ச்சியாகலானும் என்க. கிளந்தோதுதற்கு இன்றியமையா இடமாகிய இச்சிறப்புப்பாயிர வுரையுள் அங்ஙனம் ஓதாமையே, அப்பாயிரம் இயற்றினர் நூலாசிரியன் காலத்தவர் அல்லரென்பதையும், அதனால் அவர் துணிந்துரை கூறற்கு இசைந்திலரென்பதையும் நிறுவுஞ் சான்றுமென முன்னரே விளக்கிப் போந்தாம்.

இனி, நன்னூலுக்கு அகலவுரைவகுத்த சங்கர நமச்சிவாயப் புலவரும் துணிபு தோன்றக் கூறாது 'போலும்' என்னும் ஐயச் சொற்பெய்து "இந்நூலுட் கூறிய பொருள் யாப்பணிகள் என்னு மூன்றதிகாரங்களும் அக்காலத்துள்ளன போலும்" என்று ஐயுற்றுங் கூறுதலின், இவ்வையவுரைகொண்டு பவணந்தியார் ஏனை மூன்றதிகாரங்களும் இயற்றினர் எனத்துணிபுரை கூறுவார் கூற்றுச் சங்கர நமச்சிவாயர் கூற்றினும் மிக்கது போலும்!

இனிப் பவணந்தியார் தாம் எடுத்த எழுத்ததிகார சொல்லதிகாரங்களை முடித்து, அவற்றின்மேல் வேறு மூன்றிலக்கணங்களும் எழுதுங் கருத்தில்லாமையால், தாம் அவ்விரண்டதிகாரங்

களால் முடிக்க தமது நூல்முழுவதற்கும் முடிபுரைப் புறனடைச் சூத்திரமாகவைத்த "பழையன கழிதலும்" என்பதனை, நன்னூலுக்குரை எழுதின சமணவுரைகாரர் பவணந்தியார் ஐந்ததிகாரத்திற்கும் சிங்கநோக்காக இச்சூத்திரத்தை நிறுத்தினார் எனக் கூறியது சிறிதுங் கொள்ளற் பாலதன்றாம். என்னை? ஆற்றொழுக்காகவும், சிங்கநோக்காகவும், தவளைப்பாய்த்தாகவும், பருந்தின் வீழ்ச்சியாகவும் நிற்கும் நால்வகைச் சூத்திரநிலை ஓர் இயலுள்ளும், ஓரதிகாரத்துள்ளும் வருவனவே யல்லாமல், ஓரதிகாரத்திற்கும் பிறிதோர் அதிகாரத்திற்கும் இடையில் ஒரு சிறிதும் வருவன அல்லவாகலினால் என்க. சீயகங்கன் ஐந்திலக்கணமுஞ் செய்துதருக வென்று கேட்டதேபற்றிப் பவணந்தியார் ஐந்திலக்கணமுஞ் செய்திருப்பார் என்று பிழைபட நம்பிவிட்ட அச்சமணவுரைகாரர், தாங்கொண்ட பிழையுணர்ச்சிக்கேற்ப நூலுள் முடிபுரையாய் நின்ற "பழையனகழிதலும்" என்னும் அச்சூத்திரத்தைப் பொருத்துவான் புகுந்து இடர்ப்பட்டுச், சூத்திர நிலைகளுக்கு ஓதிய இலக்கணவரம்பையுங் கடந்து, அதனை ஐந்ததிகாரங்களுக்குஞ் சிங்கநோக்காய் நின்றபுறனடைச் சூத்திரமென்றுரை கூறி இழுக்கினார். ஆகவே, தருக்க முறையறியாது பிழைபடமயங்கிய இச்சமணவுரைகாரர் உரையைப் பற்றுக்கோடாகப்பற்றி எழுந்தவர் அது முறிபட்டு வீழ்ந்து தாமும் இழுக்குறுவ ரென்றுணர்க.

இனிப்பெரிய தனிமொழித்தனியனுரைகாரரும் சீயகங்கன் ஐந்திலக்கணங்களுஞ் செய்துதருக என்றவுரையையே ஓர் ஏதுவாக்கொண்டு பவணந்தியார் ஐந்துஞ் செய்திருப்பரெனப் பிழைபடநம்பிக் கூறிய பின்னோராதலின், அவருரையுங் கொள்ளற்பாற்றன்றதல் சிறிதறிவுடையார்க்கும் விளங்கக் கிடந்தது.

பவணந்தியார் எழுத்துச்சொல்லேயன்றிப் பொருள்யாப்பு அணிகளும் இயற்றினரென இவ்வாறெல்லாம் பிழைபட வுணர்ந்த பின்னவர் சிலர் தருக்கத்திற்கு இசையாத வெறும் போலிநம்பிக்கையேபற்றி அங்ஙனங் கூறினரல்லால், ஆகாயத்தாமரைபோல் இலவாகிய அம்மூன்றதிகாரங்களிலிருந்து ஒரு சூத்திரமேனும்



எடுத்துக்காட்டிற்றிலராகலின், அவருரைகண்டு உண்மையறிவுடையோர் சிறிதும் மயங்கார் என்க.

அற்றேல் அஃதாக, சீயகங்கன் ஐந்திலக்கணங்களுஞ் செய்துதருக வென்ற வேண்டுகோளுக்கு இயைந்து நூல் செய்வான் புக்க பவணந்தியார் எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் மாத்திரமே செய்து ஏனைமூன்று அதிகாரங்களுஞ் செய்யாது விட்டமைதான் என்னை யெனின்;—அது சிறிது விளங்கக்காட்டுதும். முற்காலத்தவர்க்குப் பேரிலக்கணமாய் விளங்கியது தொல்காப்பியம் ஒன்றுமேயாம். இந்நூல் ஒன்றே ஐந்திலக்கணங்களையும் முற்றவெடுத்து முடியக்கூறும் முழுமுதல் இலக்கணமாகும். சொற்பொருட்டிட்ப நுட்பங்கள் செறிந்து, எடுக்குந்தோறுங் குறையாத பொருளாழமுடைத்தாய்க், கடல்போல் விரிந்து செல்லும் விழுப்பமும் மிக்கது இந்நூல். பிற்காலத்தவர் அறிவு ஆற்றல் குறைந்து இவ்வரிய பெரிய நூலைத்துவங்கிப் பயிலுதற்கு ஏலாதாகவே, அந்நூலை மிக வருந்திக் கற்றுத் தேறிய சான்றோர் சிலர் அந்நூலினுட்பொருள்களைத் தனித்தனியே எடுத்துப் பின்னவர் எளிதிலுணருமாறு வேறுவேறு சிற்றிலக்கணங்கள் செய்வாராயினர். இங்ஙனமே அந்நூலின்கட் சொல்லப்பட்ட அகப்பொருளிலக்கணமானது வேறு தனியாக எடுத்து 'இறையனார் அகப்பொருள்' என்னும் பெயராற் சுருக்கமாக இயற்றப்பட்டது; அதன் புறப்பொருளிலக்கணமானது 'புறப்பொருள் வெண்பா மாலை'யிற் சுருக்கமாக எடுத்து விளக்கப்பட்டது; அதன் யாப்பிலக்கணமானது "யாப்பருங்கலம்" "யாப்பருங்கலக்காரிகை" முதலிய சிற்றிலக்கணங்களில் தெளித்துக் கூறப்பட்டது; அதன் அணியிலக்கணமானது 'தண்டியலங்காரத்'தில் விரித்து விளக்கப்பட்டது. இவ்வாறு அதன்கட் கூறப்பட்ட பொருள் யாப்பு அணிகளை இனிது விளக்குஞ் சிற்றிலக்கணங்கள் பிற்காலத்துச் சான்றோராற் செய்யப்பட்டனவேனும், அதனுளெஞ்சி நின்ற எழுத்திலக்கண செவ்வனே விளக்கும் நூல்கள் அவரால் எழுதப்பட்டில. இது கண்ட பவணந்தியார் தொல்காப்பியத்தின்கட் போந்த எழுத்துச் சொல்லை மாத்திரம் வேறெடுத்துக்கொண்டு, அவற்றைப் பயில்வார் எளிதிலு

ணரும்படி விளக்கமாக நன்னூல் இயற்றி, ஏனைப்பொருள் யாப்பு அணிகளை விளக்குதற்கு 'இறையனாரகப்பொருள்' 'யாப்பருங்கலம்' முதலான ஏனைச் சிறந்த நூல்கள் இருத்தலின், தாமும் அவற்றிற்கு நூல்கள் எழுதல் மிகையாமென்ப துணர்ந்து, அவற்றை இயற்றாதுவிட்டனர் என்பதே தேற்றமாம் என்க.

சுவாமி வேதாசலசுவாமிகள்.

## சமாச்சாரங்கள்.

---

சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கம்:—இன்றியமையாத சிலமுக்கியகாரணங்களால் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினின்றும் அத்தியக்ஷர்கள் பலர் பிரிந்து, அவர்களால் நிகழும் ஆனந்த௵ சித்திரை௴ 1௳ (13-4-14) சோமவாரம் சென்னை ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தில் "சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச்சங்கம்" தாபிக்கப்பெற்றது. சங்கத்தின் உத்தேசங்கள் தொண்டைநாடு முதலியவற்றிலுள்ள தேவாரம்பெற்ற தலங்கட்கும், கூடுமானால் மற்றைய புராண தலங்கட்கும் யாத்திரை செய்தல், ஆதிவாரம் தோறும் வைதிக சைவபுராணங்களைப் பிரசங்கித்துவருதல், சுக்கிரவாரம் தோறும் பன்னிருதிருமுறைகளைப் பாராயணம்செய்தல் முதலியன. இச்சங்கத்தில் சேரவிரும்புவோர் இரண்டு அத்தியக்ஷர்கள் சம்மதம்பெற்று, சங்கத்தின் நிபந்தனைகட்கு உட்படுதல் வேண்டும். மற்றைய விபரங்கள் சங்கத்தின் காரியதரிசிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

---

சஷ்டிபூர்த்திமகோற்சவம்:— சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம் - பூவை - கலியாணசுந்தர முதலியாரவர்கட்கு நிகழும் 1914௵ மே௴ 8௳ சஷ்டிபூர்த்திமங்கள முகூர்த்தம் நிறைவேறினமையின் அது சம்பந்தமாக அடுத்த 10௳ ஆதிவாரம் பகல் 2-மணிக்குமேல் சென்னைத் தங்கசாலை வீதி ஸ்ரீ அருணாசலேச்சுரர் வசந்த மண்டபத்தில் ஸ்ரீமத் யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதரவர்கள் அக்கிராசனத்திகீழ் ஸ்ரீமத் சண்முகானந்த சுவாமிகள், ஸ்ரீமத் சச்சிதானந்தம் பிள்ளை பி-ஏ-அவர்கள், ஸ்ரீமத் திரு-வி கலியாணசுந்தர முதலியாரவர்கள், செந்தமிழ்ரத்னாகரம் ஸ்ரீமத் வல்லை-சண்முகசுந்தரமுதலியாரவர்கள் அரிய பெரிய மகோபந்நியாசஞ்செய்தார்கள். இடையிடையே தெய்வத்திருமுறை பாராயண நிகழ்ந்தது அனந்தரம் முதலியாரவர்களுடைய மாணவர்கள் இயற்றி யச்சிட்டுள்ள அவர் ஜீவியசரித்திரமும் குருதோத்திரமு

மடங்கிய புத்தகம் யாவருக்கும் விநியோகிக்கப்பட்டது. சைவ சித்தாந்த மகா சமாஜம் காரியதரிசி ஸ்ரீமத் கி. குப்புசாமி முதலியாரவர்கள் கூறிய வந்தனோபசாரத்துடன் மகோற்சவம் நிறைவேறியது.

---

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்:— இச்சபையார் தங்கள் சகோதர சபையார்களோடு, நிகழும் ஆனந்தஹூ வைகாசிமீ 16உ (29-5-14) சுக்கிரவாரம் மாலை சென்னை பார்க் ஸ்டேஷனில் ரெயிலேறிப் புறப்பட்டு பல்லாவரத்திலிறங்கி, அன்றிரவு ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளின் திருவவதார க்ஷேத்திரமாகிய குன்றத்தூரில் அப்பெருமானாரின் திருநட்சத்திர மகோற்சவ தரிசனஞ் செய்து, அடுத்த சனிவாரம் அவருடைய ஆத்மார்த்த க்ஷேத்திரமாகிய வடதிருநாகேச்சுரத்தில் அம்மையப்பருடைய அதிகாரநந்தி மகோற்சவ தரிசனஞ் செய்வார்கள். இவ்யாத்திரைக்கு வரும் சிவநேயர்களுக்கு இச்சபையின் சகோதரசபையார்களாகிய வடதிருநாகேச்சுரச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் மாகேசுரபூசை முதலிய உபசாரங்கள் செய்யப்படும்.

---

தொழிற்கல்வி:— இப்பெயர்கொண்ட மாதாந்தரசஞ்சிகை மதுரைத்தமிழ்ச் சங்கத்து வித்துவான், வண்ணக்களஞ்சியம், காஞ்சி நாகலிங்க முதலியாரவர்களால் வெளியிடப்பட்டு வருகிறது. தற்காலநாகரீகத்திற்கு தக்கபடி எத்தகைய தொழிலும் கல்வி சம்பந்தமாக நடத்தவேண்டியது இன்றியமையாதகடனாகலினாலும், அங்ஙனம் செய்யுந் தொழிலே நாளுக்கு நாள் விருத்தியாகுமாகலினாலும், அத்தகைய தொழிலினாலேயே வருவாய் அதிகமுண்டாகுமாதலினாலும், இவ்வாறு நடத்துவதினாலேயே பேற்றிசை சிறப்படைந்து வருதலினாலும், நம்மேயத்தினரும் அவ்வழக்கத்தினை அனுசரித்து மிகமேன்பாட்டினையடைய வேண்டுவது அத்தியாவசியமாகலினாலும், இக்காலத்திற்கு இது போன்றபத்திரிகைவெளிவரவேடுமென்பது புத்திமான்களது கொள்கையாம். இப்பத்திரிகை நாளுக்குநாள் விருத்திபடையும்படி இறைவன் திருவருள்புரிவாராக.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௫.] 1914-ஆம் ஜூன்மீ, [பகுதி ௬.

## வியாசசூத்திரவிசாரம்.

கிருஷ்ணத்வைபாயனரென்னும் வியாசர் இயற்றிய பிரமசூத்திரமென்னும் வியாசசூத்திரத்திற்கு முதலில் ஏற்பட்ட வியாக்கியானம் போதாயனமுனிவரியற்றிய போதாயன விருத்தியேயாம். இது பின்வந்த பாஷியகாரர்கள் எல்லாராலும் எடுத்தாளப்பட்டதாகத் தெரியவருகிறது. இரண்டாவது பாஸ்கரியம். இது வைஷ்ணவாத்துவித மதத்தின் வழியுள்ளது. மூன்றாவது ஸ்ரீ நீலகண்டசிவாசாரியர் பாஷியம். இது சிவாத்துவைத மதத்தின் வழியுள்ளது. இதில் "பூர்வாசாரியர்கள் இங்ஙனம் வியாக்கியானங்கள் செய்தார்கள் என்றும்" "வியாசசூத்திரம் பூர்வாசாரியர்கள் செய்த உரைகளாற்கலங்கியதுபற்றி" எனவும் கூறியிருத்தலின், போதாயன விருத்திக்கும், பாஸ்கரியத்திற்கும் நீலகண்டபாஷியம் பிந்தியதேயாம். ஸ்ரீவித்தியாரண்ணியரும் வேதபாஷியத்தினுமுந்தியது பாஸ்கரியமென்றனர். நான்காவது ஸ்ரீ சங்கராசாரியர் பாஷியம். இது கேவலாத்துவிதமத வழியுள்ளது. ஸ்ரீ அப்பயதீட்சிதரியற்றிய சிவாத்துவித நிர்ணயத்தா

ல் ஸ்ரீ நீலகண்டபாஷியமுந்தியதென்றும் ஸ்ரீ சங்கராசாரியர் பாஷியம் பிந்தியதென்றுந் தெரியவருகிறது. ஐந்தாவது யாதவீயம். இது அத்துவிதமரபாயுள்ளது. ஆறாவது ஸ்ரீராமாநுஜபாஷ்யம் இது வைஷ்ணவபரமாயுள்ளது. இராமாநுஜர் யாதவப்பிரகாசரிடத்துப் படித்ததாயும் யாதவீயத்தைக்கண்டித்திருப்பதாயுந் தெரியவருகிறது. ஏழாவது ஸ்ரீ ஆனந்ததீர்த்தாசாரியர் பாஷியம். இதில் ஸ்ரீசங்கரபாஷியத்தை முற்றும் கண்டித்து ஸ்ரீராமாநுஜர் பாஷியத்தில் சிலபாகம் மறுத்து எழுதப்பட்டிருக்கிறது. எட்டாவது ஸ்ரீ வல்லபாசாரியர் பாஷியம். ஒன்பதாவது ஸ்ரீ சோமநாதாராத்திரியர் பாஷியம். இது வீரசைவம்.

வியாசசூத்திரத்திற்கு இதுகாறுங்கூறிய பாஷியங்கள் ஒன்பது. ஸ்ரீ ஆனந்த தீர்த்தர் சரித்திரத்தில் இவர் இருபத்தொரு பாஷியங்களைக் கண்டித்ததாகத் தெரியவருகிறது. ஆகவே, வியாசசூத்திரத்திற்குப் பலபாஷியங்களுண்டெனத் தெரியவருகிறது. இவற்றுள் ஸ்ரீ நீலகண்டபாஷிய மொன்றுமே சைவபாஷியமெனச் சைவர் பலர் கூறிவருகின்றனர். இது சைவபாஷியமாகவிருக்குமேல், அகச்சமயங்களுள் ஒன்றாக வைத்து ஸ்ரீஉமாபதிசிவாசாரியசுவாமிகளால் கண்டிக்கப்பட்ட நிமித்தகாரண பரிணாமமாகிய சிவாத்துவிதசைவப் பெயரால் இப்பாஷியம் வழங்குவானேன்? ஸ்ரீ நீலகண்டர் தமது பாஷியத்தில் அனேக உபநிடத பிரமாணங்களைக்காட்டிச் சிவபெருமானே பரம்பொருளென வச்சிரலேபமாக நாட்டியுள்ளார். இது சைவர்கள் யாவராலுங் கொண்டாடத்தக்கதேயாம். இவர் காட்டிய பிரமாணங்களால் தாபிக்கப்படும் சிவபெருமானாகிய முதல்வனைப் பற்றி ஏதாவது வியாச சூத்திரத்தினுளதோவென வாராயின் சந்தேகத்திற்கு இடமாயிருக்கிறது. சிவசப்தமாவது விஷ்ணு சப்தமாவது வியாசசூத்திரத்திலில்லை. பிரமசப்தமேமலிந்து கிடக்கிறது. அப்பிரமசப்தம் சிவசப்தத்தின் பரியாயவார்த்தையெனக் கொள்ளுவமேயாயின், ஸ்ரீ. இராமாநுஜர் கொள்கையின்படி பிரமசப்தம் விஷ்ணுவின் பரியாயநாமமெனக் கூறுவதைத் தடுக்க முடியாதெனத் தெரியவருகிறது. சைவ வைஷ்ணவ பாஷ்யங்களில் எடுத்துக்காட்டியுள்ள உபநிடதப் பிரமாணங்களினாலேயே இவ்வுண்மை வெளிப்படும். அன்றியும்



ஏகான்மவாதக்கொள்கைக்கே உரியபிரமபரிணாமவார்த்தை வியாசசூத்திரத்திலிருக்கக்கண்டு சைவ வைஷ்ணவ பாஷியகாரர்கள் அதனைத் தங்கள் சமயங்கட்கு வெகு கஷ்டத்துடன் திருப்பியருத்தஞ் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இங்ஙனமாக, வியாசசூத்திரத்திற்குள்ளே எந்தபாஷியத்தின் கருத்துப்புகுந்து கொண்டிருக்கிறது எனத் தெரிதற் கிடமில்லை மதாபிமானத்தால் தங்கள் தங்கள் பாஷியமே வியாச சூத்திரத்தின் கருத்தெனச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால், வியாசர் சூத்திரத்தை ஒருபுறமொதுக்கிவைத்து, ஸ்ரீநீலகண்ட பாஷ்யத்தில் காட்டப்பட்டுள்ள பலிஷ்டபிரமாணங்களைக் கொண்டு மற்றையர் பாஷியகாரர்களின் கருத்தைப் பூர்வபட்சமாக்கத் தடையில்லை. ஏனெனின் இவர் காட்டிய பிரமாண மனைத்தும் வேதாந்தமேயாகலின், ஈண்டு வேதாந்த மென்றது உபநிடதங்களை.

நிற்க, வடமொழி தென்மொழி கரை கண்டுணர்ந்த மாதவச்சிவஞானயோகிகளும், இவருக்கு முந்திய சித்தாந்தப் பிரகாசிகை யாசிரியரும் வியாசசூத்திரத்தினை ஏகான்மவாதநூல் என்றதென்னை? சுத்தாத்துவிதசித்தாந்த வைதிகசைவர்கள் அனைவராலும் கொண்டாடப்பெற்றுப் போற்றிவரும் திராவிட மகாபாஷியத்தில், வியாச சூத்திரமாகிய வேதாந்தமானது உரூடப்பெயரால் எடுத்துக்கூறும் ஏகான்மவாதத்தைச் சாதிக்கும் வியாசநூல் என்றதென்னை? ஆசிரியர் சிவஞானயோகிகள் தமது பாஷியத்தில் ஸ்ரீநீலகண்டபாஷியத்தை மாத்திரம் எடுத்தாண்டு இப்பாஷ்யத்திற்கு மூலமாகவிருந்த வியாசசூத்திரத்தை யொதுக்கியதென்னை? வைதிக சைவ சித்தாந்தத்திற்கு மூலாதாரமாகப்பதிவாக்காகிய வேதபாஷியமான சிவாகமங்கள் போதாவோ? பசுவாக்காகிய வியாசசூத்திரம் அவசியமோ? ஸ்ரீகண்டசிவாச்சாரியர் நீங்கலாக, மற்றைய பாஷியகாரர்கட்குப் பதிவாக்காகிய சிவாகமங்கள் உடன்பாடன்மையின் பசுவாக்காகிய வியாசநூலையாதரவாகத் தேடவேண்டுவது அத்தியாவசியமன்றோ? வைதிக சித்தாந்தத்தின் உண்மையினை யறியவும் தாபிக்கவும் வியாச சூத்திரம் அவசியம் வேண்டுமோ? இந்நூலைக்கைவிட்டால் சித்தாந்தத்திற்கு ஏதாவது ஆபத்து விளையுமோ? வியாச சூத்திரத்தையன்றிச்

சித்தாந்தத்திற்கு ஆதாரமில்லை யென்பதைத் திருக்கைலாய பரம்பரைத்திருவாவடுதுறை யாதீனத்து முனிவரர் அறியாரோ? வைதிக சைவ சித்தாந்த பாரங்கதர்கள் இவ்விஷயங்களில் சிறிது சிந்திப்பாராக.

மணவழகு.

---

## நீதி, க.

அதிபயங்கரமாகவும், ஒருவரும்போகக்கூடாததாயிருக்குங்காடும் ஒருவனுக்கு ஓர் ராஜாதானியாகும். சகலமானஜனங்களுக்கும் அவனுக்குஅனுகூலமாக ஆய்விடுகிறார்கள். அளவற்றஐஸ்வரியமுள்ள இந்தப் பூமண்டலமுழுமைக்கும் அவன் ஆளுகைக்குள் அடங்குகிறது. ஆகையால் ஜன்மாந்திரசுகிருதத்தின் பலன்படியே நமக்குஇப்போது பலன் கிடைக்குமாகையால், நாமெல்லோரும் எப்போதும் சன்மார்க்கத்தில் பிரவேசித்து நற்காரியங்களையே செய்தால்தான் அது உலகத்தாருக்கும் இதமாயிருக்கும். பின்னும் நமக்குப் பெரும்புகழும் கிடைப்பதுடன் மறுஜன்மத்திலும் கஷ்டமில்லாமல் வாழ வோர் வழியாகும்.

THE REGISTRAR OF ... 1914

# கடவுளின் உருவம்.

---

கடவுளுக்கென ஒரு உருவம் இல்லை. அவரை யார்யார் எவ்வெவ்வுருவமாக் வழிபடுவோர்களோ அவரவர்களுக்கு அவ்வவ்வுருவமாக இருந்து அவர் அருள் சுரப்பர். அவரை வணங்குவோர்களின் அன்பின் அளவாக அவர் அருள் வெளிப்படுதலால் அவரை வழிபடும் மெய்யன்பர்களின் அன்பே அவர் உருவமும் மனமே கோயிலுமாகும்.

### திருமந்திரம்.

அன்புஞ்சிவமுமிரண்டென்பரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருந்தாரே.

### அற்புதத் திருவந்தாதி.

வானத்தானென்பாருமென்க மற்றும்பர்கோன்
றானத்தா னென்பாருந்தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத்தாலிருண்ட மொய்யொளிசேர்கண்டத்தான்
என்னெஞ்சத்தானென்பன் யான்.

கடவுள் என்றும் அழிவின்றி ஒரேதன்மையாய் நிலைபெற்றிருத்தலினாலும், உண்மைநெறியில் நிற்பார்க்கே அவரருள் சுரத்தலாலும், உண்மை அவர் உருவம் எனவும், தமக்கு ஒருவர் அறிவிப் பாரின்றி அறிவுக்கறிவாய் எல்லா உயிர்களுக்கும் உணர்த்தும் பேரறிவாயிருத்தலினால் ஞானம் அவர்உருவமெனவும், என்றும் வரம்பிலின்பமுடையவராய்த்தம்மையடைந்த ஆன்மாவிற்கும் வரம்பிலின்பந்தருவதனால் ஆனந்தம் அவர் உருவம் எனவும் சொல்லப்படும். ஆதலால் அவரைச் சச்சிதானந்த உருவன் என்று கூறுவார்கள்.

சச்சிதானந்தம் என்பது சத்து சித்து ஆனந்தம் எனப்பிரிக்கப்பட்டு உண்மை அறிவு ஆனந்தம் எனப் பொருள்படும்.

கடவுள் எங்குநீக்கமற நிறைந்திருத்தலினால் எல்லாப்பொருள்களும் அவர் திருமேனியாகும். நிலம், நீர், தீ, காற்று ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய இவ்வெட்டும் அவர் திருமேனியாயிருப்பதனால் அவரை அட்டமூர்த்தியென்பார்கள். இதுபற்றியே வைதிகர்கள் இவ்வெட்டையும் வணங்குகிறார்கள். பிருதிவுரூபமான விக்கிரக வணக்கமும், கங்கைமுதலிய தீர்த்தவணக்கமும், யாகம் முதலிய அக்கினி வணக்கமும், சூரியபூசை, சந்திரபூசை முதலியனவும், அடியார்களைக்கடவுளாகப் பாவித்து வணங்கும் வணக்கமும், பஞ்சபூதத் தலங்களில் செய்யும் பஞ்சபூதவணக்கமும் கடவுளின் அட்டமூர்த்தவணக்கமேயாம்.

## திருவாசகம்.

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய வைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

## தேவாரம்.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா
யெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாச
வட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி
நெருநிலையா யின்றாகி நாளையாகி நிமிர்
புன்சடை யடிகணின்ற வாறே.

கடவுள் இருவகைப் பிரபஞ்சங்களினும் நீக்கமற நிறைந்திருப்பினும் அவையேதாமாகாமல் அவற்றின்வேறான முழுமுதற்பொருளாயிருக்கிறார். ஆதலால் அவர் நிலமல்ல நீருமல்ல, தீயுமல்ல, வளியுமல்ல வெளியுமல்ல, வேறெவையுமல்ல,



## தேவாரம்.

மண்ணல்லை விண்ணல்லை வலையமல்லை மலையல்லை கடலல்லைவாயுவல்லை, யெண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை, பெண்ணல்லையாணல்லை பேடுமல்லை பிறிதல்லை யானாலும் பெரியாய் நீயே, உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை யுணர்வரிய வொற்றியூருடைய கோவே.

## திருவிளையாடற்புராணம்.

பூதங்களல்ல பொறியல்ல வேறுபுலனல்லவுள்ளமதியின், பேதங்களல்ல வினையன்றிநின்ற பிறிதல்லவென்று பெருநூல், வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சவெளி யென்பகூடன்மறுகிற், பாதங்கணோவ வளையிந்தனுதிபகர் வாரையாயு மவரே.

கடவுள் நமக்கென ஒரு உருவம் இல்லாதவராகவும் நமது உணர்வுக்கு எட்டாதவராகவுமிருந்தால், அவரைநாம் எப்படி வணங்குவது என்றால், அவர் தமக்கென ஒரு நாமமும் ஒருஉருவமும் இலலாதவராயிருப்பினும் அளவுபடாத காருணிய மேலீட்டினால் ஆன்மாக்கள் தம்மைவணங்கிப் பிறவிக்கடலினின்று நாம்கரையேறவேண்டிப் பற்பல அருளுருவங்களைத் தாங்கிப் படைத்தல் காத்தல் முதலிய தொழில்களைச்செய்கிறார். அன்றியும் துட்டநிக்கிரகம் சிட்டபரிபாலனம் செய்ய வேண்டியும், சிற்றறிவுடைய ஆன்மாக்கள் விதிவிலக்குகளை யறிந்து தீவினைகளை யொழித்து நல்வினைகளைச் செய்து தமது உண்மை நிலையையுணருமாறு வேதாகமங்களைத் திருவாய் மலர்ந்தருள வேண்டியும் கடவுள் எண்ணிறந்த அருட்கோலங் கொண்டனர். இவ்வருட்கோலங்களே நாம் வழிபட்டுய்யும் உபாசனா மூர்த்தங்களாயிருக்கின்றன.

## தேவாரம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சிமயானத்தான் வார்சடையானென்னினல்லால், ஒப்புடையனல்ல னொருவனல்ல னோரூரனல்ல னொருவமனில்லி, அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக்காணினல்லால், இப்படியனிந்நிறத் தனிவண்ணத்தனிறைவனென் றெழுதிக்காட்டொணாதே.

கடவுள் தமக்கென ஒரு உருவமில்லாதவராதலால் அவரை ஆண் எனவாவது பெண்எனவாவது அலி எனவாவது சொல்ல இடமில்லை. ஆயினும், உலகம் சித்து அசித்து என இருவகையாகவும், அசித்துப் பொருள்கள் குணகுணிகளாகவும் இருப்பதுபோல் இவ்விருவகைப் பொருள்களையுந் தமக்குச் சரீரமாகக்கொண்ட கடவுளும் அருளாகிய குணத்தையே சத்தி அல்லது வல்லமையென்னும் மனைவியாக உடையவராய் உயிர்களுக்கெல்லாம் தாயுந்தந்தையுமாகியெழுந்தருளிப் படைத்தல் காத்தல் முதலியதொழில்களைச் செய்கின்றார். கடவுளும அவர் அருட்சத்தியுங்கூடி ஆணும்பெண்ணுமாயிருத்தலினாலேயே சித்துப் பொருள்களெல்லாம் ஆணும்பெண்ணுமாகவும் அசித்துப் பொருள்களெல்லாம் குணகுணிகளாகவும் இருக்கின்றன.

(குணத்தையுடையது குணியெனப்படும்.)

திருவாசகம்.

உண்டொரொண்பொருளென் றுணர்வார்க்கெலாம்
பெண்டிராணலியென் றறியொண்கிலை
தொண்டனேற் குள்ளவாவந்து தோன்றினாய்
கண்டுங்கண்டிலே னென்ன கண்மாயமே.
தோலுந்துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்கவளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்துதாய் கோத்தும்பீ.

கடவுள் உயிர்களுக்குத் தாயுந் தந்தையுமாகுந் திருமேனிகொள்ளாவிடில், அவருக்குப்படைப்பு முதலிய தொழில்கள் இரா. அவர் ஆன்மாக்களுக்கு அனுக்கிரகித்தலு மிராது. இதையறியாதார் கடவுளைத் தாயுந்தந்தையுமாக வழிபடுவாரைப் பார்த்துக் கடவுளுக்கு மனைவிமக்களும் உளரோ எனப்பரிகசிப்பர். இவர்கள் அவரைத்தந்தையாக மாத்திரம் வழிபடுவர். தாயின்றித்தந்தையில்லையாதலானும், தந்தையைக்காட்டினும் தாய்க்கே மக்களிடத்தில அன்பு அதிகமாதலானும், தாயினுஞ்சால தயாநிதியாகிய கடவுளைத் தாயுந்தந்தையுமாக வழிபடுதலே சாலச்சிறப்புடைத்தாம்.

## திருவாசகம்.

நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கடவுள் நமக்குத் தாயுந்தந்தையு மாத்திரமாகவா இருக்கிறார்! நமக்கு இருவினையொப்பும் மலபரிபாகமும் வரும்போது நம்மையாட்கொள்ளும் ஞானாசிரியராகவுமிருக்கிறார். பிரமாதி தேவர்களுக்கு அவரவர்கள் உலகங்களையாளும் அரசுரிமைகளைக் கொடுக்கவும் நீக்கவும் வல்ல சர்வலோகசக்கிரவர்த்தியாகவும் இருக்கிறார். நாம் தீவினைகளைச் செய்யமுயலும்போது மனச்சாட்சியாயிருந்து செய்யவேண்டாமென்று தடுக்குந் தோழனாகவுமிருக்கிறார். நினைக்குந்தோறுங் காணுந்தோறும்பேசுந்தோறும் கூடுந்தோறும் புதிதுபுதிதாகப் போகத்தை விளைவிக்கும் மனைவியுமாகவுமிருக்கிறார்.

## தேவாரம்.

அப்பனீ யம்மைநீ யையனுநீ யன்புடைய மாமனுமாமியுநீ, ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ, துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ, இப்பொன்னீ யிம்மணிநீ யிறைவனீ யேறூர்ந்தசெல்வனீயே.

கடவுளுடைய திருமேனி உருவத்திருமேனி யெனவும் அருவத்திருமேனி யெனவும் உருவும் அருவும் சேர்ந்த ரூபா ரூபத்திருமேனி யெனவும் மூவகைப்படும். இம்மூன்று திருமேனிகளும் அவருக்கு அனாதியாகவே உண்டு. அவர் எங்கும் வியாபித்தும் உளக்கண்ணாலன்றி ஊனக்கண்ணாற் காணக்கூடாமையால் அவருக்கு அருவத்திருமேனியும், படைப்பாதிதொழில்களைச் செய்தலால் உருவத்திருமேனியும், உருவெனவும் அருவெனவுஞ்சொல்லப்படாத நிலையினராய் ஏககாலத்தில் உருவும் அருவும் உடையவராயிருத்தலினால் ரூபாரூபத் திருமேனியும் கூறப்படும்.

### சிவஞான சித்தியார்.

அருவமோ ரூபாரூப மானதோ வன்றிநின்ற
உருவமோ வுரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்
அருவமும் ரூபாரூப மானதுமன்றி நின்ற [னில்
உருவமு மூன்றுஞ் சொன்ன வொருவனுக்குள்ளதாமே.

கடவுள் எங்குமாய் யாவையுமாயிருத்தலினால் அவருக்கு உலக மெல்லாம் உடலாகவும் உயிர்களெல்லாம் உறுப்புகளாகவும், திக்குகள் ஆடையாகவும் இருக்கின்றன. அவருக்குத்திக்குகள் ஆடையாயிருப்பதனால் திகம்பரன் என்னும் நாமம் உண்டாயிற்று.

### குமரகுருபர சுவாமிகள் திருவாக்கு

நான்மணிமாலை.

தேங்கு புகழாரூர்த் தியாகர்க் கெண்டிக்கு மொளி
விங்கு பகற்போது வெண்படமாம்—தூங்கிருள்சூழ்
கங்குற்போது கரும்படமாம் செம்படமாம்
பொங்குற்ற புன்மாலைப் போது.

கடவுள் கொண்டருளும் அருட்டிருக்கோலங்கள் எண்ணிறந்தவாயினும், பூவுலகத்தினர் தம்மை எளிதில் வழிப்பட்டு உய்யும்படி கொள்ளுந்திருமேனிகள் குருலிங்கம் (விக்கிரகம்) சங்கமம் (அடியார்கள்) என்னும் மூன்றுமாம். பால்பசுவின் சரீரமுழுவதும் வியாபித்திருப்பினும், அதன்முலையின் வழியாகச் சுரப்பதுபோல், கடவுளுக்குயாவும் திருமேனியாயிருப்பினும் குருலிங்க சங்கமம் என்னும்மூன்றிடங்களேமனிதர்கள் அவரைஎளிதில் வழிபட்டு அவரருளைப்பெறக் கூடிய இடங்களாயிருக்கின்றன.

### இருக்கம்-ஆதிமூல முதலியார்.

---

உ
கணபதிதுணை.

## சிவஞானபோதமுதனூல்விளக்கம்.

பிரணவம் தான் எல்லாவற்றிற்கும் ஆதியென்றும், அது தேவநாகர லிபியிற் காணப்படும் ஆகிரிதியல்ல வென்றும் பிரமஸ்ரீ காசிவாசி செந்திநாதய்யர் அவர்கள் "சைவசித்தாந்தத் தத்துவப்படவினவிடையில்" நிரூபித்திருக்கிறார். அது எல்லாருக்கும் தெரியும் பொருட்டு இதனடியில் வரைகின்றேன்.

பிரணவம் தேவநாகரலிபியிற் காணப்படும் ஆகிரிதியாய் இருக்க வேண்டுமா? கிரந்தலிபியிற் காணப்படும் ஆகிருதியாயிருக்கவேண்டுமா? என்பது சந்தேகம்.

பூருவபக்ஷம்:—நாகர லிபியிற் காணப்படும் பிரணவாகிருதியாயிருக்கவேண்டும்; ஆரியா தேசத்தில் வழங்கப்படுவதொன்றாகலானும், தேவ என்னும் விசேடணத் தோடியைந்து தேவநாகரி எனப்படுதலானுமாம் எனின்,

சித்தாந்தம் கூறுதும், அது ஒவ்வாது; கிரந்த லிபியிற் காணப்படும் பிரணவாகிருதியே கோடற் பாற்று;

"பரை, வாகீசுவரி, வித்தை, மாயை, பராவித்தை, பரவிந்து, பராசத்தி, மகாமாயை, குண்டலி என்பன (பிரணவகுண்டலியின்) பரியாயநாமங்கள்" என்று சிந்திய விசுவசாதாக்கியத்திற் காணப்பட்டா.

1. "பிரணவம் வில்லு" என்று முண்டகோபநிடதத்தில் கூறப்படலானும்,

2. "மூலநாடியாயும், வளைந்த சர்ப்பவடிவமாகிய குண்டலியாயும், அம்சத்தொனியுடையதாயுமுள்ளது (பிரணவம்) என்று ஞானசித்தியாகமத்திற் கூறப்படலானும்,

3. "முதலாம் உறுப்பு நக்ஷத்திரவடிவமாயும், இரண்டாம் உறுப்பு தண்டவடிவமாயும், மூன்றாம் உறுப்பு குண்டலாகாரமாயும், நான்காம் உறுப்பு அர்த்த சந்திரவடிவமாயும், ஐந்தாம் உறுப்பு விந்துவோடியைந்ததாயுமுள்ள ஐந்து இலக்கணமுடைய பிரணவம்." என்று சிவாகமத்திற் கூறப்படலானும்.

4. "(எழுத ஆரம்பிக்குங்கால்) எதற்குச் சிரசு வடபுறத்தினும், (முடிக்குங்காற்) பாதம் தென்புறத்திலும் இருக்கின்றதோ, எது எல்லாவற்றுக்கும் மேலாய் உள்ளதோ, அந்த மும்மாத்திரையுடைய சாக்ஷாத் பிரணவம் நான்" என்று பதுமபுராண சிவகீதையிற் கூறப்படலானும்,

5. "உலகத்துச் சராசரப்பொருளனைத்தும் மாயையாம் குண்டலியால் வியாபிக்கப்பட்டது" என்று ஞானசித்தியிற் கூறப்படலானும்,

மூலமெய்யெழுத்தன்னதோர் முதலைம்புரியின்
கோலமாகி நோற்றிருத்தியாலுலகருள் குறிப்பால்.

(கந்தபுராணம்—உமைகயிலை நீங்குபடலம், 47.)

வேதமூலநேர் வால்வளையுருக் கொடு விளங்கி
யேதமில்லதோர் பதும பீடத்தின் மேலிருந்தான்.

(உமைகயிலை நீங்குபடலம் 51.)

தேனிமிர் கமல மொன்றிற் சிவனிடத்திருந்த தெய்வ
வானிமிர் பணிலம் வைக மற்றவனது கண்ணுற்றான்.

(காளிந்திப்படலம்—17.)

6. பிரணவம் வலம்புரிச்சங்கு வடிவினதென்றும் ஸ்காந்தபுராணம் சங்கரசங்கிதையைச் சார்ந்த தக்ஷகாண்டத்திற் கூறப்படலானும்,

7. "ஓங்கார வடிவானவுன்பாத தாமரையும்" என விநாயகர் ஓங்கார வடிவினர் எனது துண்டிவிநாயகர் திருவருட்பாவிற் கூறப்படலானும்,



8. "அமிர்தம் என்றும், பிரமம் என்றும், சிவம் என்றும், அக்ஷரம் என்றும், அவிவியயம் என்றும் எதனைக்கூறுகின்றனரோ, அந்த ஓங்காரத்தை விநாயகர் என நமஸ்கரிக்கின்றேன்." என விநாயகரை ஓங்காரவடிவாகக் கொண்டு ஸ்தவராஜத்திற் கூறப்படலானும்,

9. "ஓங்காரமே நற்றிருவாசி," எனத்திராவிட சித்தாந்த சாஸ்திரம் பதினான்கனுள் ஒன்றாகிய உண்மை விளக்கத்துள் கூறப்படலானுமாம்.

பிரணவம் தமிழென்று நான் முன்னமே 2-வது வாலியம் 173-வது பக்கத்தில் நிரூபித்திருக்கிறேன். அய்யர் அவர்கள் நிரூபணமும் அதனை வலியுறுத்துகின்றது.

வேதாகமங்கள் பிரணவத்தினின்றும் உற்பத்தியாயின வென்றால் பிரணவம் தமிழென்று நிரூபித்திருக்க வேதாகமங்களும் தமிழே என்று கூறுவதில் யாதொரு சந்தேகமுமில்லை.

மேலும், மெய்கண்டாராவது, அவர் மாணாக்கர்களாகிய சிற்றம்பலநாடிகள் முதலிய நாற்பத்தெண்பதின்மராவது, அல்லது அவர் பரம்பரையில் வந்த சந்தானசாரியார்களாகிய உமாபதிசிவம் முதலானவர்களாவது சிவஞானபோதத்தை மொழிபெயர்ப்பு நூலென்று சொல்லவில்லை,

ஆனால் உமாபதிசிவாசாரியார் திருமுறைகண்ட புராணத்தில்
"அருமறையைச் சிச்சிலி பண்டருந்தத் தேடுமது போலன்று
இது என்றுமுளதாம் * * * * "

என்று தமிழ் வேதம் ஆரியவேதமாகாது, தமிழ் வேதம் நித்தியம் என்று தெளிவாய் வேறுபடுத்திக் கூறியிருப்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்கவேண்டியது.

சந்தானசாரியர்களில் ஒருவராகிய உமாபதிசிவமே ஆரியவேதத்தைப்போலத் தமிழ்வேதத்தை எண்ணற்க, தமிழ்வேதம் நித்தியமானது, தமிழ் வேதம் அநேக மகிமைகளைச் செய்தது என்று கூறியிருக்க அவருக்கு எவ்வளவோ வருடங்கள் பின்வந்தவரான சிவஞானயோகிகள் சிவஞானபோதத்தை மொழிபெயர்ப்பு நூலென்று கூறியி

ருக்கின்றார் என்று புஸ்தகங்களில் காணப்படுவதைப் பார்க்கச்சந்தே கிக்க இடம் கொடுக்கின்றது. "எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான் படித்தவன் பாட்டைக்கெடுத்தான்" என்ற பழமொழிப்பிரகாரம் நடுவில் எவ்வளவு மாறுதலடைந்ததோ நாம் அறியோம். அதனால் தான் ஒவ்வொரு சங்கதிகளையும் நாலாவிதமாய் ஆராய்ச்சி செய்து அதில் தேறுவதைக் கொள்ளவேண்டும்.

சிவஞான முனிவருக்குச் சிவஞான போதம் மொழிபெயர்ப்பு நூல் என்பதுதான் கருத்து என்று எண்ணுவதற்கில்லை.

ஏனென்றால்

"அருமறையை" என்ற பாசுரத்தை அவர் பாராதவர் அல்லர்.

மேலும், அவரே தாம் செய்த அமுதாம்பிகை பிள்ளைத்தமிழில்

"தெய்வச்சுருதி தமிழொன்றே தீட்டும் பெருமைத்து" என்று தேற்றப்பொருளில் கூறியிருக்கின்றார்.

அதனால் ஆரியம் தீட்டும் பெருமைத்த அல்லவெனக்கொள்ளக் கிடக்கின்றது. இதனாலும் சிவஞானபோதம் தமிழென்றே கொள்ள வேண்டியிருக்கின்றது.

சித்தாந்தம் 297–299-வது பக்கங்களில் எழுதியிருக்கும் விஷயங்களால் நாம் தெரிந்து கொள்வதென்ன வென்றால்:—

1. "பரஞ்சோதிமுனிவர் மெய்கண்டதேவர்பால் வந்து சிவஞானபோதத்தை நல்கி அதனை நண்பின்னார் உணர்ந்து உய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைக்க" என்று அருளினாரென்றும்,

மெய்கண்டதேவர் அவர் கட்டளையின் வண்ணம் மொழிபெயர்த்துச்செய்து பொழிப்புரைத்தார் என்றும் அறிகிறோம்.

இன்னும் சரித்திரத்தாலும் கர்ணபரம்பரையாலும் என்ன அறிகிறோமென்றால், மெய்கண்டார் தாம் மொழிபெயர்த்த தமிழ்ச் சிவஞான போதத்துக்குப் பொருள் தெரியாததால் பொல்லாப் பிள்ளையாரை வேண்டித் துணை கொண்டாரென்றும்,



பொல்லாப்பிள்ளையார் தமிழில் 39 சூர்ணிக்கொத்துச் செய்து கொடுத்தார் என்றும், அதன்பேரில் மெய்கண்டார் பொருள் விளக்கம் எய்தினாரென்றும் அறிகிறோம்.

தமிழர்களே! நான்சொல்லுவதைச் சற்றுக் கவனிக்கவேண்டுகின்றேன். மேற்சொன்ன சங்கதிகளில் முன்பின் முரணுவது உங்களுக்கும் தெரிந்திருக்கும். ஆகையால் "மொழிபெயர்த்துச் செய்து" என்ற வார்த்தைகள் இடை நுழைப்பு என்று தோன்றுகிறது.

மெய்கண்டதேவர் பரஞ்சோதிமுனிவரைச் சந்தித்தகாலத்தில் 2 அல்லது 3-வயதுக்குழந்தை. பேசாமலிருந்த குழந்தை. தமிழர் வீட்டுக்குழந்தை; தமிழன்றி வேறுபாஷை அக்குழந்தையின் காதில் பட்டிருக்கவில்லை.

பரஞ்சோதிமுனிவர் கைலையினின்றும் வந்து மெய்கண்டதேவருக்குச் சிவஞானபோதத்தை உபதேசித்து "மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைக்க" என்று கூறினாரென்றால் அக்குழந்தை அவ்வாரிய பாஷையிலும், தமிழ் பாஷையிலும் எவ்வளவு பாண்டித்தியமுள்ள குழந்தையாயிருக்க வேண்டும்; இருபாஷைகளிலும் சரியான பாண்டித்தியம் பெற்றிருந்தாலன்றி ஒருபாஷையினின்றும் மற்றொருபாஷையில் ஒருநூலைப் பொருள் கெடாமல் மொழிபெயர்க்க இயலாது.

மேற்சொன்ன சிவஞானபோதமோ எல்லா சாஸ்திரங்களிலும் மேம்பட்டது.

வேதாகமங்களின் முடிந்த முடிவாயுள்ளது. அதற்குமேல் வேறு சாத்திரங்கிடையாது. இணையற்றது.

அப்பேர்ப்பட்ட நூலை மெய்கண்டதேவர் மொழிபெயர்த்துப் பொழிப்புரைத்தார் என்றால் அவர் தமிழ் ஆரியம் என்னும் இருபாஷைகளிலும் கைவந்தவர். இருபாஷைகளிலுமுள்ள சகல சாஸ்திரங்களிலும் நிபுணர், இருபாஷைகளிலுமுள்ள வேதாகமங்களையெல்லாம் சரிவர உணர்ந்தவர் என்று சொல்ல யாதொருதடையுமில்லை.

ஆனால், அவர் குழந்தையாயிற்றே அவ்வளவு பாண்டித்தியம் எப்படி வந்தது என்று கேட்டார் சிலர்.

பரஞ்சோதிமுனிவர் சிவஞானம் கைவந்த முனிவர் ஆனதால் மெய்கண்டதேவருக்குத் தீக்ஷை செய்து சகல சாஸ்திர நிபுணராக்கினார்; வேதாகமங்களை யெல்லாம் ஓதாதுணருப்படி செய்தார்; சிவஞானபோதத்தின் பொருள் விளங்கும்படி செய்து மொழிபெயர்த்துப்பொழிப்புரைக்கச் செய்தார் என்று கூறுவார்.

(தொடரும்)

நாடிசைகிழார்-அ-சிதம்பரனார்.

## நீதி. ௨.

"ஒருவன் காட்டிலிருந்தாலும், போர்க்களத்திலிருந்தாலும், சத்துருக்கள் மத்தியிலிருந்தாலும், கரைகாணக் கூடாத சலத்தில் விழுந்துவிட்டாலும், பெரியதீயிலகப்பட்டுக் கொண்டாலும், மலையுச்சியிலிருந்து தவறிவிழுந்தாலும் தூங்கும்போது தன்னிலைவு தனக்குத் தெரியாமல் சித்தவிகாரம் கொண்டவனாயிருந்தாலும், தன்னை யாராவது சிறைப்படுத்தினாலும், அக்கலகங்களிலெல்லாம் நாம் முன் செய்த புண்ணியமே காத்துரட்சிக்கும். தருமம் தலைகாக்கும் என்றபடி எல்லோரும் தருமமே செய்வாராக. செய்வார்க்கு வருமமில்லை".

# சிவஞானபோதம் தமிழ்.

---

நமது சைவசித்தாந்த மஹாசமாஜத்தின் மாதாந்தர பத்திரிகையாகிய சென்ற 1914ளு எப்ரல்-மேமீ த்திய 'சித்தாந்தத்தில்' 107-வது பக்கத்தில் 'சிவஞானபோதம்' என்ற நூற்பெயரே வடமொழியாயிருக்கத் தமிழ்நூல் என்றெவ்வாறு கூறுவது? என்று தூத்துக்குடி ஸ்ரீமத் பொ. முத்தையபிள்ளையவர்கள் கூறுகிறார்கள். என்னை, 'சிவ'என்னும்பதம் வடமொழியா? தமிழ்மொழியா? வடமொழியென்றால் 'ச்சி' என்ற உச்சரிப்பு வடமொழியாகாதே? ஆன்றோர் "நமச்சிவாயா" என்றே ஆண்டு வந்திருக்கிறார்கள். தவிர வடமொழி 'ஆரியருடையது' என்றும் தமிழ்திருவிடருடைய தென்றும் வடமொழியாரேகூறுகிறார்கள். நமது அப்பர் சுவாமிகள்,

> "வெந்த நீறருங்கலம் விரதிகட்கெலாம்
> அந்தணர்க் கருங்கலம் அருமறையாறங்கம்
> திங்களுக் கருங்கலம் திகழுநீண் முடி
> நங்கைகளுக் கருங்கலம் நமச்சிவாயவே."

என்று பிரித்துக்கூறியதால் அந்தணர்க்குரியதன்று நமச்சிவாய என்பதாகுங்கண்டீர். சைவருக்குரியது 'ச்சி' சப்தம். "திருந்துநற்சிவென்று தறியகையும்" என்ற தமிழ் மறைக்கூற்றை நோக்க 'ச்சி' என்னு 'நாயோட்டுசப்தம்' ( நமனைநாயாகப்பாவித் தோட்டுந்திறம்) பஞ்சாட்சர மொழியின் உச்சரிப்பாகும். அதுவே 'நயனநாம நமச்சிவாய' 'நாதனாம 'நமச்சிவாய' ஆகும்!! ஆகவே, எம்பிரான்றன் முக்கிய திருநாமமே தமிழ் என்றாயிற்று. 'சிவஞானபோதம்' என்ற நூற்பெயர் வடமொழியே' என்பது தவறும் அன்பர்மனதை வருத்தும் பயமுமாய் விட்டது.

2. மஹா கைலாயத்தில் இராவணன் பாடியுய்ந்த வேதம் தமிழ் கானமே யென்பதும் வெளிப்படுகிறது.

> "வண்டமரோதி மடந்தை பேணின
> பண்டை யிராவணன் பாடியுய்ந்தன
> தொண்டர்கள் கொண்டுதுதித்த பின்னவர்க்
> கண்ட மளிப்பன அஞ்செழுத்துமே."

'பண்டையிராவணன் பாடியுய்ந்தன* * * *
அஞ்செழுத்துமே.'

என்றால் அது 'நமச்சிவாய' வேதமே. அது மேற்கூறியவாறு 'தமிழ்' வேதமேதான்.

3. மேலும் 'புரமெரித்தார் திருமகனாராகிய' ஞானசம்பந்தவேள்,

"வெந்த வெண்ணீறணி வீரட்டானத்துறை வேந்தனை
அந்தணர் தங் கடவூருளானை, யணிகாழியான்
சந்த மெல்லாமடி சாத்தவல்லமறை, ஞானசம்
பந்தன் செந்தமிழ், பாடியாடக் கெடும் பாவமே."

என்ற பதிவாக்கில் அணிகாழியான் அடி (யைச்) சந்தமெல்லா (ஞ்சொல்லிச்சிரசில்) சாத்தவல்ல மறை, ஞானசம்பந்தன் செந்தமிழ், என்றாயிற்று. 'மறைஞான சம்பந்தன்' என்று பதம்பிரிக்கலாமென்று மயக்க இடமில்லை. பெரிய புராணத்தில் 'ஞானசம்பந்தன்' என்ற அருமைத்திருநாமம், அபரஞானமல்லாத 'சிவஞான' சம்பந்தத்தால் என்று விளக்கப்பட்டுள்ளது கண்டீர். இப்போதுலாவும் நான்குவேதம் (இருக்காதிமறை) மேற்கூறிய 'நமச்சிவாய' வேதமாயிருந்தால், அவ்வேதியர்களுக்கு 'நமச்சிவாய' தீட்சைசமயதீட்சையாயில்லாதிருப்பானேன் என்னும் அனுபவப் பிரமாணத்தைப் பிள்ளையவர்கள் ஆழ்ந்து நோக்கின் இவ்வாறு எழுதார்கள்! எழுதார்கள்! சிவ! சிவ! சிவ! சிவ!

4. தவிர, முதல் சூத்திரத்திலுள்ள 'அந்தமாதி என்மனார்புலவர்' என்னுங்கூற்றை நோக்க, முதனூலில்லாதிருந்தால் ரௌரவாகமம் கூறும், என்றுசொல்லாது 'என்மனார் புலவர்' என்பானேன்? இதனால வடமொழி சம்பந்தமும் 'ரௌரவாகம சம்பந்தமும்' இல்லையென்பதாயிற்று. இன்னும் நியாயங்கள் பலவுள.

ஓமர. சண்முக முதலியார்.

---

# சைவமும் சைவர் நிலையும்.

சிவபெருமானொருவனே வழிபடற்பாலனாகிய முழுமுதற்கடவுளென்றும் அங்ஙனம் அவனை வழிபடுவார்க்கு இன்றியமையா அடையாளங்களாவன விபூதி உருத்திராக்கதாரணமும் பஞ்சாக்கரமந்திரமுமேயாமென்றும், இவற்றையெல்லாம் ஆன்மாக்கள் இனிதுணருமாறு சுருக்கமாகவும் விரிவாகவுந்தெரிக்கலுறும் நூல்கள் வடமொழியில் வேதசிவாகமங்களுந் தென்மொழியில் தேவாரதிருவாசகமுதலிய பன்னிரண்டு திருமுறைகளும் சிவஞானபோத முதலிய பதினான்கு சித்தாந்த அருளோத்துக்களுமாமென்றும் ஆணைவரம்பு நிறுத்தி அவ்வரம்பு கடவாது ஒழுகும் நல்லான்மாக்களுக்கு முத்தியின்பம் பயப்பது சைவசமயமாம்; இங்ஙனங்கிளந்தெடுத்துக்கூறிய சைவசமயவழிநின்று அச்சமயவிதிகளை வழுவாது அனுட்டித்து ஒழுகுங் கடப்பாடுடைய நன்மக்களெல்லாருஞ் சைவரென்று வேண்டப்படுவர்.

இனித் துரியப்பொருளாகிய சிவனை வழிபடுதலும், அவனடையாளங்களாகிய விபூதி உருத்திராக்கதாரணமும், இவற்றை யறிவிக்குந்தேவார திருவாசகமுதலிய நூலாராய்ச்சியுமாகிய மூன்றும் ஒன்றையொன்று இன்றியமையா நெறிப்பாடுடையனவாம்.

இங்கே சிவம் என்றது துரியப்பொருள் பிரமன்விண்டு உருத்திரன் என்று ஆண்டாண்டு உபநிடதங்களில் ஓதப்படும் முப்பொருள்களுள் இறுதியில் நின்ற உருத்திரபத வாச்சியப்பொருளன்று. மற்று அது குணப்பொருளாகிய அம்மூன்றனையுங்கடந்து மேல்விரிந்து செல்லும் நான்காவதாகிய துரியப்பொருளாவதாம். இக்கருத்துப்பற்றியே அதர்வசிகோப நிடதத்தில் "இவையனைத்தும் பிறக்கின்றன; இப்பிரமன் விண்டு உருத்திரன் இந்திரனென்னுமவரெல்லாம் பிறக்கின்றனர்; பூதங்களோடு இந்திரியங்களெல்லாம் பிறக்கின்றன; காரணங்களைத் தோற்றுவிப்பானுந்தியாதாவுமான காரணன்றான் பிறப்பானல்லன்; காரணப்பொருளும் ஐசுவரியமனைத்தையுமுடையானும் அனைத்திற்கும் ஈசனுமான சம்பு ஆகாயநடுவிற் றியானிக்கப்படும்" என்றும் பஞ்சப்

பிரமோபநிடதத்தில் "மூன்றவத்தைகளைக்கடந்ததும் துரியப்பொருளும் சத்தியமும் ஞானமயமாகவுள்ளதும் பிரமன் விண்டு முதலியோராற்சேவிக்கப்படுவதும் எப்பொருள் பிறத்தற்கு விளைக்களமாவதும் மேலானதும ஈசபதவாச்சியப்பொருள்" என்றும் சுருதிவாக்கியங்கள் ஒருங்கெழுந்து அறுதியிட்டன. இவ்வாறே தேவர்கோவறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை, மூவர் கோனாய்நின்ற முதல்வன் மூர்த்தி மூதாதைமாதாளும் பாகத்தெந்தை" என்று திருவாசகச்சுருதியினும் போந்தவாறுகாண்க. இனிச் சுவேதாசுவதரவுபநிடதத்திற்போந்த "எவன் தானொருவனாயிருந்துகொண்டே எல்லாப்பொருள்களையு மயக்குவானோ அவன்தன் சருவவல்லமையால் எல்லாவற்றையும் எல்லாவுலகங்களையும் ஆளுகின்றான்; எவன் உற்பத்தியாங்காலத்தும் சம்பவிக்குங்காலத்துந்தான் ஒருவனாகவேயிருக்கின்றானோ அவனைஅவ்வாற்றான் அறிபவர் மரணத்தைக்கடக்கின்றார்கள், ஏனெனில், இவ்வுலகங்களையெல்லாந்தன் முழுமுதன்மையால் ஆட்சிசெய்கின்ற உருத்திரக்கடவுள் ஒருவனேயாதலால், அவனுக்கு வேறாகப்பிறிதொருபொருள் உண்டென்று அறிவுடையோர் சொல்லார்கள்; அவன்சிருட்டிசெய்வானொருவனை உண்டாக்கி எல்லாவுலகங்களையும் படைப்பித்துத் தான் அவ்வெல்லா ஆன்மாக்களினும் அந்தரான்மாவாய் வேறு வேறமர்ந்திருக்கின்றான்; அவன் சங்காரகாலத்தில் தன் கோபாக்கினியால் எல்லாவற்றையும் விழுங்குகின்றான்; எல்லாப்பக்கங்களில் விழிகளும், எல்லாத்திசைகளில் முகங்களும், எல்லாத்திக்குகளிற் புயங்களும், எல்லாத்திக்குகளிற் பாதங்களும் உடையனாய் ஆகாயத்தையும் பூமியையும் உண்டுபண்ணித்தன் கரங்களாலும் சிறகுகளாலும் அவற்றையொழுங்குபடுத்துகிற அவன்ஒருவனே கடவுள்; இங்ஙனம் எல்லாவற்றிற்கும் முதல்வனும் மகருஷியும் சிருட்டிகாரணனும் தேவர்களைஎல்லாம் பிறப்பிக்கின்றவனும்; அவருள் முற்பட்ட இரணிய கருப்பனைமுதலிற் படைத்திட்டவனுமாகிய உருத்திரமூர்த்தி எமக்கு மெய்ஞ்ஞானத்தை உதிப்பிக்கக்கடவன்." என்னும் அருள்வாக்கியந் திரிமூர்த்திகளுட்பட்ட குணருத்திரர்மேற் செல்வதில்லைத் தத்துவங்களை ஒடுக்கிக்கொண்டு அத்தத்துவங்களுக்கும் அதீதமாய் விளங்குந் துரியமுழுமுதற்கடவுளான மாசங்கார உருத்திரக்கடவுளை வழுத்தற்பொருட்டு ஆண்டெழுந்ததொன்றாகலின் அதுபற்றி ஈண்டு மயக்கடைவதோர் இழுக்கில்லையென்றொழிக.



இனி அங்ஙனங்காட்டிய முத்திற முறையுள்ளும் சிவவழிபாடு ஏனையிரண்டினுஞ் சிறந்ததொன்றாதலானும், அச்சிவவழிபாடு பற்றியே அதற்கங்கங்களான விபூதி யுருத்திராக்கதாரணம் பஞ்சாக்கர மந்திரம் வேதோபநிடத நூலாராய்ச்சியும் பிறவும் வேண்டப்படுதலல்லது அவ்வழிபாடில்வழி அவைபயப்பாடின்றி வறிது கழிதலானும் அச்சிவவழிபாடு ஒன்று தானே ஏனையிரண்டினுஞ் சிறந்தெடுத்துப் போற்றப்படுந்தலைமை யுடைத்தாம். என்னை? கொழுநனை யுடையளான ஒரு தலைமகள் தான் தனக்கினிய அக்காதலனை யுடையளாம் அவ்வியைபுபற்றியே அவடனக்கு இன்றியமையாச் சிறப்பினவாகிய மங்கலநாண் மஞ்சட்பூச்சுக் கலவைச்சாந்து நறுமுடிக்கொழுந்து விரைமலர்த்தொடையல் செழும்பட்டாடை முதலியன வேண்டப்படுவதன்றி, அவனில்வழி அவையொருசிறிதும் அவளால்விரும்பப்படாவாகலினென்பது. இன்னும், இராச்சியவுரிமை பெற்றானோர் ஆண்மகன் தான் அங்ஙனமெய்திய அவ்வுரிமை பற்றியே அதற்கடையாளங்களான ஆசனமுடியும் வெண்கொற்றக்குடையும் அரசமுத்திரையும் அரியணை வீற்றிருப்பும் ஒருங்குபெற்று ஆட்சிசெலுத்துதலன்றி, அவ்வுரிமையில்லாதானொருவன் அங்ஙனம் அடையாளங் கொள்ளானாகலானுமென்பது. இனிக்கொழுநனையிலளாகிய ஒருபெண்மகள் மங்கலநாண் முதலிய அலங்காரமுடையளாம் வழி அவளைத் தூர்த்தையென்றுலகம் பழிக்குமாறுபோலவும், இராச்சியவுரிமையில்லாதானொருவன் அஃதுடையானேபோல, அரசன முடிமுதலிய அடையாளங் கொள்வழி அவனரசனால் ஒறுக்கப்பட்டுச் சிறைக்களத்திடப்படுமாறுபோலவும் சிவவழிபாடு இல்லாதானொருவன் அஃதுடையானேபோல விபூதி யுருத்திராக்கந்தரித்துப்பிறரை வஞ்சித்தன் மேற்கொண்டவழி அவன்றன் செயலை யுணர்வாரெல்லாரானும், ஓ! ஓ! கொடியன், பாவி, வஞ்சகன், என்று இழித்துக் கூறப்படுதன்மேலும் மறுமையிற் சிவபெருமானாலொறுக்கப்படுதலும் உடையனாம். சிவபெருமானைத்தெய்வமாகக்கொண்டு வழிபடும் நற்குலத்திற்பிறந்த சைவர்களே! எம்மரிய சகோதரர்களே! நமக்கு இந்த மானுடதேகமும் அதனினுஞ்சிறந்த சைவகுலமும் முற்சென்மங்களில் ஈட்டிய பெருந்தவப்பயனா வாய்ப்பப்பெற்றும் அவற்றாற்பெறும்பயனை நாம் ஒரு சிறிதும் யோசியாது வாளா வாணாளைக்கழித்தல் நன்றோ? நாம் வழிபடும் முழுமுதற்கடவுள் சிவபெருமான் ஒருவனே என்று துணிந்து அவனை உபாசிக்கும்

நன்முறை அறியோமாயின், நாம் எவ்வளவுதான் விபூதி யுருத்திராக்கந்தரித்தாலும் அவற்றால் நமக்குப்பிரயோசனம் வருவதன்று. சிவபெருமானை உபாசிக்கும் பொருட்டாகவே அவன்றிருவடையாளங்களாய திருநீறுங் கண்டிகையும் அணிகின்றோமென்று அறிந்து அவனைவழிபட்டான் மாத்திரம் நாம் வேண்டியவாறெல்லாம் நமக்கு இம்மைமறுமைப்பயன்களை யருளி யிறுதியில் அவ்வாப்தன்றன் றிருவடிப்பேரின்பத்தையும் நமக்கு ஊட்டுவான்.

இனி, இங்ஙனங் கூறுதல் பற்றி நாம் ஏனைச்சமயங்களையும் அச்சமயிகள் வழிபடுந்தெய்வங்களையும் இகழ்ந்துரைக்கின்றோமென்று நினையாதீர்கள். அங்ஙனம் நாம் ஒருகாலத்துஞ்செய்யோம். நாம்முதற் சஞ்சிகையில் வரைந்த "இவ்வுலகின்கட் பல வேறுபடப்பரந்து கிடக்குஞ்சமயங்களெல்லாந் தம்மை அனுசரித்தொழுகும் ஆன்மாக்களின் பக்குவ முறைமைக்கேற்பவும். அப்பக்குவ முறைமையால் அவரறிவு விரிந்து செல்லுந்தன்மைக் கேற்பவுந்தாமும் ஒரு நெறிப்படாவாய்ப் பல நெறிப்பட அகன்று தாந்தாம் நுதலிய பொருளையே உண்மையெனத்துணிந்து ஆராய்ந்து அவைதம்மாலுறுதிகொண்டு உய்யுநெறி தேடுகின்றன; இங்ஙனம் ஒன்றினொன்று மறுதலைப்பட்ட இலக்கணங்களுடையவாயினும், ஒன்றினொன்றுயர்ந்த குணங்களுடையவாயினும் எல்லாச்சமயங்களும் மெய்ச்சமயங்களேயாம், எல்லாம்வீடுபேற்றின்கண் உய்க்கும் வழிகளுந்துறைகளுமேயாய், முழுமுதற் பெருங்கடவுளாகிய தந்தையை ஆன்மாக்களாகிய பசுங்குழவிகள் சென்றணையுங்காறும் அறிவூண்தந்து வளர்க்குந் தாய்மார்களேயாய் விளங்குவன" என்னும் வாக்கியக்கூறுகளே அதற்குச்சான்றாம்.

மற்றுநங்கருத்து யாதோவெனின்;—எல்லாச்சமயிகளும் தாந்தாம் உண்மையெனக்கொண்டு உபாசிக்குந் தெய்வங்களைத் தாந்தாம் அனுசரித்தொழுகும் விதிபிறழாதுதழுவக்கொண்டு உறுதிபெறல் வேண்டுமென்பதே நங்கருத்தாவதாம். இதனை விடுத்துச் சைவனொருவன் சிவவழிபாடுநீங்கி வேறுசமயிகள் உபாசிக்குந் தெய்வங்களைப் பாராட்டிப்போற்றுதலும், அவ்வாறே அவ்வேறுசமயிகள் தம்மதங்களுக்கிணங்காத பிறசமயத் தெய்வங்களைப் பாராட்டிப் போற்றுதலும் வரம்பழித்துச் செய்யுமுறையாதலால் அவைபெரிதும் இடர்ப்படுதற் கேதுவாய் முடியுமென்றொழிக. அற்றேல், சாக்கியநாயனார் தாந்தழு



விய பௌத்தசமயவழிநின்று உறுதிபெறமாட்டாராய்ச் சிவவழிபாடு இயற்றியது வழுவாம் போலுமெனின், அற்றன்று. அவர் மேலைச்சென்மங்களிற் செய்து போந்ததவ முதிர்ச்சியால் தமக்கு மெய்யறிவு விளங்கி அதிதீவிர பக்குவமுடையராகப் பெறுதலால், அப்பக்குவ நிலைக்கேலாத பௌத்தசமயம் விடுத்து அதற்கேற்பதான சைவம் புகுந்து சிவனைவழிபட்டு உய்ந்தாராகலின் அதுவழுவாமாறு யாண்டையதென்றொழிக. அஃதாயின், அவர்தம் மேலைச்சென்மத் தவமுதிர்ச்சிக்கேற்பச் சைவசமயத்திற்பிறந்து அவ்வாற்றாற் சிவனைவழிபடுதலன்றே மரபாமெனின், நன்று சொன்னாய், அவர் மேலைச்சென்மங்களில் அரிதாற்றியதவவூழ் அவரைச் சைவசமயத்திற் பிறப்பித்து ஆண்டு நின்றவாறே அவர்க்கு அவ்வதிதீவிர பக்குவத்தைப் பயப்பிக்கமாட்டாததாய்ப்பௌத்தசமயத்தின் கண்ணே அவரைப்பிறப்பித்து ஆண்டுநின்றவாறே இடையொருகாலத்து அவ்வதிதீவிரபக்குவத்தைப் பயப்பிக்கும் பெற்றித்தாம் முறைகொண்டு அமைந்துகிடந்தது; பின் அக்கிடப்பின்படியே முடிந்ததாகலின் அதுகடாவன்றென மறுக்க. இனிப்பல்வகைச் சமயமுடிவு பொருள்களையும் நுண்ணிதாக ஆய்ந்து அதனான்மெய்யறிவு மிகவிளங்கித்தாம் மெய்யெனக்கண்ட ஒரு சமயத்தை அனுசரித்தொழுகுங் கடப்பாடுடையார்க்குத் தஞ்சமயவரம்புகடந்து சேறல் குற்றமன்றாம். இனி இவ்வாறல்லாமன்றித் தஞ்சமயப் பொருளுண்மையும் பிறசமயப் பொருளுண்மையும் அளந்தறிய மாட்டாதபுருடர் தஞ்சமயவரம்புகடந்து விவகரித்தல் பெரியதோர் அபசாரமாமென்றொழிக. இனிச்சைவசமயத்திற்பிறந்து சிவனைவழிபடும் புண்ணியமுடைய நன்மக்கள் அந்நெறிகடைப்பிடியாது தம்மனம்போனவாறெல்லாம் புகுந்து தம்பெருமையிழத்தல் நன்றன்றாம். சைவசமயிகள் சிவபெருமானையன்றிவனைச்சமயத்தெய்வங்களை உபாசிக்க இடம்பெறமாட்டார். இதற்கு ஸ்ரீமன். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய,

"கொள்ளேன்புரந்தரன்மாலயன்வாழ்வுகுடிகெடினு
நள்ளேனினதடியாரொடல்லானரகம்புகினு
மெள்ளேன்றிருவருளாலேயிருக்கப்பெறினிறைவா
வுள்ளேன்பிறதெய்வமுன்னையல்லாதெங்களுத்தமனே" என்னுந் திருவாக்கேயுறுசான்றாமென்க.

இனிச்சிவபெருமானை உபாசிக்குஞ் சைவர்களுக்குச் சிவாராதனை ஒன்றே சாதனமாகலின், விபூதியுருத்திராக்கதாரணமும் பிறவும் அவர்க்கு இன்றியமையாதவென் றுரைத்தவா றென்னையெனின்;— நன்று வினாயினாய், கொழுநனையுடையளான மனைக்கிழத்திக்கு மங்கலநாண் முதலிய அடையாளங்களும், அரசுரிமையுடையனான ஓராண்மகனுக்கு இரதனமுடி முதலிய அடையாளங்களும் இன்றியமையாது வேண்டப்படுகின்றனவாகலின், சிவனை உபாசிக்குஞ் சைவர்களுக்கு அவையும் இன்றியமையாது வேண்டற்பாலனவேயாம்.

இனி ஒருதலைமகட்கும் ஓர் அரசற்கும் அவ்வவரசர்க்குரிய அன்பும் அதிகாரமுமே சாதனமாகவும், அவற்றின்வேறாக அடையாளங்கள் பிறகோடற்கு எற்றுக்கென்று ஆராயலுறுவார்க்குத் தந்நிலையில் நின்றவழி உணர்வின்றிக்கிடந்த ஆன்மாக்கள் எழுவகைத்தோற்றத்துட்பட்ட சரீரங்களையும் அச்சரீரங்களிற் போகநுகர்ச்சிக்கு ஏதுவாய்க்கிடந்தமெய்வாய் கண் மூக்குச்செவி முதலிய புறக்கருவிகளையும் மனஞ்சித்தம் புத்தியகங்கார முதலிய அகக்கருவிகளையும் ஒருங்குதலைக்கூடி உலகத்தோடு ஒருமைப்பாடுற்று அறிவுவிரியப்பெறுப வென்பதும், இங்ஙனந் தேகத்தோடு இயைபுறுதன்மாத்திரையானே குறிவழிச்செல்லும் அறிவுமுகிழ்க்குமென்பதும் இனிதுவிளங்கும். குறியெனினும் அடையாளம் எனினும் ஒக்கும். இனிமானுடரெல்லாரும் ஆண் பெண் எனப்பகுக்கப்படும் பகுப்புடையராதலும் அவ்வவர்க்குரிய குறிகுணவிசேட அடையாளங்கள் பற்றியேயாம். அவ்வாண்பகுப்பாருள்ளும் இவனெமக்குத்தந்தை இவன் சகோதரன் இவன் புதல்வன் இவன் ஏதிலான் இவன் நண்பன் எனவுணர்ச்சி வேறுபாடுதருதலும் அவ்வவர்க்குரிய விசேட அடையாளங்கள்பற்றியேயாம். இனி அப்பெண்வகுப்பாருள்ளும் இவள் எமக்குத்தாய் இவளுடன் பிறந்தாள் இவள் புதல்வி இவள் ஏதிலாள் இவள் கிழமையுடையாள் என்றற்றொடக்கத்தான் வேறு வேறறிதலும் அவ்வவரிடைக்காணப்படும் விசேட அடையாளங்கள் பற்றியேயாம். இனி ஆங்கில நூலாரும் ஒரு பொருளொடு வேறொன்றனை ஒப்பிட்டுக்காண்டலானும், ஒன்றனின்வேறாக் காண்டலானும் அறிவுமலர்ச்சியுண்டாம் என்று கூறுப. ஆகவே, உலகத்துட்டோன்றி அவ்வுலகியற் பொருட்கண் அதுவதுவாய்ப்பதியும் அறிவுடைய ஆன்மாக்கள் அடையாளங்கள்பற்றியுணர்



ர்ச்சியுடையராகப்பெறுதல் இயற்கையாகவே வருகின்ற நிகழ்ச்சியாதலின், அது தன்னொடு முரணி வேறு வேறாசங்கித்தல் பொருத்தமின்றாம்.

இனி இவ்வாறே ஒருவனைச் சைவனென்றும் ஒருவனைவைணவனென்றும் ஒருவனைப் பௌத்தனென்றும் ஒருவனைச் சமணனென்றும் அறியும் அறிவெல்லாம் அவ்வவர்க்குரிய ஈசுரவழிபாடு கருமவுறைப்பு நூலாராய்ச்சி முதலிய அடையாளங்கள்பற்றியே நிகழ்வதல்லது பிறிதன்றாம். இனி அவரவர்க்குரியசமய அடையாளங்களும் அவரவர்க்குயிர்போற் சிறந்தனவாய் அவர்செய்து ஈசுரவழிபாட்டின்கண் நெஞ்சநெகிழ்ந்திப்பத்திச் சுவைமிகுவித்துப் மேம்பாடுறுவனவாம். இப்பெற்றியவான அவ்வடையாளங்கள் அவ்வச்சமயத்தாரெல்லாராலுங் குறிக்கொண்டு போற்றப்படுவனவாதலின் சைவர்க்கு விபூதியுருத்திராக்கதாரணம் இன்றியமையாவடையாளச் சிறப்பினவென்பது தெற்றென விளங்கும்.

இனி, வடமொழியில் வேதாகமநூலாராய்ச்சியுந் தென்மொழியின்தேவார திருவாசக சிவஞானபோத நூலாராய்ச்சியும் வேண்டற்பாலவென்றலென்னை, விபூதியுருத்திராக்கந்தரித்து ஐந்தெழுத்தோதியுண்மையன்பாற் சிவவழிபாடு இயற்றுதலொன்றே யமையுமெனின், அற்றன்று, தாம்மாத்திரம் அங்ஙனம்வழிபட்டு உய்யுநெறியொன்றே கடைப்பிடித்தல் தன்னைப்பற்றுத லென்னுங் குற்றமாதன்மேலும் பிறசீவான்மாக்கள் பிழைத்துப்போம் மெய்ந்நெறிகாட்டி வழிப்படுக்குங்கருணையின்றாய் முடிதலானும், கருணையின்றாகவே சீவர்கட்குரிய ஏனைக்குற்றங்களெல்லாமும் ஒருங்குவந்துசேறலானும், அதனாற் பிறவியுமன் மேன்மேற்பெருகி வருதலானும் அவர்தாம் உண்மைச் சிவவழிபாடு செய்தாரல்லராவர். இனித்தாமுய்யும் பொருட்டுச் சிவவழிபாடு இயற்றுதல்போலவே எல்லாச்சீவான்மாக்களும் உய்கவென்னுங்கருணைமிக்கு அவர்தமக்கெல்லாம் அச்சிவவழிபாட்டின் அருமைபெருமைகளை விரித்துரைத்து அறிவுகொளுத்தற் பொருட்டுத் தம்முறையில் அவரைத்துணிபு ஒருப்படுத்தல் வேண்டுமாகலானும், அங்ஙனந் துணிபொருப்பாடு உறுவித்தற்கு வேதாகமநூலாராய்ச்சி இன்றியமையா நெறிப்பாடுடையதாம். அல்லதூஉம், வேதாகமநூலுரைப்பொருள் செவ்விதின் ஆய்ந்து அவ்வாற்றான் முகிழ்க்கும் மெய்யறி

வின்கட் பத்திச்சுவைத்தேன் ஓயாது சுரந்து இறைவன் றிருவடித்தியானத்தின்கண் மனவெழுச்சிமிகுக்கும் உரிமைப்பாடு விளைதலானும் அவ்வாராய்ச்சி தமக்கும்பயப்பாடு பெரிதுடைத்தாம். இவ்வாறு இருவழியானுஞ்சிறந்தவடநூல் தென்னூலாராய்ச்சி சைவரெல்லாரானும் ஒழுங்காகச் செயப்படுதல்வேண்டும். இங்ஙனம் மூவேறுவகைப்படுத்தெடுத்துக்கொண்ட சிவவழிபாடும் விபூதியுருத்திராக்கதாரண பஞ்சாக்கரமந்திரமும் வேதாகமப்பொருணூலாராய்ச்சியும் சைவசமயநிலைக்குரியனவாம்.

இனி இக்காலத்துச் சைவர்களுட்சிலர் சிவனை வழிபடுதலறியாராய்ச் 'சிவனென்னவிண்டுவென்ன, எல்லாம் ஒன்றுதான்' என்றுரைத்து அன்பிலராய் நாட்கழிக்கின்றார். வைணவசமயிகள் விண்டுவையே தாம் உபாசிக்கும் முழுமுதற் கடவுளென்று துணிந்து அவ்வாற்றான் வழிபடற்பாலார். சைவர் சிவனையே அங்ஙனந்துணிந்து வழிபடற்பாலார். இம்முறைதிறம்பி இரண்டையுமொன்றெனக்கூறி அன்பிலராய் ஒழுகிநாட்கழித்தல் எந்தச்சமயிக்கும் நன்றாகாது. ஈசுரவழிபாட்டிற்கு ஒருதலையான் வேண்டும் உள்ளநெகிழ்ச்சி எல்லாத் தெய்வங்களையுஞ் சமமாகக் காணும்போது நோக்கத்தான் வருவதன்று. மற்று அது, ஒருபொருளை ஏனையவற்றினின்றும் வேறுபிரித்துத் தலைமைப்பாடுடையதெனக்காணுஞ் சிறப்பு நோக்கத்தான் வருவதொன்றாம். இவ்வியல்பு பற்றியே உலகெங்கும் பலவேறுவகைப்பட்ட சமயங்களும் சமயத்தெய்வங்களும் பலப்பலவாய் விரிந்தன. அவ்வச்சமயத்தாருந் தத்தமக்கு உள்ளநெகிழ்ச்சி செல்லும் வகையான் தாந்தாம்விரும்புங் குணங்குறிமுதலியன கொண்டு தத்தமக்கியைந்தவழியானெல்லாம் ஈசுரனை உபாசனை செய்து போதருகின்றார். இவ்வாறுவிரிந்த சமயங்களையெல்லாம் ஒருமைப்படுத்தலாவது அல்லதவற்றையெல்லாம் அழிவுசெய்து மெய்ச்சமயமொன்றனை நிறுத்தலாவது யார்க்கும் இயல்வதன்று. அங்ஙனஞ்செய்தல் ஈசுரனுக்குத்திருவுள்ளமுமன்று. அவர்க்குத் திருவுள்ளமானால் ஒருகணத்தில் இவ்வெல்லாச் சமயங்களும் ஒருமைப்பாடுறுமன்றே? ஆகலான், எல்லாச்சமயிகளுந் தத்தஞ்சாத்திர ஆணைவரம்புகடவாது அவ்வச்சமயவிதி வழியொழுகி அதனாலறிவு முதிர்ச்சியடைந்து மேன்மேற் சமயங்களிற்பிறந்து சித்தாந்தமாக நிலைபெறும் முடிநிலைச்சமய



மொன்றால் நேரே ஈசுரன்றிருவடிப்பேரின்பமுத்தி பெறற்பாலார். இங்ஙனமின்றித் தஞ்சமயவரம்பு அழித்து அன்பிலராய் எல்லாம் ஒன்றுதான் எனக்கூறுதல் மக்கட்பிறவிப்பேறு இழப்பதொன்றாய் முடியும். அஃது யாங்ஙனமோவெனின்;—பொருள் வேண்டிப்பல ஆடவர்தோள் முயங்கிக்கழிந்த பொதுமகள் அவ்வாடவர் யாவரிடத்தும் அன்பிலளாம்; அன்பிலளாகவே இன்பநுகர்ச்சியும் அவட்கின்றாம். இனித்தானின்பந்துய்த்தல் குறித்தாளாயின் அவள்தனக்கு இயைந்தானோர் ஆடவனை ஏனையாடவரிற் சிறப்பக்கொண்டு அவன்மாட்டுக் கழிபெருங்காதலுடையளாய் இன்பந்துய்ப்பாளாவது. இன்னும் முத்துப்பவளம் நீலம்பச்சை கோமேதகம் புட்பராகம் வைடூரியம் மரகதம் மாணிக்கம் முதலிய நவமணிகளையும் ஆராய்ச்சி செய்தனுறுவான் அத்தொகுதிக்கண் நல்லதொன்று கண்டவழி அதனை ஏனையவற்றினுஞ் சிறந்தெடுத்து அதன்கட் கழிபெருங்காதலுடையனாய்ப் பொதிந்துவைத்துப் போற்றக் காண்கின்றோம். அங்ஙனமவற்றைப் பகுத்துக்காணும் அறிவின் முதுமையில்வழி அவனவற்றை ஒன்றுகூட்டி அவற்றின்கண் ஆசையிலனாய் ஒழுகுதலுங் காண்கின்றோம். இருந்தவாற்றால் அன்பென்னும் உள்ளநெகிழ்ச்சி யுண்டாதற்குப் பொதுநோக்குக்கழித்துச் சிறப்பறிவுநோக்குக் கொளல்வேண்டுவது ஒருதலையாம். ஆகவே, சைவர்களாகிய நன்மக்கள் ஏனைச்சமயத் தெய்வங்களைக் கனவினும் நினைதற்கு ஒருப்படாராய்த் தன்கொழுநனிடத்துக் கழிபெருங் காதலுடையளாய் இன்பந்துய்க்கும் மனைக்கிழத்திபோற் சிவபெருமானிடத்து அன்புகிழப்பெற்று உபாசித்து உய்தல்வேண்டுமென்பது ஈண்டெடுத்துக்கூறிய வாற்றானினிது விளங்கும்.

இனிச்சைவ நன்மக்களிற் சிலர்விபூதி யுருத்திராக்க பஞ்சாக்கரமந்திரமுதலிய திருவடையாளங்களின்றி 'யாம் சிவவழிபாடு பெரிதுடையோமாகலான் எமக்கு அவ்வடையாளங்கள் வேண்டா' என்றுரைக்கின்றார். அது பொருந்தாதென்பது மேலே விளக்கினாம் ஆண்டுக்காண்க.

இனி வேறு சில சைவநன்மக்கள் வேதாகம முதலிய வடநூலாராய்ச்சியும் தேவார திருவாசக சிவஞானபோதத் தென்னூலாராய்ச்சியும் அரியவாயிருத்தலின் அவற்றின்கண் எமக்குமனவெழுச்சிசென்

றிலதுஎன்று கூறுகின்றார். 'வடநூலாராய்ச்சியில்லாதொழினுந்தமிழ் நூலாராய்ச்சியேனுஞ் செய்து சென்றால் தமிழ் நூல்கள் செந்தமிழிலக்கணநெறி பிழையா நன்னடையில் எழுதப்பட்டிருத்தலால் அதன்கண்ணும் எமக்கு அறிவு சென்றிலது' என்றும் உரைக்கின்றார். 'நல்ல தங்கைக்கதை' 'நளன்கதை' 'இராமன்கதை' 'பாண்டவர்கதை' முதலியனபோல் அத்துணை இலேசாக வருத்தமின்றி அச்செந்தமிழ் நூல்கள் விளங்கற்பாலனவா? சிவபெருமான் திருவடிப் பேரின்பமுத்தி, கத்தரிக்காய் புடோலங்காய் முதலியதாவாவுணவு கொள்ளுதலானும், யாம் சைவரென்று தருக்கிக்கூறுதலானும் எய்தும் எளிமைத்தன்று. அல்லாமலும் உலகவாழ்க்கை பெருந்துக்க சாகரத்தில் தம்மறிவு தோய்ந்து பெரிதுந்துயருழவாநிற்பவும் அதன்கண் எல்லாந்தமக்கு வருத்தம் இழையளவுந்தோன்றாது, இம்மைமறுமைப்பயன்றந்து உறுதிகூட்டும் ஞானநூலாராய்ச்சின்கண் அவர்க்கு வருத்தந்தோன்றல் புண்ணிய முதிர்ப்பு இல்லாக் குறைபாடாவதன்றிப் பிறிதென்னை? விடியுங்காலையில் உறக்க நீங்கி எழுந்து இரவில் துயில் கொள்ளுமளவும்மெய் வியர்வரும்பக்கோல், தச்சு, நெசவு, உழவு, பொறைச்சுமை, பகடு உய்த்தன்முதலான அருந்தொழில் பலவியற்றிப்பொருள் சிறிது ஈட்டுதற்கண் நம்மனோர்க்கு வருத்தந்தோன்றுதலில்லை; ஒருநாழிகைப்போதேனும் நன்மக்கள் குழுவிலிருந்து ஞானநூலாராய்ச்சி செய்தற்கண் அவர்க்கு வருத்தம் மிகத்தோன்றாநிற்கும். பொய்யுரைத்தும், பொருளுடையாரைக்கண்டால் அவருக்கும்வகை இச்சகம்பேசியும், நல்லோர் பெரியோரைப்புறம் பழித்தும், கலகவுரை நிகழ்த்தியும், விதண்டைபேசியும், வீணுரைகிளர்ந்து தம்நாளொழித்தற்கண் நம்மனோர்க்கு வருத்தந்தோன்றாது; அரைநாழிகைப் போதேனும் ஈசுர விஷயமான நல்லுரையுரைத்து ஆனந்தமுறுதற்கண் அவர்க்கு வருத்தமிகத்தோன்றாநிற்கும். நாட்டுவளங்கள் பலகண்டும் பருவதக்காட்சிகள் பலகண்டும், வனங்களிற்சரித்து ஆண்டுள்ளன பலகண்டும், கடற்காட்சிகண்டு உலாப்போயும், நகரவித்தியாசாலைகள், அறங்கூறவையங்கள், தொழிற்சாலைகள், ஓவியச்சாலைகள், சிருங்காரத்தோட்டங்கள், அறச்சோற்று மண்டபங்கள், யாவையுமலிந்த ஆவண வீதிகள் முதலான வருந்தித்திரிந்துகண்டும் நாட்கழித்தற்கண் நம்மனோர்க்குப் பிரயாசை தோன்றாது; நல்லறிவுடையோரைக்கண்டு அவரோடு அளவளாவுதற்கண்ணும் தேவாலயங்களுக்குச்சென்று ஈசுரன்திருவுருவத்



தைக் கண்ணாரக்கண்டு களிப்பதன்கண்ணும் அவர்க்குப்பிரயாசை மிகத்தோன்றாநிற்கும். புளுகுரை கேட்டும் புறம்பழிப்புரை கேட்டும் வம்புரை கேட்டும் வாதுரை கேட்டும் வாளா நாட்கழித்தற்கண் நம்மனோர்க்கு மகிழ்ச்சிமிகத் தோன்றாநிற்கும் பெரியோர் சொல் நீதியுரையும் நியாயவுரையும் தருமவுரையும் உபதேசவுரையும் ஞானவுரையும் அன்புரையுங் கேட்டற்கண் அவர்க்கு இகழ்ச்சிமிகத்தோன்றாநிற்கும். என்னே! என்னே! நம்மனோர் செயலிருந்தவாறு! ஆரிய நன்மக்களே! எம்பிரியசகோதரர்களே! சைவசமய அன்பர்களே! இனியேனும் இங்ஙனம்நாட்கழியாது ஞானநூலாராய்ச்சி செய்து ஈசுரனை உண்மையன்பான் உபாசிப்பதற்கு மடிகட்டி எழுங்கள்! உங்கட்கு ஞானநூலாராய்ச்சி செய்வது கஷ்டமாயின், அவ்வாராய்ச்சி முதிர்ந்த நல்லோரைக்கூட்டி அவருபதேசிக்கும் நல்விஷயங்களைச் செவிமடுத்துப்பிழைக்கு நெறிதேடுங்கள்! 'முயற்சியுடையாரிகழ்ச்சியடையார்' என்னும் ஔவைப்பிராட்டியார் அருள்வாக்கிய உபதேசத்தை ஞாபகத்தில் வையுங்கள்!

"காகமுறவுகலந் துண்ணக்கண்டீர் அகண்டாகாரசிவ
போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப்பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிட நாமினிஎடுத்த
தேகம்விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ்செகத்தீரே.

ஞானசாகரம்.

---

## நீதி, ௩.

"வழிப்பயணம் போகும் ஒருவழுக்கைத்தலையன் சூரியனுடைய உக்கிரமான வெய்யிலினால் தன்தலை கொதித்துத்தாங்கமுடியாமல் ஓட்டமாக வோடிக்கொஞ்சதூரத்திலிருந்த ஓர் பனையடியில் நின்றான். அங்கும் அப்பனை மரத்திலிருந்து ஒரு பெரும்பழம் திடீரென்று அவன்தலையில் தெய்வச் செயலாய் விழுந்து அவன்தலை படபடவென்று உடைந்தது, ஆகையால் தெய்வபலமே எல்லோருக்கும் எங்குச்சென்றாலும் பின்சென்று அவர்களுக்கு வேண்டிய லாபநஷ்டங்களையுண்டு பண்ணும்.

# ஞானம்.

ஞானமென்பது அறிவென்னும் பொருள்தருவதோர் வடசொற்றிரிபாம். அறிவு என்பது ஒருபொருளை உள்ளவாறு அறிதல். ஒருபொருளை உள்ளவாறு அறிதலெனவே, அறிவானும், அறியப்படுபொருளும், அறிதற்குக்காரணமும், கருவியும், காலமும், அறியாமையானுளதாய துன்பமும் அறிந்தபின் எய்துவதாய இன்பமும் எனப் பலவும் ஒருதலையான் ஆராயற்பாற்று. எப்பொருளையும் காணுவுறுவதும், கேட்பதும் நுகர்வதும், சுவைப்பதும், உற்றறிவதும், கண், செவி, நாசி, நாமுதலிய ஐம்பொறிகளேயாயினும் அவையாவும் அறிவில் பொருள்களாகலான் அறிவனவல்ல. அற்றேல் இவை தம்மை ஞானேந்திரியங்கள் என்றும் ஐம்புலன்கள் (புலன்-அறிவு) என்றும் கூறுவதெற்றுக்கோவெனின் அவை ஒரு பொருளை அறிதற்கு வாயிலாதல் பற்றியே என்பது. உறக்கத்தும் பிணக்கிடையினும் கண், செவி முதலியபொறிகள் ஒரு பொருளைக் காண்டலும் கேட்டலும் இம்மை கண்கூடாக அறியப்படுதலின் அவை அறிவுடையனவாகா வென்பது தெற்றெனத் தெளியப்படும். இனி, ஐம்பொறிகள் வாயிலாதலேயன்றி மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவும் ஒரு பொருளை அறிதற்கண் வாயிலாவனவாம். இவை தாமும்தாமே அறியவல்லன அல்லவென்பது ஒன்றன் தொழிலை மற்றொன்று செய்யாமையானும், ஒன்றறிந்தது பிறிதொன்றுணராமையானும் இனிது உணரப்படும். இனி, அறிவான் யாரோவெனின், இவற்றையெல்லாங் கருவியாகக்கொண்டு அறிபவன் ஆன்மாவாம். ஆன்மா எக்காலத்தும் அழியாத அறிவிப்பொருள் என்பது பொருந்துமாற்றானும் அளவைகளானும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய முழுமுதல் ஞானநூல்களானும் பெறுதும். அறியப்படு பொருள்கள் இந்நிலவுலகத்திற் காணப்பட்ட அறிவுப்பொருள், அறிவில் பொருள் என இருகூற்றினடங்கும் எல்லாப்பொருள்களுமாம். கண், செவிமுதலிய பொறிகளானறியப்படும் பொருள்கள் காட்சிப்பொருள்கள் என்றும், மனமுதலிய காரணங்களான் குறித்துணரப்படுவன கருத்துப்



பொருள்களெனவுங் கூறப்படும். உதாரணமாக, நிலம், நீர், தீ, வளி, முதலியன காட்சிப்படுவனவாய உருவப்பொருள்கள். ஆகாயம், அருவப்பொருள். கருமை, செம்மை, நன்மை, தீமை, காதல், அன்புமுதலியன மனத்தாற் குறித்துணரப்படும் கருத்துப்பொருள்கள். இனி உள்பொருள், இல்பொருள், மெய்ப்பொருள், பொய்ப்பொருள், நித்தியப்பொருள், அநித்தியப்பொருள், இயங்கியற்பொருள், நிலையியற்பொருள் முதலிய பலவாற்றானும் பொருள்கள் பகுத்தோதப்படும், அவற்றினியல்பெல்லாம் விரிப்பிற்பெருகும். அறிவு நூல்கள் வாயிலாக உணர்ந்துகொள்க. இனி, மனத்தாலுணரப்படும் பொருள்கள் முதற்கண் ஐம்புலன்களானும் அறியப்பட்ட பின்னரே அறியப்படும். யாங்ஙனமெனின், கருமை, செம்மை, முதலிய பண்புகளை அறியலுறுவான் ஒருவன் அப்பண்புகளையுடைய பண்பிகளைக் கண்டாலன்றி உணர்தல் ஒல்லாது. அன்பு, காதல், அச்சம் முதலியவற்றை உணர்தலுறுவான் முன்னர் அன்புடையார் மாட்டுளதாகும் கண்ணீரரும்பல், மெய்ம்மயிர் நிறுத்தல், அளவளாவல், முகமலர்ச்சியோடு முகத்தவை மொழிதல் முதலிய மெய்ப்பாடுகளையும், செயல்களையும் ஐம்பொறிகளான் அறிந்தாலன்றி உணர்தல் கூடாது. அச்சம் முதலியவற்றிற்கும் இவ்வாறேகொள்க. இந்நுணுக்கங்களையெல்லாம் ஆசிரியர் தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியலிற் பெரிதும் திறமுறத்தெளித்துக் கூறினார், ஆண்டுக்காண்க. எனவே, மனவறிவு ஐம்பொறி வாயிலாகவே நிகழப்பெறுமென்பதும் அருவப்பொருள்கள், உருவப்பொருள்களின் இயல்புணர்ந்த பின்பே உணரப்படுமென்பதும் பெற்றாம். அற்றேல் கண், செவிமுதலிய இந்திரிய உணர்ச்சியில்லாக்குருடு, செவிடு முதலியன மனத்தானறிதலின்றோவெனின், நன்றுகடாயினாய். கண்ணறிவில்லாப் பிறவிக்குருடன் ஒருவன் பொருள்களின் வடிவம், நாற்றம், ஓசை முதலியவற்றை ஏனைப்புலன்களால் உற்றும், நுகர்ந்தும் கேட்டும் அறிதலின்றி நிறம் முதலியவற்றை அறிதலிலன். அவ்வாறே செவிடனும் ஓசையை ஓராற்றானுமறிதலிலன். ஆகலின் இவர்கட்குக் காணாப்பொருள்வயினும் கேளாப்பொருள்வயினும் மனவறிவு இன்றென்க. ஒருபொருளைக் கட்புலனாற்காணாரும் ஓரொலியைச் செவிப்புலனாற் கேளாரும், அக்காண்டல், கேட்டல் உடையவேறொருவர் உரைப்பக்கேட்பின் அவர்தம் உள்ளத்தின்கண் உடனே அவற்றைக்குறித்து ஒருவகைய உணர்ச்சி தோன்றி நிலையுதலுறும். அது பெரும்பாலும் திரிபுணர்ச்சியே. அதனையொத்த உணர்ச்சியே அவ

கட்குள தென்பது. இனி, கண், செவி, முதலிய பொறிகள்யாவும் பழுதின்றிப் பெற்றோருள்ளும் அவரவர் பயிற்சிக் கேற்பப் பெரிதும் வேற்றுமை உள்ளமை அனுபவத்திலறிகிறோம். அவ்வாறே மனம் அறிவு முதலிய அகக்கருவிகளும் ஒருசிலர்க்கு மாத்திரம் விளங்கிக் கிடப்பதும் பலர்க்கு விளங்காமற் கிடப்பதும், ஒருவர்க் கொருவர் வேற்றுமை பெரிதுடைத்தாதலும் அனுபவித்தறியற்பாலது.

இனி, அறிதல் பொதுவகையான் அறிதலும் சிறப்புவகையான் அறிதலுமென இருதிறப்படும். பொதுவகையான் அறிதலாவது ஒரு மரத்தைக்கண்டு ஐயவுணர்ச்சி, திரிபுணர்ச்சி இன்றி இஃதோர் தோன்றுகின்ற உருவமாமென்னுந் துணையுணர்தலாம. சிறப்புவகையான் அறிதலாவது அவ்வாறே ஒருமரத்தைக்கண்ணுற்று ஐயந்திரிபின்றி இன்னமரம், இவ்வியல்பிற்று, இவ்விவ்வினைகடகேற்றது, இவ்விவற்றிற்கு ஏலாதது என்று இன்னோரன்ன தன் இலக்கணமெல்லா முணர்தலாம். ஐயமாவது இப்பியைக்கண்டு இப்பியோ வெள்ளியோவென துணிவுபடாதிற்றல். திரிபாவது இப்பியை வெள்ளியென்றே துணிந்துகோடல். இனி அளவைநூலார் மேற்கூறிய பொதுவறிவு, சிறப்பறிவுகளை முறையே நிருவிகற்பக்காட்சி, சவிகற்பக்காட்சி என்பர். இனி பொதுவிற்பொது, பொதுவிற் சிறப்பு, சிறப்பிற் பொது, சிறப்பிற் சிறப்பெனவும் நுண்ணுணர்வுடையோர் கூர்ந்தோதுவர். அவற்றினியல்பெல்லாம் உய்த்துணர்ந்து கொள்க. இற்க, பொருள்களை உள்ளவாறுணராமல் பிறழவுணரின் அது திரிபுணர்ச்சி என்றுரைக்கப்படும். இனி, ஒருபொருளை மயக்க உணர்தலும், விபரீதமாக உணர்தலு முறையே மயக்க உணர்ச்சியென்றும், விபரீத உணர்ச்சியெனவும் இளங்கோதப்பெறும். அறியாமையென்பது ஒருபொருளினுண்மைதெரியாமை. உண்மைகண்டு உளதாந்தன்மை. உதாரணமாக, ஆன்மாவென்றொரு பொருளுண்டென்பதுகூட அறியாமை. திரிபுணர்ச்சி, மயக்கவுணர்ச்சி முதலியனவும் மெய்ம்மை உணராமைக்காரணம்பற்றி அறியாமை எனவும் ஒரோவழிக்கூடப்படும். இதனை, 'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினுமப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னுந் திருக்குறளானும் அதற்குப்பரிமேலழகியார் எழுதியஉரையானு முணர்க. ஒருபொருளை உள்ளவாறு அறிதற்குக்கல்வி ஒருதலையாக வேண்டப்படும்.

(தொடரும்)

மணி-திருநாவுக்கரசு முதலியார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௩.] 1914௵ ஜூலை௴, [பகுதி ௭.

## உருத்திராட்சவைபவம்.

உருத்திராட்சசாபாலம்.

"ருத்ராட்சாஜாதாஸ்ஸர்வாநுக்ரகார்த்தாய தேஷாம்நாமோச்சாரணமாத்ரேணதசகோப்ரதாநபலம்தர்சநஸ்பர்சநாப்யாம்த்விகுணபலம்."

அனைவர்க்கும் அநுக்கிரகஞ் செய்யும்பொருட்டு உருத்திராட்சங்கள் உண்டாயின. அவற்றின் பெயரைச்சொன்ன மாத்திரத்திலேயே பத்துக்கோதான பலனும், அவற்றைக் காண்டல் தீண்டல்களுக்கு மேலும் மேலும் இரட்டிப்பாகுபலனும்.

ஸ்காந்தபுராணம்.

"நவிர்பூதிர்யஸ்ய பாலேகாங்கே ருத்ராட்சதாரணம்
நசம்போர்பவநே பூஜாஸவிப்ரச் ச்வபசாதம
காதங்மாம்ஸம்பிபங்மத்யம்ஸங்கச்சங்நத்யஜாமபி
பூதகேப்யோவிமுச்யேத ருத்ராட்சேஸிபஸிஸ்திதே."

எவனுடைய கிருகத்தில் சிவபூஜையில்லையோ அந்த விப்பிரன் மாமிசத்தைத்தின்கிறவனிலுங் கீழ்ப்பட்டோனவன். மாமிசத்தையுண்பவனாயினும், மதுவைக் குடிப்பவனாயினும், நீசஸ்திரீயைப் புணர்பவனாயினும், அவனது தலையில் உருத்திராட்சமிருப்பின் பாவத்தினின்று விடுபடுவன்.

பராசரபுராணம்.

“மகாதேவச்ச விஷ்ணுச்சப்ரஹ்மா தேஷாம்விபூதய:
தேவாச்சாந்யே ஸதாபக்த்யாகலு ருத்ராட்சதாரிண:”
“பாபிஷ்டாநாம் மநுஷ்யாணாம் ருத்ராட்சாணாஞ்சதாரணே
ச்ரத்தாநஜாய தேஸாக்ஷாத்வேத ஸித்தேவிமுக்திதே.”!!

மகாதேவன் (குணருத்திரன்,) விட்டுணு, பிரமன் மற்றைத்தேவர்கள் யாவரும் எஞ்ஞான்றும் உருத்திராக்கத்தைப் பத்தியுடன்றரிக்கின்றனர்.

பாவிகளான மனிதர்கட்கு, வேதத்தினால் சித்தித்ததும், முத்தியைக் கொடுப்பதுமான உருத்திராக்க தாரணத்தில் சிரத்தையுண்டாவதில்லை.

மானவபுராணம்.

“ருத்ராட்சம்தாரயந்பாபம் குர்வந்நபிசுதஷ்கரம்!
ஸர்வம்தரதிபாப்மாநம் ஜாபாலச்ருதிராஹஹி.”!!

மிக்க கொடும்பாவத்தைச் செய்கிறவனேனும், உருத்திராக்கத்தையணிவோன் எல்லாப்பாவத்தையுங்கடந்து செல்வோனவனென்று ஜாபாலச்சுருதி சொல்கிறதன்றோ.

இன்னும் பஸ்மஜாபாலம், பிருஹஜ்ஜாபாலம், ராமரஹஸ்யம் ருக்வேதஅட்சமாலிகை, யஜுர்வேததட்சணாமூர்த்தி, ஸாமவேதருத்ராட்சஜாபாலமென இத்தொடக்கத்து உபநிஷதங்களும், ருக்வேதருத்ரநமகமும் உருத்திராட்சமகிமையை எடுத்துப்புகழ்கின்றன.

இங்ஙனமிருந்தும், சித்தாந்தத்தில் வல்லுநராகிய சிறப்புச்சைவரிற் பெரும்பாலோர் உருத்திராட்சம் தரிப்பதில்லை. சித்தாந்தம் கல்லாத பொதுச்சைவரிற் பெரும்பாலோர் தரித்துவருகின்றனர். தென்தேயத்தில் பரம்பரைச்சைவர்கள் எனச்சொல்லிக்கொள்வாரும், தேசி



கர்களும், அபிஷேகஸ்தர்களும், தம்பிரான்மார்களும் உருத்திராட்சமின்றியே சிவாலயத்திற்குள் வரக்காண்கின்றோம். சித்தாந்திகளெனப்பெயர்பூண்டபலர் சமாஜங்களில உருத்திராட்சமின்றியே உபந்நியாசஞ்செய்கின்றனர், புராணிகர்களுட்சிலர் உருத்திராட்சமின்றியே பிரசங்கங்கள் செய்து வருகின்றனர். சைவர்கள் பலர் பூசாகாலத்தில் மாத்திரந்தரித்து மற்றையகாலங்களில் தரியாதிருக்கின்றனர். விபூதியையும் உருத்திராட்சத்தையும் தரித்தவரே சைவராவரெனச் சாஸ்திரங்களனைத்தும் கூற, ஒன்றை நீக்கி மற்றொன்றை மாத்திரம் தரித்து உலவுபவர் சைவராவரா? உருத்திராட்சம் தேகத்தினின்றும் நீங்கக்கூடாதென்றே சிலர் உருத்திராட்ச கடுக்கன் பூணுகின்றனர். சிலசைவர் விபூதிமாத்திரந்தரித்து உருத்திராட்சந்தரிக்க மனங்கூசுகின்றனர். இவர் எவ்வகைச்சைவரோ? மஞ்சள் மாத்திரம் குளித்து மாங்கல்யந்தரிக்கக்கூசும் மாதரோடிவர்ஒப்பார்போலும். இம்மாதரை நாம்கண்டதில்லை. உருத்திராட்சம் தரிக்காவிடில்சைவராகாரோ எனச் சிலர்வினவுவர். விபூதிதரிக்காவிடில் சைவராகாரோ என அவரைவினவில் என்னபதிலுரைப்பர். மஞ்சளையும் மாங்கலியத்தையுமிழந்த மாதர்களிடத்துக் கேள்வியேயில்லை. அங்ஙனமே விபூதியையும் உருத்திராட்சத்தையு மிழந்தவர்களிடத்தும் கேள்வியேயில்லை. ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றுவாரிடத்திலேயே கேள்விபிறக்கிறது.

“பூதி பெருமை புகலும்வே தாகமத்தில்
நாதன் மணியு நவின்றிருக்கப்—பேதித்தே
யொன்றைக்கைக் கொண்டுமற் றொன்றை விடுத்திடுதல்
நன்றாமோ சைவீர் நவில்.”

என்றார் பிறரும். உருத்திராட்சம் தரிப்பது வெறும்பகட்டென்பர் சிலர், அங்ஙனமாயின்விபூதியும்பகட்டாகமுடியாதோ? இரண்டும்பகட்டே என்பாரேல், இங்ஙனங்கூறும் புறச்சமயர்முன் நமக்கு வார்த்தையில்லை. இத்தகையார்பால் விபூதி உருத்திராட்சமிரண்டும் இன்றியமையாச் சத்தியசாதனங்கள் என்று நாட்டவேண்டுவது நமக்கு வேறுசமயமுண்டு, தற்சமயம் நமது சோதரர்களாகிய சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவரிடத்திலேயே நமக்குச்சம்பிரதாய வழக்காகும். ஆகவே நமது சைவசாஸ்திரங்களிற் கட்டளையிட்டபடி விபூதி

யுருத்திராட்சம் இரண்டையும் எக்காலத்தும் தரித்துவாழ்வதவே இன்றியமையாத கடனெனக் கொள்ளவேண்டுவது சற்சைவர்கள் கடனாகும்.

### சிவமகா புராணம்.

"விபூதிர்யஸ்யநோ பாலேகளே ருத்ராட்சதாரணம்
நஶிவமயீவாணீ தந்த்யஜே தந்த்யஜம்யதா
சைவங்ராமததாங் காவிபூர்திர்ய முஹாததா
ருத்ராட்சா விதிஜூப்ரோக்தா ஸர்வபாபப்ரணுஶ்ரிதி."

எவனுடைய வாயினில் சிவநாமங்களும், நெற்றியில் விபூதியும், கழுத்தில் உருத்திராட்சமும் ஆகிய இம்மூன்றும் விளங்குமோ அவனைப்பார்த்தால், கங்கை, யமுனை சரஸ்வதி இம்மூன்றின் சங்கமமான திரிவேணி ஸ்நானம் செய்தபலன் கிடைக்கும், சகல பாபங்களும் போம். அவனை யிவ்வாறுமதியாமல் அவமதிப்போர் இப்பொழுதே பெரும்பாவமடைவர். விபூதியணியாத நெற்றியும், உருத்திராட்சதாரணமில்லாதகழுத்தும், சிவநாமம் புகலாதவாயும் உடையவனைக்கண்டால்சண்டாளனைக் கண்டாற்போல் விலகிச்செல்லவேண்டும். உருத்திராட்சமாலிகைதாங்கி நூறுமந்திரம் ஜபித்தால் ஆயிரம்ஜபித்தபலன் கிடைக்கும். சிவபெருமான், விஷ்ணு, சூரியன், சத்தி, கணபதி இவ்வைவர்மந்திரங்களை ஜபிப்பதற்கு உருத்திராட்சமே சிறந்தது. இதனால் சகல மந்திரங்களையும் ஜபிக்கலாம். முத்தி, புத்திரபாக்கியம், ஐஸ்வரியம், வித்தை, கன்னிகை, கீர்த்தி முதலியவற்றை விரும்பினவர்கள் உருத்திராட்ச மணியைப் பரிசித்து ஜபித்தால் அவற்றைத் தடையின்றியடைவர். உருத்திராட்சத்தை விருப்பத்தோடாவது விருப்பமின்றியாவது அணிந்தாலும் பலனுண்டாம். உருத்திராட்ச மணியவேண்டுபவன் பொருள்கொடுத்து வாங்கவேண்டும். இனாமாகக் கொடுக்க வாங்கப்படாது. சிவமந்திரம் ஜபிக்ாதவனையும், உருத்திராட்சமணியாதவனையும்பரிசிக்காமல் தூரமாகப்போகவேண்டும். சர்வவிதைகளிலேயும் அவ்வம்முனைகளே யிருக்கின்றனவெனினும், உருத்திராக்ஷவிதையில் முந்தியாகிய முனைகிளம்புகிறது. உருத்திராட்ச மணிந்தவனைப்பார்த்தால் பூதப்பிரேதபசாசசாகினிடாகினி முதலிய சகல கிரகங்களும், அபிசாராதிப்பிரயோகங்களும் அவனைநெருங்காது விலகியோடும். உருத்திராட்ச மாலிகையைப் பார்த்தால் சிவபெரு



மான் சந்தோஷிப்பர். ஸ்நானம்செய்யும்போது கழுத்திலுள்ள உருத்திராட்சத்தில் நீர்பட்டுத் தேகத்தில் சிந்தினால் கங்கையில் ஸ்நானம் செய்த பலனுண்டாகும். ஸ்நானம், தானம், ஜபம், ஓமம், அத்தியயனம், பிதுர்த்தர்ப்பணம், சிவபூஜை, சிரார்த்தம் முதலிய காரியங்களிலேயும்உருத்திராட்சம்தரித்துச் செய்தாலொழியப் பிரயோசனமில்லை. உருத்திராட்சமின்றிச் சிவாலயத்திற்பிரவேசித்தால் ஒருபிரயோசனமுமுண்டாகாது.

ஆகவே சுத்தாத்துவித சித்தாந்தவைதிக சைவராவார் எக்காலமும் உருத்திராட்சாபரணம் பூண்டு வாழும் பாக்கியம் பெற்றவரேயாவர்.

மணவழகு.

---

### நீதி. சு.

பிடாரன் பெட்டியில் அடைந்து ஏங்கிக் கண்சாதெல்லாம் ஆசையற்றுப்பசியினாற்சோர்ந்து! இனி நாம் வெளியில்போக எவ்விதத்திலும் மார்க்கமில்லை யென்றிருந்த ஓர் சர்ப்பத்தின் பெட்டியைத் தெய்வச் செயலால் ஒரு எலியானது அப்பெட்டியில் ஏதோ தான் தின்னக்கூடிய உணவிருக்கிறதாக வெண்ணி, அப்பாம்பின் வாயிருந்த விடத்திற்கு நேராக வோர்துவாரஞ் செய்து அதற்குள் நுழைந்து போனதானுகவே அப்பாம்பின்வாயில் போய்ச்சேர்ந்து, பசியுடன் கிடந்தபாம்பும் தெய்வச்செயலால்கிடைத்த அவ்வெலியைவிழுங்கிவிட்டுப் பசிநீங்கி, களைதெளிந்து அவ்வெலிசெய்த துவாரத்தாலேயே தானும்சீக்கிரமாக வெளியே போய்விட்டது. தெய்வம் காக்கவேண்டியவனைக்காக்கும். கொல்லவேண்டியவனைக் கொல்லும். தெய்வபலமே பலமாகும். மற்றபலம் தூர்ப்பலமாகும்.

# கடவுளின் வியாபகம்.

கடவுள் உணர்வரியதும் உவமையிலாததுமான சித்துப்பொருளாயிருத்தலினால் அவருடைய வியாபகமும் உணர்வரியதும் உவமையில்லாததுமாயிருக்கிறது. ஆதலால் அவருடைய வியாபகம் சடப்பொருள்களின் வியாபகத்தோடு ஒப்பிட்டு நமது சுட்டுணர்வினால் உணரப்படாததாம், ஆயினும் கடவுளையடைந்து அநுபவிக்கும் உவமையிலாப் பேரின்பத்தைப் பாலுக்கும் சீனிக்கும் தேனுக்கும் ஒப்பிடுவதுபோல், மனிதர்கள் அவரவர்கள் அறிவுக்கிசைய அவருடைய வியாபகத்தைச் சடப்பொருள்களின் வியாபகத்தோடும் சித்துப்பொருளாகிய உயிரின் வியாபகத்தோடும் ஒப்பிடுவர். இவற்றுள் சித்துப்பொருளாகிய கடவுளின் வியாபகத்தைச் சித்துப்பொருளாகிய உயிரின் வியாபகத்தோடு ஒப்பிடுதல் சிறப்பாகும். சடப்பொருள்களின் வியாபகத்தோடு உவமிக்கினும் ஸ்தூலமாக ஒப்பிடாமல் சூக்குமமாக ஒப்பிடவேண்டும்.

ஆன்மாக்கள் தாமெடுக்குஞ்சரீரங்கள் தோறும் நிறைந்து தாம் வேறு சரீரம் வேறு என்னாதபடி கலந்து சரீரமுந்தாமும் (அத்துவிதமாய்) ஒன்றேயாயிருத்தல்போல் கடவுளும் சித்தசித்து ஆகிய இருவகைப்பொருள்களிலும் நிறைந்து அவைவேறு தாம்வேறு என்னாதபடி கலந்து (அத்துவிதமாய்) ஒன்றேயாயிருக்கிறார்.

அகர உயிரானது அங்காத்தல் என்னும் வாயைத்திறத்தலாகிய தொழில் முயற்சி யொன்றினால் பிறக்கும் ஒரு உயிரெழுத்து, மற்ற எழுத்துக்களெல்லாம் அங்காத்தலோடு வாயைக் குவித்தல் முதலிய தொழில் முயற்சிகளாற் பிறக்கும். ஆதலால் அகர உயிரானது தனியெழுத்தாய்ச் சீவித்திருப்பதுடன் மற்றெழுத்துகளுடன் விரவி அவையே தானாகாமலும் அவற்றின் வேறாகாமலும் கலந்திருப்பதாகவும் அணியப்படும். அகரவுயிர்போலவே மற்றவுயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களோடு இரண்டறக்கலந்து அவற்றை இயக்குகின்றன. கடவுள் அகரவுயிர்போலவும் ஆன்மாக்கள் மற்றவுயிர்களைப்போலவும் தநுகரணபுவன போகங்களாக விரிந்துகிடக்கும் அசித்துப்பொருள்கள் மெய்யெழுத்துகளைப்போலவும் இருந்து ஒன்றினொன்று பிரிக்கப்படாமல் (அத்துவிதமாய்) இரண்டறக்கலந்து நிற்கும்.



கடவுள் இவ்வாறு எல்லாவற்றோடுங்கலந்து ஒன்றேயாகாமலும் வேறாகாமலும் இருத்தலினால் நூல்கள் அவரை எல்லாமாய் அல்லவுமாய் இருப்பவர் என்றுகூறும்.

கடவுள் தமக்குமுன் அண்டங்களெல்லாம் அணுக்களாகும்படி பெருத்தும் அணுக்களெல்லாம் அண்டங்களாகும்படி சிறுத்தும் இருத்தல் அவருடைய வியாபகத்தின் பெருமையை விளக்கும்.

கடவுள் பிரமன்முதலிய மிகப்பெரிய தேவர்களுக்கும் எட்டப்படாமல் அகண்டமாயிருப்பதுடன் தன்னை மெய்யன்போடு வழிபடும் பக்தர்களின் சுருங்கிய மனத்தையே கோயிலாகக்கொண்டு வசிப்பவராகவுமிருக்கிறார்.

### திருவருட்பயன்.

அகரவுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

### திருக்குறள்.

அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆன்மா இயக்க அவயவங்கள் இயங்குவதுபோல் கடவுளானவர் ஆன்மாவினுள் அந்தரியாமியாயிருந்து இயக்க ஆன்மா இயங்குகின்றது. இயக்காவிடில் ஆன்மா கண்ணிருந்தும் பாராது, காதிருந்தும் கேளாது வாயிருந்தும் பேசாது.

### தேவாரம்.

ஆட்டுவித்தாலா ரொருவராடாதாரே
யடக்குவித்தாலா ரொருவரடங்காதாரே
ஓட்டுவித்தாலா ரொருவரோடாதாரே
உருகுவித்தாலா ரொருவருருகாதாரே
பாட்டுவித்தாலா ரொருவர் பாடாதாரே பணிவித்
தாலாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தாலா ரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே.

## ஆன்மா.

ஆன்மாக்கள் அளவிடப்படாதனவாய், நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடையுடையவைகளாய், சரீரந்தோறும் வெவ்வேறும் வினைகளைச்செய்து வினைப்பயன்களை யநுபவிப்பவைகளாய், சிற்றறிவும் சிறுதொழிலுமுடையவைகளாய், தங்களுக்கு ஒரு தலைவனையுடையவைகளாயிருக்கும். ஆன்மாக்கள் சேதனப்பொருள்களாயிருப்பினும், பாசத்தால் தடைபட்டு, அஞ்ஞானமாகிய இருட்டில் சார்ந்ததன் வண்ணமாயிருந்து, தங்களையும் தங்கள் தலைவராகிய கடவுளையும் அறியப்பெறாமல் பிறவிக்கடலில் அழிந்து வருந்துவதனால், கருணைக்கடலாகிய கடவுள் அவற்றைப்பல பிறவிகளெடுக்கச்செய்து, பாசத்தடையைப்போக்கி, தமது திருவடி இன்பத்தைக்கொடுத்தருளுவர். ஆன்மா பாசத்தால் பந்திக்கப்பட்டிருத்தலினால் பசு என்னப்படும்.

### தாயுமான சுவாமிகள் பாடல்.

பாராதி பூதநீ யல்லை உன்னிப்
பாரிந் திரியங் கரணநீ யல்லை
ஆராயுணர்வு நீயென்றான் ஐயன்
அன்பாயுரைத்த சொல் ஆனந்தந் தோழி;
சங்கர சங்கர சம்பு சிவசங்கர சங்கர
சங்கர சம்பு சங்கர சங்கர சங்கர சம்பு.

ஆன்மாக்கள் தாம் எடுக்குஞ்சரீரத்திற்கேற்ப மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளினாலும், சித்தத்தினாலும், அறியும் அறிவின் வகையால், ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் ஆறறிவுயிர், என அறுவகைப்பட்டு, தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகையாகப்பிறக்கும். இவற்றுள் கருப்பையில் தோன்றுவன சராயுசம் எனவும், முட்டையில் தோன்றுவன அண்டசம் எனவும், வேர்வையில் தோன்றுவன சுவேதசம் எனவும், வித்துவேர் கிழங்கு முதலியவற்றில் தோன்றுவன உற்பிச்சம் என்வும் சொல்லப்படும்.

ஆன்மாக்கள் எடுக்குஞ்சரீரம் தூலசரீரம்எனவும் சூக்குமசரீரம் எனவும் இருவகைப்படும். தூலசரீரமாவது பஞ்சபூதங்களாகிய உரு உடம்பு. சூக்குமசரீரமாவது, சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் காரணதன் மாத்திரையைந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றுமாகிற எட்டினாலும் உண்டாக்கப்பட்டு ஆயுள் முடிவில் முன்னுடம்பு விட்டு மற்றொருடம்பு எடுத்தற்கு ஏதுவாயிருக்கும் அருஉடம்பு.

நல்வினைசெய்த ஆன்மாக்கள் தூலசரீரத்தை விட்டவுடனே, சூக்குமசரீரத்தோடு பூதசாரசரீரமாகிய தேவசரீரத்தை யெடுத்துக்கொண்டு சுவர்க்கமுதலிய போகபூமிகளிற்போய், இன்பத்தையனுபவித்து, மீண்டும் மனிதப்பிறவியை யெடுக்கும். அவை பூமியிலே மறுபடியும் உடனேமாறிச்சரீரம் எடுத்தலும்உண்டு. தீவினை செய்த ஆன்மாக்கள் தூலசரீரத்தை விட்ட உடனே சூக்கும சரீரத்தோடு பூதசரீரமாகிய யாதனாசரீரத்தை யெடுத்துக்கொண்டு நரகத்திலே போய், துன்பத்தை யனுபவித்துமீண்டும் பூமியில்வந்து தாவரங்களாகவும், நீர்வாழ்வனவாகவும்; ஊர்வனவாகவும், விலங்குகளாகவும் பிறந்து, முன்செய்தநல்வினைப்பயன் வந்து பொருந்தமனிதர்களாய்ப்பிறக்கும். ஆன்மாக்கள் இவ்வாறு பலகோடிப் பிறவிகளெடுத்துப் புண்ணியமேலிட்டால் நல்வினைப்பயனாகிய இன்பத்தையும் தீவினைப்பயனாகிய துன்பத்தையும் சமமாகப்பார்த்தலாகியஇருவினையொப்பு நேரிடும் பிறவியில் பாசநீக்கம்பெற்றுக் கடவுளின் திருவடி நிழலையடையும்.

ஆன்மாக்கள் அளவற்றன. இதுவரையில் இறந்தகாலத்தையும் இனிவருங்காலத்தையும் அளவிடலாகாததுபோல் இதுவரையில் முத்தியடைந்த ஆன்மாக்களையும் இன்னும் முத்தியடையாமலிருக்கும் ஆன்மாக்களையும் அளவிடலாகாது. கடவுளைப்போலவே ஆன்மாக்களும் ஒருகாலத்தில் உண்டாவதும் அழிவதுமின்றி என்றும் நிலைபெற்றிருக்கும்.

செம்பு உள்ளபோதே அதனிடத்தில் களிம்பு இருப்பதுபோலவும், நெல் உள்ளபோதே அதனிடத்தில் உமியும் தவிடும் இருத்தல்போலவும் ஆன்மாக்களிடத்தில் பாசம் அல்லது மலம் என்னும் அழுக்கு இயல்பாகவே இருக்கிறது. இதனால் ஆன்மாக்கள் தம்சொரூபங்குன்றித் தம்மையுந் தம்தலைவனையும் அறியப்பெறாமல் ஜனனசாகரத்தில் கிடந்துழல்கின்றனர்.

கடவுளைப்போல் ஆன்மாக்களுக்கும் வியாபகமுண்டு ஆனால் அவை கடவுளைப்போல் இயற்கையாகவே சர்வ வியாபகமாயிராமல் எவ்வெவற்றைச்சார்ந்திருக்குமோ அவ்வவற்றின் அளவாக வியாபித்திருக்கும். எறும்பின் சரீரத்தில் எறும்பினளவாகவும், யானையின் சரீரத்தில் யானையின் அளவாகவும் வியாபித்திருக்கும். தூலசரீரத்தினும் பார்க்கச்சூக்குமசரீரத்தில் ஆன்மவியாபகம் அதிகரித்திருக்கும். அக்கினிதேவன் வாயுதேவன் முதலிய தேவர்களின் சரீரம் மனிதர்சரீரத்தைப்போல் தூலமாயிராமல் சூக்குமமாயிருத்தலினால் அவர்கள் வியாபகம் இந்நிலவுலகெங்குங் காணப்படுகின்றது. யோகசாதனையினால் மனிதர்கள் சூக்குமசரீரம் பெறும்போது அதிக வியாபகமடைந்து அட்டமாசித்திகள் செய்யவல்லவராகின்றார்கள். ஆன்மா மலத்தினின்றும் நீங்கப்பெற்றால் கடவுளைப் போலவே சர்வவியாபகமடையும்.

ஆன்மாவின் உருவம் அறிவேயாகும். ஆனால் ஆன்மாக்களின் அறிவு கடவுளின் அறிவைப்போல் பேரறிவாயிராமல் அவை எடுக்குஞ் சரீரங்களுக்கேற்ப விளக்கமுறுதலால் சிற்றறிவு எனப்படும். தூலசரீரத்தினும் சூக்குமசரீரத்தில் ஆன்ம அறிவு அதிகப்படும். கண்ணினிடத்தில் இயற்கையாகவே ஒளியிருந்தும், அது சூரியனொளியின் உதவியின்றி எதையும் அறியமாட்டாது. அதுபோல் ஆன்மாவினிடத்தில் இயற்கையாகவே அறிவிருந்தும் அது முற்றுணர்வினனாகிய கடவுள் அறிவிக்க அறிகின்றதேயன்றி தானே எதையும் அறியமாட்டாது. ஆன்மா மலத்தினின்றும் நீங்கிப் பரிசுத்தமடைந்தால் ஆன்மவறிவும் கடவுளறிவும் ஏகமாய் அகண்டமாய் அபேதமாய் விளங்கும்.

சார்ந்ததன் வண்ணமாயிருத்தல் ஆன்மாவின் இயற்கை சத்தாகிய கடவுளோடு கலக்கச் சத்தாகவும் அசத்தாகிய தேகாதிகளோடு கலக்க அசத்தாகவும் இருக்கும். தான் எடுக்குஞ்சரீரம் வேறு தான் வேறு என்னாதபடி சரீரமேதானாக இருக்கும். தன்னை மனித சரீரத்தில் மனிதனேயாகவும், விலங்கின் சரீரத்தில் விலங்கேயாகவும், பறவை முதலிய சரீரங்களில் பறவை முதலியனவே யாகவும் ஆண் சரீரத்தில் ஆணேயாகவும் பெண்சரீரத்தில் பெண்ணேயாகவும் மதித்து மயங்கிக்கிடக்கும். தாம்வேறு சரீரம்வேறு என்றுணர்ந்து பாசநீக்கம்பெற்றால் கடவுளோடு தான்வேறு கடவுள்என்னாமல் இரண்டறக்கலந்து இன்புறும். ஆன்மா எக்காலத்தும் தனித்திராமல் பாசத்தையாயினும் பதியையாயினும் பற்றிநிற்கும். ஆதலால் ஆன்மா பதியைப்பற்ற பாசப்பற்று அறும்.



### தாயுமான சுவாமிகள் பாடல்.

ஆணவத்தோடத்து விதமானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்து விதஞ்சாருநா ளெந்நாளோ,

ஆன்மாக்கள் பிறவியெடுக்கும் உலகங்கள் எண்ணிறந்தன. இவற்றுள் பல போகபூமிகளாகிய தேவலோகங்களாகவும், பல துன்பவடிவினவாகிய நரகலோகங்களாகவுமிருக்கும். இவற்றுள் ஆன்மாக்கள் எடுக்குஞ்சரீரங்களுங் கோடிகோடியாகப் பேதப்பட்டிருக்கும். இவைகளினின்றுந்தப்பி மானிடப்பிறவியெடுப்பது கடலைக்கையால் நீந்திக் கரையேறுதலையொக்கும். இதுபற்றியே பெரியோர் "எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவியே யாதினும் அரிது அரிது காண். இப்பிறவிதப்பினால் எப்பிறவிவாய்க்குமோ எதுவருமோ" என்று கூறினார். இவ்வளவு அரிய மானிடசரீரமும் இவ்வளவுகாலம் நிலைத்திருக்குமென்று நிச்சயிக்கக்கூடாததா யிருக்கின்றது. இது தாயின் கருப்பத்தில் அழியினும் அழியும், குழந்தைப்பருவத்தில் அழியினும் அழியும், யௌவனத்தில் அழியினும் அழியும் மூப்பில் அழியினும் அழியும். ஆதலால் இந்தச்சரீரம் உள்ளபொழுதே பெருங்கருணைக் கடலாகிய கடவுளை வழிபட்டுப் பெரும்பிறவிக்கடலைக்கடத்தல் வேண்டும்.

### பட்டணத்து சுவாமிகள் பாடல்.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ,
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ,
முன்ன மெத்தனை யெத்தனை ஜென்மமோ
மூடனா யடியேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை ஜென்மமோ
என்செய்வேன் கச்சியேகம்ப நாதனே.

(தொடரும்)

இருக்கம்-ஆதிமூல முதலியார்.

# ஞானம்.

தொகுதி 3 பக்கம் 178 தொடர்ச்சி.

'தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு' எனவும் 'விலங்கொடு மக்களனையர் இலங்குநூல், கற்றாரோ டேனையவர்' எனவும் போந்த அருமைக்குறு வெண்பாக்களின் கருத்தை ஓர்ந்துணர்க. கல்வியின்றெனினும் கேள்வி ஒருவற்குப்பெறினும் வேண்டற்பாலதாம். 'செவிச்செல்வஞ் செல்வத்துட் செல்வமச் செல்வஞ், செல்வத்து ளெல்லாந்தலை' என்றும் 'கற்றில னாயினுங்கேட்க' என்றுங் கூறினர் பொய்யில் புலவரும். இனி, ஒரு பொருளை அறியாமையின் விளையுந்துன்பம் எடுத்துக்கூறல் வேண்டா. அநுபவத்தானுணரப்படுவதொன்றேயாம். அவ்வாறே, முன்னரறிந்திலா ஒருபொருளை அறிவதனான் உண்டாம் இன்பமும் கழியவும்பெரிது என்பது அநுபவத்தானறிந்ததேயாம். நிற்க, ஈண்டு ஞானம் என்றதின்கண் மேற்கூறப்பட்டனயாவும் அடங்கப் பெறுமெனினும் சிறப்பாகக் கொள்ளப்படும் மெய்யுணர்ச்சியாம். மெய்யுணர்ச்சி என்பது மெய்ம்மையாக உள்ள தத்துவங்களின் உண்மையும், ஐம்பெரும்பூதமும், அவற்றின் இலக்கணமும் முதலிய பல்வகைப்படும்.

இக்கருத்தே பற்றியன்றே தெய்வப்புலவரும் 'அறிவுடைமை' என்றோர் அதிகாரம் வகுத்து அரசியலிலமைத்ததூஉம், 'மெய்யுணர்த லென்றோர் அதிகாரம் வகுத்துத்துறவியலி லமைத்ததூஉமென்க. இவ்வாறறியப்படும் ஞானம், தத்துவஞானம் எனவும் சிறப்பு உண்மையறிவு எனவும் ஓதப்படும். அஃதாவது பிறப்பினையும், பிறப்பின் இன்பதுன்பங்களையும் வீட்டையும் அதனை ஒருதலையான் எய்தற்குரிய சாதன மின்னதென்பதும் இவைபோல்வனபிறவும் அறிதல். மெய்ப்பொருள் காண்டலாவது 'கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையென்றவழி அரசனென்பதோர் சாதியும், சேரமானென்பதொரு குடியும், வேழநோக்கினை யுடையானென்பதோர் வடிவும், சேயென்பதோரியற்பெயரும், மாந்தரஞ் சேரலிரும் பொறை யென்பதோர் சிறப்புப்பெயரும், ஒரு பொருளின்கட் கற்பனையாகலின், அவ்வாறுணராது நிலமுதல் உயிரீறாகிய தத்துவங்



களின் தொகுதியெனவுணர்ந்து, அவற்றை நிலமுதலாகத் தத்தங் காரணங்களொடுக்கிக்கொண்டு சென்றாற் காரணகாரியங்களிரண்டு மின்றி முடிவாய் நிற்பதனையுணர்தலாம்.' இனிஞானம், பாசஞானம், பசுஞானம், பதிஞானமென முத்திறப்படும். பாசஞானமென்பது பாசம் வாயிலாக நிகழும் பசுஞானம். அது உபசாரமாக பாசஞானமென வழங்கப்பட்டது. பாசம் தத்துவக்கூட்டம். தத்துவங்கட்கு உணர்ச்சியின்றென்பது ஆராயும் வழிப்பெறப்படும். பசுஞானமென்பது ஆன்மஞானம். 'காதலினால் நான்பிரம மென்னுஞானங் கருது பசுஞானம்' என்னார்திருவாக்கான் பசுஞானமென்பது தன்னைப்பிரமப்பொருள் என்றுணருமுணர்ச்சியே பசுஞானமென்பது. இனிப் பதிஞானமென்பது சிவஞானமாம். சிவஞானம் என்பது திருவருளாற்பெற்ற ஞானம். இது திருவடிஞான மெனவும் பரஞானம் எனவும் கூறப்படும். இதுவேதலையானஞானமாம்.

(தொடரும்.)

மணி-திருநாவுக்கரசு முதலியார்.

---

## நீதி. ரு.

'எவனுக்குச்செல்வம் குறையவேண்டியகாலம் வருகிறதோ அவன் தன் கிராமக்கணக்கனை விரோதித்துக் கொள்வான். அல்பாயுசாயிருக்கிறவன் வைத்தியனை விரோதித்துக் கொள்வான். செலவழிய வேண்டியவனும் அல்பாயுசாயிருப்பவனும் பெரியோரையிகழ்ந்து அவரை விரோதித்துக் கொள்ளுவான்."

---

## நீதி. சா.

"எந்த உத்தம புருஷனிடத்தில் இந்த உலகத்தையெல்லாம் ஆளத்தகுந்த மகாகுணங்களிருக்கின்றனவோ அந்தத்தீர புருஷனுக்குத்தகுந்த சமயம் வாய்த்தகாலத்தில் காலாக்கினியும் குளிர்ந்த ஜலம் போலாகும்; சமுத்திரம்ஒரு குட்டையாகிவிடும். மகாமேருவும் ஒரு சிறிய கல்லாக மாறும்; சிங்கம்போன்ற துஷ்டமிருகங்களும் மான் போல சாதுவாகும்; அதிக விஷமுள்ள சர்ப்பங்களும் பூமாலையாகும்; விஷமும்அமிர்தமாகும். ஆகையால் தைரியத்தைக்கைவிடலாகாது."

# ஆசாரம்.

அன்பர்களே!

நாங்கள் அநுசரிக்கும் நற்செயல்களும் தீச்செயல்களும் ஆசாரம் என்று சொல்லப்படும். ஆசாரம், ஒழுக்கம், என்பன ஒருபொருளன. சைவசமயிகளா யுள்ளவர்கள் வேதாகமங்களில் விதித்தன புரிதலே நல்லொழுக்கமாகும். தீயன செய்தல் தீயொழுக்கமே யாகும். தீயொழுக்கங்களை யொழித்து நல்லொழுக்க முடையராய் யாவரும் நடத்தல்வேண்டும். நல்லொழுக்கமே மேலானது. திருவள்ளுவநாயனாரும், 'ஒருவனுக்கு உயிரினும் பார்க்க மேம்பாடுடையதாகப் பாதுகாத்தற்குரியது ஒழுக்கமே' என்று வலியுறுத்தினர். அஃது 'ஒழுக்கம் விழுப்பந்தரலா, னொழுக்கமுயிரினு மோம்பப்படும்' என்பதாம். மக்கட்பிறப்பினை யடைந்த ஆன்மாக்களே தீயொழுக்கத்தைப்பூண்டு உலகில் நடிப்பு மாத்திரையானே காலங்கழிப்பின், கேள்வியும் அரும்பெருங்கல்வியும் என்ற இவைகளுக்குரிய வகைப்பட்ட நூல்கள் மிருகங்களின் பொருட்டு இறைவனால் முன்னே அருளிச்செய்யப் பெற்றனவா? இல்லை! இல்லை!! மாநுடர்பொருட்டே வேதாகமாதி சமஸ்த சாஸ்திரங்களும் காலதேச பாத்திரங்களுக்கேற்றவாறு செய்தருளப்பட்டன. பரதகண்டத் தவர்களுக்கும் மற்றைத் தேசத்தவர்களுக்கும் எவ்வளவோ வேற்றுமையுண்டு. மனச்சாட்சியே ஒருவனுக்கு முக்கியமாக வேண்டியது. மனநீதிவிளக்கம் அறிவினாலமையும். ஆகவே அறிவினை மேனிலைப்படுத்தி நல்லொழுக்கத்தை நாடுதல் மாநுடர்க்கு மகத்துவமாகும். தத்தம் வருண ஆச்சிரமங்களுக்குரிய ஒழுக்கமில்லாது போனால் ஒருவன் இழிந்தவனே யாவன். எவனிடத்து ஒழுக்கமும், சிவபக்தியு முண்டோ அவனே பரமயோக்கியன் 'நான் மகாயோக்கியன்' என்று உலகினரை எவன் ஏமாற்றுகின்றானோ அவனேபடிறன். படிற்றொழுக்கமுடையோர் இக்கலியுகத்திற் பூசிக்கப்படுகின்றனர். உண்மைக்கு உயர்வும் பூச்சியதையும் உண்டாவது பேரருமையாயிருக்கின்றது. தர்ம்ம சிந்தையினும் அதர்ம்மவிருத்தி மூன்று பங்கு அதிகமாகிவிட்டது.

"பகிடிக்குப் பத்துக்காசு, திருப்பாட்டுக் கொருகாசு" என்னும் பழமொழி பழமொழியாய் விட்டது. இன்னும் அநேக தீங்குகளைப்



பின்பற்றி நடப்போர் பலருளர். பொதுவகையானே யாவரும் நடக்க வேண்டிய நல்லொழுக்கங்களுட் சிலவற்றை இங்கே வரைவாம்.

ஒருவன் எந்தவுயிரையுங் கொல்லலாகாது. அவைகளை வருத்துதலுங் கூடாது. ஒருவனிடத்தில் பிறரை அழித்துக்கெடுக்கும் எண்ணம் கிஞ்சித்தும் இருத்தல்கூடாது. பிறருடைய துன்பத்தை நீக்கத் தன்னாலானமட்டும் பிரயாசைப்படுதல்வேண்டும், கோபத்தினாலே பாபச்செயல்களைச்செய்தலாகாது. பிதா, குருமுதலியோர்களை இகழ்ந்து பேசலாகாது. கடவுளையும், அடியார்களையும் பரிகாசம்பண்ணலாகாது, புறங்கூறலாகாது, பிறருடைய கல்வி செல்வங்களையும் பிறவற்றையும் நோக்கிப் பொறாமையடைதல் கூடாது, கடுஞ்சொற்களைச் சொல்லுதல் கூடாது. பிறர்பொருளை மண்ணாங்கட்டி யெனவும், பிறர் மனைவியரைப் பெற்றதாயரெனவும் மதித்தல் வேண்டும். நாடோறும் சூரியோதயத்திற்கு ஐந்துநாழிகை முன்னே நித்திரைவிட்டெழுந்து இயன்ற சுத்தி செய்துகொண்டு கடவுளை வழிபட்டுப் பின் உரிய கருமங்களைப் பார்த்தல் வேண்டும். கடவுளுக்குச் சாந்நித்தியஸ்தானமான ஆலயங்களிலே தினந்தோறும்போய் வணக்கஞ் செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்தல் கூடாதாயின் விசேட காலங்களிலாயினும் சுவாமி தரிசனஞ்செய்தல் வேண்டும். சிவதீக்ஷை பெற்றுச் சந்த்யாவந்தனத்துடன் வேதம், தமிழ்வேதம் முதலியவற்றுள்ள தத்தம் வருணத்திற் கேற்ற வற்றையும் இந்துக்களாயுள்ளோர் பாராயணஞ்செய்தல் வேண்டும். ஆலயம், வித்தியாசாலை, திருமடம், திருநந்தனவனம் ஆகியவற்றிற்கு வேண்டிய உதவிகளை மனோவாக்குக் காயங்களினாலே செய்தல் வேண்டும், 'படிப்பது தேவாரம் இடிப்பது சிவாலயம்' என்றபடி நடப்பது மிகு பாவமாகும்.

கடவுளும், திருவருளும், சுவர்க்கநரகங்களும் உள்ளன என்பதை மறுத்தலாகாது. செல்வச்செருக்கினாலும், ஆணவமல மூழ்ப்பினாலும் மயங்கிக்கடவுளையும், கலைஞானங்களையும் இகழ்ந்து இப்போது கிடைத்த பேரருமைவாய்ந்த மனிதப்பிறப்பின் அடையவேண்டிய நற்பயனை வியர்த்தமாக்கலாகாது. இவைகளை நம்மனோர் சிந்தித்தல் வேண்டும். சிலர் ஓ! கடவுளைக்கண்டது யார்? என்கின்றார்கள். சிலர் கொலையினாலாய புன் புலாலை உண்டு நாக்குத் தடிப்புற்றுச் சாஸ்திர விரோதமான நிந்தைகளைக்கூறி மனத்திடஞ்செய்து தம்மை அடுத்த

வரையும் கெடுக்கின்றார்கள். இறத்தல் வாஸ்தவம் என்று தோன்றும்போது ஆ! இப்பாதகர்கள் கொடுமொழி கூறுநிந்தலன்றோ யுக்தியாகும்! விபூதியை அடுக்கடுக்காய்ப் பூசிக்கொண்டும், கண்மணியனைய உருத்திர நன்மணியைப் பூண்டுகொண்டும் சிறிது மஞ்சாது தேகபோஷணைக்காக ஊனையுண்டு, ஐயையோ! கெடுதல் என்னை மதியீனம். புண்ணிய வசத்தினாலே கிடைத்த பிறவி இது என்று கூறிய மகாஞானிகள் கருத்தைச் சற்றாவது கவனிக்கவேண்டாமா? அகங்கார மமகாரங்களாகிய அந்தகாரத்துட்டிளைத்து நிற்கும்போது ஞானவரோதவமுடையேமென்றல்சாலுமதோ? இனியசெயலுடன் கனியும் மனமுடையராய்ச் சிவ பரம்பொருளைச் சிந்தித்து நல்லொழுக்கமுடன் யாவரும் வாழத் திருவருளுண்டாவதாக. சுபமஸ்து.

பட்டினத்தடிகள்.

ஒன்றென் றிரு தெய்வ முண்டென் றிரு உயர்செல்வமெல்லா
மன்றென் றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமு நட்பும்
நன்றென் றிரு நடுநீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிரு மனமே! யுனக்கே யுபதேசமிதே.

(வேறு செய்யுள்)

ஆற்றுமின் னருள் ஆருயிர் மாட்டெலாம்
நூற்று மின்னறந் தோநனி துன்னன்மின்
மாற்றுமுன் கழியாயமு மானமும்
போற்றுமின் பொருளாவிவை கொண்மினீர்.

இங்ஙனம்,

வ. மு. இரத்தினேசுவர ஐயர்,
தமிழ்ப்பண்டிதர்.

# போஜனம்.

---

"தற்காலம் பூலோகத்தில் தேகபலத்தில் சிறந்தவர்களான டாகஸ்டான் லெங்கியா (Daghestan-Lesghia) விலுள்ள துரேனிய மலைவாசிகளும், லெனிகாம்பியா (Lenegambia) தேசத்திலுள்ள மாண்டிகோஜாதியாரும், (Mandsgo-tribe) ஸ்கெல்ஸ்விக் ஹாஸ்டினில் (Schleswig-Hostein) உள்ள பாவெர்ன் (Bavern) ஜாதியாரும்— ஆகிய இம்மூவகைஜாதியாரும் மாமிசபட்சணம் செய்யாதவர்களே"! எனடாக்டர் ஆஸ்வால்ட் (Dr. Oswald M D) கூறியிருக்கிறார். எருதுகளாலும் குதிரைகளாலும் செய்யக்கூடிய கடினமான வேலைகளையும் சுலபமாய்ச் செய்யக்கூடிய தேகபலம்அமைந்த ஜாபானியர்களும் சீனர்களும் அற்ப அளவு மீன் புசிப்பவர்களாயினும், அனேகமாய் முழுவதும் சாகபட்சணிகளாகவே இருக்கிறார்கள். மத்திய ஆபிரிகாவிலும் இஜிப்டிலும் சாகபோஜனமே பிரதான போஜனமாயுள்ள பல ஜாதியார்கள் வெகு பலிஷ்டர்களாயிருக்கிறார்கள். ஸ்பெயின் (Spain) தேசத்துக் கிருஷிகர்கள் வெங்காயம், ரொட்டி, திராட்சை முதலியவற்றையே புசித்துக்கொண்டும், இத்தாலியர் தேசத்துக் கிருஷிகர்கள் கோதுமை சோளம் முதலிய தானியங்களாற்செய்த உணவுகளையும் கனிகளையுமே புசித்துக்கொண்டும், துருக்கிதேசத்தாரிற்பெரும்பான்மையோர் ரொட்டி, பேரீச்சம்பழம், அத்திப்பழம் (Figs) முதலியவற்றையே புசித்துக்கொண்டும், அயர்லாண்டு தேசத்தின் மேற்குப் பாரிசத்திலுள்ள சாதாரண ஜனங்கள் உருளைக்கிழங்கையும் மோரையுமே புசித்துக்கொண்டும், தேகபலமும் மனோதைரியமும் அழகிய வடிவமும் வாய்ந்தவர்களாயிருக்கிறார்கள், சாகபக்ஷணிகளான பின்லாண்டு (Finland) தேசத்து ஜனங்கள் மிகவும் உறுதியான சரீரவமைப்பையுடையவர்களாயிருக்க, அதேசீதோஷ்ண ஸ்திதியையுடைய லாப்லாண்டு (Lapland) தேசத்தார்கள் வெகு மிருதுவான சரீரவமைப்பையுடையவர்களாயிருக்கிறார்கள். ஸ்பெயின் (Spain) தேசத்தில் ஆள் ஒன்றிற்குச் சராசரிவருஷத்தில் இரண்டுபவுண்டு நிறையுள்ள மாமிசபோஜனம் போதுமானதாயிருக்கின்றதெனக் கணக்கிடப் பட்டிருப்பதாக டாக்டர் நிகல்ஸ் என்பவர் கூறுகிறார்.

மேலும் கடினமான வேலைகளைச் செய்யவும், சுமைகளைச்சுமக்கவும்கூடிய ஒட்டை, குதிரை, எருது, கோவேறுகழுதை முதலியமிருகங்களும், நிகரற்ற தேகவலிமையையுடைய காண்டாமிருகம், யானை முதலியனவும் சாகபக்ஷணிகளா யிருக்கின்றன. சாகபக்ஷணியான யானை ஓட்டத்தில் யார்தான் ஜயிக்கக்கூடும்? மாமிசபக்ஷணிகளுள் அதிகவயதுள்ள சிம்மத்தைக் காட்டிலும் சாகபக்ஷணியான யானையானது இரண்டுமடங்கு ஆயுள் உள்ளதாயிருக்கிறது.

மாமிச போஜனமானது மூர்க்ககுணத்தையும் சாகபோஜனமானது சாந்தகுணத்தையும் உண்டுபண்ணுகின்றது. புலி, ஓநாய் முதலிய மாமிசபக்ஷணிகளின் துஷ்டகுணமும், பசுஆடு முதலியவற்றின் சாந்தகுணமும் முக்கியமாய் அவையுண்ணும் உணவின் வித்தியாசத்தினால் உண்டாயினவேயன்றிவேறல்ல. கசாப்புக்கடைக்காரர்களால் வளர்க்கப்படும் நாய்கள் துஷ்டத்தன்மையை யுடையனவா யிருப்பதற்கு அவையுண்ணும் மாமிச போஜனமே காரணமாயிருக்கிறது. புலிமுதலிய துஷ்டமிருகங்களும் சாகபோஜனத்தால் பழக்கிச் சாந்தமாக்கப்படுவதை நாம் ஸர்க்கஸ் முதலிய விளையாட்டுகளில் காணலாம். இதுபோலவே மனிதர்களிலும் மாம்சபோஜனம் செய்பவர்கள் மூர்க்கர்களாயும் சாகபோஜனம் செய்பவர்கள் சாந்தர்களாயும் இருக்கிறார்கள், நாம்நமது குழந்தைகளும், ஸ்திரீகளும், மற்றும் தாய்தந்தையர்களும், பசுக்களைப்போல் சாந்தர்களாயிருக்க விரும்புவோமா அல்லது ஓநாய்களைப்போல் துஷ்டர்களாயும் விஷமிகளாயு மிருக்க விரும்புவோமா? மாம்சபக்ஷணிகளான பூர்விக யூதர்களின் சரித்திரமானது, கொலை, களவு முதலிய துஷ்டக்கிரியைகளால் நிறைந்திருப்பதையும், சாகபக்ஷணிகளான பூர்விக இஜிப்தியர்களின் சரித்திரமானது தயை சாந்தம் முதலிய நற்குணங்களால் நிறைந்திருப்பதையும் நாம் அறிவோமல்லவா? கோரானை (Koran) ஒருகரத்திலும் வாளை மற்றொரு கரத்திலும் ஏந்திக்கணக்கற்ற கொலைகளைச்செய்த துலுக்கர்களின் சரித்திரத்தையும், பரமசாந்தர்களான ஆரியர்களின் சரித்திரத்தையும் சற்றுக்கவனியுங்கள்! இவர்களின் குணாதிசயங்களிலுள்ள வித்தியாசங்களுக்குப் பல காரணங்கள் இருக்கற்பாலதேயாயினும் அவற்றுள் இவர்கள் உண்ணும் உணவின் தன்மையே முக்கிய காரணமாயிருக்க வேண்டுமென்பதை யார்தான் மறுக்கக்கூடும்? மேலும்மாம்ச



போஜனமானது, சரீரத்தில் அதி யுஷ்ணத்தை உண்டாக்குவதால், விரகதாபத்தை அதிகரிக்கச்செய்து, காமத்தீயை மூட்டிக் காமவெறியை உண்டுபண்ணுகிறது.

சாகரடிஸ் (Socrates) முதலிய பூர்விக கிரேக்கத்துவ சாஸ்திரிகள் அனைவரும்சாக பக்ஷணிகளே ப்ளூடார்க் (Plutarch) என்றமகா கல்விமான் 'மாம்ச போஜனத்தைக் கொஞ்சமும் இச்சிக்காமலிருக்கும்படிக்கு நாம் சிறு பிராயத்திலிருந்து பழக்கிக்கொள்வதே நலம் என்று நினைக்கிறேன்' என்று கூறியிருக்கிறார். (Milton) வொர்ட்ஸ் (Wordsworth), ஷெல்லி (Shelly) முதலிய கவிஞர்கள் பிரதானமாய் சாகபோஜனமே செய்துவந்தார்கள். பைரன் (Byron) என்ற கவிஞர் 'சைல்ட் ஹாரல்ட் (Childe Harold) என்ற மகாகவியை இயற்றிய நாட்களில் சாகபக்ஷணமே செய்துவந்தார். காதலிக் சர்ச்சைச் சேர்ந்த (Catholic Church) கிறிஸ்துவினது எழுபத்துமூன்று மெய்யடியார்களும்சாகபக்ஷணிகளே யெனத்தெரியவருகிறது. ஸெயின்ட் பால் (St. Paul லூதர்) (Luther) முதலியவர்கள் சாகபோஜனத்தையேபிரதானமாய் அனுஷ்டித்து வந்தார்கள். நியூடன்(Newton)என்ற புகழ்பெற்ற சாஸ்திரியம் (Scentist) சாகபக்ஷணியே. மற்றும்டாக்டர் கிரகாம் (Dr. Graham), டாக்டர்மஸ்ஸி (Dr. Muzzy), டாக்டர் ஆல்காட் (Dr. Alcot) டாக்டர் ட்ரால் (Dr. Trail) முதலிய மகாபுத்திமான்களான அமேரிகா வைத்தியசாஸ்திரிகள் முதல்முதல் தமது நாட்டோருக்கு மாம்சபோஜனத்தா லுண்டாகும் பல தீங்குகளைப் பற்றி உபன்னியாசங்கள் செய்தார்கள். தாங்களும் புலாலுணவை விலக்கிச் சாகபோஜனத்தைக் கைக்கொண்டார்கள். பிறகு டாட்ஸ் (S. w. Dodds M. D.) ஹால்ப்ரூக் (Dr. Holbrook), டாக்டர் ஷோ (Dr. Shew M.D.), டியூயி (Dr E. H. Dewey M.D.), டாக்டர் லீ (Dr. Leo M. D.) டாக்டர் பெரீரா (Dr. Pereira M. D.) டாக்டர் ஆஸ்வால்ட் (Dr. E L. Oswold M.D) டாக்டர் டென்ஸமோர் (Dr. Densmore M.D.), டாக்டர் நிகல்ஸ் (Dr. Nichols M.D.), ஸ்விங் (Swing), ஹாரிஸ் (Harrts) அன்னா கிங்ஸ்போர்ட் (Anna Kingsford) ஹாவர்ட் (W. Howard), ஹெயிக் (A. Haigh M. A, M.D. F. R. G. P.), வாலேஸ் (Wallace), காவன் (J. Gawon M. D), பூல் (Pool) போப் (Pope) முதலிய எண்ணிறந்த புகழ்பெற்ற வைத்தியசாஸ்திரிகளும் முழுதும் சாகபக்ஷணிகளாகவே ஆய்விட்டார்கள்.

இவர்களாலியற்றப்பட்ட காவியங்கள் சாகபோஜனத்தின் நன்மைகளையும் மாம்ச போஜனத்தின் தீமைகளையும்பற்றி வெகுவாய்க்கூறுகின்றன. இம்மகான்களின் போதனைகளால் மாம்சபோஜனத்தை விலக்கிச்சரீரசுகத்தை யடைந்தவர்கள் பலர்உளர். சுருக்கெழுத்து (Short hand) என்ற சாஸ்திரத்தை கண்டுபிடித்த மகாபுத்திமானும் உழைப்பாளியுமான (Issac Pitman) ஐஸாக் பிட்மான் என்பவரும் காமன்ஸ்சபையின் அங்கத்தினரில் ஒருவராகிய பேர்பெற்ற ப்ராத்தர்டன் என்றவரும் மற்றும் எண்ணிறந்த புத்திமான்களும் தற்காலத்தில் சாகபக்ஷணமே மேலானதென்று கண்டு அதை அனுஷ்டித்து வருகிறார்கள்."

மணவழகு.

---

## நீதி. எ.

"யாரால் எவ்வித விக்கினம் வந்துவிடுமோவென்று பயந்து நீசகுணமுள்ளவர்கள் உலகத்திற்குஉபகாரமான எந்தவேலையையும் ஆரம்பிக்கிறதில்லை. மத்தியகுண முள்ளவர்கள் ஏதேனுமோர் சிறந்த வேலையைத்துவக்கி, அதற்கு ஏதாவது விக்கினம் வந்தால் அப்போது அதை விட்டுவிடுகிறார்கள். உத்தமகுண முள்ளவர்கள் தாம்துவக்கின லோகோபகாரமான வேலைக்கு அடிக்கடி பலவிகாதங்கள் வந்தாலும் முடிக்காமல் விடுகிறதில்லை."

## சைவ சமயத்தைக்குறித்த ஒரு சம்பாஷணை.

(ஆன்மா உண்மை)

(முன்தொடர்பு; தொகுதி, 1; பகுதி 12.)

---

சிவஞானம்:—தனது சிவபூசையைமுடித்த பின்பு, ஸ்நானம் செய்து விட்டு ஆழ்ந்த ஆலோசனையைக் காட்டும் முகத்தனாய் உலாவிக்கொண்டிருந்த சுந்தரத்தை அன்போடு உடனழைத்துக்கொண்டு உண்ணுமிடம் அடைந்து விதிப்படி சமைக்கப்பட்ட ஸத்வ உணவை தன் நண்பனுக்கு இன் சொல்லோடும் இனிய முகத்தோடும் அருத்தித்தானும் உண்டு பின்னர் இரங்கூன் முதலியாருடன் கல்வியறை சேர்ந்தார். சிறிது நேரம் இளைப்பாறியதும் சுந்தரம் பின்வரும் சம்பாஷணையைத் தொடங்கினான்.

சுந்தரம்:—உலகத்தில் நிகழ்வனவற்றைப் பார்க்கும்போது, சற்றேறக்குறைய எல்லாமனிதரும் உண்ணுந் தொழிலைத்தான் மற்றவற்றினுஞ்சிறப்பாகக் கொண்டு பாடுபடுவதாகத் தெரிகிறது.

சிவஞானம்:—அதிலென்னதடை இப்போது நீ உரைநடையில் சொன்ன உண்மையையே உலகம் இப்படிப்பட்டதென்று செவ்வையாய் அறிந்த ஸ்ரீதாயுமானார் "பொய்திகழும் உலகநடை என்சொல்கேன் என்சொல்கேன் பொழுதுபோக்கு ஏதென்னிலோ, பொய்யுடல் நிமித்தம் புசிப்புக்கலைந்திடல் புசித்தபின் கண்ணுறங்கல், கைதவமலாமல்இது செய்தவமதல்லவே" என்றும் "எல்லாம் யோசிக்கும் வேளையில் புசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்றும்உண்மையும் அழகும் பொருந்தப் பாடியருளினர். இவ்வாறே முற்றத்துறந்த முனிவர் பெருமானாகிய பட்டினத்தடிகளும் உலகத்தார் நிலைமையைக் குறித்து "முப்போதும் அன்னம் புசிக்கவும், தூங்கவும், மோகத்தினால் செப்போது இளமுலையாருடன் சேரவும் சிவன்விடும்போது கண் கலக்கப்படவும் அமைத்தாய்ஐயனே" என்று இரங்கிக்கூறினர்.

சுந்தரம்:—இத்திருவாக்குகள் என்போன்றார் நிலைமையை clear நன்றாக describe வர்ணிக்கின்றன.—அம்மம்ம! இதென்ன இவ்வழக்கம்

பெருஞ்சனியனுயிருக்கிறது! தமிழ் பேசும்போது தமிழ்ச்சொற்களையே ஆளவேண்டும் என்று தாங்கள்பேசும் முறையாலேயே எனக்குச் சொல்லாமற் சொன்னீர்யாலும் கூடியவரையில் try முயன்றும் ஆங்கிலபாடச் சொற்கள் என்னை விடமாட்டேனென்கின்றனவே. பழக்கங் கொடியதுதான்.

சிவஞானம்:—அதற்காக அதிக கவலைப்பட வேண்டாம் ஒரு பழக்கம் எத்தனைகாலந்தான் நம்மிடங் குடிகொண்டதாயிருந்தாலும் அதைநமது முயற்சியினாலும் கடவுள் அருளினாலும் நாளடைவில் மாற்றிவிடக்கூடும் என்பது திண்ணம். ஏன் எண்ணிறந்லாத பிறவிகளிலெல்லாம் தோன்றி நிலைத்து வளர்ந்து வருவதாகிய உலகவாஸனை, தேகவாஸனை, சாஸ்த்ரவாசனை என்னும் மூன்றுபெருங்கொடும் பழக்கங்களையுங்கூட ஆன்மாக்கள் வேண்டிய அளவு பாடுபட்டால் நின்மலனாகிய பரம்பொருளினது திருவடிப்பற்று என்னும்பழக்கத்தை முதிரச்செய்துகொண்டு அதனால் ஒரே பிறவியில் இத்தொன்மையான பழக்கங்களையும் அறவே ஒழித்துவிடுதல் செய்யக்கூடியதே என்று அறிந்த பெரியோர் கட்டுரைக்கின்றார்கள். ஆதலால் நாம் மனஞ்சோர்ந்துவிட வேண்டுவதில்லை.

சுந்தரம்:—இருக்கலாம். ஏதோ ஆன்மா ஆன்மா என்கின்றோமே அது எது, எப்படிப்பட்டது என்பதைப் பற்றித்தான் கேட்டறிந்து கொள்ள எண்ணிப்பேசத் தொடங்கினேன். ஆன்மா என்பதைப் பற்றிய உண்மைகளை எனக்குத் தயைசெய்து விளக்கவேண்டும். எனக்கு இப்போது அந்தச்சொல்லில் மூன்றுஎழுத்துக்கள் இருக்கின்றன என்பதைத்தவிர வேறொன்றும் திடமாய்த் தெரியவில்லை.

சிவஞானம்:—எனக்கும் நேர்நிகழ்ச்சி முறையில் திண்ணமாகத் தெரிந்துள்ளது அற்பமே. தன்னைத்தான்உணர்தல் எளிதில்கைவரக்கூடியதல்ல, உரிய முயற்சிகள் செய்து ஆன்மாக்கள் தம்மை உணர்வாராயின் "தமையுடைய தன்"னையும் (அதாவது ஆன்மநாயகனாகிய கடவுளையும் எளிதில் அணுகி உணர்வார். இவ்வுண்மையை 'ஆத்ம தரிசனம்பெற்ற உடன்சிவதரிசனம் கிடைக்கும்' என்று அநுபவஞானிகள் சொல்லுவர். ஆன்ம இயல்பை உணருதல் இத்துணைச் சிறப்புடையது. ஆகையால்தான் அதுநம்மனோர்க்குக் கடினமாகத்தோன்றுகின்றது. ஆயினும் நம்மறிவினால் நுணுகியாராயின் நம் இயல்பு



இன்னதென ஒரு சிறிது விளங்கும். இதனோடு அநுபவஞானிகளாகிய முதுமக்கள் நமக்குத்துணையாய் நிலவும்படி கட்டளையிட்டருளிய நூல்களைத்தக்கார் வாயிலாகக்கேட்டுச் சிந்திப்போமாயின், மேலுந் தெளிவு பிறக்கும். இவ்வண்ணம சுருதி, யுக்திஎன்னும் இரண்டினால் ஆன்மா இப்படிப்பட்டதென அறிவளவாகவாவது தெரிந்து கொள்ளல் பலருக்கும் சாத்தியந்தான்.

(உலகமயநாயுடு B. A, அவர்கள் சிவஞானத்தைக் காணவருகிறார் )

உலகம்:—ஹாலோ! குட்பை!

சிவஞானம்:—நாயுடு அவர்கள்! வாருங்கள்; நிரம்பசந்தோஷம். கண்டு நெடுநாளாயிற்று. இதோ நாற்காலியில் உட்காருங்கள்.

உலகம்:—தேங்க்ஸ். தேங்க்ஸ்

(இரண்டு மூன்று நிமிஷங்களில் குசலம் வினவியாயிற்று உள் குப்பாயமும் (Shirt) ஜோரும்தரித்து, ஒட்டிக்கத்தரிக்கப்பட்ட தலைமயிரின் மீது மூன்று பொட்டும் முகத்தில் மூன்று புண்டரமுமாக வெண்ணீறு அணிந்து காலில் மேல்சோடியின்றிக் கைகட்டி அமைதியோடிருக்கும் நமதுநண்பர் சுந்தரமுதலியாரை நாயுடுஅவர்கள் உற்று நோக்கினார்.)

சிவஞானம்:—இவர் இரங்கூனிலுள்ள ஒரு பெரிய ஐரோப்பிய வாணிப சாலையில் உயர்ந்த அலுவல் பார்ப்பவர். விடுமுறை எடுத்துக்கொண்டு சென்னைக்குச்சிலநாளாக வந்துள்ளார். இவரும் நானும் முன்பு ஒருசாலை மாணவர்களாகப் பல ஆண்டுகள்வாசித்தோம். சுந்தர முதலியார்! நமதுநண்பர் உலகமயநாயுடு அவர்கள் சடப்பொருள் நூல்களை நிரம்பக்கற்று பி. ஏ. பட்டம் பெற்றுள்ளவர். ஒரு கல்லூரியில் உபந்யாஸகராக இருப்பவர்.

(உலகமயநாயுடுவும் சுந்தரமும் ஒருவரையொருவர் அறிந்துகொண்டதைத் தக்கவாறு வெளிப்படுத்தினர்.)

உலகம்:—நீங்களிருவரும் ஏதோ கன்வெர்ஸ் பண்ணிக்கொண்டு (பேசிக்கொண்டு) இருந்தீர்கள், நான் 'மிடிலி'ல் (இடையில்) [illegible] டர்ரப்ட்' (தடைசெய்ததற்காக என்னை 'எக்ஸ்க்யூஸ்' பண்ண (மன்னிக்க) வேண்டும்.

160932

சுந்தரம்:—ஓ! கோ...! இல்லை: அப்படி ஒன்றுமில்லை. ஏதோ ஆன்மா என்று சொல்லுகிறீரே அதெப்படிப்பட்டதென்று பிள்ளையவர்களைக் கேட்டேன்; அதைப்பற்றி அவர் சொல்லிக்கொண்டிருந்தார்.

உலகம்:—பாஷ்! (பைத்தியம்) ஆன்மா என்று ஒரு எண்டிடி (உள்பொருள்) இருந்தாலல்லவோ அதைப்பற்றி, டாக்(பேச்சு)உண்டு. நானும்பல ஸைன்ஸுகளை (உலகநூல்களை) 'ஸ்டடி பண்ணியிருக்கிறேன்' (ஆழ்ந்து படித்தேன்); உடம்புக்கு வேறாய் அப்படி ஒன்றிருக்கிறதாகக்காணப்படவில்லை.

சுந்தரம்:—இருக்கிறதாகப் பெரும்பாலார் நம்புகிறார்களோ?

உலகம்:—நம்பிக்கைக்கு என்ன குறைச்சலா? ஸையிண்டிபிக்காய் போதிய அளவு சான்றிருந்தாலல்லது எதையும் நம்பலாகாது என்னும் கொள்கையோடு பிடிக்காதவர்கள்தான் அப்படிச் சொல்வார்கள். நம்தேசத்தில் வழங்கும் பலகொள்கைகள் கர்னாடகப்பைத்தியங்களே தவிர வேறல்ல.

சுந்தரம்:—நல்லது எனக்கு இவ்விஷயத்தைத் தீரவிசாரித்து உண்மையறிய ஆசையுண்டு. தாங்கள் தயைசெய்து எந்த நியாயங்களால் (ஸையன்ஸ்) தேகத்திற்கு வேறாகஆன்மா இல்லையென்று பல பெரியோர்கள் கொள்கைக்கு மாறாகச் சொல்லுகிறது என்பதை விளக்கவேண்டுகிறேன்.

(இதற்குள் புனிதவதி சிவஞானத்தின் கண்ணுக்குத்தெரியுமாறு ஒதுங்கி நின்றாள். குறிப்புணர்ந்த பிள்ளை நாயுடுஅவர்களைக்கேட்டுத் தெரிவித்தபடி நல்லநீர் கொணரப்பட்டது. நாயுடுவும் நீர்அருந்திப்பேசத்தொடங்கினர்)

உலகம்:—'ஸையிண்டிபிக்காய்' ஆராய்ச்சி செய்கிறதில் மேல்நாட்டார்தான் சிறந்தவர்களாயிருக்கிறார்கள்.

அவர்கள் மிகுந்த ஜாக்கிரதையோடு கண்டுபிடித்து மறுக்கமுடியாதபடி 'ப்ரூவ்பண்ணி'(மெய்யெனநாட்டி)உள்ளவைகளை இப்போது

(தொடரும்.)

ச. சச்சிதாநந்தன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்.

தொகுதி ௫] 1914௵ ஆகஸ்ட்௴, [பகுதி ௮.

## சித்தாந்த ஞானத்திரயம்.

சஞ்சேபம்.

---

அநண்டவைபவ சச்சிதானந்தப் பிழம்பாகிய இறைவன் அருளிச்செய்த வேதாகமங்களில் பிரதிபாதிக்கப் பெற்ற ஞான மூன்று. அவை பதிஞானம் பசுஞானம் பாசஞானமாம். பதி இறைவன், பசு ஆன்மா, பாசம் மலம். ஆன்மாக்கள் கன்மபேதத்தால் பக்குவர் அபக்குவரென இருவகைப்படுவர். பக்குவர்கட்குப் பதிஞானம் சித்தியாம். அபக்குவர்கட்கு அவரவர்கள் கன்மதாரதம்மியமிருந்தவாறு பசுஞானமும் பாசஞானமும் சித்தியாம். தேகம், பிராணன், இந்திரியம், கரணம், புத்தி, குணமுதலிய சடப்பொருள்களாகிய பாசகாரியங்களைப் பொருளெனக் கொண்டவன் பாசஞானி. இப்பாச காரிய பந்தனாய்ச் சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய ஆன்மாவைப் பொருளெனக்கொண்டவன் பசுஞானி. பாசங்கட்கும் பசுக்கட்கும் வேறாகப் பொருளுண்டென்று கண்டவன் பதிஞானி. தேகமுதலிய பாச

காரியங்கள் அசேதன மாகலினாலும், இப்பாசங்களின் சம்பந்தமாய், ஆன்மாக்கள் கட்டுப்பட்டுழலும் தன்மையுடையராகலினாலும் இவற்றைப் பொருளெனக் கோடல் அஞ்ஞானமாம். பசுபாசங்களாகிய இருபகுதியும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், பகலோன், ஆன்மா என்னும் எட்டினுள் அடங்கும். இவ்வெட்டினும் உள்ளும் புறம்பும் கலந்திருக்கும் பூரணன் பதி. இவ்வெட்டும் பதிக்குத் திருமேனியென வேதாகமங்கள் விளம்பும். சேதனனாகிய பசுவிற்கு அசேதனமாகிய தேகம் திருமேனியாதல் போலோவெனின், அற்றன்று. பசுமாயா காரியமாகிய தேகத்தைத் தானியங்கும் பிரயோசனங்கருதிக் கலந்திருப்பது. பதி பசுவையும் பாசத்தையும் கூட்டியியக்கும் பிரயோசனத்தைக் கருதிக்கலந்திருப்பது. ஆகவே பதிவியாபகமாம், பசுவும் பாசமும் தம்முள் வியாதியுற்று இவ்விரண்டும் அவ்வியாபகத்துள் வியாப்பியமாம். இப்பதி பசுபாசங்கள் மூன்றும் அநாதி நித்தியமாயுள்ள அஜன்ய பதார்த்தங்கள். அங்ஙனமாயினும் ஒன்றிலொன்று விஜாதிகங்கள். அம்மூன்றுள் பதி சத்து, பாசம் அசத்து, பசு சத்துடன் சேர்ந்தபோது சத்தாகவும், அசத்துடன் சேர்ந்தபோது அசத்தாகவும், உண்மையில் சத்துமாகாமல் அசத்துமாகாமல் சதசத்தாயுள்ளது. இனிப் பதியாகிய முதல்வன் ஞானக்கிரியா சொரூபனாய், பசுவை ஞானக்கிரியைகளாலும், பாசத்தைக் கிரியையாலும் இயங்கப் பண்ணுவன். அங்ஙனம் பண்ணுங்கால் சுவப்பிரயோசனம் கருதாது பரப்பிரயோசனத்தையே தமதுள்ள மிசைந்தியற்றும். ஆணவகேவலத்தில் கிடந்த பசுக்களென்னும் எண்ணிறந்த உயிர்களையும் பதி அவரவர் வினைக்கேற்ப மாயையைத் துணையாகச்சேர்த்து வெளிப்படுத்துவன். இதனால் பதி ஏகமும், பசு பலவும், பாச மூன்றுமென வெளிப்படும். பசுவையும் பாசத்தையும் சேர்க்கவும், பிரிக்கவும் வல்ல பதி, தானியங்கும்போது தமதுசத்தியால் அனந்த மூர்த்திகளாவன். பாசம் அனந்த ரூபமாய்ப்பதியால் காரியபாட்டைப்பெறும். பசு பல யோனிகளில் புக்குழலாநிற்கும். பதியினுடைய அனந்த வடிவங்கள் விபூதி யென்று வேதம் பேசும். பசுவின் அனந்த வடிவங்களை வினைப்போகமென்று சுருதி செப்பும். பாசத்தினுடைய காரியப்பாடுகளைச் சிருட்டி யென்று மறைகூறும். பதி நிர்மலமுடையராகலின், அவரினிடத்தில் சமல ரூபியாகிய பசுக்கட்கு உற்பத்தி கூறுதலடாது. பதியும் பசுவும் சித்தாயிருப்பினும் ஒன்று அறிவிக்



கும் சித்து, ஒன்று அறியும் சித்துமாகவிருக்குமுண்மையால், அறிவிக்கும் சித்தாகிய பதியிடத்து அறியுஞ் சித்தாகிய பசுவினுக் குற்பத்தியுரைத்தலடாது. பாசம் கேவலம் சடமாகையால் மேற்குறித்த உபய சித்துக்களில் இதற்கிடமில்லை. அசித்தாகிய பாசத்தின் காரியமெல்லாம் சித்தாலேயாம். இடையேநின்ற பசு பாசத்தோடு சேர்ந்தவழி பந்தத்தையும், பாசத்தை நீங்கிப்பதியோடு சேர்ந்தவழி முத்தியையும் பெறும்.

மணவழகு.

---

# சுருதிருசனம்.

க

இருக்குவேத மந்திரம்.

"அந்தரிச்சந்தி தஞ்சநெருத்ரம்ப ரோமநீஷயா
கிரஸ்ணந்தி ஜிக்வ யாஸஸம்."

(இ-ள்) ஜநே-மனிதர்களுள், பரா-மேன்மை பொருந்தியவனை, ருத்ரம்-உருத்திரனை, மநீஷயா-தியானத்தால், அந்தா-உளத்தில், அச்சந்தி-தியானிப்பவர்கள், ஜிக்வா-நாவினால், ஸஸம்-சுவைபொருந்திய சோற்றை, கிரஸ்ணா-உட்கொள்வார்கள்.

ஆகார மருந்துவதற்குமுன் சிவபெருமானை வழிபட்டொழுக வேண்டுமென்பது கருத்து.

2

எஜுர்வேதம்-ரு-ம்-கண்டம் உருத்திரசங்கிதை மந்திரம்.

"யோருத்ரோ அக்னௌயோ அப்ஸுயஓஷதீஷு-யோருத்ரோ விச்வாபுவநாவிவேசத ஸ்மைருத்ராய நமோ அஸ்து."

(இ-ள்) யா-எந்த, ருத்ரோ-உருத்திரன், அக்னௌ-அக்கினியின் கண்ணுள்ளான், யோஅப்ஸு-நீரின்கண்ணுள்ளான், யஓஷதீஷு-ஔஷதி-களிலுள்ளான், யோருத்ரோ விஸ்வாபுவநாவிவேச-உலகத்திலுள்ள பொருள் அனேகங்களில் பிரவேசித்துள்ளான், தஸ்மைருத்ராயநமோ அஸ்து-அவ்விதம் தொண்டர்களை ஆட்கொள்ள பலதிருமேனிகளைத் தாங்கி எங்குநிறைந் துநிற்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம்.

நீரெனவே கலசமுதலியவற்றிலும், ஔஷதி எனவே கொன்றை வில்வ முதலியவற்றிலும், விஸ்வமெனவே, லோகம், மண், கல், சூரியன், முதலியவற்றிலும் இறைவனிருப்பனென்பதாம்.

ப-ர்.

உ

சிவமயம்,

# சிவனடியார்.

பேயன்ன புறச்சமய பிணக்குநூல் வழியலைந்துழும் பிழையேயன்றி, வாயன்மை தெளிந்த சைவசித்தாந்த வழிதேறி யறிதவாழ்விற், போயன்மி யஞ்செழுத்துந் திருநீறுங் கண்டிகையும் பொருளாக்கொண்ட, நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெறும்பேறு நான் பெற்றேனால்

கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து சிறந்து முதிர்ந்து முறுகிவளர்ந்த சிவபத்தி நிறைந்தவராய், நிஷ்காமிய வழிபாடுடையராயுள்ள மெய்யன்பர்களே சிவனடியாரெனப்படுவர். எங்கிலையிலிற்கும் எவ்வெவராலும் மகாஞானிகளெனப் புகழ்ந்து துதிக்கப்பட்டுள்ளவர்களும் அவர்களேயாம். அவர்களதுபெருமை, "ஓர்புலவன்-பண்மலர் சாத்திப் பணிகொண்டவா பச்சைமால் சிவந்த-கண்மலர் சாத்தியுங் காண்பரிதான கழன்மலரே" என்றும், "எவ்விடத்தவருனை யெண்ணினர் நீயுமற்-றவ்விடத்துளே யெனற்கையம் வேறின்றே........ கருணையொடு-நிலையில் பொருளை நிலையியற்பொருளை-முலையாமாயினுளங்கொளப்படுத்திப்-புல்லறிவகற்றி நல்லறிவு கொளீஇ-யெம்மனோரையு மிடித்தவரை நிறுத்திச்-செம்மை செய்தருளத் திருவுருக்கொண்ட-நற்றவத்தொண்டர் கூட்டம்-பெற்றவர்க்குண்டோ பெறாத்தகாதெனவே" என்றும், "மாமுகி றவழுமணிமதிற் கமலைப்பெம்மானருமைப் பெருமாளாயினு-மூனுண்வாழ்க்கைக் கானவர் குரிசில்-செஞ்சிலை சுமந்த கருமுகிலேய்ப்ப-வுண்டுமிழ்ந்த நீருவந்தனாயடியும்-விருப்படிகொண்ட மிச்சிலுண் மிசைந்தும்-செருப்படிக் கடிகள் செம்மாந்திருந்தும்-தொல்புகழ்விசையன் வில்லடிபொறுத்து-மருந்தமிழ் வழுதியிரம்படிக்கு வந்து-நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்-றன்னாக்காதறணித் தற்கம்ம-பரவைவாய்தலிற் பதமலர்சேப்ப-வொருகாலல்ல விருகானடந்து-மெளியரினெளியராயின-ரளியர்போலுமன்பர்கடமக்கே" என்றும் செந்திற்குமரன் றிருவருளைச் செவ்விதிற்பெற்ற நங்குமரகுருபர சுவாமிகளும், "செம்மலர்நோன்றாள் சேரலொட்டா-



வம்மலங்கழீஇ யன்பரொடு மரீஇ-மாலறநேய மலிந்தவர்வேடமு-மாலயந்தானு மரனெனத்தொழுமே" என்றும், "இனிச்சிவபத்தர்களோடிணங்குக வென்றது, அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான் என்றும் பொய்கண்டகன்ற மெய்கண்டதேவரும்," "ஈசனுக்கன்பில்லாரடியவர்க் கன்பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமற்பில்லார்-பேசுவ தென்னறிவில்லாப் பிணங்களை நாமிணங்கிற் பிறப்பினிலு மிறப்பினிலும் பிணங்கிவிடுவர் விடுநீ-யாசையொடு மரனடியாரடியாரை யடைந்திட்டவர் கருமமுன் கருமமாகச் செய்து-கூசிமொழிந்தருண்ஞானக் குறியினின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித்திரியே" என்றும், "ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை—சீலமில்லை தவமில்லை விரதமொடாச்சிர மச்செயலில்லை தியானமில்லை சித்தமலமில்லை-கோலமிலை புலனில்லை கரணமில்லை குணமில்லை குறியில்லை குலமுமில்லை-பாலருடனுன்மத்தர் பிசாசர் குணமருவிப் பாடலினோடாடலிவை பயின்றிடினும் பயில்வர்" என்றும், "சாக்கிரத்தே யதீதத்தைப்புரிந்தவர்களுலகிற் சருவசங்கநிவிர்த்தி வந்த தபோதனர்களிவர்கள்-க்யாகியத்தைப்பகர்வது வெளிப்மையிலே யுயிரின் பற்றறுத்துப்பரத்தை யடைபராவுசிவ ரன்றே-வாக்குமுடிக வித்தாசாண்டவர்க ளிவையுரோடனு பவித்தங்கிருந்திடினு மகப்பற்றற்றிருப்பர்-நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற்றாலுநமைவர் பிறப்பினின் வினைகங்கிடாவே" என்றும் சகலாகம பண்டிதராகிய அருணந்தி சிவாசாரியரும் அருளிச்செய்த அருமைத்திருவாக்குக் களினாலும், "தில்லைவா ழந்தணர் தமடியார்க்கு மடியேன்" எனச் சுந்தரமூர்த்தி நாயனாருளிச்செய்த திருத்தொண்டத் தொகையினாலும், தொண்டர் சீர்பரவு வாராகிய சேக்கிழார் நாயனாருளிச்செய்த திருத்தொண்டர் புராணத்தினாலும், விரிவஞ்சிவிடுத்த "ஆய்வார் பசுபதி பாசத்தினுண்மையை யாய்ந்தறிந்து-காய்வார் பிரபஞ்சவாழ்க்கை யெல்லாங்கல்வி கேள்வியல்ல-லோய்வார் சிவானந்தவாரியுள் ளேயொன்றிரண்டு மறத்-தோய்வார்கமலை யுண்ஞான பிரகாசன்மெய்த் தொண்டர்களே" என்றற்றொடக்கத்தனவாய வெணையபல்லாயிரம் பிரமாணங்களினாலும் நன்றாகச்சாதித்து நிறுத்தப்படும். இவைமாத்திரமா? நமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தாமேதம்மை "அடியார்க்கடியன் சிற்றம்பலவன்" எனத்தமதருமைத் திருக்கரத்தினாலே எழுதியருள்வரேயானால், புழு

த்தராயினுங் கடையரேமாய், அடியார் தமதடியார் தமடியார்க்குமடியரல்லேமாயுள்ள நாமா அவ்வடியார் பெருமையை அளக்கவல்லேம்.

மகா ஞானிகளாகிய சமய குரவர்களும் சந்தான குரவர்களும், சேக்கிழார் நாயனாரால் பெரியபுராண வாயிலாற் றுதிக்கப்பெற்ற திருத்தொண்டர்களும், சேக்கிழார் நாயனாரும், பட்டணத்தடிகளும், குமரகுருபர சுவாமிகளும் பிறருமேற்கூறிய இலக்கணங்களெல்லாங் குறைவறவமைந்த சிவனடியார்களாம். சிவபெருமானைப்போலவிவர்களையுஞ் சித்தாந்த சைவர்களாகிய நாமெல்லாம் இன்றியமையாது வழிபட்டொழுகுங் கடப்பாடு பூண்டுள்ளோம். சிவபெருமானது திருவுளக்கருத்து மஃதேயாம். அஃதன்றி, நமது சித்தாந்த சைவத்துக்குச் சிரத்தான மாயமைந்துள்ள சிவஞான போதத்துப் பன்னிரண்டாஞ் சூத்திரமும் தனைவலியுறுத்தி விதிக்குமேயாயின் அதற்குவேறு பிரமாணமும் வேண்டுமோ? பண்டைக்காலத்துள்ள ஞானிகளும் நூலாசிரியர்களும் இன்றுவரை அவ்விசேட வழிபாடாகிய ஆசாரத்தைப் பாதுகாத்துக்கொண்டே வருகின்றனர். சித்தாந்த வழிபாடு முழுதுக்கும் மறுதலையாயுள்ள மாயாவாதிகளும், அடியார் வழிபாட்டை இகழ்ந்தொதுக்கிவிடமாட்டாது கைக்கொண்டொழுகி வருவரேயாயின், அந்நிலைநம்மவர் எத்துணை விசேடமாகக் கைக்கொண்டொழுகி வருதல் வேண்டுமென்பது சொல்லவும் வேண்டுமோ? தந்தையராவுள்ளார், தம்மைப்பொருட்படுத்தித் தமக்கொன்றுதவித் தம்மைவழிபடாதொழியினுந் தமது புத்திரரைமதித் துபசரித்துபகரிப் போர்க்கெத்துணையோ கழிபேருவகையுற்று அவர்க்காவன செய்துமுடித்தலைக் கண்கூடாக நாங்கண்டிருக்கின்றோமன்றே அதுபோலச் சிவபெருமானுந் தம்மை வழிபடாதொழியினுந் தம்மடியார்களை வழிபட்டொழுகுவார்க்குத் தவறாது தமது திருவருளைச் சுரந்தருளுதலொருதலையேயாம். அவர் தமக்குமாறாகச் செய்யுங்குற்றத்தைச் சகித்தருள்வரேயெனினும், தமதன்பர்களுக்கு மாறாகச் செய்யுங் குற்றத்தைச் சகித்துக்கொள்ளவே மாட்டார். சூரியோஷ்ணத்தை ஒருவன் சகித்துக்கொண்டிருப்பினும், அவ்வுஷ்ண கிரணந்தோய்ந்த மணலிலே மிதித்தலைச் சகிக்க வியலாதவாறு போலச் சிவாபராதத்துக்கு ஒருவாறு தப்பிக்கொள்ளினும் அடியாரபகாரத்துக்கு ஒருகாலத்தாவது தப்பிக்கொள்ள வியலாதேயாம்.



நமக்குக் கண்கண்ட தெய்வங்களாவுள்ளவர் சிவனடியாரேயாம். சகலவர்க்கத் தவராயுள்ள நம்மவர்வசிக்கும் இவ்வசுத்த தத்துவ புவனத்துச் சிவபெருமான் தாமதிட்டிக்குஞ் சுத்தமாயா சொரூபத்தோடு நேரேவெளிப்படவே மாட்டார். அது நோக்கியன்றே சிவபெருமான் நம்மீதுமுகிழ்த்த பெருங்கருணைத் திறத்தால் தாங்கொண்ட மூவகைத் தடத்த வடிவங்களை விக்கிரக வாயிலாக வழிபட்டுய்ந் தீடேறுமாறு திருக்கோயில் வழிபாட்டை ஈண்டு விதித்தருளினர். அங்ஙனமாயினும், கண்ட பொருளிலன்றிக் காணாதபொருளிலே கருத்திறங்கல் அரிதெனவுணர்ந்தன்றே, தாம் இடையறாது அத்துவிதமாகக் கலந்து வீற்றிருக்கும் அடியார்களைத் தம்மைப்போலப் பாவித்துத் தியானித்து வழிபட்டொழுகுமாறு விதித்தருளினர். சிவனடியார்களைச் சிவபெருமானாகப் பாவித்து வழிபடல் வேண்டுமென்பது, "கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி" என்றற்றொடக்கத்து மேலோர் திருவாக்குக்களினாலேநன்கு துணியப்படும். அடியார்பெருமைகளை எளிதே விளக்கவல்லது பெரியபுராணமேயாம். அங்ஙனமேயாயின் ஆண்டுப்பேசப்படும் அடியார்கள் சிலரிடத்தே, ஈண்டெடுத்துவிளக்கிய இலக்கணங்கட்கு மறுதலையான குற்றங்களுமன்றோ காணப்படுகின்றனவெயெனின், அவைகளுஞ் சித்தாந்த நூற்கருத்தொடு முரணுறாவென்பதையும் ஒருவாறு மிகச்சுருக்கி விளக்கிக்காட்டுவாம்.

சிவதருமம், மெல்வினை யெனவும் உலகத்தவராலே செயற்கரிய வல்வினையெனவு மிருவகைப்படும். அவற்றுள், மெல்வினையாவது, சிவாகமங்களிலே சொல்லப்பட்ட விதிவிலக்குகட் கமைந்து சிவபெருமானை வழிபட்டொழுகுதலாம். வல்வினை யாவது, முற்சனனங்களிலே செய்த மெல்வினைகாரணமாக முறுகிவளர்ந்த பத்தியேலீட்டினாலே, விதிவிலக்குக்களை நாடாது தமது செயலெனப்படும், பசுஞானபாசஞானங்களையொழித்துப் பதிஞானமொன்றனையே கண்ணுறக்கொண்டு அதன் வழியே யொழுகுதலாம், மெல்வினை, வல்வினையென்னுமிரண்டும், முறையே விதிமார்க்கம் பத்திமார்க்க மெனவுங் கூறப்படும். இவ்விருவகை வழிகளுஞ் சிவபெருமானது திருவடிகளையடைதற்கு வாயில்களாம். இவ்விருவகை வழிகளையும் வாயில்களாகக்கொண்டொழுகி முத்திபெற மெய்யடியார் சரித்திரத்தை விளக்குதற் கெழுந்த நூலே பெரிய புராணமாம்.

மெல்வினை யாகிய விதிமார்க்கத்தை அனுசரித்தொழுகிய மெய்யடியார்கள தொழுக்கத்தின் மீதா சங்கிப்பாரொருவரு மீண்டிலரேயாம். ஏனையவல்வினையாகிய பத்திமார்க்கத்தை மேற்கொண்டொழுகும் மெய்யடியார் மீது மாத்திரந்தான் சித்தாந்த நூற்பயிற்சியில்லாதார் பலர் ஆசங்கிப்பர். சிறுத்தொண்ட நாயனார் தமது சிறுவனை அறுத்துக் கறிசமைத்தமையும், சண்டேசுர நாயனார் பாதகமென்றும் பழியென்றும் பாராது திருமஞ்சனப் பாற்குடத்தை எற்றினமை கொண்டு பிராமணனாகிய தமதுபிதாவினது பாதங்களைச்சேதித்தமையும், கண்ணப்பநாயனார் காளத்தியப்பருக்கு இறைச்சியைநிவேதித்து வாய்நீருமிழ்ந்து செருப்புக்காலா லுதைத்தமையும், கல்லினுங் கமரினும்வாளினும் சாணைக்கல்லினும் சூதாடுகருவிப் பலகையினும், திருக்குறிப்புத்தொண்டர் அரிவாட்டாயர் ஏயர்கோன் கலிக்காமர் மூர்த்தியார் மூர்க்கர் என்றும் நாயன்மாரொவ்வொருவருந் தனித்தனியே ஒவ்வொரு செயற்கருஞ் செயல்களைச் செய்தமையுமாகிய இவை போன்ற பலசெயல்களே சித்தாந்த நூலுணர்ச்சியில்லா மந்தமதியினரால் குற்றமுடையனவென ஆசங்கிக்கப்படுவனவாம்.

சிறுத்தொண்டநாயனார் சிவனடியாரிடத்தே உறைத்தபத்தியினையுடையர். அவ்வடியர்கட்கன்ன மூட்டியன்றித் தாமுண்ணாப்பெருவிரதம் பூண்டுள்ளவர், தம்மை* உடைப்பொருளாகவுஞ் சிவனடியார்களை உடையராகவுந் தலைக்கொண்டு அங்ஙனமே வழுவாதொழுகும் பத்தியொன்றனையே தம்முயிரினுஞ் சிறந்ததாகப் பாதுகாத்தொழுகும் பேறம் பூண்டுள்ளவர், சிவனடியார்களைச் சிவபெருமானாகவே உள்ளபடி பாவித்தொழுகுபவர். உடல்பொருளாவி மூன்றையுஞ் சிவபெருமானுக் கென்றே தானஞ்செய்துள்ளவர். தம்மைத்தானஞ் செய்தலாவது தாம் சிவனுக்குப் பரதந்திர ரென்றறிந்து அவரருளாலல்லது ஒன்றையுஞ் செய்யாராகி நிற்றலேயாம். இங்ஙனமாதலால் அந்நாயனார், தமது பத்திக்கிரங்கித் தம்மை ஆட்கொண்டருளுமாறு சிவனடியார் வேடங்கொண் டெழுந்தருளி வந்த சிவபெருமானுக்கு உடைப்பொருளாகிய தமது குழந்தையை அறுத்துக் கறிசமைத்துக்

* "உடைப்பொருள் அடிமையும் உடைமையும் என இருவகைப்படும். அவற்றுள் உயிர் வருக்கமெல்லாம் இறைவனுக்கு அடிமை எனவும், மாயை கன்மங்களும் அவற்றின்காரியங்களும் உடைமை எனவும் உணர்ந்துகொள்க" என்றார் திராவிடமாபாடிய கர்த்தாவாகிய சிவஞான சுவாமிகள்.

கொடுத்தமையின் அதனால் வருஞ் சித்தாந்த வழியாண்டையதென் றொழிக. அங்ஙனங்கொடாது மறுத்தொழிதலே சித்தாந்தநெறிவழு வாமென்று கொள்க. நுணுகியாராயு மாராய்ச்சியினாலே அது நன்கு துணியப்படும்.

கண்ணப்பநாயனார், முன்னையிட்டிய மெல்வினையின் பயனாய்ப் பத்தியினாற் றம்மை யொப்பவர் வேறிலராய் வேட்டுமரபி லவதரித்த பேரன்பினை யுடையவர். எண்ணிறந்த சனனங்கடோறுஞ் செய்துள்ள புண்ணியங்களெல்லா மொருங்கேதிரண்டு சூக்குமமாயமைந்திருந்து, அன்புருவாகிய தூலமாகவிரிந்து பொருந்தப்பெற்றுள்ளவர். துவாபரயுகத்தின் கடைக்கூற்றிலே அருச்சுனனாக அவதரித்துப், பத்திக்குவைப்பாகிச், சிவபூசைபுரிந்து, வேட்டுவவடிவங்கொண்டு வெளிப்பட்டுவந்த சிவபெருமானோடு மல்யுத்தம் புரிந்து, அப்பெருமானை வேடனென்றிகழ்ந்த காரணத்தால், இக்கலியுகத்து முற்கூற்றிலே வேட்டுவகுலத் தவதரித்தருளிப் பெரும்பேறடைந்த பெம்மானிவரேயாம். அக்காலத்துச் சிவபெருமான் தமது சுயவடிவைத் தரிசிப்பித்தருளிய மாத்திரத்தே சிவசாரூபமாகி முத்தியைவேண்ட, அநுபவிக்கவேண்டிய அற்பவினை இன்னுமொரு பிறவிக்கிருத்தலின் ஆண்டே முத்தியைத்தந்தருள்வோமென்று ஆஞ்ஞாபிக்க, அங்ஙனமே யவதரித்து முத்திபெற்றருளியவர் இந்நாயனாரென்க. சிறிதாவது பிரயாசமின்றிக் கல்விகற்பார் சிலர்க்குக், கடன்மடை திறந்தாற்போற் சகலகலைஞானங்களி னறிவுந்தானேவந் தேறுதலும், அற்பமுயற்சிசெய்வார் சிலர்க்குச் செல்வம் பெருகுதலும் உடம்பாட்டானும், அங்ஙனம் முயற்சிசெய்தும் வாராமை எதிர்மறையானுங் கண்கூடாகக் காணப்பட்டுக் கிடத்தலின், முற்றவ விசேடத்தால் ஞானமுதிக்கப் பெறுதல் நூதனமல்லவே. அதுபற்றியன்றே பிற்காலத்துச் சித்தாந்த[illegible]ருவாய் உதித்தருளிய சிவஞான சுவாமிகளும் "ஆளுடைய பிள்ளையார் முதலாயினார்க்குத் தவம் இன்றியும் ஞானம் நிகழ்ந்தது என்னை என்னுங்கடாவை விடுத்தற்கு மேற்செய்தவழி என [illegible]டும் வலியுறுத்தார்" என உரை உரைத்தருளினர். அதுமட்டோ! [illegible]தவருமன்றோ அவ்வரை விட்டகுறையினால் வந்தவதரித்தவரென விதந்து கூறுகிற்பர்.

கண்ணப்பநாயனாரது அன்பின்பெருமை "கண்ணப்ப னொப்பதோரன்பின்மை கண்டபி னென்னப்ப னொப்பிலென்னையு மாட்கொ

ண்டருளி - வண்ணப்பணித்தென்னை வாவென்றவான்கருணைச்-சுண்ணப்பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்று பெருந்துறை புகுந்து பேரின்பவெள்ள மூழ்கியே புத்தரை மூங்கையராக்கிய வாதவூரெங்கோன் வாய்மொழிந்தருளிய சிவவாசகமாகிய திருவாசகத்தினாலும், பின்னர் அவ்வருள் வாசகத்தையே சிறப்பித் தருளப்பெற்ற "கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றவையாற்-கண்ணப்ப னொப்பதோரன்பதனைக்-கண்ணப்பர்-தாமறிதல் காளத்தியாரறிதலல்லது மற்-றாரறியு மன்பன்றது" என்னுந்திருவாக்களித்தருப்படியார்த் திருவெண்பாவினாலுமறியுத் தக்கதேயன்றிப், பிரபஞ்சத்தையே பொருளெனக்கொண்டு மயங்கி, அதனுனிடையறா தழுந்திக்கொண்டு கடவுளிடத்து மடியாரிடத்து மன்புடையேமென்று வாய்ஞானமொன்றே பேசிக்கொண்டு திரியுநம்மவரா அதனை அளக்கவல்லவர்! இந்நாயனாரது வினையபெருமைகளும், சண்டேசுரநாயனார் தமது தந்தையின் தாள்களைச் சேதித்ததமை குற்றமன்று என்பதும், பிறவும் பெரியபுராண வசனவாயிலாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களினாலே மிகவிரிவாக விளக்கப்பட்டிருத்தலின் நாமுமவற்றை விரித்தல் மிகையாமெனக் கருதியவற்றை விடுத்தனமென்க. இறைச்சிநிவேதனத்தாலெழுங் குற்றமொன்று மாத்திரம் இங்கே நிராகரிக்கப்படும்.

இதுகாறும் எடுத்துக்காட்டிய ஏதுக்களினாலே, வினைய மெய்யடியா ரொவ்வொருவரிடத்தும் உலகத்தவர்க்குக் குற்றமாய்த் தோற்றப்படுஞ் செய்கைகளெல்லாஞ் செயற்கருஞ் செயல்களேயா மென்றும், அவையனைத்துஞ் சித்தாந்த நூற்கருத்தோடு சிறிதும் முரணாதனவேயா மென்பதூஉந் தெளிவுற விளக்கிக்காட்டி நிறுத்தப்படும். அவைகளெல்லாம் அவ்வவர் சரித்திரவாயிலாகத் தனித்தனி வசனங்களாக வெளிப்படுத்தப்படும். ஈண்டேவிரித்தற் கிடனின்றாம். இவ்வடியார் சரித்திரங்களி னின்றெழும் ஆசங்கைகளுக் கெல்லாம் தொகையாக ஒருவாறு சமாதானங்கூறப்புகின், நாம் பிறாண்டு விளக்கியவா[illegible] சித்தர் வைநயிகர் பிராகிருதரென மூத்திறப்படுஞ் சகல வ[illegible]ருள்ளே, ஆற்றலுமறிவுங் காதலுமில்லாத பிராகிருதரை[illegible] ஒழிந்த இருவருள் வைநயிகராவார், ஞானிகளெல்லாம் பிரமாணமென்றறிந்து கைக்கொண்டநூலை ஓதி அதுவாயிலாக முத்திபெறவேண்டியவராதலினாலும், சாமுசித்தராவார், விஞ்ஞானகலர் பிரளயாகல



ரைப்போல நூல்வழியானன்றித் தன்மை முன்னிலைகளால் இறைவனே முத்திசேர்த்துங் கடப்பாடு பூண்டுள்ளவராதலினாலும், பண்டைநற்றவத்தாற் றோன்றிப்பரமனைப் பத்திபண்ணுந் தொண்டராகிய இவரை அவ்விறைவர்தாமே முன்னின்று நடத்துவராதலினாலும், இவர் செயலெல்லாம் இவ்விறைவன் செயலாயே கொள்ளப்படுதலின் இவரிடத்தே குற்றம்யாண்டையதெனக்கூறி விடுக்க. அது "இவனுலகிலிதமகிதஞ் செய்தவெல்லா மிதமகித மிவனுக்குச் செய்தார் பாலிசையு-மவனிவனாய் நின்றதுறையேகனாகி யரன்பணியி னின்றிடவுமகனுங்குற்றஞ்-சிவனுமிவஞ் செய்தியெல்லாமென் செய்தியென்றுஞ் செய்ததெனக்கிவனுக்குச் செய்ததென்றும்-பவமகல வுடனாகி நின்று கொள்வன் பரிவாற்பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடுமே." என்றுஞ்சித்தியார்த் திருவிருத்தத்தினாலும் பிறவற்றினாலு நன்றாகச் சாதித்து நிறுவத்தப்படும்.

யாழ்ப்பாணம் நல்லூர். } இன்னும் வரும்.

சு. சரவணமுத்துப்பிள்ளை.
உதயபானுபத்திராதிபர்.

---

## ஐயவினா.

ஸ்ரீமாந். ஹர. சண்முக முதலியார் அவர்கட்கு.

ஐயா,

சித்தாந்தம் தொகுதி 3. பகுதி 6-ல் சிவஞானபோதம் தமிழ் என்னும் தலைப்பின் கீழ் "அந்தமாதி என்மனார் புலவர்என்னும் கூற்றைநோக்க, முதனூலில்லாதிருந்தால் ரௌரவாகமம் கூறும் என்று சொல்லாது என்மனார்புலவர் என்பானேன்? இதனால் வடமொழிசம்பந்தமும் ரௌரவாகம சம்பந்தமும் இல்லையென்பதாயிற்று" எனப் பொறித்துள்ளீர்கள்.

1. முதனூலில்லாதிருந்தால் என்னும் கூற்றானே முதனூலுண்டென்பது தொனிக்கின்றது. அது எப்பாஷையிலுள்ளது? யாரால் செய்யப்பட்டது?

2. என்மனார்புலவர் என்றதனால் வடமொழி சம்பந்தமும் ரௌரவாகம சம்பந்தமும் இல்லையென்பதற்கு உதாரணம் யாது?

உதாரணமில்லாதவேதுமுடிவுபெறின்மை என்னும் பிறழ்ச்சியுடைய ஏதுப்போலியாம். என்பதைச் சிந்தித்து விடைதருவீர்களாக.

இங்ஙனம்:
பொ. முத்தைய பிள்ளை.

# சைவ சமயத்தைக்குறித்த ஒரு சம்பாஷணை.

## (ஆன்மா உண்மை)

(முன்தொடர்பு; தொகுதி, 1; பகுதி 12)

---

சொல்கிறேன். நமது 'தாட்ஸ்', 'பீலிங்க்ஸ்', 'ஏக்ஷன்ஸ்' (அறிவு, விருப்பு, தொழில்) என்பவைகளை நீக்கிவிட்டால் 'நான்' என்பது கிடையாது ஆனால் இவைகளெல்லாம் நமதுமூளையின் சாம்பல் வர்ணமுள்ள ஒருபாகத்தினால் உண்டாக்கப்படுகின்றன. மூளை ('உம்காஸ்') (காரணமும்) நான் அல்லது ஆத்மா என்பது எபெக்ட்டும் காரியமுமாயுள்ளன.

சிவஞானம்:—அப்படியா!

உலகம்:—அதற்கென்ன டௌட் (ஐயம்)? ஒரு சிறு குழந்தையை நோக்குவோம்; அதன் மூளை ரொம்ப அன்டெவலப்டாய் (வளராமல்) இருக்கிறது. அதற்குச்சரியாகவே அதன் அறிவும் சுருங்கி இருக்கிறது. அக்குழந்தை பாலப்பருவந்தாண்டி முழுமனிதப் பருவத்தை அடையும்போது அதன் ப்ரெயினும் (மூளையும்) நாளுக்கு நாள் சைஜிலும் (பருமனிலும்) இண்டெர்னல் ஸ்ட்ரக்சரிலும் (உள் அமைப்புகளிலும்) வளர்ந்து கொண்டே வந்து உயர்ந்த கண்டிஷனை (நிலைமையை அடைகிறது பிறகு ஓல்ட்ஏஜ் (கிழப்பருவம்) முதிர முதிர (மூளையின் வலுவும் குறைந்து கொண்டே போகிறது. ஸைமல்டேனியஸாய் (அதோடுகூடவே) தாட்பவரும் (அறிவின் ஆற்றலும் குறைந்துகொண்டே வருகிறது. இதனால் ப்ரெயின் தாட்டுக்குக் காஸ் என்று ஏன் கன்க்ளூட் பண்ண (முடிபுகட்டக்) கூடாது. பர்தராய் (இன்னும்)

சுந்தரம்:—நண்பரே! தங்களிடம் ஒரு விண்ணப்பம். குறுக்கே பேசுவதற்காக என்னைக்கோபித்து வெறுக்கக்கூடாது, தாங்கள் தமிழில் இப்போது பேசிவருகிறீர்கள், கல் கொண்டு அடிப்பதுபோல் அடிக்கடி ஆங்கில சொற்களைப்புகுத்திச் செவியைப் புண்படுத்துவது எதற்கோ? இந்தக்கொடிய பழக்கம் இக்காலத்தில் ஆங்கில வாஸனை



சிறிதறிந்தவர்களிடமெல்லாங் காணப்படுகிறது இப்பித்து என்னையும் இன்றுவரையில் பிடித்திருந்தது. சிவஞானத்தின் தொடர்பு கிடைத்த அளவில் அம்மயக்கங்குறைய ஆரம்பித்தது, சற்று உற்று நோக்குவார்க்கு இச்செய்கைமிகவும் அருவருக்கத் தக்கதாய்த்தோன்றுமென்று அறிந்தேன். தாங்கள் சொல்லிவரும் பொருளில் மனம் அழுந்திநிற்றலை இடைப்புகுத்திய ஆங்கில பாஷையேற்றம் தடுத்துக்கொண்டேவந்தது. ஆதலால் தான் இவ்விண்ணப்பஞ்செய்துகொள்ளத்துணிந்தேன், மன்னிக்கவேண்டும், இக்குற்றத்தை அகற்றுதல் தங்களுக்கு எளிதில் கூடும் என்று கண்டுகொண்டேன், இனித்தலைகூர்ந்து எடுத்துக்கொண்ட பெரிய விஷயத்தைப்பற்றி மேலும் விரித்துரைக்கக் கோருகிறேன்.

(சிவஞானம்:—புன்னகையோடிருந்தார்.)

உலகம்:—வெரி வெல்...உம்...ரொம்பசரி, நீர்சொன்னது உண்மைதான் அதன்படி நடக்க முயல்கிறேன், என்ன பேசிக்கொண்டிருந்தது? ஆம், மூளையின் வளர்ச்சி தேய்வுகளும் அறிவின் வளர்ச்சி தேய்வுகளும் ஒத்து இயங்குகின்றன என்பதைக்கண்டோம். இன்னும் சொல்லுகிறேன்: நல்ல நிலைமையிலிருக்கும் ஒரு மனிதன்கூட கள் சாராயம் இவைபோன்றவைகளைக் குடித்தானாயினும், 'க்ளோராபாரம்' என்னும் பெயரிய மூர்ச்சிக்கு மருந்தை மோந்தானாயினும் சிறிது நேரத்திற்கெல்லாம் தன்னறிவைத் தான் இழந்து விடுகின்றான். இதெப்படி நிகழ்கிறதென்றால் முற்குறித்த பொருள்கள் உடலிற் சென்றவுடன் ரத்தம் கெட்டு விடுகின்றது. இது மூளையிற்சேர்ந்ததும் மூளை கெட அறிவும் மயங்குகின்றது பொதுவில் நோயில் பிடிக்கப்பட்டிருக்கும் போதெல்லாம், மனது நன்றாயிருப்பதில்லை. இதுவுமன்றி மூளையில் ஏதாவது ஒரு குறித்த பாகத்தைச் சிதைத்து விட்டால் ஒருசார் தொழில்கள் நடைபெறாமல் நின்று போகின்றன, உதாரணமாகக் குடுமி படும் இடத்திற்குக் கீழுள்ள மூளைப்பாகத்தை மாத்திரம் நீக்கிவிடுவோமாயின் கண்ணும் கண்ணின் நரம்புகளும் கேடுபடாதிருந்தாலும் பொருள்கள் நமக்குத் தோன்றா. நெற்றிக்கு மேலிருக்கும் மூளையின் முன்பாகத்திற்கும் பழுது நேரிடுமாயின், ஞாபகசக்தி குன்றிப்போம்; பொருள்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்க ஏலாது; பல விஷயங்களை ஒருங்கு சேர்த்து நினைக்கும்

ஆற்றலும் அடியோடழியும். இவையெல்லாம் மேல்நாட்டு மூதறிவாளர் நேராகவேகண்டு பிடித்த உண்மைகள்; இன்றும் இவைகளை ருஜுப்படுத்தக் கூடும். இதுவரையில் சொல்லிவந்ததினால் மூளையில்லாவிடத்து, அறிவு இச்சை முதலியன இல்லை என்பது வெளியாகவில்லையா? ஆகவே மூளை மரணத்தின்பின் அழிந்துபோன பிறகு அறிவு முதலியனவும் உடன் அழிந்து போகின்றவைதானே? ஆகலால் என்றும் அழியாத ஆன்மா என்றும் ஒருபொருள் தேகத்திற்கு வேறாய் இருக்கிறதென்னும் கொள்கை பிசகு என்றே நினைக்கின்றேன்.

சுந்தரம்:—தாங்கள் எடுத்துக்காட்டிய உண்மைகள் மறுக்க முடியாதனவாய்த் தோன்றுகின்றன; தாங்கள் பேசிய நடையும் இனிமையுடைய தாய்ப்புலப்பட்டது. நித்தியமான ஆன்மா ஒன்று உண்டென்று எவ்வாறு மெய்ப்படுத்துவதோ எனக்குத் தெரியவில்லை. (சிவஞானத்தை நோக்கி) இதுபற்றித் தாங்கள் எனக்கு அறிவுறுத்துவது என்ன என்று அறிந்துகொள்ள ஆவலுடையேன்.

உலகம்:—என்னுடைய எண்ணமும் அதுவே. வேடிக்கையாகச் சிறிது நேரம் கழித்து விட்டுப் போகு நோக்கத்தோடு வந்தவிடத்து முக்கியமான ஒரு பொருளைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய நேர்ந்தது. நான் இதைப்பற்றி ஆலோசித்ததின் பயனாக ஹக்ஸ்லி, டிண்டால் ஹியூம், ஹக்கல் முதலியோர் கொள்கையே சரியென்று தீர்மானித்துள்ளேன். ஆயினும் நீர் புதிதாகச் சொல்லுவது ஏதாவதிருந்தால் அதையும் ஆராய்வதில் எனக்கு விருப்பமே.

சிவஞானம்:—நண்பர்களே! நானும் என்னை இன்னான் என்று நேர் அநுபவத்தில் முற்றுமாக இன்னுங் காணவில்லை. ஆயினும் நான் என்னப்படும் ஆத்மா என்றொரு பொருள் இவ்வுடலுக்கு வேறாக உண்டு என்பதை மாத்திரம் அறிவினளவாகவும் அநுபவ அளவாகவும் மெய்யெனக் காட்டல் கூடும் என்று நினைக்கிறேன். நாயுடு அவர்கள் வந்த முடிபுக்கு எந்தவிதமான ஆராய்ச்சி கருவியாயிருந்ததோ அதே தன்மையான ஆராய்ச்சியை நாமுங் கைக்கொண்டு இன்னும் சோதிப்போம். முதலாவது அவர், மூளைக்கும் அறிவிற்கும் உள்ள நெருக்கமான தொடர்பைப்பற்றி எடுத்துகாட்டியவையாவும் உண்மைகளே என்று ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அவ்வுண்மைகளின்றும்



இவர் பெற்ற முடிபு அவ்வளவு சரியானதென்று என்பது மாத்திரம் சந்தேகம். ஒரு ஆராய்ச்சிசெய்யப் புகுங்கால் அதற்கு இயைபுடைய எல்லா உண்மைகளையும் நன்கு துருவிவிப்பார்க்க வேண்டும். ஆராய்ச்சிதொடங்கு முன்னமே, ஒரு கொள்கையில் நமக்குப் பற்றாக இருந்தால், அதனை மெய்யென்று நாட்டற்கு உதவியாயுள்ள உண்மைகளை மாத்திரம் எடுத்துக்காட்டுவதும், அதற்கு இழிவுதேடக் கூடிய உண்மைகளை அறிந்தோ அறியாமலோ ஆராயாது வாளா விடுத்தொழிதலும் மனித இயற்கை. லார்ட் பேகன் தாமெழுதிய 'நோவம் ஆர்கேனம்' என்னும் நூலில் சொல்லியுள்ள ஒரு சிறு கதை இப்போது நினைவிற்கு வருகின்றது அதாவது: ஒருவன் ஒரு கோயிலில் தொங்கவிட்டிருந்த பல மனிதர்களின் படங்களை மற்றொருவனுக்குக் காட்டி 'இதோ பாரும், இவைகள்யாவும், தாங்கள் செய்யப் புகும் கப்பல் யாத்திரையால் தம்முயிர்க்கழிவு நேரிடாது போயின், இத்தெய்வத்திற்குத் தக்க காணிக்கைகள் செலுத்துவதாக வணங்கிக் கட்டுரைத்துச் சென்று, பிறகு கடலில் கலமுடைந்தும் தாம் தப்பிப் பிழைத்தமையால் இங்குவந்து சொல்லிய பிரார்த்தனையை நிறைவேற்றியவர்களது படங்களேயாம், இனியேனும் நீர் தேவதைகள் நம்மனோரைக் காப்பாற்றும் அருளும் ஆற்றலும் உடையவர்களென்பதை ஒத்துக்கொள்வீரல்லவா?' என்று கேட்டான். 'ஆனால் பிரார்த்தனை செய்திருந்தும் மாண்டொழிந்தோர் படங்கள் எங்கிருக்கின்றன' என்னும் பதிற் கேள்வி பிறந்தது—என்பதாம்.

இக்கதையிற் காட்டப்பட்டுள்ள குற்றமே நமது நண்பர் செய்த விசாரணையிலும் பொதிந்துள்ளது. அதில், மூளையின் பெருக்க சுருக்கங்களுக்கும் சுகநிலை அசுக நிலைகளுக்கும் தக்கவாறு, அறிவும் உயர்வையோ தாழ்நிலையையோ அடைகின்றது என்று நிலைநாட்டுதற்கு வேண்டிய உண்மைகள் மாத்திரமே காட்டப்பட்டன. இக்கூற்றை வெட்டிச் சாய்க்கும் படியான வேறொரு சார் உண்மைகளும் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவே அவைகட்கு என்ன செய்வது? மூளையானது வலுவொடுங்கிக் கெட்டுக் கிடக்கும் நிலைமையில் அறிவு முறுகிவளர்ந்து தோன்றுகிறது என்று ஒருவர் நாம் ஒத்துக் கொள்ளும்படி காட்டுவாரானால் அப்போது எம் முடிபைக்கொள்வது? இம்மட்டோ! உடலின் தொடர்பை விலக்க விலக்க நம்மறிவு விரிவுடையதாகின்றது, நமது ஆன்ம சக்திபெருகித் தோன்றுகின்றது என்றும் கொள்ளற்குப்போதிய சான்றுகள் உள்ளன.

உலகம், சுந்தரம்:—அப்படியா! ஆனால்தயைசெய்து அவைகளைக் காட்டவேண்டும்.

சிவஞானம்:—நல்லது. இப்போது நான் சொல்லப்போவதெல்லாம் கூட அறிவிற்சிறந்த ஐரோப்பிய நன்மக்களாலேயே கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள். சில வருஷங்களாக அவர்கள் பிறர் மனம் மொழிகளைத் தம்வயப்படுத்தல், பேய்களினுண்மை, யோக நித்திரை, மானதக்காட்சி முதலிய அரிய அனுபவங்களை நயசித்தாராய்ந்து வருகின்றனர். அதில் மிக எளிதாகயாவரும் சோதித்தறியக்கூடிய ஒருவிஷயத்தைப்பற்றி மாத்திரம் நாமிப்போது தெரிந்துகொண்டால் போதும். சித்தநிடம் அல்லது மனத்தைக் குவிக்கும் ஆற்றல் கைவரப்பெற்றுள்ளோர், மாந்தர்களைத் தங்கட்டளைப்படி நடக்கச்செய்யும் வன்மை பெற்றுள்ளாரென்பதைப் பல இடங்களிற்காணலாம். இதை hypnotic power என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். ஒருவன் இச்சித்தியடைந்தவனது மனவன்மைக்குக் கீழ்ப்பட்டு மந்திர நித்திரையில் அடங்கிக் கிடக்கையில் அவனது உடம்பின் முக்கிய கருவிகள் அடைந்துள்ள நிலைமையை அற்புதமான யந்திரங்களின் துணைகொண்டு ஐரோப்பிய பண்டிதரில் சிலர் ஆராய்ந்து பார்த்தார்கள். பார்த்ததில் இருதயம் (heart) அசுத்தரத்தத்தைச் சுத்தஞ்செய்யும்படி காற்றுப்பைக்கு அனுப்பும் தொழிலையும், சுத்த ரத்தத்தை உடம்பு முழுவதும் பரப்பும் தொழிலையும் முன்போற் செய்யாது வாளாகிடக்கின்றதென்பதும், மூச்சு வாங்குதல் விடுதல் என்னும் இரண்டு செயல்களையும் காற்றுப்பை (lungs) எறக்குறைய முற்றுமே மறந்திருக்கிறதென்பதும் திண்ணமாய்ப் புலப்பட்டன. நாம் கவனிக்கவேண்டுவதென்னவென்றால், இதயமும் காற்றுப்பையும் இவ்வண்ணஞ் செயல் மறந்திருக்குமாயின் உடம்பு முழுவதும் கெட்ட ரத்தமேதங்கிநிற்கும். அவ்வாறே மூளையிலும், எனவே மூளை தன்வலிகுன்றி இறந்துபட்டதெனச் சொல்லக்கூடிய நிலைமைக்குவந்துவிடும். இனி பித்தநீர்க்குப் பிறப்பிடம் ஈரல் ஆதல்போல அறிவிற்குப்பிறப்பிடம் மூளையாயின் இந்நிலையில் அறிவு அடியோடு மறைந்தாவது அல்லது மிகவும் மங்கியாவது போகவேண்டும். ஆனால் நிகழ்வதோ மிகவியக்கத்தக்கது. இந்நித்திரையிலுள்ளோன் தனது குழந்தைப்பருவத்தில் தனக்குநேர்ந்த சிறு சிறு சம்பவங்களையும் கேட்டமாத்திரத்தில் சொல்லுகின்றான். அவனுக்குத் தெரியாத ஒருமொழி



யிலுள்ள வாக்கியங்களை விரைந்து ஒருமுறை படித்துப் பிறகு அவலைத் திரும்பசொல்லும்படி கேட்டால் உடனே தடையின்றி அவவாறு செய்கின்றான். இவ்வற்புத ஞாபக சக்தியானது அந்நித்திரையினின்றும் எழுப்பப்பட்ட உடன் மறைந்துபோகின்றது; மீட்டும் அதிற் புகுத்தினால் இன்னொருமுறை தோன்றுகின்றது. அன்றியும் இயற்கையில் மிக மந்த புத்தியுடையவன் இவ்வரிதுயிலிற் புகுந்த பிறகு ஆழ்ந்த நுண்ணறிவோடு பெரிய விஷயங்களை ஆராயும் திறமை பெறுகின்றான். இம்மட்டுமோ அவனது ஐம்புலன்களையும் முற்றுகித்த மனோவல்லமை புகுந்டயோன் தான் விரும்பியபடி ஆட்டுவித்தல்கூடும். பயித்தியக்காரர்களிற் சிலர் இவ்வரிதுயிலிற் செலுத்தப்பட்ட பின்னர் நல்லறிவுடையவர்களாக விளங்குகின்றார்கள், அத்துயில் கலைந்ததும் முன்னிலைமையே அடைகிறார்கள்.

இந்நிகழ்ச்சிகளினால் நாம் என்ன உண்மை கைவரப்பெறலாம்? நமது மூளை வலுக்குறைந்திருக்கையில் நம்மறிவு விரிந்தோங்குகின்றது என்று புலப்படவில்லையா? நம் இயற்கையான நனவு நிலையில் மூளையின் வழியாய் வெளியாகும் அறிவுப் பகுதியைவிட ஆழ்ந்த அகன்ற பெரும்பகுதியொன்று மறைந்து நிற்கின்றது. அது முற்குறித்தவை போன்ற சிற்சில அவஸரங்களில் மூளையின் உதவியன்றியே வெளியாகின்றது, எனவே மனிதஅறிவை மூளையானது நன்றாய் விளங்கவொட்டாது கட்டுப்படுத்தி மறைக்கிறதேயன்றி அதனை பிறப்பிக்கவில்லை என்றும் முடிவுக்கன்றோ வந்துவிட்டோம்! ஆதலால் மூளை அறிவைத் தோற்றுவிக்கிறதென்பது பொய்யாக, அறிவு தன்னொரு கூறை மூளைவாயிலாய் வெளிப்படுத்துகிறதென்பதே மெய்யாயிற்று. நனவில் வெளிப்படாத அறிவுப்பகுதிக்கு மையர்ஸ் பண்டிதர் சமுத்திரத்திலுலவும் பனிமலையில் நீர் மட்டத்திற்குக் கீழ் மறைந்து நிற்கும் பெரும்பகுதியை உவமித்தார். இவ்வுண்மை ஐரோப்பிய அறிஞர்களிற் பலரால் நன்கு நிலை நாட்டப்பட்டுள்ளது.

இனிக் கனவுகளினியல்பையும் ஆராய்ந்தபோது இயற்கை நனவு நிலையில் அனுபவிப்பதாயின் ஆறுமாதத்திற்குக் குறையாத காலம்வேண்டுமென்று மதிப்பிடக்கூடிய மன நிகழ்ச்சிகள் கனவில் அரைநொடியில் அனுபவிக்கப்படுகின்றன என்று தெரியவருகின்றது. இந்நிகழ்ச்சிகள் நாம் நனவிற்குத்திரும்பிய போது நினைவிற்குக் கொண்

வெரக்கூடும் ஆதலாலும் அவைகளைப் பொய்யென்றொதுக்க இயலாது. இதனால் நாம் பெறக்கூடிய முடிவு என்னவெனில் மனனில் நம்மறிவு மூளையினும் வேறாய் அதனினும் மிகச்சூக்குமமாயுள்ள ஒன்றின் வாயிலாய்த்தன்னை வெளிப்படுத்துகின்றது என்பதாம்.

இவ்விசாரணையாகிய ஏணியில் இன்னுமொருபடி ஏறுவோம்; நம்மறிவு, மூளையே இல்லாவிடத்து, அதாவது உடல் அழிந்தபின்பு உடனழிந்துபோகுமோ அல்லது நிலைபெற்றிருக்குமோ என்பதை ஆராய்வோம். இங்கும் சுருதிப் பிரமாணத்தை நாடாமல் காட்சியளவையையே கொண்டு பார்ப்போம். 1882ம்-௵ல் இங்கிலாந்தில் 'ஸைகிகல் ரீஸர்ச்ஸொஸைடி' என்னும் பேரோடு மையர்ஸ், ரோமேனீஸ், பாரெட் முதலிய சில மூதறிஞர்கள் ஒரு சபை ஏற்படுத்தினார்கள். அதன் நோக்கம் நாம் இப்போது பேசிவரும் விஷயங்களின் உண்மையை ஆராய்வதுதான். அச்சபை இன்றளவையில் நிலவி நின்று ஆஸ்திக உலகுக்குப்பேருதவி செய்து வருகின்றது. அதன் அங்கத்தவர்களாயுள்ளோர் இயற்கைப்பொருள்களையும் மிகநுண்ணிய அறிவோடும் யந்திரத்துணையோடு மாராய்ந்துபோதிய சான்றின்றி எதையும் நம்புதல் கூடாதென்னும் கொள்கையிற் றலைநின்று பல அரிய உண்மைகளைக் கண்டுரைத்தமையால், அறிவுடை உலகத்தால் நன்கு மதிக்கப்பட்ட விற்பன்னர்கள். அவர்களிற் பலர் இச்சபையிற்சேர்ந்த பின்னுங் கூடச் சிலகாலம் வரையில் அறிவு அல்லது ஆன்மா என்னுமொன்று உடலழிந்த பிறகும் உண்டென்று நம்ப அவர்கட்குப்போதிய சான்று கிடைக்காமையால் தாங்கள் ஆன்மா என்னும் நித்தியபொருளிருப்பை ஒத்துக்கொள்ள முடியாதென்று சொன்னவர்கள்தாம். இப்படிப்பட்ட அறிவாளிகள் செய்த பரிசோதனைகளெல்லாம் அவ்வப்போது அச்சபையார் வெளியிட்டபத்திரிகைகளில் விளங்க எழுதப்பட்டுள்ளன. அவைகளை நீங்கள் பார்த்திருக்கலாமே ?

உலகம்:—பார்த்ததில்லை.

சிவஞானம்:—அவைகளையெல்லாம் படிக்க ஓய்வில்லாவிடினும் மையர்ஸ் என்பவர் இயற்றிய 'Human Personality and its Survival after Bodily Death.' அரிய நூலை வாசிக்கவேண்டுகிறேன். அதுவும் இப்போதியலாதானால் பாரெட் துரையவர்கள் செய்த 'Psychical Researcl' என்னும் சிறிய நூலையாவது வாசித்தால் சாலும், அவைகளிலுள்ள பெரிய கருத்துக்களையெல்லாம் இப்போதெடுத்துச்சொல்ல இயலாதாகையால் அவைகள் காட்டும் முடிவைமாத்திரம் குறிக்கின்றேன். அது ஆக்கையழிந்த பின்னும் அறிவழிவதில்லை என்பதே. இக்கொள்கை மெய்யாயிருக்க முடியாதென்னுங்கருத்தோடு விசாரணையைத் தொடங்கி வேண்டிய அளவு சாக்ஷியிருந்தாலல்லது உள்ளதெனக் கொள்ளலாகாதென்பதை உயிர்க்குறுதிபயக்கும் மந்திரம்போல் கொண்டு அதன்வழி நின்ற நுட்ப மதியாளரே இது உண்மைதான் என்று பின் ஒத்துக்கொண்டு அதற்கு வேண்டிய நியாயங்களை விளக்கி விரித்துள்ளார்கள். தூரதேசத்தினிகழ்பவற்றை நாம் வழங்கும் எவ்விதமான கருவியின் துணையுமின்றி இங்கிருந்தே அறிந்து கொள்ளலும், பிறர் மனதிலுள்ள எண்ணங்களை தாமாகவே கண்டுரைத்தலும், இறந்து போனவர்கள் இவ்வுடலிலுள்ளோர்க்குத் தம்கருத்தை வெளியிடுதலும், பேய்பிடித்தலும், சிலஇடங்களில் அலகை முதலியன குடியிருந்து பயமுறுத்தலும் இன்னும் இவைபோன்ற பல அபூர்வச்செயல்களும் அடியோடு அசம்பாவிதமென்று தள்ளிவிடக்கூடாத மெய்ப்பொருள்களே என்று கொள்வதற்குப் பலகாரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. சிலகீழ்மக்கள் தமதறிவின்றிறலைத் தந்நலங்கருதிப் புரட்டுவழிகளிற் பயன்படுத்துவது மெய்யேயாயினும், முன்குறித்த நிகழ்ச்சிகள் உள்ளனவே என்பதில் சற்றும் ஐயமில்லை.



உலகம்:—இந்தச்சபையைப்பற்றி எனக்குச்சிறிது கேள்விமாத்திரம் உண்டு. ஆனால் அதன் செயல்களைப்பற்றி எனக்கு நன்மதிப்பிருந்ததில்லை. இவ்விசாரணைசெய்வோர் பலவழிகளில் ஏமாந்துபோகக்கூடுமென்பது வெளிப்படை.

சிவஞானம்:—மெய்தான் மேதாவியாய க்ரூக்ஸ், சந்தேகாவதாரமாயிருந்த மையர்ஸ், நுண்ணறிவிற் குறைவிடமாகிய ஸிட்ஜ்விக், பரந்த அறிவினராகிய லாட்ஜ் முதலியோரெல்லாம் நீர் குறிக்கும் ஆபத்துகளை முன்னமே உணர்ந்து தாங்கள் மயங்கிப்போகாதிருக்கும் வழிகளைக் கற்பித்துக்கொண்டு பிறகுதான் முடிவு சொலல் ஆரம்பித்தனர் தயை செய்து அவர்கள் சொல்லியவற்றை வாசியும்.

உலகம்.—அப்படிச்செய்யாதிருந்தது பிசகுதான், இனி நான் விரைவில் அவ்வாறே செய்கின்றேன்.

சிவஞானம்:—சந்தோஷம். நீவிரும் இவ்விஷயமாகச் செய்த ஆராய்ச்சியைக் குறித்தீர்கள். அதையும் சிறிது கவனிப்போம். சுருக்கிக்கூறில் அவர் சொன்னதாவது 'எனது மனதில் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும் பல்வகைப்பட்ட நிகழ்ச்சிகளையும் நிலைகளையும் தனித்தனித் துருவி யாராய்ந்து பார்த்தேன். அவைகளுக்கு வேறாக ஒரு அறிவுடைய பொருள் இருக்கக்கண்டிலேன். இனி மனித உடலத்தில் உள்ளும் புறம்பும் அணுவளவிடமும் விடாது தேடிப்பார்க்கினும் ஆன்மப் பொருளைக்கண்டேனில்லை. ஆகலால் ஆன்மா என்பது இல்பொருளே' என்னும் சூனிய வாதமே. இப்போலி நியாயங்களை அறிவாளிகள் முன்னமே கண்டு நன்கு கண்டித்துள்ளார்கள். அதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. மனோநிகழ்ச்சிகளுக்கும், நிலைகட்கும் வேறாய் அவைகளையெல்லாம் ஒன்றுபடச் சேர்த்துப் பிடிக்கும் அறிவுப் பொருள் ஒன்று உளதென்று கொண்டாலன்றி ஞாபகசக்தியுண்மை, கண்ணறிவு இச்சைசெயல்களைத் தானேசாக்ஷியாக நின்று காணும் அனுபவம் என்னும் இவைபோன்ற பல நிகழ்ச்சிகளுண்மைக்கு வழி ஏற்படாது. அன்றியும் நீவிரும் தமது மனதைத் துருவிப் பார்த்ததாகச் சொல்லுகிறீரே அப்படி பார்த்தது அதுவும் மனதில் தோன்றும் பல்வகை நிகழ்ச்சிகளில் ஒன்றாயிருக்க முடியாதே! இவர் கூற்று அதிவிவேகபரிபூரண குருவும் அவர் சீடர்களும் ஆறு தாண்டியிருக்குஞ்சமயத்தில் அதைத்தாண்டி கரையேறினபின் எண்ணினவன் தனைவிட்டு எண்ணிப்பார்க்கையில் தம்மில் ஒருவனை ஆறு விழுங்கிவிட்டதென்று மனமாறுகிய கதையையும் என்தாய் மலடி என்றவனது அறிவுநுட்பத்தையும் நினைப்பூட்டுகின்றது. இனி உடலெங்குந்தேடியும் கண்டிலேனென்பது எவ்விடத்தும் தேடியும் ஆகாயம் ether புலனாகவில்லை என்றுமுறையிட்டதை ஒக்கும்.

கடைசியாக இன்னுமொரு விஷயத்தைச் சுருக்கிச்சொல்ல எண்ணம். ஆன்மா தேகத்திற்கு வேறாக உண்டென்பதை நாம் முயற்சி செய்தால் நம்மனுபவத்திலேயே கண்டு கொள்ளல் கூடும். இவ்வுடலத்தினின்றும் சிறிது நேரம் நாம் வெளியேறி யிருந்து சுற்றிலும் நடப்பவர்களைக் காணல் அசாத்தியமல்ல. அப்படிக்கண்டார் முன்னும் பலர் இருந்தார்கள். இன்னும் சிலரங்கு உள்ளார்கள். இவ்வியல்பும் நம்நாட்டு ஞானிகட்குக் கைவந்ததுபோல் பிறதேசத்தார்க்கு



அவ்வளவு பெரும்பான்மையாகச் சாத்தியப்பட்டதில்லை. நீரும் நானும் அவ்வுண்மையை அநுபவ வழியாய் அறிய வேண்டுமாயின் செய்யவேண்டுவதெல்லாம் என்னெனில் நமது ஐம்புலன்களையும் அடக்கிப்பிறகு நம் மனக்குரங்கையும் அமைதியோடு குவிந்திருக்கப் பண்ணுவதேயாம். இவ்வாறு மனம் அடங்கியதும் ஆத்மதர்சனம் கிடைக்கும். உடனே விறகிற்றீயினைப்போல் மறைந்து நிற்கும் மாமணிச்சோதியின் காட்சியுஞ்சித்திக்கும். 'திரையற்ற நீர்போல் சிந்தைதெளிவார்க்குப், புரையற்றிருந்தான் புரிசடையோனே' என்று திருமூலர் என்னும் மகாஞானி உபதேசித்ததும் இவ்வுண்மையையே. இதுவரையில் பேசினதெல்லாம் ஆன்மா ஒன்று உண்டு அது தேகமுமல்ல, புலன்களுமல்ல. மனமுமல்ல; இவைகட்கெல்லாமுயர்ந்த சாதாரண நிலையில், இவைகளால்தான் ஒளி விளங்காதிருக்கும்படி கட்டுண்ணப்பட்டு நிற்பதாகிய ஒரு அரும்பொருள் என்பதை வற்புறுத்தும் பொருட்டே. இனி இத்தகைய ஆன்மப் பொருளின் முழு இலக்கணந்தான் என்னவென்பது பின்னாராயத்தக்கதோர் விஷயம். இம்மட்டில் உண்மை தெளிந்தாலல்லது மேற்செல்வதில் பயனில்லை. ஏதோ என் புன்மொழிகளால் இப்பெரிய பொருளைப்பற்றி விரைந்து சுருக்கிக்கூறினேன், வேறுவிதமாக கருதிப்பிரமாணத்தால் ஆன்ம இருப்பை நாட்டுதலும் கூடும் ஆயினும், இன்றெழுந்த விவாதத்திற்கு அவ்வழியாகச் சென்று பதில்தரல் அவ்வளவு சிறப்பாகாதென்றுன்னி மேற்புலவிஞ்ஞானிகள் போக்கையே தழுவிக்கூறினேன், நான் சொன்னேனென்று நீங்கள் மெய்யென்றுவது முடிவு செய்யமாட்டீர்களென்று நம்புகிறேன். "எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதுணர்வு" ஆகலின் கேட்டதைச் சிந்தித்து ஆராய்ந்து சரியென்று எதுபடுகின்றதோ அதையே மெய்யெனக்கொள்ளலாம்.

சுந்தரம்:—(சிவஞானத்தை வணங்கி) தாங்கள் நீறுபூத்த நெருப்புப் போலிருக்கின்றீர், நமது நண்பர் ஆன்மா இல்லை என்பதற்குத் தமது நியாயங்களைக் காட்டியபோது இவைகளையும் மறுக்கமுடியுமோ என்று கலங்கினேன். இப்போது கடல் மடைதிறந்தாற்போல் தாங்கள் ஒன்றின்பின்னொன்றாக எதிர்த்துரைக்க முடியாவண்ணம் உண்மைகளை நிரம்பக்கோத்து ஆன்மா உண்டென்பதைக்

திடமாக காட்டினீர்கள். இவ்விஷயத்தில் இனி எனக்கு ஐயம் நிகழாதென்பது திண்ணம். இப்பேருபகாரத்திற்கு இறைவனே தங்கட்குக் கைம்மாறு செய்யவல்லவன்.

உலகம்:—நண்பரே! நான் ஏதோ ஸையன்ஸெல்லாம் படித்துக் கரைகண்டு விட்டதாகவும் 25-வருஷத்துக்குமுன் மேல்நாட்டில் பிறந்த நாஸ்திக உலகாயதக் குப்பைதான் அவர்களிப்போதும் போற்றும் செம்பொருள் என்பதாகவும், கொண்டு மயங்கிச் சற்றுச் செருக்குங் கொண்டிருந்தேன், தங்கள் கிருபையால் அம்மயக்கு குன்றிற்று; செருக்கழிந்தது. தாங்கள் குறித்த நூல்களை அவசியம் வாசிக்கின்றேன். அநேக நமஸ்காரம் தங்களுக்குச் செய்கிறேன்.

சிவஞானம்:—எல்லாம் பரமேச்சுரனது திருவருட்செயல் என் செயலால் ஆவதொன்றுமில்லை.

இதற்குள் நாம் பெருமாள் செட்டியார் வந்தனர்.

சிவஞானம்:—செட்டியாரவர்கள் நமஸ்காரம் வரவேண்டும்.

நாம்:—மணியாய்விட்டது. சுவாமியார் இந்நேரம் பிரசங்கம் தொடங்கி யிருப்பார்.

சிவஞானம்:—மெய்தான் நாங்களும் இதோ வருகிறோம் தயைசெய்து ஐந்து நிமிஷம் இரும்.

சிவஞானமும் சுந்தரமும் செட்டியாரோடு பிரசங்கத்திற்குச் சென்றார்கள்.

(இன்னும் வரும்)

ச. சச்சிதாநந்தன்.

---

# இருக்குவேதம்.

அஷ்டகம்-க-அத்தியாயம்-க-அநுவாகம்-க.

சூக்தம்-க-மண்டலம்-க.

---

(முதல் சூக்தத்திற்குத்தேவதை அக்கினி, ருஷி விஸ்வாமித்திரர் பிள்ளை மதுச்சந்தஸ், சந்தஸ் காயத்திரி.)

வர்க்கம்-க.

க. யக்கியத்திற்குப் புரோகிதனும், தேவனும், ஓதாவென்னும் ருத்ருவிக்கும், இரத்தினங்களைத் தரிப்பிக்கிறவருமாகிய அக்கினியைத் துதிக்கிறேன்.

உ. அக்கினியானவர் பழைய ருஷிகளாலும் புதுமையானவர்களாலும் புகழத்தக்கவர். அவர் தேவர்களை இங்கே கொண்டுவரக்கடவது.

ந. அக்கினியினாலே நாள்தோறும் வளர்ந்துகொண்டே யிருக்கிறதாகவும், புகழ்பொருந்தியவும், வீரர்களோடு கூடியவுமாகிய திரவியத்தை (யஜமானன்) அடைகிறான்.

ச. ஓ அக்கினியே! நீர் இம்சையில்லாத எந்த யக்கியத்தை எல்லாதிக்குகளிலும் அடைந்திருக்கிறீரோ அதுதான் தேவர்களிடத்துப் போகிறது.

ரு. ஓதாவும், ஞானமடைந்தவரும், சத்தியமானவரும், மிகவும் பலவிதமான புகழ்கூடியவருமாகிய அக்கினிக்கடவுளானவர் தேவர்களோடு வரக்கடவது.

வர்க்கம்-உ.

சு. ஓ அக்கினியே! (யஜமானனுடைய அவிசு) கொடுக்கிறவனுக்கு நீர் எந்தச் சுபத்தைப் பண்ணுகிறீரோ அது உமதே, ஏ அங்கிரசே! (இது) சத்தியம்.

எ. ஓ அக்கினியே! நாங்கள் நாள்தோறும் இரவும் பகலும் புத்தியினாலே வந்தனம் செய்துகொண்டு உம்மை நெருங்குகிறோம்.

௮. பிரகாசித்துக் கொண்டிருக்கிறவரும், யாகங்களைக் காக்கிறவரும் சத்தியத்தைப் பிரகாசப் படுத்துகிறவருமாகிய (உம்முடைய) சொந்தவீட்டில் வளர்கின்ற (உம்மை நெருங்குகிறோம்.)

௯. அப்பேர்ப்பட்ட அக்கினியே புத்திரனுக்குப் பிதாவைப் போலநமக்குச் சுலபராயிரும், நம்முடைய க்ஷேமத்துக்காக நம்மோடு கூடவிரும்.

சூக்தம்-௨.

(இதற்கு ருஷி மதுச்சந்தஸ், யா-காயத்திரி, இதில் அடங்கிய-௯-ருக்குகளில் மூன்றுக்குத் தேவதை வாயு, மூன்றுக்கு இந்திரனு-ம் வாயுவும், மற்ற மூன்றுக்கு மித்திரனும் வருணனும்.)

வர்க்கம்-௩.

௧. ஓ வாயுவே! பார்க்கத்தகுதியானவரே வாரும் இந்த சோமன்கள் * பிழிந்து ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கின்றன. அவைகளில் (உம்முடைய பாகத்தைக்குடியும்) நம்முடைய அழைத்தலைக்கேளும்.

௨. வாயுவே! யாகமறிந்தோரும் அபிஷவதமான †சோமத்தை உடையவருமாகிய ஸ்துதிப்போர் உம்மை உக்தங்களால் ஸ்துதிக்கினுர்கள்.

௩. வாயுவே! சோமத்தைமிகவும் தழுவுகின்றதும், அனேகரிடத்திற்குப் போகின்றது மாகிய உம்முடைய வாக்கானது சோமபானத்தின் பொருட்டு (எஜமானனாகிய) கொடுக்கிறவரிடத்தில் செல்லுகின்றது.

௪. இந்திரவாயுக்களே! இவைகள் அபிஷவதங்களாயிருக்கின்றன. நீங்கள் (எங்களுக்குக்கொடுக்க) அன்னத்துடன் கிட்டவாருங்கள். நிச்சயமாகவே சோமங்கள் உங்களை இச்சிக்கின்றன.

௫. வாயுவே! அவிசின் தொடர்ச்சியில் வசிக்கிறவர்களாகிய நீரும் இந்திரனும் அபஷவதங்களானவைகளை அறிகிறீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் சீக்கிரமாய்க் கிட்டவாருங்கள்.

(தொடரும். த-போ.)

* சோமம் என்பது ஒருவிதமான கொடி. அதன்சாறு சாந்தகுணமும் புளிப்பானருசியும் உள்ளது. அதைப்புளிக்கவைத்துப் போதையுண்டு பண்ணும் குணம்வந்தபின்பு அதை யாகத்தில் உபயோகித்தல். †அபிஷவதமானது சோமத்தின்சாற்றைப் பிழியும் கிரியை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௩.] 1914ளு செப்டெம்பர்மீ, [பகுதி ௯.

## சாமவேத தல்வாகாரமெனும்

## கேனோபநிஷத்து. *

கண்டம்-க-மந்திரம்-க.

---

சீடன்வினா.

மனமானது எவராலே யேவப்பட்டுச் சிச்சித்துச் செல்கின்றது? பிராணன் எவராலே நியமிக்கப்பட்டுச் சஞ்சரிக்கிறது? எவராலிச்சிக்கப்பட்டு வாக்கின்மூலமாக மனிதர்கள் பேசுகிறார்கள்? எந்தத் தெய்வம் கண்களையும் செவிகளையும் தத்தம் நிலையில் சேர்த்துவைக்கின்றார்?

*இவ்வுபநிஷத்து, சிஷ்யனுக்கும் குருவிற்கு நடந்த சம்பாஷணையாகவிருக்க, மத்துவாசாரியர் பிரமாவுக்கும் சிவனுக்கு நடந்த சம்பாஷணை ரூபமெனக் கனவுகண்டெழுதினர்போலும்.

ஆசிரியன்விடை, மந்திரம்-௨.

எக்காரணத்தினால் செவிக்குச் செவியாகவும், மனதிற்கு மனமாகவும், வாக்கிற்கு வாக்காகவும் இருக்குமிறைவனே, பிராணனுக்குப் பிராணனாகவும், கண்ணுக்குக் கண்ணாகவு மிருப்பதைப் புத்திமான்கள் தெரிந்து சுரோத்திராதிகளின் (பேரில்வைத்த அபிமானத்தை) விட்டுச் சென்மத்தினின்று நீங்கி முத்தர்களாகிறார்கள்.

மந்திரம்-௩.

கண், வாக்கு, மனம் அவனில்போகா, அவனையாமறியோம், எப்பிரகாரம் இதனைச்சீடனுக்கு உபதேசிக்கக்கூடும், அதுதெரிந்துகொண்டதற்கும் பின்னுந் தெரிந்து கொள்ளாததற்கும் வேறாகவே யிருக்கிறதென்று யாரெங்கட்கு அதைத்தெளிவாகச் சொன்னார்களோ, அத்தகைய பூர்வீகர்களாகிய பெரியோர்கள் வாக்கியத்தைக் கேட்டிருக்கிறோம்.

மந்திரம்-௪.

வாக்கால் எது பிரகாசிக்கப்படவில்லையோ, எதனால் வாக்குப் பிரகாசிக்கப்படுகிறதோ அதையே பிரமமாக † நீயறி, எந்தவஸ்துவை இது பிரமமென்று உபாசிக்கிறார்களோ அது பிரமமன்று.

மந்திரம்-௫.

மனதினால் எது நினைக்க முடியாதோ, எதனால் மனம் மனனஞ் செய்கின்றதோ அதுபிரமம், எந்தவஸ்துவை இதுபிரமமென்று உபாசிக்கிறார்களோ அது பிரம மன்று.

---

† உபநிடதங்களிற் குறிக்கும் பிரமசப்தம் சிவபெருமானையே குறிக்கும். "ப்ருஹத்வாத் ப்ருஹ்மணத்வாச் சஶிவோ பரஹ்ம வயோகத:" என்றபராக்கியை வாக்கியத்தானும், சிவவதனம் என்றதற்கு 'பஞ்சப்ரஹ்மவக்த்ரம்' எனப் பிரயோகமிருத்தலினாலும், சிவசத்திக்கே பிராஹ்மி எனப்பெயரிருத்தலினாலும், அப்பிராஹ்மிசத்தியைத் தாதான்மியமாகவுடைய சத்தனேபிரஹ்மமாகலினாலும், பிரஹ்மசப்தத்திற்குச் சிவபெருமானேயெனக்கோடலே சுருதிசம்மதம். பிரதிஷ்டாகலைப் பாலராம் நாராயணரை, இராமாநுஜரும், மத்துவாசாரியரும் சாங்கியாதிதகலா சக்கரத்தைக்கடந்த பிரஹ்மசப்தத்துடன் பொருத்துவது அவாச்சியகற்பனையாம். இவ்வுபநிஷத்திற் போந்த யட்சருபமும் சிவபெருமானே யென்பதிற்றட்டில்லை.



மந்திரம்-௬.

கண்களால் எது பார்க்கமுடியாதோ, எதனால்கண் பார்க்கப்படுகிறதோ அதுபிரமம், எந்தவஸ்துவை இதுபிரமமென்று உபாசிக்கிறார்களோ அது பிரம மன்று.

மந்திரம்-௭.

காதினால் எது கேட்க முடியாதோ, எதனால் காது கேட்கப்படுகிறதோ அதுபிரமம், எந்தவஸ்துவை இதுபிரமமென்று உபாசிக்கிறார்களோ அது பிரம மன்று.

மந்திரம்-௮.

பிராணவாயுவினால் எது தெரிந்துகொள்ளப் படாதோ, எதனால் பிராணவாயு சேட்டிக்கப் படுகிறதோ அது பிரமமன்று எந்தவஸ்துவை இது பிரமமென்று உபாசிக்கிறார்களோ அது பிரமமன்று.

காண்டம்-௨-மந்திரம்-௧.

பிரமத்தைத் தெரிந்து கொண்டேனென்று நீ நினைப்பாயாகில், அந்நினைவு அற்பமாகமுடியும், அப்பிரமத்தின் உருவத்தை நீதெரிந்து கொண்டேனென்று நினைப்பாயாகில் அதுவும், பிரமத்தின் உருவத்தைத் தேவதாரூபங்களில் தெரிந்து கொண்டேனென்று நினைப்பாயாகில் அதுவும் அற்பமாகமுடியும், அப்பிரமம் சுவானுபவத்தால் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். அது தெரிந்துகொள்ளக் கூடியதாக நினைக்கின்றேன்.

மந்திரம்-௨.

நான் அப்பிரமத்தைத் தெரிந்து கொண்டேனென்று நினைக்கவில்லை, தெரிந்துகொள்ள வில்லையென்று நினைக்கவில்லை, பின்னையென்னெனில், சுவானுபவத்தால் தெரிந்துகொண்டேனென்று நினைக்கின்றேன், அவ்வெண்ணத்தை எங்களில் எவன் தெரிந்துகொள்ளுகிறானோ அவன் பிரமத்தைத் தெரிந்துகொள்ளுகிறான்.

மந்திரம்-௩.

எச்சாதகனுக்குப் பிரமமானது மனோவிருத்தி மாத்திரத்தால் கோசரமாகாதோ, அவனுக்குச் சொரூபானுபவத்தால் தெரிந்துகொள்ளப்படுகிறது, எவன் அப்பிரமம் தன்மனத்திற்குக் கோசரமாயிற்றெ

ன்று அபிப்பிராயப் படுகிறனோ அவன் தெரிந்தவனல்ல, தெரிந்தவ னென்பவனுக்குத் தெரியாது, தெரிந்து கொள்ளாதவனுக்குத் தெரிந்துகொள்ளப்படும்,

மந்திரம்—௪.

பிரமம் எப்போது புத்தி விருத்தியில் சாட்சியாக விருப்பதாக அறியப்படுகிறதோ அப்போது அதுநல்ல ஞானமாக ஆகிறது, ஏனெனில் அதனால் மோட்சத்தை யடைகிறான்.

மந்திரம்—௫.

சத்யமாக ஒருவஸ்து உண்டென்று இச்சென்மத்தில் தெரிந்து கொண்டால் அப்போது நற்கதியுண்டாம், ஜீவித்திருக்கிறபோது தெரிந்து கொள்ளாவிட்டால் பெரிதான நஷ்டமுண்டாயிற்று, ஆகலின் தீரர்கள் ஒவ்வொரு பூதத்திலும் அப்பிரமத்தைத் தெரிந்துகொண்டு இவ்வுலகத்தினின்றும் மோட்சத்தை யடைகிறார்கள்.

கண்டம்—௩—மந்திரம்—௧.

பிரமமே அசுரர்களைச்செயித்தது, அவ்வசுர செயத்தால் தேவர்கள் மகிமை யடைந்தார்கள், இந்தச்செயம் நம்முடையதே யெனவும், சாமர்த்தியமு நம்முடையதே யெனவும் தேவர்கள் நினைத்தார்கள்.

மந்திரம்—௨.

அப்பிரமம் தேவர்களுடைய தப்பெண்ணத்தைத் தெரிந்துகொண்டது, அந்தேவர்கட்கு அனுக்கிரகஞ்செய்ய பிரமம் யட்சரூபமாக உத்பவமாயிற்று, இச்சொரூபம் இத்தகையதெனத் தெரிந்து கொள்ளாமற் போனார்கள்.

மந்திரம்—௩.

தேவர்கள் அக்கினியை நோக்கி அக்கினிதேவே! எங்கள் கண்களுக்குக் காணப்படுகிற இப்பெரிய வுருவத்தை இத்தகையதென நீ தெரிந்துகொள் என்றார்கள், அக்கினியும் அங்ஙனமே யாகட்டு மென்றனன்.

மந்திரம்—௪.

அக்கினி யட்சவின் சமீபத்தில் விரைந்து சென்றான், யட்சு நீ யார் என்று கேட்டது. நான் பிரசித்தமான அக்கினி, நான்பிரசித்தமான 'ஜாதவேத' என்றனன்.



மந்திரம்-௫.

இத்தகைய பிரசித்தமான பெயரையுடைய உனது சாமர்த்திய மென்னென யட்சுகேட்க, இப்பூமியின் கண்ணுள்ள ஸ்தாவர மனைத்தையு மெரித்துவிடுவே னென்றனன்.

மந்திரம்—௬.

அங்ஙனமாயின் நீ இத்துரும்பினை எரித்துவிடுகவென்று அவன் முன் போட்டது, அவ்வக்கினி துரும்பின் சமீபம்சென்று எரிக்க சாமர்த்திய மில்லாதவனாய்த் திரும்பித் தேவர்களை அந்த யட்சுவை இத்தகையதென்று தெரிந்துகொள்ள என்னால் முடியவில்லை யென்றான்

மந்திரம்—௭.

பின்பு தேவர்கள் வாயுவை நோக்கி, வாயுதேவனே! இந்த யட்சுவை இன்னதென்று நீ தெரிந்து கொண்டுவா என்றார்கள். வாயுவும் அங்ஙனமே யாகட்டு மென்றனன்.

மந்திரம்-௮

வாயு யட்சுவை நோக்கிச் சென்றான், யட்சு நீயார் என்று கேட்டது, நான் பிரசித்தமான வாயு, நான் பிரசித்தமான 'மாதரிஸ்வா' என்றனன்.

மந்திரம்-௯.

இத்தகைய பிரசித்தமான பெயரையுடைய உனது சாமர்த்திய மென்னென யட்சுகேட்க, இப்பூமியின் கண்ணுள்ள எல்லாப்பொருள்களையும் அரித்துக்கொண்டுபோவே னென்றனன்.

மந்திரம்-௧௦.

அங்ஙனமாயின் நீ இத்துரும்பினை அசைத்துவிடுகவென்று அவன்முன் போட்டது அவ்வாயுதுரும்பின் சமீபம்சென்று அசைக்கச் சாமர்த்திய மில்லாதவனாய்த் திரும்பித் தேவர்களைப் பார்த்து, அந்த யட்சுவை இத்தகையதென்று தெரிந்துகொள்ள என்னால்முடியவில்லை யென்றனன்.

மந்திரம்-௧௧.

பின்பு தேவர்கள் இந்திரனை நோக்கித் தேவேந்திர! இந்த யட்சவை இன்னதென்று நீ தெரிந்துகொண்டுவா என்றார்கள், இந்திரன் அதனிடத்து ஓடுதலும் அந்த யட்ச இவனெதிரே மறைந்துவிட்டது.

மந்திரம்-௧௨,

இந்திரன் அவ்வாகாயத்தில், இமாசலபர்வதத்தின் புத்திரியாய்† மிகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கிற உமாதேவியாகிய பெண்ணைப் பார்த்து இந்தயட்ச யாரென்று கேட்டான்.

ஆண்டம்·௪·மந்திரம்-௧.

அவ்வுமாதேவி அது பிரமமென மொழிந்தாள், இப்பிரமத்தின் ஜெயத்தினாலேயே நீர்மகிமை யடைந்தீர்களென்றாள், இந்திரன் அவ்வசனத்தால் பிரமமெனத் தெரிந்து கொண்டான்.

மந்திரம்-௨.

இதனால் அக்கினியும் வாயுவும் இந்திரனும் மற்றதேவர்களைக்காட்டிலும் மேம்பாட்டினை யடைந்தார்கள், ஏனெனின் இவர்கள் அந்தப் பிரமத்தைத் தெரிந்துகொண்டார்கள்.

மந்திரம்-௩.

இக்காரணத்தினால் இந்திரனனவன் அக்கினி வாயுவுமான இவர்களைக்காட்டிலும் மேன்மை அடைந்தான், ஏனெனில் இந்திரனே சமீபத்தில் பிரமசொரூபத்தை முதலில் ஸ்பரிசித்துத்தெரிந்து கொண்டான்.

---

† ஐமவதிம் என்பதற்கு இமாசலபர்வதத்தின் புத்திரி எனும் பொருள் பிரசித்தமாகவும், சங்கராசாரியர் சுவர்ணாபரணங்களுள்ளவள் என விபரீதப்பொருள் கொண்டாரேனும், உமாஎன்பதற்கு வேறுபொருள் குறிக்கவேலாதவராயினர். இராமானுஜர் உமாதேவியாகிய இலட்சுமியெனப் பொருள் கூறித்திருப்தியாயினர். இவர், இலட்சுமி ஜீவகோடிகளி லொருத்தியெனக் கொண்டிருக்கிற வைஷ்ணவசாம்பிரதாயத்தை மறந்தார்போலும்.



மந்திரம்-௪.

இது அந்தப் பிரமத்தைக் குறித்துரைக்கும் சத்திய மொழியாகும், அப்பிரமம், மின்னலொளியைப்போலப்பிரகாசித்து, கண்ணிமை முடிப்பிற் கரந்துபோயது, ஆகலின், இவ்வுபமானம் மற்றையதேவர்களினும் இதனைக் குறிப்பிட்டறியத்தக்கது,

மந்திரம்-௫.

இனி ஆன்மாவுடன் அவனைக்குறிப்பிட்டறிதல் வேண்டும், மனமானது செல்கிறதுபோலிருக்கிறது, மனதினால் சமீபத்திலிருக்கிறதாக நினைக்கின்றான், அடிக்கடி மனதின் சங்கற்பம் பிரமவிஷயமாக உண்டாகிறது, மனதால் தியானம் செய்யவேண்டியது.

மந்திரம்-௬.

அது வியாபகமாக விருப்பதால் அது வியாபகமென்று உபாசிக்கத்தக்கது, எவன் இதையிப்படி உபாசிக்கிறானோ அவனை சமஸ்தமான பூதங்களும் பிரார்த்திக்கின்றன.

மந்திரம்-௭.

(சீடன்)உபநிடதத்தில் இன்னமேதாகிலுமுண்டோ என(ஆச்சாரியர்) சொல்லுகிறார்:உனக்கு உபநிஷத்து சொல்லப்பட்டது, உனக்குப்பிரம சம்பந்தமான உபநிஷத்தையே சொன்னேன், நிச்சயம்.

மந்திரம்-௮.

அப்பிரம வித்தைக்காக கிருச்சிரமம் சாந்திராயண முதலியவிரதங்கள், அக்கினிஹோத்திர முதலியவைகள், இந்திரியமடக்கல், வேதங்கள், வேதாந்தங்கள், பிரதிஷ்டைகள் சத்திய ஸ்தானங்களாம்.

மந்திரம்-௯.

எவனாகிலும் இவ்வித்தையை முன்சொன்னபடி அறிகிறானோ அவன் பாபத்தைவிட்டு அந்தமில்லாததும், எல்லாவற்றிற்கும் அதிகமானதுமான சுகமாகிய உலகத்தின் ஸ்திதியை அடைகிறான்.

கேனோபநிஷத்து சம்பூரணம்.

மணவழகு.

# சிவஞானபோத முதனூல் விளக்கம்.

தொகுதி 3 பக்கம் 162 தொடர்ச்சி.

---

அப்படி பரஞ்சோதி முனிவர் அனுக்கிரகித்திருந்தால் மெய்கண்டதேவர் சகலமும் ஓதாது சிவஞானபோதத்தை ஆரியத்தினின்றும் தமிழில் மொழிபெயர்த்துப் பொழிப்புரைத்தார் என்று கொள்ளவேண்டியிருக்கிறது. அப்படிக் கொண்டால் பின்னால் கூறின சங்கதிக்கு உதைக்கின்றது. அதாவது, பரஞ்சோதிமுனிவர் சிவஞானபோதத்தைச் சொல்லிப்போன பிறகு அதன் பொருள் தெரியாமல் பொல்லாப் பிள்ளையாரை வேண்டித் தவங்கிடந்தார் என்ற வசனத்திற்கு.

ஒருபாஷையினின்றும் மற்றொரு பாஷையில் மொழிபெயர்த்தார் என்றால் பொருள் தெரியாமலா மொழிபெயர்த்தார்? பொருள் தெரியாமலா பொழிப்புரைத்தார்? பொருள் தெரியாமல் செய்த தமிழ்ச் சிவஞான போதத்திற்கும் பொழிப்புரைக்குமா பொல்லாப் பிள்ளையார் சூர்ணிக்கொத்து செய்து கொடுத்தார்?

பரஞ்சோதிமுனிவருடைய தபோபலத்தால் மெய்கண்டார் சிவஞானபோதத்தின் பொருள் தெரிந்து மொழிபெயர்த்துப் பொழிப்புரைத்தார் என்று கொண்டால் அவர் பொல்லாப் பிள்ளையாரிடம் பொருள் விளங்கவில்லையே என்று தவங்கிடந்தது பொய்யாக வேண்டும்.

மெய்கண்டார் பொல்லாப்பிள்ளையாரிடம் பொருள் விளங்கவில்லையென்று தவங்கிடந்து, பொல்லாப் பிள்ளையாரிடம் 39-சூர்ணிக்கொத்துக்களைப்பெற்றுச் சிவஞானபோதத்தின் பொருள்விளக்கமாயினர்என்று கொண்டால் அவர் மொழிபெயர்த்தது பொய்யாகவேண்டும்.

இதில் எது சரி சரியல்லவென்பதை அறிஞர்கள் ஒவ்வொருவரும் யோசிக்கவேண்டியது.

திருக்கைலாய பரம்பரை மெய்கண்டார் என்று சொல்லுவதால் பரஞ்சோதிமுனிவருடைய மாணாக்கர் மெய்கண்டார் என்பது தேற்றமென்றும், பரஞ்சோதிமுனிவருடைய மாணாக்கராய் இருந்துவிட்



டுப்பிறகு பொல்லாப் பிள்ளையாருடைய மாணாக்கராக ஆனார் என்று சொன்னால் பரஞ்சோதி முனிவருக்கு என்ன பெருமையிருக்கிறது; பரஞ்சோதி முனிவர் என்ன சந்தேகமாகவா சொல்லிக் கொடுத்துவிட்டுப்போவார், அவருக்குஎன்ன தெரியாதா, அவர் நந்திஎம்பெருமான் சந்ததியல்லவா என்றும் ஆகையால் பொல்லாப்பிள்ளையாரிடம் சூர்ணிக்கொத்துப் பெற்றதாகச் சொல்லுவது தப்பு என்றும் கூற முன்வந்திருக்கிறார்கள் சிலர். இது "முழுபூசனிக்காயைச் சோற்றில் மறைப்பது" போலாம்

இன்னும் சிலர் சரித்திரத்துக்கும் கர்ணபரம்பரைக்கும் பேர் விரோதமாக பொல்லாப் பிள்ளையார் செய்தது தமிழ்ச் சிவஞான போதத்துக்கு அன்று ஆரியச் சிவஞான போதத்துக்கு என்று கூறுவார்கள்.

இவர்கள் எல்லாம் இது வரைக்கும் கொண்ட பழக்கத்தாலும் ஆரியத்தின்பேரில் வைத்த அபிமானத்தாலும் கூறுபவர்களேயொழிய வேறன்று.

சரித்திரத்தின் போக்கை கவனித்தால் இவ்வாறு கூற இடந்தருது. பரஞ்சோதி முனிவர் தவம் கைவந்த பெரியவரே. அவருடைய மாணாக்கராய் இருந்தபிற்பாடு ஆசங்கை ஏற்பட்டது என்றால் அவருக்கு ஓர் இழுக்கே. ஆனால் மெய் கண்டார் பொல்லாப் பிள்ளையாரிடம் சந்தேகம் நிவர்த்தி செய்து கொண்டது பொய்யா? என்றால் அதுவும் உண்மைதான், எப்படியென்றால் கூறுதும்.

பரஞ்சோதிமுனிவர் திருவெண்ணெய் நல்லூரிலேயே இருந்து மெய்கண்டாருக்குப் போதித்தார் இல்லை. அல்லது மெய்கண்டாருக்கு உபதேசம் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தவரன்று. அவர் திருக்கைலையினின்றும் யாதோ ஒருகாரியமாகத்தெற்குநோக்கித் திருவெண்ணெய் நல்லூர்வழியாகவந்தார். வந்தபோது மெய்கண்டாரைப் பார்த்தார். மெய்கண்டாரைத் திருவெண்ணெய் நல்லூரில் பொல்லாப்பிள்ளையார் ஆலயத்தில் சந்தித்தார். மெய்கண்டாருடைய பக்குவத்தை நோக்கி உடனே தீக்கையைச்செய்து சிவஞானபோதத்தை உபதேசித்துவிட்டு உடனேபுறப்பட்டுக்குறித்த இடம்சென்றார். பரஞ்சோதிமுனிவர் மூன்றுகாலமும்

அறியக்கூடிய வல்லமையுடையவர் ஆகையால் பின்னால்நடக்கக்கூடிய சங்கதிகளைச் செவ்வனே அறிந்தார் ஆகையால், மெய்கண்டாருக்குத் தமிழ்ப்பன்னிரண்டு சூத்திரங்களையும் தாம் கேட்டவண்ணம் சிந்தித்துக்கொண்டிருந்தார். சந்தேகம் நிகழப்பொல்லாப் பிள்ளையாரை வேண்டித்தவங்கிடந்தார். பொல்லாப்பிள்ளையார் 39 சூர்ணிக்கொத்துச்செய்து கொடுத்தார், 39-சூர்ணிக்கொத்தும் தமிழ்ப்பன்னிரண்டு சூத்திரங்களுக்கே. வடமொழிக்கல்ல வென்பதையாவரும் அறிவர். பரஞ்சோதிமுனிவர் அவ்விடம்தங்கியிருந்தால் அவரே சந்தேகமும் நிவிர்த்தி செய்திருப்பார், பரஞ்சோதிமுனிவரன்றிப் பொல்லாப்பிள்ளையார் செய்துகொடுப்பார் என்று தெரிந்தவர் ஆகையால் தம் காரியத்துக்குத்தடை ஏற்படாவண்ணம் உடனே போய்விட்டார் ஆகையால் மெய்கண்டாருக்குச் சந்தேகம் நிகழ்ந்தது பரஞ்சோதிமுனிவருக்கு இருக்கன்று.

இன்னும் சிலர் மெய்கண்டார் மொழிபெயர்க்கவில்லை மெய்கண்டார் செய்தது தமிழ்ப்பன்னிரண்டு சூத்திரங்களே அவருக்கு முன் சூத்திரரூபமாக இல்லை; அவர்காலத்தில்தான் சூத்திரங்கள் ஏற்பட்டன; வடமொழிச் சூத்திரங்கள் தமிழினின்றும் மெய்கண்டார்காலத்துக்குப்பின் ஏற்பட்டன என்று கூறுகிறார்கள்.

அப்படி மெய்கண்டார் தான் இப்போது இருக்கிற தமிழ்ப்பன்னிரண்டு சூத்திரங்களைச் செய்தார்; அதற்கு முந்திச் சூத்திரங்கள் இல்லை; பின் முந்தினவைகளைத்தான் சிவஞானபோதம் என்று கூறிவந்தார்கள் என்று கொண்டால், மெய்கண்டார் பொல்லாப்பிள்ளையாரை வேண்டித்தவங்கிடந்ததும், 39-சூர்ணிக்கொத்துக்களைப் பெற்றதும் பொய்யாகும்.

மெய்கண்டாரே தமிழ்ச்சூத்திரங்களைச் செய்திருந்தால் சந்தேகம் நிகழவும், 39-சூர்ணிக்கொத்துக்களைப் பெறவும் நியாயம் சிறிதும் இல்லை. ஆகையால் மெய்கண்டார் செய்யவில்லையென்று தெளியக்கிடக்கின்றது. ஆகையால், நான் மேலே கூறிய பிரகாரம் தமிழ்ப்பன்னிரண்டு சூத்திரங்களும் ஸ்ரீகண்ட பரமசிவத்திடத்திருந்து நந்தியெம்பெருமான் மூலமாய்ப் பரஞ்சோதி முனிவருக்குக் கிடைக்க, பரஞ்சோதிமுனிவர் தாம் ஏதும் அவசரத்தில் மெய்கண்டாருக்கு உபதே



சிக்க, பொல்லாப்பிள்ளையார் சூர்ணிக்கொத்துடனும் மெய்கண்டார் பொழிப்புரையுடனும் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியும், பெரியபுராணமும் போல், சிவஞானபோதமும், சூர்ணிக்கொத்தும், மெய்கண்டார் பொழிப்புரையும் ஒன்றற்கொன்று விரிவாயிற்று என்னலாம்.

ஆகையால் "மொழிபெயர்த்துச் செய்து" என்று பரஞ்சோதி முனிவர் கூறினதாகச் சொல்லுவது இடைநுழைப்பு என்று தெளிவாக ஏற்பட்டுவிட்டது. அவ்வார்த்தைகளை எடுத்துவிட்டால் "பரஞ்சோதிமுனிவர் மெய்கண்டதேவர் பால்வந்து சிவஞான போதத்தை நல்கி அதனை எண்ணில்லார் உணர்ந்து உய்தற்பொருட்டுப் பொழிப்புரைக்க" என்று சொன்னதாகக் கொள்ளவேண்டும். அப்படிக் கொள்வதுதான் சரியாயிருக்கின்றது.

சந்தான குரவர்களுடைய தோத்திரங்கள் பிற்காலத்தவரால் செய்யப்பட்டவை. அவைகள் இடைநுழைப்பு வசனங்களையொட்டிப்பாடப்பெற்றவை. ஆகையால் அவை பிரமாணமாகா.

இரௌரவாகமத்தில் இருப்பதானது "பாவனா தீக்ஷையாலே இவனை (சீடனை) விதிப்பிரகாரம் சுத்தனாக்கி, பத்திய சிந்தனைத்துக் குரிய சிவஞானபோத சாஸ்திரத்தை (அவனுக்கு) ஆசாரியர் கொடுக்க" என்பதே இப்போது கிரந்தாக்ஷரத்தில் உள்ள ஆகமங்களின் பாகங்கள் எல்லாம் ஆரியர்கள் தங்கள் உபயோகத்திற்காக எழுதி வைத்துக்கொண்டவைகளே என்று முன்னமே கூறியிருக்கின்றேன். ஆங்கிலேயன் ஒருவன் சைவமதத்தை அனுஷ்டிப்பானாகில் சைவாசாரங்கள் தெரியவேண்டுமானால் தனக்குத் தெரிந்துகொள்ளச்சங்கதிகளை இங்கிலீஷில்தான் குறித்துவைத்துக் கொள்ளுவான். அவன் "Rouravagamam" என்றதலைப்பின் கீழ் "When the Spiritua Teacher handed over Sivaganam - Botha to his desciple' என்று எழுதியிருந்தால் இங்கிலீஷில்தான் முதலில் சிவஞானபோதம் இருந்தது என்று கூறிவிடலாமா? அதுபோல் 4000-வருடங்களுக்கு முன் இந்நாட்டிற்கு வந்த ஆரியர்கள் தென்னாட்டிற்கு வந்து தமிழர்களுடன் கலந்து சைவாசாரங்களை அனுஷ்டிக்க ஆரம்பித்தபோது

தமிழிலுள்ள சங்கதிகளை கிரந்தத்தில் எழுதிவைத்துக்கொண்டார்கள், அவைகளே இப்பொழுதுள்ளன. அதனால், சமஸ்கிருதத்தில் தான் சிவஞானபோதம் இருந்தது என்று சொல்லுவது எப்படி. ஆகையால் அந்த ஆதாரமும் வலியில்லாமல் போயிற்று.

வேதாகமங்கள் தமிழிலேயே இருந்தன என்பதற்கு ஆதாரங் கூறுதும். முற்காலங்களில் அதாவது ஆரியர் ஆட்சிக்கு வருவதற்கு முன் கோவில்களில் தமிழ்வேதமே ஓதிக்கொண்டு வரப்பட்டன. இப்போதும் சமயாசாரிகளுடைய தேவாரங்களை (தமிழ்வேதம்முறைக் கட்ட பிற்பாடு) ஓதுகிறார்கள். ஆரியர்களுடைய ஆட்சியில் ஆரியவேதமாகிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணவேதங்களையும் கோவில்களில் ஓதத்தலைப்பட்டார்கள். அப்படி ஆரிய வேதங்களை ஓதுவது சைவர்களுக்கு ஒப்பவில்லை. அது திருமாளிகைத்தேவர் திருவிசைப்பாவால் நன்றாய் வெளியாகிறது, அது வருமாறு:—

"திசைக்குமிக் குலவு சீர்த்தித் தில்லைக்கூத் துகந்துதீய
கசிக்கவெண் ணீறு தாடு நமர்களை நணுகா நாய்கள்
அசிக்க ஆரியங்கள் ஓதும் மாதரைப் பேதவாதப்
பிசுக்கரை காணுகண்வாய் பேசாதப் பெய்களோடே."

ஆகையால் இதுகாறுங் கூறிய வாற்றால் இப்போது கிரந்தலிபியில் இருக்கும் ரௌரவாகமத்திற்கூறிய சிவஞானபோதம் தமிழ்ச்சிவஞானபோதமே யொழிய வேறன்று.

இனி, சித்தாந்தம்தொகுதி 3. பக்கம் 100-முதல் 112வரையுள்ள விஷயங்களைப்பற்றிச் சிறிது கூறுவாம்.

(தொடரும்.)

ஆடி-சைகிழார்-அ-சிதம்பரனார்.

---

# மும்மூர்த்திகள்.

மக்கள் பண்டைக்காலத்திலிருந்தே தங்களினும் மேலான ஒரு பொருள் இருக்கின்றதெனக் கருதி அப்பொருளை வழிபட்டு வரும் இயல்புடையரா யிருக்கின்றார்கள். எந்தப் பொருள் மனிதர்களுடைய ஆன்ம உணர்ச்சியை எழுப்பி விட்டு அவர்களைச் சிந்திக்கும் படியும், நன்மார்க்கத்தில் ஒழுக்கும் படியும் செய்கிறதோ, எந்தப் பொருள் ஒவ்வொருவருடைய மனோபாவக உணக்கிசைந்து ஒவ்வொரு விதமாய்த்தோன்றி அவர்கள் ஒவ்வொருவரும் தாந்தாம் கொண்டதே உண்மையென மருண்டு தம்முள் போரியற்றி நிற்கத் தான்மாத்திரம் சாட்சி மாத்திரையாய்த் துலங்குகின்றதோ, எந்தப் பொருள் தூலரூபமாய் அறிந்திடுதற்கும் சூக்கும ரூபமாய் உணர்ந்திடுதற்கும் ஏலாதவாறு இரண்டு மற்ற நிலையிலிருந்துகொண்டு ஒரு சிலர் உருவம் என்று வழக்கிடுதற்கும் வேறு சிலர் அருவம் என்று வாதிடுதற்கும் இடந்தந்து நிற்கின்றதோ, எந்தப் பொருள் எல்லா ஆற்றலும் எல்லா அறிவும் நிரம்பியதாய் உலகத்தோடு கலந்து அதனை அசைவித்து உயிர்களோடு கலந்து அவைகளை அறிவித்தும் வருகின்றதோ, அந்தப் பொருளே மேலான பொருள் என்று மக்களாற் கருதப்படும் பொருளாம்—அதுவே கடவுள் என்று அழைக்கப்படும் பரம்பொருளாம்.

இனி, இந்தக் கடவுள் என்னும் செம்பொருள் ஒன்று அல்லது பலவா எனின், ஒன்றேயாம். பலவென்று கூறலாகாதோ வெனின்,—ஆகாது. ஏனெனில் ஒன்றுக்குமேல் இரண்டு பொருள் இருப்பின் ஒன்றைவிட மற்றொன்று ஆற்றல் மிகுந்ததாயிருக்கும். ஆற்றல் மிகுந்தபொருளால் மற்றொருபொருள் தாழ்வெய்து மாதலால், அப்பொருள் கடவுள் என்று அழைக்கப்படுதற்குச் சிறிதும் உரியதன்றாம். ஏனெனில் எல்லா அறிவும், எல்லா ஞானமும், எல்லா இன்பமும் எல்லா ஆற்றலும் ஒருங்கே வாய்க்கப் பெற்றதாய்த் தான் ஒன்றனுள் அடங்காமல் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு நிற்கும் பொருள் கடவுள் எனப் பெயர்பெறுமே தவிர ஏனைய பொருள்கள் அப்பெயர் பெறுதற்கு உரியவாகா "இரண்டு பொருள்கள் எல்லா வகையினும் தம்முள் ஒத்த தன்மையவாய்க் காணப்படு

இல்லை" என்பது தருக்க நூற் றுணிபு,—தற்கால பூதபௌதிக சாஸ்திரங்களால் உறுதியிடப்பட்ட உண்மை. ஆகவே இரண்டு கடவுள் உண்டென வைத்துக்கொண்டோமானால் ஒன்றைவிட மற்றொன்று ஆற்றல் மிகுந்ததெனக் கொள்ள நேரிடும். அங்ஙனம் நேர்ந்திடின் ஆற்றல் மிகுந்தது கடவுள் என்றும், மற்றொன்று கடவுள் அன்றென்றும் முடிவு செய்திடுதல் வேண்டும். இரண்டும் சமமான ஆற்றலுடையது என்று வைத்துக்கொண்ட போதிலும் "ஒன்றினால் ஆகக்கூடிய காரியந்தானே மற்றொன்றாலும் ஆகமுடியும்? இதற்கு இரண்டு எதற்காக?" என்று வினவுவார்க்குப் பதில் கூற முடியாமல் தயங்க நேரிடுகிறது. ஆகவே கடவுள் ஒன்று என்று கொள்ளலே பொருத்தமுடைத்தாம்.

"அங்ஙனமாயின் இந்துக்களாகிய நம்முடைய மதநூல்களில் பிர்மா, விஷ்ணு, சிவன், என்னும் மூன்று கடவுளர்களைப்பற்றிய பிஸ்தாபம் வரக்காரணம் யாது? சிருஷ்டித் தொழிலாகிய படைத்தலை நான்முகனும், திதித் தொழிலாகிய காத்தலை நாராயணனும், சங்காரத்தொழிலாகிய அழித்தலை உருத்திரனும் முறையே இயற்றிவருகிறார்கள் என்று புராணங்கள் கூறுகின்றனவே? அங்ஙனம் கூறுதற்குக் காரணம் என்ன? மூன்றும் ஒரே கடவுளா, ஒன்றுபின் மூன்று பெயர்கள் எதற்காக? மூன்றுபின் ஒரே கடவுள்தான் உண்டெனக்கூறுதல் யாங்ஙனம் பொருந்தும்?" என்னும் இவைபோன்ற பல ஆசங்கைகளை ஒருவாறு தீர்த்திடுவான் கருதியே இவ்வியாசம் எழுதப்படுகிறதென்பது.

நம்முடைய கட்புலனுக்குக் காணப்படுகின்ற இந்தநிலவுலகத்தில் இரண்டுவிதமான சக்திகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவையாவன; அறிவுள்ளசேதன வஸ்துவின் இயக்கம் ஒன்று, அறிவற்ற அசேதன வஸ்துவின் இயக்கம் மற்றொன்று. அறிவுள்ள சேதன வஸ்துவின் இயக்கத்தைச் சிற்சக்தி என்றும், அறிவற்ற அசேதன வஸ்துவின் இயக்கத்தைச் சடசக்தி என்றும் ஆன்றோர் வழங்குவர். இவை முறையே 'புருஷன்' 'பிரகிருதி' என்றும் சொல்லப்படும். இவைகளை மேனாட்டுத் தத்துவசாஸ்திரிகள் முறையே 'Intelligent Active Force' என்றும் "Blind Passive Force" என்றும் கூறுவர். இந்த இரண்டு சக்திகளின் இயக்கம் இல்லாவிடில் இவ்வுலகில் ஒன்றுமே நடைபெறாது.



இவ்விரண்டு விதமான சக்திகளுள் முதலில் சடசக்தியை நாம் எடுத்துக்கொள்ளுவோம். சடப்பொருளாகிய இப்பிரபஞ்சத்திற்கு மூன்றுவிதமான நிலைகள் உள. அவையாவன:- 1. ஸ்தூல நிலை 2. சூக்கும நிலை 3 காரணநிலை. நம்முடைய கட்புலனுக்கு விவிதபேதங்களோடு ஸ்தூலாகாரமாய்க் காணப்படும் பிரபஞ்சம் இச்சமயம் எந்நிலையிலிருக்கிறதோ அந்நிலையே ஸ்தூல நிலையாம். இந்த நிலையின் நுட்பமே சூக்குமநிலையாம் மாயையில் ஒடுங்கி நிற்கும் நிலையேகாரண நிலையாம். சைவசித்தாந்த முறைப்படி பரமாணுக்களினும் நுண்ணிதாயுள்ள சடவஸ்துவே மாயை என்று சொல்லப்படும். இந்த அதி நுட்பமாகிய வஸ்துவே பிரகிருதி மாயை என்னும் சொல்லப்படும். சடசக்தியாகிய பிரகிருதியும் சிற்சக்தியாகிய புருஷனும் ஒன்றோடொன்று கலப்புறுவதனாலேயே பிரபஞ்சம் தோன்றி, நின்று, அழிகின்றது.

இவ்விரண்டு சக்தியையும் கலப்பதனால் உண்டாகும் இயக்கமே புருஷப்பிரகிருதி (Spirit-matter) என்று சொல்லப்படும். இவை இரண்டும் ஒன்று சேருங்கால், பிரகிருதியில் மூன்றுவித நிலைகள் ஏற்படுகின்றன. அவையாவன:- 1. சத்துவம் 2. இராசதம் 3. தாமதம். இம்மூன்று நிலைமைகளுக்கு ஏற்பவே சிற்சக்தியிலும் மூன்று நிலைகள் உள.

இவ்வுண்மையை விளக்குவதற்காகத்தான் இராசத குணத்தால் பிர்மா பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தாரென்றும், சத்துவ குணத்தால் விஷ்ணு பிரபஞ்சத்தைக் காக்கின்றார் என்றும், தாமதகுணத்தால் சிவன் பிரபஞ்சத்தை அழிக்கின்றார் என்றும் நம்முடைய புராணங்கள் உருவகப்படுத்திக் கூறியிருக்கின்றன. இதிலிருந்துநாம் அறிந்துகொள்ளவேண்டிய தத்துவார்த்தம் யாது? புருஷப் பிரகிருதியின் மூன்றுவிதமான நிலைமைகளை—அதாவது உலகம் சிருஷ்டிக்கப்படும்போது அது நிற்கும் நிலையும், காக்கப்பட்டு வரும்போது அது நிற்கும்நிலையும், இனி அழிக்கப்படும்போது அதுநிற்கும் நிலையும்—பிர்மா, விஷ்ணு, உருத்திரன் என்று உருவகப்படுத்தப் பட்டிருக்கின்றனவென்பதே. உலக சிருஷ்டி என்பது கட்புலனுக்குத் தோன்றாமல் அதி சூக்குமநிலையில் பிரிந்து பிரிந்து நிற்கும் பரமாணுக்கள் ஒன்று சேர்ந்து கட்புலனுக்குத் தோன்றும்படியான ஸ்தூலரூபத்தை அடை

தலாம். இவ்வணுக்கள் ஒன்று சேருவதற்கு மிகவேகமான இயக்கம் வேண்டும். ஒரு காரியத்தை விரைவாயும் ஊக்கமாயும் செய்துமுடிப்பது இராசதகுணத்தின் இயல்பாதலால், சிருஷ்டி கடவுளான பிர்மாவுக்கு இராசதகுணம் கற்பித்தும், ஒன்றை இரட்சித்து வருவதற்கு அமைதியும் சாந்தமும் அவசியமாதலால், அக்குணங்களை இயல்பாகக் கொண்ட சத்துவ குணத்தை இரட்சிக்கும் கடவுளான விஷ்ணுவுக்குக்கற்பித்தும், ஒன்றையழிக்கும் குணம் தாமதகுணத்தின் இயல்பாதலால் சங்கார கிருத்தியத்திற்குரிய சிவபெருமானுக்கு அக்குணத்தைக் கற்பித்தும் நம் புராணங்கள் கூறியிருப்பதானது மிகவும் பொருத்தமுடையதாம் என்க. ஆகவே, படைத்துக் காத்து அழிக்கும் சக்திகளே பிர்மா, விஷ்ணு, சிவனென உண்மை நூல்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன: இம்மூன்றும் வெவ்வேறு சக்திகளோ எனின்; அன்று. மற்று யாதோவெனின்;—ஒரே சக்தியின் மூன்று விதமான நிலைகள் என்று உணர்க.

இதனை ஒரு சிறு உதாரணமுகத்தால் விளக்குவாம். இராமன் என்னும் பெயருடையான் ஒருவன் நியாயவாதியாயும், போதகாசிரியனாயும், உபந்நியாசகனாயும் இருக்கின்றான் என்று நாம் வைத்துக்கொள்ளுவோம். அவன் வீட்டிலிருக்கும்போது அவனை இராமன் என்று எல்லோரும் அழைக்கின்றார்கள். நியாயஸ்தலத்திலிருக்கும்போது நியாயவாதி என்று அங்குள்ளார் கூறுகின்றார்கள். அவன் கல்வி பயிற்றுவிக்கும்போது போதகாசிரியர் என்று மாணாக்கர்கள் அவனை அழைக்கின்றார்கள். பகிரங்கத்தில் பேசும்போது அவனை உபந்நியாசகர் என்று பொது ஜனங்கள் சொல்லுகிறார்கள். அங்ஙனம் ஒரே மனிதன் அவன் செய்யும் தொழிலுக்கு ஏற்ப அவ்வச்சமயங்களில் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்படினும் உண்மையில் உள்ள மனிதன் ஒருவனே,—அப்பெயரெல்லாம் அவனையே குறிக்கின்றன. அஃதேபோல் எல்லாம்வல்ல இறைவன் சிருஷ்டித் தொழில் செய்யும்போது பிர்மாஎன்றும், காத்தற்றொழில் புரியும்போது விஷ்ணுவென்றும் சங்கார கிருத்தியஞ் செய்யும்போது சிவன் என்றும் அழைக்கப்படுகின்றார். ஆனாலும் கடவுள் ஒருவரே,—அம்மூன்று பெயர்களும் அவர் ஒருவரையே குறிக்கின்றன. இவ்வுண்மையை வலியுறுத்தவே,



"ஒருருவாயினை மானாங்காரத்
தீரியல்பாயொரு விண்முதல் பூதல
மொன்றிய விரிசுடரும்பர்கள் பிறவும்
படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினை".

என்று ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமானும் திருவாய்மலர்ந்தருளினர்.

"செழும் தேவர் கோவறியாத தேவதேவன்
மற்றை பொழில்கள் பயந்து காத்தழிக்கும்
மூவர்கோனாய் நின்ற தனிமுதல்வன்"
"ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ."

என்னும் தமிழ்வேதத் திருவாக்குகளும் இக் கருத்துப்பற்றியே எழுந்தன.

உண்மை இவ்வாறிருப்பவும் அதனை உணராது, பல கடவுளர் இருப்பது போற்கொண்டு, "விஷ்ணுவே உயர்ந்தது" என்று வைணவர்களும் "சிவமே உயர்ந்தது" என்று சைவர்களும் தம்முள் தருக்கையாடி வீண்வாதம் புரிதல் பெரியதோர் அறியாமையாகும். இங்ஙனம் மதப்போர் விளைவிப்பதால் ஜனசமூகத்தில் ஒற்றுமையும் அன்புரிமையும் குறைதற்கு இடமுண்டாகின்றதேயன்றி வேறு நற்பயன் ஏதும் விளைவதாயில்லை.

நாகை—வி. கோபாலகிருஷ்ணன்.

தலாம். இவ்வணுக்கள் ஒன்று சேருவதற்கு மிகவேகமான இயக்கம் வேண்டும். ஒரு காரியத்தை விரைவாயும் ஊக்கமாயும் செய்துமுடிப்பது இராசதகுணத்தின் இயல்பாதலாலே, சிருஷ்டி கடவுளான பிர்மாவுக்கு இராசதகுணம் கற்பித்தும், ஒன்றை இரட்சித்து வருவதற்கு அமைதியும் சாந்தமும் அவசியயாதலால், அக்குணங்களை இயல்பாகக் கொண்ட சத்துவ குணத்தை இரட்சிக்கும் கடவுளான விஷ்ணுவுக்குக்கற்பித்தும், ஒன்றை அழிக்கும் குணம் தாமதகுணத்தின் இயல்பாதலால் சங்கார கிருத்தியத்திற்குரிய சிவபெருமானுக்கு அக்குணத்தைக் கற்பித்தும் புராணங்கள் கூறியிருப்பதானது மிகவும் பொருத்தமுடையதாம் என்க. ஆகவே, படைத்துக் காத்து அழிக்கும் சக்திகளே பிர்மா, விஷ்ணு, சிவனென உண்மை நூல்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன; இம்மூன்றும் வெவ்வேறு சக்திகளோ எனின்; அன்று, மற்று யாதோவெனின்;—ஒரே சக்தியின் மூன்று விதமான நிலைகள் என்று உணர்க.

இதனை ஒரு சிறு உதாரண முகத்தால் விளக்குவாம். இராமன் என்னும் பெயருடையான் ஒருவன் நியாயவாதியாயும், போதகாசிரியனாயும், உபந்நியாசகனாயும் இருக்கின்றான் என்று நாம் வைத்துக் கொள்ளுவோம். அவன் வீட்டிலிருக்கும்போது அவனை இராமன் என்று எல்லோரும் அழைக்கின்றார்கள். நியாய ஸ்தலத்திலிருக்கும்போது நியாயவாதி என்று அங்குள்ளார் கூறுகின்றார்கள். அவன் கல்வி பயிற்றுவிக்கும்போது போதகாசிரியர் என்று மாணாக்கர்கள் அவனை அழைக்கின்றார்கள். பயாங்கத்தில் பேசும்போது அவனை உபந்நியாசகர் என்று பொது ஜனங்கள் சொல்லுகிறார்கள். அங்ஙனம் ஒரே மனிதன் அவன் செய்யும் தொழிலுக்கு ஏற்ப அவ்வச்சமயங்களில் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்படினும் உண்மையில் உள்ள மனிதன் ஒருவனே,—அப்பெயரெல்லாம் அவனையே குறிக்கின்றன. அஃதேபோல் எல்லாம்வல்ல இறைவன் சிருஷ்டித் தொழில் செய்யும்போது பிர்மாஎன்றும், காத்தற்றொழில் புரியும்போது விஷ்ணுவென்றும் சங்கார கிருத்தியஞ் செய்யும்போது சிவன் என்றும் அழைக்கப்படுகின்றார். ஆனாலும் கடவுள் ஒருவரே,—அம்மூன்று பெயர்களும் அவர் ஒருவரையே குறிக்கின்றன. இவ்வுண்மையை வலியுறுத்தவே,



"ஒருருவாயினை மானுங்காரத்
தீரியல்பாயொரு விண்முதல் பூதல
மொன்றிய விரிசுடரும்பர்கள் பிறவும்
படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினை".

என்று ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமானும் திருவாய்மலர்ந்தருளினர்.

"செழும் தேவர் கோவறியாத தேவதேவன்
மற்றை பொழில்கள் பயந்து காத்தழிக்கும்
மூவர்கோனாய் நின்ற தனிமுதல்வன்"
"ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ."

என்னும் தமிழ்வேதத் திருவாக்குகளும் இக் கருத்துப்பற்றியே எழுந்தன.

உண்மை இவ்வாறிருப்பவும் அதனை உணராது, பல கடவுளர் இருப்பது போற்கொண்டு, "விஷ்ணுவே உயர்ந்தது" என்று வைணவர்களும் "சிவமே உயர்ந்தது" என்று சைவர்களும் தம்முள் தருக்கையாடி வீண்வாதம் புரிதல் பெரியதோர் அறியாமையாகும். இங்ஙனம் மதப்போர் விளைவிப்பதால் ஜனசமூகத்தில் ஒற்றுமையும் அன்புரிமையும் குறைதற்கு இடமுண்டாகின்றதே யன்றி வேறு நற்பயன் ஏதும் விளைவதாயில்லை.

நாகை—வி. கோபாலகிருஷ்ணன்.

# சிவாநுக்கிரகவியல்பு.

சிவபெருமானை உருவமாக விளங்கும்பொழுது காணக்கூடுமன்றி, அருவமாயிருக்கையில் அறியவல்லவர் யாவர்? ஒருவருமிலர். வேதசாரத்தை யுணர்ந்த புத்திமான்களே! விறகிற்பற்றி யெரிகின்ற தீயைக்கண்டு தீயின்ஸ்வரூபாதிகள் இத்தன்மையனவென் றுணரலாமன்றி, அவ்விறகில் அந்தர்க்கதமாக விளங்கும் அக்கினியைக்காணவல்லவர்களில்லை. பரம்பொருளாகிய சர்வேசுவரன் அருவமாகவேயன்றி ஆன்மகோடிகளீடேறும்பொருட்டுச் சதாசிவன் மகேசன் உருத்திரன் விண்டு பிரமன் முதலிய மூர்த்தியாகித் திருவருள்புரிகின்றனன். அந்தக்கடவுள் பிரமன் முதலிய ஜீவகோடிகள்செய்த பாவங்களொழியும்படி தண்டங்களை அவரவர்கள் குற்றத்திற்கேற்பச் செய்கின்றனன். இந்த நியாயத்தாலல்லவோ அரசர்கள் குற்றஞ்செய்த பிரஜைகளைத் தண்டிக்கிறார்கள். குற்றஞ்செய்தோரைத் தண்டித்தலால் மன்னவருக்குச் சிறிதுந்தோஷமில்லை. பிதாவானவன் பிசகான காரியங்களைச்செய்த புதல்வரைத்தண்டிப்பது அவர்கள் பேரில்வைத்த அன்பினாலன்றி வேறன்று. அதுபோலவே கருணாமூர்த்தியாகிய எம்பெருமான் அவர்களுடைய பந்தங்களை யகற்றும்படி தண்டங்களைச்செய்து, தன் கிருபாநோக்கத்தைச் செலுத்துகின்றான். துன்புறுத்துகின்ற கட்டிமுதலிய நோயுற்றவனுடைய அந்தப்பாகத்தை யரிந்தாவது சுட்டாவது வைத்தியன் ஒழிப்பதுபோலத் தயாமூர்த்தியாகிய சங்கரன் ஆன்மாக்களுடைய வினையொழியும்படி வருத்தப்படுத்திப் பின்னர் அவ்வருத்தத்தையு மொழிப்பான். பலமூர்த்திகளாக அந்தப்பகவான் விளங்கினும் ஆசைமுதலிய தீமைகளையடையான். குற்றமுள்ள பொருள்கள் எல்லாவற்றையுங் கொளுத்திச் சாம்பராக்குந் தீயினுக்கு அக்குற்றஞ் சிறிது மில்லாதிருப்பதுபோலவே வினைச்சம்பந்தத்தை யொழிக்கும் ஈச்சுரனுக்குச் சிறிதும்வினையென்பது சம்பந்தப்படமாட்டாது. நெருப்பானது இரும்புமுதலிய உலோகங்களைச் சுடுவதுபோல ஈச்சுரன் எல்லா மூர்த்திகளையுந் தந்தமக்கியன்றவாறொழுகச்செய்கின்றான். அந்தப்பகவான் சர்வவியாபியாக எல்லாப் பொருள்களிலும் விளங்குகின்றானதலின், அந்த ஈசுவரனை மண், கல், மரம், மணிமுதலிய வெல்லாப் பொருள்களிலும்



பூசிக்கத்தகும். தத்தமக்கியன்ற ஒரு பொருளில் அர்ச்சித்தவர்கள் இஷ்டசித்திகளையடைவார்கள். சித்தும் அசித்துமாகிய பொருள்களை யொன்று சேர்த்தாலும் அவைகட்குள்ள குணங்கள் மாறுபடா. எதுபோலெனிற் சூரியனுதிக்கத் தாமரை விரிதலும், அதனோடுள்ள பிறமலர்கள் விரியாமையும்போலுமென வுணர்வீர்களாக. மலசம்பந்திகளுக்குச் சிவபெருமான் ஒருகாலத்திலும் மோக்ஷத்தைக்கொடுக்கமாட்டான். மலத்தை யொழித்தவர்கட்கே சிவபெருமான்மோக்ஷத்தைக் கொடுப்பான். ஆனாற் சிவபெருமானுக்கு அம்மலங்களில்லை. மலமானது ஆன்மாக்கட்கேயுரியது. ஆதலின்சீவன் இன்பதுன்பங்களையனுபவிக்க மாயாசம்பந்தத்தாற் கருமங்களைச்செய்யும். கருமமாயைகளின் அநுபந்தமான சமுசாரம் ஜீவனுக்கேயன்றிச் சிவனுக்கு எவ்வளவுங்கிடையாது. ஜீவனுக்குச் சுதச்சித்தமாகத் தானேவர்த்திக்கதோர் பலமுள்ளது. அது தானே வருமாயினுங் காரணநிமித்தமாக வரக்கூடியது. அக்காரணம் ஒன்றாயினும் பலசக்திகளுண்டாதாகவிருக்கும். கருமமாயைகள் சிவனுக்குச் சிறிதுமில்லை. ஆன்மாவானது யாவர்க்குஞ் சமானமாயிருப்பினும், சிலர் பந்தமுடையவர்களும், சிலர் முக்தர்களும், சிலர் பரர்களுமாயிருக்கிறார்கள். சிலர் லயபோகாதிகாரிகளாய் ஞானைசுவரியாதிகளின் தாரதம்மியங்களையடைகிறார்கள். சிலர் மூர்த்திகளாகிறார்கள். அன்றியுஞ்சிலர் சிவசொரூபிகளாய் அத்துவாக்களின் சிரசிலிருப்பார்கள். சிலர் மகேசர்களாய் அத்துவாக்களி னிடையிலிருக்கிறார்கள். சிலர் உருத்திரர்களாய் அத்துவாக்களி னடியிலிருக்கிறார்கள். மாயாசம்பந்தமற்றுச் சிவசந்நிதியிலிருப்பவர்களில், ஆத்மஸ்வரூபங் கீழேயும், அந்தராத்மஸ்வரூபமத்தியிலேயும், பரமாத்மஸ்வரூபம் மேலேயும் விளங்கிப்பிரமவிஷ்ணு ருத்திரர்களென்று சொல்லப்படுவோர்கள். இம்மூன்றுபதவிகளில் அநேகர் வசிக்கிறார்கள். சாந்தியதீதபதவியிற் சைவர்களும், சாந்திபதத்தில் மகேசர்களும், வித்தியாபதத்தில் உருத்திரபக்தர்களும், பிரதிஷ்டாபதத்தில் விண்டுபக்தர்களும், நிவிர்த்திபதத்திற் பிரமபக்தர்களும் வாழ்வார்கள். இவையே தேவயோனி யஷ்டகமாம். இவையே உச்சஸ்தானத்திலிருப்பனவும் உத்தமமுமாம். ஒன்பதாவது மானுடயோனி. அது மத்தியிலிருப்பதும் மத்திமமுமாம். பசு யோனிகள் ஐவகை. அவை தாழ்விலிருப்பனவும் அதமமுமாம். ஆகப்பசுவர்க்கம் பதினான்கு வகைப்படும், ஜீவனுக்கு மலத்தின்

ஏற்றக்குறைவுகளால் இவ்வகைய யோனிகள் உண்டாகின்றன. சமுசாரகாரணமான மலங்கள் ஆமமென்றும் பக்குவமென்றும் இருவகைப்படும். ஆமமலத்தால் ஜீவர்களுக்குத் தாழ்ந்தயோனியும், பக்குவமலத்தால் உத்தமயோனியுஞ் சம்பவிக்கும். பசுக்களாகிய ஜீவர்களுக்குள் ஒருமலமுடைமையிலும் இருமலமுடைமை தாழ்ந்தும், இருமலமுடைமையினும் மும்மலமுடைமை தாழ்ந்தும், உத்தமமத்திம அதமர்களாவார்கள். இம்மூவகையினரைக்காட்டிலுஞ் சாம்பவமூர்த்தியே சிறந்தவன். உருத்திராத்மகமான இந்தஜகமானது உருத்திரனால் அதிஷ்டிக்கப்பட்டுள்ளது. ஜீவஸ்வரூபமான வெல்லாவற்றையுஞ் சிவபெருமானே யதிஷ்டித்துள்ளன். அண்டாந்தமான பூமியானது சதருத்திரர்களால் அதிஷ்டிக்கப்பட்டுள்ளது. மாயாந்தமான அந்தரிக்ஷமானது அமரேசனாதி யுருத்திரர்களால் அதிஷ்டிக்கப்பட்டுள்ளது. அங்குஷ்டமாத்திரமான ஜீவர்களால் யாவும் வியாப்தமாயிருக்கின்றன, மகாமாயாவசானாதிகளான புவனாதிபதிகளும் அத்துவாக்களிலுள்ளவர்களுமாகிய தேவர்களால் யாவும் அதிஷ்டிப்படாவிடினும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரால் அதிஷ்டிக்கப்பட்டும், யாவும் சாம்பவமூர்த்தியால் அதிஷ்டிக்கப்பட்டும் விளங்கும். இவ்வகை மூவகை மலசம்பந்தத்தால் ஜீவர்களுக்குச் சமுசாரமென்னும் நோய் உண்டாகின்றது. அந்தச் சமுசாரரோகத்தை யொழிப்பதற்குச் சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தாலுண்டான சிவஞானமே பரமௌஷதம். நோயாளிக்கு வைத்தியன் அந்நோயைத் தீர்ப்பதுபோல பரமகாருண்யனான சர்வேசன் சமுசாரரோகிக்கு நியாமகனாயிருந்து, அநாயாசமாக அதையொழித்துச் சுகப்படுத்துகின்றான். துக்கமுண்டாவதற்குச் சமுசாரமேகாரணம், க்ஷமமுந் துக்கமுஞ் சுபாவமாகவே யுண்டாகும். ரோகமானது வைத்தியனால் உண்டாக்கப் படாதது போலன்றிச் சர்வேசனாலேயே சமுசாரபந்தங்களுண்டாக்கப் படினும், அந்தப்பகவானுக்கு ஒருதோஷமு முண்டாகாது. அவை சுபாவமாம், சமுசாரகாரணமான மலமே மாயை. அது அசேதனமானது. அது இரும்பைக் காந்தமிழுப்பதுபோல, சிவபெருமான் சந்நிதிமாத்திரமே ஸ்வயமாகத் தொடருகின்றது. அம்மாயையை யொழிப்பதற்குச் சாந்நித்தியமே காரணம். சிவபெருமானுடைய கட்டளையின்றி யாதொருகாரியமும் நிகழமாட்டாது. யாவுஞ்சர்வேசனாற் செய்யப்படுமாயினும், சுகதுக்கங்கட்காக நிந்திக்கப்படத் தக்கவனல்லன். சர்



வேசனுடைய சக்தியே சர்வதோமுகியாயுள்ளது. அந்தச்சக்தியால் எல்லாப்பிரபஞ்சமும் வியாப்தமாயிருப்பினும், சர்வேசன் தூஷிக்கத் தக்கவனல்லன். அநாதியாக எல்லாப் பிரபஞ்சமும் ஈசுவரனுக்கு அடங்கியதாகவும், ஈசுவராக்ஞாரூபமான சக்தியே பிரபுவாகவுடையதுமாயிருத்தலின், ஈசுவரன் தூஷிக்கப்படமாட்டான். ஈசுவரசக்தியாலுண்டாகும் மலசம்பந்தமான சமுசாரபந்தத்தை அந்த ஈசுவரனாலேயே யுண்டாகிறதென்றும், அவனே தூஷிக்கத்தக்கவனென்றும் நினைக்கின்ற துன்மதியுடையவன் அஜ்ஞானத்தால் நசிக்கின்றான். ஞானமானது பரோக்ஷமென்றும் அபரோக்ஷமென்றும் இருவகைப்படும். அதில் பரோக்ஷஞானம் ஸ்திரமில்லாததென்றும், அபரோக்ஷஞானம் ஸ்திரமானதென்றுந் தெரிந்துகொள்ள வேண்டும். அநேகமான காரணங்களாலுண்டாவது பரோக்ஷஞானம். சிரேஷ்டமான அநுஷ்டானத்தாலுண்டாவது அபரோக்ஷஞானம். அபரோக்ஷஞானத்தை விடுத்தால் மோக்ஷம் ஒருகாலத்திலுஞ் சித்திக்காதென்று மனதிற்கொண்டு ஜாக்கிறதையாக அநுஷ்டானங்களைப் பிரயத்தனப்பட்டுச் சம்பாதிக்கவேண்டும்.'' இவ்வுண்மை வாயுசங்கிதையில் விசிதமாம்.

வா. தி. கோவிந்தராஜமுதலியார்.

# அறியாவினா.

சித்தாந்த பத்திரிகாசிரியரவர்கட்கு வந்தனம்

ஐய!

நானொரு வைணவச்சிறுவன், தாங்கள் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் சம்பந்தமாக வெளியிட்டுவரும் "சித்தாந்தம்" என்னும் பத்திரிகையை மூன்றுவருடங்களாக நன்கு கவனித்துப்படித்துவருகிறேன். அப்பத்திரிகையிற் குறித்த "அத்துவிதம்," "சதுர்த்தம்" "சித்தாந்தம்," "மகாவாக்கியம்" முதலிய அரியவிஷயங்களும், மற்றும்பல மேதாவியர்கள் எழுதிவரும் அரியபெரிய விஷயங்களும் சுருதி யுக்தி அநுபவங்கட்குப் பொருத்தமாகவே யுள்ளன. அன்றியும், தாங்கள் மொழிபெயர்த்தெழுதிய "சரபோபநிஷத்து," "அதர்வசிகோபநிஷத்து," "பஞ்சபிரமோபநிஷத்து," "இவைகளில்கண்ட "பிரமம்," "பிரண

வம்," "அட்சரம்," "புருஷன்," முதலிய பதங்கட்குச் சிவபெருமானே பொருளெனச் சுருதிப்பிரமாணங்களுடன் தாபித்தவற்றையும் தேர்ந்தேன். பின்னர் பிரமஸ்ரீ காசிவாசி செந்திநாதையரவர்கள் அச்சிட்ட ஸ்ரீநீலகண்டபாஷியம், ஸ்ரீமத் நல்லசாமிப் பிள்ளையவர்களியற்றிய The Study ஸ்ரீமத்சபாரத்தின முதலியாரவர்களியற்றிய Essential of Hinduism ஆகியநூல்களை யழைப்பித்துப்படித்தேன். தாங்கள் இயற்றிய "பகவத்கீதார்த்தபங்கம்," தங்கள் மாணவர் இயற்றிய "வேதாந்தபுண்டர விசாரம்" முதலியவற்றையும் பார்வையிட்டேன். இத்தகைய வெனது ஆராய்ச்சியால், வேதசம்மதமானசமயம் வைதிக சைவமே யெனத் தீர்மானித்தேன். விபூதி உருத்திராட்சம் பூண்டேன், கண்ணபிரான் எனும் இயற்பெயரை மாற்றிக் கண்ணப்பன் ஆயினேன். இனி சமய சமஸ்காரமும் விசேட தீட்சையும் பெறத் திருவருளை நாடிச் சமயம்பார்த்தும் கொண்டிருக்கின்றேன்.

நிற்க, எனைச்சூழ்ந்துள்ள வைணவர்கள் சிலர் நூற்றெட்டு உபநிடதங்களும், "ஹரிஓம்" என ஆரம்பிப்பதினால் எல்லா உபநிடதங்களும் விஷ்ணு சம்பந்த முடையதே யெனக்கூறி யென்னைமிரட்டுகின்றனர். ஆதலின் தாங்கள் கருணைகூர்ந்து "ஹரிஓம்" என்றசொற்குப் பொருள்விளக்கி விடைகூறுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

சித்தாந்த பத்திரிகை முகத்துபாணுக்கன்
**துறைசை. கண்ணப்பன்.**

---

## விடை.

செல்வச் சிரஞ்சீவி-துறைசை-கண்ணப்பனுக்கு அறுமுகச் சிவனார் திருமுகக் கருணையாண்டும் நின்றருள் புரிக.

அன்ப!

"ஹரிஓம்" என்பது உமாபதியினையே குறித்தவாக்கிய மென்பது வேதசம்மதம். எங்ஙனமெனின் கூறுதும்—"பராஸ்ய சக்திர் விவிதைவச் ரூயதேஸ்வாபாவி கீஜ்ஞாநபலக்ரியாச" (மகேசுரவரருடைய பராசக்தி சுவாபாவிக ஞானசத்தியும், பலசத்தியும், கிரியாசத்தியும் ஆகப்பலதிறப்படுவள்) எனும் சுவேதாச்வதரோப நிஷத்தானும்; "அப்ருதக் பராசக்திச் சிவஸ்யசமவாயிநீ, தாதாத்ம்ய மநயோர்நித்யம் வஹ்நிதாஹகயோரிவ, அதஸ்தத்தர்ம்ம தர்ம்மித்வாத் பராசக்தி: பராத்மந:" (பராசக்தி சிவனுக்குச் சமவாய சம்பந்தத்தோடுற்றவள், அக்கினியும் சூடும்போலப் பராசத்தியும் பரமான்மாவும் குணகுணித்தன்மையர்) எனும் வாயுசங்கிதையானும், சிவபெருமான் எக்காலும் சிவசத்தியுடன் கூடியேயிருப்பவ னென்பதாயிற்று, குணமின்றிக்குணியும், குணியின்றிக்குணமும் இல்லாமைபோல, சத்தியின்றிச் சிவமும், சிவமின்றிச்சத்தியும் இல்லையென்பது நிச்சயமாம். ஆகவே சத்திபிராஹ்மி சத்தன் பிரமம், சத்தி சிவை சத்தன் சிவன், சத்தி மகாதேவி சத்தன் மகாதேவன், சத்தி சதாசிவை சத்தன் சதாசிவன், சத்தி மகேசுவரி சத்தன் மகேசுவரன், சத்தி உருத்திரி சத்தன் உருத்திரன், சத்தி சங்கரி சத்தன் சங்கரன், சத்தி அரி சத்தன் அரன்; ஆகவே அரியென்பது உமாதேவியைக் குறிக்கும்பதமாம்.



தாமசமனுவந்தரத்திலே அரியை யென்கிறவள் கருப்பத்திலே அரிகள் என்கிற தேவர்களுடன் விஷ்ணு பிறந்தமையின், விஷ்ணுவுக்கு அரியெனும் பெயர்வந்ததாக விஷ்ணுபுராணம் கூறுமாற்றால், விஷ்ணுவுக்கும் அரியென நாமமுண்டு. ஆகலின் இவ்விஷ்ணுவாகிய அரிக்கு மேற்சொன்ன உமாதேவியாகிய அரிக்கும்வேற்றுமை தெரிந்துகொள்ளுக. இன்னும், "ஈச்வரீம் ஸர்வபூதாநாந்தாமி ஹோபஹ்வயேச்ரியம், ஸ்ரீர்ம்மேபஜது அலக்ஷ்மீர்ம்மே நச்யது, விஷ்ணுமுகா வைதேவாச்சந்தோ பிரிமாந்லோகாந பஜ்யமப்யஜயந், மஹாம்இந்த்ரோவஜ்ர பாஹு ஷோடசீசர்ம்மயச்சது." (சோடசிரூபிணியும், வித்யாரூபிணியுமாகிய ஈசுவரியை அழைக்கின்றேன். திருவையெனக்கு அருள்வாயாக. மூதேவி தொலைக. விஷ்ணு முதலியதேவர்கள் எந்தச்சோடசியாகிய வுன்னைச் சந்தமுறையின் வழுவாமலுபாசித்து உலகங்களில் நிகரில்லாது விளங்குகின்றனரோ அவர்கள் வழியே மகானும் வச்சிரமேந்தினவனுமாகிய இந்திரனுமாவன்) எனத்தைத்திரீயாருணசாகை நாராயணம் கூறுமாற்றால், விஷ்ணுவாகிய அரிக்கு உமாதேவியாகிய அரி உபாசனாதேவி யென்பதும் பெறப்பட்டது. இவை முதலிய பலிஷ்ட பிரமாணங்களால் ஹரியெனும் சப்தத்திற்குப் பொருள் உமையென்பது வச்சிரலேபமாயிற்று.

நிற்க, "அகாரம் ப்ரஹ்மாணம்," "உகாரம்விஷ்ணும்," "மகாரம் ருத்ரம்," "ஓங்காரம்ஸர்வேச்வரம்" எனும் நிருஸிம்மோத்தர தாபினியுபநிஷத்தானும்; "ஓங்காரோ வேதபாசசாவோ சிவஏகோத்யேய," எனும் அதர்வசிகோபநிஷத்தானும்; "கைலாசசிகரவாஸ மோங்காரஸ்வரூபிணம் மகாதேவம்" எனும் பஸ்மஜாபாலோப நிஷத்தானும்; "ஓம்மஹாக்ராஸாய மகாதேவாயசூலிநே," எனும் சரபோபநிஷத்தானும் ஓம் என்பது சிவபெருமானையே குறிக்கும். "ஸர்வஜ்ஞ: பஞ்சகர்த்தெய்ஸம்மந்ஸே ஸர்வேச்வர ஈச:பசுபதி:" என்ற ஜாபாலயுபநிஷத்தால் அச்சிவம் பதியே யாகையால், ஓம் என்பது பதியாய், ஹரிஎன்பது உமையாய், ஹரிஓம் என்பது உமாபதியாய் முடிந்தமை காண்க.

ஹரிஓம் = உமாபதி.

**பத்திராதிபர்.**

புத்தகவரவு.

# சிவஞானசித்தியார்சுபக்ஷம்

## பொழிப்புரை.

---

சகலாகமபண்டித சிகாமணியாகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த சிவஞானசித்தியார் என்னும் அரிய பெரிய சாஸ்திரத்தினுக்கு, திருவாவடுதுறை ஆதீனத்துச் சைவப்பிரசாரகர் தூத்துக்குடி - ஸ்ரீமத் - பொ - முத்தையபிள்ளையவர்கள் ஒருபொழிப்புரை எழுதியச்சிட்டுள்ளார். இந்நூலுக்குப் பலஉரைகள் முன்னிருக்கினும், அவைபெரும்பாலும் வடமொழி கலப்பாக விருத்தலினாலும், அநேக அரிய விஷயங்கள் நுட்பமாய்க் கூறியிருத்தலினாலும், அவ்வுரைகள் சித்தாந்த சாஸ்திரங்களில் மிக வல்லுநர்களாகிய பண்டிதர்கட்கே அவையுபயோகமாம். அங்ஙனமின்றி இக்காலத்திற்கேற்றபடி சாஸ்திர அப்பியாசம் செய்யமுயலுவார்கள் எளிதிலறிந்து சித்தாந்த உண்மைதேறும் வகையில், பூர்வாசிரியர்கள் கருத்துகட்குச் சிறிதும் மாறுபடாத வண்ணம், ஒவ்வொரு செய்யுள்கட்கும் கொண்டு கூட்டுப் பொருளும், பொழிப்புரையும், குறிப்புரையும் இலகுவான நடையில் எழுதியுள்ளார். திராவிடமகாபாடிய கர்த்தராகிய நமது மாதவச் சிவஞானயோகிகள் தமது உரையில் சுருக்கமாக வரைந்துள்ள சிலவிஷயங்கள் இவர் உரையில் பெருக்கமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. அன்றியும், நூலாசிரியர் சரித்திரமும், அவதாரிகையின் அகராதியும், விசேடவுரையிற் கண்ட விஷய அகராதியும், செய்யுள் முதற்குறிப்பு, அகராதியும் அடங்கியுள்ளன. இவை இந்நூல் கற்பவர்கட்குப்பெரிதும் உபயோகமாம்.

இப்பிள்ளையவர்கள் நமது சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் விருத்தியின் பொருட்டு எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியைப் பலரும் அறிந்திருப்பரென்பது உண்மை. இத்தகைய சைவாபிமானியார் உலகோபகாரமாக வெளியிட்டுள்ள இந்நூலினைச் சைவர்கள் பலரும் வாங்கி, மேலும் மேலும் பலநூல்கள் அவர்கள் வெளியிட அவருக்கு ஊக்கமுண்டாக்குவார்களெனத் திருவருளைச் சிந்திக்கின்றனம்.

ப-ர்.



சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 14 DEC 1914 MADRAS.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1914ளு அக்டோபர்மீ, [பகுதி க0.

அதர்வணவேத

## முண்டகோபநிஷத்து.*

---

### முண்டகம்-க—கண்டம்-க.

உலகினுக்குக் கர்த்தாவாயும், போக்தாவாயும், தேவர்கட்குள் பிரதமமாகப் பிரம்மா வுண்டானார். அவர் அவரது ஜேஷ்ட புத்திரராகிய அதர்வாவிற்குச் சர்வவித்தியாதாரமான பிரம்ம வித்தையையுபதேசித்தார்.

உ. பிரம்மா அதர்வாவிற்கு எதைச் சொன்னாரோ அதைப் பூர்வத்தில் அதர்வா அங்கிரசுக்கு உபதேசித்தார். அவர் பாரத்துவாஜசம்பவரான சத்தியவாகற்குப் பராவரையாகிய அந்தவித்தையை உபதேசித்தார்.

*இவ்வுபநிடதத்தில் ஆங்காங்கு உபயான்மப்பிரயோகம் காணப்படுகிறதனால், ஏகான்மவாதத்திற்கிடமில்லை, உபநிடதங்களில் பரமான்மாவை ஆன்மாவென்பது அங்காங்கிலட்சணை, ஆன்மாவைப் பரமான்மாவென்பது ஆதாரலட்சணை.

௩. மகாசாலராகிய சவுனகர் அங்கிரசு முன்னிலையில் விதிவத்தாக விருந்துகொண்டு பகவானே! எது அறியப்படின் இவையெல்லா மறியப்பட்டதாகின்றன வென்றார்.

௪. பரவித்தை அபரவித்தை ஆகியவிரண்டு வித்தைகள் அறிய வேண்டுமென பிரும்ம வித்துக்கள் சொல்லுவார்கள்.

௫. அபரவித்தையானது இருக்கு, யஜுர், சாமம், அதர்வம், சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தசு, ஜோதிஷமாம். அக்ஷரம்* எதனால் கூறப்படுகிறதோ அது பரவித்தையெனும் ஞானமாம்.

௬. எது பார்க்கப்படாததாய், பற்றப்படாததாய், கோத்திரமில்லாததாய், வர்ணமில்லாததாய் காது-கை-காலில்லாததாய், நித்தியமாய், விபுவாய், எங்கணுமிருப்பதாய், அதிசூட்சமமாய், அழிவில்லாததாய் இருப்பது எதுவோ அதை எல்லா பூதங்கட்கும் காரணமாயுள்ளதாகத் தீரர்கள் பார்க்கிறார்கள்.

௭. யாதொரு பிரமத்தைக்காட்டிலும் வேறுசிறந்தது கிடையாதோ, எதில் சிறியதில்லையோ, எதில்பெரியதில்லையோ, அத்தகையனை ஒருவனாய் விருட்சம்போல ஒருவருக்கும் வணங்காதவனாய்ப் பரமபதத்திலிருக்கிறார், அப்புருஷனால் † இவையெல்லாம் வியாபிக்கப்பட்டிருக்கிறது.

---

* ஈண்டு அக்ஷரம் என்பது சிவபெருமானையே குறிக்கும் பதமாம், "சிவமக்ஷரமவ்யயம்" எனும் பஸ்மஜாபாலோபநிஷத்தாலும், "ஸதாசிவாக்ஷரம் விமலம்" எனும் திரிபுரதாபிந்யுபநிஷத்தாலும் அறிக.

† ஈண்டு புருஷனென்றது சிவபெருமானையேயாம். "புருஷோவைருத்ரஸ்ஸந்மஹோநமோநம:" (புருஷராவார் மகானாகிய சத்தெனப்படும் உருத்திரரே நமஸ்காரம்) எனத்தைத்ரீயோபநிஷத்து கூறுமாற்றானேயறிக. இம்முண்டகம்-௩-கண்டம்-௧. சுலோகப்பொழிப்பு-௩-ல்-ஈசம்புருஷம் என்றதாலுமறிக. இங்ஙனமாயின், விஷ்ணுவைப் புருஷோத்தமனென்ற தென்னையெனின், 'வாசுதேவோபராப்ரகிருதி'' 'ப்ரகிருதிபரமோவிஷ்ணு'' "யோநிஜர்தேஜ:'' "விஸ்வம்நாராயண'' "ஜகத்விஷ்ணு'' என்ற சுருதிகளின்படி, சிவதத்துவம், வித்தியாதத்துவம், ஆன்மதத்துவம் எனும் முத்திறத்தத்துவங்களுள் ஆன்மதத்துவமான பிரகிருதிதத்துவமாகிய புருஷதத்துவத்தின் றலைவனே விஷ்ணுவாகலின் அவர் புருஷோத்தமனென்பதிற்றட்டில்லை. ஆகவே முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்த புருஷனுக்கும் இருபத்தைந்து தத்துவங்களைக் கடந்த புருஷனுக்குமுள்ள வேற்றுமையை அறிதல் வேண்டும்.



௮. சிலந்திப்பூச்சி† எவ்வாறு (நூலைச்) சிருட்டித்துக் கிரகிக்கிறதோ? எவ்வாறு பிருதிவியில் ஔஷதிகள் உண்டாகின்றனவோ? ஜீவித்திருக்கிற புருஷனிடத்தில் தலைமயிர் உடம்பு மயிர் உண்டாகிறதோ? அங்ஙனமே அக்ஷரத்திலிருந்து பிரபஞ்சமுண்டாகிறது.

௯. தவத்தால் பிரமம் தேடப்படுகிறது, அதிலிருந்து அன்னம், பிராணன், மனது, சத்தியம், கர்மங்களினின்று வழுவாதஉலகங்கள் அமுர்தமுண்டாகின்றன.

### முண்டகம்-௧-கண்டம்-௨.

எவ்வெவ்கர்மங்களைச் சத்தியமான மந்திரங்களுள் கவிகள்பார்த்தனரோ? அவைகளை மூவிதமாய் வெகுபிரகாசமாய் விஸ்தரிக்கப்படுகின்றன, சத்தியபலனை அபேட்சிக்கிறவர்களே! அவைகளை நியதமாய் அனுஷ்டியுங்கள். சத்காரியத்தையுடைய உலகத்தை யடையவேண்டியதற்கிதுதான் நல்ல வழி.

௨. காந்தியானது எப்போதும் அக்கினியைச் சொலிப்பிக்க உண்டாகிறதோ? அப்போது ஆஜ்ய பாகங்கட்கு மத்தியில் ஆகுதிகளைச் சமர்த்திக்க வேண்டியது. இது சிரத்தை யாகம்.

௩. எவனுடைய அக்கினிஹோத்திரம் சகர்ம மில்லாததாயும் பவுர்ணமாசகர்ம மில்லாததாயும் சாதுர்மாச கர்மமில்லாத தாயும் அதிதிகளில்லாமலும், வைச்சுவதேவ மில்லாமலும், விதிப்பிரகாரமில்லாமலும் இருக்கிறதோ அவனுக்கு ஏழுவம்சம் மோட்சமில்லை.

௪. காளி கராளி மனோஜவை சுலோகிதை சுதூம்ரவர்ணை ஸ்புலிங்கினி விஸ்வரூபிசதேவி என ஆகிய ஏழு நாக்குகள் இருக்கின்றன.

௫. இவைகள் பிரகாசிக்கையில் எவன் அனுஷ்டிக்கிறானோ? அந்தக்காலத்தில் ஆகுதிகளைக் கொடுக்கின்றானோ? அவனை யழைத்

---

† இச்சிலந்திப்பூச்சிகொண்டு ஏகான்மவாதியர் பிரமத்திற்கு நிமித்தோபாதானம் கூறுவர். அது அடாது. நூலும் மயிர்களும் சித்தல்லாத அசித்தாயிருத்தலைக்கொண்டே அவை சிலந்தியின் உடம்பாகிய அசித்திலிருந்து பரிணமமாகவந்தன. சிலந்தியின் உயிராகிய சித்திலிருந்து வந்தனவல்ல, ஆகலின் நூலுக்கும் மயிர்களுக்கும் உபாதானம் அசித்தாகிய தேகமும், நிமித்தகாரணம் சிலந்தியின் உயிராதல்போல, உலகிற்குமாயை உபாதானமும், பிரமம் நிமித்தகாரணமுமாமெனக் கொள்ளவேண்டுவதே நியாயமென்க.

துக்கொண்டு, தேவர்கட்குப் பதியானவர் வசித்துக்கொண்டிருக்கிற இடத்தில் சேர்ப்பிக்கின்றன.

௬. அவனை வருகவருக என்றுநல்ல அழகான ஆகுதிகள் சூரிய ரசிமிகளுடன் யக்கியம் பண்ணுகிறவனைப் பிரியமான வார்த்தைகளைச் சொல்லி; இது உங்கட்கு நற்காரியத்தா லுண்டான புண்ணிய பிரமலோக மென்று தோத்திரம் செய்து அழைத்துக்கொண்டு போகின்றன.

௭. குறைந்த பதினெட்டு விதமான கர்மங்களைச் சொல்லியிருக்கிற எக்யமென்கிற தெப்பங்கள் நிலையில்லாதவைகளாக விருக்கின்றன.

௮. அஞ்ஞான மத்தியிலிருந்து கொண்டு தம்மையே புத்திமான்கள் பண்டிதர்களென்று நினைத்துக்கொண்டிருக்கின்ற மூடர்கள், குருடரை யழைத்துக்கொண்டு போகின்ற குருடரைப் போலத் துக்கசம்பந்த முடையராய்ச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள்.

௯. அஞ்ஞானத்தால் பலவகையாக விருந்துகொண்டு சிறுபாலர்கள் தாங்கள் கிருதார்த்தகளானோமென நினைக்கிறார்கள். காமிகள் அவற்றில் ஆவல் கொண்டவர்களாகிச் சிறந்த ஞானத்தை யடைகிறதில்லை. கர்மங்களின் பயனொழிந்தால் மறுபடி உலகங்களில் வருகிறார்கள்.

௧௦. யாகஞ்செய்தல் தடாகமுதலிய யுண்டாக்கலே சிரேஷ்டமெனவெண்ணி மூடர்கள்வேறே சிரேயசை யறியவில்லை. அவர்கள் சுவர்க்கத்தில் சுகிருதபலனை அனுபவித்துப் பின்னிவ்வுலகிலாவது கீழுலகிலாவது வந்தடைகிறார்கள்.

௧௧. வனாந்தரத்தில் பிட்சைசெய்துகொண்டு சாந்தராய் வித்துவான்களாய்ச் சிரத்தையை யெவர்கள் ஆசரிக்கிறார்களோ? அவர்கள் சுபாவத்தில் முக்தர்களாய், அமூர்தனையும் அவிகாரியாயும் உள்ள புருஷனிடத்தில் சூரியன் மூலமாக வடைகிறார்கள்.

௧௨. எந்தப்பிராமணன் கர்மங்களாலாய உலகங்களை, விசாரித்துப்பற்றற்றவனாய், நித்தியப்பொருளை அநித்தியகர்மத்தினால் அடையப்படாதென்னும் சிந்தையுடைய னாகின்றானோ? அந்தப்பிராமணன்



அம்மெய்ப்பொருளை அறியும் பொருட்டு வேதாந்த மறிந்தவனாயும் பிரமநிஷ்டை யுடையவனாயுமிருக்கிற குருவையே சமித்தைக்கையிற் கொண்டு அடைவானாக.

௧௩. அதிசாந்தனாய் சமித்துடன் முன்பாக வந்திருக்கிறவனுக்குப் புருஷனை அறியக் கூடுமான பிரம வித்தையை யதவத்தாய் (குரு) சொல்லுகிறார்.

## முண்டகம்-௨-கண்டம்-௧.

சவுமியனே! இது சத்தியம், நன்கு சுவாலித்துக்கொண்டிருக்கிற அக்கினியிலிருந்து பொறிகள் ஆயிரங்கணக்காக எவ்விதமுண்டாகின்றனவோ? அங்ஙனமே அக்ஷரத்திலிருந்து நானாவிதமான தோற்றங்கள் உண்டாகி அவ்விடத்திலேயே சேருகின்றன. †

௨. பிராணன், மனசு, இந்திரியங்கள், ஆகாயம், வாயு, தேயு, அப்பு அனைத்தையுந்தாங்கும பிருதிவியாதிய எல்லா மதிலிருந்து உற்பத்தியாகின்றன.

௩. அவர் திவ்வியராயும், அமூர்தராயும், புருஷராயும், உள்ளும் புறம்பு மிருக்கிறவராயும், பிறப்பில்லாதவராயும், மனமில்லாதவராயும், சுப்பிரமமாயும், உயர்ந்த அபரவித்தைக்கு உயர்ந்தவராயுமிருக்கிறார்.

௪. அக்கினி யவர்தலை, சூரியனும் சந்திரனும் அவர்கண்கள், திக்குகள் அவர்காதுகள், புலப்படுத்தப்பட்ட வேதம் அவர்வாக்கு, பிராணன் அவர் சுவாசம், பிரபஞ்சம் அவரிருதயம், பூமி அவரடிகள் அனைத்திற்கும் அவரே அந்தரியாமி.

௫. எவரிடத்திலிருந்து எதற்குச் சூரியன் சமித்தாயிருக்கின்றானோ? அவ்வக்கினியும், சோமத்தினின்று மேகமும், பூமியின் ஔடதங்களும், புருஷன் ஸ்திரீயிடத்தில் இரேதசைவிட வெகுவிதமான பிரஜைகளுமுண்டாயின.

† இச்சுருதியில் முன்குறித்த ஊர்ணநாபிப்பூச்சி போலிருக்கும் பிரமத்தின் சரீரமாயமாயையவயினடங்கிக் கிடக்கும்உயிர்கள் சிருட்டிஞான்றுவெளிப்பட்டுலயகாலத்தில் ஒடுங்குமெனக் கூறிற்றேயன்றிப் பிரமமெனு மான்மாவே அவ்வாறுயதாகக்கூறும் ஏகான்மவாதிகட்கு இடமில்லை.

௬. அவனிடம் இருக்கு சாமம் எஜுர் தீட்சை யக்ஞயம் கிருது தட்சணை சம்வத்சரம் சோமன் சூரியன் சஞ்சரிக்கிற உலகங்கள் உண்டாயின.

௭. அவனில் பல பிரகாரமான தேவர்கள் சாத்தியர் மனிதர் பசுக்கள் பட்சிகள் பிராணன் அபானன்நெல் செந்நெல் தவம்சிரத்தை சத்தியம் பிரமசரியம் விதிகள் உணடாயின.

௮. அவனினின்றும் எழுபிராணன் எழுஜுவாலை எழுசமித்து எழுஹோமம் இருதய குகையில் சயனித்துக்கொண் டிருக்கிற பிராணன் எங்கும் சஞ்சரிக்கும் எழு உலகங்கள் இவ்விதமாக எவ்வேழாக ஏற் படுத்தப்பட் டிருக்கின்றன.

௯. இதில் சகலசமுத்திரங்கள் மலைகள்உண்டாயின. இவற்றில் நதிகள் பெருகுகின்றன. இதில் ஔடதங்களும் அந்தராத்மா எதனால் நின்றிருக்கிறதோ அந்தரஸங்களு முண்டாயின.

௧௦. சவுமியனே! புருஷனே பிரபஞ்சமும் கர்மமும் தபசுமாம். அமிர்தமாகிய பிரமம் குகைக்குளிருக்கிறதை யெவனறிவானே அவ னே அஞ்ஞான முடிச்சியை யவிழ்க்கிறான்.

முண்டகம்-உ-கண்டம்-உ.

பிரகாசமாயும், சமீபமாயும், குகையில்சஞ்சரித்து அடையவேண் டிய மகாபதமென்னும் பெயரைவாய்ந்ததாக விருக்கிறது. சலிப்ப தும் சுவாசம் விடுவதும் கண்ணை மூடுவதும் ஆகிய விவை யிதற்கு ளடங்கும், சத்தாயும் அசத்தாயும் பரமாயும் சிரேஷ்டமாயும் பிர ஜைகளுடைய ஞானாபேட்சையால் உயர்வா யிருப்பதாயு மறிவீர் களாக.

௨. சவுமியனே! எது காந்தி யுடையதோ? அணுவுக் கணுவா யிருப்பதோ? உலகும் உலகினரு மடங்கி யிருக்கின்றனரோ அந்த அக்ஷர பிரமம் இதுவே. இது பிராணன், இதுவாக்கு, இதுமனது, இதுசத்திய பதார்த்தம், இது மரணமில்லாதது, இதுகுறியையடிக்க வேண்டிய லட்சியமென்றறிக.



௩. சவுமியனே! உபநிஷத்தாகிய தனுசைப்பிடித்து, உபாசனை யால் தீட்டப்பட்ட அஸ்திரத்தை யதில் சந்திக்கவேண்டியது. பகவத் பத்தியால் வளைத்து உபாசனையாகிய தீட்சண்ணியமாகிய பாணத்தை விடவேண்டியது, அக்ஷரநாதன் லட்சியம்.

௪. பிரணவம் தனுசு, ஆத்மா பாணம், பிரமம் லட்சியம், பிர மாதமில்லாதவனால் அக்குறி யடிக்கட்டும். பாணம்போல் தன்மய மாக வேண்டியது.

௫. எவரில் ஆகாயமும், பூமியும், அந்தரிட்சமும், குறுக்குமறு க்குமாயினவோ? பிராணன்கள் அனைத்தினோடு மனசும் (உளவோ)? அந்த ஏகராகிய ஆன்மாவையே அறிக, பிறவார்த்தைகளை விடுக. அவர் அமிர்தத்திற்கு அணை.

௬. (இரதசக்கரத்தின்) உருவாய்க்குள் அரங்கள்போல நாடி கள் எவ்விடத்தில் ஒன்றாய்க் கலந்திருக்கின்றனவோ? அவர்நாநாவித மாய்ச் சம்பவித்துக்கொண்டு உள்ளே யெரிந்து கொண்டிருக்கிறார். ஆத்மாவைப் பிரணவத்தால் தியானம் பண்ணுக உங்கட்கு மங்கள முண்டாகுக.

௭. எவர் சர்வஞ்ஞராயும், சர்வவித்தாயும் இருக்கிறாரோ பூமி யில் இம்மகிமை எவருடையதோ? இவ்வாத்துமா திவ்விய பிரமபுரத் திலேயுள்ள ஆகாயத்திலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்.

௮. மனோமயராயும், பிராணத்திற்கும் சுவர்க்கத்திற்கும் நாயக ராகியும், அன்னத்தில் ஸ்தாபிதமாயும், இருதயத்தைத் தாரணஞ் செய்து சத்விஷய ஞானத்தால் ஆனந்த ரூபமாயும், அமூர்தமாயும் எது பிரகாசிக்கிறதோ? அதைத்தீரர்கள் செம்மையாய்ப் பார்க்கிறார் கள்.

௯. பராபரத்தைப் பார்த்தால் இருதய முடிச்சவிழும்சம்சயங் கள் அறும், கர்மம் க்ஷயிக்கும்.

௧௦. பொன்போன்ற வுயர்ந்த பரமபதத்தில் சர்வதோஷ விஹீன மான குணங்களில்லை. அது நிரவயவம் சுப்பிரமம், ஜோதிகளினும் ஜோதி, அதனை ஆத்தும வித்துக்களறிவர்.

கக. அவ்விடத்தே சூரியன் சந்திரன் நட்சத்திரம் மின்னல் அக்கினி பிரகாசிப்பதில்லை. இவையெல்லாம் அவர் தேஜஸினாலேயே பிரகாசம் பெறும்.

கஉ. அமிருதமான இப்பிரமமே முன்னும் பின்னும், தெற்கும், வடக்கும் கீழுமேலும் வியாபித்திருக்கிறது. இப்பிரமமே யிச்சிரேஷ்டமான சமஸ்தபிரபஞ்சமுமாம்.

முண்டகம்-௩-கண்டம்-க.

பிரியா நட்புடைய அழகுடைய பட்சிகள் இரண்டு ஒரே மரத்தில் இசைந்துள்ளன. அவற்றுள் ஒன்று இனியபழத்தை யுண்கிறது. மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கிறது.

உ. அதேமரத்தில் புருஷன் மோகத்தால் மயங்கி முழுகிச் சோகித்துக் கொண்டிருக்கிறான். எப்போதிவன் மகிழ்வுடையவனாய் வேறாகிய சிவபெருமானை மகிழ்வுடன் காண்கிறானோ? அவர்புகழைச் சோகநீங்கவடைகிறான்.

௩. எப்போது பார்ப்பவன் பொன் வண்ணனாயும், கர்த்தாவாயும், ஈசனாயும் புருஷனாயும் தோற்றங்கட்கெல்லாம் காரணமாயுள்ளவனைக் காண்கிறானோ? அப்போது அவன் வித்துவானாய் புண்ணிய பாவத்தை யொழிந்து நிரஞ்சனனாய்ப் பரமசாமியத்தை யடைகிறான்.

௪. பிராணன் சகல பூதங்களாலும் விளங்குகிறது. இதையறியும் வித்துவான் வேறொன்றைப் பேசுவதில்லை, அவன் லீலை ஆத்மாவில், அவனிச்சை யாத்மாவில், பிரமஞானிகளுள் அவன்சிரேஷ்டன்.

௫. ஆன்மாவானது நிலையான சத்தியத்தாலும், தபசாலும், நல்லறிவினாலும், பிரமசரியத்தாலும் அடையத்தக்கது. குற்றமற்ற யதிகள் யாரைக்காண்கிறார்களோ? அவர் சரீரத்திற்குள் ஒளிபொருந்தியவர்களாகவும், பரிசுத்தராகவு மிருக்கிறார்கள்.

௬. சத்தியமே வெல்லும், பொய்யல்ல, சத்தியத்தினாலே தேவயானத்திற்கு மார்க்கம் வெளியாகிறது. இதனால் பெரியோர் விருப்பங்களையடைந்து சத்தியத்திற்குரிய சிரேஷ்ட பதவியை யடைகிறார்கள்



௭. அது பெரிதாயும், திவ்வியமாயும், மனத்தாலு மெட்டொணாத உருவத்தினையுடையதாயும், சூட்சுமசூட்சமமாயும் பலவாகவும் விளங்குகிறது. இது வெகுதூரத்திலிருக்கினும் தூரமற்றிருக்கிறது.

௮. காண்பார்க்கு இவ்விடத்திலேயே குகையில் விளங்குகிறார். கண் வாக்கு இந்திரியங்கள் தபசு கர்மங்களால் கிரகிக்கப்படமாட்டார், ஞான சகாயத்தால் சித்த சுத்தியுடையவன் தியானத்தால் நிஷ்களமாக அவரைப் பார்க்கிறான்.

௯. பரமாத்மா அணுவைப்போல வெகுசிறியர், மனத்தாலறியத்தக்கவர், பிராணன் ஐந்துவிதமாகப் பிரவேசித்திருக்கிறது. பிரஜைகளின் சித்தங்களெல்லாம் பிராணன்களா லாக்கப்பட்டன. அவை சுத்தமானால் கடவுள் பலவகை விளங்குகிறார்.

க0. பரிசுத்தன் விரும்பும் உலகங்களையும் விருப்பங்களையும் அடைவன், ஆகலின் செல்வம் விரும்புவோன் ஆத்மஞானியைப் பூசிப்பானாக.

முண்டகம்-௩-கண்டம்-உ.

எவரை யாதாரமாக்கொண்டு சகல சப்பிரமமாய்ப் பிரகாசிக்கிற பிரமத்தை யறிகிறாரோ? எவர்கள் புருஷனை யுபாசிக்கிறார்களோ அத்தீரர் ஆசை அறந்து ஜன்மத்தைத் தாண்டுகிறார்கள்.

உ. விருப்பங்களை யெண்ணி விரும்புவோன், அவ்விருப்பங்களால் அவ்விடங்களிற் பிறக்கிறான். விருப்பற்றவனாயும், கிருதார்த்தனாயுமிருப்பவன் இம்மையிலேயே சகல விருப்பங்களையு மனுபவிக்கிறான்.

௩. இவ்வாத்துமா சொற்களினாலும், புத்தியினாலும், கேள்விகளினாலும் விளங்குவதில்லை. எவர் விரும்புகின்றனரோ? அவருக்கே அவ்வாத்துமா தன்சொரூபத்தை விளங்கச்செய்கிறார்.

௪. இவ்வாத்துமா பலவீனனாலும், சந்தேகத்தாலும், குறியற்ற தபசாலும், அடையத்தக்கதன்று. உபாயத்தால் முயற்சிக்கின்ற வித்துவானிடத்தில் பிரமதருமமான ஆத்துமா செல்கின்றது.

௫. இஃதடைந்த முனிவர்கள் ஞானதிருப்தராளாய்த் தீரரா யிருந்து வியாபகராயும் சர்வாத்மகராயு முள்ளவரை யடைகிறார்கள்.

௬. வேதாந்த ஞானத்தாற் றெளிந்து சந்நியாச யோகத்தால் மனசுத்தியடைந்த யதிகள் பிரமலோகத்திலே பராமந்திய காலத்தில் பராமிருதராய் விடுறுகின்றனர்.

௭. பதினைந்துகலைகளும், அதனுடன்சேர்ந்து அந்தந்தப்பொறிகளும், அதனின் அபிமான தேவதைகளிடஞ் சேர்ந்து, கர்மங்களும் ஞானமயமான ஆத்மாவும் நிர்விகாரபரதேவதையி லொன்றுகின்றது.

௮. எங்ஙனம் ஓடுவனவாகிய நதிகள் சமுத்திரத்தில் சேர்ந்து பெயரும் வடிவுமொழிந்து மறைகின்றனவோ? அங்ஙனம் வித்துவானும் பெயர் வடிவினின்றும் நீங்கி விடுற்றுப் பரத்திற்குப்பரமாயிருக்கும் திவ்விய புருஷனை யடைகின்றான்,

௯. சண்டாளனாயினும் சிவவென்னு மொழியை சொல்லுவானாயின் அவனுடன் வசிக்க, அவனுடன் பேசுக, அவனுடனுண்ணுக.†

௧0. பிரமத்தை யறிபவன் பிரமமே யாகிறான். அவன் குலத்தில் பிரமத்தை யறியாதவன் பிறக்கிறதில்லை, துக்கத்தையும் பாபத்தையும் தாண்டிக்குகையின் முடிகளினின்று நீங்கி அமிர்தனாகிறான்.

---

†இச்சுருதியை ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் தமதுபாஷியத்தில் எடுத்தாண்டிருக்கின்றனர். இதன் உபப்பிருஹ்மணம் வாசிஷ்டலைங்கத்தில் உளது. எக்காலத்தில் எவரால் இது ஒழிக்கப்பட்டதோ தெரியவில்லை, வைணவ வாதியர் செய்திருப்பரெனச் சிலமேதாவிகள் எண்ணுகின்றனர். இங்ஙனம் பலசைவபரமான சுலோகங்கள் பல உபநிஷத்துக்களினின்றும் ஒழிந்தமையை மற்றொருமுறை வெளிப்படுத்துவாம். இச்சுருதியின் கருத்தைத் திராவிடமாபாஷ்யகர்த்தராகிய மாதவச் சிவஞானயோகிகள் அடியில்வருமாறு அருளிச்செய்துள்ளார்.

"சிவனெனுமொழியைக் கொடியசண்டாளன் செப்பிடினவனுடனுரைக
அவனொடுகலந்து பேசுகவவனோ டருகிருந்துண்ணுக வென்னும்
உவமையில் சுருதிப்பொருளினை யுபாலுமரோடென்பயில் கொடியோன்
இவனெனக் கழித்தானையனே கதிவேறெனக்கிலை கலைசையாண்டகையே."



௧௧. அவ்விஷயத்தில் செப்பவராயும் கேட்பவராயும் பிரமையில்லாதவராயும் அக்னிஹோத்திரராயும் சிரத்தையுடன் ஓமம் செய்பவராயும், சிரோவிரத ‡முறைப்படி செய்பவராயுமுள்ளவருக்கே இந்தப் பிரம வித்தையைச் சொல்லக்கடவன்.

௧௨. ஆகலின் இந்த வுண்மையை முன்னம் அங்கிரச முனிக்குச் சொன்னார். இவ்விரதத்தை அனுஷ்டியாதவன் இதனைப் படிப்பானல்லன். பரம ரிஷிகட்கு நமஸ்காரம்.

மணவழகு.

---

‡சிரோவிரத மென்பது பாசுபதவிரதத்தினைக் குறிக்கும் பெயரென்பது உபநிடதங்களின் தாற்பரியம். வித்தியாரண்ணியர் தமது தீபிகையில் அங்ஙனமே யெழுதியுள்ளார். சிவாகமவைரியாகிய சங்கராசாரியர், கர்மகாண்ட அத்தியயனஞ் செய்தற்குரியோர் சிரசிலேதாங்கும் அக்கினிதாரணம் எனக்கிலுஷ்ட கற்பனை செய்தனர்.

## சுருதிசூசனம்.

இருக்கு யஜுஸ் சாமம் மூன்றிலுமுள்ள மந்திரம்.

"ஆவோராஜனமத்துவரஸ்யருத்திரம்ஹோதாரம்ஸத்தியயஜம்ரோதஸ்யோ அக்கினிபுராதன்யித்னோசித்தாத இரண்யரூபம்வஸேகிருணுத்வம்."

(இ-ள்.) ஆரோதஸ்யோ-வானத்திலும் பூமியிலும் புகழ்பெற்றவர், அத்தரஸ்ய-யாக முதலிய பலகருமங்களுக்கு, ராஜானம்-சுதந்தரரா யுள்ளவர், ஸத்தியயஜம் - உண்மையால் பூஜிக்கப்படுகிறவர், ஹோதாரம்-எல்லாராலும் பூஜிக்கப்படுபவர், அக்னிம்-அக்னியின் கண்ணுள்ளார், ருத்ரம்-பரமேஸ்வரனை சித்தாத்-மனதிற்கெட்டாததாயுள்ள; தனயித்னோ-மேகம்போன்ற மாணத்திற்கு, புரா-முன்னமே அவஸே-மோட்சத்திற்காக, இரண்யரூபம்-சூரியமண்டலத்தில் ஆராதிக்கத்தக்கவரைக் கிருணுத்வம்-பூஜைசெய்க.

ப-ர்.

## பழந்தமிழர்

# சந்தேகத்தின் ஆராய்ச்சி.

---

சந்தேகமென்பது துணிவுபிறவாமையால் அதுவோ? இதுவோ? என்று கருதும்படியானதோர் நிலைமை.

அயிர்ப்பு, ஐயம், சகடு, கடுப்பு, கடுத்தல், சங்கை, செத்து, சமுசயம், அநுமானம், மானல், பிராந்தி, விப்பிரமம் முதலியன சந்தேகத்தின் பெயர்களாம்.

இப்பெயர்கள் எப்படி உண்டாயின, அயிர்ப்பென்னும் சொல்லுக்கும் துணிவு பிறவாமையாகிய சந்தேகமென்னும் பொருளுக்கும் எவ்வாறு சம்பந்தமுண்டாயது என மொழிநூல்வல்லார் வினவுவாராயின் ஆராய்ந்து விடைகூறுவது அவசியமாகின்றது.

அயிர்ப்பு=சந்தேகம்.

அக்காலத்து மழைமிகுதியால் எங்கும் வெள்ளமோடிக் கொண்டிருந்தபடியால், மனிதர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகவேண்டின் இடைவழியில் அவ்வெள்ளத்தைக்கடக்க அநிசிறங்குங்கால் அவ்வழிமுன்பின் சென்றறிந்தவழி யல்லாமையாலும், வெள்ளத்துட் கட்புலஞ்செல்லாமையாலும் இங்கே ஆழமுள்ளதோ? இல்லதோ என்று துணிவு பிறவாமையால், மெல்ல மெல்ல அடிவைத்து நிதானமாகப் பரிசவுணர்ச்சியால் அவ்வெள்ளத்தைக் கடந்துபோக வேண்டும். இத்துணிவு பிறவாமையாகிய நிலைமை வெள்ளத்திற் செல்லுங்காலுண்டாதலால், வெள்ளமென்பது நீரின் மிகுதியானமையின் நீரினையுணர்த்தும் அயமென்பது துணிவு பிறவாமையாகிய நிலைமைக்கு ஓர் பெயராயிற்று.

அயம்—நீர், சந்தேகம்.

அயம் அயிர்ப்பாயிற்று; பிறகு அதுவே ஐயமுமாயிற்று.

அயம்—அயிர்ப்பு=சந்தேகம்.

அயம்—ஐயம்

ஐயுறல்



க. கயம்—அயம்=நீர். ஒற்றினீக்கம்

உ. கயம்—பயம்=நீர், குளம். ககரம்பகரமாகும்

ங. பயம்—பயம்பு=பள்ளம்; நீர் நிரம்பியது.

ச. அயாப்=கோழி. (மலையம்)

அயம்—அயாம்=நீர்க்கோழி, கோழி.

ஐயமென்னுஞ் சொற்காரணம் நெடிதுகாலம் புலனாகாமலிருந்து வெள்ளத்தில் நடக்குங்கால் அக்காரணம் இனிது புலனாயிற்று.

(உ) சகடு=சந்தேகம்.

சகடென்பது முதல் உரோகணியையும் பிறகு சந்தேகத்தையும் உணர்த்தி நிற்கும்.

"உரோகணி யூற்றால் பன்னிரு மீனும்"

உரோகணி நட்சத்திரத்தை உச்சத்திற் காணுங்கால் சில விளங்கியும் சில விளங்காமலுமாய்ப் பன்னிருமீனும் உளவோ? இலவோ? எனத்துணிபு பிறவாமைக்கு இடந்தரலின், சகடென்பது சந்தேகத்தை யுணர்த்திற்று.

பன்னிரண்டென்னுந் தொகைக்கு மேற்கோள் ஆதாரமாயிற்று. துணிவு பிறவாமையின் பன்னிரண்டென்னுந் தொகை கருவிகொண்டறிந்தனர் போலும்,

சகடு=திரட்சி, வட்டம், உரோகணி, ஊற்றால்போல் வட்டமாக இருப்பதென்பது பொருள்.

சகடம்—சகடு.

சகடு—கடுப்பு=சந்தேகம்.

கடுப்பு—கடுத்தல் ஐயுறல்.

"போற்றி னரியவை போற்றல் கடுத்தபின் தேற்றுதல்யார்க்கும் அரிது." (திருக்குறள் மன்னரைச் சேர்ந்தொழுகல்)

"கடாஅ வுருவொடு கண்ணஞ்சாது."

(நற்றுடல்-ரு)

சகடு—ஷக்=சந்தேகம், (அரபி-இர்து)

### (௩) சங்கை—சந்தேகம்.

அரசர்முதலோர் பக்கத்தில் ஒருவர் இருக்குங்கால் ஓர்பொருள் காணமற்போயின் அப்பொருளைப் பற்றிப் பக்கத்தில் இருந்தவரிடத்தில் தான் சந்தேகமுண்டாவதியல்பு. ஆதலால் பக்கத்தை யுணர்த்தும் சங்கமென்பது சந்தேகத்துக்கு ஓர்பெயராயிற்று, அயலவனாகிய ஆண்மகன் பக்கத்தில் பெண்மகளிருப்பினும், பெண்மகள் பக்கத்தில் ஆண்மகனிருப்பினும் சந்தேகமாம்.

௧. சங்கம்=பக்கம், சந்தேகம்.
௨. சங்கம்=சங்கை—ஆசங்கை=சந்தேகம்.
௩. சங்கம்=பக்கம், தோள்.
௪. சங்கதானம்=தோட்கோப்பு.
௫. சங்காத்தன்=தோழன்; தோண்மேற் கைபோட்டுப்பேசும் அன்புரிமை யுடையோனென்பது,

### (௨) செத்து=சந்தேகம்.

சந்து=மூங்கில், புல், புல்லுரு, கம்பங்கொல்லையில் வைத்த பிரமை.
சந்து உட்டுளையுமாம்.

சந்தென்பது முதல் மூங்கிலையும் பிறகு இனமாகிய புல்லையும் புல்லுருவையும் பிரமையையும் உணர்த்தி நிற்கும். புல்லுருவாவது புல்லாற் செய்த மக்கள் வடிவம்.

"வல்லுரு அஞ்சன்மின் என்பவே மாபறவை புல்லுரு அஞ்சுவபோல்" (நீதிநெறி விளக்கம்)

கம்பங்கொல்லையில் வைத்த புல்லுருவைக் கம்பு திருடவந்த கள்வர்கண்டு, இரவாதலால் இவ்வுரு புல்லுருவோ? மக்களுருவோ? எனத்துணிவு பிறவாமையால் சந்தென்பது சந்தேகத்திற்கு ஓர் பெயராக இருந்ததெனத் துணிதல் வேண்டும்.

சந்தென்பதே சந்தேகமெனவளர்ச்சி பெற்றது. முதனிலைவளர்ச்சி சொல்வளர்ச்சி பாஷைவளர்ச்சி என்பவற்றுள் இதுவே சொல்வளர்ச்சி.

சந்து—சந்தேகம்.

சந்தேகத்தை யுணர்த்தும் செத்தென்பதும் சந்தென்பதின் திரிபு,
சந்து—செத்து. ஒருங்கு திரிந்தது.
சந்தி=மூங்கில், கூட்டு, நாற்றெருக்கூடுமிடம்,



சந்தி—சந்திப்பு.

### (௫) சமுசயம்=சந்தேகம்.

சஞ்சயமென்பது முதல் கூட்டத்தையும் பிறகுசந்தேகத்தையும் உணர்த்தி நிற்கும்.

கூட்டத்தில் களவு முதலியன நிகழின், கூட்டமாதலால் களவு செய்தோன் இன்னானெனத்துணிவு பிறவாமையின் சஞ்சயமென்பது முதல் கூட்டத்தையும் பிறகு சந்தேகத்தையும் உணர்த்திற்று.

சஞ்சயம் சம்சயமாயிற்று; சம்சயம் சமுசயமாயிற்று. மகரம் சகரத்தோடு மயங்காமையின் சஞ்சயமென்பது முதலுச்சரிப்பாகவே யிருக்கலாம்

சம்சயமென்னும் சொல்லைப்பற்றித் தருக்கம் உண்டாயின், அச்சொல் எவ்வாறு சந்தேகத்தை யுணர்த்திற்று எனவினவுதல் வேண்டும்.

ஆண்மக்கள் கூட்டத்தில் பெண்மகள் செல்லினும் பெண்மக்கள் கூட்டத்தில் ஆண்மகன் செல்லினும் சந்தேகம் நிகழும். இவ்வாறாகிய சந்தேகம் விலங்கு பறவைக்கும் உண்டு.

### (௬) அநுமானம்=சந்தேகம்.

அநுமானமென்பது முதல் அநுமானப் பிரமாணத்தையும், அது பிரத்தியட்சம்போல் துணிவுகொள்ளக் கூடாமையால் பிறகு சந்தேகத்தையும் உணர்த்தி நிற்கும்.

அநுமானமாவது காரியத்தால் காரணம் நிச்சயிப்பது.
அநுமானம்—மானல்=சந்தேகம்.

### (௭) பிராந்தி=சந்தேகம்

பிராந்தி=மயக்கம், சந்தேகம்.
மயக்கமாவது துணிபு பிறவாமை,
விப்பிரமமும் அது. வி-உபசர்க்கம்.

சந்தேகத்தின் பெயர்களுள் அயிர்ப்பு ஐயம் சங்கையென்பன முதலுண்டானவை யெனவும், சந்து முதலியன பிறகுண்டானவை யெனவும், சகடு முதலியன அதன் பிறகுண்டானவை யெனவும் கொள்ளலாம்.

இவற்றில்ஏதேனும் சந்தேகமுண்டாயின் பெரும்பாலும் மொழிநூலால் தெரிந்துகொள்ளலாம். மொழிநூல் கல்விமான்களுக்கு அவசியகமானது.

இங்ஙனம்,

மாகறல்-கார்த்திகேய முதலியார்,

கென்டி

சென்னை.

---

உ

கணபதி துணை.

# தமிழுலகம்.*

## முதல் அத்தியாயம்

---

### உற்பத்தி-Origin

### 1. அநாதிகாலம்

அதாவது சிருட்டிக்கு முந்தியகாலம்.

அப்பொழுது சத்தும் இல்லை அசத்தும் இல்லை, நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஒன்றும் இல்லை. பிறப்பு இல்லை, இறப்பு இல்லை.

---

N. B. * தமிழ்+உலகம்=தமிழுலகம். இவ்விரண்டும் தமிழ் மொழியே. சிலர் கூறும்வண்ணம் உலகம் என்னும்பதம் வடமொழியாகாது.

தமிழ்-தாமம் என்னும் பகுதி அடியாகப்பிறந்தது. தாமம்-ஒளி.

உலகம்-ஓலம்=(க)கடல்; அதாவது, ஓலத்தாற் சூழப்பட்டது உலகம் or (உ) உலம்+கம் எனப்பிரித்து, கம்=நீரினின்றும், உலம்=திரண்டது; அதாவது, அப்பு தத்துவத்தினின்றும் உண்டாயது என்று அர்த்தம்.

தமிழர்கள் தத்துவஞானிகள் ஆனபடியாலும், சிவபெருமானே உருக்கொண்டு தமிழ்ப்பாஷையை வரையறுத்ததாலும், தமிழ்ப் பதம் ஒவ்வொன்றிலும் தத்துவார்த்தம் முதலிய அர்த்தங்கள் நிறைந்திருக்கின்றன. "ஒன்றியிருந்து நினைமின்கள்".



நித்தியம் இல்லை. அநித்தியம் இல்லை. பகலிரவு கிடையாது. நினைப்பு மறப்புக்கிடையது. நிலையும் நிலையாமையுங் கிடையாது.

ஆனால், என்ன இருந்தது? ஒருவன் இருந்தான், அவன் தன் வயத்தன், தூயவுடம்பினன், இயற்கை அறிவினன், முற்று முணர்பவன், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கினவன், பேரருளாளன், வரம்பிலின்பன், முடிவிலாற்றலுடையவன். இன்னும் என்ன இருந்தது?

ஆணவமலத்தில் கட்டுண்ட (அந்தகாரத்தில்மூழ்கின) ஆன்மாக்கள் இருந்தன; ஆணவம் (இருள்) இருந்தது. மகாமாயை இருந்தது.

இவை, சித்தாந்தத்தில் பதி, பசு, பாசம் எனக் கூறப்படுவன. இவை மூன்றும் அநாதிகாலத்திலுள்ளன.

இவை மூன்றும் அநாதிகாலத்தில் அதாவது சிருட்டிக்கு முந்தியகாலத்திலுள்ள காரணத்தால் அநாதி என்று கூறப்படுகின்றன.*

---

சத்து=That which exists or entity.

அசத்து=That which does not exist or Non—entity.

சிருட்டி=சூக்குமமாய்க்கிடக்கும் அணுக்களை இசைத்துத் தூல வுருவாக்கல்.

* Vide Rig Veda, X Mandala, 129th Hymn. "There was then neither *Sat*, nor *Asat*. There was no atmosphere, nor sky above. What enveloped all? Where is the receptacle of what was it contained? Was it *Water* the proformed *Abiss*?

Compare Paradise Lost, Book II, 890—920:—
"The Secrets of the hoary deep, a dark
Illimitable Ocean, without bound,
Without dimension, where length, breadth, and highth,
And time, and place, are lost; where eldest Night
And chaos, ancestors of nature, hold
Eternal anarchy, amidst the noise
Of endless wars——This wild Abyss,
The womb of nature, and perhaps her grave,
Of neither Sea, nor shore, nor air, nor fire,
But all these in their pregnant causes mixed."

(2) { ஆதிகாலம்
or
சிருட்டியாரம்பம் }

பிறகு, இறைவன் அநாதி கேவலநிலையில் (கேவலநிலை = ஆன்மாக்கள் ஆணவமலத்தால் கட்டுப்பட்டு, செயலின்றி, அறிவொளி மழுங்கி ஒன்றும் தெரியாமல் கிடக்கும் நிலை) கிடக்கும் ஆன்மாக்களின் மீது கொண்ட கருணையினால் ஆன்மாக்களின் மலவழுக்கைப் போக்கி மூலபண்டாரம் வழங்கும் எண்ணத்துடன் ஆன்மாக்களுக்கு, தனு, கரண, புவன போகங்களைக்கொடுக்க இச்சைப்பட்டார். இந்த "இச்சை" ( Desire ) தான் அவரிடத்தில் முதலில் எழுந்தது. இப்படி முதலில் அவரிடத்திலிருந்தும் எழுந்த இச்சைக்குத் தமிழில் "அருள்" என்று பெயர். இச்சைக்கும் அருளுக்கும் வித்தியாசமென்னவென்றால், இச்சை பசுக்களிடத்துத் தோன்றுவது, அருள் இறைவன் மாட்டுத்தோன்றுவது.

இவ்வருளே சிருட்டிக்குக் காரணம். இவ்வருளுக்குத் திருவருட்சத்தி யென்றும் பெயர்.

ஆகையால், இச்சை, அருள், திருவருட்சத்தி இம்மூன்றும் ஒருபொருட்கிளவிகள்.

அழுக்கு மூடிய ஆன்மாக்களைக் காப்பாற்ற வேண்டுமென்கிற அருள் உண்டாகவே பரஞ்சோதியாகிய முதல்வனிடத்திலிருந்து கதிர்கள் தோன்றும்.

---

இவ்வாங்கிலேயப் புலவரின் கருத்தை இப்பாவினிடத்து நோக்குமிடத்து, ஒவ்வொருவருக்கும் அநாதிகாலத்தின் நிலை நன்றாய் விளங்கும். அவர், ஆணவ இருள் என்று சித்தாந்த பரிபாஷையில் சொல்லாதபோதிலும், ஆணவஇருளை, (a dark illimitable Ocean) வரையற்ற இருட்கடலென்றும், காலம், இடம் அற்றதென்றும் உலகசிருட்டிக்கு மூலம்என்றும் சிருட்டிகருக்கொள்ளுமிடம் (womb) என்றும் சிருட்டியின் ஒடுக்கத்தானம் (grave) என்றும், எல்லாவித அணுக்களும்சேர்ந்த இடம்என்றும் (all these in their pregnant causes mixed) கூறுகின்றார். இவருடைய அநாதிகாலத்தின் வருணனையானது எல்லோருக்கும் மேற்படிகாலத்தின் நிலையைத்தெளிவாய் விளக்குகின்றது.



ஆகையால் முதன்முதலில் திருவருட்சத்தியினின்றும் கதிர்கள் தோன்றின. இக்கதிர்களுக்கு ரஸ்மி என்றும், சிற்சத்தி என்றும், பின்னுபின்னுசத்தி என்றும் கிரணங்கள் என்றும் தமிழர்களால் ஆரியர்களுக்குக் குறித்துக்கொடுத்த பௌஷ்கரம் முதலிய ஆகமங்களிலும் உபநிஷத்துக்களிலும் கூறப்படும்.

ஆகையால், கதிர்கள், ரஸ்மி, ரேஸ், சிற்சத்தி, பின்னுசத்தி, கிரணங்கள் இவைகள் ஒருபொருட்கிளவிகள்.

கடவுளின் செய்கை ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்துவிதமாதலால் அவருடைய கதிர்களாகிய சத்திகளும் ஐந்து பேதமாய்த் தோன்றும். அவைகளாவன:—

பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை.

இக்கதிர்களைச் சித்தாந்த பரிபாஷையில் பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என்று கூறுவர்.

இக்கதிர்கள் யாரிடத்தினின்றும் தோன்றினவோ அவருக்குச்சித்தாந்த பரிபாஷையில் சிவம் என்றும், நின்மலசிவம் என்றும், நிஷ்களசிவம் என்றும் விமலன் என்றும் பரஞ்சோதி என்றும், பரம்பொருள் என்றும் கூறுவர்.

இதுகாறும் நின்மலம் சிவம், அருள், அருட்கதிர்கள் இம்மூன்றினையும் பற்றிக்கூறினோம். இனிமேல் தத்துவோற்பத்தியைப் பற்றிக் கூறுவோம். (தொடரும்)

ஆடிசைகிழார்-அ-சிதம்பரனார்.

---

*Sankara* in *Taittiriya Brahmanam* says·—The *Supreme soul* is not Subject to the dominion of *desire* like men. He had no *desire* unfulfilled. He is independent of all things and also of Himself. For the interest of living beings,—so that they might enjoy life,—He originated *Desire* which is nothing else but *True knowledge*.

கதிர்கள்—Rasmi, "Rays." It has also been explained as " Bond or Cord." It is the mysterious "Power" that connects *Entity* with *Non-Entity* etc., that which remaining on all sides and up and below the Universe, makes it manifest from an unmanifest States.

பௌஷ்கரம் = உசனன் என்னும் தமிழன் புஷ்கரன் என்னும் ஆரியனுக்குக் கூறியது.

உசனன் என்பது சுக்கிரனுடைய பெயர். தமிழர்களில் சுக்கிரனுடைய பெயரை வைத்துக்கொள்வது வழக்கம். சுக்கிரத்தேவன் சுக்கிரன் பாளையம் முதலிய பெயர்களை இன்றும் கோயமுத்தூர் ஜில்லாவில் கேட்கலாம். ஆகையால் உசனன் என்பது தமிழ்ப்பெயர் என்று தெரிகிறது.

# நாற்பானைந்து உசாக்கள்.

---

சேந்தமிழ்ச் செல்வர்காள்!

சுமார் ஐம்பது வருடங்கட்கு முந்தி வைதிக சைவ சந்நியாச ஆசிரமத்து அறிஞரொருவர் ‘அ’ எனும் முதலெழுத்தைப் பற்றிக் கீழ்க்குறித்த நாற்பத்தைந்து உசாக்கள் கேட்டிருக்கின்றனர். பதிலின்றுகாறு மொருவரும் விடையளித்தாரில்லை. தற்காலம் தமிழெழுத்துக்களின் வண்ணம், வடிவு, ஒலிமுதலிய ஆராய்ச்சி மேலிட்டுமொழிகளின் இலக்கணங்கள் (Philology) பலபாஷைகளோடு ஒப்பிட்டுத் தற்பாஷையின் ஏற்றம்பெறப்படுகிற காலமாய் உள்ளதாதலால், நாற்பத்தைந்து கேள்விகளை நான் கண்ணுற்றநாள்முதலாய், இவைகளுக்கு விடைபெறவேண்டும் என எண்ணமெனக்குண்டாகியது. அவை ‘சித்தாந்தம்’ எனும் பத்திரிகையில் வெளிவரின் எழுத்துசொல் முதலியவைகளின் இயற்கைஉண்மை வடிவு ஒலிமுதலிய ஆராய்ச்சிசெய்து வரும் தமிழ்ப் பெருஞ்செல்வர்களிடம் பரவும் என்றும், அவர்களால் கூடுமான வரையில் நாற்பத்தைந்து கேள்விகளில் சிலவற்றிற்கேனும் விடைகள் கிடைக்கக் கூடுமென்றும் எண்ணி, பேரவாவுடன் வெளியிடலானேன், அன்பு கூர்ந்து ஆராய்ச்சி வல்லுநர் விரைவில் இப்பத்திரிகையில் பலர்க்கும் பயன்படும் பொருட்டு வெளியிடுமாறு தமிழ்ப் பேரவாவுடன் எழும் வந்தனத்துடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

‘அ’

அகரவுயிர் என்பது யாது?

அகரவுயிர்க்கு,

1. வரிவரலாற்றின் இலக்கணம் என்னை? 2. ஒலி வரலாற்றின் இலக்கணம் என்னை? 3. தன்மைவரலாற்றின் இலக்கணம் என்னை? 4. உணர்ச்சி வரலாற்றின் இலக்கணம் என்னை? 5. அதன் உண்மையனுபவ விலக்கணம் என்னை?



அகரவுயிர்க்கு,

6. வரியுருவிலக்கணம் என்னை? 7. ஒலியுரு விலக்கணமென்னை? 8. தன்மை யுருவின் இலக்கணம் என்னை? 9. உணர்ச்சி யுருவின் இலக்கணம் என்னை? 10. உண்மை யனுபவ வுருவின் இலக்கணம் என்னை?

அகரவுயிரின்,

11. வரிச்சொரூப விலக்கணம் என்னை? 12. ஒலிச்சொரூப விலக்கணம் என்னை? 13. தன்மைச் சொரூப விலக்கணம் என்னை? 14. உணர்ச்சிச் சொரூப விலக்கணம் என்னை? 15. உண்மை யனுபவச் சொரூப விலககணம் என்னை.

அகரவுயிர்க்கு,

16. வரிச்சுபாவ இலக்கணம் என்னை? 17. ஒலிச்சுபாவ இலக்கணம் என்னை? 18. தன்மைச்சுபாவ இலக்கணம் என்னை? 19. உணர்ச்சிச்சுபாவ இலக்கணம் என்னை? 20. உண்மை அனுபவச்சுபாவ இலக்கணம் என்னை?

அகரவுயிரின்,

21. வரிச்செயற்கை இலக்கணம் என்னை? 22. ஒலிச்செயற்கை இலக்கணம் என்னை? 23. தன்மைச்செயற்கை இலக்கணம் என்னை? 24. உணர்ச்சிச் செயற்கை இலக்கணம் என்னை? 25. உண்மைச் செயற்கை இலக்கணம் என்னை?

அகரவுயிரின்,

26. வரியதிகார இலக்கணம் என்னை? 27. ஒலியதிகார இலக்கணமென்னை? 28. தன்மையதிகார இலக்கணம் என்னை? 29. உணர்ச்சியதிகார இலக்கணம் என்னை? 30. உண்மையதிகார இலக்கணம் என்னை?

அகரவுயிரின்,

31. வரிப்பொது இலக்கணம் என்னை? 32. ஒலிப்பொது இலக்கணம் என்னை? 33. தன்மைப்பொது இலக்கணம் என்னை? 34. உணர்ச்சிப்பொது இலக்கணம் என்னை? 35. உண்மைப் பொது இலக்கணம் என்னை?

அகரவுயிரின்,

36. வரிச்சிறப் பிலக்கணம் என்னை? 37. ஒலிச்சிறப் பிலக்கணம் என்னை? 38. தன்மைச் சிறப்பிலக்கணம் என்னை? 39. உணர்ச்சிச்சிறப் பிலக்கணம் என்னை? 40. உண்மைச் சிறப் பிலக்கணம் என்னை?

அகரவுயிரின்,

41. வரிக்குண இலக்கணம் என்னை? 42. ஒலிக்குண இலக்கணம் என்னை? 43. தன்மைக்குண இலக்கணம் என்னை? 44. உணர்ச்சிக்குண இலக்கணம் என்னை?

என்பன முதலாக இவ்வகர உயிர் ஒன்றற்கே இன்னும் பற்பல இலக்கண நியாயவிசார வினாக்கள் உள என்று எழுதியிருக்கின்றனர்.

மோ.. கந்தசாமி,
தமிழ்நலப்பிரியன்.

---

## சுருதிசூசனம்.

இருச்குவேதம்-1-43-4.

"காயபதிம்மேதபதிம் ருத்ரம்ஜலாஷபேஷஜம்"

(இ-ள்) பாட்டுக்கு அதிபதியும், இன்பத்தைக்கொடுக்கும் ஔடதங்களையுடைய யாகத்திற்கு அதிபதியுமானவர் உருத்திரர்.

இருக்குவேதம்-4-3-1.

"ஆவோ ராஜாந மப்வரஸ்யருத்ரம்"

(இ-ள்) யஞ்ஞத்திற்கு இராஜாவாக உருத்திரரை நாடுக.

யசுர்வேதம்-4-5-1-1.

"யாதேருத்ர சிவாதனுர கோராபாப காசிநீ
தயாநஸ்தனுவாசந்த மயாகிரிசந்தாபிசாகசிஹி."

(இ-ள்) உருத்திரரே! காருண்ணியமும் மனோகரமுமாய் பாவமில்லாதவரிடத்து விளங்குவதாயும், ஆனந்த ரூபமாத்திரமாயுமுள்ள எந்தத் தனுவுண்டோ, அந்தத்தனுவோடு மங்களரூபமாகக் கிரியிலிருந்து உமது பூரணப்பிரகாசத்துடன் எங்களுக்கு விளங்குவீராக.

ய-ர்.

## இருக்குவேதம்.

---

தொகுதி-௩ பகுதி-பக்கம் 225.

வர்க்கம்-௪.

௪. வாயுவே! நீரும் இந்திரனும் அபிஷவம் பண்ணுகிறவனுடைய் ஆயத்தமாயிருக்கிற (ஓமத்)தினிடத்திற்குச்சமீபம் வாருங்கள் புருஷர்களே! (உங்களுடைய வருகையினால் தான் இந்தக்) கிரியைசீக்கிரத்தில் (முடிவு பெறும்,) (இது) சத்தியம்.

எ. நீரை (பூமியின்மேல்) சொரியுந் தொழிலைச் செய்கிறவர்களாகிய, பவித்திரமான வலிமையையுடைய மித்திரனையும் சத்துருக்களை விழுங்குகிற வருணனையும் அழைக்கின்றேன்.

அ. நீரை விருத்தி செய்கின்றவர்களும், நீரைக் கொடுக்கிறவர்களுமாகிய மித்திராவருணர்களே! (நீங்களிருவரும்) சத்தியத்தோடு (அங்கவுபாங்கங்களால் மிகவும்) பெருகியிருக்கிற(இந்தச்சோம)யாகத்தை வியாபித்திருக்கிறீர்கள்.

௯. மேதாவிகளும் அனேகர் பொருட்டுப் பிறந்தவர்களும், அனேகருக்கு இருப்பிடமுமாகிய மித்திராவருணர்களே, நமக்கு வலிமையையும், (யாகமாகியவிந்தக்) கர்மத்தையும் போஷியுங்கள்.

சூக்தம்-௩.

(இதற்குருஷியும் பாவும்முன்போல, இதிலுள்ள பனிரண்டு ருக்குகளில், முதல் மூன்றிற்குத் தேவதை அசுவின்கள். மறுமூன்றிற்கு இந்திரன், பின் மூன்றிற்கு விசுவதேவர்கள், கடைமூன்றிற்குச் சரஸ்வதி.

வருக்கம்-௫.

க. (அவிசுவாங்கும் பொருட்டு) நீட்டப்பட்டிருக்கிற கைகளையுடையவர்களும், நற்செய்கைகளை போஷிக்கிறவர்களும், நீண்டபுஜங்களையுடையவர்களுமாகிய அசுவின்களே! யாகத்திலான அன்னத்தை வாங்குங்கள்

உ. மிகுந்த கருமங்களை யுடையர்களும் வழிகாட்டிக் கொண்டு போகிறவர்களும், மனத்திண்மை யுடையவர்களுமாகிய அசுவின்களே (எங்களுடைய) தோத்திரங்களை விரைவான மனதுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.

௩. (சத்துருக்களைக்) கொல்லுகிறவர்களும், அசத்திய மில்லாதவர்களும், போர்வலரை முன் சென்று நடத்துகிறவர்களுமாகிய (அசுவின்களே) கலந்து அபிஷவம் பண்ணப்பட்டிருக்கிற (சோமங்கள்) வேர்களை வெட்டி நீக்கிய தர்ப்பையின் பேரில் இடப் பட்டிருக்கின்றன. (அவைகளை வாங்க) வாருங்கள்.

௪. விசித்திரமான ஒளியை யுடைய இந்திரனே! வாரும் (ருத்விக்குகளுடைய) விரல்களால் அபிஷாத மாயிருக்கிற நித்தியம் சுத்தமான இவைகள் உம்மை இச்சித்துக் கொண்டிருக்கின்றன.

௫. இந்திரனே! புத்தியினாலே அடையப்பட்டிருக்கிற வரும், மேதாவிகளால் அடையப்பட்டிருக்கிற வருமாகிய (நீர்) அபிஷாத மான சோமத்தை யுடைய ருத்துவிக்கின் தோத்திரங்களை நெருங்கும்.

௬. குதிரைகளோடு கூடிய இந்திரனே! தீவிரமுடைய நீர் (எங்கள்) தோத்திரங்களை ஏற்கும் பொருட்டு வாரும், சோமாபிஷவத்தோடு கூடிய (இந்தக் கருமத்தில்) எங்களுடைய (அவிசாகிய) அன்னத்தை வாங்கும்.

வர்க்கம். ௬.

௭. பாதுகாப்போரும், மனிதர்களைத் தாங்குவோரும், (பயனைக் கொடுப்போருமாகிய விசுவதேவர்களே! (யஜமானனுகிய அவிசு) கொடுக்கிற வனுடைய அபிஷாத (சோம)த்தினிடத்து வாருங்கள்.

௮. நீரைச் சீக்கிரத்தில் கொடுக்கிறவர்களாகிய விசுவதேவர்கள், பகலினிடத்திற்குச் சூரிய கிரணங்கள் (வருவது) போல, அபிஷாதமான (சோமத்தினிடத்து, விரைவுள்ளவர்களாய் வருக.

௯. அழிவில்லாதவர்களும், எங்கும்வியாபியாணின்ற புத்தியை யுடையவர்களும், துரோக மற்றவர்களும், (பொருளைக்) கொண்டு வருகிறவர்களுமாகிய விசுவ தேவர்கள் அவிசைவாங்கக் கடவது.

௧௦. இன்பமாகிய சத்தியவாக்கியங்களைப் பிரேரிக்கிறவர்களும், நற்புத்தி யுடையவர்கட்கு அறிவு மூட்டுகிறவர்களுமாகிய சரசுவதியானவள் யக்ஞியத்தை ஏற்றுக் கொண்டாள்.

(தொடரும்) த-போ.

OFFICE OF THE REGISTRAR
19 JAN 1915

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௫.] 1914ஸு நவம்பர்மீ, [பகுதி ௧௧.

## அதர்வணவேத
## மாண்டூக்யோபநிஷத்து.*

### காண்டம்-௧

ஓம்† எனும் அட்சரம் எல்லாவலருமாம், அதன் விரிவு சொல்லப்படுகிறது:—இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் நிகழ்வதான உலகமனைத்தும் ஓம் எனும் அட்சரம், முக்காலங்களினு மடங்காத எந்தப்பொருளுண்டோ அதுவே ஓம்.

*நூற்றெட்டு உபநிடதங்களினுள்ளே முடிவினுள்ள முத்திகோப நிடதத்தில், நூற்றெட்டு உபநிடதங்களுள்ளே முப்பத்திரண்டு சிறந்தன என்றும், அம்முப்பத்திரண்டினுள்ளே பத்துச்சிறந்தனவென்றும், அப்பத்தினுள்ளே இம்மாண்டூக்யோப நிடதம சிறந்ததென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

†ஓம் என்ற சொற்குப் பொருள் பரமசிவமேயாம். ' ஓம் நம: சிவாய' எனும் ஸ்ரீருத்திரத்தினும், "த்யாயே தோங்காரம் மீச்வரம்" எனும் இயதர்வசிகோப நிஷத்தானும், "ஓங்காரம் ஸர்வேச்வரம்" எனும் நிருஸிம்ஹோத்தரதாபிநீயுப நிஷத்தானும், "ஓங்காரோவேத பரஈசோவாசிவ ஏகோத்யேயா"

2. எல்லாப்பொருள்களினு நிறைந்திருப்பது பிரமம், பிரணவ ரூபியாகிய ஆன்மாவான *பிரமம் நாலுபாத முடையது.

காண்டம்-உ.

சாக்ராவத்தையி லிருப்பவனாய், (தனக்கன்னியமான) வெளி பொருள்களை யறிபவனாய், (சுவர்க்கம் சூரியன் காற்று ஆகாயம் நீர் பூமி இவைகளின் உருவமாகிய தலை கண் பிராணன் நடுவுடல் உபஸ்தம் கால் என்கிற ஆறும் ஜீவனுமாகிற) ஏழு அங்கங்களோடு கூடினவனாய், (ஞானேந்திரியம்-ரு-கன்மேந்திரியம்-ரு-வாயு-ரு-அந்தக்கரணம்-சு-ஆக)பத்தொன்பது முகங்களோடு கூடினவனாய், பொருள்களனைத்தையும் அனுபவிக்கின்ற மனிதர்களைப் படைக்கின்ற வைச்வாநரனை† பிரமன்‡ முதற்பாதம்.

உ. சொப்பனாவத்தையி லிருப்பவனாய், மனத்தாலறியுந்தன்மையுள்ளவனாய், ஏழு அங்கங்களையுடையவனாய், பத்தொன்பது முகங்களையுடையவனாய், அயலறியாமல் தன்னளவு அனுபவிப்பவனாயுள்ள தைசஜன் என்னும் விஷ்ணு இரண்டாவது பாதம்.

---

எனும் அதர்வசிரோப நிஷத்தானும், "ஓம் மஹாக்ராஸாய மகாதேவாய சூலினே" எனும் சரபோப நிஷத்தானும், "ஓங்காரஸ்வரூபிணம மகாதேவம்" ,,எனும் பஸ்ம ஜாபாலோப நிஷத்தானும், "சிவோமே அஸ்து ஸதாசிவோம்" எனும்தைத் ரீயாருண சாகைநாராயணத்தானும் அறிக. ஓம் என்பது விஷ்ணுவைக் குறித்திடாதோ வெனின், குறித்திடாது. என்னை? நிருஸிம்ஹ மோத்தரதாபின்உபநிஷத்தில், "அகாரம்ப்ரஹ்மாணம," "உகாரம்விஷ்ணும" "மகாரம் ருத்ரம்" "ஓங்காரம் ஸர்வேச்வரம்" எனக்கூறுமாற்றால் இரண்டாவது மூர்த்தி நாலாவது மூர்த்தியாதலெங்ஙனம் என்க?

*ஈண்டு பிரமத்தினை ஆன்மாவென்றது அங்காங்கி லட்சணை.

†பிரமன் இரண்ய நிறத்தனாகலின் வைசுவாநரனென்றனர். இது பண்புவமையாகுபெயர். வைசுவாநரனாவான் அக்கினி, "ஏஷவா அக்னிர்வைஸ்வாநர" (இந்த அக்கினியே வைசுவாநரன்) எனும் யசுர்வேதம், வைசுவாநரனைப் பரமாத்மாவாகச்சொல்லும் அவசரமும் சுருதியிலுண்டு. பங்கஜம் என்பது தாமரைக்கும், தவளைக்கும், மாணிக்கத்திற்கும் பெயராயினும் சம்பந்த நோக்கிப் பொருள் செய்யவேண்டுவதுபோல ஈண்டுப்பிரமனெனக் கொளல் வேண்டும்.

‡ "ஜாக்ரேத்ப்ரஹ்மா ஸ்வப்னேவிஷ்ணுஸ் ஸுஷுப்தௌ ருத்ரஸ் துரீயமக்ஷரம்" எனும் பிரஹ்மோபநிஷத்தால், சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி



௩. எவ்விடத்தில் உறங்கினவன் ஒருபொருளினு மிச்சைவைப்பதில்லையோ, ஒன்றையும் பார்ப்பதில்லையோ, அந்த இடம் சுழுத்தி, அதில் ஒன்றாயிருப்பவனாய் ஞானசொரூபியாய், ஆனந்த சொரூபியாய், ஆனந்தத்தை யனுபவிப்பவனாய், மனத்தாலறியத்தக்கவனாயுள்ள பிராஞ்ஞன் என்னும் உருத்திரன் மூன்றாவது பாதம்.

௪. இந்தப் பிராஞ்ஞன் சகலத்திற்கும் சர்வேச்சுவரன், இவர் சர்வஞ்ஞன், இவன் அந்தரியாமி, இவன் சகலத்திற்கும் காரணன், இவன் பிராணிகட்குப் பிறப்பும் இறப்பும் (உண்டாக்குபவன்)

௫. சாக்கிரம் சொப்பன மிரண்டும் இல்லாததும், அஞ்ஞான சுழுத்தியில்லாததும், பிரஞ்ஞைக்கு வேறானதும், ஞானத்தைத் தருவதும், கண்முதலியவற்றிற்குக் கோசரமாகாததும், வாக்வியாபாரத்திற் கெட்டாததும், கரத்திற்குப் பிடிபடாததும், அளவையாலறியாததும், இத்தகையதெனக் குறிக்கப்படாததும், இஃதென நிச்சயிக்கப்படாததும், ஞானானந்தசொரூபமுடையதும், பிரபஞ்சலயஸ்தானமானதும், சாந்தமாயுமிருக்கிற சிவம்* எனும் அத்வைத வஸ்துவை நான்காவதாக எண்ணுகிறார்கள், அது சர்வாந்திரியாமி, அது அறியத்தக்கது.

---

யெனும் அவஸ்தாத்திரயங்களுக்குரியர் முறையேபிரமன்விஷ்ணு உருத்திரன் எனஸ்பஷ்டமாயிருக்கவும், அவஸ்தாத்திரயங்கட்கு ஸங்கர்ஷணாதியரைஇராமாநுஜர் மும்மூர்த்திகளாக்கியது ஆதரணீயமன்று.

*இவ்வுபநிடத மூலத்தில், "ப்ரபஞ்சோபசமம் சாந்தம்சிவமத்வைதம் சதுர்த்த மந்யந்தே" எனப்பெறப்படும் இப்பொருள்களையே பயக்கும் வாக்கியங்கள் நிருஸிம்ஹபூர்வ தாபிந்யுபநிஷத்திலும், உத்தரதாபிந்யுபநிஷத்திலும், "ப்ரபஞ்சசோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே"எனவும்; நாரதபரிவ்ராஜகோப நிஷத்தில் "ப்ரபஞ்சோபசமம் சிவம்சாந்த மத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும், ராமோத்தர தாபி நீயோபநிஷத்தில் "ப்ரத்யய ஸாரம் ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும் வருகின்றன. நான்காவது தெய்வத்தை விளக்கு நிமித்தம் "சதுர்த்தம்"என்னும் வாக்கியத்தோடு வெளிப்படும்வசனங்கேட்டோ

காண்டம்-௩

அட்சரங்களிலும் மாத்திரைகளிலு மிருக்கிற நாதசொரூபமான ஓங்காரம் பரமாத்மா, அகாரம் உகாரம் மகாரம் நாதம் ஆகிற மாத்திரைகள் நாலும்பாதங்கள்.

௨. சாக்கிரஸ்தானத்திலிருக்கிற வைசுவாநரனான பிரமா அகாரமாகிய முதல்மாத்திரை, வியாபகமுடைமையாலும், ஆதியுடைமையாலும் இங்ஙனம் சொல்லப்படும், எவனிவ்வாறு அறிவனோ அவன் சகல விச்சைகளையும் அடைகிறான் முதல்வனு மாகிறான்.

௩. சுவப்பன தானத்திலிருக்கிற தைஜஸனான விஷ்ணு உகாரமாகிய இரண்டாவது மாத்திரை. உத்கிருஷ்டமானதாலும், இருதன்மையுடைமை யாலும் இங்ஙனம் சொல்லப்பட்டது, எவனிவ்வாறு அறிவனோ அவன் ஞானசந்தியிலும் அதிசயத்திலும் சமானவனாகிறான், இவன் வம்சத்தில் பிரமஞான மில்லாதவன் பிறப்பதில்லை.

---

மிருக்குஞ் தெய்வப்பெயர் "சிவம்" என்பதன்றி நாராயணனாதி நாமங்களில் யாது மின்றென்பது வெளிப் படையாகலின், நாராயணனை நான்காம் தெய்வமாக வேதம் விதித்ததில்லை. இவ்வுபநிடத வாக்கியத்திற்கு அர்த்தஞ் செய்த இராமாநுஜர் சிவம் என்பதற்கு மங்கள சொரூபனென்றும், சதுர்த்தமென்பதற்குச் சங்கர்ஷணபிரத்யும்ந அநிருத்தரெனும் மூவர்க்கும் லயஸ்தானமான வாசுதேவனென்றும் பொருள்கொண்டனர். "அத்வைதம்சதுர்த்தம் பிரஹ்மவிஷ்ணுருத்ராதீதமேகமாசாஸ்யம் பகவந்தக்சிவம்" (அந்நான்காந தெய்வம்பிரமன் விஷ்ணு உருத்திரனெனும் மூவரின் மேம்பட்ட சிவம்)என பஸ்மஜாபால வசனம் இனிது விளக்கினமையின், இராமாநுஜர் அர்த்தம் அநர்த்தமாம். அன்றியும், "நஜாயதேம்ரியதே" (ஜீவனுக்கு உற்பத்திநாசங்களில்லை) என்ற வேதவசனத்திற்கு முரணாக வாசுதேவனிடத்திலிருந்து சங்கர்ஷணன் உண்டாயினனென்றும். அவன் ஜீவனென்றும், ப்ரத்யும்நன் மனசென்றும், அநிருத்தன் அகங்காரனென்றும் பாஞ்சராத்திரம்கூறலின், இவர்களை மும்மூர்த்திகள் ஸ்தானத்தில்வைத்த இராமாநுஜர் கொள்கை அஸமஞ்ஜஸமாம்.



௪. சுழுப்தி தானத்திலிருக்கிற பிராஞ்ஞன் உருத்திரன் மகாரமாகிய மூன்றாவது மாத்திரை, அளவிடப் படுகின்றமையாலும், இலயத்தையடைகின்றமையாலும் இங்ஙனம் சொல்லப்பட்டது, எவனிவ்வாறு அறிவனோ அவன் எல்லாவற்றையு மளக்கிறான், இலயமுண்டாகிறது.

காண்டம்-௪

அளவிலனாய், வாக்வியாபாரத்திற் கரியனாய், பிரபஞ்சலயஸ்தானமாய், சிவமாய், அத்வைதமாய் (அந்தர்) ஆத்மாவாயிருக்கிற இது பிரணவமே†யாம், எவனிதையறிகிறானோ அவன்பரமாத்மானுக்கிரகத்தால் பரமாத்மாவை யடைகிறான்.

---

†ஈண்டும் சிவம் பிரணவமே என்றதைக்கவனிக்க. அன்றியும் இவ்வுபநிடதசம் பந்தமாயேற்பட்டுள்ள கவுடபாத காரிகையினும, "ப்ரணவ மீஸ்வரம்," சிவோமத்வைதவ "மோங்காரம், ஶிவ: ஓங்காரரோ" எனும்வசனங்களையுங்காண்க.

மணவழகு.

---

## சுருதிருசனம்.

---

யசுர்வேதம்.

"விரூபேப்யோ விஸ்வரூபேப்யச்சவோநமா."

(இ-ள்) விரூபர்க்கும் விசுவரூபர்க்கும் நமஸ்காரம்.

ஷை அ.

"நீலக்ரீவாயச ஶிதிகண்டவாயச"

(இ-ள்) நீலக்கிரீவர்க்கு நமஸ்காரம் சிதிகண்டர்க்கு நமஸ்காரம்.

இருக்குவேதம்.

"ஆவோராஜா நமப்வரஸ்ய"

(இ-ள்) உன்னைக் காத்துக்கொள்ளும் பொருட்டு உன்யஞ்ஞத்திற்குக் கர்த்தரிவாக உருத்திரரைத் தேடிக்கொள்.

யஜுர்வேதம்.

"நமஸ்தே ருத்ரமந்யவே"

(இ-ள்) உருத்திரரே உமது ஞானத்திற்கு நமஸ்காரம்.

ப-ரீ,

உ

சிவமயம்.

# சிவோபாசனமகிமை.

---

சிவோபாசனை யென்பது, சிவ உபாசனையென பகுக்கப்படும். அது சிவனை உபாசித்தல் என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும் சிவனது உபாசனை என்று ஆறாம் வேற்றுமைத் தொகையாகவும் விரியும். தடத்தநிலையில் தென்மொழியில் கடவுள் என்பது பகுதி விகுதி என்னும் இரண்டுறுப்புக்களால் முடிந்த தொழிற்பெயர்ப் பகுபதம். அப்பகுபதத்தின் முதற்கண் நின்றகட என்னும் பகுதிக்கும், வடமொழியில் பிர்ம்மம் என்னும் பதத்தின் முதற்கண் நின்ற, பிருக என்னும் பகுசிக்கும் ஓங்கியிருத்தலெனப் பொருளுண்மையில், அவ்விருமொழிகளும் ஒருபொருண்மேலன (அதாவது) கட, பகுதி-உள் தொழிற்பெயர் விகுதி. எல்லாவற்றையுங் கடந்தவன் எனப்பொருள். இன்னும் வைதிகசைவ சித்தாந்திகள் கொண்ட அருட்சிற்சத்தி குணங்களையுடைய சகுணபிர்ம்மமென்பாராய், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அகரமுதலவென்னும் முதற்றிருக்குறளிலே, அக்கடவுளை பகவன் என்னும் சப்தத்தினால் விதந்து கூறினர் கூறவே. பகவன் என்றது, ஞானம், திரு, வைராக்கியம், புகழ், வீரியம், ஐசுவரியம என்னும் அறுகுணங்களும் அக்கடவுட்கு உளவென்பது பெற்றாம் பெறவே,

சிவதத்துவ முதற் பிருதிவி யீறாய்க்கிடந்த முப்பத்தாறு தத்துவங்களின் பாற்பட்ட சரீராதிகளையும் அதிஷ்டித்து நிற்பவர் சிவபிரானாதலின் அவர் விஷ்ணு எனப்படுவார் என உபபிருங்கணத்திலும் கூறப்படலானும், இந்தச்சிவதத்துவ முதற்பிருதிவி அந்தமாயுள்ள தத்துவம் முப்பத்தாறனுள், ஆன்மதத்துவம் இருபத்திநான்கும், நான்காவது பிரசினத்து எட்டாவது மந்திரத்திலும், வித்தியாதத்துவம்ஏழும் சிவதத்துவம்ஐந்தும் மூன்றையே சுவேதாசுவதரத்தின் முதலாம் அத்தியாயத்திலும். பிருகச் சபாலத்திலும். இவற்றின் உபபிருங்கண மாகிய கைலாச சங்கிதை ஒன்பதாம் அத்தியாயத்து இரு



பத்தொன்பதாஞ் சுலோக மிறுதியாய்க்கிடந்த ஆறுசுலோகங்களினும் காணப்படுதலானும் ஏனைய பிர்மா முதலிய தேவர்களுடைய வியாபகம் ஆன்மதத்துவத்தின்பாற் பட்ட மூலப்பிரகிருதியின் வரையில் அமைந்து சாவதிவியாபகமாய் முற்றுவதாக, பரங்கருணைத்தடங்கடலாகியநமதுபரமேசுரப்பிரபுவின் வியாபகமோ மூலப்பிரகிருதிக்குமப்பிரகிருதி, பரப்பிரகிருதி என்னும் முத்திறப் பிரகிருதிக்கு மேற்பட்ட நிரவதி வியாபகமாய்ச் சிறந்து நிற்றலின், அவரே முழுமுதற் கடவுளாதல் பெறப்பட்டது. படவே பகவன்என்னும் நாமம் செம்பொருட் சிவத்தை உணர்ந்த சீவன் முத்தர்கட்கும் செல்லுமேனும், அது அப்பரமேசுரபிரபுவிற்கே மேலே உரைத்த வாற்றாற் சென்று அவ்வுலக சிருட்டி அவரிலே முற்றுமாறு திருவள்ளுவநாயனார் பகவன் என்னும் பதத்துக்கு முன்னர் ஆதிஎன்னும் அடைமொழியை நிறுவி ஆதிபகவனை என்றார். இன்னும் ஆதி என்பது இரண்டு அட்சரத்தால்யது எனவும் முதல் எனவும் ஓங்கார மெனவும் சாந்தோக்கிய உபநிடதத்தில் கூறிய வாற்றானுந் தெற்றென விளங்கும். நமது சிவஞானசுவாமிகளும்,

வெண்பா.

“சீர்கொளிறை யொன்றுண்டத்தெய்வ நீயென்றெப்பாற்-சேர்
விலசையாற் றெளிந்தோஞ் சோமேசா-வோரில் அகரமுதல வெழுத்
தெல்லாமாதி-பகவன் முதற்றேயுலகு” என்றருளினர்.

கிரணமின்றிச்சூரியன் பிரகாசியாத வாறுபோலச் சத்தியின்றிச் சிவபிரான் பிரகாசிப்பரல்லர். பராசத்தியார் சிவபிரானார்க்குச் சமவாய சம்பந்தத்தினர் என ஸ்ரீகாலோத்தர ஆகமத்தில்,

“குணபூதா பராசத்தி தகாசிரய குணீசிவகா” எனப்.

பிரதிபாதித்தலினாலும் நன்குவிளங்கும், ஆகாராதி அட்சரங்களுக்கெல்லாம் முதலாய் அகாரம் நின்றாற்போலச் சமஸ்தசீவர்களுக்கும் முதல்வர் சிவனே என்று வாதுளோத்தராக மத்திலும் கூறப்பட்ட உண்மையை உணர்ந்தேநம் தெய்வப்புலவனார்,

“அகரமுதல வெழுத்தெல்லாமாதி – பகவன் முதற்றேயுலகு”.
என்றருளிச்செய்தனர்.

இன்னும் "அகரமுதலானை யணியாப்ப னூரானைப்-பகருமனமுடையார் வினைப்பற்றறுப்பாரே" எனத்திராவிடசுருதியானுங்கூறப்பட்டது. கடவுளை வணங்குதற்கு மனம் வாக்குக்காய மென்னும் மூன்றுங் கரணங்களாயிருக்கின்றன. மனம் அவருடைய வடிவைத் தியானஞ்செய்ய உதவுகின்றது. வாக்கு அவருடைய மந்திரங்களைச் செபிக்க உதவுகின்றது. காயம் அவரை அருச்சித்தற்கும் அவரை வழிபடுதற்கும் உதவுகின்றது. ஆனால் அவர் இம்மூன்றுக்கும் எட்டுபவரல்லர் அதீதமான வஸ்துவாயிருக்கிறார். கடவுள் ஒன்றுக்கும் எட்டாதவருமல்லர் அறிவுக்கு எட்டுபவர் ஆதலால் ஞானிகள் அவரை அறிவினாலடைந்து ஆனந்தமடைகிறார்கள். கடவுள் ஞானானந்தசொரூபி. அதனால் அவரை ஞானம் ஒன்றினால் தான் அறியலாம். மற்றவற்றாலறியவொண்ணாது. அது எதுபோலவெனின், ஒளிவடிவினதாகிய சூரியனை ஒளிவடிவுடைய கண்ணொன்றினாற்றான் காணலாம். காது அல்லது மூக்கால் அல்லதுவாயால் அல்லது மெய்யால் அந்தச்சூரியனைக்காணவொண்ணாது அதுபோலவென்க.

உலகத்திலுள்ள எல்லாரும் ஞானிகளல்லர். அதனால் எல்லாரும் கடவுளுடையஞானவடிவத்தைத் தரிசிக்கமாட்டார்கள். கடவுள் ஞானிகளைமாத்திரம் உய்விப்பவரல்லர் எல்லாஉயிரையும் உய்விக்கும் பெருங்கருணை யுடையவர். அதனால் அந்தந்த உயிர்களுடைய சக்திக்கேற்ப வணங்கும்படி அவர்பலவிதமான வடிவங்களைக் கொள்ளுகிறார்.

கடவுள் கொள்ளும் வடிவங்களுள்ளே சிலமனத்திற்கு விஷயமாவனவும், சிலவாக்குக்கு விஷயமாவனவும், சிலகாயத்துக்கு விஷயமாவனவுமாயிருக்கும்.

யோகிகள்மனத்தால் கடவுள்வடிவைத் தியானஞ்செய்கிறார்கள். அத்தியானத்துக் கேற்ப கடவுள் கொள்ளும் வடிவம் மந்திர சரீரம் அதனால் யோகிகளுடைய வழிபாட்டிற்கு மந்திரங்கள் சாதகமாயிருக்கின்றன.

புறத்தே செல்லும் இந்திரியங்களை யடக்கி அவற்றின் மயக்கையொழித்தவர்க் கன்றி மற்றவர்க்கு மனத்தை ஒரு குறியில் நிறுத்தி வழிபாடாற்றும் வன்மையுண்டாக மாட்டாது. அதனால் அவர்கள் பொருட்டுக் கடவுள் புற விந்திரியங்களுக்கு விஷயமாகத் தக்க வடிவங்களைக் கொள்ளுகிறார். அவ்வடிவங்களே ஆலயங்களிலிருப்பன.



அதை வணங்குவோர் சரியையாளரெனப்படுவார். அவர்களால் அவ்வடிவங்களைத் தரிசித்தும், வாயினால் தோத்திரஞ் செய்தும், தலையினால் வணங்கியும், கைகளால் அஞ்சலி செய்தும், கால்களால் வலம் வந்தும், அங்கங்களால் நமஸ்கரித்தும் செவிகளால் தோத்திரங்களைக் கேட்டும் இவ்வாறு கடவுள் வணக்கஞ் செய்வர், இது பற்றியே,

"கண்ணுதலாலய நோக்குங் கண்களே கண்கள், கறைக் கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்—பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்-பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்-பண்ணவன்றன் சீர்பாடும் நன்னாவே நன்னாப்- பரன் சரிதையேகேட்கப் படுஞ் செவியே செவிகள்"-

"அண்ணல் பொலன்கழல் நினைக்கும் நெஞ்சமேநெஞ்சம், அவனடிக்கீ ழடிமைபுகுமடிமையே யடிமை" - என ஆன்றோர் வாக்கானுந் தெள்ளிதிற்புலனாகும். வேறு சிலர் அகத்தே ஒருவாறு வழிபடு மாற்றாலும், புறத்தே நன்கு வழிபடுமாற்றாலும் உடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் பொருட்டுக் கடவுள் அகத்தே மந்திர லிங்கவடிவத்தையும், புறத்தே தாவரலிங்கவடிவத்தையும் கொள்கிறா. அகத்துச் செய்யும் மந்திரலிங்க வழிபாடு மனத்தா லாற்றுவதும், புறத்துச் செய்யும் தாவரலிங்க வழிபாடு காயத்தாலாற்றுவதும் என இருதிறனாயிருக்கும். அவர் இருதய கமலத்தே மந்திரலிங்கம் வடிவம் பாவித்து அபிஷேக அலங்கார நைவேதன ஆராதனைகளைச் செய்யும் நாபி குண்டத்தே ஓமஞ்செய்தும் புருவநடுவே தியானஞ் செய்தும் இவ்வாறு அகப்பூசை செய்வர். இது அந்தர்யாகமெனப்படும். அதன் பின்பு புறத்தே தாவரலிங்கவடிவிற் கடவுளுடைய மந்திரலிங்க வடிவை ஆவாகனஞ் செய்து அவ்வடிவிற் கடவுளை வழிபடுவர்- இவர்களுடைய வழிபாட்டுக்கு மந்திரங்களே சாதனங்களாயிருக்கும். அன்றி மனந்தியானித்தலினும், வாக்கு மந்திரங்களைச் செபித்தலினும் காயபூசனை புரிதலினுமாகிய இவர்க்கு முக்கரணங்களும் முதல்வன் வழிபடுவன வாகும்.

சரியையாளர் கிரியை செய்தற்கும் கிரியையாளர் யோகஞ்செய்தற்கும், யோகிகள் ஞான சமாதியுறு தற்கும் வல்லவரல்லர். அதனால் கடவுள் அவரவர் அறிவும் ஆற்றலும் காதலும் நின்றவழி அவ

ரவர் உய்யு நிமித்தம் அவரவர்க்கு எளியராய் ஒவ்வொரு வடிவங்களை இவ்வாறு பலவிதமாய்க் கொள்ளுகிறார்.

கடவுள் கொள்ளும் வடிவங்களை விக்கிரகமென்று சொல்லப்படும். விக்கிரகமென்றால் கண்டித சரீரம் அல்லது சகளத் திருமேனி யென்றர்த்தமாம். மந்திரசரீரங்களும் விக்கிரகங்களே. சிலை லோகம் என்பவற்றாலாகிய வடிவங்களும் விக்கிரகங்களே. ஆன்மா சரீரத்தைத் தனக்கு இடமாகக் கொள்வதுபோலவும், அக்கினித் திரியைத் தனக்கு இடமாகக் கொள்வது போலவும், கடவுள் ஒவ்வொரு விக்கிரகங்களைத் தமக்கு இடமாகக் கொள்ளுகிறார். ஆன்மா மலபந்தத்தாற் சரீரங்கொள்ளும் கடவுள் உயிர்கள் மேல்வைத்த பெருங்கருணையினால் அம்மலபந்தத்தை யொழிக்கு நிமித்தமாக வடிவங் கொள்வர். நம்மவருள்ளும் பலர் மனம் வாக்கு காயங்களுக்கும் அறிவிக்கும் உள்ளதார தம்மியங்களும் அவற்றின் இயல்புகளும் கடவுள் வணக்கத்தில் அவற்றை யுபயோகிக்கும் வழிகளும், அவ்வணக்கத்தை எற்கு நிமித்தம் கடவுள் அவ்வப் பொழுது கொள்ளும் வடிவங்களினியல்புகளும் இவை இவை என்று தோன்றாமையால் விக்கிரகவணக்க முதலியவற்றை இகழ்ந்து துன்பப்படுகிறார்கள்.

காயத்தால்வழிபாடினும், மனத்தால்வழிபடினும், அறிவால் வழிபடினும் அவற்றாற்பற்றப்பட்டு அவற்றிற்கு விஷயமாகும் வடிவங்களெல்லாம் விக்கிரகங்களேயாமென்பதனை அவர்கள் கிஞ்சித்தும் சிந்தித்திலர் போலும்.

"ஊனடைந்த வுடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்."

எனநமது சேக்கிழார் சுவாமிகளருளிய திருவாக்கையும் உய்த்துணர்க. சுபம்.

இன்னும் வரும்

இங்ஙனம்
S. நடேச தேசிகர்,
கவர்ன்மெண்ட் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,
கோட்டுச்சேரி.

உ

திருச்சிற்றம்பலம்.

# அறிவினாலடையவேண்டியது யாது?

மலர்தலையுலகின் மல்கிய உயிர் வர்க்கங்களுள்ளே மகத்துவம் வாய்ந்த மானுட தேகத்தைப்பெற்ற நாங்கள் இறைவனருளிச்செய்த வேதாகமங்களில் விதித்தன செய்து, விலக்கியன ஒழித்து, வீடுபேறடையும் விசிட்ட அறிவுடையோம் என்பது மறுக்கொணா வுண்மையாகும். அரிய இந்தத்தேகத்திலுள்ள ஆன்மாக்களே பெரியஅற்புத ஆற்றலும் அறிவின் றிட்பமு முடையன. இது கரதலாமலகம் போற் காணப்படும் உண்மையாகும். நாங்கள் சின்றைப்பல்பிணிச்சிற்றறிவுடையோ மென்பதைச் சிறிதாவது சிந்தியாது பலவித கர்மங்களையும் மனம் போனபடி செய்து முடிக்கின்றோமன்றி, மனதிலுற்றவற்றை ஆராய்கின்றோமா? இல்லை! இல்லை!! ஆராயாமை, நாங்கள் செய்வனயாவும் உயர்ச்சியுடையன என்றகருத்தேயன்றிப்பிறிதொன்றுமன்றாம். ஆகவே, பகுத்தறிவுடைய இந்நன்னிலைமையையீந்தபரம் பொருளாகிய பகவனின் திருவுள்ளப்படி மனதை நிறுத்தி அறிவினாலே மாண்புடைச் செயலைப்புரிதல் யாவருக்கும் முக்யகடமையாகும். "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்பதையுங் கவனிக்க.

இங்ஙனம், அறிவை மேற்படுத்தி நல்லன நாடும் நமர்களே பிறந்தவர்கள், அறிவென்னும் அருந்தீபத்தினைப் பிரகாசிக்கச் செய்பவர்கள். பிறவிப்பெருங்கடலை நீந்திப் பேரின்பமடைவார்கள். எதற்கும் அறிவு வளர்ச்சியே வேண்டியது அறிவினாலடைதற்பாலது திருவருட்சாகரமாய் அரன்றிருவடித் தியானமேயாம். இவ்வறிவு இயற்கையாக அமைந்துள்ளதாமாயினும், கல்வியோடு சேருங்காலத்துப் பிரயோசன முடையதாகும். எனவே, இயற்கையறிவு செயற்கையறிவு என்று இருதிற அறிவு மனிதர்களுக்கு உள்ளன என்பதே சித்தாந்தமாம்.

(க.) இங்கே கூறிப்போந்த அறிவு என்றபதமே யாராயவேண்டியதாகும். அறிவானது நன்மை தீமைகளைப் பகுத்து அறிதற்குச் சாதனமானது. (நன்மையைச்செய்து தீமையையொழித்தல் அறிவின் சக்தியாகும் என்றபடி ) அவ்வறிவைத் தீயவழிச்செலுத்துதல் மனக் குற்றமேயன்றி அறிவின் குற்றமன்று.

சராசரப் பொருள்கள் அறிவுள்ளன. எவ்வித அறிவுள்ளன? கன்மத்தின் வன்மை மென்மைகளுக்கு ஏற்ப எடுக்கப்பெற்ற தேகத்திற்கு ஏற்ற அறிவினுயர்வு தாழ்வுகளுள்ளன. இது, பிரத்தியக்ஷம். ஜீவனின் வேறுய்ச்செல்லும் உணர்ச்சி அறிவனுகும். ஆனால், அறிவின் முதிர்ச்சியே உணர்ச்சியாகும். ஆன்மாவை ஆங்கிலத்தில் ((Soul சோல்) என்பர். மனிதனை ஊக்கச்செய்து நல்லறிவினை விகஸிப்பிக்குஞ்சக்தி ஜீவனோடு கூடியது, அச்சக்தியின் வளர்ச்சியே அறிவாகும். அறிவினாலுண்டாகும் நுண்ணுணர்ச்சியின் முடிவே பூரணானந்த ஸ்வரூபியாகிய இறைவனின் பேரருட்டினைப்பாகும். திருவள்ளுவனாயனாரும், அறிவு என்னாது உணர்வு என்னும் பதத்தைப் பிரயோகஞ்செய்தனர், உணர்தல் = (சத்துப்பொருளை நாடித்) தெளிந்து நிற்றல். "மனிதன் அறிவுடையனாயினும், அறிந்த ஒன்றை நிரூபணஞ் செய்து, அதனிடத்து அழுந்தி நிற்றலே அவனது உணர்ச்சியாகும்,, என்றும் ஆன்றோர் கூறுப.

அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே
பதுவென் றறியவு முண்டே—யதுவென்
றறிய விரண்டல்ல ளுங்கறிவு னிற்ற
லறியுமறி வேசிவமு மாம்.

என்ற அருட்டிருவாக்கையும் நோக்குக. ஆன்மா அறிவாகாது. அறிவினாலே ஆன்மா அவனுருவடையும், ஆகவே, ஆன்ம ஞானத்தினாலே சிவஞானமும் சிவஞானமுடிவே பேரின்பவாழ்வு மாகுமென்பது தெளிக.

(உ) இன்னும் அறிவானது இலௌகிக அறிவுஎன்றும், வைதிக அறிவு என்றும் இருவகைப்படும். உலகசம்பந்தமான அறிவு ஆன்மாவுக்கு உத்தம உயர்வினைக்கொடுக்க மாட்டாது. வைதிக அறிவானது வேதாந்த சம்பாவனா நிலையானே ஆன்மாவை ஆநந்த மயமாக்கு மியல்பினது.



இலௌகிக அறிவாவது: தேகம் உலகம் ஆகிய இவற்றின் அநித்த உண்மையினை விசாரியாது தேக போஷணையினையும் உலக இன்பத்தினையும் பெரிதாக மதித்தும், சுற்றத்தார் புத்திரர் மனைவி மக்கள் மாட்டு உறைந்த அன்புகொண்டும், இறைவனைத் தியானஞ் செய்யாது காலத்தை அவகாலமாகப் போக்குதன் முதலியன. உலக ஏடணைகளை விடாதவன் மோக்ஷாநந்தத்தைப் பெறமாட்டானாகையாலும், நாங்கள் உலகமும் தேகமும் அறிதலைப் பிரமாணமின்றிக்காண்டல் ஒருதலையாகையாலும், நிலையுடையான்மாவின் உயர்கதிகருதி நாளடைவில் உலகப்பற்றை ஒருத்தலே சால்புடைத்தாகும். அறிவினாலடையவேண்டியது இஃதேயாம். 'மெய்ப்பொரு காண்பதறிவு" என்ற செந்நாப்போதார் திருவாக்கும் இந்நற்பொருளைத்தெளியத் தெரித்தல் காண்க.

வைதிக அறிவாவது, "வேதயதீதிவேத:" என்றபடி அறிவிக்கின்ற அறிவனருள் வாக்காய வேதாகமமுறை பிறழாது கர்ம உபாசனாதிகளை அநுஷ்டித்து ஞானத்தைப் பெறுதலே முக்கியமானது எனக்கொண்டு, பதிபசுபாசமாகிய முப்பொருளுண்மையையும், ஆன்மாபாசத்தை விட்டுநீங்கும் வழியையும் நாடி உலகவின்பங்களை உவர்த்து, அத்துவிதாநந்தப் பேறுகருதி இறைவன் மாட்டுப் பக்தியை வளர்த்து வருதல்.

வைதிக ஞானமே மேம்பாடுடையது, சிவதீக்ஷையே முதலில் வேண்டப்படுவது, தீக்ஷையினாலன்றி ஆன்மா மோக்ஷத்தைப் பெறமாட்டாது. இதனாற்றான் சிவதீக்ஷை பெற்றுச் சீவகாருண்ய மாகிய பரமதருமத்தினாலே மனப்பரிசுத்தமடைந்து, விமலனை என்றும் மறவாது நினைந்துருகிப் புறத்தும் அகத்தும் பூசிக்கவேண்டும். பூசாகாலத்திலே நாங்கள் கடவுளுடைய அடிமைகள் என்றும், நாங்கள்வைத்திருக்கும் பொருள்கள்யாவும் அவனுடைமைப் பொருள்கள்என்றும் உள்ளவாறு நினைந்து வழிபாடாற்றல் வேண்டும்.

முதலிலே கர்மங்களைச் செய்து ஞானத்தைப் பெறலாமன்றி, நாங்கள் ஞானிகள் என்ற வாய்ப்பறை சாற்றினாலே அகம்பாவமுடையோர் அறிவுடையோராக மாட்டார். ஆதலால் முத்தி நிலையில் ஆன்மா அவ்விறைவன் மயமாகி அறிவானய ஆநந்தத்தையடையச்

செய்தலே சீரியதாகும். திருவருளும் முன்னின்று செய்வதாக, துணை செய்வதாக.

"சிவோ தாதா சிவோ போக்தா சிவஸ்ஸர்வ மிதம்
ஜகது" என்பதும்,

"நாவார நம்பனையே பாடப்பெற்றோ
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர்நாத
னயனொடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் றென்றிசைக் கோன்றானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலுங்
குணமாகக் கொள்ளோமெண் குணத்து ளோமே,,

என்பதும் முறையே உடல்பொருள் ஆவி அனைத்தும் இறைவனுக்கே உரியதென்று பக்தியோடுதத்தஞ் செய்யவேண்டிய முறைமையினையும்,

அம்முறைவழி பாட்டினால் ஆன்மா அவ்விறைவன் குணங்கள் செறிந்து அவனுடன் ஐக்கியமுற்றுப்பேரின்ப மடையும் என்பதையும் வலியுறுத்தல் காண்க.

## முடிவுரை

சுருக்கிக்கூறிய சிலவாக்கியங்களினாலும், சில ஆன்றோர் தெளிவுடைத்திருவாக்குக்களினாலும், ஆன்மாவை யுணர்ந்து அறிவினைத் தேர்ந்து மலவாதனையை நீத்தலே அறிவினாலடைய வேண்டியது யாது? என்னும் வினாவிற்கு விடையாமாறு அறிக. பின்வரும் திருமூலயோகிகள் திருவாக்கைக் காட்டி முடிக்கின்றோம். சுபமஸ்து.

அவமுஞ் சிவமு மறியா ரறியார்
அவமுஞ் சிவமு மறிவா ரறிவார்
அவமுஞ் சிவமு மருளா லறிந்தால்
அவமுஞ் சிவமு மவனரு ளாமே.

திருச்சிற்றம்பலம்.

இங்ஙனம்
வ. மு. இரத்தினேசுவரையர்
தமிழ்ப்பண்டிதர்.

உ
சிவமயம்.

# தமிழுலகம்.

தொகுதி 3 பக்கம் 269 தொடர்ச்சி.

(3) தத்துவோற்பத்தி—நாத உற்பத்தி அழித்தல் (=சங்காரம்) என்பது பிறந்து இறந்து திரிந்த ஆன்மக்களின் இளைப்பு நீக்கும் பொருட்டு ஆன்மாக்களை முதல்வன் முதற்காரணமாகிய மகாமாயையில் ஒடுக்கி வைத்தலாம்.

இவ்வொடுக்கம் வேறு, முத்திப்பேறு வேறு என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நாம் ஈண்டு எழுதப்புகுந்தது உற்பத்திக் கிரமம் ஆகையாலும், நூல் "தமிழுலகம்" ஆகையாலும் அவ்விரண்டின் வித்தியாசத்தை ஈங்குக்கூறாமல் மேலேபோகின்றோம்.

இறுதிக்காலத்தில் (=சர்வசங்கார காலத்தில்) சரம் அசரங்கள் எல்லாம் நீறுக்கப்பெற்று வெளியெங்கும் பரவிநிற்கும். சகல அண்ட பிண்டங்களும் சகல அண்டங்களிலுள்ள சராசரங்களும் நீறுக்கப் பெற்றதால், இந்நீறு புழுதிதங்கும் இடம் இல்லாமல் இறைவனையே நாடி நிற்கும். இந்நீறானது முதல்வனுக்கு அபின்னமாயுள்ள சிற்சத்தி சந்நிதிப்பட்டிருக்கும். இதற்குத்தான் விபூதி யென்று பெயர். இதற்குத்தான் தூலநிலையில் (Matter) மாயை என்று பெயர். இப்போது, ஒவ்வொருவரும் Indestructibility of matter என்னும் பௌதிக சாஸ்திரத்தின் உண்மையைக் கவனிக்கத்தக்கது *

இம்மாயையின் (Matter) அதிசூக்கும நிலையே மகாமாயை என்னப்படும். இம்மகாமாயையில் ஆன்மாக்கள் ஒடுங்குவதே அழித்தல் (=சங்காரம்) என்று சொல்லப்படும்.

* உதாரணமாக:—பனிக்கட்டி—தூலநிலை. தண்ணீர் பனிக்கட்டியை நோக்க சூக்குமநிலை, நீராவி தண்ணீரைநோக்க அதிசூக்குமநிலை. அதுபோல, பொருள்கள் (Matter) தூலநிலையில் மாயை (அசுத்தமாயை) என்றும் அதிசூக்குமநிலையில் விபூதி யென்றும் பெயர்பெறும், இவ்விபூதியானது இறைவன் சந்நிதிப்பட்டு ஆன்மாக்களுக்கு இடம் தந்து நிற்கும் அவசரம் மகாமாயை என்று பெயர் பெறும்.

இம்மகாமாயையில் முதல்வனுடைய பரையாதி அருட்கதிர்கள் வீசுதலால் நாதம் உண்டாகிறது அப்படி உண்டாகும் நாதம்தான் பரநாதம். இதுதான் படைப்பில் முதற்றத்துவமாகிய சிவதத்துவம்.

### (4) கந்தழி—பாவிக்கூ உற்பத்தி

இதுகாறு பரநாதத்தின் உற்பத்தி கூறினோம். இனிமேல், ஒவ்வொருவரும் முக்கியமாய் அறிய வேண்டிய சங்கதி ஒன்று உளது. அதனை ஈண்டுக் கூறுவாம்.

சனி அண்டத்தைப்பற்றி வானநூல் வல்லார் ஒவ்வொருவரும் செவ்வனே அறிவார். வானநூல் வல்லார் அல்லார் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும்பொழுதாவது அவ்வண்டத்தின் உருவைப் படங்களில் பார்த்திருப்பார் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

சனி அண்டத்தைச்சுற்றிலும் 7-மதிகளும் பிரகாசமாகிய விருத்தங்கள் இரண்டும் கருமையாகிய விருத்தம் ஒன்றும் இருக்கின்றன. அவ்விருத்தங்களுக்கு மத்தியில் தூண்போல் உள்ள அண்டத்தின் மேல்புறம் பிரகாசமாகவும் கீழ்ப்புறம் கருமையாகவும் இருக்கின்றதை ஒவ்வொருவரும் அறிவர்.

சனி என்றால் ஓர் கிரகம்; ஓர் வாரம், கடவுள், தாய், சனியென்னெலல் ஈசானம் என்று அர்த்தங்கள் ஆகின்றன.

ஈசானமூலையைச் சனிமூலை(வடகிழக்கு)என்றும் சனியைச்சனியீச்சரன், சனிக்கடவுள் என்றும் வழங்குவதை யாவரும் அறியாதவரல்லர்.

சனி என்ற பதத்திலேயே பிறத்தல் என்னும் அர்த்தமும், ஒடுங்குதல் என்னும் அர்த்தமும் இருப்பதை யாவரும் கவனிக்கத்தக்கது அதனால் தான் சோதிடநூற் பிரகாரம் சனியை ஆயுள் காரகனாக எடுத்திருக்கிறார்கள்.

எந்த இடத்தில் சர்வமும் ஒடுங்குகின்றதோ, எந்த இடத்திலிருந்து பிறக்கின்றதோ அந்தஇடத்தைத்தான் தமிழர்கள் சனி என்றும் கந்தழி என்றும் கூறிவந்தார்கள்.

கந்தழி என்பது கந்து+அழி என்ற இரண்டு வார்த்தைகளால் ஆயது கந்து என்பது கந்தம் என்ற பதத்தினின்றும் வந்தது.



கந்தம்=அணுத்திரள்

ஆகையாலும் கந்தழி என்பதற்கு அணுக்களெல்லாம் சேரவும் பிரியவும் ஆக உள்ள ஒருஇடம் என்று அர்த்தமாகும்.

அல்லது கந்து என்பதற்கே பசுக்கட்டும்தறி, தூண் என்றஅர்த்தங்கள் இருக்கின்றன.

கந்து என்பது பசுக்களாகிய ஆன்மாக்கள் தங்கும் தூண் என்றும்,

அழி என்பது அத்தூணினின்றும் ஆன்மாக்கள் பிரிவெய்தும் அவசரம் என்றும் நன்றாய் விளங்குவதை ஒவ்வொருவரும் அறியலாம்.

சிவபெருமானை நமது நாவுக்கரசு "மழபாடி வயிரத்தூணே" என்று விளித்தமை ஒவ்வொருவரும் கவனிக்கத்தக்கது.

பிற்காலத்தில் இக்கந்தழியை இலிங்கம் என்ற பெயரால் வழங்கலாயினர். இது ஆரிய வழக்கு.

பிரகாசமான இரண்டு விருத்தங்களையும் கருமையானஒரு விருத்தத்தையும் கொண்ட சனி அண்டத்தை ஒருவர் கவனித்துப் பார்த்தால் அது இலிங்க உருவமாயிருப்பதை யாவரும் அறிவர்.

கருமையான விருத்தமும் கருமையான கீழ்முகமும் அதாவது அதோமுகமும் என்னவென்றால் ஆருயிர்களின் கூட்டமும், அண்டங்களும்சராசரங்களும் நீறான விபூதியும் தங்கியிருக்கும் காட்சி.

திருமந்திரம்.

"ஆமே பிரான் முகமைந் தொடும் ஆருயிர்
ஆமே பிரானுக் கதோமுகமும் ஆறன
தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்கு
நாமே பிரானுக்கு நரரியல் பாமே."

"அண்டமோ டெண்டிசை தாங்கும் அதோமுகம்
கண்டங் கறுத்த கருத்தறிவா ரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பார் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே."

மேலும் பௌதிக சாஸ்திரப்படி மேலே பிரகாசமும் கடுவில் ஒரு பொருளும் இருந்தால் அடித்தலம் இருண்டிருப்பது பிரத்தியக்கப்பிரமாணம். அதுபோல, சனி அண்டத்தின் மேல் முகமும் (ஊர்த்துவமுகம்) மேல் இரண்டு விருத்தங்களும் பிரகாசமான சோதிரூபம். அச்சோதியை அடுத்திருப்பது ஆன்மாக்களும் அணுக்கூட்டமும், ஆகையால அடித்தலம் இருண்டிருப்பது சகசமே.

இச்சனி அண்டத்திற்கு அதிபதி கணபதி என நூல்கள் கூறி நிற்கும். கணம் என்றால் கூட்டம் ஆன்மாக்களாகிய கணங்களுக்கு பரமசிவம் பதியாயிருப்பதால் அவ்விமலனுக்குக் கணபதி என்னும ஒருபேர் ஏற்பட்டது.

ஆகையால், சனி, கந்தழி, இலிங்கம் கணபதி என்பன ஒருபொருட்கிளவிகள்.

கணபதி என்றால் அவர் ஆனைமுகனாயிற்றே. அப்பேர் இலிங்கத்துக்கு எவ்வாறு பொருந்தும்? என்பார் சிலர். என்னே! யானைமுகன் என்றால் அல்லவோ ஆனைமுகனாகும். மேலும், தமிழர்கள் வீடுகளில் மஞ்சள்பிள்ளையார், சாணிப்பிள்ளையார் பிடித்துவைத்துப் பூசிப்பதை ஒவ்வொருவரும் நன்றாய் அறிந்திருப்பர். அது இலிங்க சொரூபமே யொழிய வேறென்ன?

மேலும், திருவிளையாட்ற் புராணம் வலைவீசினபடலத்தை ஒவ்வொருவரும் படித்திருக்கலாம். பரமசிவத் திடத்திருந்த புத்தகங்களையெல்லாம் வாரிவாரிக்கடலில் எறிந்தபொழுது பரமசிவம் முருகருக்கு ஊமையாகப் பிறக்கும்படி சாபம் கொடுத்ததாகவும், நந்தியெம்பெருமானுக்கு மீனாகப்பிறக்க சாபம் கொடுத்ததாகவும் கணபதி தாமாக இருப்பதால் சாபம் கொடுத்தால தம்மையே சாரும் என்று எண்ணிச் சாபம் கொடுக்கவில்லை யென்றும்கூறப்பட்டிருக்கின்றது. அதனுண்மையைக் கவனித்தால் நன்கு விளங்கும், கணபதி தத்துவாதீதர். சனி அண்டமும் தத்துவத்திற்கு உட்பட்டது அல்ல என்பதை தத்துவம் வல்லார் அறிவர்.

ஆகையால் சனியண்டம் என்று கூறுவதும், சனியண்டத்துக்குக்கர்த்தாவாகிய கணபதி யென்பதும் இலிங்கம், கந்தழியென்பதும் ஒன்றே.



பிள்ளையார் என்னும் விடயத்தைப்பற்றி இனி வெளிவரப்போகும் "பண்முறை விளக்கம்" என்னும் நூலில் பார்க்கக்காணலாம்.

சித்தாந்த நூற்பிரகாரம், சதாசிவநாயனார் அண்டங்களை உருவாக்கினபொழுது சனிஅண்டத்தை உண்டுசெய்யவில்லை யென்பதும் மற்ற அண்டங்களை உண்டாக்கினார் என்பதும் நன்றாய் வெளியாகிறது;

சனி அண்டத்தில் மேல் பாகம் நின்மலசிவம். அது சோதி சொரூபமானது. அதை அடுத்து உள்ள பிரகாசமான விருத்தம் தான் அருட்கதிர்கள். அக்கதிர்கள் முதல்வனிடத்தில் தோன்றிய போது விரிசடைமாதிரி இருக்கும். "மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்க வேண்டியது. அப்போது தான் அவருக்கு விரிசடையோன் என்று பேர்.

அவ்வருட்கதிர்கள் ஆருயிர்களின்மேல் (அதாவது அதோமுகத்தின்மேல்) படும்பொருட்டுக் குவிந்தபொழுது முதல் பிரகாசமான விருத்தமாயிற்று.

அவ்வருட்கதிர்கள் வீசும்போது நாதம்உண்டாகும் என்றுமுன்னமேகூறினோம். அந்நாதத்தோடு அக்கதிர்கள் அதோமுகத்தில் படும்போது நீறாயிருந்த மூவகை முதற்காரணங்களும் உணர்வு பெற்றுப் பிரியும். பிரிந்த சுத்தமாயை தான் பரவிந்து, இப்படிப் பிரிந்து விரிதலே கருமையான மூன்றாவது விருத்தமாகும். இனி முதல் பிரகாசமான விருத்தத்துக்கும் மூன்றாவது கருமையான விருத்தத்துக்கும் நடுவில்இருப்பது என்னவென்றால் அதுஒரு பிரகாசமான விருத்தம். அதுதான் எதிர்வெளிச்சம் (Reflective light) பிரகாசமான அருட்கதிர்கள் அணுக்கூட்டங்களின் மீது படும்போது எதிர்ப்பு (Reglection) உண்டாகும் அல்லவா? அதுவே இரண்டாவது பிரகாசமான விருத்தம்.

இவ்வாராய்ச்சியை எழுதும்நானும் அவ்வதோமுகத்தில் இருந்தவனே. இதைப்படிக்கும் நீங்களும் இருந்தவர்களே.

நாம் பிறந்து இறந்துதிரியும் இளைப்பை நீங்கச்செய்வதும் அவ்வதோமுகமே.

நமக்குத் தனுகரண புவனபோகங்களைக் கொடுப்பித்து மலத்தைக்கழுவி முத்திப்பேற்றை நல்குவதும் அவ்வதோமுகமே.

இவ்வதோமுகத்தைத்தான் சுவர்க்கநீக்கம்(Paradise Lost) என்னும் புத்தகத்தில் பண்டிதர் மில்டன் என்பவர் "This wild Abyss, the womb of nature, and perhaps her grave" என்றுகூறினது.

ஆகையால் நமக்கு இளைப்பை நீக்குவதும், முத்திப்பேற்றை நல்குவதுமான அவ்வந்தமில் சக்தியை அதோமுகமாகக்கொண்ட பரஞ்சோதியை யாம் மன மொழி மெய்களால் வணங்கவேண்டாமா? யார்தான் மறப்பார்கள்? மறந்தால் நன்றிகொன்றவர் ஆகமாட்டோமா?

ஆகையாற்றான் இதையறிந்த தமிழர்தாம் எங்கிருந்து வந்தார்களோ, பின்பு எங்கேபோய் ஒடுங்கிறார்களோ எது தமக்கு முத்திப்பேற்றை அடையும்படி செய்விக்கிறதோ, எது முத்திப்பேற்றைக் கொடுக்கிறதோ அந்தப்பொருளை வணங்குவார் ஆயினர்.

அது சனி அண்டம் என்பதும் அது இலிங்க சொரூபம் என்றும் தமிழர்கள் சனி, கந்தழி, கணபதி என்னும் பேரால் வணங்கிவந்தார்கள் என்னும், பின்னால் இலிங்கம் என்னும் பேரைக்கொடுத்து வணங்குகிறார்கள் என்றும் அறிகிறோம்.

தமிழர்களிடத்தில் ஆரியர்கள் இவ்வுண்மையை அறிந்துகொண்டு பிறகு இலிங்கபூசை செய்யக் கற்றுக்கொண்டார்கள், பிறகு மற்ற நாட்டாரும் செய்ய ஆரம்பித்தார்கள்.

ஆகையால், இலிங்கத்தின் உருவத்திற்குக் காரணம் தெரியாத அநேகர் பலவாறு தங்கள் வாயில்வந்த வண்ணம் கூறுவதை இவ்வாராய்ச்சி அறவேயொழித்ததென்க,

இவ்விலிங்க சொரூபத்தின் காரணம் மறந்துபோன பிற்றைநாளில் (அதாவது புரானகாலத்தில்) ஆபாசக் கதைகளையெல்லாம் கவிராயர்கள் பாடிவிட்டார்கள். அதைப்பாமரர்கள் மெய்யென்று நம்பியொழுகுகிறார்கள். இது இதரமதத்தர் கூடிநகைக்க இடம் தந்தது.

துடிசைகிழார்-அ-சிதம்பரனார்.

## சித்திரை நட்சத்திரம்.

சித்திரை நட்சத்திரத்திற்கு நடுநாளென்று பெயர் வந்ததற்கு என்ன காரணமென்று ஆராய்தல் வேண்டும்.

இருபத்தேழு நட்சத்திரங்களையும் மூன்று கூறுக்க, அசுவனி முதல் ஆயிலியம் வரையிலுள்ள ஒன்பது நட்சத்திரங்களும் முதற்கூறாகும்.

மகமுதல் கேட்டை வரையிலுள்ள ஒன்பது நட்சத்திரங்களும் நடுக்கூறாகும்.

மூலமுதல் இரேவதி வரையிலுள்ள ஒன்பது நட்சத்திரங்களும் கடைக் கூறாகும்,

நடுக்கூறாகிய மகமுதல் கேட்டை வரையிலுள்ள ஒன்பது நட்சத்திரங்களுள் சித்திரை நட்சத்திரம் நடுவாகின்றது. இந்நடுக்கூறாகிய ஒன்பது நட்சத்திரங்களையும் மூன்று கூறுக்க அத்தம் சித்திரை சோதியென்பவை நடுவாகின்றன. இம்மூன்றனுள்ளும் சித்திரை நடுவாகின்றது. இருபத்தேழு நட்சத்திரங்களிலும் நடுவுள்ளது சித்திரையே, ஆதலால் சித்திரை நட்சத்திரத்திற்கு நடுநாளெனப் பெயர்வந்தது, இங்ஙனம் கூறல் விளங்கவைத்த லென்னும் அழகின் பாற்படும்.

சித்திரையின் பெயர் பெரும்பான்மையும் இப்பொருளிலேயே வருகின்றன. இப்பெயர்களைப்பற்றி நிகண்டு நூலார் மூரண்படுகின்றனர். அடியிற்காண்க.

திவாகரம்.

நெய்வான் மீன்சுவை பயற்றொடு நேர்வான்
செவ்விதின் துவட்டாநாள் சித்திரையென்ப

பிங்கல நிகண்டு.

நெய்மீன் அறுவை நேர்வான் பயறு
நடுநாள் துவட்டா நாளே தச்சன்
தெரியின் இன்னவை சித்திரைப் பேரே.

சூடாமணி நிகண்டு.

அளக்குநெய் பயறுமீனே அறுவையே ஆடைதூசு
துளக்கிலா நடுநாள் தச்சசன் துவட்டாநாள் சித்திரைப்பேர்.

## அகராதி.

அறுவை, ஆடை, சுவை, *செவ்வி, தச்சன்.
துவட்டாநள், தூசு, நடுநாள், நெய், பயறு, மீன்.

நாயென்பது நடுவாகலின் நாய்மீனென்பது நெய்மீனென்றுபிற்று நெய்மீனெனினும் நடுநாளெனினும் ஒக்கும்.

சித்திரை நாள் வெண்ணிற முடையதாகலின் அறுவையாயிற்று, அறுவை = வெள்ளிடை.

தூசு என்பதற்கும் அப்பொருளே.

நால்மீனென்பது நேர்வாறுயிற் றெனலாம் நால்மீன் = நடுநாள், நால் = நடு.

† நால்—நள், நள்—நடு.

பசரு என்பது முதல் கருப்பத்தையும் கருப்பம் உடம்பினுள் நடுவிடத் துண்டாதலால் பிறகு நடுவினையும் உணர்த்தி நிற்கும்.

* பசரு என்பது பயறு என்றாகிச் சித்திரையை யுணர்த்திற்று. ரகரம் றகரமாதல் பிற்காலத்துவழக்கு. பிரிவு பிறிவு, முரிதல் முறிதல். பயறு = சித்திரை. நடுநாளென்பது

சித்திரை நட்சத்திரத்துக்கு அதிதேவதை விசுவகர்மா ஆகலின் துவட்ட நாளாயிற்று. தச்சன் அவன் மரபினன்.

சித்திரகாயம் என்பது சித்திரையாயிற்று. சித்திரகாயம் = புலி, ஏன் எனின்? "சித்திரை யிருமீன் சிறுபுலிக் கண்பேர்" பிங்கல நிகண்டு நூலார் கூற்றுப்படி ஈண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது.

சுவையாலிறப்பது மீனாகலின் சுவைமீனென்பது மீன்சுவையென ஏடு பிறழ்ந்தது போலும், செவ்வி = நடு. செவ்வியின் அடைமொழியுமாம்.

சூடாமணி நிகண்டு நூலார் கூற்றுப்படி அகராதி நடைபெற்றது. நட்சத்திரங்களின் பெயர்களுட்சில தவறாகவே யிருக்கின்றன. பிற்கூறுதும்.

இங்ஙனம்
**மாகறல், கார்த்திகேய முதலியார்**
கண்டி
சென்னை.

† மொழிநூல் இலக்கணவியல் ௭௬௨-ம் பக்கம் பார்க்க.
* „ முதனிலையியல் ௨௨௫-ம் பக்கம் பார்க்க.

# இருக்குவேதம்

(தொடர்ச்சி)

௧௧. இன்பமாகிய சத்திய வாக்கியங்களைப் பிரேரிக்கிறவர்களும், நற்புத்தி யுடையவர்களுக்கு அறிவு மூட்டுகிறவருமாகிய சரச்சுவதி யானவள யக்கியத்தை ஏற்றுக்கொண்டாள்.

௧௨. சரச்சுவதியானவள் (தனது) செய்கையினால் பெரும்வெள்ளத்தைத் தோற்றுவிக்கிறாள் (மேலுந்தனது இயல்பான ரூபத்தால்) எல்லாப்புத்திகளையும் பிரகாசிப்பிக்கிறாள்.

## ௨-வது அனுவாகம்.

### சூக்தம்-௧ (௪)

(ருஷியும், பாவும் முன்போல தேவதை இந்திரன்)

### வர்க்கம்-௭.

௧. நல்ல கறவைப்பசுவைக் கறக்கும் பொருட்டுக் (கூப்பிடுகிறது) போல அழகானவற்றைச் செய்கிறவனை (எங்களுடைய இந்திரனை) ரட்சணத்திற்காக நாள்தோறும் கூப்பிடுகிறோம்.

௨. சோமங் குடிப்பவரே! எங்களுடைய சவனங்களின்* கிட்டேவாரும் (வந்து) சோமத்தைக்குடியும். தனவானாகிய (உம்முடைய) களிப்புமாடு கொடுக்கத்தக்கதே.

௩. இப்போ (நாங்கள்) நற்புத்தியுடையவர்களாகிய, உமக்கும் மிகவும் சமீபமானவர்களின் (நடுவேநின்று) அறிகிறோம். நம்மை விட்டுப் (பிறருக்குச் சொல்லாதேயும் (நம்மிடத்திற்கே)வாரும்,

௪. (ஓயஜமானனே! எவர் உம்முடைய மித்திரர்களுக்கு எங்கும் (பொருள் மக்கள் முதலாகிய) வரம் (கொடுக்கிறாரோ) அப்படிப்பட்ட மேதாவியும், இம்சை யடையாதவருமாகிய இந்திரன் கிட்டேபோய், (போய்) ப்பற்றிக்கேளும்.

*ஸவனம் = ஸோமாபிஷவம். அக்கினிஷ்டோமம் என்னும் யாகமானது "பிராதஸ்ஸவனம்" "மாத்தியந்தின சவனம்" "திருதீயஸவனம்" என்றும் வெவ்வேறான மூன்று பாகங்களை யுடையதாம்.

ரு. இந்திரனிடத்தே உபாசனை செய்கிறவர்களுமாகிய, எங்களுடைய (ருத்துவிக்குகள்) துதிக்கட்டும் ஓ! நிந்திப்பவர்களே (இவ்விடத்தினின்றும்) மற்றிடங்களினின்றும் போய்விடுங்கள்.

வர்க்கம்-௩

௬. (பகைவர்களை) அழிக்கின்றவரே! சத்துருக்களும் எங்களைச் செல்வரென்று சொல்லுக. (நமக்கு மித்திரர்களாகிய) மனிதர்கள் (அப்படிச் சொல்லுகிறார்களெனச் சொல்வானேன்) (நாங்கள்) இந்திரனுடைய (பிரசாதத்தாலுண்டாகிற) சுகத்திலிருப்போமாக.

௭. (யஜமானனை மூன்று சவனங்களிலும்) வியாபித்திருக்கின்றதும், யாகத்துக்குச் சம்பத்தாகவிருப்பதும், மனிதர்களைக் களிப்பதும், கருமங்களை நிறைவேற்றும்) யஜமானனைச் சந்தோஷிப்பிக்கிறவராகிய (இந்திரனுக்குச்) சகாவாகியதுமான இந்தச் (சோமத்தை யாகத்தில்) வியாபித்திருக்கிற (இந்திரனுக்குக்)கொடும்.

௮. மிகுதியான கருமங்களையுடையவரே இந்தச் (சோமத்தின் அம்சத்தைக்) குடித்து (நீர்) விருத்திரனைச் சேர்ந்த அசுரரின் சங்காரகாரனீர். (நீர்) உம்முடைய பக்தர்களாகிய படையாளர்களை யுத்தத்தில் மிகவும் பாதுகாக்கின்றீர்,

௯. மிகுந்த கருமங்களை யுடையவரே யுத்தத்தில் வலியரான, அப்படிப்பட்ட உம்மைத் திரவியத்தை யடையும் பொருட்டு (நாங்கள்) அன்னமுடைய ராக்குகிறோம்.

௧௦. (ஒய்ருத்துவிக்குகளே)! எவர் பொருளுடையவரோ? பெரியரோ? நல்ல (தருமங்களை) நிறைவேற்றுகின்றவரோ? அபிஷவப் பண்ணுகிறவர்க்குச் சகாவானவரோ? அத்தகைய இந்திரனுக்குப் பாடுங்கள்,

(இன்னும் வரும்)

த-போ.

---

அசுத்தி சோதனம்.

சென்ற அக்டோபர் மாதத்துப் பத்திரிகையில் வெளிவந்த நாற்பானைந்து உசாக்களில் "உண்மைக்குண இலக்கணம் என்னை" எனும் 45-வது உசா விடுபட்டுப் போயிற்று. சேர்த்துக்கொள்ளுக.

ப-ர.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தொகுதி ரு] 1914 ௵ டிசம்பர்௴, [பகுதி ௧௨.

யஜுர்வேத

வாஜஸநேய சங்கிதையில்

# ஈசாவாஸ்யோபநிஷத்து.

எவ்வளவு சிறிய பொருளாயினும் பூமியிலுள்ள உலகமாகிய இவையெல்லாம் ஈசனால் * கலந்திருப்பது. ஆகலின் நமக்கென்கிற புத்தியை விடுவதினால் (தன்னைக்) காப்பாற்ற வேண்டும், எவனுடைய பொருளையும் விரும்பாதே.

---

*ஈண்டுக்குறித்த ஈசசப்தம் சங்கராசாரியர் கூறும் ஆன்மாவுக்கேனும், இராமநுஜரும் மத்துவரும்கூறும் நாராயணருக்கேனும் செல்லாது. சிவபெருமானுக்கே யுரியதென்பது வேதசம்மதமாம். உபநிடதங்களில் பரமான்மாவை ஆன்மாவெனக் கூறலின், சங்கராசாரியர் ஈசசப்தத்திற்கு ஆன்மாவென்றது பொருந்துமெனின், அது பொருந்தாது. எங்ஙனமெனில்? "ஆத்மந்யேவாத்மாநம் பஸ்யேத்" (ஆன்மாவிலே ஆன்மாவைக்காண்க) எனச்சாந்தோக்யோபநிடதமும், மற்றும்பல உபநிடதங்களும் உபயஆன்மாவைக் குறிக்கின்றன. ஈண்டு ஆன்மாவிலே என்றது ஜீவான்மாவை, ஆன்மாவை யென்றது பரமான்மாவை. உபநிடதங்களில் பரமான்மாவை ஆன்மாவென்றது அங்காங்கிலட்சணை. இங்ஙனமாக, சங்கராசாரியருக்கு உபயான்மா உடன்பாடன்று. அவரேகான்மவாதி. இவர் குறிக்கும் ஆன்மா இவர் கொள்கையின் படி இரு

௨. இவ்வுலகில் கன்மங்களைச் செய்துகொண்டே நூறுவருஷம் (ஆயுள்வரையில்) பிழைத்திருக்க விரும்பக்கடவன் † மனிதனுகிய நின்னிடத்தில் இக்கர்மங்களைக் காட்டிலும் வேறில்லை. (ஞானசாதனமான) கன்மமானது (சாமான்ய சுவர்க்கமுதலிய பயன்கட்கு) ஒட்டுவதில்லை.

௩. அசுரவியற்கை யுடையோர் உலகில் அஞ்ஞான ரூபமான அந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கின்றனர். ஆன்மாவை (அஞ்ஞானத்தால்) கொன்றவர்கள் எவரோ அவர்கள் மரணமடைந்து ஜென்மங்களை யெடுக்கிறார்கள்.

பத்துநான்குதத்துவங்களைக் கடந்தது. இவ்வான்மா முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்து அங்காங்கி லட்சணையாற் கூறப்படும் ஆன்மாவாதலெங்வனம்.

அன்றியும், "சம்புரீச: பசுபதி:" எனும் அமரஸிம்ஹத்தால், ஈசசப்தம் சிவபெருமானுக்குரியது. ஈசன், ஈசுவரன், மகேசுவரன், பரமேசுவரன் முதலிய பதங்கள் சிவபெருமானுக்கே ரூடியாதலின், நாராயணனைக் குறிப்பதற்கிடமில்லை. பாஞ்சராத்திரிகள் தங்கள் மூர்த்தியையும் ஈசுவரனெனச் சொல்லிக்கொள்ளுகிறார்களே யெனின்? அவர்கள் தங்கள் கோயிலை ஈசுவரன் கோயிலென அழைக்கக் கூசுவதென்னை? தாங்கள் ஈசுவரஐயங்கார் எனப் பெயர்வைத் தழைத்துக் கொள்ளச் சம்மதியாத தென்னை? எனக் கடாவி மறுக்க.

அன்றியும், "ஈஶாவாஸ்யாதி மர்த்ராங்யோஜபேத் நித்யம்மமாக்ரதா, மத்ஸாயுஜ்யமவாப் நோதிமமலோகே மஹீயதே" (ஈஸாவாஸ்யம் முதலிய மந்திரங்களை எவனெனக் கெதிர்விருந்து தினந்தோறும் ஜபிக்கின்றானோ, அவனை தலகில் பெருமை பெறுவதுர்தவிர என்னுடன் சாயுஜ்யத்தை யடைகிறான்) எனச்சிவபெருமான் இராமருக்குப் போதித்ததாகச் சிவகீதை 15-வது அத்தியாயத்திற் காணப்படுகிறது.

†கருமமானது பிரமஞான மில்லாதவர்களைக் குறித்ததன்றிப் பிரமஞானிகளைக் குறித்ததல்லவெனச் சங்கராச்சாரியர் கூறுவரேயெனின்? அது "வித்யாஞ்சா வித்யாஞ்ச" என்ற மந்திரத்துள் கூறும் விதிக்கு முற்று முரணும், அன்றியும் பரமான்மாவை அறிந்தவனுயினும் கன்மங்களுக்குத் தன் ஆயுளைச் செலுத்தவேண்டுமென வேற்படுகிறது. "தமேதம் வேதாநுவசநே நப்ராம்மணாவி விதிஷந்தியஜ்ஞேந தாநேந தபஸாநாஸகேந" (பிராமணர் வேதாத்தியனத்தினுலும், யஞ்ஞத்தினுலும், தானத்தினுலும், தவத்தினுலும், விரதத்தினுலும் அவனை யறிகின்றார்கள்) எனப்பிருஹதாரணிய சுருதி கூறுதலானும், "யாகாதிகளும் சிவபெருமானுல் நியோகிக்கப் பட்டிருத்தலினுலுமாம்.



௪. சலியாததும், ஏகமானதும், மனதைக் காட்டிலும் வேகமானதும், ‡ முன்னமே எல்லாவற்றிலும் நிறைந்ததுமான இவ் (வீசனை) இந்திரியாதிக ளடைவதில்லை. இது ஓடுகிற மனோவாக்குக் காயங்களை அதிக்கிரமிக்கிறது. * இதிலிருக்கிற வாயு (முதலிய அதனுற்றலால்) தரித்திருக்கிறது.

௫. அது அசைகின்றது, அது அசையாத்து, அது அறியாதார்க்குச் சேய்மையானது, அது அறிந்தார்க்கு அண்மையானது. இரண்டிற்கு நடுவிலுள்ளது, பிரபஞ்சத்தைக் கடந்தது.

௬. எந்த (ஞானி) எல்லாவற்றினையும் ஈசனிடத்தே பார்க்கின்றானோ, அவ் வெல்லாவற்றிலும் ஈசனைப் பார்க்கின்றானோ † அக்காரணத்தால் (அவன் யாதொன்றையும்) நிந்திப்பதில்லை.

௭. மேற்கூறியவற்றை யுணர்ந்தவனுக்கு (தியானயோக) காலத்தில், (சித் அசித் என்னும்) எல்லா பூதங்கள் (இறைவனையாகாது) வேறாயிருப்பினும், அத்தகைய யோககாலத்தில் (அங்காங்கி என்னும் கருத்தால் பிரிக்கவறியாத நித்தசம்பந்த முணர்ந்தவனுக்கு) நான் சுதந்தரனென்னு மஞ்ஞானமேது, (எல்லாமிறைவனுடைமை யென்றுணர்ந்தபின்) துன்பமேது.

குதிரை கமனத்துக்குச் சாதனமாயிருந்தாலும், அது கமனத்துக்கு உடுப்பு முதலியவற்றை வேண்டிநிற்றல்போல, ஞானம் கன்மத்தை அபேட்சிக்கும். பலத்தை அபேட்சியாது செய்யப்படும் கன்மமானது ஞானத்திற்குச் சொரூப உபகாரமாகி அங்கமாயிருத்தலின், முத்தி பலம் அந்தக் கன்மத்தினுல் எய்தவில்லை. ஆனுல் சாட்சாத்தாக ஞான பலமே மோட்சம் ஆதலின், கிரகஸ்தர் விஷயத்தில் ஞானமானது யஞ்ஞ முதலிய கன்மங்களை அபேட்சிக்கின்றது. எல்லா ஆசிரமிகளுக்கும் அவ்வவர் ஆசிரமத்திற்குரிய கன்மங்களோடு ஞானமிசைந்திருக்க வேண்டும். ஆகலின், வித்தை கன்மத்தோடு சேர்ந்திருக்க வேண்டுமென்பதே யுக்தம். ஆகவே கன்மம் ஞானத்திற்கு அங்கமாம்."

‡மனத்தாலளவைப் படாதவிடத்திலும ஈசனிருத்தலால் மனத்தினு மிகு வேக முடையதென்றது உபசாரம்.

*எங்குமுள்ள ஈசன் ஓடிய பொருளுக்கு முன்னுமிருத்தலால் அதனைக் கடந்து அதிக்கிரமிக்கிறது என்பது தசாரம்.

†எல்லாவற்றினையு மீசனிடத்தே பார்ப்பதுவியாப்பியத் தன்மையையும், எல்லாவற்றிலு மீசனைப்பார்ப்பது வியாபகத் தன்மையையும் அறிந்துகொண்டபடியாம்.

R673m21.N12
N12:3
160932

அ. சுத்தமுடையவனும், (வயமான) சரீரமில்லாதவனும், ஊறுபடாதவனும், நரம்பில்லாதவனும், நிருமலமானவனும், வினைத்தொடக்கற்றவனுமான (ஈசனை) அந்த ஞானி யடைகிறான். அவன் ஈசுரனிடத்து மனமுடையவன், காமாதிகளை வென்றவன், வல்லபமுடையவன், உண்மையான பொருளை விசாரித்து ஆயுள்பரியந்தம் தியானத்திருப்பன்.

கூ. எவர்கள் அவித்தையை (காமியகர்மத்தை மாத்திரம்) அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் கடாந்தகார இருளை (நரகத்தை) யடைகிறார்கள், எவர்கள் வித்தையை (நிஷ்காமிய கர்மத்தைவிட்டு) ஞானத்திலாசையை யுடையவர்களோ அவர்கள் அதனினும் பெரிய விருளிற் பிரவேசிக்கின்றனர்.

க0. எவர்கள் அவித்தையையும், வித்தையையும் நமக்குச் சொன்னார்களோ (அவர்கள் கருமமற்ற) ஞானத்தால் முத்திக்கேது வேறென்றும், (ஞானமற்ற) கருமத்தால் முத்திக்கேது வேறென்றும் கூறுவர். * இங்ஙனம் தீரர்களால் கேள்வியுற்றனம்.

கக எவன் ஞானத்தை (யதற்கங்கமாகிய) கருமத்துடன் (அங்காங்கிபாவனையாலொருங்கு) இரண்டினையு மனுட்டிக்கிறானோ அவன் கருமத்தால் மிருத்துவைக்கடந்து ஞானத்தால் அமுர்தத்தை (மோட்சத்தை) யடைகிறான்.

கஉ. எவர்கள் பாசங்களை உபாசிக்கிறார்களோ, அப்பாச ஞானிகள் கடாந்தகாரமான இருளையடைகிறார்கள். எவர்கள் பசுக்களிடத்து ஆசையுள்ளவர்களோ அப்பசு ஞானிகள் அதைக்காட்டிலும் அதிகமான அஞ்ஞான விருளிற் பிரவேசிக்கின்றனர்.

கங. எவர்களதை நமக்குச் சொன்னார்களோ (அவர்கள்) பாச ஞானத்திற்கு (முத்தி) வேறாகவே சொல்லுகிறார்கள். பசு ஞானத்திறகும் (முத்தி) வேறாகச் சொல்லுகிறார்கள். இப்பிரகாரம் தீரர்களுடைய (வார்த்தைகளைக்) கேட்கிறோம்.

கச. எவன் பாச (கன்ம) உபாசனையையும் பசு (ஆன்ம) உபாசனையையும் ஒருங்கு அனுஷ்டிக்கிறானோ? அவன் பாச உபாசனையால் பாவத்தைக்கடந்து பசு உபாசனையால் (பிரகிருதிலய லட்சணமாகிய) முத்தியை யடைகிறான்.

*நிஷ்காமிய கர்மத்தை விட்டு ஞானந்தேடுகிறவனும், ஞானத்தை விட்டுக் காமியகர்மத்தைத் தேடுகிறவனும் பரமுத்தியை யடையான்.



கரு. பிரகாசமான பாத்திரத்தினால், சூரியமண்டலத்திலிருக்கிற துவாரம் மூடப்பட்டிருக்கிறது. ஓய் சூரியனே! மூடிய அவ்வாயிலை நீ சத்தியமாக வுபாசிக்கும் எனக்குப் பார்க்கத்திறந்து வைக்கக்கடவாய்

கசு. உலகைக் காக்குந்தன்மையுடையவனே! இணையற்றவனே! எல்லாருள்ளுமிருந்து நடத்துபவனே! கிரணங்களால் நீரைக் கிரகிப்பவனே! பிரமன் சந்தானமானவனே! ஓ சூரியனே! நினது கிரணங்களை நீக்கிக் குளிர்ந்த பிரகாசத்தினைக் கூட்டுதி. உனது சுலபமான வடிவினைப் பார்க்கிறேன். சூரிய மண்டலத்தில் வசிக்கிறவனெவனோ அப்புருஷனை * என்னுளிருக்கிறான்.

கஎ. இனி யிச்சரீரமானது பஸ்மத்தை முடிவாக வுடையது. சரீரத்திலிருக்கிற பிராணன் நாசமல்லாத சூட்சும பத்தியோக வடிவினன். ஓம்! தயவோடு எனை நினைந்திடுக. யாதேனுமொன்றால் நன்மை செய்யப்பட்டுளதேல், அதனைக் குறித் தென்னைக் காத்தருள்க.

கஅ. அக்னிசப்த வாச்சியார்த்தனே! எங்களைச் சம்பத்தின்பொருட்டு நல்ல வழியி லழைத்துக்கொண்டுபோம். தேவனே! எல்லா ஞானங்களையும் அறிந்த நீர், வஞ்சகமாகச்செய்த பாவங்களை எம்மினின்றும் வேறுபடுத்துக. பலவாகிய தோத்திரங்களை நமக்குச் செய்கிறோம்.†

மணவழகு.

*சூரியமண்டலத்தில் வசிக்கிறவன் சிவபெருமானே யென்பது திண்ணம். எங்ஙனமெனில், "ஹராஸ்மாஹுரோபர்கா" என வடமொழி நிகண்டும், "பர்கஷருத்ரோபர்கா" (இந்த உருத்திரர் பர்க்கர்) என மைத்திராயணோப நிடதமும் கூறி, சூரியனை "நீலக்ரீவோவிலோகித" (நீலகண்டமும் செந்நிறமுமுடையார்) எனத்தைத்திரியமும், "த்ரிநேத்ரோரவி" (முக்கட் சூரியன்) என அபியுக்தரும் வர்ணித்திருத்தலாற் காண்க

† இங்ஙனம் சூரியனை வேண்டுவதேனெனின், இதயத்துள்ள சிவபெருமான் அனுக்கிரகத்தினால் துவாரம் தலையிற் பிரகாசிக்க, உபாசகன் தலைநாடி வாயிலாகத் தேகத்தை விட்டுப் புறப்பட்டு, சூரிய மண்டலத்தின் மூலமாகப் பரமசிவனை யடையவேண்டியதின் பொருட்டு இங்ஙனம் கூறப்பட்டது. "யத்ராஸௌகேசாந்தோவிவர்த்ததே வ்யபோஹ்ய சீர்ஷகபாலே பூரித்யக்னௌப்ரதி திஷ்டதி புவ இதிவாயௌ ஸுவரித்யாதித்யே மஹ இதி ப்ரம்மணி ஆப்நோதி ஸ்வாராஜ்யம்" (உரோமத்தின் வேர்பிரியுமிடத்தில், அவன் தலையில் இருபக்கங்களையும் பிளந்து, பூ என்று கூறி அக்னியிற் பிரவேசித்து, புவ என்று சொல்லி வாயுவிற் பிரவேசித்து, சுவ என்று சொல்லிச் சூரியனிற் பிரவேசித்து, மஹ என்று சொல்லிப் பிரமத்திற் பிரவேசித்து, அங்கே சுவாராச்சியத்தை அடைகிறான்) என்றதைத்திரியோப நிடதசுருதியால், பிரமப்ராப்தியானது ஒளிமார்க்கத்தை அடையப் படுவதாகப் பெறப்படுகிறது. ஆகலின், சிவப்ராப்திக்குச் சூரியமார்கம் நியமமாம்.

# அறிவினால் அடையும் பயன்யாது.

தொகுதி - 3 - பக்கம் - 288 - (தொடர்ச்சி)

---

இன்னும் மாநடர்கள் அறிவினைப் பெற்றிருந்தாலும், அவ்வறிவு கறையோடுகூடிய இரும்புபோல மழுக்கமடைந்துள்ளது. அக் கறையை நீத்தற்கு அக்கறையுள்ளவராவோமாயின், அதற்குச்சுலபமான சாதனை கல்வியேயாம். கற்றல் அறிவினை மேம்படுத்தற்கன்றி வீண்வாதம் புரிதற்கன்று. "கற்றதனாற் கேட்டது மேதுக்காகக் கடப்படவென் றருட்டுதற்கோ" என்றார் மேலோரும். பதியைப் பாசம் பற்றாது. ஆன்மாவையே பாசம் பற்றும். அப்பாசத்தைக் கெடுக்கும் பெருமந்திரம் மறைகாரண பஞ்சாக்ஷரமேயாம். ஒருபொருளையன்றி இருபொருளை ஏககாலத்திற் சிந்திக்க எவராலும் முடியாது.

திருமந்திரம்.

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

ஆன்மா "சிவ" என்னும் மந்திரப்பொருளுணர்தற்கு அறிவே கருவியாகவுள்ளதாகும். மித்தையை யொழித்து மேலான சுத்தத்தைக் கொடுக்கவல்லது அறிவேயாம். (Geometry) க்ஷேத்திரகணிதத்திலே சொல்லியபடி "உள்ளும் வெளியும் மேலும் கீழ் எங்குமுள்ளதாய குறியே (Point) சிவபெருமான். வட்டமத்தியத்துள்ளது ஆன்மா. சூழ்ந்துள்ள வட்டமேமாயை. மத்தியஸ்தானத்துள்ள குறி உயருங்காலத்தில்மோக்ஷாநந்தமுண்டாகும் என்றுதெளிக. இதன் வேற்றுமையும் ஒற்றுமையும் விளக்கமாதற்கு வேண்டியது அறிவேயாம். ஆன்மாவிற்குண்டாகும் அவித்தைகெடுதற்குமனத்தைநிறுத்தி அறிவின் முகிழ்ப்பினாலே சிவத்தை யடையலாமன்றி, உலகினரை வஞ்சிக்கும் குறுமதிகொண்டு காண்டல் கூடாது. ஆநந்தநிலையென்ப இதனையே அறிவுடையோர் அறைவர்.



நன்பக்குறிநாடுந் தூர்த்தர்கள் இவ்வின்பக்குறியைத் தேடுவார்களா? ஆ! புத்திஹீனமா? செல்வச் செருக்கா? தேகபுஷ்டியின் நிலைமையா? ஆலோசிக்காவிட்டால் ஆர் துணைபுரிவார்? "அத்தமும்வாழ்வு மகத்து மட்டே விழியம் பொழுக மெத்திய மாதரும் வீதிமட்டே" என்ற திருவாக்குக் குருவாக்காகாதா? விஸ்வாசகாத அவிவேகச்சாம்பிராணிகள் புகைந்து சிந்தநந்துபடக் காலம் வாராதா? இவைகள் அறிவிருந்தாற் சிந்திக்கற் பாலனவன்றே!

திருமந்திரம்.

சிவாய நமவெனச் சித்த மொருக்கி
யவாய மறவே யடிமைய தாக்கச்
சிவாய சிவவென் றசைவற சிந்தை
யவாயங் கெடநிற்க வானந்த மாமே.

கருடத்தியானத்தினாலே பிறனுக்குற்ற விஷமூர்ச்சையை நீக்கலாமேயாயின், சிவோகம்பாவனையினாலே சிவத்துவமடைதல் ஆன்மாவுக்கு அறிவினாலே கைகூடுதற்குச் சந்தேகமா? இனி, உடம்பு அறியுந்தன்மை யுடையதன்று. மனோசக்தி குன்றியவழிப் புலன்களின் றொழில்கள் தலைக்காட்டா தொழிகின்றன என்பாருமுளர். கன்மேந்திரியங்களையும், ஞானேந்திரியங்களையும் கடந்த ஹ்ருதயஸ்தானத்தைப்பரிசுத்தநிலையில் வைத்திருக்கும் திடஞானசிரோமணிகள் ஹ்ருதயத்தின்கண்ணே அவர்கள் தபோபலமாக நீக்கமில்லாது நிறைந்து விளங்குவார் விமலசிற் பரஞ்சோதியாகிய சிவபெருமான்.

அறிவுடையார் நெஞ்சகனிடமாவது
அறிவுடையார் நெஞ்சருந்தவமாவது
அறிவுடையார் நெஞ்சொ டாதிப்பிரானும்
அறிவுடையார் நெஞ்சத் தங்கு நின்றானே.

என்று திருமூலயோகீஸ்வரஸ்வாமிகள் சாந்தோக்கிய உபநிஷத்துக்கூறிய தகர வித்தையையும் அறிவுடைமையாற் பெறற்பாலதையும், அறிவுடையாரை யரன்பிரியாது நித்தியானந்தப் பரனுக்குஞ் சிறப்பும் சூசித்ததமை யூகித்தற்குரியனவேயாம்.

அறிதலும், அறியாமையும் ஒருங்கேயொழிந்தால் ஆன்மாஞான ஸ்வரூபத்தைப்பெறும். அறியாமையை யொழிந்துள்ளவிலை அறி

வுண்மையாகலின், அவ்வறிவுண்மையாகிப் பகவன் றன்னருளைப் பிரகாசிப்பித்து ஜீவபோதத்தை நீக்கிநிற்பார். ஆனந்தஸ்வரூபநிலைக்கு வேண்டுதல் வெறுத்தல் அறிவு அறியாமை ஆகிய யாவுமொழியவேண்டும். இவ்வகைய இலக்ஷணமுடையவரே இறைவராதலினால், அவ்விறைமைக் குணங்களை ஆன்மா அடைந்து இன்புறற்கு உலகப்பற்றுக்களை முற்றாகவிடுதல் மேம்பாடுடையதாம்.

அறிவறிவன றங்கற்றுமுலகம்
அறிவறியாமை யாருமறியார்
அறிவாயவற்றி னாட்டாறுயவின்
செறிவாகிநின் றனன்சிவனுமாமே.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடிசேர்ந்தார்க்கு
யாண்டுமிடும்பையில."

"பற்றற்றோர் சேர்பழம்பதியைப் பாசூர்நிலாப் பவளத்தைச், சிற்றம்பலத்தெந்திகழ் கனியைத்தீண்டற் கரியதிருவுருவை, வெற்றியூரில் விரிசுடரை விமலர்கோனைத் திரைசூழ்ந்த, ஒற்றியூரொழுத்தமனையுள்ளத்துள்ளே வைத்தேனே."

இவ்வருட்டிரு வாக்குக்களும் நோக்கியாராயத் தக்கனவே. இவ்வளவு அவ்வளவு என்று பாகுபாடு செய்தறிதற்கரிய அறிவுள்ளகாலத்தில் நமது செயலும் எண்ணமும் பிறிதொரு வழிப்படாது நிலைப்பவழிபாடு செய்யின் அவ்வழிபாட்டினான் பூரணத்துவ அறிவாய், ஆணவாதிமலங்களை நசித்துப்பகலோனென்ன விகஸிப்பர் மகாதேவராகிய சிவபெருமானேயாம்.

"இன்றெனக்கருளி யிருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறேபோன்று
நின்றநின் றன்மை நினைப்பறநினைந்தேன்
நீயலாற்பிறிது மற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாந்
திருப்பெருந்துறை யுறைசிவனே
யொன்றுநீயல்லை யன்றியொன்றில்லை
யாருன்னையறி யகிற்பாரே."

என்று இவ்விய சித்தாந்தநெறிச் செவ்வியபொருளை ஸ்ரீமந் மணிவாசகஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.



உபநிஷத்து.

யதாபச்யத்யாத்மாநம்தேவமஞ்ஜஸா!
ஈசாநம்பூதபவ்யஸ்யநததோவிஜுகுப்ஸதே!!

(ப்ரஹ: 4; 15)

ஸ்வப்பிரகாசரும், இறந்தகால எதிர்காலங்களின் நியந்தாவுமான பரமேஸ்வரனை யார் எப்பொழுது பிரத்தியட்சமாக ஞானத்தினாலே தரிசிக்கின்றாரோ, அவரே தன்னை அப்பொழுது அப்பாமாத்துமாவினின்று மறைத்துவைத்துக்கொண்டிருக்கின்றார்.

எவன் இருவினையின் மயங்கிப் பாபகர்மங்களைச்செய்து, அவைகளினிடத்து மயங்கியிருக்கின்றானோ, அவன் தன்னைத்தானே மறைவாக வைத்துக்கொள்ள விரும்புகின்றான். ஆனால், தன்னை மறைத்துக்கொண்டிருப்பதான நினைவேயன்றி, இவனை அந்தரான்மாவாகிய பரம்பொருள் பாராதிருக்கவே மாட்டார். ஆதலினாலே, அவ்விறைவனைச் சார்ந்தமுன் பக்திபண்ணுமிடத்து மேலானகதி கைகூடும். பக்தி என்றது ஜீவனைப் பரமேஸ்வரனிடத்துச் சேர்ப்பது என்னும் அர்த்தமுடையது. சிவாநந்தலகரியில், "பசுபதேபாதாரவிந்தத்வயம் சேதோவ் ருத்திரபேத் யதிஷ்டதி ஸதாஸா பக்திருச்யதே" என்று பகர்ந்துள்ள சுலோக பாகமுங் காண்க. இதுவரையுங்கூறிப்போந்தவற்றானே, மானுடர்கள் என்ற பிறவியில் வருதலா லடையவேண்டியது அறிவேயென்றும், அறிவுடையோன் "என்னைப்பார்க்க யார் பெரியவன், நானே அடங்காக்கொம்பு" என்று எண்ணுதல் தகுதியர்காதென்றும், அறிவினாலே அடையும் பிரதிபலத்தைப் பெறாது தாழ்ந்தோமானால் சுகானந்தப்பேறு கிடைப்பது அரிதாகும்என்றும் உணர்த்தியவாறு தெளிந்து சிவத்தினிடத்து அறிவினை நிலைக்கச்செய்து சிரிதாகதியடைய முன்னிற்போமாக. சுபம்!

வ·மு·இரத்திநேசவையர்,
தமிழ்ப்பண்டிதர்.

உ

சிவமயம்.

# திருக்கைலாசம்.

---

திருக்கைலாசமென்பது பூலோகத்தில் உள்ளதொன்றன்றென்றும், அது ஒரு Faculous mountain என்றும் பலர் சொல்லுகிறார்கள். அது பூலோகத்திலுள்ள ஒரு மலையென்பதே நிச்சயம். தென்மதுரை, வடமதுரை என்றாற்போல, திருக்காளத்தி தென்கைலை எனப்படுவதால், வடகைலையும் பூமியிலேயே இருத்தல் வேண்டும். கந்த புராணத்து மணம்பேசுபடலம், திருமணப்படலம் வழிநடைப் படலம் முதலிய படல சரித்திரங்களாலும், காளிதாஸன் இயற்றிய குமார சம்பவம் என்னும் நூலாலும் அது இமயமலைக்கு வடபாரிசத்தில் இருக்கின்றதென்று துணியப்படுகின்றது. அன்றியும் அகத்திய முனிவர் திருக்கைலாசத்தினின்று பொதியமலைக்கு வந்தாரென்னும் சரித்திரத்தாலும், அருச்சுனன் கைலாசத்துக்குப் போனான் என்னும் பாரதக் கதையாலும், திருமூலரென்னும் சிவயோகியார் திருக்கைலாசத்தினின்றும் தெற்கே பொதியமலைக்கு அகத்தியரைக் காணவேண்டி வந்தாரென்னும் பெரிய புராணக் கதையாலும், சத்தியஞான தரிசனிகளுடைய மாணாக்கரும் மெய்கண்ட தேவருடைய குருவுமாகிய பரஞ்சோதி முனிவர் கைலாசத்தினின்று வந்தாரென்னும் கதையாலும், சுந்தரமூர்த்தி நாயனார் கைலாசத்துக்குப் போன கதையாலும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்காளத்தியிலிருந்து கைலாசத்துக்குத் தேவார திருப்பதிகம் பாடிய திறத்தினாலும் நான் சொல்வதே உண்மையாகும். திருநாவுக்கரசு நாயனார் திருக்கைலாசத்தை தரிசிக்க விரும்பிக் காசிக்கு அப்பாலுள்ள தேசம் வரையும் போனாரென்னும் சரித்திரமொன்றே இதற்குப் போதிய சான்றாகும்.



Sven Heden என்னும் ஐரோப்பியரொருவர் போன வருஷத்தில் தாம் இத் திருக்கைலாச * மலைக்குப் போய், அதனை வலஞ்சூழ்ந்து வந்ததாகச் சொல்லியிருக்கிறார். மலையில் ஏறினேன் என்றும் அங்குள்ள நிகழ்ச்சிகள் இன்னவையென்றும் அவர் சொல்லவில்லை.

அப்படியாயின், இந்திரக் கைலாசம் வெள்ளிமலையன்றோ அவருக்கு அப்படித் தோன்றிற்றோவெனின்,—இது ஒரு வினாவன்று. இமயமலை பொன்மலையென்று சொல்லபபட்டிருக்கின்றது. இப்போதும் அது அப்படித் தோன்றுகின்றதா? இல்லை. திருவண்ணாமலை பொன்மலை இரத்தினமலையென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இப்போதும் அது அப்படித் தோன்றுகின்றதா? இல்லை. பொன்மலை வெள்ளிமலை யென்றதெல்லாம் முந்திய யுகங்களிற் சங்கதிகளென்க. கலியுகத்தில் எல்லா மலைகளும் கன் மலைகளாயே இருக்குமென்றறிக.

ஐரோப்பாவில் எத்தனையோபேர் யாவரும் அணுகுதற்கரிய வடதுருவம் தென்துருவமென்பவைகளைக் காணத் துருவிச் செல்லுகிறார்கள். அதற்காக எத்தனை அரசர்கள் செல்வர்கள் பெருதவி செய்கிறார்கள். இத்திருக் கைலாசத்துக்குப் போகிறது அவ்வளவு அருமையன்று. இங்கிலீஷ் கற்றுவிட்டுச் சும்மா இருக்கிறவர்களுள் திடசரீரமுடையவர் சிலர் சேர்ந்து இதனைப் போய்ப் பார்த்து வந்தால் எவ்வளவு புகழும் புண்ணியமுமாகும். அங்கே தாம் போகும் வரும் வழிகளிலே தான் உடம்பு நசிக்கினும் அதுவும் எல்லாருக்கும் கிடைத்தற்கரியதொரு பெரும் பேறன்றோ. நம்மவர்களால் போக இயலாதெனின் சீர்மையிலுள்ள Geographical Society யாரிடம் நாம் வேண்டிய திரவியங் கொடுத்தால், அவர்கள் அந்த வேலை செய்து தருவார்கள். இமயத்துக்கு வடக்கே இருஷிகள் பலர் இன்றைக்குந் தவஞ் செய்துகொண்டிருக்கிறார்களென்பது எமக்கும் Theosophical Society யாருக்கும் ஒத்த துணிவு. Sven Heden என்பவரைப்போல நாம்

---

*"கைலாசம் நசாங்கதா:" எனும் தேஜோபிந்துபநிஷத்தால் ஈண்டுக் குறித்த கைலாசம் பிராகிருதகைலாசம், அப்பிராகிருத கைலாசமன்று. இக் கைலாயம், முன்னுரைக்கப்பட்ட மேரு கைலாயத்திற்கு வேறாய், இமயகிரிக்கும் ஏமகூடகிரிக்கும் இடையிலுளதாய் விளங்கும் வெள்ளிமலை யென்பதையும்; அது விஷ்ணு முதலிய எல்லாப்பிராணிகளின் பிரளயகாலத்திற் நிலை

அங்கே போகலாம். போகக்கூடாத இடங்களுக்கு ஆகாய ரதம் வைத்துக் கொள்ளலாம். S. Heden இம்மலையின் அருமை பெருமை அறியாதவராதலின், பார்த்தவளவிலே திரும்பிவிட்டனர். நம்மவர் போனால் எல்லா மறியலாம். சுவாமியே திருநாவுக்கரசு நாயனாரை அங்கே போதல் அருமையென்று சொல்லித் திருப்பிவிட்டாரே யெனின், அது தமிழ்நாட்டார் உய்யும் பொருட்டு அவரைக்கொண்டு தேவாரப் பதிகம் அருளிச் செய்விக்கும் கருத்தினாலன்றிப் பிறிதொன்றினாலன்றென்க.

ஞானப்பிரகாசம்.

---

ரது திருவாணையாலே விரைவில் வளர்ந்து பிரமாண்டத்தைப் பிளந்து மீச்சென்றிருக்கத்தக்கதென்பதையும் மஹாஸ்காந்தத்தின் தக்ஷகாண்டத்து கூகூம் அத்தியாயத்து ருக, ருஉ, ருரு-ஞ் சுலோகங்களி னறிக. சக-ம் அத்தியாயத்து, கஎ, கஅ-ஞ் சுலோகங்களில் இக்கைலாயங்களுக்கு வேறாக மேருவுக்கு வடபாலாய், அண்டச்சுவரிற்கு அணித்தாய், மஹாகைலாஸபர்வத முளதென்பதும்; அஃது உபதேசகாண்டத்து க-வது அத்தியாத்தில் (௪0) நாற்பதுகோடி யோசனை யுயரத்தையும், (ககககககஅ) கோடியே பதினொரிலக்கத்துப் பதினாயிரத்து நூற்றுப்பதினெட்டுச் சிகரங்களையும் முடைத்தென்பதும்; உ-வது அத்தியாயத்து கரு-ஞ் சுலோகத்தில் அஃது அவாந்தரப்பிரளய காலத்திலே அண்டத்திற்கு மேலாக வளரத்தக்கதென்பதும், கக-ஞ் சுலோகத்தில் இருவகைக் கைலாயமும் சிவனாரது திருவாணையாலே தாங்கப்பட் டிருப்பனவன்றிப் பூமியின் ஆதாரமில்லையென்பதும் பெறுதும். இக்கைலாயங்கட்குப் பரமாகாசசிவலோகம் வேறாம். "ஷஷ்ட்யாமிந்த்ரஸ்ய ஸாயுஜ்யம்ஸப்தம் யாம் வைஷ்ணவம் பதம், அஷ்டம்யாம்வ்ரஜதேருத்ரம்பசூனாம்சபதிம்ததா, நவம்யாந்துமஹர்லோகம்தசம்யாந்துஜநம்வ்ரஜேத், ஏகாதச்யாந்தபோலோகம்த்வாதச்யாம்ப்ரஹ்மசாச்வதம், தத: பரதரம்சுத்தம்வ்யாபகம்நிர்மலம்பரம், ஸதோதிதம்பரம்ப்ரஹ்மவீயோதிஷாமுதயோயத:, அதிந்த்ரியகுணாதீதம்மநோலீநம்யதாபவேத் அநுபமம்சிவம்" (சு-வதான இந்திர சாயுச்சியத்தின்மேலே, எ-வதானது வைகுண்டமெனும் விஷ்ணுபதமென்பதும், அ-வதாகவுளது கைலாசமெனும் உருத்திரபதமென்பதும், கூ-வது மகர்லோகம், க0-வது ஜநலோகம், கக-வது தபோலோகம், கஉ-வது பிரஹ்மசாச்வதமென்பதும், அதன்மேலே எல்லாச்சிறப்புமுள்ளதாய் விசேஷமனோலயத்தில் வெளிப்படுவதாயுள்ள சிவம் ஒருபடித்தாயுள்ளது) என்ற ருக்வேதநாத பிந்துபநிஷத்தால் அப்பிரகிருதகைலாசம் என்பது எல்லாவுலகுமான பிரகிருதிநீங்கிய வெல்லையிலேயுள்ள சிவகதியாமென்பது தெள்ளிது.

பர்.

# நாயனாரென்னும் சொல்லாராய்ச்சி.

நாயனாரென்பது சிவபெருமானுக்கு ஒரு பெயராகின்றது.

நாயன்—நாயனார், நாயன்=சிவன்.

நாயனென்னும் சொல்லுக்கும் சிவனென்னும் பொருளுக்கும் சம்பந்தம் எப்படி! ஆராய்தல் வேண்டும்.

(க) நா என்பது முதல், நாக்கினையும் அந்நாக்கு வாயின் நடுவிருத்தலால் பிறகு நடுவினையும் உணர்த்தி நிற்கும்.

நா:—

க-நாக்கு - இனிதிசைப்பதென்பது,

உ-நடு.

நா என்பதற்கும் ஓர்முதற்சொல் உள்ளது.

சில சொற்களின் ஈற்றில் யகரமெய் வருவது இயல்பாகலின், நா என்பது நாய் என்றாகி முதல், நடுவினையும், ஊர்நடுவுள் திரிதலால் பிறகு சுணங்களையும் உணர்த்தி நிற்கும்.

நா—நாய்:—

க-நடு

உ-சுணங்கன் ஊர்நடுவுள் திரிவது.

"நாய்தான் போல நடுவேதிரிந்தும் உமக்காட்பட் டோர்க்கு" (சு-தே)

என்பதனால் தெளிந்து கொள்க.

நாய்மீன்—நெய்மீன்=சித்திரை, நடுநாளென்பது.

(உ)—நாய்=நடு.

நாயில்:—

க-கோட்டை.—நகர் நடுவுளிருப்பது,
மலைநடுவி லிருப்பதுமாம்

உ-மதில்.—கோட்டைமதி லென்பது

ஞாயில்:—

க-கோட்டை

உ-மதில்

௩-ஏவறை - அரணடுவிலுள்ளது.

௪-முடக்கறை - ஏவறைபோல்வது.

௫-முடக்கு (பூ-மாலை)

ஏவறை, பகைவர் அறியாதபடி அரணடுவில் வளைந்து வளைந்து செல்லும் வாயிலுடையது.

நாயில்—ஞாயில்.

(௧)—நாயில்

நாயிறு = சூரியன். கோள்களினடுவிலுள்ளதென்பது.

து-பெயர்விகுதி.

நாயிறு—ஞாயிறு = சூரியன்.

ஞாயிறென்னும் சொல், சூரியமத்திய சித்தாந்த முண்டான காலத்தில் உண்டாயதெனக் கொள்ளல் வேண்டும்.

(௨)—நாய் = நடு.

நாயன் = சிவன். நடுவிலுள்ளவன், நடுவில் விளங்குவோன், நடுவின் நிற்றலால் விளங்குவோன் முதலிய பலபொருள்படும்.

நாயன் அரசனுமாம். நடுநிலையுள்ளா னென்பது.

நாயன்.—நாயனார்.

"வாயினலிப்போதே மன்றில் நடமாடும்
நாயனா ரென்றுரைப்போம் நாம்"
(கோயில் நான்மணிமாலை)

"தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறிகில்லார்"
(திருமந்திரம்)

என்றதனால் சிவனது நடுநிலைமை விளக்கணம் போதருகின்றது. மற்றும் அடியில் வருவனவற்றால் தெளிந்து கொள்க.

"ஆரண நான்கிற்கும் அப்பாலவனறியத் தணிந்த
நாரண னுன்முகனுக் கரியான் நடுவாய் நிறைந்த
பூரண னென்றைத புகலிப்பிரான் பொழிலத் தனைக்கும்
காரணனந்தக் காரணங்கடந்த கருப்பொருளே"
(திருக்கழுமல மும்மணிக் கோவை)



"ஏவலத்தால் விசயற்கருள் செய்தே இராவணனை யீடழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய மூர்த்தியை அன்றிமொழியான்"
(௪-ஞ் முயலகன் தீர்த்தது)

"நாட்டத்திலங்கி கண்டயவந்தா லென்ன உன்னும்
நாட்டத்தினூடுவெந்த நட்பே பராபரமே"

"முத்தாந்தவீதி முளரிதொறும் அன்பருக்குச்
சித்தாந்தவீதி வரும் தேவே பராபரமே"

சித்தாந்தவீதி = புருவநடு.

"நேற்றிக்கு நேரே நிறைந்த ஒளிகாணின்
முத்திக்கு மூல மது" (ஔவைகுறள்)

"நாட்டத்தைப்பற்றி நடுவணைச் சேர்வோர்க்கு
வாட்டங்களேதுக்கேடி குதம்பாய்
வாட்டங்களேதுக்கேடி" (குதம்பை சித்தர்பாடல்)

"நாபி, இதயம், கண்டம், மூர்த்தம் இந்நான்கிடனும் சிவம் விளங்காநின்ற திருக்கோயிலாகும்"

நாபி—அரைக்கும் வயிற்றுக்கும் நடு.

இதயம்—வயிற்றுக்கும் கண்டத்துக்கும் நடு.

கண்டம்—இதயத்துக்கும் முகத்துக்கும் நடு.

மூர்த்தம்—புருவநடு.

"நெற்றிக்கு நேரே புருவத்திடை—வெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமனிருந்திடம்
சிற்றம்பல மென்று சேர்ந்து கொண்டேனே"
(திருமந்திரம்)

"உடையான் உன்றனடுவிருக்கும் உடையான் நடுவுணீயிருத்தி
அடியே னடுவுளிருவீரும் இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுளிருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்வண்ணம் முன்னின்றே"
(திருவாசகம்)

நாயன் = சிவன்.

௧-நடுநிலை யாளன்

௨-புருவநடுவில் ஒளிர்வோன்

௩-காபி முதலியவற்றில் ஒளிர்வோன்

௪-உடையானை நடுவி லுடையோன்

௫-உடையாள் நடுவிருப்பவன்

௬-அடியார் நடுவிருப்பவன்

௭-சூரியனடு விருப்பவன்

௮-வேதத்தினடுவி லொளிர்வோன்.

இன்னும் கூறலாம்.

(௫)—நாய் = நடு.

நாயம் = நீதி. நடு நின்று நிற்பது.

நாயம்—ஞாயம் = நீதி—

நாயம்—நாயகம் = தலைமை நடுவிலிருப்பது.

நாயகமணி = நடுமணி.

நாயன்—நாயர்—ஞாயர் = தந்தை.

நாயகன் = தலைவன்.

இனி நாய்கர், நாயனு, நயினர், நாயுடு முதலியனவும் அவற்றின் திரிபுகளையும் பழந்தமிழ் நடுநிலையின் ஆராய்ச்சியால் மற்றும் தெளிவுண்டாகற்பாலது.

சொற்களில் ஏதேனும் ஐயம் உளதாயின் மொழிநூல் பார்க்க வேண்டும்.

இங்ஙனம்,

மாகறல், கார்த்திகேய முதலியார்,

கண்டி

சென்னை.



# அன்பு.

ம்பலம் போ

படு பென்ப

அன்பினி

அன்பென்பது ஒரு பொருள் காரணமாகப் பிறிதொன்றுக்கிடக் உளதாம் உள்ள நிகழ்ச்சி. இஃது உலகத்துள்ள நிலையியற்பொருளு செலு இயங்கியற் பொருளுமென்னும் இருபாலனவற்றுள் பின்னதன் கட்பெறு நிகழ்வதாம். நிலையியற் பொருளென்பன பெயர்ந்து செல்லும் ஆட்டத்தா லுடையவன்றித் தாந் தோன்றிய நிலைக்களத்தவாம்; அவை, புல்வே, பூடு, மரம், மலை முதலாயின. இயங்கியற் பொருளென்பன எறும்பு முதல் யானையீறுகக் கிடந்த விலங்கினத்தவும், கொசுகு, ஈ, சிட்டு முதல் பருந்தீறுகக் கிடந்த புள்ளினத்தவும், கோற்புழுமுதல் பாம்பீ றுகக் கிடந்த ஊர்ந்து செல்லினத்தவும், கயல்முதற் சுறவீறுகக் கிட ந்த நீர்வாழினத்தவும், குரக்குமுதல் மக்களீறுகக் கிடந்த பகுத்தறிவி னத்தவுமென ஐந்து பகுதியவாம். மறித்தும் இவ்வன்பு இம்மைக்கே யுரியதூஉம், மறுமைக்கே யுரியதூஉம், இம்மை மறுமை யிரண்டற்கு முரியதூஉ மெனும் வகையான் முத்திறத்ததாம். மக்களொழித் தொ ழிந்த இயங்கியற் பொருளாவன வெல்லாம் இம்மை யன்புசெய்தற் குரியன, மக்களுள்ளும் குரங்குப் பிறப்பினீங்கிப் புதிதாய் வந்த ஒரு சாரார் இம்மை யன்பே செலுத்துவர்; இவர் மக்கட் பிறப்பினுட் கடையாயா ரெனப்படுவர்; தலையாயா ரென்பார் மலங்கழன்று அறி வுச் சுடர்கொளுவி இறைவன் பாற்செலுத்தும் மறுமை யன்பொ ன்றே யுடையார்; இடையாயா ரெனப்படும் எம்போல்வாரே இம்மை மறுமை யென்னும் இரண்டினும் அன்புடையா ரெனப்படுவர். மக்க ளொழித் தொழிந்த இயங்கியற் பொருளாவன வெல்லாம் தாய், தந் தை, மனைவி, கொழுநன், மக்கள் கிளையென்னும் பிறப்புரிமையால் இயல்பில் அன்புடையவாய் ஒன்றற் கொன்று வேண்டுவன விரும்பித் தேடியளித்துப் போதுவவன்றி, "இறைவனுள" னென்றும் "அவனை யாம் வழுத்தற்பால" மென்றும் உணர்ச்சியுடையவாய் மறுமை யன் புசெலுத்துந் தகைமையல்ல. மக்களுட் டலையாவார் இவ்வுலகம் அழி ந்துபோந் தன்மைத் தென்றும், அவ்வாறழியும் அதன்பால் அன்பு வைத்தல் பயனுடைத்தன்றென்றும் அதனை வெறுத்து, நிலைபேறு டைய இறைவன்பால் மறுமையன்பொன்றே செலுத்தும் பெருந்த கையாளர். இடையாவாரே "ஆற்றிலொருகால் சேற்றிலொருகால்"

என்று பெரியாருரைத்த உரைக்கிணங்க இம்மை, மறுமை இரண்டினும் அன்புவைத் துடையார். இம்மை, மறுமை யன்பிரண்டும் மற்றும் ஒருவகையாற் பொதுவுஞ் சிறப்புமென இரண்டு பெற்றியவாம். இம்மைப் பொதுவன்பென்பது உறவினர் மாட்டும் உற்றார் மாட்டும் பிறர்மாட்டும் ஒரு தன்மைத்தாய் நிகழ்வது. இம்மைச் சிறப்பன்பென்பது யாவர் மாட்டும் ஒரு தன்மைப்படப் பரந்து சேறலின்றி இம்மைப் பொருளாவனவற்றுள் யாதானு மொன்றன்பால் சிறந்து நிகழ்வது; மது தன்னுயிர் மேற்றானும், உடல் மேற்றானும், மக்கள் மேற்றானும், மனைவி மேற்றானும் ஒன்றன்பால் உறுமாற்றில் வைத்துக் கண்டுகொள்க. மறுமைப் பொதுவன்பென்பது எச்சமயிகளானும் ஏற்றுக்கொள்ளப்படும் கடவுட் பொதுத் தன்மைகளான "தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், வரம்பிலின்பமுடைமை, வரம்பிலாற்றலுடைமை, பேரருளுடைமை" முதலாயினவற்றை யுடைய பொருளெதுவோ அது கடவுளென்று மாத்திரையே யுணர்ந்து மற்றொன்றானும் அப்பொருளைத் தாம் வேறுபடுத்தாது அதன்பாலன்பு புறுத்தல். மறுமைச் சிறப்பன்பென்பது, பொதுவன்பாற் பயனின்றென்றுணர்ந்து முற்கூறிய பொதுவிலக்கணங்களையுடையபரம்பொருட்கு வடிவு, குணம், பெயர் முதலாயின கூட்டி யதன்பாலன்புறுத்தல். நடுவுநிலைமையோடு உண்மைநெறியான் நோக்குவார்க்குப் பல்வேறு வகைத்தாய்ப் பிரிவும் அன்பு ஒருபொருட்கட் சிறப்பாகவே யுறைக்குமன்றிப் பொதுவகையான் நிகழ்தலிலதென்பதூஉம் அவ்வாறு நிகழினும் அது அன்பெனும் பெயர்க்குரித்தாகா தென்பதூஉம் இனிது விளங்கும். இதுபற்றியன்றே, பல்வகைச் சமயிகளும் பொதுவிலக்கணங்களை யேற்றுக்கொள்ளினும் அந்நெறியே நில்லாது தத்தமக்கு அன்பு இனிது செல்லும் வழியாற் சிறப்பிலக்கணங்களுங் கூறிக்கொண்டு அப்பொருளை வழிபடுவோராயினர். இப்பரிசறியாதார் பல்வகைச் சமயங்களையும் இகழ்ந்து சமயங்கடந்த நிலையில தாம் இருப்பதாக எண்ணித் தருக்கிக் களிப்பர். அவ்வாறு கூறுவார் தாமும் நுண்ணிதாக அளந்தறிவரேல் தம் அன்பு பொது வகையால் நிகழாதென்பதும் சிறப்புவகையால் நிகழுமென்பதும் இனிதின் அறிந்துகொள்வரென்க. எனவே, ஒரு சமயத்தையும் தழுவாது கடவுளை வழிபடுதற்கு ஒருவரானும் இசையாதென்பதும், அவ்வாறு கூறு



வார் கூற்று "யாம் ஒருநெறியானு மின்றித் தில்லையம்பலம் போதும்" என்பார் அரியவுரையோ டினைப்பட்டுப் போலிப்படு பென்பதும் தெளிய விளங்கும். ஈண்டுரைத்துப் போந்தவற்றால் அன்பினிலக்கணம் இனிது விளங்குதலானும், உலகத்துப் பரந்து பட்டுக்கிடக்கும் பலவகைச் சமயங்களுள் எதன் வழித்தாகச் சிறப்பன்பு செலுத்தற் பாலதென்பதும் எச்சமயத்தான் வீடுபேறுகை வரப்பெறு மென்பதும் அறிந்துகோடல் எடுத்தபொருளோ டியைபுடைத்தாயிருத்தலானும் அவ்வச் சமயக் கடவுள ரிலக்கணங்களை யாராயவே, அவை யினிது விளக்குமென்பது.

## அன்பு செலுத்தப்படுவோர்.

பன்முகச் சமயநெறியாளரானும் தத்தங்கடவுட்குக் கூறப்படும் பொதுவும் சிறப்புமாம் இலக்கணங்களுள் எச்சமயத்தார் தந்தலைவற்குக் கூறும் இலக்கணம் அளவையோ டிடை புடைத்தாமென்பதை நோக்குவார்க்குச் சைவசமயமே அங்ஙனமாமென்பது இனிதுவிளங்கும். இதையுணர்ந்தே பெரியோரும் "சைவநெறியேயுய்யுநெறி" "சைவ சமயமே சமயம்" "சைவத்தின்மேற் சமயம்வேறில்லை" என்றற்றொடக்கத்த உரைகளால் உண்மை வெளிப்படுத்தியருளினார்கள். இதைப் பல்வகைச்சமயங்களையும் எடுத்துக்காட்டி விளக்கின் மிக விரிந்தொழியுமாதலால், ஈண்டுப் பொதுச் சிறப்பிலக்கணங்களிற் சிலவற்றை யாராய்வாம் பொது விலக்கணங்களுள் இரண்டொன்று காட்டவே யேனையவு மடங்கும். அவற்றுள், தூயவுடம்பினனாதல், முற்றும் உணர்தல் என்னும்இரண்டு பொது விலக்கணங்களானும் முதற்பொருளை யளந்தறியும்,கடவுளெனும் பொருள் இவ்விரண்டிலக்கணங்களுக்கும் இலக்காயிருத்தல் வேண்டுமென்பது யாவரும் ஒப்புக்கொண்டதன்றே! தூயவுடம்புடைத்தாத லென்பது, எழுவகைப்பிறப்புள் ஒன்றிற் பிறவாமையும் பின்னர் இறவாமையுமாம். முற்று முணர்தல் என்பது, ஒரு பொருளாயும், அப்பொருளினுள்ளாயும், அதற்குப் புறம்பாயும் நிறைந்து நின்று அவற்றிற்கு வேண்டுவனவற்றை யறிந்தாங்கறிதல். இவ்விரண்டிலக்கணங்களும் இல்லாத பொருள் யாது அதுவே உலகியற் பொருளாம், பாஞ்சராத்திரம் முதலாகக்கிடந்த புறச்சமயிகள் அனைவரும் தத்தங் கடவுளர் பிறந்தாரிறந்தா ரென்றுதாமே கூறுதலானும், சைவசமயிகள் மட்டும் தம்மிறைவன் பிறந்தானிறந்தானென்று

கூறுமையானும் சைவமொழித் தொழிந்த சமயிகள் வழிபடுங் கடவுளெல்லாம் பிறந்திறக்குந் தன்மையரான மக்களே யென்பது பெறுதும். அற்றன்று, அக்கடவுளரெல்லாம் தம்மடியாரைக் காப்பாற்றும் பொருட்டுப் பிறந்தா ரென்று அவர் கதைகளிற் கூறப்படுதலால் நீயிர் கூறியது பொருந்தாதாம் பிறவெனின்;—நன்று கூறினாய், அவர் "வரம்பிலாற்றலுடைய" கடவுளராயின் தாம் விரும்பியாங்கு இடருறாது பல்வேறு வடிவுகோடல் சாலுமாகவும், அல்குல்வாய்ப் பட்டுப் பிறந்திறத்த லென்னையோவென்பது. முக்கட்பெருமான் சிறுத்தொண்டர் முதலிய அடியார் பொருட்டுத் தாம் வேண்டும் வடிவுடையராய் வந்தமை காண்க. அல்குல் வாய்ப்பட்டுப் பிறத்தல் குற்றமுடைத் தெனின் யாண்டும் நிறைந்திருக்கும் இறைவன் ஆண்டில்லை யெனப்பட்டு வழுவாமெனின்;—அற்றேல், அவ்வடியார் துயர்தீர்த்தற் கருவிப்பொருளினும் அவன் இருத்தல் பெறப்படுதலின் ஆண்டிருந்தே அவற்றை யியக்கிப் பயன் விளைத்தல் சாலுமாகவும் பிறந்திறக்க வேண்டிய தென்னையோ வென்பது. அன்றியும், கடவுட்டன்மையை நிறுவும் இலக்கணங்களை ஓட்டியறியாது, அடியார்க்காக எம்மிறைவன் பிறந்தானென் றொரு சமயிகூற அதுபோலவே பிறிதொரு சமயியும் கூற அவற்றை ஏற்கின் உலகிற்கு ஒரு முதற் கடவுள் என்பது போய்ப் பலர் கூறும் பலரையுங் கடவுளெனக் கொள்ளும் அநேகேசுவர வாதப் போலியாய் முடியுமெனக்கூறி மறுக்க. ஆதலினன்றே, பிறப் பிறப்பெய்தாமையைச் சிறந்த இலக்கணமாகக் கொண்டு முக்கண்ணனுக்கே கடவுட்டன்மை கதித்தலை "எல்லார் பிறப்பு மிறப்பு மியற் பாவலர் தம், சொல்லாற் றெளிந்தே நஞ்சோணேசர்—இல்லிற், பிறந்த கதையுங்கேளேம் பேருலகில் வாழ்ந்திறந்த கதையுங் கேட்டிலேம்" என்று ஆன்றோர் விளக்கி உண்மை தெளித்தார்கள். பிறப் பெய்தியார்க்குத் தன்வயத்தனாதலின்மையிற்றான் பிறர் வயத்தனாய் ஐந்தவத்தையானும் உணர்வுதிரிதலிற் செயற்கை யுணர்வினனாய், வரம்புப்பட்ட மெய்யுடனியைதலின் முற்றுணர் விலனாய், பலவகைப் பற்றுடையனாதலின் பாசங்களையு முடையனாய், இடை யிடையே பலதுன்பமெய்தலின் வரம்பில் துன்பமுடையவனாய், வெகுளியாதி முக்குற்ற மெய்தலின் அருளிலனாய், தன்னினும் வலியுடையானிருத்தலின் ஆற்றலிலனாய் மக்கட்டன்மை யெய்துதலின் அவரெல்லாங் கடவுளராகா ரென்க. இதன்றியும், வைகையடைக்க மண்சுமந்த ஞான்று



வழுதி தன்னைக்கோலாற் புடைத்த அடி "தார்மேனின்றிலங்குபுயவழுதி மேலுந் தன்மனை மங்கையர் மேலுமமைச்சர்மேலு, மார்மேலுஞ் சென்று பொருந்சேனை மேலுமயன்மேலு மாலின்மேலு மறவோர் மேலுந், தேர்மேல் வெம்பகன்மேலு மதியின்மேலுஞ் சிறந்தவிந்திரன் மேலுந் தேவர்மேலும், பார்மேலுங் கடன்மேலு மரங்கண்மேலும் பட்டதான் மெய்யிலடி பட்டபோதே" என்றவாறுபோலவும் அருச்சுனன் வில்லா லடித்த அடி "வேதமடியுண்டன விரிந்த பலவாகம விதங்களடியுண்டன வோரைம், பூதமடியுண்டன விநாழிகை முதற்புகல் செய்பொழுதொடு சலிப்பில் பொருளின், பேதமடியுண்டன பிறப்பிலிறப்பிலி பிறங்கலரசன் றன்மகளார், நாதனமலன் சமரவேட வடிவங்கொடு நரன் கையடியுண்டபொழுதே" என்றவாறு போலவும் இருமுறை யாண்டும்பட்டு முக்கட்பெருமான் நிறைவை விளக்கியபோலப் பிறகடவுளர் கதைகளில் அங்ஙனங் கூறப்படாமையால் அவரெல்லாம் கடவுளராதலியாண்டைய தென்க. கறைமிடற்றண்ணலே கடவுளென்பதைப் பொது விலக்கணத்தானளந்து காட்டி நிறுவினும், இனிச் சிறப்பிலக்கணத்தானுட் சிலவற்றானும் அங்ஙனே அளந்துரைப்பாம்.

முக்கண் ணுடைமையுஞ் செக்கர்ச் சடையும்
மதிபொதி முடியு நதிவளர் சென்னியும்
விடைகடாஅய்ச் செல்லு மிடலுங் கடல்படு
நஞ்சு நிறுத்திய களமும் எஞ்சிய
இடையுடை மடவரல் கெழுமிய புடையும்
அன்னவள் விழிக்குடை மானுந் துன்னிய
மழுவுங் கொழுந்துடை எழுநா மேனியும்
தமருகக் கையுந் தழல்கவி கையும்
அஞ்சலென் கையும் எஞ்சா வரந்தரு
பஞ்சின் மெல்லிய பல்விரற் கையும்
ஊன்றிய கழலுந் தூக்கிய வடியும்
தேன்றுளி கொன்றையு மூன்றொடு தலையும்
எற்புச் சட்டகம் முத்தலைச் சூலம்
உட்குறூஉ தலைப்பிணை பெட்புறத் தாங்கலும்
கரியுரி போர்த்த விரிவறு பெருமையும்
அரவரைக் கசைத்த ஆண்மையும் அகல்விசும்

பணைதரு முடுக்குலங் கடுப்பச் செறிவுறு
புள்ளிப் புலித்தோல் போற்றிய மருங்கும்
கள்ளப் பாசங் கழித்தலி னின்பத்
தெள்ளமிழ் தருத்தலின் அரன்சிவ னெனும்பேர்
கொள்ளலும் பிறவுங் கோனிவ னெனவே
விரித்துரை சிறப்புக் குறிக ளாமெனத்
தெரித்துரை செய்குவர் தெள்ளறி வோரே.

என்றிக்கூறிய வடையாளங்களனைத்தையும் ஒருங்கே கூறப்புகின் வரம்பின்றிவிரியுமாதலின் ஈண்டுச் சிலவற்றைத் தந்து காட்டியேனையவற்றைச் சமயநேர்ந்துழி விரித்துரைப்பாம். உலகத்தார்க்கொழுக்கம் நிகழ்விக்கும் ஒளிதரும் பொருள்கள், ஞாயிறு, திங்கள், தீயென்னும் மூன்றுமேயாம். இம்மூன்றையும் சைவசமயிகளைப் போலவே தத்தங் கடவுளருக்குங் கண்களாகச் சொல்வார்வேறு பிறருளராயினும், அவ்வாறு தாஞ்சொல்வதற்கு இதுகாறும் அவர் மெய்ச்சான்று ஒன்றேனும் அக்கதைகளினெடுத்துக் கூறக்கண்டிலர்; அன்றி முக்கணன் எனப் பெயர் கூறியாதல் தங்கடவுளையழைக்கக் கேட்டிலம். இதனால், அவர் கடவுளருக்கு அவர் வாய்மொழிபோலவே இறைமை தலைப்பட்டிலது. முக்கட் பெருமானுக்கு அப்பெயர் வாய்த்த வாய்மையன்றியும் அவனது மூன்று கண்களுமே ஞாயிறு திங்கள் தீ என்பதற்கு உமை கண்புதைத்த ஞான்று நிகழ்ந்த நிகழ்ச்சியே கரியாயதுணர்க. இத்தகைய கதை ஒன்று பிறர் புராணங்களில் காணப்பட்டிலது. அவ்வாறிருந்தால் நாம் அதைச் சென்னிமேற்கொண்டு வழுத்துவாம். நஞ்சு நிறுத்திய களம் அடியார் பொருட்டு அவர்க்கு வருந்துன்பங்களைத் தான் தன்னகத் தடக்கி அவர்க்குப் பேரின்பமளித்தலை விளக்கும். பாசத்தை யரித்தலில் அரன் எனுந்திருப்பெயரும், அவ்வாறரித்த மாத்திரையினமையாது பேரின்பத்தையும் உடன் ஈந்துதுய்ப் பித்தலின் சிவனெனுந் திருப்பெயரும் உடையவா போலப் பிறருக் கித்தகைய பெயர்களில்; அவ்வாறவர் புரிபவராயின் இடுகுறியாய் இப் பெயர்க ளெய்துதற்கோர் இடையீடின்மையறிக.

மேற்கூறிப் போந்த பகுதிகளால் அன்பு இன்னதன்மைத்தென்றும் அவ்வன்பு செலுத்தப் படுந்தன்மைக் கடவுள் சைவ சமயத்திற் கூறப்படும் சிவபெருமானேயென்றுங் காட்டப்பட்டது.

சுவாமிவேதாசலம்.

# ருக்குவேதம்.

(தொடர்ச்சி)

சூக்தம். ௨ (ரு.)

[பாவும், ருஷியும், தேவதையும், முன்போலவே]

வர்க்கம், கூ.

ஸ்தோத்திரங்களை எந்துகிற சிநேகிதர்களே! சீக்கிரமாய் வாருங்கள், வாருங்கள், உட்காருங்கள், உட்கார்ந்து இந்திரனை மிகப்பாடுங்கள்.

௨ (சினேகிதர்களே) அனேக (பகைவர்களைத் துயரப்படுத்துகிறவரும், பெறத்தகுதியான மிகுந்த (பொருளின்) யஜமானனுமாகிய இந்திரனை ஸோமமானது அபிஷுதமாயிருக்கையில், எல்லாருமாய்ச் சேர்ந்து பாடுங்கள்.

௩ அவரே நமக்கு முன்னடையாத பேறுகளைத் தருக; அவரே பொருளை; அவரே பெண்களை; அவரே அன்னத்தோடு நம்மிடம்வருக.

௪ யாருடைய தேரில் (கட்டின) இரண்டு குதிரைகளை யுத்தத்தில் சத்துருக்கள் நெருங்குகிற தில்லையோ அப்பேர்ப்பட்ட இந்திரனுக்குப் பாடுங்கள்.

௫ அபிஷவம் பண்ணப்பட்டவைகளும் (வடிகட்டிச்) சுத்தமாகிய வைகளும், தயிரினால் தங்குற்றம் நீக்கப்பட்டவைகளுமாகிய இந்த ஸோமங்கள் அபிஷுத (ஸோம)த்தைக் குடிக்கிறவரிடத்திற்குச் சாப்பிடப்படும் பொருட்டுப் போய்ச் சேருகின்றன.

வர்க்கம், ௧0.

௬ நல்ல கருமங்கள் பொருந்தியவரே! நீர் (தேவர்களுக்குள்) மூத்தமை (அடையும்) பொருட்டு அபிஷுத (ஸோம)த்தின் பானத்திற்காக உடனே பெருத்திட்டீர்.

௭ ஸ்துதிகளால் சேவிக்கத்தக்க இந்திரனே! (மூன்று ஸவனங்களிலும்) வியாபியாநின்ற ஸோமங்கள் உம்மிடம் புகக்கடவது. (அவைகள்) உம்முடைய உயர்ந்த புத்திக்குச் சுகமானவைகளாக.

அ மிருந்த கருமம் பொருந்தியவரே! ஸ்தோத்திரங்கள் உம்மை உயர்த்தின; உக்தங்கள் உம்மை (உயர்த்தின) (அப்படியே) எங்களுடைய ர்க்குகளும் உம்மை உயர்த்தக்கடவது.

௯ அழியாத ரக்ஷண மாற்றுகிற இந்திரனுனவர், எல்லா ஆண்மைகளும் எதில் (தங்கியிருக்கின்றனவோ) அப்பேர்க்கொத்த ஆயிரவகைப்பட்ட, இந்த (ஸோமமாகிய) அன்னத்தைச் சாப்பிடக் கடவது.

௧0 ஸ்துதியால் ஸேவ்யரான இந்திரனே! (சத்ருக்களாகிய) மனிதர்கள் (எங்களை) எதிர்த்து எங்களுடைய தேஹத்துக்குத் துரோகம் பண்ணுகிருக்க வலியராகிய (நீர்) கொலையை நமமிடத்தினின்றும் தூரமாக்கும்.

சூக்தம், ௩. (௬)

(ருஷியும், பரவும் முன்போல. முதல் மூன்று ருக்குகளுக்கும், கடைசி ருக்குக்குந்தேவதை இந்திரனும் மற்றவைகளுக்கு மருத்துக்கள் அதாவது காற்றுகள்)

வர்க்கம், ௧௧.

சுற்றிலும் நிலையாயிருக்கிற (மூவுலகத்திலுள்ள) வர்கள் மாட்சிமை பொருந்திய (சூரியனுகவும்) ஹிம்ஸகரில்லாத (அக்கினியாகவும்) (எங்கும்) சஞ்சரிக்கின்ற (வாயுவாகவும்) உருவுகொண்டிருக்கிற இந்திரனை (தத்தம் கருமங்களில் தேவதையாக) இசைக்கிறுர்கள். (மேலும் அவ்விந்திரனுடைய வேறுவேறு ரூபங்களான) நக்ஷத்திரங்கள் வானத்தில் பிரகாசிக்கின்றன.

உ இவருடைய தேரில், காமுறத்தக்கவைகளும், ரக்தவர்ணமானவைகளும், செருக்குற்றவைகளும், மனிதர்களை இழுக்கத்தக்கவைகளுமாகிய ஹரி (என்னுமிரண்டு) குதிரைகளை (சாரதிகள்) வெவ்வேறு பக்கங்களில் கட்டுகிறுர்கள்.

௩ மனிதர்களே! இந்த ஆதித்தியரூபமான இந்திரன்) உணர்வற்றவைகளுக்குணர்வும், உருவற்றவைகளுக் குருவும் உண்டுபண்ணுகிறவராய் சுரிகதிர்களோடு (மறுபடியும்) உண்டானுர், (இது என்ன ஆச்சரியம்)

(இன்னும்வரும்) த.போ.

160932
R673m21, N12
N12.3